ஜனவரி — மார்ச்
1996

தமிழ்நதி

ஜன — மார்ச

1996

JL
214388


BHUTAN
SRI LANKA
BANGLADESH
PAKISTAN
INDIA
MALDIVES
NEPAL
SPORTS

இந்த இதழில்...

★ ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி:
மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொலைக்காட்சியில் ஆற்றிய உரை 2

★ ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி:
தொடக்க விழா 4

★ காவிரி நதி நீர்ப் பிரச்சினை:
–சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை............ 12

★ தெற்காசிய விளையாட்டுப் போட்டி:
புகைப்படத் தொகுப்பு 19

★ வீராபுரம் துப்பாக்கிச் சுடும் தளம் திறப்பு விழா 30

★ நொடிக்கொருமுறை பூத்த நந்தவனம்
–கொடியசைப்பு உருவக் காட்சி 33

★ காவிரி நதி நீர்ப் பிரச்சினை:
–மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் புதுடெல்லி பயணம்............ 36

–மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுடன் சந்திப்பு 37

★ விளையாட்டு அரங்கங்களில் அலைமோதியது அன்பர் கூட்டம் 39

★ மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு............ 41

★ தெற்காசிய விளையாட்டுப் போட்டி:
நிறைவு விழா 43

இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.

★ செய்யக்கூடிய வகையால், எக்காரணத்தாலும் விடாமல் செல்லுமிடமெல்லாம், அறச்செயலைப் போற்றிச் செய்ய வேண்டும்.

தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2026
மார்கழித் திங்கள் : 17
மலர்: 26 இதழ்: 13
1.1.1996
விலை ரூபாய் : 3

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி:

'அமைதி, விடாமுயற்சி, செழிப்பு' வளர்ப்போம் நிலைப்படுத்துவோம்!

–மாண்புமிகு முதல்வர் அவர்கள்–

(ஏழாவது தெற்காசிய கூட்டமைப்பு நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளை யொட்டி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தொலைக் காட்சியில் ஆற்றிய உரை 17.12.95)

இந்தியக் கலாச்சாரத்தின் பலகணியாய் விளங்கும், பாரம்பரியம் மிக்க சென்னை மாநகரில், ஏழாவது தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகள் இந்த மாதம் 18 ஆம் தேதி முதல் 27 ஆம் தேதி வரை, சீரிய முறையில் நடைபெற உள்ளன என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விளையாட்டுப் போட்டிகள், உருவாக்கியுள்ள ஒரு மாபெரும் விளையாட்டு உணர்வும், ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையும், மக்கள் மனதில் குறிப்பாக இளைய தலைமுறையினரின் மனதில் நல்லதொரு தாக்கத்தை ஏற்படுத்தும் என்று உறுதியாக நம்புகிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்தின், விளையாட்டு வரைபடத்தில் மட்டுமல்லாமல், சர்வதேச விளையாட்டு வரைபடத்திலும் எழில்மிகு சென்னை மாநகருக்கு ஒரு நிரந்தர இடத்தைப் பெற்றுத் தரும் இந்த எழுச்சியான விளையாட்டுப் போட்டிகளைக் கண்டுகளிக்க நீங்கள் அனைவரும் திரண்டு வர வேண்டும் என்று அன்போடு வரவேற்கின்றேன்.

பல துறைகளில் சாதனைப்படைத்து வரும் தமிழகம், இன்று விளையாட்டுத் துறையிலும், புதிய சாதனைகளைப் படைத்து வருகின்றது. இந்த விளையாட்டுகள், தமிழக மக்கள் மத்தியில் மட்டுமின்றி, இந்திய மக்கள் மனங்களிலும், உயர்ந்த எண்ணங்களையும் நல்ல சிந்தனைகளையும் சர்வதேச நல்லுணர்வையும், தேசிய ஒருமைப்பாட்டு உணர்வையும் அதிகரிக்கச் செய்ய நிச்சயமாக வழி வகுக்கும்.

இந்த விளையாட்டுப் போட்டிகள் இந்தியத் துணைக் கண்டத்தின் சார்பில் சென்னை மாநகரில் நடத்த வேண்டும் என்று நானே மத்திய அரசைக் கேட்டு அனுமதி பெற்றேன். அந்த நேரத்திலேயே இதற்குத் தேவையான சர்வதேசத் தரத்தில் அமைந்த, விளையாட்டு அரங்கங்கள், நவீன விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள், 2,000 விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும், நட்சத்திர ஓட்டல் வசதிகளுடன் தங்கும் விடுதிகள் மனங்கவரும் விதத்தில் தொடக்க விழா மற்றும் நிறைவு விழா ஆகியவற்றைப் பிரம்மாண்டமான முறையில் நடத்த, போர்க்கால அடிப்படையில் ஆயத்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் அதை நிறைவேற்ற எதிர்கொள்ள வேண்டிய சவால்களையும், சங்கடங்களையும் நாங்கள் பூரணமாக அறிந்திருந்தோம். குறித்த காலத்தில் எப்படியும் இந்தப் பணிகளை முடித்தே ஆக வேண்டும் என்று திட்டமிட்டு ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் இந்தப் பணியை மேற்கொண்டோம்.

கடந்த இரண்டு ஆண்டுகளில், டென்னிஸ் விளையாட்டரங்கம், ஆக்கி விளையாட்டரங்கம், நவீன நீர் விளையாட்டு வளாகம், பலமுனை உபயோக விளையாட்டு உள் அரங்கம் ஆகியவை சர்வதேசத் தரத்தில் நவீன சாதனங்களுடன் Computer Operated Electronic Score Boardகளுடனும், முதல்தரத் தொழில் நுட்பங்களுடனும் அமைக்கப் பட்டுள்ளன. 560 குடியிருப்புகள் கொண்ட ஒரு எழில்மிகு விளையாட்டு நகரம் SAF Games Village ஒன்றும் உருவாக்கப் பட்டுள்ளது. தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் வரலாற்றில், இந்த விளையாட்டுப் போட்டிகளை ஒட்டி, சென்னை மாநகரில் மட்டும் தான் இப்படி ஒரு எழிலார்ந்த விளையாட்டு நகரம் உருவாக்கப்பட்டுள்ளது என்பது சரித்திரத்தில் நமக்கெல்லாம் பெருமையைத் தரும் ஒரு இனிய செய்தி ஆகும்.

கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்பில் விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள், ஏற்படுத்தப் பட்டுள்ளது மகிழ்ச்சிக்குரிய சாதனை ஆகும்.

தேசிய ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தும் வண்ணமும் இந்த விளையாட்டுப் போட்டி களுக்கு ஒரு தேசிய நிறத்தை அளிக்கவும் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் விளையாட்டுச் சுடர், இந்தியத் துணைக் கண்டத்தின் எல்லா மாநிலத் தலைநகரங்களுக்கும், கொண்டு செல்லப் பட்டுள்ளது. இந்தியாவைச் சுற்றி வரும் இந்தச் சுடரைக் கொண்டே, இந்த விளையாட்டுப் போட்டிகளின் சுடர், ஏற்றி வைக்கப்படுகிறது. மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்ம ராவ் அவர்கள், இந்த விளையாட்டுப் போட்டிகளை இம்மாதம் 18ந் தேதி அன்று தொடக்கி வைக்க அன்புடன் இசைந்துள்ளார்.

இதன்மூலம், காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை வாழும், ஒவ்வொரு இந்தியக் குடிமகனும், குடிமகளும், சென்னையில் தனது சார்பில், இந்த விளையாட்டுகள் நடைபெறுகின்றன. என்ற ஒரு ஒற்றுமை உணர்வை இந்தப் போட்டிகள் ஏற்படுத்தி உள்ளன. சென்னையில் வந்து தங்கி, தங்களது விளையாட்டுத் திறமைகளை வெளிப்படுத்தி நம்மை மகிழ்விக்க வரும் விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் தமிழகத்தின் கலாச்சாரம், பண்பாடு, வரலாறு, கலை ஆகியவற்றின்மீது ஒரு புதிய ஈடுபாட்டைக் கொள்ள இந்தப் போட்டிகள் வழிவகுக்கும் என்று உறுதியாக நம்புகிறேன். அதேபோல, தெற்காசிய நாடுகளான பங்களாதேஷ், பாகிஸ்தான், இலங்கை, மாலத்தீவு, பூடான், நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களோடு, நமது இந்திய மற்றும் தமிழக விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் சேர்ந்து தங்களது விளையாட்டுத் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், அந்த நாடுகளின் கலாச்சாரம் கலை, வரலாறு ஆகியவற்றின் மீது ஒரு புதிய ஈடுபாட்டை ஏற்படுத்தவும் இந்த நிகழ்ச்சி உறுதுணையாக விளங்கும். வெளிநாட்டி லிருந்து, சென்னை மாநகருக்கு வருகை தருபவர்கள், தமிழகத்தைப் பற்றிய பல இனிய நினைவுகளுடன் தாய்நாட்டிற்குத் திரும்பிச் செல்வார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

இந்த விளையாட்டுப் போட்டிகளின் தாரக மந்திரமான "அமைதி, விடா முயற்சி, செழிப்பு" ஆகியவற்றை வளர்ப்பதற்கும், நிலைப்படுத்துவதற்கும் இந்தப் போட்டிகள் வழி வகுக்கும் என்பதில் ஐயமில்லை.

இருபதாம் நூற்றாண்டின் இந்தக் காலகட்டத்தில் நடைபெறும் மிக முக் கியமான ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் ஆரம்பமாக, கோலாகலமாக நடக்க உள்ள தொடக்க விழாவிலும்; நிறைவு விழாவிலும் பங்குகொள்ளும் இந்தியாவின் பல்வேறு பாகங்களைச் சேர்ந்த, கலைவித்தகர்களின் கலை நிகழ்ச்சிகள், மாணவ மாணவிகளின் கொடி அணிவகுப்பு ஆகியவை உண்மையில் நமது கண்களுக்கு மாபெரும் விருந்து படைக்கப் போகின்றன.

எனவே, நமது கருத்துக்கும் கண்களுக்கும் விருந்தளிக்க உள்ள, சரித்திரச் சிறப்புப் பெற்ற, இந்த எழுச்சிமிகு ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளைக் கண்டு களிக்கத் தமிழக மக்களும் இந்திய மக்கள் அனைவரும் திரண்டு வர வேண்டும் என மீண்டும் அன்போடு வரவேற்கிறேன்.

2143-88

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி:

இதயத்தை ஈர்த்த இனிய தொடக்க விழா

தமிழ்நாட்டு விளையாட்டு வளர்ச்சித்துறையின் விடிவெள்ளியாகத் திகழும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தாழ்வுற்றிருந்த தமிழ்நாடு விளையாட்டுத்துறையைத் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமாக்கி மேம்படுத்தினார். சர்வதேசத் தரத்தில் ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கை அமைத்து, கூடைப்பந்து உள்ளுறை விளையாட்டரங்கம், நீச்சல் விளையாட்டரங்கம், பன்னோக்கு உள்ளுறை விளையாட்டரங்கம், ஆக்கி விளையாட்டரங்கம், டென்னிஸ் விளையாட்டரங்கம், துப்பாக்கிச் சுடும் தளம், நேரு பூங்கா விளையாட்டரங்கம் போன்றவைகளை அமைத்து ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளைப் பாரிலுள்ளோர் பாராட்டும் வண்ணம், கடந்த *18.12.1995* அன்று மாலை ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கில் தொடக்க விழாவில் தலைமைதாங்கி நடத்தினார்.

விளையாட்டுத் தலைநகரம்

பல்லவருக்கும், பின்னர்

வெள்ளையருக்கும் தலைநகராக இருந்து பெருமை கொண்ட சென்னை நகரம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் ஆற்றலால் இந்தியாவின் விளையாட்டுத் தலைநகரம் என்ற புதுச் சிறப்பைப் பெற்றுள்ளது. அதனை வலுப்படுத்துவதுபோல் *18.12.1995* அன்று நண்பகலிலிருந்தே ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க விழாவைக் காண ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கை மாபெரும் கூட்டம் முற்றுகையிடத் தொடங்கியது. அரங்கின் அனைத்து வாயில்களிலும் அணிஅணியாய் மக்கள் கூட்டம். அணை கடந்த ஆற்று வெள்ளமென நீண்ட வரிசைகளில் மக்கள் வெள்ளம்.

வாயில்களில் வண்ணத் தோரணங்கள், வரவேற்புச் சுவரொட்டிகள், நெடிதுயர்ந்த வரவேற்பு வாயில்கள். நாற்பதாயிரம் இருக்கைகளும் மூன்று மணிக்கு முன்னதாகவே நிறைந்துவிட்டன.

மங்கள இசை

மூன்று மணியளவில் முதல் நிகழ்ச்சியாக ஷேக் சின்ன மவுலானா குழுவினரின் நாயன இசை மங்களமாகத் தொடங்கியது. நாதஸ்வரத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த வெளிநாட்டுப் புகைப்படக்காரர்கள், இசையின் இனிமையால் ஈர்க்கப்பட்டு, ஷேக் சின்ன மவுலானாவை பல கோணங்களில், சுற்றிச் சுற்றி வந்து புகைப்படம் எடுத்துத்தள்ளினார்கள்.

● முதல் அட்டை சொல்லும் செய்தி:

வெள்ளையுடை அணிந்த *3,600* பள்ளி மாணவர்கள், மேடையின் எதிரேயிருந்த படிக்கட்டுகளில் தேனீக்கள், கூடுகளில் வந்தமர்வதைப் போல, அமர்ந்து கொண்டிருந்தார்கள். முதல் [illegible] தங்கள் கைகளிலுள்ள வண்ணக் கொடிகளைக் காட்டி 'வெல்கம்' என்ற எழுத்துக்களால் அனைவரையும் வரவேற்றபோது, அரங்கத்திலுள்ளோர் அக மகிழ்ந்து ஆரவாரம் செய்தார்கள்.

மாண்புமிகு முதல்வர் வருகை:

கொடியசைப்புக் காட்சியில் மாண்புமிகு தமிழக முதல்வர் வருவதை 'முதல்வரே வருக' என்று வண்ணக் கொடிகளால் எழுதிக் காட்டியபோது, மிகவும் பொருத்தமாக இருந்தது. உண்மையில் எல்லோரையும் கவர்ந்தார்கள்.

விளையாட்டுச் சுடர்

சென்னைக் கோட்டைக் கொத்தளத்தில் *28.10.95* அன்று, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களால் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிச் சுடர் தொடங்கிவைக்கப்பட்டது. அந்தச் சுடர் தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் நோக்கோடு

இந்தியத் துணைக்கண்டத்தின் அனைத்து மாநிலங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டு வலம் வந்து, ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கத்திற்கு, ஒலிம்பிக் வீரர் திரு வி. பாஸ்கரன் எடுத்துவந்து, மாண்புமிகு முதல்வரிடம் அளித்தார். திரு பாஸ்கரன், மாஸ்கோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் இந்திய ஆக்கி அணிக்குத் தலைவராகச் சென்று, வென்று தங்கப்பதக்கம் கொண்டுவந்த தமிழ்நாட்டு வீரர். தற்போதைய இந்திய ஆக்கி அணியின் பயிற்சியாளராக இருக்கிறார்.

இன்முகத்தோடு சுடரைப் பெற்றுக்கொண்ட முதல்வர் அவர்கள், அதனை, முன்னாள் இந்திய டென்னிஸ் விளையாட்டு வீரர் திரு ரமேஷ் கிருஷ்ணனிடம் வழங்கினார்.

ஒலிம்பிக் வாழ்த்துச் செய்தி

ஆஸ்திரேலியா ஒலிம்பிக் சங்கத்திலிருந்து வந்த வாழ்த்துச் செய்தியை இந்திய முன்னாள் ஒலிம்பிக் வீரர் இவான் ஜேக்கப் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் அளித்தார். மேடையில் இந்நிகழ்ச்சி நடைபெறும்போதே, அரங்கினுள் நீலநிறச் சீருடை அணிந்த மாணவ மாணவிகள், கைகளில் வெள்ளை மற்றும் நீலநிறக் கொடிகளைப் பறக்கவிட்டபடி வரவேற்பு வளையம் அமைத்துக் கொண்டிருந்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்களை மேடைக்கு அழைத்துவந்தார். அவருடன் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள், மாண்புமிகு மத்திய அரசின் சமூகநலத்துறை இணை அமைச்சர் திரு கே.வி. தங்கபாலு அவர்கள், இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் திரு பா. சிவந்தி ஆதித்தன் ஆகியோர் வந்தனர்.

பாயும் இளஞ்சிங்க இலச்சினை

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் இலச்சினையினை இன்முகத்துடன் உயர்த்தி வலது கையில் சுடரேந்தி, பாயும் இளஞ்சிங்கம் அலங்கரிக்கப்பட்டு அரங்கினுள் ப்வனி வந்தது.

விளையாட்டு வீரர்களின் மிடுக்கான அணிவகுப்பு:

வங்க அணி

ஆறாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளைத் தங்கள் நாட்டில் நடத்திய வங்காளதேச விளையாட்டு வீரர், வீராங்கனைகள் 217 பேர் கொண்ட அணி முதலில் வந்தது. சாம்பல் நிற முழுக்கால் சட்டையும், கருப்புக் கோட்டும் அணிந்திருந்தனர். துப்பாக்கிச் சுடும் போட்டியின் வெற்றி வீரர் திரு அதிபூர் ரெஹ்மான் தலைமையேற்று நடத்திவந்தார்.

பூட்டான் அணி

பூட்டான் நாட்டுத் தேசிய உடையணிந்த 17 பேர் கொண்ட அணிக்கு டேபிள் டென்னிஸ் அணியின் மேலாளர் செல்வி ஜிக்மே வாங்சு தலைமை தாங்கினார்.

மாலத்தீவுகள் அணி

45 வீரர்கள், 3 வீராங்கனைகளைக் கொண்ட அணி

திரு ஹசன் ஷா தலைமையில் மிடுக்குடன் வந்தது.

நேபாளம் அணி

130 வீரர்கள், 16 வீராங்கனைகள், 38 அலுவலர்களைக் கொண்ட நேபாள அணி, 189 பேர்களை உள்ளடக்கியது. இதற்கு ஹிரேங் சின்ஷா தலைமையேற்றார்.

பாகிஸ்தான் அணி

பாகிஸ்தான் நாட்டினரால் தங்கமகன் என்றழைக்கப்படும் ஆக்கி வீரர் திரு ஷாபாஸ் அகமது தலைமையில் 147 வீரர்களும், 37 வீராங்கனைகளும், 44 அலுவலர்களும் ஆக மொத்தம் 228 பேர் கொண்ட அணி நடந்து வந்தது.

இலங்கை அணி

281 பேர் 165 வீரர், 52 வீராங்கனைகள், 54 அலுவலர்களைக் கொண்ட இலங்கை அணி, கர்னல் லக்ஷ்மண் சிங்கே தலைமையில் வந்தது.

இந்திய அணி

இறுதியாக, ஆனால் உறுதியாகப் பார்வையாளர்களின் கைகள் ஒலிக்கக் கம்பீரமாக, ஆறு தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்து கொண்ட திருமதி ஷைனி வில்சன் தலைமையில் 203 வீரர்களும், 73 வீராங்கனைகளும், 60 அலுவலர்களும் வீரநடை போட்டு வந்தார்கள். ஆண்கள் நீலநிறக் கோட்டும் இளமஞ்சள் கால்சட்டையும், பெண்கள் அதே நிறக் கோட்டும் இளமஞ்சள் மைசூர் சில்க் சேலையும் அணிந்திருந்தார்கள். தங்கமங்கை பி.டி. உஷா முன்னால் வந்தார்.

விளையாட்டுக் கொடி

விளையர்ட்டு வீரர்களின் அணிவகுப்பைத் தொடர்ந்து, காவல்துறை வீரர்கள் 30 பேர் முரசொலிக்க, தெற்காசிய விளையாட்டுக் கொடியை நான்கு மூலைகளிலும் நான்கு பேர் பிடிக்க, பின்புறம், முன்புறம் இரு பக்கவாட்டிலும் 10 பேர் பிடித்துவந்த காட்சியிலேயே வீரத்தின் வீச்சு வெளிப்பட்டது. பார்த்துக் கொண்டிருந்தவர்கள் பாராட்டினார்கள். கொடியில் அமைதியின் சின்னமான வெள்ளைப் புறா மற்றும் ஐந்து ஒலிம்பிக் வளையங்களும், அதன்கீழ் அமைதி, தளரா முயற்சி, முன்னேற்றம் என்ற சொற்கள் பொறிக்கப்பட்டிருந்தன.

முதல்வரின் முழு முயற்சி

அடுத்து, இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர், திரு சிவந்தி ஆதித்தன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் முழு முயற்சியால்தான், இந்த ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் நடக்கிறது என்று புகழ்ந்துரைத்தார்.

வென்றிடும் நம் வீரருக்குத் தந்திடுவோம் ரொக்கப் பரிசு.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள்

யாக் எருமைகளும் மைதானத்துள் நுழைந்துவிட்டன. அந்தச் சிங்கங்கள் புரண்டு புரண்டு ஆடியபோதும், அந்த யாக் எருமைகளை ஒரு கலைஞர் பிடிக்கப் படாதபாடு பட்டதும் பார்ப்போர்க்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. சிக்கிம் மற்றும் அருணாச்சலப் பிரதேசத்திலிருந்து வந்த நடனக் கலைஞர்களின் பிரமிப்பூட்டும் நிகழ்ச்சி. இங்கே இரண்டு சிங்கங்கள் வந்துள்ளன. ஒன்று சிங்கநிகர் புரட்சித் தலைவியைக் காணவந்துள்ளது. மற்றொன்று பாரதப் பிரதமரின் பெயரிலேயே சிங்கம் உள்ளதால் அவரைக் காண சென்னை வந்துள்ளது என்று வருணனையாளர் கவியரசர் இளந்தேவன் சொன்னபோது, அரங்கமே வெடிச்சிரிப்பில் வீழ்ந்தது.

வெசியம்

மராட்டிய மன்னன் சிவாஜி, தன் வீரர்கள் போரில்லாக் காலங்களில் வாளாவிருந்து சோம்பியிருந்து விடக்கூடாது என்பதற்காக, உடற்பயிற்சிகளோடு சில நடனங்களை அமைத்துத் தந்துள்ளான். மராட்டிய மாநிலத்திலிருந்து 360 ஆண்களும், பெண்களும் கைகளில் தாளக் கருவிகளைக் கொண்டு, பெண்கள் கருமஞ்சள் நிறத்தில் சேலையும், ஆண்கள் வெள்ளை நிறத் தலைப்பாகையும், உடையும் அணிந்து, ஒரு விநாடியைக் கூட வீணாக்காமல் விறுவிறுப்பாக ஆடினார்கள். சாமந்திப்பூ, தீபச்சுடர், ஏழு வட்ட வளையங்கள், அமைத்துக் காட்டினார்கள். இசைக்கேற்ப இவர்கள் ஆடினார்களா? இல்லை இவர்களின் நடனத்திற்கேற்ப இசைக்கப்பட்டதா? என்று சிந்திக்கவைத்த இவர்களின் திறத்தைக் கண்டு பாராட்டாதவரே இல்லையெனலாம்.

சரி நடனம்

இராஜஸ்தான் மாநிலத்தில் மலர் கொய்யும் மகளிர் நடனமான சரி நடனத்தை, சென்னையைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான மாணவிகள், மஞ்சள், பச்சை, சிவப்புநிற இராஜபுத்திரப் பெண்கள் உடையில் நளினமாகக் காட்சியளித்து அருமையாக ஆடினார்கள். ஜே.ஜே என்ற ஆங்கில எழுத்துக்களை வடிவமைத்துக் காட்டினார்கள். அப்போது கொடியசைப்புக் காட்சியினர், 'ஸ்போர்ட்ஸ் பார் பீஸ்' என்று காட்டியபோது மிகவும் பொருத்தமாக இருந்தது.

வாங்லா நடனம்

மேகாலயா மாநிலத்திலிருந்து வந்த கலைஞர்கள், அங்கே வழக்கத்திலுள்ள அறுவடை நடனத்தைச் சென்னை மக்களுக்கு ஆடிக்காட்டினார்கள். அவர்களின் இசையோடு, நடனமும் இணைந்து இனிமையாக இருந்தது.

செராவ் மூங்கில் நடனம்

பெண்கள், வெள்ளை, கருப்பு, சிவப்பு உடைகள் அணிந்து ஆண்கள் சிறு குச்சிகளின் முனையில் சிவப்புப் பூக்களை தலையில் பொருத்திய படி காட்சியளித்தார்கள். ஆண்கள் இரண்டு கைகளிலும் நீளமான மூங்கில் கழிகளைக் கொண்டு சதுர வடிவில் அமர்ந்து கழிகளை அசைக்க, அசைவின்போது ஏற்படும் இடைவெளிகளில் அழகிய அந்த மகளிர் குதித்து குதித்து மிகவும் கவனமாக ஆடினார்கள்.

பிஹூ நடனம்

அஸ்ஸாம் மாநிலத்திலிருந்து வந்த நடனக் குழுவினர், இந்த பிஹூ நடனத்தை ஆடினார்கள். பைசாகி நாளில் புத்தாண்டு வாழ்த்துக்கூற ஆடப்படும் ஆட்டம். இதில் மஞ்சள் புடவை, சிவப்பு நிற ரவிக்கைகள் அணிந்து அழகாக மீனாட்சிக் கொண்டையிட்டு, கைகளில் வெள்ளை நிற வளையல்களை மாட்டியிருந்தார்கள். ஆண்களோ மஞ்சள் அரைக் கை சட்டையும், வெண்ணிற வேட்டியும், கையில் கொம்பு, மத்தளம் கொண்டு இணைந்து ஆடினார்கள்.

கவுட் மரியாஸ் நடனம்

மத்தியக் பிரதேசக் கலைஞர்கள் ஆடிய இந்த நடனம் மிகவும் சிறப்பாக இருந்தது. பழங்குடியினரின் நடனமான இதில், ஆண்கள் தலையில் வேட்டையாடிய பறவைச் சிறகுகளையும், பெண்கள் தாய் வீட்டிலிருந்து கொண்டுவந்த சீதனத்தையும் கட்டியிருந்தார்கள். பல நிறங்களில் புடவையணிந்து பாம்பு போல நெளிந்தும், வளைந்தும், வட்டமிட்டும், பக்கத்திலுள்ளவரின் தோளின் மீது கைகளை வைத்து முன்னும் பின்னும், குனிந்தும் நிமிர்ந்தும் ஆடினார்கள்.

லம்பாடி நடனம்

ஆந்திர மாநில நடனமான லம்பாடி நடனத்தைச் சென்னையைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான மாணவிகள் ஆடினார்கள்.

கண்ணாடி வேலைப்பாடுகள் செய்யப்பட்ட பச்சை, நீலம், மஞ்சள், கருப்பு வண்ண பாவாடைகள் அதற்கேற்ற ரவிக்கைகள் கடைசல் செய்த வெள்ளை வளையங்கள் முழுக்கையும் நிரம்ப, ஆயிரம் மாணவிகள் மைதானம் முழுவதும் நிறைந்து ஆடியது. அருமையான காட்சி.

தண்டியா ராஸ்

குஜராத் மாநிலத்தில் நவராத்திரியின் போது ஆடப்படும் நடனம். ஆண்கள் தலைகளில் கலை வேலைப்பாடுகள் நிறைந்த குல்லாய், நீல நிறச் சட்டை, மடிப்புடன் சுருக்கம் வைத்து தைக்கப்பட்ட வெள்ளை மேல் அங்கியுடன் கைகளில் சிறு குச்சிகள் கொண்டு ஆடினார்கள். பெண்கள் வண்ண உடைகளில் ஆண்களுடன் இணையாக ஆடினார்கள். அழகிய குடையொன்றைக் குழுவின் நடுவிலிருந்த ஒருவர் பிடித்து சுழற்றியபடி ஆடி வந்தார். தரையில் படுத்தும், எழுந்தும் ஆடினார்கள்.

பூங்சலம்

மணிப்பூரைச் சேர்ந்த மத்தளங்களுடன் வந்த நூற்றுக் கணக்கான ஆண்கள் அந்தரத்தில் குதித்துக் குதித்து ஆடி அனைவரையும் ஆட வைத்துவிட்டார்கள். ஆட்டமா அது? அழகுணர்வு கொண்ட உடற்பயிற்சி! அரங்கத்திலுள்ளோரை அதிசயிக்க வைத்த அற்புத நிகழ்ச்சி!

ஆடும் வாத்தியங்கள்

தமிழ்நாட்டின் சிறப்புமிக்க நூற்றுக்கணக்கான நாதஸ்வரக் கலைஞர்கள், கொம்பு, எக்காளம் தப்பட்டையாட்டம், கர்நாடக மாநிலத்திலிருந்து வந்த தோலுகுனிதா, மராட்டிய மாநில ஜான்சி இப்படி காண்போரின் கண்ணுக்கும் காதுக்கும் விருந்து படைத்தார்கள்.

சாஸ்லா விளக்கு நடனம்

இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்த அரங்கத்தின் விளக்குகள், நடனத்தில் மனத்தைப் பறிகொடுத்து, ஒளி உமிழ்வதை மறந்தனவோ என்று நினைக்கும்படியாக அணைந்து இருட்டானது. ஆகாயத்தில் அமரவாசையன்று புள்ளிவைத்தாற் போல் மின்னுகிற நட்சத்திரங்கள் தரையிறங்கி வந்தது போல விளக்குகள். 54 கிலோ எடை கொண்டவை. அவைகளைச் சுமந்து சுழன்று ஆடி வந்தவர்கள் அழகிய பெண்கள். உத்தரப் பிரதேசத்திலிருந்து வந்தவர்கள். அதனைத் தொடர்ந்து தாங்களும் சளைத்தவர்களல்ல என்று நூற்றுக்கணக்கான தமிழ்நாடு காவல்துறையினர் வெள்ளையுடையில் இரு கைகளிலும் தீப்பந்தம் எடுத்து வந்து வியூகம் அமைத்து கொடுத்த காட்சி மிகவும் ரசிக்கும்படி இருந்தது. உண்மையிலேயே காணக் கண் கோடி வேண்டும். பார்வையாளர்கள் தங்கள் மகிழ்ச்சியைப் பாராட்டை ஒலியெழுப்பித் தெரிவித்தார்கள்.

பாரதப் பிரதமரை வழி அனுப்பிவிட்டு வந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அடுத்து நடைபெற்ற வாணவேடிக்கை முடியும் வரை அரங்கில் இருந்து கவனித்தார்.

கிட்டத்தட்ட பொதுமக்கள் 40 ஆயிரம் பேர் கண்டுகளித்தனர். பாராசூட்டிலிருந்து வீரர்கள் குதிக்கும் நிகழ்ச்சி பலத்தக் காற்று வீசியதால் நடைபெறவில்லை.

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் இனிமையாகத் தொடங்கியது.

சென்னையில் முதன் முதலில் நடைபெறும் இவ்விளையாட்டுப் போட்டிகள் இதுவரை நடந்த போட்டிகளில் முதன்மையான நிகழ்ச்சியாக இருக்கும் என்பதில் இருவேறு கருத்துக்கள் இல்லை. இத்துணை கலை நிகழ்ச்சிகளையும் ஓரிடத்தில் பார்க்கும் வாய்ப்பைச் சென்னை மக்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் கொடுத்துள்ளார் என்பது நினைவில் நிற்கும் நிகழ்ச்சிதானே!

நிகழ்ச்சித் தொகுப்பு:
எஸ்.கே.எம். அசோகன்

ஆங்கிலத்தில் உரையாற்றினார். தங்கப்பதக்கம் பெறும் இந்திய வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.15 ஆயிரமும், வெள்ளிப்பதக்கம் பெறுபவருக்கு ரூ.10 ஆயிரமும், வெண்கலப் பதக்கம் பெறுவோருக்கு ரூ.5 ஆயிரமும், தங்கப்பதக்கம் பெறும் இந்திய அணிக்கு ரூ.60 ஆயிரமும், வெள்ளிப்பதக்கம் பெறும் அணிக்கு ரூ.40 ஆயிரமும், வெண்கலப்பதக்கம் பெறும் அணிக்கு ரூ.20 ஆயிரமும் வழங்கப்படும் என்று அறிவித்தார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த உடன் இந்திய வீரர், வீராங்கனைகளிடையே உற்சாகம் பெருகிற்று.

தொடர்ந்து, டெல்லியில் இந்திய ஒலிம்பிக் சங்கம் ரூ.2 கோடி மதிப்பீட்டில் கட்டி வரும் ஒலிம்பிக் பவனுக்குத் தமிழக அரசு சார்பில் ரூ.50 இலட்சம் வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்.

பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளைத் தொடக்கி வைக்குமாறு கேட்டுக் கொண்டார். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் போட்டிகளைத் தொடங்கி வைத்தார்.

பீரங்கி முழக்கம்

மைதானத்தின் ஒரு மூலையிலிருந்து மூன்றுமுறை பீரங்கி வெடித்தது. தெற்காசிய ஒலிம்பிக் கொடிகள் மைதானத்தில் ஏற்றப்பட்டன.

ஹெலிகாப்டர் மலர்த் தூவல்

ஒரு பச்சை நிற ஹெலிகாப்டர் அரங்கின் மேல் தெற்காசியப் விளையாட்டுக் கொடியை பறக்கவிட்டபடி முன்னால் போக, தொடர்ந்து மற்றொரு ஹெலிகாப்டர், விளையாட்டரங்கில் பூமழை பொழிந்தது.

அமைதிப் புறாக்கள், வண்ண பலூன்கள்

நூற்றுக்கணக்கான புறாக்கள், பல வண்ண பலூன்கள் உயரே எழும்பி பறந்து நீலவானத்திற்குப் பல வண்ணங்களைப் பரிசளித்தன.

விளையாட்டுச் சுடர்

விரைவு ஓட்டப்பந்தய வீரர் திரு ஞானசேகரன் அர்ஜுனா விருது பெற்ற வீராங்கனை அனுசுயாபாய் ஆகியோர் ஏந்திவந்த சுடரை, பத்மஸ்ரீ விருது பெற்ற திரு சார்லஸ் புரோமியோ பெற்றுக்

கொண்டார். பின்னர், அவர் மூன்று ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்ட திரு வி.ஜே. பீட்டரிடம் தர, திரு பீட்டர் தடகளப் போட்டி வீரர் திரு கே. நடராஜனிடம் சுடரைக் கொடுத்தார். பிறகு, சுடர், கூடைப்பந்தாட்ட வீரர் திரு செந்துரேஸ்வரன், கைப்பந்து வீராங்கனை சுமதி, 1968-ஆம் ஆண்டு ஒலிம்பிக் விளையாட்டு வீரர், திரு கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் தொடரோட்டம் மூலம் பெறப்பட்ட சுடர் இறுதியாக, 10 ஆண்டுகளில் இந்தியக் கைப்பந்து அணியில் ஆடி, அர்ஜுனா, துரோனாச்சார்யா விருது பெற்ற திரு ரமணாராவ் பெற்றுக்கொண்டார். அவர் ஒலிம்பிக் மேடையில் சுடரை ஏற்றிவைத்தார். 50 குழாய்கள் வழியாக எரிவாயு 40 அடி உயரத்திற்கு மேலேறி அங்கே அமைக்கப்பட்டிருந்த அகண்ட விளக்கில் தீச்சுவாலையாய் மாறியது. இச்சுடர், 10 நாட்களுக்கு ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் முடியும் வரை தொடர்ந்து அணையாமல் நின்று எரியும்.

விளையாட்டுப் போட்டிப் பாடல்

சென்னையில் நடைபெறும் இப்போட்டிக்கென, புலவர். புலமைப்பித்தன் இயற்றி, திரைப்பட இசையமைப்பாளர் திரு சிற்பி இசையமைத்த பாடலை திரைப்படப்பின்னணிப் பாடகர்கள் திரு மனோ, அனுராதா பொடுவால், சித்ரா, ஸ்வர்ணலதா ஆகியோர் மேடையில் தோன்றிப் பாடினார்கள்.

உறுதிமொழி

இந்திய அணியின் தலைவி திருமதி பி.டி. உஷா, அனைத்து வீரர், வீராங்கனைகளின் சார்பாக, வலது கையை உயர்த்தி உறுதிமொழியை ஏற்றுக் கொண்டார். பின்னர், அனைத்து நாடுகளின் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் மைதானத்திலிருந்து வெளியேறி அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த இருக்கைகளில் அமர்ந்து கொண்டனர்.

நினைவுப் பரிசு

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இன்முகங்கொண்டு, பாய்ந்தோடும் இளஞ்சிங்க வடிவ நினைவுப் பரிசு ஒன்றைக் கண்ணாடிப் பேழையில் வைத்து மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அளித்தார். அப்போது, கொடியசைப்புக் காட்சியில் இரண்டு தலைவர்களின் உருவத்தையும் அருகருகே காட்டி மகிழ்ந்தார்கள்.

கலை நிகழ்ச்சிகள்:

கரகம், காவடி, பொய்க்கால் குதிரை

கலை நிகழ்ச்சிகளில் முதல் நிகழ்ச்சியாகத் தமிழ்நாட்டுக் கிராமியக் கலை நிகழ்ச்சியான கரகம், காவடி, பொய்க்கால் குதிரை, நடனங்கள், நூற்றுக்கணக்கான ஆண்களும், பெண்களும், நூற்றுக்கணக்கான நாதஸ்வரக் கலைஞர்களின் இசைக்கேற்ப மைதானத்தில் நிறைந்து ஆடினார்கள். மக்களும் ஆடினர். மட்டில்லா மகிழ்ச்சி கொண்டனர். காவடி கலைஞர்களும், கரகாட்டக்காரர்களும் மனிதகோபுரம் அமைத்து அரங்கின் உயரத்தை அளவிட முயன்றது அழகாக இருந்தது.

சிங்கம் யாக் எருமைகள்

மைதானத்திலிருந்து தமிழ்நாட்டுக் கலைஞர்கள், பார்வையாளர்களின் பாராட்டோடு விடைபெற்றவுடன், இரண்டு சிங்கங்களும், இரண்டு கருப்பு

காவிரி: தமிழகத்தின் உயிர்மூச்சுப் பிரச்சினை

நடுவர் மன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த மத்திய அரசு உடனடியாகத் தலையிடுக!

28.12.1995 அன்று தமிழகச் சட்டமன்றப் பேரவையில் காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்து, தமிழக அரசின் சார்பில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் மீது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:

மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே!

தமிழகத்தின் நெற்களஞ்சியமான, காவிரி டெல்டாப் பகுதியில், ஆண்டாண்டுக் காலமாக, நாம் காவிரி நதி நீரைப் பயன்படுத்தி, வேளாண் தொழிலை மேற்கொண்டு வந்த உரிமைகள், சிறிது சிறிதாக மறுக்கப்பட்டு இன்று காவிரி நதியில் இருந்து தமிழகத்தின் வேளாண் தொழிலுக்குக் கிடைக்க வேண்டிய பங்கு நீரைக் கூட இழக்கின்ற ஒரு துர்ப்பாக்கியமான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம் என்பது ஒரு வேதனைக்குரிய விஷயமாகும்.

மரபுரிமைப்படி இயல்பாக நமக்குக் காவிரி நதிநீர், பாசனத்திற்குக் கிடைக்கின்ற சூழ்நிலை மாறி நமக்குரிய பங்கு நீரை நாம் வற்புறுத்திக் கேட்டுப் பெறுகின்ற சூழ்நிலைக்கும் நீதி மன்றங்களுக்குச் சென்று ஆணையைப் பெறுகிற சூழ்நிலைக்கும் அவ்வாறு பெற்ற ஆணை மதிக்கப்படாத நிலையில் பாசன நீரின்றிப் பயிர்கள் வாடிவிடாமல் காப்பாற்ற மத்திய அரசை வற்புறுத்தி நமது உரிமைகளைப் பெறுகின்ற சூழ்நிலைக்கும் இன்று தள்ளப்பட்டிருக்கிறோம்.

தமிழகத்தின் ஜீவாதார உரிமைப் பிரச்சினையான காவிரி நதிநீர்ப் பிரச்சினையின் உண்மைத் தன்மையை உலகிற்கு உணர்த்தவும், மத்திய அரசு, கர்நாடக அரசை வற்புறுத்தி காவிரி நீர் மன்றத்தின் இடைக்கால ஆணையின்படி தமிழகத்திற்கு வழங்க வேண்டிய 205 TMCஅடி நீரை அந்த ஆணையில் குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் விட வேண்டும் என்பதை வற்புறுத்தியும், 1993-ஆம் ஆண்டு நான் உண்ணாவிரதம் மேற்கொண்டதை இந்த இடத்தில் நினைவுகூர்வது பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

கர்நாடக மாநிலம் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் தொடங்கி அடுத்த ஆண்டு மே மாதம் வரைக்கும் உட்பட்ட காலகட்டத்தில், காவிரி நதியில், 205 TMCஅடி நீரை விட வேண்டும் என்பதோடு அந்த மாதங்களில் ஒவ்வொரு வாரத்திலும், வழங்க வேண்டிய நீரின் அளவையும், ஒரு அட்டவணை இட்டு, நடுவர் நீதிமன்றம், இடைக்கால ஆணை வழங்கியுள்ளது. அது மட்டுமன்றி, மாதத்தின் ஒவ்வொரு வாரத்திலும் கொடுக்க வேண்டிய நீரின் அளவையும் குறிப்பிட்டு அதில் ஏதேனும் குறைவு ஏற்பட்டால், அந்த மாதத்தின் இறுதி வாரத் தவணையில், அந்தக் குறைவை முழுமையாக ஈடுசெய்ய வேண்டும் என்றும் காவிரி நதிநீர் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையில், மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இன்று வரை கர்நாடக மாநிலம் அந்த ஆணையை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதோடு ஆணையை மதித்து அதன்படி தண்ணீரைத் தமிழகத்திற்கு வழங்கவும் இல்லை. ஆனால் இயற்கை அன்னையின் அருள் நமக்குக் கடந்த நான்காண்டுக் காலமாகப் பரிபூரணமாகக் கிடைத்திருந்த காரணத்தால், கர்நாடக மாநிலம் காவிரியில், நமக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீரை விடாத போதிலும் தேவையான பாசன நீர் நமக்குக் கிடைத்தது.

இந்த ஆண்டு தென்மேற்குப் பருவ காலத்தில், கர்நாடக மாநிலம், தமிழகத்திற்குக் கொடுக்க வேண்டிய நீரைக் கொடுக்காத காரணத்தாலும், வடகிழக்குப் பருவ மழை பொய்த்துப் போனதாலும் மேட்டூர் அணையின் நீர் மட்டம், வெகுவாகக் குறைந்து, நமக்குப் பாதகமான சூழ்நிலைகள் ஏற்பட்டன. அதனால், குறுவை மற்றும் சம்பா சாகுபடிகளில் பல இலட்சம் ஏக்கர் நிலப் பரப்பில், வேளாண்மை மேற்கொள்ள இயலவில்லை. மேலும், தற்போது 13.3 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்ட பயிர் தண்ணீர் இன்றி வாடிக் கொண்டிருக்கிறது. காவிரி நதியில், நமக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர் கிடைக்கவில்லையெனில், நெற்பயிர் முழுவதும் பாழாகிவிடும் பாதகமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பாசன ஆண்டு தொடக்கத்திலிருந்தே, நம் மாநிலத்தின் வேளாண்மை ஏற்பாடுகளையும் பாசன ஏற்பாடுகளையும் எங்கள் அரசும், நாங்களும், கூர்ந்து கவனித்து வந்துள்ளோம். கர்நாடக மாநிலம், நமக்கு உரித்தான நீரை, இந்த ஆண்டு

பாசன நீரின்றி வாடுகின்ற பயிர்களின் நிலையை நேரில் கண்டறிந்திட, தஞ்சை மாவட்டத்திற்கு 30.12.95 அன்று ஹெலிகாப்டர் மூலம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் விரைந்தார். பட்டுக்கோட்டைப் பகுதிக்குச் சென்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் நெற்பயிர்களைப் பார்வையிட்டு, மாண்புமிகு அமைச்சர்கள், அரசு அலுவலர்களுடன் அதே இடத்தில் ஆலோசனை நடத்தினார்.

தண்ணீர் இன்மையால், தள்ளாடுகின்ற பயிர்களைப் பார்வையிட ஹெலிகாப்டர் மூலம் பட்டுக்கோட்டை கிராமப் பகுதிகளுக்குச் சென்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஊசலாடும் நிலையில் உள்ள பயிர்களையும், வயல்களையும் பார்வை யிட்டு, விவசாயப் பெருமக்களிடம் நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

காவிரியில் விடாத காரணத்தாலும், நமது மாநிலத்தில், காவிரியில் தண்ணீர் வரத்து குறைந்த காரணத்தாலும், இந்தப் பாசன நீர்ப் பற்றாக்குறைகளை மத்திய அரசுக்கு அவ்வப்போது சுட்டிக்காட்டி, இந்த நீர்க் குறைவைக் கர்நாடக அரசு ஈடு செய்ய, நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தொடர்ந்து வற்புறுத்தி வந்துள்ளோம்.

மேலும், கர்நாடக மாநில நீர்த்தேக்கங்களின் நீர் இருப்பு நீர் வரத்து மற்றும் நமக்கு விட வேண்டிய நீர் அளவின்படி கணிப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு நமக்குரிய நீரைக் காவிரியில் திறந்து விடுகிறார்களா என்பதைக் கண்காணிக்க ஒரு கண்காணிப்புக் குழு ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய அரசுக்குப் பல முறை, நேரிலும், கடிதங்கள் மூலமும், நாம் தொடர்ந்து வற்புறுத்தி வந்துள்ளோம்.

நிர்வாக முறைகளுக்கு ஏற்ப தகுந்த பரிகாரங்களையும் சட்ட முறைப்படி, நியாயம் கிடைக்கின்ற எல்லா வழிவகைகளையும் ஆராய்ந்து இந்த அரசு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் இந்தப் பிரச்சினையை அணுகி உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கெனவே, 1992-ஆம் ஆண்டு, கர்நாடக அரசு, நடுவர் மன்ற இடைக்கால ஆணையை அமல் நடத்தத் தவறியதால், அதை நிறைவேற்றும்படி, ஆணையிட வேண்டும் என்று தமிழக அரசு உச்ச நீதி மன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தது. அதன் பின், இடைக்கால நிவாரணம் கோரி கர்நாடகம் வழங்கத் தவறிய நீர்ப் பற்றாக்குறையை, ஈடுசெய்ய வேண்டும் என்றும் தமிழ்நாட்டுக்கு உரிய நீரை, வழங்கிய பின்னர் தான் கர்நாடக மாநிலம் தனது நீர்த் தேக்கங்களில் நீரைத் தேக்கி வைத்துக் கொள்ளவேண்டும் என்றும் ஆணை வழங்கக் கோரி இடைக்கால மனு, Interlocutory Petition ஒன்று, தமிழக அரசால், 1.8.1995-இல் தாக்கல் செய்யப் பட்டது. தற்போது நடப்புப் பருவத்தில், 13.3 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் உள்ள பயிரினைக் காப்பாற்ற 30 TMC அடி நீரையாவது உடனடியாக வழங்குமாறு கர்நாடக மாநிலத்திற்கு ஆணையிட, ஒரு அவசர மனு, Emergent petition உச்ச நீதி மன்றத்தில் 11.12.1995 அன்று

"விக்கிரமம்" என்ற கிராமத்தில் வாடிய பயிர்களைக் கண்டு வாடிய நிலையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், காவிரி டெல்டாப் பகுதியில், பயிரின் நிலைமை குறித்து தனது கவலையைத் தெரிவித்து இந்த மனுவைக் காவிரி நடுவர் மன்றம் உடடினயாக விசாரித்து தகுந்த நிவாரணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று 14.12.1995 அன்று தீர்ப்பு வழங்கியது. இரண்டு மாநில முதல்வர்களும் ஒன்று கூடி இது குறித்துப் பேச வேண்டும் என்றும் காவிரி நதி நீர் நடுவர் மன்றம் உடனடியாக நிலைமைகளை ஆராய்ந்து தக்க ஆணைகளை வழங்க வேண்டும் என்றும் ஆணையிட்டது. உடனடியாக நான் டெல்லிக்குச் சென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து, தமிழகத்தின் இக்கட்டான சூழ்நிலைகளை எடுத்துரைத்தேன். 30 TMC அடி பாசன நீர் தமிழகத்திற்குக் கிடைக்கவில்லை என்றால் கிட்டத்தட்ட 800 கோடி ரூபாய் பெருமானம் உள்ள விவசாய விளைபொருள் உற்பத்தி பாதிக்கப்படும் என்பதோடு இலட்சக்கணக்கான விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்களும், பாதிக்கப்படுவார்கள் என்பதையும் எடுத்துரைத்தேன். அப்பகுதிகளில் வறட்சி ஏற்படும் என்பதையும் வறட்சியினால் இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்படக் கூடும் என்ற எனது நியாயமான அச்சத்தையும் தெளிவாக எடுத்துரைத்தேன். முதல் பயிரில் தட்டுப்பாடு ஏற்பட்ட சூழ்நிலையில் மீண்டும் சம்பாப் பயிரில் இழப்பு ஏற்பட்டால் தமிழக விவசாயிகள் தங்கள் நிலங்களில் இட்ட முதலீட்டைக் கூடப் பெற முடியாமல், இழப்புக்கு ஆளாவார்கள் என்பதையும் எடுத்தரைத்தேன். அதற்கு ஆவன செய்வதாகக் கூறிய மாண்புமிகு பிரதமர் அவர்கள், உடனடியாக மாண்புமிகு மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்களுக்குத் தகவல் அனுப்பினார்கள்.

மேலும், உச்ச நீதிமன்றம் தெரிவித்த கருத்துப்படி, 15.12.1995 அன்று கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்களோடு, தொலைபேசியில் தொடர்பு கொண்டு இது குறித்துப் பேச, நான் மேற்

கொண்ட முயற்சிகள், பயனளிக்காமல் போய்விட்டன. நமக்குச் சாதகமான யதிலும் கிடைக்கவில்லை. இதற்கிடையில், மத்திய நீர்வளத்துறை அமைச்சர் உடனடியாக ஒரு கூட்டத்தை டெல்லியில் கூட்டுவதாக, எங்களுக்குத் தகவல் வந்தது. இந்தக் கூட்டத்தை, எப்போது வைத்துக் கொள்ளலாம் என்று கேட்டதற்கு நான் *19.12.1995* அன்றே வைத்துக்கொள்ளலாம் என்று தகவல் கூட அனுப்பினேன். ஆனால் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள கர்நாடக மாநில முதலமைச்சர் முன் வராததால், இந்தக் கூட்டம் இன்று வரை நடைபெறவில்லை. இதற்கிடையே தமிழக அரசு *14.12.1995* அன்று காவிரி நதி நீர் நடுவர் மன்றத்தில் உச்ச நீதி மன்றத் தீர்ப்புப்படி, தாக்கல் செய்த மனு விசாரணைக்கு மேற்கொள்ளப்பட்டு தேவைப்பட்ட புள்ளி விவரங்களும் நடுவர் மன்ற நிபுணர்களிடம் வழங்கப்பட்டன.

கர்நாடக மாநிலத்தில், செப்டம்பர் மாதத்திற்குப் பின் தென் மேற்குப் பருவ மழை வலுத்ததால், கர்நாடக மாநிலம் நம் மாநலத்திற்கு உரிய நீரை நமக்கு அளிக்கும் என்ற நியாயமான எதிர்பார்ப்புகளின் அடிப்படையிலும், தமிழகத்தில் வட கிழக்குப் பருவ மழை இயல்பாக இருக்கும் என்ற நம்பிக்கையிலும் காவிரி டெல்டாப் பகுதி விவசாயிகள் இன்றைய அளவில் *13.3* இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் நெல் சாகுபடியை மேற்கொண்டு இருக்கிறார்கள். ஒருபுறம் கர்நாடகம் நமக்குரிய

அன்பே கடவுள்

உங்கள் அன்பை ரகசியமாக வைத்திருக்காதீர்கள். அனை வருக்கும் பயன்படச் செய்யுங்கள்.

–ரவீந்தர்நாத் தாகூர்

நீரை வழங்கவில்லை. மற்றொரு புறம் வட கிழக்குப் பருவ மழையும் பொய்த்துவிட்டது. எனவே, மேட்டூர் அணையிலிருந்து கிடைக்கும் நீரை மட்டுமே நம்பி காவிரி டெல்டாப் பகுதியில் வேளாண்மை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் கர்நாடக மாநிலத்தில் தென் மேற்குப் பருவ மழை வலுத்ததால், கர்நாடகத்திற்குக் கிடைத்துள்ள நீர் வரத்திலிருந்து, இடைக்கால ஆணையின்படி, நமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய நீரை, முழுவதுமாக வழங்க வேண்டும் என்று கர்நாடக அரசை நாம் வற்புறுத்தினோம். அதற்கு மாறாக, இந்த ஆண்டில் தென் மேற்குப் பருவ மழை தொடக்கத்தில் வறண்ட நிலையும் நீர்த் தட்டுப்பாடும் ஏற்பட்டதால், இது வறட்சி ஆண்டு என்று உண்மைக்குப் புறம்பாகக் கூறி ஒட்டு மொத்தத்தில் பகுதி அள்வு தண்ணீரை மட்டுமே கொடுக்க முடியும் என்ற வாதத்தைக் கர்நாடக அரசு நடுவர் மன்றத்தின் முன்பு வைத்தது.

இந்த வாதத்தை ஏற்க இயலாது என்று நடுவர் நீதி மன்றம் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறது. அப்படியே வறண்ட நிலை இருந்தாலும், அப்படிப்பட்ட நிலை உள்ளதா, என்று ஆராய்ந்து என்ன விகிதாச்சாரத்தில் நீர்ப் பங்கீடு செய்வது அதாவது Pro-rata basis-இல் நீர்ப் பங்கீடு செய்வது என்பதை கர்நாடக அரசே தன்னிச்சையாகத் தீர்மானிக்கக் கூடாது என்றும், அதற்குரிய அதிகாரம், நடுவர் மன்றத்திற்கு மட்டுமே உள்ளது என்ற தமிழக அரசுத் தரப்பு வாதத்தையும் நடுவர் மன்றம் ஏற்றுக் கொண்டு கர்நாடக மாநில அரசின் வாதத்தைத் தள்ளுபடி செய்தது.

கர்நாடக மாநிலம் கொடுத்த புள்ளி விவரங்களின் அடிப்படையிலே கூட அவர்கள் தமிழ்நாட்டுக்கு உரிய நீர் அளவில் 28 TMC அடி காவிரி நீரை இதுவரை கொடுக்கவில்லை என்றும் அந்தக் குறைபாட்டை ஈடுசெய்ய, கர்நாடக மாநிலத்தின் வாதத்தின்படியே இடைவரத்து விகிதாச்சாரமாக அதாவது Pro-rata-படி 17 TMC நீரைக் கழித்தாவது, 11 TMC அடி நீரை அவர்கள் உடனடியாகத் தமிழகத்திற்குக் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என்றும் நடுவர் மன்றம் *19.12.1995* அன்று தீர்ப்பு அளித்துள்ளது. இரு மாநிலங்களும் அளித்த விவரங்களை ஆராய்ந்து காவிரி நடுவர் நீதி மன்றம் *19.12.1995* அன்று உடடினயாக *11* TMC அடி நீரையும், எஞ்சியுள்ள மாதங்களில் நடுவர் மன்றத்தின் *25.6.1991* தேதியிட்ட இடைக்கால ஆணையின்படி அம்மாதங்களுக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ள அளவு காவிரி நீரைத் தமிழகத்திற்குக் கர்நாடக மாநிலம் வழங்க வேண்டும்

என்று தீர்ப்பு வழங்கியது. நமது தேவையைவிட நமது எதிர்பார்ப்பைவிட இந்த அளவு குறைவாக இருந்தாலும் நாம் அந்தக் குறைந்த அளவு நீரையாவது நடுவர் மன்ற தீர்ப்புப்படி கர்நாடகம் வழங்கும் என்று எதிர்பார்த்தோம்.

இரு மாநிலங்களிடையே ஏற்படும் நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையை ஆராய்ந்து தீர்ப்புக் கூறுவதற்காக அமைக்கப்பட்ட தனி அமைப்பாகக் காவிரி நதி நீர் நடுவர் மன்றம் இருந்தும் அதன் தீர்ப்பைக் கர்நாடகம் இன்று வரை மதிக்கவில்லை.

தமிழகத்தின் நியாயமான உரிமைகள், மறுக்கப்படும் போதெல்லாம் எங்கள் அரசு, உரிமைக் குரல் கொடுக்க என்றும் தயங்கியதில்லை. அதே உணர்வுடன் தற்போது பாசன நீர் இன்றி, வாடிவிடும் நிலையில் உள்ள பயிர்களைக் காப்பாற்ற குறைந்தபட்சம் 30 TMC அடி நீரையாவது கர்நாடக மாநிலம் தமிழகத்திற்கு வழங்க வேண்டும் என்று வற்புறுத்தி நான் மாண்புமிகு பாரதப் பிரதமர், திரு பி.வி. நரசிம்ம ராவ் அவர்களுக்கு *11.12.1995* அன்றும், மாண்புமிகு கர்நாடக மாநில முதலமைச்சர் திரு தேவே கௌடா அவர்களுக்கு *7.12.95* அன்றும் கடிதங்களை எழுதினேன்.

கர்நாடக மாநிலத்தின் நீர்த்தேக்கங்களில் தற்போது தேக்கி வைக்கப்பட்டிருக்கும் நீரில் இருந்து 30 TMC அடி நீரை நிச்சயமாகக் கர்நாடக மாநிலம், காவிரியில் நமக்காகத் திறந்து விட முடியும். ஆனால், ஒரு

அறிவும்ஆன்மாவும்

அறிவு மட்டும் கூறும் வழியில் செல்லாதீர்கள். ஆன்மா ஆணையிடும் வழியிலும் செல்லுங்கள்.

–பெஞ்சமின் பிராங்க்ளின்

அண்டை மாநிலத்தினுடைய பிரச்சினையை, இன்னொரு மாநிலம் உணர்ந்து கொண்டு உதவ முன் வராததோடு, நமது உரிமைகளைப் புறக்கணித்திருப்பது நமக்கு வேதனையை அளிக்கின்றது. எனவே, மத்திய அரசு, இதில் உடனடியாகத் தலையிட்டு, தீர்வு காண வேண்டும் என்று நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டேன்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், கூட்டத்தைக் கூட்டினால் மட்டுமே, தான் கலந்து கொள்ளத் தயாராக இருப்பதாக, திரு தேவே கௌடா அவர்கள் கருத்துத் தெரிவித்ததாகச் சில செய்தித் தாள்களில் செய்தி வெளி வந்துது. எப்படியேனும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதால், *18.12.1995* அன்று சென்னைக்கு வந்திருந்த மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் இந்த விவரங்களை எடுத்துரைத்து, இந்தக் கூட்டத்தைப் பாரதப் பிரதமர் அவர்களே விரைவில் கூட்ட வேண்டும் என்று நானும் கேட்டுக் கொண்டேன்.

கடந்த சில நாட்களாகக் கர்நாடக மாநிலத்தில் நடைபெற்று வரும் நிகழ்ச்சிகள் *19.12.1995* நடுவர் மன்றத் தீர்ப்புப்படி 20 TMC அடி நீரை நமக்ககாத் திறந்து விடுவார்கள் என்கின்ற நம்பிக்கையை உறுதிப்படுத்துவதாக இல்லை. எனவே, மத்திய அரசு முனைப்புடன் தலையிட்டு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பொதுவாக, இரண்டு மாநிலங்களுக்கு இடையே ஏற்படக் கூடிய இத்தயைப் பிரச்சினைகளை ஆராய்ந்து, நல்ல முடிவெடுக்க வேண்டிய கட்டாயமும், கடமையும் மத்திய அரசுக்கு உண்டு.

நம்மைப் பொறுத்த வரையில் நமக்கு *19.12.1995*-இன் நடுவர் மன்ற ஆணைப்படி வழங்க வேண்டிய குறைந்தபட்ச *11* TMC அடி நீரையும், டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களுக்குரிய *9* TMC அடி நீரையும் சேர்த்து ஆக மொத்தம் 20 TMC அடி நீரை, உடனடியாகக் காவிரியில் கர்நாடக அரசு திறந்துவிட வேண்டும். அதற்கு மத்திய அரசு அரசியலமைப்புச் சட்டப்படித் தீர்வு காணத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே நமது கோரிக்கை ஆகும். இதை இந்த அவையும் வலியுறுத்தும் என்று நம்புகிறேன்.

மத்திய அரசு கர்நாடக மாநில அரசை வற்புறுத்தி, காவிரியில் 20 TMC நீரை உடனடியாகத் திறந்துவிட, தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வற்புறுத்தும் தீர்மானத்தையும், காவிரி நதி நீர் நடுவர் மன்றம் *25.6.1991* அன்று பிறப்பித்த இடைக்கால ஆணையை நடைமுறைப்படுத்த மத்திய அரசு



போட்டிகளில் பங்கேற்க அணிவகுத்து வருகின்றது விளையாட்டு வீரர்-வீராங்கனைகளின் கூட்டம்



வங்காளதேசம்



பூடான்



மாலத்தீவு



பாகிஸ்தான்

இலங்கை



நேபாளம்

இந்தியா



ஏற்கெனவே அறிவித்த கண்காணிப்புக் குழு அதாவது Monitoring Committee மற்றும் நடைமுறைப்படுத்தும் குழு அதாவது Implementation Committee ஆகியவற்றை மத்திய அரசு உடனடியாக அமைக்க வேண்டும் என்ற தீர்மானத்தையும் தமிழக மக்கள் அனை[illegible] வரின் சார்பிலும் இந்த அவையில் நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தின் இந்த உயிர் மூச்சுப் பிரச்சினையில் நாங்கள் மேற்கொண்டு வரும் அனைத்து முயற்சிகளுக்கும் மாண்புமிகு [illegible] அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் தமிழக மக்கள் நலன் காக்க ஓரணியில் திரண்டு தங்களது முழு ஒத்துழைப்பையும் நல்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு தமிழக அரசின் சார்பில், காவிரி நதி நீர்ப் பிரச்சினை குறித்த தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டி

சிறந்த வீராங்கனை ஷைனி வில்சனுக்கு மாண்புமிகு முதல்வர் கார் பரிசு

"தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டியின் சிறந்த வீராங்கனை" திருமதி ஷைனி வில்சனுக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 28.12.95. அன்று மாருதி கார் வழங்கினார்.

தடகளப் போட்டிகளில் சிறப்பான வெற்றிகளைக் குவித்த திருமதி ஷைனி வில்சனைப் பாராட்டும் வகையிலும், 1984-ஆம் ஆண்டு தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டி தொடங்கப்பட்டது முதல், தொடர்ச்சியாக 7 போட்டிகளிலும் அவர் கலந்து கொண்டதைக் சிறப்பிக்கும் வகையிலும், சர்வதேச அளவில் இந்தியாவுக்குப் பெருமை சேர்க்கும் வெற்றிகளைத் தேடித் தந்ததற்குப் பாராட்டு தெரிவிக்கும் வகையிலும் தமிழக அரசின் சார்பில் "மாருதி 1000" கார் ஒன்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

காரை வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், நடந்து முடிந்த 7வது தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டியில் தலைசிறந்த சாதனைகள் புரிந்த திருமதி ஷைனி வில்சனுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

விருதையும், கார் சாவியையும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட திருமதி ஷைனி வில்சன் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களின் அன்புப் பரிசுக்கு மனமார்நத நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

● நான்காம் அட்டை சொல்லும் செய்தி:

விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகள் நலனில் அக்கறை காட்டும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, இதயம் கனிந்த நன்றி தெரிவித்த் திருமதி ஷைனி வில்சன், ஆசிய விளையாட்டுப் போட்டியைப் போல வெகு சிறப்பான முறையில் தெற்காசிய விளையாட்டுப் போட்டியை நடத்திக் காட்டியதற்கும் நன்றி கூறினார்.

திருமதி ஷைனியுடன் வந்திருந்த அவரது குடும்பத்தினரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் டாக்டர் பா. சிவந்தி ஆதித்தன், தமிழக அரசுத் தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., காவல்துறைத் தலைவர் திரு தேவாரம், இ.கா.ப., கல்வித்துறைச் செயலாளர் திரு எல்.என். விஜயராகவன், இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு மோகன்பியாரே இ.ஆ.ப., தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டி அதிகாரிகள் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்

நிழற்படத் தொகுப்பு






ரூ.8.5 கோடி செலவில் நுங்கம்பாக்கத்தில் கட்டப்பட்டுள்ள அதிநவீன வசதிகளுடன் கூடிய டென்னிஸ் அரங்கை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் திறந்து வைத்தார். மாண்புமிகு கல்வியமைச்சர் திரு பொன்னுசாமி அவர்கள், தெற்காசிய விளையாட்டு சம்மேளனத் தலைவர் திரு பா. சிவந்தி ஆதித்தன், தெற்காசியப் போட்டி அமைப்புக்குழு செயலர் திரு எல்.என். விஜயராகவன் ஆகியோர் உடன் உள்ளனர். (14.12.95, சென்னை)

சர்வதேசத் தரத்தில், எழும்பூரில் ரூ.11 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள மேயர் இராதாகிருஷ்ணன் ஆக்கி அரங்கத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம், தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப. ஆகியோர் உடன் உள்ளனர். (21.12.95, சென்னை)





வேளச்சேரியில் 5 ஏக்கர் பரப்பளவில், ரூ.12 கோடி செலவில், 4,500 ரசிகர்கள் அமர்ந்து பார்வையிடும் வகையில், சர்வதேச நீச்சல் சம்மேளன விதிமுறைகளின்படி வடிவமைக்கப்பட்டுள்ள நீர் விளையாட்டு நீச்சல் வளாகத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் திறந்து வைத்தார். (14.12.95, சென்னை)

சென்னை நேரு ஸ்டேடியம் அருகில் ரூ.25 கோடி செலவில் அதிநவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு உபயோக உள் விளையாட்டு அரங்கை மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்து இந்திய-நேபாள அணிகளுக்கு இடையேயான கைப்பந்துப் போட்டியைத் தொடக்கி வைத்து ஆட்டத்தைக் கண்டுகளித்தார். மாண்புமிகு கல்வியமைச்சர் திரு க. பொன்னுசாமி, தெற்காசிய விளையாட்டு சம்மேளனத் தலைவர் திரு பா. சிவந்தி ஆதித்தன், போட்டி அமைப்புக்குழு செயலர் திரு எல்.என். விஜயராகவன், இ.ஆ.ப. ஆகியோர் உடன் உள்ளனர். (22.12.95, சென்னை)





நொடிக்கொரு முறை பூத்துக் குலுங்கிய
நறுமலர்க் கூட்டமோ நந்தவனமோ!



விநாடிக்கு ஒரு உருவம் படைத்து இதயத்தைக்
கொள்ளை கொண்டதே பிள்ளை மலர்கள்!





வளைந்து நெளிந்தோடிய வண்ணக் குழம்போ!
வானவில் தரையிறங்கிய அழகோ! அற்புதமோ!

கொடி அசைப்பு உருவக்காட்சி படைத்த கோலாகலக் காட்சிகள்

என்ன இனித்திடும் இக்கோலம் யாவும்
வண்ணக் கொடிகள் செய்த மாயந்தானோ?







மராட்டிய மாநிலத்து லெசியம் நடனம்



இராஜஸ்தான் - சரி நடனம்

மத்தள நடனம்

வண்ண மிகு

கலை நிகழ்ச்சிகள்

குஜராத் மாநிலத்துக் கோலாட்டம் - தண்டியா ராஸ்

அஸ்ஸாம் மாநிலத்து அணங்குகள் ஆட்டம் - பிஹு

மேகாலயா மாநிலத்து சீர்மிகு நடனம் - வாங்லா



மூக்கின் மீது விரல் வைக்க வைத்த மூங்கில் நடனம் - செராவ்

மத்தியப் பிரதேச பழங்குடியினர் நடனம் - கவுட் மரியாஸ்

தமிழகத்தின் பொய்க்கால் குதிரை

'யாக்' எருமை - சிங்க நடனம்

ஆந்திரப் பிரதேசத்து லம்பாடி நடனம்

சிறப்புடன் நடைபெற்ற

வீராபுரம் துப்பாக்கி சுடும் தளம் திறப்பு விழா

50 மீட்டர் தொலைவிலிருந்த இலக்கைக் குறி பார்த்துச் சுட்டார் மாண்புமிகு முதல்வர்

சென்னைக்கு அருகில் வீராபுரத்தில் புதிதாகக் கட்டப் பட்டுள்ள துப்பாக்கி சுடும் ரேஞ்சை ரிப்பன் வெட்டி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 21.12.95 அன்று குத்து விளக் கேற்றித் திறந்து வைத்தார். பின்னர் 50 மீட்டா தூரம் துப்பாக்கி சுடும் பந்தயம் நடைபெறும் அரங்குக்குச் சென்ற மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், அங்கு தயாராக வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியால் சுட்டு பிஸ்டல் மற்றும் ரைபிள் பிரிவுத் துப்பாக்கி சுடும் போட்டி களைத்தொடங்கி வைத்தார்.

குறி தவறாமல் இலக்கை நோக்கிப் பாய்ந்தது குண்டு.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் துப்பாக்கியால் சுட்டதும் 50 மீட்டர் தூரத்தில் இருந்த இலக்கின் நடுவில் குறி தவறாமல் குண்டு பாய்ந்தது. குண்டு பாய்ந்த அட்டையை வரவழைத்து, அதில் சரியாக 10 புள்ளிகள் இலக்கை குண்டு துளைத்து இருப்பதை அறிவித் ததும், அரங்கில் கூடியிருந்த வீரர்கள் கைதட்டிப் பாராட்டு தெரிவித்தனர்.

குண்டு பாய்ந்த அட்டையில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் கையெழுத்திட்டுக் கொடுத்தார்.

25 மீட்டர் பந்தயம் நடத்தும் அரங்கையும், 10 மீட்டர் தூரம் பந்தயம் நடத்தும் அரங்கையும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் சுற்றிப் பார்த்தார். 25 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவு மகளிர் போட்டி நடந்தது. இந்தியா, மாலத்தீவு, இலங்கை அணிகளின் வீராங்கனைகள் கலந்து கொண்ட இந்தப் போட்டியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏறத்தாழ 5 நிமிடம் அமர்ந்து ரசித்தார்.

அங்கு அவருக்கு இந்தியாவின் பிரபல துப்பாக்கி சுடும் வீரர் ஜஸ்பால் ராணா, வீராங்கனை குகேலி ஆகியோர் அறிமுகம் செய்து வைக்கப் பட்டனர்.

நவீன வசதிகளுடன் புதிய தளம் மாண்புமிகு முதல்வருக்கு நன்றி

இவ்வளவு நவீன வசதி களுடன் துப்பாக்கி சுடும் தளங்களை அமைத்து வழங்கிய தற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு, தேசிய துப்பாக்கி சுடும் சங்கப் பொருளாளர் மேஜர் டி.ஆர்.எல். நந்தா நன்றி தெரிவித்தார்.

போட்டி குறித்த விவரங் களைக் கேட்டறிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 11.30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., காவல் துறை இயக்குநர் திரு வால்டர் ஐ. தேவாரம், இ.கா.ப., காவல்துறைக் கூடுதல் இயக்குநர் திரு. ராஜசேகரன் நாயர், இ.கா.ப., ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டனர்.

உலக அரங்கில் இந்தியாவைத் தலை நிமிர்ந்து நிற்க வைத்திடும் வீராபுரம் தளம்

தேசிய துப்பாக்கி சுடும் சங்கப் பொருளாளர் மேஜர் டி.ஆர்.எல். நந்தா, உலக அளவிலான பல்வேறு போட்டி களில்-சைப்ரஸில் நடந்த உலகத் துப்பாக்கிச் சுடும் போட்டி, ஆக்லாந்தில் 1990ஆம் ஆண்டு நடந்த காமன்வெல்த் போட்டி, இதற்கு முன்னர் நடைபெற்ற இரண்டு தெற்காசிய விளை

யாட்டுப் போட்டிகள் ஆகியவற்றுக்குச் சென்றவர் ஆவார். அங்கெல்லாம் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி சுடும் தளங்களையும் தற்போது ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளுக்கான புரட்சித் தலைவி அவர்களது முழு முயற்சியால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள வீராபுரம் தளத்தையும் ஒப்பு நோக்கி மேஜர் நந்தா வெகுவாகப் புகழ்ந்துரைத்தார். "அங்கு இருந்தவை எல்லாம் பெரும்பாலும் தற்காலிகமானவை. அவற்றையெல்லாம்விட, இங்கு உள்ள துப்பாக்கி சுடும் தளம் மிகவும் வசதியாகவும், சர்வ தேசத் தரத்துடனும் கட்டப்பட்டுள்ளது" என்று தெரிவித்த மேஜர் நந்தா, "ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளைச் சென்னையில் நடத்த முழுமுயற்சி எடுத்ததுடன், அதனையொட்டித் துப்பாக்கி. சுடும் போட்டிக்கென இவ்வள்வு நவீன வசதிகளுடன் சிறப்பு மிகுந்த துப்பாக்கிச் சுடும் 'ரேஞ்சுகளை' விளையாட்டு வீரர்களுக்கு வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்குத் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

வானில் பறக்கும் தட்டுகளைத் துப்பாக்கியால் சுடும் போட்டி: தொடங்கி வைத்தார் மாண்புமிகு முதல்வர்.

180 டிகிரியில் அரை வட்டத்துக்குள் மின்னல் வேகத்தில் ஏதாவது ஒரு திசையை நோக்கிப் பறக்க விடப்படும் தட்டுகளைத் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்துவதுதான் டிராப் போட்டி. இதற்காகப் பூமிக்கு அடியில் கம்ப்யூட்டர் மயமாக்கப்பட்ட கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்தக் கம்ப்யூட்டர் கருவியால் வானத்தில் பறக்க விடப்படும் தட்டுகளைத் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தும் போட்டிகள் நடைபெறும் அலமாதியில் அமைந்துள்ள, சிவந்தி ஆதித்தன் துப்பாக்கி சுடும் மைதானத்தில் இப் போட்டியை 21.12.95 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்,

இந்த டிராப் போட்டியைத் தொடங்கிவைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஹெலிகாப்டர் மூலம் துப்பாக்கி சுடும் மைதானத்துக்கு வந்தார்.

அங்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த மைதானத்தில் சர்வதேசத் தரத்துக்கு இணையாகச் செய்யப்பட்டுள்ள வசதிகளைச் சுற்றிப் பார்த்தார். அங்கு புதிதாகக் கட்டப்பட்டுள்ள நிர்வாக அலுவலகத்தில் குத்து விளக்கு ஏற்றிவைத்தார்.

மேடைக்கு வந்த மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், 'புல்' என்று மைக்கில் கூறி டிராப் போட்டிகளைத் தொடங்கி வைத்தார். அப்போது பூமிக்கு அடியில் உள்ள கருவிகளில் இருந்து தட்டுகள் வானத்தில் பறக்கவிடப்பட்டன. உடனே கூட்டத்தினர் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

தொடர்ந்து போட்டிகள் தொடங்கின. மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் சற்று நேரம் அமர்ந்திருந்து போட்டிகளைப் பார்த்தார். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சென்னை ரைபிள் கிளப் சார்பில் நினைவுப் பரிசை திரு சிவந்தி ஆதித்தன் அவர்கள் வழங்கினார்.

கொடி அமைப்பு உருவக் காட்சி

நொடிக் கொரு முறை பூத்துக் குலுங்கிய நந்தவனம்

நொடிக்கொருமுறை பூக்கும் நந்தவனமோ, வளைந்து நெளிந்து ஓடும் வண்ணக் குழம்போ, வானவில் தானாக தரையிறங்கிய அற்புதமோ! என அனைவரையும் வியக்கவைத்த காட்சிகளைக் காட்டிய கொடியசைப்பு உருவக்காட்சி (Playcard Display) நிகழ்ச்சி, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் பெருமுயற்சியால், சென்னையில் நடைபெற்ற ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க விழா மற்றும் நிறைவு விழாவின் போது மிக அதிகமான பொதுமக்களின் மனங்களைக் கொள்ளை கொண்டது.

கொடியசைப்பு அலங்கார நிகழ்ச்சி என்பது சர்வதேச விளையாட்டுப் போட்டிகள், ஒலிம்பிக் போட்டிகள் போன்ற பல நாடுகள் பங்கேற்கும் விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க நாள் மற்றும் நிறைவு நாளில் பல்வேறு வண்ணக் கொடிகளை இளைஞர்கள் கைகளில் அசைத்து, வெளிப்படுத்தி, பல நிறங்களில் பல்வேறு உருவங்களை ஓவியர்கள் திரைச்சீலையில் ஏற்படுத்துவது போல, உருவாக்கிக் காட்டுவார்கள். இவற்றுள் எழுத்துக்கள், விளையாட்டு இலச்சினைகள், தேசியக்கொடிகள் போன்ற உருவங்களை வண்ணங்களில் அமைத்துக் காட்டுவார்கள்.

எல்லோரையும் ஈர்த்த இனிமையான நிகழ்ச்சி

சென்னையின் நடைபெற்ற ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி கொடியசைப்பு அலங்கார நிகழ்ச்சிக்காகச் சென்னையில் ஆசிரியராகப் பணியாற்றும் திரு தேனப்பன் அவர்கள் தலைமையில் 125 ஆசிரிய, ஆசிரியைகள் கிட்டத்தட்ட ஒரு மாதக் காலத்திற்கு 3,600 பள்ளி மாணவர்களைக் கொண்டு ஒத்திகை பார்த்தார்கள். திரு தேனப்பன் இக்கலையில் ரஷ்யா போன்ற நாடுகளில் சிறப்புப் பயிற்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வண்ணக் கொடிகள்

சென்னையிலுள்ள 35 பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்கேற்றார்கள். ஒவ்வொரு மாணவனின் கையிலும் ஒன்பது நிறக் கொடிகளைப் பலமுறைப் பயன்படுத்தி பல வண்ண உருவங்களைக் காட்டினார்கள். கிட்டத்தட்ட 80 வகையான எழுத்துக்கள், உருவங்களை வெளிப்படுத்தும் வகையில் நிகழ்ச்சிகளை அமைத்திருந்தார்கள்.

முதல்வரின் திருவுருவம்

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் திருவுருவும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் உருவம், ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டியின் இலச்சினையான பாயும் இளஞ்சிங்க உருவம், வணக்கம், வருக வருக, மாண்புமிகு தமிழக முதல்வரே வருக, நன்றி என்ற பொதுவான எழுத்துக்கள், வடிவங்களை உருவாக்கினார்கள்.

தெற்காசிய நாடுகள்

தெற்காசிய நாடுகளின் தேசியக் கொடிகள், அந்நாடுகளின் பெயர்கள், தேசியச் சின்னங்கள் போன்றவற்றைச் சிறிதும் பிறழாமல் நேரடியாகப் பார்ப்பது போன்ற நிறங்களில் அமைத்துக் காட்டினார்கள்.

அசையும் காட்சிகள்

இதுதவிர, அனைவரையும் வியப்பிலாழ்த்திய வண்ண உருவங்கள் உண்டு. பாரா சூட்டிலிருந்து வீரர்கள் மேலிருந்து குதிக்கும் காட்சியைப் படிப்படியாகக் காட்டியதும், வீரன் ஒருவனைச் சுமந்தபடி குதிரை ஒன்று இடது புறத்திலிருந்து வலது புறத்துக்குத் தடைகளைத் தாண்டும் காட்சியை மிகமிக அற்புதமாக வடிவமைத்து, பார்வையாளர்கள் அனைவரின் பாராட்டுக்களையும் குவித்துக் கொண்டார்கள்.

தலைமைச். செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில், காவிரி நதி நீர்ப் பிரச்சினை குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது. (29.12.95)



சாத்தூர் வேம்பக்கோட்டை நீர்த்தேக்கம்
தர்மபுரி தூளகிரி - சின்னாறு, நெடுங்கால் அணைக்கட்டு, பரூர் பாசனத் திட்டம்

நீர் நிலை ஆதாரங்கள்
ரூ.4 கோடி செலவில் மேம்பாடு

தமிழ்நாட்டில் விவசாயப் பெருமக்கள் காலங்காலமாகக் கையாண்டு வரும் நீர்ப்பாசன முறைகளை நவீனப்படுத்த வேண்டும் என்றும், தமிழ்நாட்டிலுள்ள நீர்ப்பாசன ஆதாரங்களான குளம், குட்டை, வாய்க்கால், ஆறு போன்றவற்றைச் சீர்செய்து வளப்படுத்த வேண்டும் என்றும், அத்தகைய மேம்படுத்தப்பட்ட பாசன வசதியின் மூலமாக தமிழ்நாட்டின் வேளாண் உற்பத்திப் பெருக்கத்திற்கு வழி வகுக்கப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே தனது கருத்தினை வெளியிட்டிருந்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டிருந்த இந்த ஆலோசனையின் அடிப்படையில், தமிழக வேளாண் துறை உலக வங்கியின் உதவியோடு தமிழ்நாட்டிலுள்ள பல வகைப்பட்ட நீர்நிலைகளையும், நீர் ஆதாரங்களையும் மேம்படுத்துவதற்காக மிகப் பெரிய அளவில், 1,140 கோடி ரூபாய் மதிப்பில் "தமிழ்நாடு நீர் ஆதாரங்கள் மேம்பாட்டுத் திட்டம்" (Water Resources Consolidation Project) ஒன்றினைத் தயாரித்து, அதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் அறிவுரையின்படி, உலக வங்கியின் அனுமதியையும் பெற்று தற்போது வெற்றிகரமாகச் செயல்படுத்தியும் வருகின்றது.

தற்போது இந்தத் திட்டத்தில் கீழ்க்கண்ட பகுதிகளில் உள்ள நீர்நிலை ஆதாரங்களைச் சீரமைத்து, அவற்றை மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணைபிறப்பித்துள்ளார்.

1. தர்மபுரி மாவட்டத்திலுள்ள தூளகிரி - சின்னாறு துணைத் திட்டத்தினை 84 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் பணி-

2. தர்மபுரி மாவட்டத்திலுள்ள நெடுங்கால் அணைக்கட்டு மற்றும் பரூர் பாசனத் திட்டத்தினை 2.71 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தும் பணி-

3. காமராஜர் மாவட்டம் சாத்தூர் வட்டத்திலுள்ள வேம்பக்கோட்டை நீர்த் தேக்கத் திட்டத்தினை 28 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் பணி-

நீர் ஆதாரங்கள் சீரமைக்கும் பணிகளை முன்னுரிமையின் அடிப்படையில் விரைந்து செயல்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உத்தர விட்டுள்ளார்.

நீ உன்னையறிந்தால்...

மனதை ஒருமுகப்படுத்துவதால், எந்தக் காரியத்தையும் சாதிக்கலாம்.

—சுவாமி விவேகானந்தர்



விளையாட்டுப் போட்டிகளை நேரில்காண...

அலைமோதியது அன்பர் கூட்டம்
அரங்குகளில் மக்கள் வெள்ளம்

புரட்சித்தலைவியின் சிந்தனைக்கு வெற்றி!

ஆர்வம் இருக்கும்; ஆனால், அதை முறைப்படுத்தும் வழிகாட்டுதல் இருக்காது. ஊக்கம் இருக்கும்; ஆனால், அதனை உற்சாகப்படுத்தி உயர்த்திட வாய்ப்பு வசதிகள் இருக்காது. இதுதான், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்பதற்கு முன்பு தமிழகத்திலிருந்த விளையாட்டுத்துறையின் நிலை ஆகும்.

இந்த நிலையை மாற்றி உலக விளையாட்டு அரங்கில் தமிழக வீரர்கள் உன்னத இடத்தைப் பெறும் வகையில் அனைத்து வசதிகளையும் அளிப்பதோடு, தமிழக மக்களின் மனங்களிலும் விளையாட்டு உணர்வுகளை விதைத்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளிப்பதோடு, ஒரு உத்வேகத்தையும் தமிழக மக்கள் மத்தியில்

காவிரி நதி நீர்ப் பிரச்சினை:
மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் புதுடெல்லி பயணம்

காவிர் நதி நீர் மன்றத் தீர்ப்பின்படி, தமிழ்நாட்டிற்கு கர்நாடக அரசு தண்ணீர் விடவேண்டும் என்ற தீர்ப்பை அமல்படுத்துவதற்கு மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்கள் கூட்டியுள்ள கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக, தமிழ்நாட்டின் சார்பில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் 30.12.1995 அன்று மாலை புதுடெல்லிக்குப் பயணமானார்கள்.

காவிரி நதி நீர்ப் பிரச்சினை தொடர்பாக புதுடெல்லியில் நடைபெற்ற முதல்வர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (30.12.95)

31.12.95 அன்று இரவு மீண்டும் புதுடெல்லியில் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்களை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், அவரது இல்லத்தில் சந்தித்து காவிரியில் 11 டி.எம்.சி அடி தண்ணீர் திறந்துவிடுவது குறித்துப் பேசினார்.

'பாரத ரத்னா' டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் எட்டாவது நினைவு நாளையொட்டி, சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அவரது சமாதியில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களும், மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். (24.12.95)

உருவாக்க வேண்டும் என்று சிந்தித்துச் செயல்பட்டு, சர்வதேசத் தரத்தில் பல்வேறு விளையாட்டு அரங்குகளை உருவாக்கியதுடன், சர்வதேசப் போட்டிகள் நடத்துவதன் மூலம், அந்த விருப்பத்தை வெற்றி பெற வைத்திட வேண்டும் என்று ஏழாவது தெற்காசியப் போட்டிகளை சென்னையிலேயே நடத்திட ஏற்பாடு செய்தார் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள். மேலும், அனைத்துப் போட்டிகளையும் மக்கள் இலவசமாகக் கண்டுகளிக்கலாம் என்றும் அறிவித்தார்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின் இந்த எண்ணம் நூற்றுக்கு நூறு நிறைவேறியதை ஒவ்வொரு அரங்கு முன்னரும் திரண்டிருந்த மக்கள் வெள்ளம் எடுத்துக்காட்டியது.

ஏழாவது தெற்காசியப் போட்டி விளையாட்டுகள் நடத்திட சர்வதேசத் தரத்தில் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களால் சென்னை நகரின் பல்வேறு பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் அரங்குகளுக்கு விளையாட்டு ரசிகர்களும், பொதுமக்களும் பேரார்வத்துடன் திரண்டனர். அரங்குகள் யாவற்றிலும், எதிர்பார்த்ததைவிட மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. இது விளையாட்டு வீரர்களுக்குப் புதிய உற்சாகத்தையும், உத்வேகத்தையும் அளித்ததுடன் மட்டுமல்லாது, ஏந்த நோக்கத்துடன் ஏழாவது தெற்காசியப் போட்டிகளை நடத்திட மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் முனைந்தாரோ, அந்த நோக்கம் வெற்றி பெற்றுவிட்டது என்பதையும் வெளிப்படுத்தியது.

புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா கூடைப்பந்து உள்ளுறை வளாகத்தில் அமைந்துள்ள கூடைப்பந்து புதுஅரங்கில், போட்டிகள் நடந்த எல்லா நாட்களிலும் உள்ளும் புறமும் கூட்டம் நிரம்பி வழிந்தது.

இதேபோல நமது மண்ணின் மணம் வீசும் விளையாட்டான கபடிப் போட்டி நேரு பூங்கா அரங்கில், பார்வையாளர்களைப் பெருமளவில் ஈர்த்தது. மேலும், காட்சி விளையாட்டுகளாக, இதே அரங்கில் 'சிலம்பம்' நடைபெற்றபொழுதும் மக்கள் வெள்ளம் அலை மோதியது.



ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்

☆ உலக நாடுகளுக்கு இணையாக அற்புதமாக நடத்தினார்!

☆ வெற்றிக்கு வழிகாட்டும் ஊக்க சக்தியாக விளங்கினார்!

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு

சிறப்பான பாராட்டு! சீர்மிகு நினைவுப் பரிசு!

சென்னையில் 7-வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளைச் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளுக்கு இணையாக மிக அற்புதமாக நடத்தியதற்காகவும், போட்டிகள் வெற்றிகரமாக நடந்து முடிவதற்கு ஊக்கச்சக்தியாகவும், வழிகாட்டும் சக்தியாகவும் விளங்கியதையொட்டியும், விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளின் நலனில் தனி ஆர்வம் அக்கறை கொண்டிருப்பதையொட்டியும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு நினைவுப் பரிசு 28.12.95 அன்று வழங்கப்பட்டது.

இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் டாக்டர் பா. சிவந்தி ஆதித்தன், தமிழக அரசுத் தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., காவல்துறைத் தலைவர் திரு தேவாரம், இ.கா.ப., தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டியின் அமைப்புக்குழுச் செயலாளரும், கல்வித் துறைச் செயலாளருமான திரு எல்.என். விஜயராகவன், இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் - செயலாளர் திரு மோகன் பியாரே, இ.ஆ.ப., கல்வித்துறைச் சிறப்புச் செயலர் திரு டி.எஸ்.ஸ்ரீதர் இ.ஆ.ப. ஆகியோர் இந்த நினைவுப் பரிசை வழங்கினார்கள்.

தமிழ்நாடு சார்பிலும், இந்திய விளையாட்டுச் சம்மேளனங்கள், வீரர்கள் வீராங்கனைகள் சார்பிலும், போட்டியின் அமைப்புக்குழு உறுப்பினர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இதயபூர்வ நன்றியைத் தெரிவித்தனர்.

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி

தங்கம் வெல்வதில் சாதனை படைத்தது இந்தியா

சென்னை மாநகரில், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் முழு முயற்சியால் 18.12.95 முதல் 27.12.95 முடிய 10 நாட்கள் செம்மையுடன் நடந்தேறிய 7வது தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், வங்காளதேசம், நேபாளம், பூடான், மாலத்தீவு ஆகிய ஏழு நாடுகளைச் சார்ந்த 1,075 வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

இந்தியாவிலிருந்து அதிகபட்சமாக 264 வீரர், வீராங்கனைகள் இப்போட்டியில் பங்கேற்றனர். 14 பிரிவுகளில் நடைபெற்ற இந்திய அணி பங்கேற்ற அனைத்துப் போட்டிகளிலும் தங்கப் பதக்கம் வென்றது. 143 தங்கப் பதக்கங்களில் இந்திய அணி 106 பதக்கங்களைக் கைப்பற்றியது. 16 தங்கம் வென்று இலங்கை அணி பாகிஸ்தான் அணியை பின் தள்ளியது. புதிய உத்வேகத்துடன் களமிறங்கியுள்ள வங்காளதேசத்திற்கு 7 தங்கம் கிடைத்தது. தங்கம் வெல்லாத நாடுகள் பட்டியலில் மாலத்தீவு, பூடான் அணிகள் சேர்ந்தன. ஒவ்வொரு பிரிவிலும் அந்தந்த அணிகள் வென்ற தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் விவரம் வருமாறு:

விளையாட்டின் பெயர்	இந்தியா			இலங்கை			பாகிஸ்தான்			வங்காளதேசம்			நேபாளம்			பூடான்			மாலத்தீவு		
	த	வெ	வெண்	த	வெ	வெண்	த	வெ	வெண்	த	வெ	வெண்	த	வெ	வெண்	த	வெ	வெ	த	வெ	வெண்
தடகளம்	21	24	10	11	7	11	2	2	10	1	1	4	1	2	1	0	0	0	0	0	0
கூடைப்பந்து	1	0	0	0	0	1	0	1	0	0	0	0	0	0	0	0	0	0	0	0	0
குத்துச்சண்டை	10	2	0	0	2	4	2	6	1	0	2	5	0	0	9	0	0	2	0	0	0
ஹாக்கி	1	0	0	0	0	0	0	1	0	0	0	1	0	0	0	0	0	0	0	0	0
ஜூடோ	6	1	0	0	2	3	0	0	0	0	3	4	3	3	2	0	0	0	0	0	0
கபடி	1	0	0	0	0	0	0	0	1	0	1	0	0	0	0	0	0	0	0	0	0
துப்பாக்கிசுடுதல்	20	14	7	5	7	7	0	5	3	5	4	10	0	0	1	0	0	0	0	0	1
நீச்சல்	15	5	2	0	3	9	0	6	3	1	2	2	0	0	0	0	0	0	0	0	0
டேபிள் டென்னிஸ்	7	5	0	0	0	5	0	2	5	0	0	2	0	0	0	0	0	0	0	0	0
டென்னிஸ்	7	5	0	0	1	6	0	1	6	0	0	1	0	0	0	0	0	0	0	0	0
வாலிபால்	2	0	0	0	1	1	0	1	1	0	0	0	0	0	0	0	0	0	0	0	0
பளுதூக்குதல்	7	1	0	0	1	3	3	6	1	0	0	3	0	2	3	0	0	0	0	0	0
மல்யுத்தம்	7	3	0	0	1	2	3	2	5	0	3	3	0	1	0	0	0	0	0	0	0
கால்பந்து	1	0	0	0	0	0	0	0	0	0	1	0	0	0	1	0	0	0	0	0	0
மொத்தம்	106	60	19	16	25	52	10	33	36	7	17	35	4	8	17	0	0	2	0	0	1

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்:

நினைவில் நிற்கும் நிறைவு விழா

தமிழ்நாட்டு விளையாட்டு வளர்ச்சித்துறையின் விடி வெள்ளியாகத் திகழும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டு விளையாட்டுத்துறை வளர்ச்சிக்குக் கடந்த நாலரை ஆண்டுக் காலமாகப் பல்வேறு வளர்ச்சிப் பணிகளையும் சாதனைகளையும் ஆற்றி வருகிறார்.

அந்தச் சாதனைச் சரித்திரத்தின் தொடர்ச்சியாக, உலகமே போற்றும் அளவுக்கு ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை, இந்தியாவின் சார்பாக, சென்னை மாநகரத்தில் டிசம்பர் 18-ஆம் நாள் தொடக்க விழாவையும், தொடர்ந்து பல்வேறு போட்டிகளையும் நடத்தி, இறுதி நிகழ்ச்சியான நிறைவுவிழா நிகழ்ச்சியைக் கோலாகலமாக பொதுமக்களிடையே நடத்தினார்.

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் கடைசி நாளான டிசம்பர் 27-ஆம் நாள் மதியம் இந்தியக் கால்பந்து அணிக்கும் வங்காளதேச அணிக்கும் கடுமையான போட்டி நடந்து, இறுதியில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றவுடன், நிறைவு விழா நிகழ்ச்சிகள் தொடங்கின.

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை அடுத்து நடத்த இருக்கும் நேபாள நாட்டுக்கு, தெற்காசிய விளையாட்டுக் கொடியை, விளையாட்டுக் கூட்டமைப்புத் தலைவர் டாக்டர் பா. சிவந்தி ஆதித்தன் வழங்கினார். அருகில் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு முகுல் வாஸ்னிக், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர், மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு மாதவராவ் சிந்தியா ஆகியோர் உள்ளனர்.

தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டி நிறைவு விழாவில் விழா மலரை, மாண்புமிகு மத்திய இரயில்வே இணை அமைச்சர் திரு சுரேஷ் கல்மாதி அவர்கள் வெளியிட்டார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் உடன் உள்ளார்.

நண்பகலிலிருந்து விழா நடைபெறும் வளாகமான, 'விளையாட்டு அரங்குகளின் அரசி' என்று அனைவராலும் பாராட்டப் பெறும் ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கில் டிசம்பர் 27-ஆம் நாள் திரளான பொதுமக்களும் விளையாட்டு ஆர்வலர்களும் நீண்ட வரிசைகளில் நின்று இடம் பிடித்துக் கொண்டிருந்தனர். மாலை 4 மணியளவில் தமிழ்நாடு காவல்துறை மற்றும் பாண்டுவாத்தியக் குழுவினரால் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து, நாயன இசை, வந்திருந்தோர் அனைவரையும் மகிழ்வித்தது. முதல் நிகழ்ச்சியாக, வெள்ளை மற்றும் நீல நிறச் சீருடை அணிந்த மாணவ மாணவிகள் அரங்கினுள் நுழைந்து மைதானத்தைச் சுற்றி நின்று வரவேற்பு வளையம் அமைத்தனர். அவர்களின் கைகளில் நீலம் மற்றும் வெள்ளை நிறத் துணிக் கொடிகளைக் கொண்டு சீராக இசைக்கேற்றபடி அசைத்து, பார்வையாளர்களையும், விருந்தினர்களையும் வரவேற்றார்கள்.

கொடிகளின் அணிவகுப்பு

வெள்ளை வெளேரென்று தூய உடையணிந்த மாணவ மாணவிகள் கைகளில் பல வண்ணக் கொடிகளை உயர்த்தியபடி மைதானத்துக்குள் கிட்டத்தட்ட இரண்டாயிரம் பேர் அணிவகுத்து வந்தனர். பேரணியாய் வந்த அவர்களின் நடுவில் ஏழு நாடுகளைச் சேர்ந்த தேசியக் கொடிகளும் இடம் பெற்றிருந்தன. இக்காட்சி, நீரோடையில் பல வண்ண மலர்கள் மித்ந்து வருவதைப் போல, காண கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

தொடர்ந்து, ஏழு உறுப்பு நாடுகளின் கொடிகளை அந்தந்த நாட்டணிகளின் தலைமை விளையாட்டு வீரர்கள் எடுத்து வந்தார்கள். இந்தியத் தேசியக் கொடியை, சாதனைப்புரிந்த தங்க மங்கை சைனி வில்சன் தலைமையேற்று நடந்து ஏந்தி வந்தார்.

கடந்த பத்து நாட்களாகப் பதினான்கு வகையான போட்டிகளில் பங்கேற்ற அனைத்து நாட்டு வீரர், வீராங்கனைகள் அனைவரும் ஒன்றாகக் கலந்து, வேறுபாடின்றி ஓர் அணியாக நடந்து வந்தார்கள். அவர்களில் ஒரு சிலர் தங்கள் நாட்டுத் தேசியக் கொடிகளை எடுத்து வந்தனர். தங்களுடைய மகிழ்ச்சியைக் கைகளை அசைத்துப் பார்வையாளர்களிடம் தெரிவித்தார்கள். பின்னர், அவர்கள் மைதானத்தின் மையப் பகுதிக்குச் சென்று அவரவர் நாட்டைச் சேர்ந்த அணியினரோடு வரிசையாக நின்று கொண்டிருந்தார்கள். அப்போது அரங்கின் கொடியசைப்புக்காட்சியினர்மேடையில் ஏழு நாடுகளின் தேசியக் கொடிகளின் உருவத்தைக் காட்டிக் கொண்டிருந்தார்கள். அதைக் கண்டு மகிழ்ச்சியுற்ற அந்தந்த நாட்டு வீரர்கள் குழுக்களாக அமர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள். புகைப்படம் எடுத்துக் கொடுத்தவர்கள் வேறு

நாடுகளைச் சார்ந்தவர்கள் என்பதே கூடுதலான மகிழ்ச்சி.

வரவேற்பு

இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் திரு பா. சிவந்தி ஆதித்தன் அவர்கள் வரவேற்பு உரையாற்றினார். அவர் பேசும் போது, விளையாட்டு உணர்வுக்குத் தேசிய எல்லையோ, மற்ற எல்லையோ கிடையாது. நட்புணர்வே அனைத்திலும் மேலானது. அதுவே நிலையானது. விளையாட்டுத் துறைக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆற்றியுள்ள அரும் பெரும் பணிகளுக்காக இந்திய விளையாட்டுத் துறையினர் சார்பாகவும் இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதாகச் சொன்னார்.

மேலும், அவர் பேச்சையில், கடந்த சில நாட்களாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடைபெறுவதற்காக ஓய்வில்லாமல் உழைத்தார். விளையாட்டுப் போட்டிகளின் அனைத்து ஏற்பாடுகளையும் தனிப்பட்ட முறையில் மேற்பார்வையிட்டார். என்றென்றும் நினைவில் நிற்கும் வகையில் மாபெரும் வெற்றியாக இந்த விளையாட்டுப் போட்டி அமைந்ததற்குக் காரணம், மாண்புமிகு முதல்வர் அவர்களது இடைவிடாத ஆதரவும், முழுமையான ஈடுபாடும் ஆகும். அவரது ஒத்துழைப்புக்கும் வழிகாட்டுதலுக்கும் தனது நன்றியறிதலையும் பாராட்டையும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மனப்பூர்வமாகத் தெரிவித்துக் கொள்வதாக கூறினார்.

கடந்த பத்து நாட்களாக நடந்த போட்டிகளில் வெற்றி பெற்றுச் சாதனைபுரிந்த இந்திய வீரர் ஜஸ்பால் ரானா, சைனி வில்சன், பகதூர் பிரசாத், செபாஸ்டியன் சேவியர் மற்றும் இலங்கை வீராங்கனை சுசாந்திகா ஜெயரத்தினே ஆகியோருக்குச் சிறப்புப் பரிசுகளை மாண்புமிகு மத்திய விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை இணையமைச்சர் திரு முகுல் வாஸ்னிக் வழங்கினார்.

தெற்காசிய விளையாட்டுப் போட்டியின் சிறந்த வீராங்கனையாகத் தேர்வு பெற்ற திருமதி ஷைனி வில்சனுக்கு மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு முகுல் வாஸ்னிக் பரிசு வழங்கினார். மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு மாதவராவ் சிந்தியா, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர், தெற்காசிய விளையாட்டுச் சம்மேளனத்தின் தலைவர் டாக்டர் பா. சிவந்தி ஆதித்தன் ஆகியோர் உடன் உள்ளனர்.

விளையாட்டு விழா மலர்

விளையாட்டு விழா மலரை மாண்புமிகு மத்திய இரயில்வே இணையமைச்சர் திரு சுரேஷ்கல்மாடி வெளியிட, மாண்புமிகு தமிழக சட்டப் பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா

கொடி அமைப்பு உருவக்காட்சியில் 'ஜெயாவின் நெருப்புக் கணைகள்' என்னும் எழுத்துக்கள் வண்ணமுடன் பாய்ந்து வருகின்றன.

அவர்கள் பெற்றுக் கொண்டார்.

மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் மற்றும் இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் ஆகியோர்களுக்கு மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்களும் நினைவுப் பரிசுகள் வழங்கினார்கள். பின்னர், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், இ-ஆ-ப, அவர்கள், தமிழ்நாடு காவல்துறைத் தலைவர் திரு வால்டர் ஐ. தேவாரம் அவர்கள், ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் இயக்குநர் திரு ஆர்.கே. சர்மா, பின்னணிப் பாடகர்கள் எஸ்.பி. பால சுப்பிரமணியன், மனோ, பாடகிகள் எஸ். ஜானகி, சுவர்ணலதா, சித்ரா, ஆகியோர் நினைவுப் பரிசுகளை மாண்புமிகு தமிழக அமைச்சர்களிடமிருந்து பெற்றார்கள்.

தமிழக முதல்வருக்குப்பாராட்டு

விழாவில், தலைமை விருந்தினராகக் கலந்துகொண்ட மாண்புமிகு மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சர் திரு மாதவராவ் சிந்தியா அவர்கள் பேசும்போது, இந்த விளையாட்டுப் போட்டிகளைத் தமிழக அரசு வெகு சிறப்பாக நடத்தியிருக்கிறது. அதற்காக மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் காட்டிய ஈடுபாட்டைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். சென்னையில் மிகச் சிறந்த விளையாட்டு அரங்குகளும் மற்றும் வசதிகளும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் உருவாக்கப்பட்டுள்ளன. வருங் காலத்தில் அவைகள் இந்திய விளையாட்டுத் துறையினருக்கு மிகுந்த பயனளிப்பதாக அமையும் என்று அமைச்சர் நம்பிக்கைத் தெரிவித்தார்.

போட்டிகள் நிறைவடைந்தன

அடுத்த நிகழ்ச்சியாக, ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் கடந்த பத்து நாட்களாகச் சிறப்பாக நடைபெற்று நிறைவடைந்ததைத் தெற்காசிய விளையாட்டுச் சம்மேளனத் தலைவர் திரு பா. சிவந்தி ஆதித்தன் அவர்கள் மரபுப்படி அறிவித்தார். கடந்த பத்து நாட்களாக எரிந்து கொண்டிருந்த விளையாட்டுச் சுடர் படிப்படியாகக் குறைந்து அணைந்தது. அப்போது அருகே இருந்த விளையாட்டுக் கொடிகளும் படிப்படியாக இறக்கப் பட்டன.

தெற்காசிய விளையாட்டுச் சுடரை இந்திய ஆக்கி அணியின் தலைவர் திரு பர்கத் சிங்கும், விளையாட்டுக் கொடியைக் காவல்துறை அலுவலர் திரு பிச்சை முத்துவும் மேடைக்கு எடுத்துச் சென்று திரு சிவந்தி ஆதித்தன் அவர்களிடம் மரபுப் படி ஒப்படைத்தனர். அவைகளை திரு சிவந்தி ஆதித்தன் அவர்கள், எட்டாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்த இருக்கும் நேபாள நாட்டின் பிரதிநிதிகளாக வந்திருந்த அந்நாட்டின் இளைஞர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு பல்தான் குருங் அவர்களிடமும் நேபாள

8 தங்கம் வென்ற ராணாவுக்கு மாண்புமிகு முதல்வர் ரூ.1 இலட்சம் பரிசு



தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் 8 தங்கப்பதக்கம் வென்று சிறப்பான சாதனைபடைத்த துப்பாக்கி சுடும் வீரர் திரு ஜஸ்பால் ராணாவைப் பாராட்டும் வகையில், தமிழக அரசின் சார்பில், ரூ.1 இலட்சம் ரொக்கப் பரிசை மாண்புமிகு முதல்வர் அவர்கள் 28.12.95 அன்று வழங்கினார். டெல்லியில் உள்ள ராணா துப்பாக்கி சுடும் விளையாட்டுப் பயிற்சி நிலையப் பெயரில் இந்தப் பரிசுத் தொகைக்கான காசோலை வழங்கப்பட்டது.

ஒலிம்பிக் சங்கச் செயலாளர் திரு ஆர்.எஸ். ராணா அவர்களிடமும் வழங்கினார்,

விளையாட்டுப் போட்டிப் பாடல்

மைதானத்தில் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்த மேடையில் விளையாட்டுப் போட்டியின் பாடலை இசையுடன் திரைப் படப் பின்னணிப் பாடகர்கள் திரு எஸ்.பி. பாலசுப்பிரமணியன், திரு மனோ, பாடகிகள் திருமதி எஸ். ஜானகி, திருமதி சித்ரா, செல்வி சொர்ணலதா ஆகியோர் இணைந்து பாடினார்கள். பாடல் முடிவடைந்தவுடன் அனைத்து வீரர் வீராங்கனைகள் மைதானத்தை விட்டுக் கலைந்து பார்வையாளர்களிடம் விடை பெற்றுச் சென்றார்கள்.

கலை நிகழ்ச்சிகள்

முதலாவது கலை நிகழ்ச்சியாகச் சிவப்பு மற்றும் வெள்ளைச் சீருடையணிந்த நூற்றுக்கணக்கான மாணவிகள், கைகளில் வெள்ளை நாடாக்களும், வெள்ளைநிற வளையங்களும், வெள்ளை நிறக் கயிறுகளும் கொண்டு ஒலிநயம் இணைந்த உடற்பயிற்சிகளை அனைவரும் மகிழச் செய்து காட்டினர். அடுத்து, கக்சர் என்ற மத்தியப்பிரதேசப் பழங்குடியினர் ஆடும் நடனத்தை அம்மாநிலத்திலிருந்து வந்திருந்த நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் ஆடினார்கள்.

சென்னையைச் சேர்ந்த 1,200 பள்ளி மாணவர்கள் வெள்ளைச் சீருடையில் வந்து, ஒலிக்கேற்றபடி நடனம் ஆடி அரங்கத்திலுள்ளோரை அசர வைத்தார்கள்.

ஜெயாவின் தீக்கணைகள்

அடுத்தபடியாக, 'ஜெயாவின் தீக்கணைகள்' என்ற வீரசாகச நிகழ்ச்சியைத் தமிழ்நாடு காவல் துறையைச் சேர்ந்த ஆண் பெண் காவலர்கள் மோட்டார் சைக்கிள்களில் நிகழ்த்திக் காட்டினார்கள். முதலில் ஜெயாவின் தீக்கணைகள் என்று எழுதிய ஒரு பதாகையை மூன்று மோட்டார் சைக்கிள்களில் 6

வீராங்கனைகள் உயர்த்திப் பிடித்துச் சென்றார்கள். பின்னர், 12 பெண் காவலர்கள் மோட்டார் சைக்கிளில் நின்ற படியே, அனைவருக்கும் வணக்கம் சொல்லி சென் றார்கள். அந்த மோட்டார் சைக்கிள்கள் எல்லாம் அந்த விளையாட்டு வீராங்கனைகள் சொல்லியபடி தானாகவே ஓடிய அந்தக் காட்சிகள் ஆச்சரியத் தைக் கொடுத்தன. எதிரெதிராக ஏழு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுக்கொன்று மோதிவிடுமோ என்று அச்சத்தைக் கொடுத்த படியே இம்மியளவும் பிசகாமல் வெற்றிகரமாக ஓட்டப்பட்டன. அணியாக நின்று கொண்டும் ஒருவர் மீது ஒருவர் உட்கார்ந்து கொண்டும், ஒரு சிறிய பாறை கால் முளைத்து நடந்ததைப் போல நகர்ந்து அனைவரையும் கவர்ந்தார்கள். பின்னர், ஓட்டகம் போலவும் கோட்டைக் கதவுகள் திறப்பதுபோலவும் வந்து காட்டினார்கள். சுமார் 350 காவலர்கள் கோட்டைக் கொத்தள வடிவத்தைக் கொடுத்தும், 3 குழுவினர் தாமரைப் போன்ற தோற்றத்தை அளித்தும் பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தினார்கள்.

தீப்பந்தத்தைக் கொண்டு வந்த 300 காவலர்கள் தீப்பந்தத் தால் நெருப்பு எழுத்துக்களை உருவாக்கி அனைவரையும் மகிழ்ச்சியில் திளைக்க வைத்தனர்.

கிட்டத்தட்ட 9 வகையான சொற்களைத் தீப்பந்தங்களைக் கொண்டு வடிவமைத்துக் காட்சியாக்கினர். அவைகளில் ஏழு நாடுகளின் பெயர்களும், வணக்கம் மற்றும் Thank You போன்றவையும் அடங்கும்.

வாண வேடிக்கை

கிட்டத்தட்ட அரைமணி நேரத்திற்கு மேலாக வானத்தில் மின்னும் நட்சத்திரங்களையும், மின்னலுடன் கூடிய இடி முழக்கத்தையும் செயற்கையாகக் கொடுக்க முடியுமா என்றால், அது முடியும் என்று முயற்சித்த வாண வேடிக்கை நிகழ்ச்சி அனைவரின் மனங்களிலும் நீங்காத இடத்தைப் பெற்று விட்டன.

பார்வையாளர்கள் கலைந்து சென்றபோது இவ்வளவு பெரிய சாதனையைச் செய்துகாட்டிய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் நேரில் கலந்துகொள்ள இயலாமல் போய்விட்டதே என்ற வருத்தம் அனைவர் முகத்திலும் தெரிந்ததைக் கவனிக்க முடிந்தது.

நிகழ்ச்சித் தொகுப்பு:
மா. அசோகன்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இ. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்.

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23





சீரிய சிந்தனையாளர் திருவள்ளுவர்!

ஓர் உயர்ந்த இலக்கியத்தின் அடையாளம், அது அறிஞர்கள் அனைவராலும் ஏற்கக் கூடியதாக மட்டும் இருந்தால் போதாது, சாதாரண மக்களாலும் புரிந்துகொள்ளத்தக்கதாக இருக்க வேண்டும். இந்தத் தத்துவத்தை உண்மையாக்கும் ஒரே நூல், திருக்குறள் ஆகும். அளவிலே சிறியது, நடையிலே எளியது, ஆற்றலிலே அரியது, என்ற பெருமைக்கு ஒரே எடுத்துக்காட்டு திருக்குறள். அந்தத் திருமறையை நமக்குத் தந்த சீரிய சிந்தனையாளர் திருவள்ளுவர்.

—மாண்புமிகு முதல்வர்
டாக்டர் ஜெ.ஜெயலலிதா

இந்த இதழில்...

★ ஏழை எளிய மக்கள் இதயங் குளிர எண்ணற்ற உதவிகள்: பர்கூர் தொகுதியில் மாண்புமிகு முதல்வர் இரண்டு நாள் சுற்றுப் பயணம் 2

★ காவிரி நதி நீர்ப் பிரச்சினை: அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் உரை 17

★ அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் 22

★ டில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதல்வரின் முழக்கம் 24

★ மாண்புமிகு பிரதமரை வற்புறுத்தி அனைத்துக் கட்சிகள் தீர்மானம் 28

★ கர்நாடக அரசுக்கு மாண்புமிகு முதல்வர் ஆணை 31

★ நடுவர் மன்றத்தின் தீர்ப்பினைப் புறக்கணிப்பது துரதிருஷ்டவசமானது! மாண்புமிகு முதல்வர் அறிக்கை 33

★ ரூ.2,000 கோடி செலவில் தமிழ்நாட்டில் கார் தொழிற்சாலை 42

இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற.

★ ஒருவன் தன் மனத்தில் குற்றம் இல்லாதவனாக இருக்க வேண்டும், அறம் அவ்வளவே, மனத்தூய்மை இல்லாத மற்றவை ஆரவாரத் தன்மை உடையவை.

தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027

தைத் திங்கள் : 2

மலர்: 26 இதழ்: 14

16.1.1996

விலை ரூபாய் : 3

எங்கள் அரசு
ஏழை எளிய மக்களின்
நலன் காக்கும் அரசு -
மகளிர் நல அரசு -
மக்கள் நல அரசு

ஏழை எளிய மக்கள் இதயங் குளிர எண்ணற்ற உதவிகள் !

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 11-1-96 மற்றும் 12-1-96 ஆகிய இரண்டு நாட்கள் தமது சொந்தத் தொகுதியான தர்மபுரி மாவட்டம் பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்வேறு கிராமப் பகுதிகளுக்குச் சென்று 32 கூட்டங்களில் கலந்து கொண்டார். ஒவ்வொரு இடத்திலும் ஊரக வளர்ச்சி, சமூக நலத் திட்டங்கள், குடிநீர் மற்றும் புதியப் பள்ளிக் கட்டடங்கள் போன்ற பல வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்தார். மேலும் ரூ.285 கோடி மதிப்பீட்டில் பல புதிய திட்டங்களைத் தொடங்கிவைத்தும், அடிக்கல் நாட்டியும், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் இரண்டு நாட்களிலும் இலட்சக்கணக்கான மக்களையும் சந்தித்தார்.

ஏழை மக்களின் இதயத்தைக் கவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் சுற்றுப்பயணச் சிறப்பைச் சுட்டிக்காட்டுகிறது இந்தத் தொகுப்பு.

பர்கூர் தொகுதியில் மாண்புமிகு முதல்வர் இரண்டு நாள் சுற்றுப் பயணம்

மாதனக் குப்பம்

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பர்கூர் தொகுதியில் இரண்டுநாள் சுற்றுப் பயணத்தின் முதல்நிகழ்ச்சியாக மாதனக் குப்பம் என்ற கிராமத்திற்கு வருகைபுரிந்து, இரண்டே கால் இலட்சம் ரூபாய் செலவில் 9 ஆழ்குழாய்க் கைப் பம்புகள், 16 இலட்சம் ரூபாய் செலவில் நான்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் சமுதாயக் கூடம் ஒன்று, இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டடம், ஊராட்சி அலுவலகக் கட்டடம், சத்துணவு. மற்றும் சமையலறைக் கட்டடம், ஆகியவை கடந்த நான்கரை ஆண்டுக் கால கட்டத்தில் இவ்வூரில் அமைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவித்தார். சாலை மேம்பாட்டிற்காக ரூபாய் 8 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகளும், தமிழ் நாட்டுப் பாடநூல் கழகத்தின் சார்பில், இரண்டேகால் இலட்சம் ரூபாய் செலவில் புதிய பள்ளிக் கட்டடமும் கட்டி வழங்கப்பட்டுள்ளன. இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட தொடக்கப் பள்ளிக் கட்டடத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.

எலத்தகிரி

கடந்த நான்கரை ஆண்டுகளில் 16 இலட்சம் ரூபாய் செலவில் 4 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள், 2 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு சமுதாயக் கூடம், இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டடம், ஊராட்சி அலுவலகக் கட்டடம், சத்துணவுக்கூட கட்டடம், சமையலறைக் கட்டடம் மற்றும் இரண்டேகால் இலட்சம் ரூபாய் செலவில் 9 ஆழ் குழாய்க் கைப்பம்புகள், 8 இலட்சம் ரூபாய் செலவில் சாலை மேம்பாட்டுப் பணிகள், தமிழ் நாட்டுப் பாடநூல் கழகத்தின் சார்பில் இரண்டேகால் இலட்சம் ரூபாய் செலவில் ஒரு பள்ளிக்

கட்டடம் போன்ற பல்வேறு வசதிகள் ரூபாய் 38 இலட்சம் செலவில் செய்யப்பட்டுள்ளன. நிகழ்ச்சி நாளன்று இரண்டரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட சமுதாயக் கூடத்தையும், ஏழரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியையும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார். மேலும் முருக்கம் பாலம் கிராமத்தில் 1 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஆரம்பப் பள்ளிக் கட்டடத்தையும், பாலைப்பள்ளியில் 67 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட புதிய சத்துணவுக் கூடத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார். இதுதவிர, காத்தாடிக் குப்பத்தில் ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் 7 தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்.



ஓரப்பம்

அடிப்படை வசதிகளில் மிக முக்கியமான குடிநீர் வசதியை வழங்க, 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 3 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள், ஒன்றே முக்கால் இலட்சம் ரூபாய் செலவில், 6 ஆழ்குழாய்க் கைப்பம்புகள், நாலே முக்கால் இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணிகள், இரண்டேகால் இலட்சம் ரூபாய் செலவில் பள்ளிக் கட்டடம் ஒன்று, 87 ஆயிரம் ரூபாய் செலவில் ஊராட்சி அலுவலகக் கட்டடம், 60 ஆயிரம் ரூபாய் செலவில் கால்நடை மருத்துவ துணை மையம் ஒன்று, 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் 4 சந்தை அங்காடிகளும், ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் 2 சத்துணவு மையக் கட்டடங்கள் போன்றவை கடந்த நான்கரை ஆண்டுகளில் கிட்டத்தட்ட 31 இலட்சம் ரூபாய் செலவில் செய்யப்பட்டுள்ளன.

ஓரப்பம் கிராமத்தில் இரண்டேகால் இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட கூடுதல் பள்ளிக் கட்டடத்தையும், இரண்டே முக்கால் இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட 12 தொகுப்பு வீடுகளையும், ஓரப்பம் மற்றும் மருதையப் பள்ளிக் கிராமங்களில் ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட 2 மதிய உணவு சத்துணவுக் கூடக் கட்டடங்களையும் ஓரப்பம் கிராமத்தில் 1 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட சந்தை அங்காடிகளையும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார். மேலும், 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடங்களும் விரைவில் அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

கந்திக்குப்பம்

கிட்டத்தட்ட பதினாரரை இலட்சம் ரூபாய் செலவீட்டில் கடந்த நான்கரை ஆண்டுகளில் 17 தொகுப்பு வீடுகள், 2 சந்தைக் கட்டடங்கள், 3 சிறு பாலங்கள், 2 கைப்பம்புகள், சாலை மேம்பாட்டிற்காக ஏழரை இலட்சம் ரூபாய், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 1 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பில், மானியத்துடன் கூடிய கடன் உதவிகள் 35 பேர்களுக்கு இப்பகுதியில் வழங்கப் பட்டுள்ளன. இப்பகுதியில் 87,000 ரூபாய் செலவில் கட்டப் பட்ட ஊராட்சி அலுவலகக் கட்டடத்தையும், 80 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட சந்தைக் கட்டடத்தையும், ஒரு இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட 4 தொகுப்பு வீடுகளையும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்.

சின்னமட்டாரப்பள்ளி

சின்னமட்டாரப்பள்ளியில் 4 இலட்சம் ரூபாய் செலவில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையும், இரண்டேகால் இலட்சம் ரூபாய்

செலவில் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறைக் கட்டடத்தையும், 87 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஊராட்சி அலுவலகக் கட்டடம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தும், சச்சாலிக்காணூர் கிராமத்தில், 2 இலட்சத்து 64 ஆயிரம் ரூபாய் செலவில் 12 தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பேசுகையில் சின்னமட்டாரப் பள்ளி ஊராட்சிப் பகுதியில் ஏறக்குறைய 40 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் செய்யப்பட்டுள்ளன என்றார். 11 இலட்சம் ரூபாய் செலவில் 3 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளும், 2 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவில் 13 தொகுப்பு வீடுகளும், ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் 2 சத்துணவுக் கூடக் கட்டடங்களும், 5 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் 3 பள்ளிக் கட்டடங்களும், ஊராட்சி அலுவலகக் கட்டடம், சமையலறைக் கட்டடம், நியாய விலை அங்காடிக் கட்டடம், 4 சிறு பாலங்கள் மற்றும் 12 ஆழ் குழாய்க் கைப்பம்புகள் முதலியவை அடங்கும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 92 பேருக்கு 6 இலட்சம் ரூபாய் அளவுக்குக் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தெரிவித்தார்.

வரட்டனப்பள்ளி

வரட்டனப்பள்ளி ஊராட்சி கடந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் 117 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் செய்யப்பட்டுள்ளன. அதில் 8 இலட்சம் ரூபாய் செலவில் 2 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளும், மூன்றே முக்கால் இலட்சம் ரூபாய் செலவில் 2 பள்ளிக் கட்டடங்களும், 2 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு சமுதாயக் கூடமும், இதுதவிர ஒரு சத்துணவுக்கூடக் கட்டடம், 2 சமையலறைக் கட்டடங்கள், 2 சிறிய பாலங்கள், 9 ஆழ்குழாய்க் கைப்பம்புகள் முதலியவை அமைத்துத் தரப்பட்டுள்ளன.

சாலை மேம்பாட்டிற்காகக் கிட்டத்தட்ட 90 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மேலும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 105 பேருக்கு ஐந்தரை இலட்சம் ரூபாய் மதிப்பில் கடனுதவிகள் வழங்கப் பட்டுள்ளன. இரண்டரை இலட்சம் ரூபாய் மதிப்பில் நலிந்த பிரிவைச் சேர்ந்த 30 குடும்பங்களுக்கு வீடு கட்ட கூட்டுறவு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இரண்டேகால் இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட உயர் நிலைப் பள்ளிக் கட்டடத்தையும், ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் தேசுப்பள்ளிக் கிராமத்தில் கட்டப்பட்ட தொடக்கப் பள்ளிக் கட்டடத்தையும், ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் பெரியமட்டாரப்பள்ளியில் கட்டப்பட்ட பள்ளிக் கட்டடத்தையும், வரட்டனப்பள்ளி, திம்ம நாயனப்பள்ளி, குருவிநாயனப் பள்ளி ஆகிய இடங்களில் 4 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட 17 தொகுப்பு வீடுகளையும், குருவிநாயனப்பள்ளி, பெலவர்த்தி ஆகிய இடங்களில், ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட சத்துணவுக் கூடக் கட்டடங்களையும், 4 இலட்சம் ரூபாய் செலவில் ஓதிக்குப்பத்தில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியையும் நிகழ்ச்சியன்று திறந்து வைத்து, வரட்டனப்பள்ளி, பெலவர்த்தி ஆகிய இடங்களில் மூன்றேகால் இலட்சம் ரூபாய் மதிப்பில் 15 தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார். 10 இலட்சம் ரூபாய் செலவில் குருவிநாயனப் பள்ளியில் பொதுப்பணித்துறை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணையின் பேரில் ஒரு கசிவுக் குட்டையை அமைத்துள்ளது.

சிந்தகம்பள்ளி

கடந்த நான்கரை ஆண்டுகளில் சின்னமட்டாரப்பள்ளி ஊராட்சிப் பகுதியில் 40 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் செய்யப்பட்டுள்ளன. 11 இலட்சம் ரூபாய் செலவில் 3 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள், 2

இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய செலவில் 13 தொகுப்பு வீடுகள், ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் 2 சத்துணவுக்கூடக் கட்டடங்கள், 5 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவில் 3 பள்ளிக் கட்டடங்கள், ஊராட்சிப் அலுவலகக் கட்டடம், நியாய விலை அங்காடிக் கட்டடம், சமையலறைக் கட்டடம், 4 சிறு பாலங்கள், 12 ஆழ்குழாய்க் கைப்பம்புகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. மேலும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 92 பேருக்கு 6 இலட்சம் ரூபாய் கடனுதவிகள் செய்யப்பட்டுள்ளன.

நிகழ்ச்சி நாளன்று தமிழ் நாட்டுப் பாடநூல் கழகத்தின் சார்பில் சிந்தகம்பள்ளி உயர் நிலைப் பள்ளிக்கு இரண்டேகால் இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட கூடுதல் வகுப் பறைக் கட்டடத்தையும், ஒரு இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பொது விநியோக அங்காடிக் கட்டடத்தையும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்.

காரகுப்பம்

கடந்த நான்கரை ஆண்டு களில் ஆறரை இலட்சம் ரூபாய் செலவில் 37 கான்கிரீட் தளம் அமைந்த தொகுப்பு வீடுகளும், 2 பள்ளிக் கட்டடங்கள், 6 சிறு பாலங்கள், ஒரு சந்தைக் கட்டடம், 2 சமையலறைக் கூடங்கள், 4 ஆழ்குழாய்க் கைப் பம்புகள்' அமைத்துத் தரப் பட்டுள்ளன. சாலை மேம்பாட் டிற்காக 20 இலட்சம் ரூபாய் அளவுக்குச் செலவு செய்யப் பட்டுள்ளது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 6 பேருக்குக் கடனுதவி, 12 குடும்பங்களுக்கு வீடு கட்ட கடனுதவி, 4 பெண்மணிகளுக்கு இலவசத் தையல் இயந்திரங் களும் வழங்கப்பட்டுள்ளன.

நிகழ்ச்சி நாளன்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் எமக்கலநத்தம் உயர்நிலைப் பள்ளிக்குத் தமிழ்நாட்டுப் பாட நூல் கழகத்தின் சார்பில் இரண்டேகால் இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட கூடுதல் வகுப்பறைக் கட்டடத் தையும், ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில், காரகுப்பம் தொடக்கப் பள்ளியின் கூடுதல் கட்டடத் தையும், திறந்து வைத்தும் பர்கூர் ஆற்றின் குறுக்கே 6 இலட்சம் ரூபாய் மதிப்பில் புதிய அணைக்கட்டுக் கட்டவும் 88 ஆயிரம் ரூபாய் மதிப்பில் 4 தொகுப்பு வீடுகள் கட்டவும் அடிக்கல் நாட்டினார்.

மல்லம்பாடி

மல்லம்பாடி கிராமத்தில் இரண்டேகால் இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பள்ளிக் கட்டடத்தையும், 87 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டடத்தையும், 40 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட சந்தைக் கட்டடத்தையும், வெங்கடாபுரத்தில் ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஆரம்பப் பள்ளிக் கட்டடத்தையும், 9 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட புதிய அணைக் கட்டையும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் நிகழ்ச்சி நாளன்று திறந்து வைத்தார்.

கடந்த நான்கரை ஆண்டு களில் கிட்டதட்ட 24 இலட்சம் இலட்சம் ரூபாய் மதிப்பில் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி, 8 ஆழ்குழாய்க் கைப் பம்புகள், 2 பள்ளிக் கட்டடங்கள், 4 நீர்ப்பாசனத் திட்டங்கள், 3 சமையலறைக் கட்டடங்கள் முதலியவை கட்டித் தந்ததோடு, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 47 பேருக்கு 3 இலட்சம் ரூபாய் கடனுதவியும், 21 குடும்பங்களுக்கு ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வீடு கட்ட கடனும் வழங்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார்.

கப்பல்வாடி

கப்பல்வாடியில் எட்டரை இலட்சம் ரூபாய் செலவில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடம் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் சார்பில் இரண்டே கால் இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறைக் கட்டடம், 22 இலட்சம் ரூபாய் செலவில் நெடுஞ்சாலையில் கட்டி முடிக்கப்பட்ட பாலம், 42 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட புதிய பள்ளிக்

கட்டடங்கள், தொகுப்பு வீடுகள், சத்துவுக்கூட கட்டடங்கள் போன்றவற்றை நிகழ்ச்சி நாளன்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்.

சிங்கரலப்பள்ளியில் 5 தொகுப்பு வீடுகள், சேக்கணாம் பட்டியில் 10 தொகுப்பு வீடுகள், ஆம்பள்ளியில் 8 தொகுப்பு வீடுகள் முதலியன 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்ட அடிக்கல் நாட்டி பேசும்போது, கடந்த் நான்கரை ஆண்டுகளில் மல்லம்பாடி ஊராட்சிப் பகுதி வளர்ச்சிக்காக 24 இலட்சம் ரூபாய் செலவில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட தாகவும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 3 இலட்சம் ரூபாய் மதிப்பில் 47 பேருக்குக் கடன் உதவிகள், 21 குடும்பங்களுக்கு ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கடனும் வழங்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தெரிவித்தார். மேலும், குட்டூர் கிராமத்தில் ஆறரை இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி விரைவில் கட்டப்படும் என்றும் தெரிவித்தார்.

மாடரஹள்ளி

நாகல்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் 55 இலட்சம் ரூபாய் மதிப்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் பட்டுள்ளன. இதில் ரூ. 35 இலட்சம் சாலை மேம்பாட்டுப் பணிக்கும் மீதமுள்ள தொகை பல்வேறு நலத்திட்டப் பணிகளுக்கும் செலவு செய்யப்பட்டுள்ளது. 29 பேருக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கடனுதவியும், 11 பேருக்குத் திருமண நிதி உதவியும், 3 பேருக்கு இலவசத் தையல் இயந்திரங்களும் வழங்கப் பட்டன.

மாடரஹள்ளியில் ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட தொடக்கப் பள்ளி, குண்டேபள்ளி மற்றும் பள்ளத்தூரில் ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பள்ளிக் கட்டடங்களைத் திறந்து வைத்தும், நாகப்பட்டியில் 66,000 ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள 3 தொகுப்பு வீடுகளுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

கன்னன்டஹள்ளி

கடந்த நான்கரை ஆண்டுகளில் 31 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் இப்பகுதியின் வளர்ச்சிப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. அவை, ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி, 2 பள்ளிக் கட்டடங்கள், 12 தொகுப்பு வீடுகள், 3 ஜீவன்தாரா கிணறுகள், 3 சமையல் அறைக் கூடங்கள், சாலை மேம்பாட்டுப் பணிகள், பேருந்து நிழல் குடை, நீர் வடிகால் பணிகள் முதலியவை யாகும்.

எட்டேகால் இலட்சம் ரூபாய் செலவில் கன்னன்டஹள்ளியில் கட்டி முடிக்கப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடம், ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் அத்திகானூரில் கட்டப்பட்ட தொடக்கப் பள்ளிக் கட்டடத்தையும் திறந்து வைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் கூச்சூரில் 15 ஆதி திராவிடக் குடும்பங்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டவும் பல புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

பெருகோபனபள்ளி

பெருகோபனபள்ளி மற்றும் அதனைச் சார்ந்துள்ள பகுதிகளுக்காகப் பதினேழரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடத்தையும், பணியாளர்கள் குடியிருப்புக் கட்டடத்தையும், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் சார்பில் கட்டப்பட்ட கூடுதல் பள்ளிக் கட்டடத்தையும், 5 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட ஒரு பாலத்தையும் முறைப்படி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பொதுமக்களுக்காகத் திறந்து வைத்தார்.

அப்போது அவர் பேசுகையில், கடந்த நான்கரை ஆண்டுகளில் இப்பகுதியின் வளர்ச்சிக்காக 57 இலட்சம் ரூபாய் செலவில் பல வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் 5 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட 2 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளும், பதினேழரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஆரம்பச் சுகாதாரக் கட்டடமும், ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட 8 தொகுப்பு வீடுகளும் 24 இலட்சம் ரூபாய் செலவில் செய்யப்பட்ட சாலை மேம்பாட்டுப் பணிகளும் அடங்கும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்.

தொகாப்பள்ளி

தொகாப்பள்ளியில் சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கு மட்டும் கிட்டத்தட்ட 33.5 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. இது தவிர 5 தொகுப்பு வீடுகள், 1 சமையல் அறைக் கட்டடம் போன்றவையும் ஒருங்கிநைத ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 61 பேருக்குக் கடன் உதவிகளும் 10 பேருக்குக் கறவை மாடுகளும் கடந்த நான்கரை ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளது. ஆக கூடுதலாக கிட்டத்தட்ட 30 இலட்சம் ரூபாய்க்கும் மேலாக இப்பகுதியில் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்று தெரிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தொகாப்பள்ளியில் உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்தையும், 1 இலட்சத்து 13,000 ரூபாய் செலவில் கட்டப்பட்ட சமையலறைக் கட்டடத்தைத் திறந்து வைத்தார். இதுதவிர பில்லகொட்டாய்ப் பகுதியில் ஒன்றே முக்கால் இலட்சம் ரூபாய் செலவில் தொடக்கப் பள்ளிக் கட்டடத்தைக் கட்ட அடிக்கல் நாட்டினார்.

ஜெகதேவி

இப்பகுதியின் வளர்ச்சிக்காக 26 இலட்சம் ரூபாய் கடந்த நான்கரை ஆண்டுகளில் வளர்ச்சித் திட்டத்திற்காகச் செலவு செய்யப்பட்டுள்ளது. இதில் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி, 15 தொகுப்பு வீடுகள், 2 சமையலறைக் கட்டடங்கள் மற்றும் 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை செயல்படுத்தப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 24 பேருக்கு 5 இலட்சம் ரூபாய் கடனுதவியும், 23 பேர்களுக்கு வீடு கட்டக் கடனும், ஒரு இலட்சம் ரூபாய் செலவில் 4 ஆழ்குழாய்க் கைப் பம்புகளும் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன. தற்போது 15 தொகுப்பு வீடுகளும், நாலரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஒரு தொடக்கப் பள்ளிக் கட்டடமும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

மத்தூர்

மத்தூர் மற்றும் சுற்றுப்புறப் பகுதியில் கடந்த நான்கரை ஆண்டுகளில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் 16 தொகுப்பு வீடுகள், 2 ஜீவன்தாரா கிணறுகள், ஒரு நியாய விலை அங்காடிக் கட்டடம், 4 பள்ளிக் கட்டடங்கள், 3 தொலைக்காட்சி அறைகள், ஒரு நூலகக் கட்டடம், 2 சமையல் அறைக் கட்டடங்கள், 1 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி ஆகியவை அடங்கும். மேலும், 49 குடும்பங்களுக்கு நான்கரை இலட்சம் ரூபாய் அளவுக்கு வீட்டுக் கடன் வசதியும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 80 பேருக்கு மானியத்துடன் கூடிய கடன் வசதிகளும் இப்பகுதியில் செய்யப்பட்டுள்ளன.

மத்தூர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஒரு சமுதாயக் கூடம், ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஒரு கலையரங்கம், 7 கூடுதல் பள்ளிக் கட்டடங்கள், மலையாண்டஹள்ளி, நத்தகயம் ஆகிய பகுதிகளில் 25 தொகுப்பு வீடுகள், நடுப்பட்டியில் 55 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு புதிய பாலம், கணுக்கானூர் கிராமத்தில் ஒரு சத்துணவுக் கூடக் கட்டடம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பொதுமக்களுக்கு அர்ப்பணித்தார்.

மேலும், மத்தூரில் ஆதி திராவிட மாணவர்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் தலா ஒரு தங்கும் விடுதி கட்டடம் கட்ட ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார். சீர்மிகு நற்பள்ளி அதாவது School of Excellence, 45 இலட்சம் ரூபாய் செலவில் களர்பதி என்ற கிராமத்தில் பத்தரை ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கவும் பொதுமக்களின் வசதிக்காக அருள்மிகு சென்றாயன் மலைத் திருக்கோயிலுக்கு ஒரு பக்தர்கள் ஓய்வு மண்டபம் மூன்றரை இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், மத்தூரில் புதிய பயணியர் மாளிகை ரூபாய் 20 இலட்சம் செலவில் கட்டவும், சாலூர் மற்றும் வாழிப்பட்டி கிராமங்களை இணைக்கும் 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும் பாலம் ஒன்றுக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.



பட்டுள்ளன. இது ஒரு மாபெரும் சாதனை ஆகும். மேலும், 60 புதிய ஆரம்பப் பள்ளிகளும், 5 உயர்நிலைப் பள்ளிகளும் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. 15 ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளாகவும், 15 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 7 உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தப்பட்டுள்ளன.

15 இலட்சம் ரூபாய் செலவில் 176 நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கழிப்பிட வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது ஒரு முன் மாதிரித் திட்டமாகும். கடந்த நான்கரை ஆண்டுக் காலகட்டத்தில் பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 88 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிக் கட்டடங்கள் கட்ட ஒன்றரைக் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அவற்றில், 68 கட்டடங்களுக்குக் கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்று உள்ளன. 20 கட்டடங்களுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல 47 உயர்நிலைப் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்ட ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அவற்றில் 37 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 10 கட்டடங்கள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன.

மேலும் 10 புதிய ஆரம்பப் பள்ளிகளும், 5 உயர்நிலைப் பள்ளிகளும், 2 புதிய மேல்நிலைப் பள்ளிகளும் பர்கூர் தொகுதியில் இதுவரை புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு உயர்நிலைப் பள்ளியும், இரண்டு மேல்நிலைப் பள்ளிகளும், மகளிருக்கான பள்ளிகள் என்பதைப் பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகிறேன். அதுமட்டுமின்றி, 14 பள்ளிகள் இந்தக் குறுகிய காலகட்டத்தில் நடுநிலைப் பள்ளி தரத்திலிருந்து, உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளன. அவற்றில் 3 பள்ளிகள் மகளிருக்கான பள்ளிகள். உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து மேல்நிலைப் பள்ளிகளாக 5 பள்ளிகள் உயர்த்தப்பட்டுள்ளன. இவற்றில் 2 பள்ளிகள் மகளிருக்கான பள்ளிகள்.

பர்கூர் பகுதியில் 4 பிற்பட்ட மாணவர்களுக்கான விடுதிகளும் ஒரு ஆதிதிராவிடப் பெண்களுக்கான விடுதியும் இந்த நான்கரை ஆண்டு காலகட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது ஒரு மாபெரும் சாதனை ஆகும். தர்மபுரி மாவட்டத்தில், 2 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பில் 328 சத்துணவுக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் 104 சத்துணவுக் கூடங்கள் கட்ட 81 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அவற்றில் 83 கட்டடங்கள் இதுவரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 21 கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

பர்கூர் பகுதி வாழ் மக்களின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு 66 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு புதிய பேருந்து நிலையம் கட்டுவத்றகு உங்கள் அன்புச் சகோதரியின் அரசு ஆணையிட்டது. பேருந்து நிலையத்தின் கட்டுமான பணி முடிந்து விட்டாலும், சமுதாயக் கூடம் கட்டும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது. பர்கூர் தொகுதியில் நெடுஞ்சாலைகளில் 8 பாலங்கள் கட்டுவதற்கு 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் உங்கள் அன்புச் சகோதரியின் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு அவற்றில் 6 பாலங்கள் இதுவரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. பல காலங்களாக நிறைவேற்றப்படாமல் இருந்த கோரிக்கைகள் எங்கள் ஆட்சிக் காலத்தில்தான் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் இதுவரை 112 சிறுபாலங்கள் 62 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ளன. சாலை மேம்பாட்டைப் பொறுத்தவரையில் 65.8 கிலோ மீட்டர் தூரத்திற்குக் கப்பிச் சாலையும், 52.7 கிலோ மீட்டர் தூரத்திற்குத் தார் சாலையும்; புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட பேருந்துகள் செல்லுகின்ற அனைத்துப் பாதைகளும், தார்ச் சாலைகளாகவும், மாற்றி அமைக்கப்பட்டுள்ளன என்பதையும் ஏற்கெனவே இருந்த சாலைகளில் 269 கிலோ மீட்டர் தூரத்திற்குத் தார்ச் சாலைகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவரை 522 ஆதி திராவிடப் பெருமக்களுக்கும் இதர நலிந்த பிரிவினைச் சார்ந்த 30 குடும்பங்களுக்கும் Concrete தளம் அமைந்த தொகுப்பு வீடுகள் கட்டி இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. 206 ஜீவன்தாரா கிணறுகள் 80 இலட்சம் ரூபாய் செலவில் ஆதிதிராவிடப் பெருமக்களுக்காக அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. 386 ஆழ்குழாய்க் கைப்பம்புகளும், 84 ஆழ்குழாய் மோட்டார் பம்புகளும், இப்பகுதியில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இச்சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிட்டத்தட்ட எல்லாப் பகுதிகளிலுமே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. ஒரு புறம் குடிநீர்ப் பற்றாக்குறை மற்றொரு புறம் கிடைக்கின்ற நீரில் Fluoride அதிகமாக உள்ளதால், ஏற்பட்டு வரும் உடல்நலக் கேடு, இவை இரண்டையும் நீக்குவதற்காகப் புதிய நீர் ஆதாரங்களை ஏற்படுத்தித் தருவதோடு மட்டுமல்லாமல், அவற்றில் Fluoride அளவு உடல் நலத்தைப் பாதிக்காத அளவுக்குக் குறைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேட்டுப் பகுதிகளில், தண்ணீர் கொண்டு செல்வதற்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டி பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்கி வருகின்றோம். அதுமட்டுமின்றி 25 குடும்பங்களுக்கு ஒரு பொதுக் குழாய் Public Fountain அமைக்கப்பட்டுள்ளது. ஒரு குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் பர்கூர் தொகுதியில், 1,331 குடிசைகளுக்கு இதுவரை இலவசமாக மின் வசதி வழங்கப்பட்டுள்ளது. பயன்பெறுபவர்களில் கிட்டத்தட்ட 80 சதவிகிதத்தினர் ஆதி திராவிடப் பெருமக்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவதில் நான் பெருமிதம் அடைகிறேன்.

திருமண உதவித் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், விதவையின் குழந்தைகளுக்குத் திருமண உதவித் திட்டம், கலப்புத் திருமண உதவித் திட்டம், விதவைகள் திருமண திட்டம் இலவச தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டம் என்று பல்வேறு நலத் திட்டங்கள், மிக அதிமான அளவில் உங்கள் அன்புச் சகோதரியின் அரசால் இந்த மாவட்டத்திலும், பர்கூர் தொகுதியிலும் செயல்படுத்தப்பட்டுள்ளன.

எங்கள் ஆட்சிக் காலத்தில் தான் முதன் முதலாக மகளிர் விடுதி ஒன்றும் 50 இலட்சம் ரூபாய் செலவில் பர்கூரில் கட்டப்பட்டு வருகிறது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தர்மபுரி மாவட்டத்தில் தர்மபுரியில் ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையமும், பர்கூரிலும், ஓசூரிலும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. நிரந்தரக் கட்டடங்கள் கட்டித் தருவதற்கு இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

மத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

மத்தூர் மற்றும் ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியப் பகுதியைச் சேர்ந்த 40 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க 2 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் மத்தூர் கூட்டுக் கூடிநீர் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். விரைவில் இப் பகுதியில் ஒரு தொழிற்பேட்டை உருவாவதைக் கருத்தில் கொண்டு ஒரு பல்வகைத் தொழில் நுட்பப் பயிலகம் Poly-technic ஏற்படுத்தப்படும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார்.

11.1.1996 அன்று மாலை 5.00 மணிக்கு பர்கூரில் நடைபெற்ற அரசு தொடக்க விழா நிகழ்ச்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:

தர்மபுரி மாவட்டம் சரித்திரப் புகழ் வாய்ந்த ஒரு தொன்மையான பகுதி என்றாலும் இப்பகுதி வளர்ச்சி அடையாமலே இருந்ததை நான் பொது வாழ்க்கையில் ஈடுபட்ட பின்னர், பல முறை நேரில் கண்டிருக்கிறேன். இப்பகுதியின் பிற்பட்ட தன்மையைப் போக்கி, முன்னேற்றம் அடைந்த பகுதியாக மாற்றி அமைக்க வேண்டும் என்ற ஒரு தணியாத ஆசை என் மனதில் எழுந்தது. அதன் விளைவாகத்தான் கடந்த சட்டமன்றப் பொதுத் தேர்தலில் இப்பின்தங்கிய மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியான பர்கூர் சட்டமன்றத் தொகுதியைத் தேர்ந்தெடுத்துப் போட்டியிட்டு உங்களது அபரிமிதமான அன்பையும் ஆதரவையும் பெற்றுத் தேர்தலில் வெற்றிப் பெற்று முதலமைச்சராகப் பதவியேற்றேன்.

கடந்த நான்கரை ஆண்டுக் காலகட்டத்தில் இந்த மாவட்டம் கண்டுள்ள ஒட்டு மொத்த சமுதாய வளர்ச்சியையும் தனிநபர் பொருளாதார வளர்ச்சியையும் எண்ணிப் பார்க்கும் போது என் மனம் மகிழ்ச்சி அடைகின்றது. உழவும் தொழிலும் செழித்துள்ளன. இப்பகுதி வாழ் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது. குறிப்பாக, அடிப்படை வசதிகளை இம்மாவட்டத்து மக்களுக்கும் பர்கூர் தொகுதி வாழ் மக்களுக்கும் பெற்றுத் தருவதில் எங்கள் அரசு முனைப்புடன் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

மாநில அளவில் நிறைவேற்றப்படும் அனைத்துத் திட்டங்களும் பர்கூர் சட்டமன்றத் தொகுதியிலும், இந்த மாவட்டத்திலும் ஒரு புதிய முனைப்புடன் செயல்படுத்தப் பட்டுள்ளன. அதுமட்டுமின்றி, பல புதிய வளர்ச்சித் திட்டங்கள் குறிப்பிட்ட சில மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்போது தர்மபுரி மாவட்டமும் அந்த மாவட்டங்களில் ஒன்றாக இடம் பெற்றுப் பயன் அடைந்து

வந்துள்ளது.

இப்பகுதியில் இன்று காணப்படும் வளர்ச்சி, என்னைப் பொறுத்த வரையில் ஒரு மகத்தான தொடக்கம் தான். இந்த வளர்ச்சி மென்மேலும் தொடர வேண்டும் என்பதே எனது ஆசை. அவ்வாறு ஒரு முழுமையான வளர்ச்சியை இந்த மாவட்டம் பெறவேண்டும் என்பதே எனது இலட்சியம். அந்த இலட்சியத்தை அடைய உங்கள் அன்புச் சகோதரியின் அரசு முனைப்புடன் தொடர்ந்து செயலாற்றும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாவட்டத்திற்குக் குறிப்பாக எனது தொகுதியான பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்கு நான் வந்த போதெல்லாம் எனக்கு நீங்கள் அளித்த மாபெரும் வரவேற்பையும் என் மீது நீங்கள் காட்டி வருகின்ற அபரிமிதமான அன்பையும் பாசத்தையும் மகத்தான ஆதரவையும் இங்கு நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளேன். உங்களது அன்பும், ஆதரவும் இம்மாவட்டத்தின் வளர்ச்சிக்கும் இந்தத் தொகுதியின் வளர்ச்சிக்கும் மேலும் பல புதிய திட்டங்களைச் செயல்படுத்தத் தூண்டும் துண்டுகோலாக அமைந்துள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாவட்டத்தின் வளர்ச்சிக்காகவும், பர்கூர் சட்டமன்றத் தொகுதியின் முன்னேற்றத்திற்காகவும் நான் பல்வேறு நேரங்களில் அறிவித்த அறிவிப்புகள் கிட்டத்தட்ட முழுமையாக நிறைவேற்றப் பட்டுள்ளன. இது எனக்கு ஒரு புறம் மன நிறைவைத் தந்தாலும், இந்த மாவட்டமும் பர்கூர் சட்டமன்றத் தொகுதியும் ஒரு காலத்தில் பிற்பட்ட பகுதிகளாக இருந்தன என்பது ஒரு பழங்கனவாக மாற வேண்டும் என்பதே எனது தணியாத ஆசை ஆகும். நிச்சயம் உங்கள் அன்புச் சகோதரி இதை நிறைவேற்றியே காட்டுவேன் என்று உங்களுக்கு உறுதி கூறுகிறேன்.

தர்மபுரி மாவட்டத்தின் பிற்படுத்தப்பட்ட தன்மையைப் போக்க நாங்கள் செயல்படுத்திய திட்டங்கள் இன்று பயன் தரத் தொடங்கியுள்ளன. இம் மாவட்டத்தில் பல புதிய தொழில்கள் உருவாகி உள்ளன. தொழில் வளர்ச்சி கட்டமைப்பு வசதிகள் பெருகி உள்ளன. மின் வசதி, சாலை வசதி, போக்குவரத்து வசதி, தொலைத் தொடர்பு வசதி போன்ற அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய புதிய தொழில் பேட்டைகள் உருவாக்கப் பட்டுள்ளன. மேலும் உருவாகி வருகின்றன. குறிப்பாக, இம் மாவட்டத்தின் சாலை மேம்பாட்டிற்கும், போக்குவரத்து வசதிக்கும் இதுவரை என்றும் இல்லாத அளவுக்குப் பல கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளன. பல புதிய கல்வி நிலையங்கள் இம்மாவட்டத்தின் ஒட்டுமொத்த கல்வி அறிவை வளர்ப்பதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன. பெண் கல்வியும், தொழிற் கல்வியும் இம்மாவட்டத்தில் இன்று முன்னுரிமைப் பெற்றுள்ளன.

இம்மாவட்டம், குறிப்பாக, பர்கூர் சட்டமன்றத் தொகுதி எழுத்தறிவில் பின்தங்கிய நிலையில் இருந்ததை மாற்றிட, கிருஷ்ணகிரி மற்றும் பர்கூரில் புதிய மகளிர் கலைக் கல்லூரிகளும், ஓரப்பம் கிராமத்தில் ஒரு Polytechnic-க்கும் 1994-95 முதல் பர்கூரில் ஒரு பொறியியற் கல்லூரியும் ஆரம்பிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. ஓரப்பம் கிராமத்தில், செயல்பட்டு வருகின்ற Polytechnic இந்த மாவட்டத்தின் இரண்டாவது Polytechnic ஆகும். அதற்குரிய புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு இன்று என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. Industrial Training Institute தொழில் பயிற்சி நிலையம் இம்மாவட்டத்தில் ஓசூரிலும், தர்மபுரியிலும் மட்டும் இருந்து வந்துள்ளது. எங்கள் ஆட்சிக் காலத்தில், பர்கூரில் புதிதாக ஒன்று ஏற்படுத்தப்பட்டுத் தற்போது செயல்பட்டு வருகிறது.

சீர்மிகு நற்பள்ளி (School of Excellence) போச்சம்பள்ளிக்கும் மத்தூருக்கும் இடைப்பட்ட களர்பதி கிராமத்தில் 45 இலட்சம் ரூபாய் செலவில் விரைவில் உருவாகும். அதற்கு நாளை நான், போச்சம் பள்ளியில் நடைபெறும் விழாவில் அடிக்கல் நாட்ட உள்ளேன்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின் 10.25 கோடி ரூபாய் செலவில் 650 ஆரம்பப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்களும், 6.5 கோடி ரூபாய் செலவில் 243 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்களும் இம் மாவட்டத்தில் உருவாக்கப்



கிட்டத்தட்ட 10 ஆண்டுகளாக இம்மாவட்டத்தில் எந்த ஒரு புதிய வட்டமோ வருவாய்க் கோட்டமோ ஏற்படவில்லை. ஆனால், எங்கள் ஆட்சிக் காலத்தில் நிர்வாக நலன் கருதி இரண்டு புதிய வட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. பாப்பிரெட்டிப்பட்டியும், பர்கூர் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த போச்சம்பள்ளியும் இன்று புதிய வட்டங்களாக உருவாகி நன்முறையில் செயல்பட்டு வருகின்றன.

TACID நிறுவனத்தின் சார்பில் 1,524 ஏக்கர் நிலப் பரப்பில் போச்சம்பள்ளியில் உருவாக உள்ள ஒரு மாபெரும் தொழிற்பேட்டை Mega Industrial Estate இம்மாவட்டத்தின் ஒட்டு மொத்த தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இன்று காலை முதல் 16 இடங்களில் நான் தொடங்கி வைத்தும் அடிக்கல் நாட்டியும் வந்துள்ள திட்டங்களின் மொத்த மதிப்பு 5 கோடியே 25 இலட்சம் ரூபாய் ஆகும். இப்பொழுது நான் பர்கூரில் நடைபெறும் இந்த 17வது நிகழ்ச்சியில் 16 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய கட்டடங்கள் முடித்து வைக்கப் பட்ட புதிய திட்டங்கள் ஆகிய வற்றைத் திறந்து வைத்தோடு 17 கோடி ரூபாய் செலவில் புதிய திட்டங்களுக்கு அடிக்கல்லையும் நாட்டியுள்ளேன். மொத்தத் திட்டங்களின் மதிப்பு 33 கோடி ரூபாய் ஆகும்.

தர்மபுரி மாவட்டத்தின் இதரப் பகுதிகளில் 41 கோடி ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்கள் மற்றும் முடித்து வைக்கப்பட்ட திட்டங்கள் ஆகியவற்றைத் திறந்து வைத்தோடு 50 கோடி ரூபாய் மதிப்பில் புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டியுள்ளேன். மொத்தத் திட்டங்களின் மதிப்பு 91 கோடி ரூபாய் ஆகும். ஆக மொத்தம் இந்த விழாவின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் மொத்த மதிப்பு 124 கோடி ரூபாய் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குள் அமைந்துள்ள கந்திகுப்பத்தில் TAMIN நிறுவனத்தால் 6 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள கருங்கல் மெருகேற்றும் தொழிற்சாலையையும் 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் பர்கூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையும் திறந்து வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இன்று நேரிடையாகக் குடிநீர் வழங்கப்பட்டாலும் இத் திட்டத்தின் கீழ் தேவைப்படும் நீர்த் தேக்கத் தொட்டிகளும் இதர வசதிகளும் விரைவில் அமைத்துத் தரப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேரல்குட்டை, ஜெக கொல்லை, கோதி அலகனூர், எம்.ஜி.ஆர். நகர், கொத்தூர், பூமாலை நகர், பர்கூர் ஆகிய பகுதிகளின் குடிநீர்த் தேவையை இத்திட்டம் பூர்த்தி செய்யும். எலத்தகிரி, ஓதிகுப்பம், கெட்டூர் கொட்டகை, மாடத்தனூர் ஆகிய நான்கு இடங்களில் 19 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளையும் ஒரு கோடி ரூபாய் செலவில் மாதே பள்ளியில் அமைக்கப்பட்ட கூட்டுறவுத் தொழிற் பயிற்சிக் கூடத்தையும் பாலி நாயனப் பள்ளியில் ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள, IRT பாலிடெக்னிக் கட்டடத்தையும், பர்கூரில் 2 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவில் பெண்களுக்கென அமைக்கப்

பட்ட SIDCO தொழிற்பேட்டையையும் இன்று திறந்து வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பர்கூர் தொகுதியில் பல்வேறு இடங்களில் 25 இலட்சம் ரூபாய் செலவில் அமைந்துள்ள 16 தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள் அச்சமங்கலத்தில் 66 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட தமிழ்நாட்டுப் பாடநூல் கழகக் கட்டட வளாகம், பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் பல்வேறு இடங்களில் அமைந்துள்ள மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 65 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட 58 வகுப்பறைக் கட்டடங்கள், 39 இலட்சம் ரூபாய் செலவில் 13 புதிய உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக் கட்டடங்கள், 16 இலட்சம் ரூபாய் செலவில் 11 தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள், 23 இலட்சம் ரூபாய் செலவில் பர்கூரில் ஒரு விருந்தினர் மாளிகை, உப்பரப்பட்டியில் 8 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பிற்பட்டோர் நல மாணவர் விடுதி, முதுகாண பள்ளியில் 8 இலட்சம் ரூபாய் செல்வில் கட்டப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடம், பணியாளர் குடியிருப்பு ஆகியவைகளையும் இன்று நான் திறந்து வைத்ததில் என் மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

3 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் பர்கூர் மற்றும் 29 குடியிருப்புகள் பயன்பெறும் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன். பர்கூர் அங்கிநாயன பள்ளியில் 91 இலட்சம் ரூபாய் மதிப்பில் அரசு மகளிர் கல்லூரிக் கட்டடத்திற்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இப் பகுதியின் பெண் கல்வி வளர்ச்சிக்கு இது ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழும் என்று உறுதியாக நம்புகிறேன்.

ஜின்ஜாம் பட்டியில் 33 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு பாலமும், ஆம்பள்ளியில் 66 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு பாலமும் விரைவில் அப்பகுதி வாழ் மக்களின் கோரிக்கையின் படி கட்டித்தரப்படும். பனக முட்லு கிராமத்தில் 9 இலட்சம் ரூபாய் மதிப்பிலும், கார குப்பத்தில் 6 இலட்சம் ரூபாய் செலவிலும் அணைக்கட்டுகள் கட்டித் தரப்படும். பர்கூரில், 22.5 இலட்சம் ரூபாய் செலவில், ஆதிதிராவிடப் பெண்கள், நல விடுதிக் கட்டடத்திற்கும்; 7 இலட்சம் ரூபாய் மதிப்பில் பர்கூர் அனைத்து மகளிர் காவல் நிலைய புதிய கட்டடத்திற்கும், 30 இலட்சம் ரூபாய் செலவில் 16 பள்ளிக் கட்டடங்களுக்கும் இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

கோட்டையபட்டியிலும், பனகமுட்லுவிலும் பொதுச் சுகாதார மையங்கள் 14 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப் படும். பர்கூர் பொறியியற் கல்லூரி வளாகத்தை 10 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்க இன்று என்னால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

தர்மபுரி மாவட்டம் ஓசூரில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் 8 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட 1,100 குடியிருப்புகளைத் திறந்து வைத்ததிலும், 4 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் 107 குடியிருப்புகள் பயன்பெறும் வண்ணம் அமைக்கப்பட்ட கூட்டுக் குடிநீர் திட்டத்தைத் தொடங்கி வைத்ததிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தர்மபுரி மாவட்டத்தில் கட்டப்பட்ட 1,471 தொகுப்பு வீடுகளையும், 42 ஆரம்பப் பள்ளிக் கூடுதல் கட்டடங்களையும், 50 உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிக் கட்டடங்களையும், 158 ஆரம்பப் பள்ளிக் கட்டடங்களையும், அஸ்தகிரியூர், கோட்டபதி, கல்லு மருவபாலம், மூலசித்திலிங்கி ஆகிய இடங்களில் கட்டப்பட்ட அணைக் கட்டுகள் மேலும் மாவட்டத்தின் இதரப் பகுதிகளில் கட்டப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங்கள், நீதிமன்ற வளாகம், பாலங்கள், ஆகியவற்றைத் திறந்து வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கிருஷ்ணகிரி நகராட்சிப் பகுதியில் குடிநீர் வழங்க 3 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு புதிய குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டியதிலும் ஒசூர் ஏ.ஜெட்டிஹள்ளி, தர்மபுரி ஆகிய இடங்களில் 30 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட உள்ள வீட்டுமனை வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டும் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதிலும், கிருஷ்ணகிரி, ஒகேனக்கல், நெருப்பூர், பெரும்பாளை, பெண்ணகரம் பெண்ணீஸ்வரமடம் ஆகிய இடங்களில் 8.5 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு மின் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள துணை மின் நிலையங்கள் போன்ற புதிய மின் வசதிக் கட்டமைப்புகள், ஆதிதிராவிட நலப் பெண்கள் விடுதி, தர்மபுரி மாவட்ட அனைத்து மகளிர் காவல் நிலையம், பாலங்கள் பள்ளிக் கட்டடங்கள், நூலகக் கட்டடங்கள் ஆகியவற்றுக்கு அடிக்கல் நாட்டியதிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தனி மனிதப் பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகுக்க அரசின் நலத்திட்ட உதவிகளை எங்கள் அரசு, ஒரு புதிய முனைப்புடன், செயல்படுத்தி வருகின்றது. வேறெந்த காலத்திலும் இல்லாத அளவிற்கு, அரசின் நலத்திட்ட உதவிகள், பல்லாயிரக்கணக்கான பேருக்கு மாவட்டந்தோறும் வழங்கப்பட்டு வருகின்றது.

இன்று 13 ஊராட்சிகளைச் சேர்ந்த 411 பேருக்கு 1 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளன. அனைவருக்கும் எனது கையால், வழங்க வேண்டும் என்று, நான் விரும்பினாலும்; நேரத்தின் அருமையைக் கருதி, ஒரு சிலருக்கு மட்டும் நானே எனது கையால் விழா மேடையில் கொடுக்க உள்ளேன். மற்றவர்களுக்கு, அரசு அலுவலர்கள், உதவிகளை இன்றே, இங்கேயே வழங்குவார்கள். இன்று, அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெறுபவர்கள், அவற்றை ஒரு ஆதாரமாகக் கொண்டு; நன்முறையில் பயன்படுத்தி; வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று நெஞ்சார வாழ்த்துகிறேன்.

இப்பகுதி வாழ் மக்களின் நலன் காக்கவும்: எல்லா அடிப்படை வசதிகளையும் பெற்றுத் தரவும்; எல்லா வளர்ச்சித் திட்டங்களையும், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, ஒரு புதிய முனைப்புடன், தொடர்ந்து செயல்படுத்தும் என்று, உறுதி கூறுகிறேன்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 12.1.1996 அன்று பர்கூர் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த 14 இடங்களிலும், காவிரிப்பட்டினம் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த ஒரு இடத்திலும் ஆக மொத்தம் 15 இடங்களில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அஞ்சூர்

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் காலை 10 மணிக்குக் கிருஷ்ணகிரியிலிருந்து புறப்பட்டு மாலை 5 மணிக்கு போச்சம்பள்ளியில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்து கொண்டு முடித்து வைக்கப்பட்ட திட்டங்களைத் தொடங்கி வைத்தும் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் சிறப்புரையாற்றினார். கிட்டத்தட்ட 8 மணி நேரம் அயராது சுற்றுப் பயணத்தை இரண்டாம் நாள் பர்கூரில் மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கொடமாண்டப்பட்டி

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் முதல்வராகப் பதவியேற்ற பிறகு, கொடமாண்டப்பட்டி மற்றும் சுற்றுப் பகுதியில் 28 இலட்சம் ரூபாய் செலவில் பல புதிய வசதிகள் ஏற்படுத்தித் தரப் பட்டுள்ளன. அவற்றுள் 15 இலட்சம் ரூபாய் செலவில் 3 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், இரண்டரை இலட்சம் ரூபாய் செலவில் 10 ஆழ்குழாய்க் கைப்பம்புகள், 77 ஆயிரம் ரூபாய் செலவில் சத்துணவுக்கூடக் கட்டடம், இரண்டரை இலட்சம் ரூபாய் செலவில் தொலைக்காட்சி அறை, வெள்ளத் தடுப்புச் சுவர், சமையலறைக் கட்டடம் ஆகியவை கட்டித் தரப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 304 பேருக்கு 5 இலட்சம் ரூபாய் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி 35-ஆம் பக்கம் பார்க்க

காவிரி நதி நீர்ப் பிரச்சினை:

அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை

தமிழகத்தின் உயிர்மூச்சுப் பிரச்சினையான, காவிரி நதி நீர்ப் பிரச்சினை குறித்தும் காவிரி டெல்டாப் பகுதியில் 13.3 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் பாசன நீர் இன்றி, வாடிக் கொண்டிருக்கும் நெற்பயிரைக் காப்பாற்றுவதற்கும் 28.12.1995 அன்று உச்சநீதி மன்றத்தின் ஆணையைத் தொடர்ந்து நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதிக்க இந்த அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டியுள்ளேன். இந்தக் கூட்டத்தில் பங்கு கொள்ள வந்துள்ள உங்கள் அனைவரையும் நான் வரவேற்கிறேன்.

உச்சநீதிமன்றம் பிரதமருக்கு ஆணை

காவிரி டெல்டாப் பகுதியில், 13.3 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிரை, வாடிவிடாமல் பாதுகாப்பதற்கு உச்சநீதி மன்றத்தின் கருத்திற்கு இணங்க 19.12.95 அன்று, காவிரி நதி நீர் நடுவர் மன்றம் விசாரித்து, 11 டிஎம்சி அடி காவிரி நீரை, கர்நாடக மாநிலம் உடனடியாகத் தமிழகத்திற்கு வந்து சேரும் வண்ணம் திறந்துவிட வேண்டும் என்று தீர்ப்பு வழங்கியது. இது நாள் வரை அந்த ஆணை அமல்படுத்தப்படாததால், உச்ச நீதி மன்றத்தில் அந்தத் தீர்ப்பை அமல் நடத்த, நாம் தாக்கல் செய்த மனுவினை விசாரித்து உச்சநீதிமன்றம், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் இரண்டு மாநிலங்களின் முதலமைச்சர்களையும், காவிரிப் படுகையைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களையும், சட்டமன்றக் கட்சித் தலைவர்களையும் சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர்களையும் அழைத்து, கூட்டம் நடத்தி, இன்னும் இரண்டு நாட்களில் காவிரி நதி நீர் நடுவர் மன்றம் 19.12.95 அன்று வழங்கிய தீர்ப்பினைச் செயல்படுத்த, தண்ணீர் திறந்துவிடத் தேவையான தீர்வை ஒருமித்த கருத்தை உருவாக்கியோ அல்லது அவரே அத்தகைய முடிவை மேற்கொண்டோ, மேட்டூர் பாசனப் பகுதியிலுள்ள நெற்பயிரைக் காப்பாற்ற வேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளது. அதைத் தொடர்ந்து எழுந்துள்ள சூழ்நிலைகளை விவாதிப்பதற்கும் இது குறித்து, உங்களுடைய மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கேட்பதற்கும், இந்தக் கூட்டம் இன்று கூட்டப்பட்டுள்ளது.

250 டி.எம்.சி தண்ணீர் விடவேண்டும்

காவிர் நதி நீர் நடுவர் மன்றம், 25.6.1991 அன்று பிறப்பித்த, இடைக்கால நிவாரண ஆணையில், கர்நாடக அரசு பாசன ஆண்டு ஒன்றுக்கு 250 டி.எம்.சி அடி நீரை, மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு வந்து சேரும்படி தனது நீர்த் தேக்கங்களிலிருந்து திறந்துவிட வேண்டும் என்றும் மாதவாரியாக நீரின் அளவையும் குறிப்பிட்டு ஒவ்வொரு மாதத்தின் அளவை, 4 சமப் பங்குகளாக்கி, வாராந்திர அடிப்படையில் நீரை வழங்கி வர வேண்டும் என்றும் ஒரு வாரத்தின் குறிப்பிட்ட அளவில் குறைபாடு ஏற்பட்டால் அதை அந்த மாதத்தின் இறுதி வாரத்தில் எப்படியேனும் ஈடுகட்ட வேண்டும் என்றும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, கர்நாடகாவில், 1972-ஆம் ஆண்டு 6.83 இலட்சம்

ஏக்கராக இருந்த பாசனம், 1990-ஆம் ஆண்டு, 11.2 இலட்சம் ஏக்கராக உயர்ந்திருந்ததை, அம்மாநிலத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையிலே கண்டறிந்து கர்நாடக மாநிலம் தனது பாசனப் பரப்பை விரிவுபடுத்துவதைத் தடை செய்து, கர்நாடக மாநிலம், காவிரிப் படுகையில் தற்போது பாசனம் செய்து வரும் 11.2 இலட்சம் ஏக்கருக்கு மேல், இந்த இடைக் காலத்தில் பாசன விரிவாக்கம் செய்யக்கூடாது என்றும் ஆணையிட்டுள்ளது.

இடைக்கால ஆணை ஏற்க மறுப்பு

காவிர் நதி நீர் நடுவர் மன்றம், காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினைக்கு இறுதித் தீர்ப்பு அளிக்கும் வரை இந்த இடைக்கால ஆணை 1991-ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதல் அமலுக்கு வந்தது. காவிரிநதி நீர் நடுவர் மன்றம், நாடாளு மன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பாக இருந்தும், இரண்டு மாநிலங்களின் கருத்துக்களையும், முகாந்திரங்களையும் அவர்கள் அளித்த குறிப்புகளையும் புள்ளி விரெங்களையும் பெற்று, பின்பு வழக்கறிஞர்களின் விவாதங்களையும் கேட்டறிந்த பின்பு, இந்த இடைக்கால ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தாலும், கர்நாடக மாநிலம், இந்த இடைக்கால ஆணையை ஏற்றுக் கொள்ள மறுத்தபோது, 22.7.1991 அன்று அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி அது குறித்து நாம் விவாதித்தோம்.

அனைத்துக் கட்சிக் குழு

தமிழகத்தின் உயிர் மூச்சுப் பிரச்சினையான காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் அனைத்துக் கட்சிகளும் அளித்த ஆதரவும், அவர்கள் வழங்கிய நல்ல கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளின் அடிப்படையிலும் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களின் குழு ஒன்றுக்கு நான் தலைமையேற்று டெல்லிக்குச் சென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து நமது தரப்பு நியாயங்களை விவாதித்தப் பின்னர் தான், இந்த 1991-ஆம் ஆண்டின் இடைக்கால ஆணையை மத்திய அரசு தனது அரசிதழில் 19.12.1991-ஆம் தேதியன்று பிரசுரித்தது.

பின்னர், 1993-ஆம் ஆண்டு இதே போன்றதொரு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்ட போது, நான் உண்ணாவிரதம் மேற்கொண்டேன். அதைத் தொடர்ந்து காவிரி நதி நீர் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை அமல்படுத்துவதைக் கண்காணிக்க ஒரு கண்காணிப்புக் குழுவும் அதாவது Monitoring Committeeயும், செயலாக்கும் குழுவும் அதாவது Implementation Committee அமைக்கப்படும் என்று மத்திய அரசு ஒப்புக் கொண்டது. ஆனால், அந்தக் குழுக்கள் இன்று வரை அமைக்கப்படவில்லை.

கடந்த 4 ஆண்டுகளாகத் தமிழகத்திற்குரிய காவிரி நீரை இடைக்கால ஆணையின்படி, கர்நாடக மாநிலம், காவிரியில் திறந்து விடாவிட்டாலும், இயற்கை அன்னையின் பூரண அருள் நமக்குக் கிடைத்திருந்த காரணத்தினால், நமது வேளாண்மை பாதிக்கப்படவில்லை.

பயிர்கள் பாதிப்பு

மேலும், புதிய வேளாண்மை உத்திகளை, நாம் கடைப்பிடித்து நமது இலக்கான 100 இலட்சம் டன் உணவுப் பொருள் உற்பத்தியை, எட்டிப் பிடித்தோம். ஆனால், இந்த ஆண்டு, தென்மேற்குப் பருவ காலத்தில், நமக்குக் கிடைக்கவேண்டிய காவிரி நீரைக்கர்நாடக மாநிலம் திறந்துவிடாத காரணத்தினாலும், நமது எதிர்பார்ப்புகளுக்கு மாறாக வடகிழக்குப் பருவ மழை பொய்த்துவிட்ட காரணத்தினாலும் காவிரி டெல்டாப் பகுதியில் 13.3 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர் பாசன வசதியின்றி வாடி விடுகின்ற ஒரு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஜுன் மற்றும் ஜுலை மாதங்களில் நமக்குக் கிடைக்கவேண்டிய நீரின் அளவைவிட, கர்நாடக மாநிலம் நமக்கு வழங்கிய நீரின் அளவு

(29.12.95 அன்று தலைமைச் செயலகத்தில் நடந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து)

குறைவாக இருந்ததால், 1.8.1995 அன்று உச்சநீதி மன்றத்தின், இடைக்கால மனு Interlocutory Application ஒன்றைத் தாக்கல் செய்தோம்.

நமது கோரிக்கைகள்

அதில் நாம் கேட்ட கோரிக்கைகள் இரண்டு:

1. நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையின்படி மாதா மாதம் கர்நாடக மாநிலத்திலிருந்து தமிழகத்திற்கு வந்து சேர வேண்டிய காவிரி நீரை; விடுதலின்றித் திறந்து விட வேண்டும்.

2. தமிழகத்திற்குரிய பாசன நீரை முழுமையாக வழங்கிய பின்னரே கர்நாடக மாநிலம், தனது நீர்த் தேக்கங்களில் நீரைத் தேக்கி வைத்துக் கொள்ள அனுமதிக்க வேண்டும்.

இந்த ஆண்டு, இடைக்கால ஆணைப்படி நமக்குக் கிடைக்கப் பெறாத, நீரின் அளவுக் குறைவைச் சுட்டிக் காட்டி கர்நாடக மாநிலம் தொடர்ந்து நடுவர் மன்ற ஆணையைப், புறக்கணித்து வருவதையும் எடுத்துரைத்து நடப்பு ஆண்டிற்கான எல்லாப் புள்ளி விவரங்களையும் அளித்து ஏற்கெனவே, 14.3.1995 அன்று தாக்கல் செய்திருந்த தாவா மனுவுடன் அவற்றை இணைத்துக் கொள்ளுமாறு 1.10.95 அன்று தமிழக அரசு மேலும் ஒரு மனுவைத் தாக்கல் செய்தது அதை உச்சநீதி மன்றமும் அனுதித்தது. அதன் படி அந்த தாவா மனுவில் சேர்த்து, முழுமை பெறச் செய்தது.

> **நல்ல கொள்கைகள்**
>
> கொள்கைகள் நல்லவையாக இருந்தால் எந்தப் பின்னணியும் அதற்கு உதவும்.
>
> **—சுவாமி சின்மயானந்தர்**

அவசர மனு தாக்கல்

இந்த முயற்சிகளினால், நமக்குத் தேவையான நிவாரணம் கிடைக்காததாலும், காவிரி நதி நீர் நடுவர் மன்றத்திற்குத் தனது ஆணையைச் செயல்படுத்துகின்ற அதிகாரம் Powertoexecute இல்லை என்று சட்ட நிபுணர்கள் கருத்துத் தெரிவித்ததாலும், தற்போது காவிரி டெல்டாப் பகுதியில், பாசன வசதி இன்றி வாடும் நெற்பயிரைக் காப்பாற்றுவதற்குத் தேவையான குறைந்த பட்ச நீரான 30 டி.எம்.சி. அடி நீரையாவது உடனடியாகத் திறந்துவிட வேண்டும் என்று கோரி, EmergentPetition அதாவது அவசர மனு ஒன்று 11.12.1995 அன்று தமிழக அரசின் சார்பில், உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

உச்சநீதிமன்றம், தமிழகத்தின் படுகைப் பகுதியில் நிலவி வருகின்ற, பாசன நீர்ப் பிரச்சினை குறித்து, தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்து; இதுகுறித்து, காவிரி நதி நீர் நடுவர் மன்றம், இரு தரப்பினரையும் விசாரித்து, தகுந்த நிவாரணம் வழங்க வேண்டும் என்று 14.12.1995 அன்று ஆணையிட்டது. உச்ச நீதி மன்றத்தின் கருத்திற்கிணங்க, நடுவர் மன்றம் இரு தரப்பிலிருந்தும் நிபுணர்களின் புள்ளி விவரங்களைப் பெற்று அவற்றை ஆராய்ந்தது. நமது மாநிலம் முழு விவரங்களையும் தயங்காமல் அளித்தது.

ஆனால், கர்நாடக மாநிலம், அவர்கள் பாசன வசதிக்குப் பயன்படுத்துகின்ற நீரின் அளவையும் அங்குள்ள பயிரின் நிலைகளையும் நடுவர் மன்றத்திற்குக் கொடுக்கத் தவறியது. கர்நாடக மாநிலத்தின் தென் மேற்குப் பருவ மழையின் தொடக்கத்தில் வறண்ட நிலையில் நீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டது என்றும், எனவே இந்த ஆண்டை வறட்சி ஆண்டாகக் கருத வேண்டும் என்றும் உண்மைக்குப் புறம்பாக, கர்நாடக மாநிலம் முன் வைத்த வாதத்தை, நடுவர் மன்றம் ஏற்க இயலாது என்று கருத்துத் தெரிவித்துள்ளது.

கர்நாடக மாநிலம் ஒட்டு மொத்தத்தில் பகுதி அளவுத் தண்ணீரை அதாவது Pro rata basisஇல் மட்டுமே வழங்க வேண்டும் என்ற வாதத்தையும், நடுவர் மன்றம் அப்படியே ஏற்றுக் கொள்ளவில்லை. நம்மைப் பொறுத்த வரையில், எந்த விகிதாசாரத்தில், நீரைப் பங்கீடு செய்வது என்பதைக் கர்நாடக அரசே தன்னிச்சையாகத் தீர்மானிக்கக் கூடாது என்றும், அதற்குரிய அதிகாரம், நடுவர் மன்றத்திற்கு மட்டும்தான் உண்டு என்றும் வாதாடினோம்.

கர்நாடக அரசின் மனு தள்ளுபடி

எனவே, காவிரி நதி நீர் நடுவர் மன்றம் நமது கருத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டு, கர்நாடக அரசின் வாதத்தைத் தள்ளுபடி செய்தது. இருப்பினும், கர்நாடக மாநிலம் கொடுத்த இந்த ஆண்டு நீர்வரத்து, புள்ளி விவரங்களின் அடிப்படையிலே கூட அவர்கள், தமிழ்நாட்டிற்கு உரிய நீரின் அளவில், 28 டி.எம்.சி அடி நீரைக் குறைவாகக் கொடுத்துள்ளனர் என்றும் அந்தக் குறைபாட்டை ஈடுசெய்ய, கர்நாடக மாநிலத்தின் வாதத்தின் படியே, Pro rata basisஇன் அடிப்படையில் 17 டிஎம்சி அடி நீரைக் கழித்துக் கொண்டாலும், 11 டிஎம்சி அடி நீரை அவர்கள் உடனடியாகத் தமிழகத்திற்குக் கொடுக்க வேண்டும் என்றும் 19.12.1995 அன்று நடுவர் மன்றம் தீர்ப்பு வழங்கியது.

அதுமட்டுமின்றி, 1991-ஆம் ஆண்டின் நடுவர் மன்ற இடைக்கால ஆணையின்படி, மீதமுள்ள மாதங்களுக்குரிய நீரைத்தமிழகத்திற்குக்குறைவின்றி வழங்க வேண்டும் என்றும் இந்தத் தீர்ப்பில் கூறப் பட்டுள்ளது.

கடிதம்

தமிழ்நாட்டில் வட கிழக்குப் பருவ மழை பொய்த்து விட்டதால் மேட்டூரிலிருந்து திறந்து விடப்படும் தண்ணீரைக் கொண்டு மட்டுமே பயிரிடப் பட்ட நெற்பயிரைப் பாதுகாத்து அறுவடைக்குக் கொண்டு வர இயலாது என்பதை உணர்ந்த வுடன் கர்நாடக மாநிலம் தன்னுடைய நீர்த் தேக்கங்களில் போதுமான அளவு நீரை வைத்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்டி, 30 டிஎம்சி. அடி நீரை உடனடியாகத் திறந்து விடுமாறு, நான் 7.12.1995 அன்றே கர்நாடக மாநில முதலமைச்சருக்குக் கடிதம் எழுதினேன். 11.12.1995 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும் கடிதம் எழுதி இதில் அவர் உடடினயாகத் தலையிட்டு 30 டிஎம்சி. அடி தண்ணீரைத் திறந்துவிட கர்நாடக மாநில முதலமைச்சரை அறிவுறுத்துமாறும் வற்புறுத் தினேன்.

உண்மையான ஞானம்

அகங்காரத்தின் வேரை அறுத்து, அதை எரித்துச் சாம்ப லாக்குவதுதான் உண்மையான ஞானத்தின் இயல்பு.

–ஆதிசங்கரர்

பிரதமரைச் சந்தித்தேன்

பின்னர் 14.12.1995 அன்று உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அறிந்தவுடன், நான் டெல்லிக்குச் சென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து, 30 டிஎம்சி. அடி நீரைத் தமிழகத் திற்கு உடனடியாகக் கொடுக்க வில்லை என்றால் கிட்டத்தட்ட 800 கோடி ரூபாய் பெறுமான முள்ள விவசாய விளை பொருள்களின் உற்பத்தி பாதிக்கப்படும் என்பதையும், இலட்சக்கணக்கான விவசாயி களும், விவசாயத் தொழிலாளர் களும், பாதிக்கப்படுவார்கள் என்பதையும் எடுத்துரைத்து அப்பகுதியில் வறட்சி ஏற்பட்டு இலட்சக்கணக்கான மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்ற நியாயமான அச்சத்தையும் எடுத்துரைத்தேன். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும், நீரைத் திறந்துவிட ஆவன செய்வதாக என்னிடம் கூறினார்கள்.

உச்சநீதிமன்றத்தின் கருத்துப் படி, கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்களை, நான் 15.12.1995 அன்று தொலைபேசி யில் தொடர்பு கொண்டு, பேசுவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்காமல் போயின. இதற்கிடையில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், டெல்லியில் ஒரு கூட்டத்தைக் கூட்டினால் மட்டுமே, அதில் தான் கலந்து கொள்வதாக மாண்புமிகு கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவித்த தாக செய்தி வெளிவந்ததைத் தொடர்ந்து 18.12.1995 அன்று சென்னைக்கு வந்திருந்த மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் அத்தகையதொரு கூட்டத்தை உடனே மாண்புமிகு பாரதப் பிரதமர் கூட்ட வேண்டும் என்று நானும் கேட்டுக்கொண்டேன்.

19.12.1995 அன்று நடுவர் மன்றத் தீர்ப்பு கிடைத்தவுடன் உடனடியாக 11 டிஎம்சி. அடி நீரையும், டிசம்பர் மாதத்திற்

குரிய 6.194 டி.எம்.சி. அடி நீரையும், 1996-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குரிய, 2.51 டி.எம்.சி. அடி நீரையும் சேர்த்து ஆகமொத்தம், 20 டி.எம்.சி. அடி நீரை, தமிழகத்தின் நலனைக் கருத்தில்கொண்டு, உடனடியாக வழங்கவேண்டும் என்றும் 20.12.1995 அன்றே, கர்நாடக மாநில முதலமைச்சர் அவர் களுக்கு மேலும் ஒரு கடிதம் எழுதினேன். கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் நகலை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பி வைத்து நடுவர் மன்ற தீர்ப்பை உடனடியாகச் செயல்படுத்த கர்நாடக மாநில அரசை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் வற்புறுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டேன்.

தீர்மானம்

தொடர்ந்து கர்நாடக மாநிலம் தனது நிலையில் எந்த மாற்றத்தையும் வெளிப்படுத்தாத காரணத்தினாலும், காவிரி டெல்டாப் பகுதியில் பயிர்கள் மேலும் வாடுகின்ற சூழ்நிலை ஏற்பட்டதாலும், நமக்கு நியாயம் கிடைக்கவேண்டும் என்பதாலும், தமிழகச் சட்டமன்றக் கூட்டத்தை 28.12.1995 அன்று கூட்டி, 20 டிஎம்சி. அடி நீரை உடனடியாகக் கர்நாடகம் திறந்துவிட வேண்டும் என்ற தீர்மானத்தை ஒரு மனதாக நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைத் துள்ளோம்.

19.12.1995 அன்று காவிரி நதி நீர் நடுவர் மன்றம் பிறப்பித்த தீர்ப்பை, உடனடியாக அமல் படுத்தக் கோரி நாம் தாக்கல் செய்த மனுவை 28.12.1995 அன்று உச்சநீதி மன்றத்தின் பென்ச் விசாரித்து ஆணை வழங்கியுள்ளது. இடைக்கால நடுவர் மன்றத் தீர்ப்பை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது குறித்து மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் இரண்டு மாநிலங்களின் முதலமைச்சர் களையும், அந்த மாநிலங்களின் படுகைப் பகுதிகளின் நாடாளு மன்ற உறுப்பினர்களையும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்களையும், சட்டமன்றக் கட்சித் தலைவர்களையும் அழைத்துக் கூட்டம் நடத்தி இரண்டு நாட்களுக்குள் தீர்வு காண வேண்டும் என்றும் பாசன நீரின்றி வாடி வரும் பயிரைக் காப்பாற்ற தண்ணீர் உடனடி யாக விடுவதற்கு ஒருமித்த கருத்தினை உருவாக்கியோ அல்லது மாண்புமிகு பாரதப் பிரதமரே ஒரு முடிவை எடுத்தோ இதற்கான வழி வகை காண வேண்டும் என்றும் இதில் கூறப்பட்டுள்ளது.

ஆலோசனைகள்

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் கூட்டுகின்ற கூட்டத் தில் கலந்து கொள்வதற்கு முன்பு, இந்தப் பிரச்சினை குறித்து நாம் மேற்கொள்ள வேண்டிய முடிவுகள் குறித்தும், எடுக்க வேண்டிய நடவடிக் கைகள் குறித்தும், உங்களது மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்தில் ஒருமைப்பாட்டு உணர்விற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகத் தமிழகம் விளங்கி வருகின்றது. ஆனால், அதே நேரத்தில், இன்னொரு அண்டை மாநிலம் நமது மாநிலத்தில் ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழ் நிலையைச் சற்றும் மதிக்காமல், தர்மத்தின் அடிப்படையிலே கூட நமக்குப் பாசன நீரை விட மறுத்திருப்பது வேதனைக்குரிய விஷயமாகும். இரண்டு மாநிலங்களுக்கு இடையே இது போன்ற பிரச்சினைகள் ஏற்படும்போது, நான் சட்ட மன்றப் பேரவையில் நேற்று குறிப்பிட்டதைப் போல உடனடியாகத்தலையிட்டுத்தீர்க்க வேண்டிய கட்டாயமும், அவசியமும் மத்திய அரசுக்கு உள்ளது.

தமிழகத்தின் பொருளாதாரம் பாதிக்கப்படாமலும், தமிழகத் தின் ஜீவாதார உரிமைகள், பறிக்கப்படாமலும் நல்லதொரு முடிவை, மத்திய அரசு எடுக்க வேண்டும். அத்தகைய நல்ல முடிவைப் பெற நாம் அனைவரும் ஓரணியில் ஒற்றுமையாகத் திரண்டு நிற்க வேண்டும் என்றும் நீங்கள் அனைவரும் உங்களது முழு ஒத்துழைப்பை எனக்கும், தமிழக அரசுக்கும் நல்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பிரச்சினை குறித்து உங்களது மேலான ஆலோசனை களையும், கருத்துக்களையும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம்

காவிரி நதி நீர்ப் பிரச்சினை குறித்து எழுந்துள்ள இந்தச் சிக்கல்கள் குறித்து விவாதிப்பதற்காகத் தமிழக அரசு 29.12.95 அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி இருந்தது. கூட்டத்துக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெஜெயலலிதா அவர்கள் தலைமை தாங்கினார்.

அனைத்துக் கட்சிகள்

இந்தக் கூட்டத்தில் அஇஅதிமுக. தி.மு.க., இ.காங்கிரஸ், ஜனதா தளம், இ.கம்யூனிஸ்டு, வ.கம்யூனிஸ்டு, ம.தி.மு.க. மற்றும் விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர். சென்னைக் கோட்டையில் உள்ள 10 மாடிக் கட்டடத்தில் சுமார் 4 மணி நேரம் இந்தக் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் முக்கியப் பிரதிநிதிகள் அடங்கிய குழு டெல்லி செல்வது என்று முடிவு செய்யப்பட்டது.

இது சம்பந்தமாகக் கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:

திறந்து விடுங்கள்!

தமிழகத்தின் டெல்டாப் பகுதியில் 13.3 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு வாடிவிடும் நிலையில் உள்ள நெற்பயிரை, உடனடியாகக் காப்பாற்றுவதற்கு 19.12.1995 அன்று காவிரி நதிநீர் நடுவர் மன்றம், வழங்கிய தீர்ப்புப்படி கர்நாடக மாநிலம், உடனடியாகத் தமிழகத்திற்கு வந்து சேரும் வண்ணம், 11 டி.எம்.சி. தண்ணீரையும், டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களுக்குரிய 8.7 டி.எம்.சி. தண்ணீரையும் சேர்த்து 19.7 டி.எம்.சி. அடி காவிரி தண்ணீரைத் திறந்து விட வேண்டும் என்று உச்சநீதி மன்றம் வழங்கிய ஆணையின் அடிப்படையிலும், தமிழகத்திற்கு உடனடியாகக் காவிரி தண்ணீர் வழங்க வேண்டுமென்றும் கர்நாடக மாநிலத்தை வற்புறுத்துகிறது.

ஒப்புதல்

உச்சநீதிமன்றத்தின் ஆணையின்படி, தமிழகத்திலுள்ள நெற்பயிரைக் காப்பாற்ற வேண்டும் என்றும் 800 கோடி ரூபாய் மதிப்புள்ள, விவசாய விளைபொருள்கள் உற்பத்தி பாதிக்கப்படும் என்பதையும், இலட்சக்கணக்கான விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் பாதிக்கப்படுவார்கள் என்பதையும் கருத்தில் கொண்டு பாரதப் பிரதமர் தர்மீக உணர்வுகளின் அடிப்படையிலும், மனிதாபிமானத்தின் அடிப்படையிலும் கர்நாடக. மாநிலத்தை வற்புறுத்தி கர்நாடக மாநிலம் உடனடியாக 20 டி.எம்.சி. அடி தண்ணீரைத் தமிழகத்திற்குத் திறந்து விட வேண்டும் என்றும், எதிர்வரும் எஞ்சியுள்ள மாதங்களுக்கும், இனிவரும் காலங்களுக்கும் 1991-ஆம் ஆண்டின் நடுவர் நீதிமன்றத்தின் இடைக்கால ஆணையை மதித்து அந்த ஆணையின்படி தமிழகத்திற்குரிய பங்கு நீரை எந்தவிதமான குறைவும் இன்றி, அந்தந்தக் கால கட்டங்களிலேயே திறந்து விட வேண்டும் என்றும், வற்புறுத்துகிறோம். மேலும், இதற்குக் கர்நாடக அரசிடமிருந்து பாரதப் பிரதமர் நரசிம்மராவ் ஒரு ஒப்புதலையும் பெற்றுத்தர வேண்டும் என்று இந்தக் கூட்டத்தில் கேட்டுக் கொள்கிறோம்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் நாடாளு மன்றக் கூட்டத் தொடரை உடனடியாகக் கூட்டி, காவிரி நதிநீர் நடுவர் மன்றத்திற்குத் தனது ஆணைகளையும், தீர்ப்புக்களையும் சுயமாக நடைமுறைப் படுத்தும் அதிகாரத்தை வழங்குவதற்கு, மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்த் தாவாக்கள் சட்டத்திற்குத் தகுந்த சட்டத் திருத்தங்களைக் கொண்டு வரவோ அல்லது அதற்காக ஒரு அவசரச் சட்டத்தை உடனடியாகப்பிறப்பிக்கவோவேண்டும் என்று வற்புறுத்துகிறது.

முழு ஆதரவு

1993-ஆம் ஆண்டு காவிர் நீர்ப் பிரச்சினை குறித்து இடைக்கால ஆணையை நடைமுறைப்படுத்துமாறு தமிழக முதலமைச்சர் அவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்ட போது, மத்திய அரசு உறுதி அளித்தது இதுவரை அமைக்கத் தவறிய கண்காணிப்புக்குழு மற்றும் நடைமுறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக மத்திய அரசு ஏற்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு பாரதப் பிரதமரை வற்புறுத்துகிறது.

மாண்புமிகு பாரதப் பிரதமர் டெல்லியில் இதுகுறித்துக் கூட்டுகின்ற அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கலந்து கொள்ள ஒரு குழுவைத் தலைமையேற்று நடத்திச் செல்லும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தின் நலனைக் கருத்தில் கொண்டும், விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டும் காவிரி நதி நீர் நடுவர் மன்றம் 19.12.1995 அன்று வழங்கிய தீர்ப்பினை அமல்படுத்த அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்ற அதிகாரத்தை வழங்கி அவ்வாறு எடுக்கும் எல்லா முடிவுகளுக்கும் இக் கூட்டம் முழு ஆதரவு அளிப்பதோடு, தங்களது ஒத்துழைப்பையும் முழு மனதுடன் தருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழர் திருநாள்!

பொங்கல் உழவர் விழா! தமிழர் திருநாள்! நம்பவொண்ணாப் புராணக் கருத்தினை நாட்டினர் மனதிலே மூட்டிடும் மற்றைய விழாக்கள் போலன்றி, உழைப்பின் பெருமையை உலகுக்கு உணர்த்தும் உன்னதமான விழா!

களத்திலே காணப்பட்ட பலன்,வீட்டிலே புதுப்பானையிலே, பொங்கி வழியும் நாள் பொங்கல் விழா!

செந்நெல்லும் செங்கரும்பும் பச்சைக் காய்கறியும் பசும் பொன்னிறப் பண்டங்களும் வண்ணக் கோலமும், வாடா மலர்களும், மனைதோறும் குவிக்க, மக்கள் மனதிலே மகிழ்ச்சியூட்டும் நன்னாள்! மார்பிலே சந்தனம் மணக்கும் பொன்னாள்! கூந்தலிலே மலர்கள் மொய்க்கும் நாள்!
ஆடல், பாடல், கொட்டு முழக்கு, குதூகலம் வந்தாடும் நாள்!
பாடுபட்ட உழவன் தன் வீட்டுப் பானையில், தான் உழைத்ததில் சிறிதளவு பலனாவது சேர்வதைக் காணும் நாள்!

—பேரறிஞர் அண்ணா

டில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதல்வரின் முழக்கம்

புதுடெல்லியில் 30.12.95 அன்று நடைபெற்ற காவிரி நதி நீர் தொடர்பான முதலமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை

காவிரி தண்ணீர் தகராறு பிரச்சினைகளில் தமிழ்நாட்டின் நிலையைப் பிரதிபலிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் அடங்கிய பிரதிநிதிகள் குழுவுடன் இங்கே வந்திருக்கிறேன்.

இப்போதைய பிரச்சினை தேசிய அளவில் விவாதிக்கக் கூடிய அளவுக்கு வளர்ந்துவிட்டது.

குறைந்த அளவான 11 டி.எம்.சி. தண்ணீரைக் காவிரியில் திறந்துவிட கர்நாடக அரசு மறுப்பதால் 13 இலட்சம் ஏக்கர் நெற்பயிர் வாடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

டிசம்பர், ஜனவரி மாதங்களில் விடவேண்டிய தண்ணீர் அளவான 8.70 டி.எம்.சி. அடி தண்ணீருக்கு இந்த அளவு கூடுதலாகும்.

ஆனால், கர்நாடக அரசு பிடிவாதமாக உள்ளது. இதனால் காவிரி வடிநிலப் பகுதிகளில் உணவு உற்பத்தி இழப்பு ஏற்பட்டு விவசாயிகள் மத்தியில் துயர நிலை உருவாகி இது தேசிய அளவில் ஒரு சேதமாக உருவெடுத்துவிடும்.

காவிரி தண்ணீர்த் தகராறு பற்றிய பிரச்சினையில் நடுவர் மன்றத் தீர்ப்புக்கு, கர்நாடக அரசு கட்டுப்படாது என்று கூறுவது கவலை அளிப்பதாக இருக்கிறது.

அதேபோல எங்களது கோரிக்கைகளுக்கும் மத்திய அரசு உடனடியாகச் செவி சாய்க்காமல் உச்சநீதி மன்ற உத்தரவு வரும்வரை காத்திருந்தது வருத்தத்தைத் தருகிறது.

தஞ்சை மற்றும் நாகை காயிதெ மில்லத் மாவட்டங்களுக்கு நான் இன்று நேரில் சென்று காவிரி வடிநிலப் பகுதிகளைப் பார்வையிட்டேன். பயிர்களின் நிலைமை மிகவும் மோசமாக இருந்ததைக் கண்டேன். விவசாயிகள் பாதிப்புக்கு ஆளாகி உள்ளனர்.

குறுகிய அரசியல் காரணங்களுக்காகக் காவிரியில் தண்ணீர் திறந்து விடுவதைத் தள்ளிப் போடுவது சரியல்ல. உடனடியாகத் தண்ணீர் திறந்துவிடுவது அவசியமாகும்.

25.6.1991-இல் நடுவர் மன்றம் அளித்த உத்தரவில் கர்நாடக அரசு ஒரு நீர்ப்பாசன ஆண்டில் ஜூன் முதல் மே மாதம் வரை 205 டி.எம்.சி. தண்ணீர்விட வேண்டும் என்றும், மாதா மாதம், வாரா வாரம் இதைக் குறிப்பிட்ட அளவில் விட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

இந்த நடுவர்மன்ற உத்தரவு மத்திய அரசின் 10.12.1991-ந் தேதி கெஜட்டில் வெளியாகியுள்ளது. காவிரி தண்ணீர்த் தகராறு பற்றிய பிரச்சினையில் சம்பந்தப்பட்ட மாநிலங்களை இந்த உத்தரவு கட்டுப்படுத்துகிறது.

ஆனால், நடுவர்மன்ற உத்தரவுக்குப் பின்னரும் கடந்த 1991-92 முதல் 1994-95 வரை மேட்டூர் அணைக்குக் கர்நாடக அணையிலிருந்து எந்தக் குறிப்பிட்ட அளவு தண்ணீர் வரத்தும் ஒரு ஆண்டில் கூட இல்லை என்பது மாண்புமிகு பிரதமருக்கே தெரியும்.

நடப்பு ஆண்டில் தண்ணீர்ப் பற்றாக்குறை அளவு டிசம்பர் முடிய 66.71 டி.எம்.சி. அடி தண்ணீராகும்.

கேலிக்கூத்து

கர்நாடக அரசு நடுவர் மன்றத் தீர்ப்பை மதிக்காமல் தொடர்ந்து பிடிவாதமாக நடந்து வருகிறது. இது உச்சநீதி மன்றமும், மத்திய அரசும் அமைத்த நடுவர் மன்ற அமைப்பையே கேலிக்கூத்தாக்கி விட்டது.

காவிரி நீர்ப் பிரச்சினை தொடர்பாக நடுவர் மன்றம் அளித்தத் தீர்ப்பை நிறைவேற்ற கண்காணிப்புக் குழுவும் அமலாக்கக் குழுவும் அமைக்கப்பட வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்துகிறேன்.

1993-ஆம் ஆண்டு காவிரி விவசாயிகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று சென்னையில் உண்ணாவிரதம் இருந்தேன். அப்போது என்னுடைய உண்ணாவிரதத்தை நிறுத்த வேண்டும் என்று பிரதமர் கேட்டுக்கொண்டு, அப்போது மத்திய நீர்ப்பாசன அமைச்சராக இருந்த திரு. வி.சி. சுக்லாவைச் சென்னைக்குப் பிரதமர் அனுப்பி வைத்தார். அப்போது திரு. வி.சி. சுக்லா என்னிடம் பேசும்போது இந்த இரு குழுக்களும் அமைக்கப்படும் என்று உறுதி அளித்தார்.

ஆனால் $2\frac{1}{2}$ ஆண்டுகள் ஆகியும் இந்த இரு குழுக்களும் இதுவரை அமைக்கப்படவில்லை என்பதை மிகுந்த மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். காவிரி நீர்ப் பிரச்சினைக்காகக் கொடுக்கப்படும் உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை.

காவிரிப் பாசன விவசாயிகள் நெடுநாட்களாகத் துன்பப்பட்டு வருகின்றனர். 2 ஆயிரம் ஆண்டுகளாக இருந்து வந்த காவிரி விவசாயிகளின் ஜீவாதார உரிமைகள் பாதிக்கப்படுகின்றன. இதற்குக் காரணம் மத்திய திட்டக் கமிஷனிடம் அனுமதி பெறாமல், கர்நாடகம் சில பாசனப் பகுதிகளை ஏற்படுத்தியுள்ளது.

கர்நாடக் அரசின் சட்ட விரோதமான வலுக்கட்டாயமான செயல்பாடுகளை மத்திய அரசு தடுக்கவும் இல்லை. அமைதியாக இருந்துகொண்டு இந்தக் கிளைக் கதையை வேடிக்கைப் பார்க்கிறது.

காவிரிப் பாசனப் பகுதியில் உள்ள பயிர்கள் தண்ணீரில்லாமல் அழியும் அபாயகரமான நிலையில் உள்ளது. இதற்கு உடனடியாகத் தீர்வு காணப்படாவிட்டால் தமிழ்நாட்டின் மொத்தப் பொருளாதார நிலை மிகவும் பாதிக்கும். காவிரி விவசாயத் தொழிலாளர்கள் மிகவும் துன்பப்படுவார்கள்.

11.12.95 அன்று தமிழக அரசு உச்சநீதி மன்றத்தில் ஒரு மனுவைத் தாக்கல் செய்தது. இது தொடர்பாக நடுவர் மன்றத்தை அணுகும்படி உச்சநீதி மன்றம் தமிழக அரசுக்கு உத்தரவிட்டது. பிறகு தமிழக அரசு ஒரு அவசர மனுவை நடுவர் மன்றத்திடம் தாக்கல் செய்தது. இதைத் தொடர்ந்து உடனடியாக 11 டி.எம்.சி. தண்ணீருடன் சேர்த்து, டிசம்பர் மாதத்துக்குரிய 6.19 டி.எம்.சி. தண்ணீரையும 1996-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துக்குரிய 2.5 டி.எம்.சி. தண்ணீரையும் வழங்க வேண்டும் என்று நடுவர் மன்றம் தீர்ப்பு கூறியது.

நடுவர் மன்றத் தீர்ப்பின்படி தண்ணீரைத் திறந்துவிடும்படி கர்நாடக முதலமைச்சருக்குத் தொடர்ந்து கடிதங்கள் எழுதினேன். காவிரி டெல்டாப் பகுதியில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்களைக் காப்பாற்ற உடனடியாகத் தண்ணீர் திறந்து விட மாண்புமிகு கர்நாடக முதலமைச்சரை வற்புறுத்த வேண்டும் என்று உங்களிடமும் (திரு. நரசிம்மராவ்) வேண்டுகோள் விடுத்தேன். உச்சநீதிமன்ற உத்தரவுக்கு இணங்க காவிரி நடுவர் மன்றம் பிறப்பித்த தீர்ப்பின்படி கர்நாடக அணைக் கட்டுகளிலிருந்து எந்தத் தண்ணீரும் வரவில்லை என்பதை வருத்தத்துடன் சுட்டிக்காட்டுகிறேன்.

மேட்டூர் அணைக்கட்டில் தண்ணீர் இருப்பு அபாயக் கட்டத்தில் உள்ளது. காவிரி ஆயக்கட்டுப் பகுதியில் 13.3 இலட்சம் ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்கள் வாடிக் கொண்டிருக்கின்றன. இது விவசாயத்தைப் பாதிக்கக் கூடியது. இதனால் ஏற்படக் கூடிய 800 கோடி ரூபாய் இழப்பு தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, நாடு முழுமைக்கும் நஷ்டமாகும்.

நடுவர் மன்றத் தீர்ப்பை ஏற்று காவிரியில் தண்ணீர் திறந்துவிடும்படி, கர்நாடக அரசுக்கு வேண்டுகோள் விடுப்பதற்கும் கண்காணிப்புக் குழு அமைக்கும்படி மத்திய அரசை

வற்புறுத்துவதற்கும் 28-ந் தேதி தமிழகச் சட்டசபை கூடியது.

சபையின் உணர்வைப் பிரதி பலிக்கும் வகையில் தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. அந்தத் தீர்மானம் மாண்புமிகு பிரதமருக்கும் அனுப்பப்பட்டது.

என்னால் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத் திலும் அனைவரும் இதே கருத்தை உறுதியாகத் தெரிவித் தார்கள்.

உச்சநீதி மன்றம், நடுவர் மன்றம் உட்பட அனைத்து விசாரணை அமைப்பிலும் தமிழகத் தரப்பு வாதத்தை வற்புறுத்திக் கூறியிருக்கிறோம்.

தனிப்பட்ட முறையில் கூட மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர், மாண்புமிகு மத்திய நீர்வள மேம்பாட்டுத் துறை அமைச்சர், மாண்புமிகு பிரதமர் ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறேன்.

நடுவர் மன்றத் தீர்ப்பை அமல்படுத்தும்படி மத்திய அரசைக் கோரி நான் அறப்போராட்டம் கூட நடத் தினேன்.

தண்ணீர் இல்லாமல் வாடும் பயிர்களைக் காப்பாற்ற உடனே தண்ணீர் திறந்துவிடும்படி நடுவர் மன்றம் அளித்தத் தீர்ப்பு புறக்கணிக்கப்பட்டுவிட்டது.

நடுவர் மன்றத் தீர்ப்பை ஏற்க முடியாது. அதை நிறைவேற்ற மாட்டோம் என்று கர்நாடக அரசு பகிரங்கமாகவே அறிவித்துவிட்டது. சட்டப் பூர்வமாக அமைக்கப்பட்ட ஒரு நீதிமன்றத்தின் உத்தரவை ஏற்க மறுப்பது ஜனநாயகத்தின் அடிப் படையையே தாக்குவதாகும். இது அரசியல் சட்டத்தையே அவமதிப்பதாகும்.

காவிரியில் எவ்வளவு தண்ணீர் கிடைக்கிறது? சம்பந்தப் பட்ட மாநிலங்களுக்குத் தேவைப் படும் தண்ணீரின் அளவு எவ்வளவு என்பதை எல்லாம் கவனத்துடன் பரிசீலனை செய்துதான் நடுவர் மன்றம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அந்த அடிப்படையில்தான், பின்னர் இது தொடர்பாக நாங்கள் உச்சநீதி மன்றத்திற்குச் சென்றபோது அது நடுவர் மன்ற உத்தரவை நிறைவேற்ற வழி வகை காண வேண்டும் என்று மாண்புமிகு பிரதமரைக் கேட்டுக் கொண்டது. உச்சநீதி மன்றத்தின் உத்தரவு மிகத் தெளிவாக உள்ளது.

நடுவர் மன்றம் நிர்ணயித்த படி 11 டி.எம்.சி. தண்ணீர் கொடுக்கப்பட வேண்டும். இது கொடுக்கப்பட வேண்டிய வழி முறைகள் பற்றிதான் இன்று இங்கு முடிவு செய்யப்பட விருக்கிறது. எனவே இதில் இரண்டாவது நிலையோ அல்லது வேறு மாற்றுக் கருத்தோ எதுவும் கிடையாது. கர்நாடகம் தண்ணீர்த் திறந்துவிடுவதன் மூலமே இதில் இறுதியான நீதி கிடைக்கும்.

இதற்கு மறுப்பு தெரிவிக்கப் படுமானால், அது உச்சநீதி மன்றத்துடன் நேரடியாக மோதுவதாகவும் ஜனநாய கத்தின் அடிப்படையைத் தகர்ப்பதாகவும், தேசத்தின் அடிப்படை அமைப்பைச் சேதப் படுத்துவதாகவும் அமையும். எனவே, நம் நாட்டின் வரலாற்றில் இதுபோன்ற ஒரு நாசகரமான சம்பவம் ஏற்படு வதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் தான் மாண்புமிகு பிரதமரை நான் முன்பே கேட்டுக் கொண்டேன்.

நடுவர் மன்றம் மற்றும் உச்சநீதி மன்றம் பிறப்பித்த உத்தரவுகளுக்கு இணங்க நடக்க வேண்டும் என்று கர்நாடக அரசுக்குக் கட்டளையிட அரசியல் சட்டத்தின் கீழ், பிரதமருக்குப் போதிய அதிகாரம் இருக்கிறது என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டிய அவசியம் இல்லை.

யார் மனிதன்?

கருணையும் இரக்கமும் இல்லாத ஒருவனை மனிதன் என்று அழைக்க முடியாது.

—சாரதா தேவியார்

கடவுளைக் காண

கடமையை உணரும் சக்தியும், அதைச் செய்யும் தன்மையும் கொண்ட மனிதனுக் குத்தான் கடவுள் காட்சித் தருவார்.

—போர்க்

எது வாழ்க்கை?

வாழ்க்கை என்பது ஒருவன் தனக்காக வாழ்வதன்று. நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்வதற்கே.

—மினாண்டர்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் காவிரி நதி நீர்ப் பிரச்சினைக் குறித்து டெல்லி சென்று திரும்பிய பின் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. (2.1.96)

காவிரியில் உடனே தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்!

மாண்புமிகு பிரதமர் அவர்களை வற்புறுத்தி அனைத்துக் கட்சிகள் தீர்மானம்

தமிழ்நாட்டில் வாடியப் பயிர்களைக் காப்பாற்றுவதற்காக, கர்நாடக அரசு உடனடியாக 6 டி.எம்.சி. (600 கோடி கன அடி) தண்ணீரை ஒரு நாளைக்கு 1 டி.எம்.சி. தண்ணீர் வீதம் திறந்துவிட வேண்டும் என்றும், இரு மாநிலங்களிலும் நிபுணர் குழுவினர் பார்வையிட்டு, வருகிற 10-ந் தேதிக்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் பிப்ரவரி மாதத்தில் அனைத்து முதலமைச்சர்கள் கூட்டத்தைக் கூட்டி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை பற்றி பரிசீலிக்கப்படும் என்றும் மாண்புமிகு பிரதமர் அறிவித்தார்.

அனைத்துக் கட்சிக் கூட்டம்

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் கலந்து பேச, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் முடிவெடுத்தார்.

தலைமைச் செயலகத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் 2.1.96 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் நடந்தது.

அனைத்து அமைச்சர்களும் கூட்டத்தில் பங்கேற்றனர். தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், பொதுப் பணித்துறைச் செயலாளர் திரு பாஸ்கரதாஸ், விவசாயத்துறைச் செயலாளர் ஆர்.சி. பாண்டா, தமிழகக் காவிரி ஆலோசனைக் குழுத் தலைவர் திருமலை, காவிரி தொழில்நுட்பப் பிரிவுத் தலைவர் திரு மோகன கிருஷ்ணன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

உச்சநீதி மன்றம் 28.12.1995 அன்று பிறப்பித்த ஆணையின் அடிப்படையில் கர்நாடக அணைகளிலிருந்து தமிழகத்திற்குக் காவிரி நீர் வழங்குவது குறித்து மாண்புமிகு பாரதப் பிரதமரால் எடுக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சருக்கு 1.1.1996 அன்று எழுதப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த முடிவுகள் குறித்து விவாதிப்பதற்காக மாண்புமிகு மத்திய நலத்துறை இணை அமைச்சர், தமிழ்நாட்டின் அமைச்சர்கள், தமிழகச் சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அனைத்துக் கட்சித்தலைவர்கள், சமூக நலச் அமைப்புகளின் தலைவர்கள், விவசாய நல சங்கங்களின் தலைவர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் மேட்டூர் அணைக்கு வெறும் 6 டி.எம்.சி. அடி நீர் வந்து சேரும் வண்ணம் நீரைவிட வேண்டும் என்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அறிவித்த முடிவு மற்றும் அதன் தொடர்புடைய இதர விஷயங்கள் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டு, கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன:

மாண்புமிகு பாரதப் பிரதமர் 1.1.1996 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு எழுதியுள்ள கடித்தில் மாண்புமிகு பார்தப் பிரதமர் அவர்களால் எடுக்கப்பட்டு, தெரிவிக்கப்பட்டுள்ள முடிவில் கீழ்க்கண்ட குறைபாடுகள் உள்ளன:

காவிரி நதி நீர் நடுவர் மன்ற தீர்ப்பை அமல்படுத்துவத்றகான நடவடிக்கைகளை எடுக்க மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு உள்ள அதிகாரத்தைக் குறைத்து மதிப்பிடாத அதே வேளையில், நடுவர் மன்றம் தெரியப்படுத்தியுள்ள ஆணைகளில் பிரதமருக்கு வழக்கு நடத்தி தீர்வு காணுகின்ற அதிகாரமும் இல்லை. எனவே. காவிரி நதி நீர் நடுவர் மன்றத்தின் ஆணைகளுக்கு மாறுபட்ட தன்மை உள்ள முடிவுகளை மாண்புமிகு பிரதமர் எடுத்திருக்கக்கூடாது.

காவிரி நதி நீர் நடுவர் மன்றம் தெரிவித்த 11 டி.எம்.சி. அடி என்ற தண்ணீரின் கொள்ள்ளவை 6 டி.எம்.சி. தண்ணீர் அடி என மாற்றியது, ஒரு நாளைக்கு 1 டி.எம்.சி. தண்ணீர் விடலாம் எனத் தீர்மானித்திருப்பது, காவிரி நதி நீர் நடுவர் மன்றம் ஏற்கெனவே விரிவாக ஆராய்ந்து முடிவு செய்திருந்த தொழில்நுட்ப அம்சங்களைப் பரிசீலிக்கப் புதிதாக ஒரு நிபுணர் குழுவை அமைத்திருப்பது போன்ற பிரதமரின் முடிவுகள், உச்சநீதி மன்றம் பிறப்பித்த ஆணைகளுக்கு மாறுபட்டதாக உள்ளது. காவிரி நதி நீர் நடுவர் மன்றம் பிறப்பித்த ஆணைகளில் உச்சநீதி மன்றம் எவ்வித மாறுதலையும் செய்ய கருதவில்லை. அதற்கு மாறாக நடுவர் நீதி மன்றம் தீர்ப்பளித்த 11 டி.எம்.சி. அடி நீரை உடனடியாக, கர்நாடக அரசு திறந்து விடுவதற்குத் தகுந்த நடைமுறைகளைக் கண்டறிந்து, செயல்படுத்தத்தான் உச்சநீதி மன்றம் ஆணை பிறப்பித்திருந்தது. மேலும், கர்நாடக அரசு அளித்த புள்ளி விவரங்களின் அடிப்படையில்தான், காவிரி நதி நீர் நடுவர் மன்றம், கர்நாடக அரசு 11 டி.எம்.சி. அடி அளவு நீரைத் தமிழகத்திற்கு வழங்க வேண்டுமென ஏற்கெனவே தீர்ப்பளித்திருந்தது.

மாண்புமிகு பாரதப் பிரதமரின் முடிவு காவிரி நதி நீர் நடுவர் முன்றத்தின் தீர்ப்பின் சாராம்சத்திற்கும் உச்சநீதி மன்றத்தின் ஆணைக்கும் மாறுபட்டதாக இருகின்றபோதிலும் தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் கூடியுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்கள் உடனடியாக 6 டி.எம்.சி. அடி தண்ணீரை, கர்நாடக அரசு தமிழகத்திற்கு வழங்க வேண்டும் என்ற மாண்புமிகு பிரதமரின் முடிவை, தங்களது எதிர்ப்பையும், அதிருப்பதியையும் பதிவு செய்து மாண்புமிகு பிரதமர் காவிரி நதி நீர் நடுவர் மன்றத்தின் தீர்ப்பின்படி மீதமுள்ள 5 டி.எம்.சி. அடி நீரைத் தாமதமின்றித் தொடர்ச்சியாகக் காவிரி நதி பாயும் நிலங்களுக்குக் கிடைக்குமாறு கர்நாடக அரசு வழங்குவதை உறுதிப்படுத்துவார் என்ற நம்பிக்கையில் ஏற்றுக் கொள்கிறது.

இந்த நீரின் அளவுடன் 25.6.1991 அன்றைய காவிரி நதி நீர் நடுவர் மன்ற இடைக்கால ஆணையில் கூறப்பட்டுள்ளவாறு, 1995-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு வழங்க வேண்டிய நீரையும் மற்றும் 1996-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு வழங்க வேண்டிய நீரையும் சேர்த்துத் தமிழகத்திற்கு வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றது.

இங்கு கூடியுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் மற்றவர்களும் வெளிப்படுத்திய உணர்வுகளையும் இங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் மாண்புமிகு பிரதமருக்கு உடனடியாக தெரிவிக்க வேண்டும் என்றும் தமிழகத்திற்குக் குறிப்பாக காவிரிப் படுகை விவசாயிகளுக்கு நீதி வழங்க வேண்டுமெனக் கோரி மாண்புமிகு பிரதமருக்கு, மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் கடிதம் எழுத வேண்டும் என்றும் இந்தக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

காவிரி நதி நீர் நடுவர் மன்றத்தின் 19.12.1995-ஆம் தேதியிட்ட ஆணைக்கும் உச்சநீதி மன்றம் 28.12.1995 அன்று பிறப்பித்த ஆணைக்கும் பிறகு நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி தமிழ்நாடு அரசு சட்ட ஆலோசனைகளைப் பெற்று காவிரி நதி நீர் நடுவர் மன்றம் மற்றும் உச்சநீதி மன்றம் ஆகியவைகளிடம் சரியான நேரத்தில் சமர்ப்பிக்கும்.

மேலும், தமிழ்நாடு அரசு காவிரிப் படுகை விவசாயிகள், காவிரி நதி நீர்ப் பங்கீட்டு விஷயத்தில் நீதி பெறுவதற்கு

தூய்மையுடையவன் கடவுளை மிக நெருங்கியவனாகிறான்.

—சுவாமி விவேகானந்தர்

அனைத்து உறுதியான நடவடிக்கைகளையும் சரியான நேரத்தில் தொடர்ந்து எடுக்க வேண்டும் என்றும் இந்தக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சருக்கு 1.1.1996-ஆம் தேதியிட்ட கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்ட மாண்புமிகு பிரதமரின் முடிவிற்கு ஏற்ப கர்நாடக அரசும் ஏற்று 6 டி.எம்.சி. அடி நீரையும், 1996-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குரிய 2.51 டி.எம்.சி. அடி நீரையும் ஆக மொத்தம் 8.51 டி.எம்.சி. அடி நீரை மேட்டூர் அணைக்கு உடனடியாகக் கொண்டு வந்து சேர்ப்பதற்கான தகுந்த உறுதியான நடவடிக்கைகளை விரைவாக மேலும் எந்தத் தாமதமும் இன்றி எடுக்க மாண்புமிகு பிரதமரை இந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

மாண்புமிகு முதல்வருக்கு ஆதிதிராவிடர் நல உயர்மட்டக் குழு உறுப்பினர்கள் பாராட்டு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையில் மாநில ஆதிதிராவிடர் நல உயர்மட்டக் குழுவின் State Advisory Committee for the Welfare of Adi Dravidars முதல் கூட்டம் டிசம்பர்த் திங்கள் முதல் நாள் அன்று சென்னை தலைமைச் செயலகத்திலன் புதிய கட்டடத்தின் 10வது மாடியில் அமைந்துள்ள மாநாட்டு அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

இக்கூட்டம் காலை 10 மணிக்குத் தொடங்கி மதியம் 1.30 மணி வரை 3 மணி 30 நிமிட நேரம் நடைபெற்றது.

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., கூட்டத்திற்கு வந்திருந்தவர்களை வரவேற்றுப் பேசினார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையுரையாற்றினார்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட மாநில உயர்மட்டக் ஆதிதிராவிடர் நலக் குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் தனத்தனியே வருமாறு அழைத்து அவர்களது ஆலோசனைகளையும், கருத்துக்களையும் தெரிவிக்குமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார். அதன்படி, இந்தக் குழுவினர் அனைவரும் தங்களது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் தெரிவித்தார்கள்.

பலர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினப் பெருமக்களின் நல்வாழ்விற்காக எடுத்து வருகின்ற நடவடிக்கைகளுக்காகத் தங்களது பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

தமிழக அரசு செயல்படுத்தி வருகின்ற திட்டங்களையும், செயல்பாடுகளையும் குறித்துத் தங்களது கருத்துக்களைத் தெரிவித்தார்கள். பின்னர் கூட்ட நிறைவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல்வாழ்வுத்துறைச் செயலாளர் திரு பி. நடேசன் அவர்கள் நன்றி நவின்றார்.

தமிழ்நாட்டுக்கு 6 டி.எம்.சி. தண்ணீர்

கர்நாடக அரசுக்கு மாண்புமிகு பிரதமர் ஆணை!

காவிரி நீர்ப் பிரச்சினையில் மாண்புமிகு பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்கள் தனது இறுதி முடிவை 1-1-96 அன்று அறிவித்தார். தமிழ்நாட்டில் வாடும் பயிர்களைக் காப்பாற்ற காவிரியில் 6 டி.எம்.சி. தண்ணீரைக் கர்நாடக அரசு உடனடியாகத் திறந்துவிட வேண்டும் என்று மாண்புமிகு பிரதமர் உத்தரவிட்டிருக்கிறார்.

காவிரிப் பாசனப் பகுதியில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்கள் போதிய தண்ணீர் இல்லாததால் கருகும் நிலையில் உள்ளன.

வாடும் பயிர்களைக் காப்பாற்ற காவிரியில் 11 டி.எம்.சி. தண்ணீரைக் கர்நாடக அரசு திறந்துவிட வேண்டும் என்று நடுவர் மன்றம் உத்தரவிட்டது.

அந்த உத்தரவை ஏற்க கர்நாடக அரசு மறுத்ததால் உச்சநீதி மன்றத்தில் தமிழக அரசு மனுச் செய்தது. இந்த மனுவை விசாரித்த உச்சநீதி மன்ற நீதிபதிகள் இந்தப் பிரச்சினையில் 'மாண்புமிகு பிரதமர் அவர்கள் தலையிட்டு இரு மாநில முதலமைச்சர்களுடனும் பேசித் தீர்வு காண வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

அதன்படி தமிழ்நாடு, கர்நாடக மாநில முதலமைச்சர்களின் கூட்டத்தை மாண்புமிகு பிரதமர் அவர்கள் கூட்டி ஆலோசனை நடத்தினார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 31.12.95 அன்று முன்தினம் அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் சென்று இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார். 2 நாள் இந்த ஆலோசனை நடந்தது.

முதலமைச்சர்களுடன் ஆலோசனை நடத்திய மாண்புமிகு பிரதமர், மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் அடுத்தக்கட்ட நடவடிக்கை பற்றி ஆலோசனை நடத்தினார்.

பின்னர் காவிரிப் பிரச்சினை பற்றி இறுதி முடிவு 1-1-96 அன்று இரவு வெளியிடப் பட்டது. அதில் 3 அம்சத் திட்டம் கூறப்பட்டது. அதன் விவரம் வருமாறு:

6 டி.எம்.சி. தண்ணீர்

1. தமிழ்நாட்டில் வாடியப் பயிர்களைக் காப்பாற்றுவதற்காக, கர்நாடக அரசு 6 டி.எம்.சி. தண்ணீரை உடனடியாகத் திறந்துவிட வேண்டும். ஒரு நாளைக்கு 1 டி.எம்.சி. வீதம் தண்ணீர் திறந்து விடப்பட வேண்டும்.

2. இரு மாநிலங்களிலும் உள்ள அணைகளின் தண்ணீர் அளவு, பயிர்களின் நிலைமை பற்றி ஆய்வு நடத்த ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர் ஒய்.கே. அலெக், ரூர்க்கி பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் திரு பரத்சிங், மத்தியப் பிரதேச மாநில முன்னாள் தலைமை என்ஜினியர் கேப்ரிகான் ஆகிய 3 பேர் கொண்ட நிபுணர் குழு அமைக்கப்படுகிறது.

இந்தக் குழு பாதிக்கப்பட்ட மாநிலங்களில் அணைகளில் உள்ள தண்ணீர் அளவு, பயிர்களின் நிலைமை ஆகியவற்றை நேரில் பார்த்து வருகிற ஜனவரி மாதம் 10-ஆம் தேதிக்குள் அறிக்கை தாக்கல் செய்யும்.

3. பிப்ரவரி மாதத்தில் அனைத்து முதலமைச்சர்கள் கொண்ட நீர்வள மேம்பாட்டுக் குழுக் கூட்டம் நடைபெறும். இந்தக் கூட்டத்தில் மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினைப் பற்றிப் பரிசீலிக்கப்படும்.

இதுபற்றி இரு முதலமைச்சர்களுக்கும் தகவல் கொடுக்கப் பட்டிருப்பதாகவும் மத்திய அரசு அறிவித்தது.

நடுவர் மன்றத்தின் முன்பு விசாரணைக்கு வந்து மிக முக்கியமான கட்டத்தை அடைந்துள்ள வழக்குகளை இந்த வழிகாட்டி விதிகள் எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது.

பன் மாநிலத் தண்ணீர் தாவா ஒன்றை நடுவர் மன்றத்திற்கு அனுப்பப்படும் சூழ்நிலையிலும் அந்த ஒரு அமைப்பு மட்டும்தான் இத்தகைய தாவாக்களை விசாரிக்கும் தகுதியும் திறமையும் வாய்ந்த உயர் அமைப்பாக இருக்கும் சூழ்நிலையிலும் இந்த வழக்குக்குத் தொடர்புடைய ஒரு மாநிலம் அதன் நடவடிக்கைகளில் பங்கு கொள்ளாமல் இருப்பதோ அல்லது அத்தகைய ஒரு நிர்வாக ஆணையோ அல்லது ஒரு தீர்மானமோ மிக உயர்ந்த நீதிமன்ற அமைப்பான நடுவர் மன்றத்தைக் கட்டுப்படுத்தாது. தற்போதுள்ள நீதிமன்ற நடவடிக்கைகள் பாரபட்சமில்லாததோடு, ஒரு குறிப்பிட்ட இலக்குடனும் செயல்பட்டு வருகின்றது. இத்தகைய சூழ்நிலைகளில் நீர்ப் பங்கீட்டுத் தொடர்பான வழிகாட்டி விதிகளை நாம் முழுமையாக உருவாக்குவதற்கு முன்னதாகவே, நீர் தாவாப் பிரச்சினைக்குட்பட்ட ஒரு மாநிலம் இந்த நடுவர் மன்றத்தின் நடவடிக்கைகளில் பங்கேற்பதில்லை என்று கூறுவது சற்றும் இயல்பானதாக இல்லை.

—இவ்வாறு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

அடுத்த இதழில்...

- ☆ வேலூரில் நடைபெற்ற தமிழ்நாடு சத்துணவுப் பணியாளர்கள் மாநில மாநாடு
- ☆ அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் பணிகள் ஆய்வு: மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட்டிய கூட்டம்
- ☆ இருதய நோய் மருத்துவமனை - திறப்பு விழா
- ☆ அம்பேத்கர் மக்கள் விடுதலை முன்னணி மாநில மாநாடு
- ☆ இந்தியக் குடியரசுத் தலைவரின் பதக்கம் வழங்கும் விழா
- ☆ 47-வது குடியரசுத் தினவிழா
- ☆ திருவள்ளுவர் திருநாள்
- ☆ இராமநாதபுரம் மாவட்டத்தில் - வறட்சி மாவட்டங்களின் ஆட்சித்தலைவர்கள் கூட்டம்
- ☆ கரூர் தீரன் சின்னமலை கவுண்டர் மாவட்டத்தில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழா
- ☆ வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் - பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா மற்றும் அரசுப் பொருட்காட்சி விழா
- ☆ காமராசர் மாவட்டத்தில் காயிதேமில்லத் நூற்றாண்டு விழா
- ☆ மதுரை மாவட்டத்தில் பல்துறை பணி விளக்க முகாம்
- ☆ சேலம் மாவட்டத்தில் காயிதேமில்லத் நூற்றாண்டு விழா
- ☆ ஈரோட்டில் பல்துறை பணி விளக்க முகாம்

பர்கூர் தொகுதியில் மாண்புமிகு முதல்வர்: (16-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொடமாண்டப்பட்டியில் 3 தொகுப்பு வீடுகளையும், சாணிப்பட்டி கோடிப்பதி, அத்திப்பள்ளம் ஆகிய இடங்களில் நான்கரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட 3 தொடக்கப் பள்ளிக் கட்டடங்களையும், முருக்கம்பட்டி, ஒட்டப்பட்டி, ஓடிப்பதி மற்றும் சாணிப்பட்டி ஆகிய இடங்களில் 3 இலட்சம் செலவில் கட்டப்பட்ட சத்துணவுக்கூட கட்டடங்களையும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார். பின்னர், கொடமாண்டப்பட்டியில் இரண்டேகால் இலட்சம்ரூபாய் செலவில் ஆதிதிராவிடர்களுக்கு 10 தொகுப்பு வீடுகள், அத்திப்பள்ளத்தில் 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் 8 தொகுப்பு வீடுகள் ஆகியவற்றிற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

ஜோகிப்பட்டி

கடந்த நான்கரை ஆண்டு காலத்தில் அந்தேரிப்பட்டி ஊராட்சிப் பகுதியில் பதினான்கரை இலட்சம் ரூபாய் செலவில் 3 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளும், 10 ஆழ்குழாய்க் கைப்பம்புகளும், 77 ஆயிரம் ரூபாய் செலவில் சத்துணவுக் கூடக் கட்டடமும், 65 ஆயிரம் ரூபாய் மதிப்பில் 3 தொகுப்பு வீடுகளும், ஒரு இலட்சம் ரூபாய் செலவில் சமையலறைக் கட்டடமும், ஆக கிட்டத்தட்ட 30 இலட்சம் ரூபாய் மதிப்பில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 5 இலட்சம் ரூபாய் மதிப்பில் 94 பேருக்குக் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஜோகிப்பட்டி கிராமத்தில் 5 இலட்சம் ரூபாய் மதிப்பில் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியும், இரண்டேகால் இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட தொடக்கப்பள்ளிக் கட்டடத்தையும், 67 ஆயிரம் ரூபாய் செலவில் சத்துணவுக் கூடக் கட்டடத்தையும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்.

குன்னத்தூர்

குன்னத்தூர் பகுதிகளில் கடந்த நான்கரை ஆண்டுகளில் ஒரு கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக 8 இலட்சம் ரூபாய் செலவில் 2 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளும், 2 இலட்சம் ரூபாய் செலவில் ஆழ்குழாய்க் கைப்பம்புகளும் மற்றும் 88 இலட்சம் ரூபாய் செலவில் சாலை மேம்பாட்டுப் பணிகளும் செய்யப்பட்டுள்ளன. இதுதவிர ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 84 பேருக்கு நாலேகால் இலட்சம் ரூபாய் கடனுதவிகளும், 27 குடும்பங்களுக்கு வீடு கட்டுவதற்காக 3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் கூட்டுறவுக் கடன் வசதியும் செய்யப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதல்வர் நிகழ்ச்சி நாளன்று 12 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியையும், இரண்டேகால் இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட மேல்நிலைப் பள்ளிக் கட்டடத்தையும், 20 தொகுப்பு வீடுகளையும், மற்றும் ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட பள்ளிக் கட்டடத்தையும், திறந்து வைத்தார். மேலும், முத்தா கவுண்டனூர், காமாட்சிப்பட்டி, ஆதாலியூர், கே.பாப்பாரப்பட்டி, ஆகிய ஊர்களில் இலட்சம் ரூபாய் செலவில ஜவகர் பள்ளிக் கட்டடங்களையும், குமாரப்பட்டியில் 80 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட சத்துணவுக் கட்டடத்தையும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.

சாமல்பட்டி

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சாமல்பட்டிக்கு வருகை தந்து, கிட்டத்தட்ட 24 இலட்சம் ரூபாய் மதிப்பில் புதிய திட்டங்கள் தொடங்கியும், அடிக்கல் நாட்டியும் சிறப்பித்தார். அவற்றுள் இரண்டேகால் இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட மேல்நிலைப் பள்ளிக் கட்டடம், ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட தொடக்கப்பள்ளிக் கட்டடம், 6 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஆரம்பச் சுதாதார நிலையக் கட்டடம், 2 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட பணியாளர் குடியிருப்புக் கட்டடம், 60

ஆலோசனை

முன்னதாக, 1.1.96 அன்று காலை மாண்புமிகு பிரதமர் திரு பி.வி. நரசிம்ம ராவ் அவர்களை, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மீண்டும் சந்தித்தார். காலை 10.30 மணி முதல் 12 மணி வரை $1^1/_2$ மணி நேரம் இந்தச் சந்திப்பு நடந்தது.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது மாண்புமிகு மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு வி.சி. சுக்லா, மத்திய அரசு நீர்வளத்துறைச் செயலாளர் திரு எம்.எஸ்.ரெட்டி, இணை ஆணையர் திரு கே.சி. அகர்வால், தமிழகக் காவிரி ஆலோசனைக் குழுத் தலைவர் திரு ஆர். திருமலை, காவிரி தொழில்நுட்பப் பிரிவுத் தலைவர் திரு ஏ. மோகன கிருஷ்ணன் ஆகியோர் உடன் இருந்தனர்.

பேச்சுவார்த்தையின் இறுதியில் மாண்புமிகு பிரதமர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடம், "கர்நாடக அணைக் கட்டுகளிலிருந்து காவிரித் தண்ணீர் திறந்து விடுவது குறித்து ஒரு முடிவு இரவுக்குள் அறிவிக்கப்படும்" என்று தெரிவித்தார். இந்த முடிவு எடுக்கப்படும் வரை டில்லியில் தங்கி இருக்க வேண்டுமா? என்று முதல்வர் குறிப்பிட்டுக் கேட்டதற்கு, முதல்வர் தங்கியிருக்கத் தேவை யில்லை முடிவு சென்னையில் முதல்வருக்குத் தெரிவிக்கப் படும்" என்று மாண்புமிகு பிரதமர் அவர்கள் தெரிவித்தார்.

பின்பு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு தமிழக அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களுடன் சென்னை திரும்பினார்.

யாருக்காக எழுதினார்?

திருக்குறள் 2 வரிகளில் தான் எழுதப்பட்டிருக்கிறது. திருவள்ளுவர் யாருக்காக எழுதினார்? தமிழர்க்குப் பயன்படுவதற்காக எழுதினார். தமிழ் வளர்ச்சிக்குப் பயன்படுவதற்காக, தன் குடும்பத்திற்காக அல்ல. தனக்காக அல்ல! 2000 ஆண்டுக்குப் பிறகு தமிழகத்தில் நமக்குப் பாராட்டுக் கிடைக்கும் என்பதற்காக அவர் எழுதவில்லை. அவர் தனது கடமையைச் செய்தார். அதன் பலன் இன்று தமிழ் மக்களுக்குக் கிடைத் திருக்கிறது.

—டாக்டர் எம்.ஜி.ஆர்.

நடுவர் மன்றத்தின் தீர்ப்பினைப் புறக்கணிப்பது துரதிருஷ்டவசமானது!

மாண்புமிகு முதல்வர் அறிக்கை

கர்நாடக மாநில அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தேசிய நீர்ப் பங்கீட்டு வழிகாட்டி விதிகள் உருவாக்கப்படும்வரை கர்நாடக மாநிலம் காவிரி நதி நீர் நடுவர் மன்றத்தின் நடவடிக்கைகளில் பங்கேற்கக் கூடாது என்று ஒருமனதாகத் தீர்மானித்துள்ளது என்பது எனது கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டுள்ளது. தேசிய நீர் வாரியத்தால் ஏற்கெனவே தயாரித்து விவாதிக்கப்பட்ட பன் மாநில நீர்ப் பங்கீட்டு முறை குறித்த வழிகாட்டு விதிமுறைகள் 1996-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதலமைச்சர்களை உறுப்பினர்களாகக் கொண்ட நீர்வளக் கவுன்சில் கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ளதை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தனது கடிதத்தில் குறித்துக் காட்டியதன் அடிப் படையில் இந்தத் தீர்மானம் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

இத்தகையத் தீர்மானம் துரதிருஷ்டவசமானது என்று கருதுகிறேன். ஏனென்றால் நடுவர் மன்றம் என்பது இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழும் பன் மாநிலத் தண்ணீர் தாவாச் சட்டத்தின் கீழும் கிடைக்கப் பெறுகின்ற மிக உயர்ந்த மற்றும் தகுதி வாய்ந்த நீதிமன்ற அமைப்பாகும்.

முன்னேற்றம்

காவிரி நதி நீர் நடுவர் மன்றம் ஏற்கெனவே புள்ளி விவரங்களைச் சேகரிப்பதிலும், அவற்றை முறைப்படுத்தி வைப்பதிலும் ஒரு முன்னேற் றத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழகத்தின் தரப்பில் விசாரிக்க வேண்டிய அனைத்து சாட்சியங் களும் ஏற்கெனவே விசாரித்து முடிக்கப்பட்டு விட்டன. நடுவர் மன்றத்தின் நடவடிக்கைகள் மிக உச்சக் கட்டத்தை அடைந்துள்ள இந்தச் சூழ்நிலையில் அதனு டைய நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்துவது உண்மையில் எவருக்கும் உதவி கரமாக இருக்காது.

தேசிய நீர்க் கொள்கை

தேசிய நீர்க் கொள்கைக்கான வழிகாட்டி விதிகள் விவாத நிலையிலேயே இன்னும் இருக் கின்றன. இந்தக் கொள்கை குறித்து பல மாநிலங்கள் பல்வேறு விதமான கருத்துக் களைக் கொண்டுள்ளன. இவற்றின் மீது ஒரு ஒட்டு மொத்தக் கருத்து உருவாகும் வரையிலும் ஒரு இறுதித் தீர்மானம் நிறைவேற்றப்படும் வரையிலும் தற்போது நிலவு கின்ற சூழ்நிலைக்கு இந்த வரைவு விதிமுறைகளுக்கு எந்தப் பொருத்தமும் இருக்காது. மேலும் அவ்வாறு நாம் மேற் கொள்கின்ற தீர்மானம் எதிர்காலத்தில் எழுகின்ற தாவாக்களுக்கு வேண்டு மானால் பொருந்துமே தவிர

ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட கால்நடை துணை மையக் கட்டடம், நாலரை இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட ஆரம்பப் பள்ளிக் கட்டடங்கள், 2 மதிய சத்துணவுக் கூட கட்டடங்கள் ஆகியவற்றைத் திறந்து வைத்தும் மற்றும் குள்ளம்பட்டிக் கிராமத்தில் 1.5 இலட்சம் ரூபாய் மதிப்பில் ஒரு புதிய தொடக்கப் பள்ளிக் கட்டடம், 15 தொகுப்பு வீடுகளும் கட்ட அடிக்கல் நாட்டினார்.

இப்பகுதியில் கடந்த நான்கரை ஆண்டுக் கால கட்டங்களில் கிட்டத்தட்ட 45 இலட்சம் ரூபாய் செலவில் பல வளர்ச்சிப் பணிகள் செயல் படுத்தப்பட்டுள்ளன.

வெங்கடதாம்பட்டி

ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வெங்கடதாம்பட்டி ஊராட்சிப் பகுதிகளில் கடந்த நான்கரை ஆண்டுகளில் கிட்டத்தட்ட 27 இலட்சம் ரூபாய் செலவில் பல வளர்ச்சித் திட்டங்கள் செய்யப் பட்டுள்ளன. அதில் 7 இலட்சம் ரூபாய் செலவில் 2 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளும், மூன்றரை இலட்சம் ரூபாய் செலவில் 8 சிறு பாலங்களும், 1.2 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு பள்ளிக் கட்டடமும் 4 இலட்சம் ரூபாய் செலவில் 2 சமையலறைக் கட்டடங்களும், 16 தொகுப்பு வீடுகளும் அடங்கும்.

நிகழ்ச்சி நாளன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1.1 இலட்சம் ரூபாய் செலவில் 5 தொகுப்பு வீடுகளும், ஊத்தங் கரை மருத்துவமனையில் 6 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு Sterilisationபிரிவையும், துரிஞ்சிப் பட்டியில் ஒன்றரை இலட்சம் ரூபாய் செலவில் தொடக்கப் பள்ளிக் கட்டடத்தையும், சோனக்காபட்டியில் ஒரு சத்துணவுக்கூடத்தையும், திறந்து வைத்ததோடு வெங்கடதாம் பட்டியில் 1.5 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு புதிய ஆரம்பப் பள்ளிக் கட்டடம், ஊத்தங் கரையில் 14.5 இலட்சம் ரூபாய் செலவில் துணைக் கருவூலக் கட்டடம், கொல்லநாயக்கனூரில் 1.1 இலட்சம் ரூபாய் செலவில் 5 தொகுப்பு வீடுகள் இது தவிர 75 இலட்சம் ரூபாய் செலவில் ஊத்தங்கரையில் ஒரு நீதிமன்றக் கட்டடம் கட்டவும் அடிக்கல் நாட்டினார்.



ஓலைப்பட்டி

கடந்த நான்கரை ஆண்டு களில் சாலமரத்துப்பட்டி ஊராட்சிப் பகுதிகளில் 32 இலட்சம் ரூபாய் செலவில் பல வளர்ச்சித் திட்டங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணையின் பேரில் செயல் படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக, 10 இலட்சம் ரூபாய் செலவில் 3 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளும், 15 தொகுப்பு வீடுகளும், 5.5 இலட்சம் ரூபாய் செலவில் சாலை மேம்பாட்டுப் பணிகளும் அடங்கும். 9 பேருக்குத் திருமண உதவித் தொகையும், 52 பேருக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடனுதவியும் வழங்கப்பட்டுள்ளன.

சாலமரத்துப்பட்டி தோளம்பதி, தூளக்கரை ஆகிய இடங்களில் 8.25 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட 38 தொகுப்பு வீடுகளையும், தூளக்கரை, காட்டுப்பட்டி, கருவானூர், வீராட்சிக்குப்பம், குண்டேபள்ளி ஆகிய இடங்களில் கட்டப்பட்ட 5 ஆரம்பப் பள்ளிக் கட்டடங் களையும், அரங்கனூர், செங்கம் பட்டி, அம்மன்கோயில்பதி ஆகிய 3 இடங்களில் 2 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட 3 சத்துணவுக் கட்டடங்களையும் ஆனந்தூரில் 2.5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட சமுதாயக் கூடத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 12.1.96 அன்று திறந்து வைத்தார். மேலும், தூளக்கரையில் 1 இலட்சம் ரூபாய் செலவில் பொதுவிநியோகத் திட்ட அங்காடிக் கட்டடம், ஆனந்தூரில் 1.5 இலட்சம் ரூபாய் செலவில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், 1.5 இலட்சம் ரூபாய் செலவில் ஆரம்பப் பள்ளிக் கட்டடம், அரங்கனூர் கிராமத்தில் 1.5 இலட்சம் ரூபாய் செலவில் இன்னொரு ஆரம்பப் பள்ளிக் கட்டடம், அம்மன் கோயில்பதியில் 3 தொகுப்பு வீடுகள் முதலியவற்றிற்கு அடிக்கல் நாட்டினார். மேலும், ஆனந்தூர் பொதுமக்கள் கோரிக்கையின் பேரில் விரைவில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் அவ்வூரில் அமைக்கப் படும் என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்.

பர்கூர் சட்டமன்றத் தொகுதி யில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சென்ற இடங்களில் எல்லாம் பொதுமக்கள் திரண்டு வந்து, வரவேற்புக் கொடுத்த தோடு, ஆங்காங்கே பெண்கள் ஆரத்தி எடுத்தும், அவ்வூர் வழக்கப்படி கிராமியப் பாடல்கள் பாடியும், முதல்வர் அவர்களை வரவேற்றது, குறிப்பிடத் தக்கதாகும்.

உண்மையிலேயே தமிழ் நாட்டில் ஒரு பிற்பட்டத் தொகுதியாக இருந்த பர்கூர் இன்று மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்களைத் தேர்ந்தெடுத்துச் சட்டமன்ற உறுப்பினர் ஆக்கியதால் இன்று ஒரு முற்பட்ட தொகுதியாகத் திகழ்கிறது என்றால் அதில் சிறிதளவும் ஐயமில்லை.

போச்சம்பள்ளியில் புதிய திட்டங்களைத் தொடங்கி வைத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை

இரண்டு நாட்களாக. பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு இடங்களுக்குச் சென்று ஏற்கெனவே முடித்து வைக்கப்பட்ட திட்டங்களைத் தொடங்கி வைத்தும்; கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களைத் திறந்து வைத்தும் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் வந்துள்ளேன். நேற்று, அதாவது **11.1.1996** அன்று, **16** இடங்களுக்குச் சென்று, புதிய திட்டங்களைத் தொடங்கி வைத்த பின்பு, மாலை பர்கூரில் நடைபெற்ற, எழுச்சி மிக்க ஒரு கூட்டத்தில், 17-வது நிகழ்ச்சியாக நான் கலந்து கொண்டு உரையாற்றினேன். இன்று காலையிலிருந்து, இந்த விழாவிற்கு வரும் வரை, **14** இடங்களுக்குச் சென்று, இத்தகைய தொடக்க விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, இப்போது **15** வது நிகழ்ச்சியாக; இந்த விழாவில் கலந்து கொண்டுள்ளேன். ஆக மொத்தம், **32** இடங்களுக்கு இதுவரை சென்று. திட்டங்களைத் தொடக்கி வைத்ததோடு, பர்கூரில், பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குப்பட்ட திட்டங்களையும் இம்மாவட்டத்தின் இதரப் பகுதிகளுக்கான திட்டங்களையும் தொடக்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் வந்துள்ளேன்.

இறுதிக் கட்டமாக, இங்கே போச்சம்பள்ளியில், **32**-வது நிகழ்ச்சியாக, இந்த எழுச்சிமிகு விழாவில் கலந்து கொண்டு. பெருந்திரளாகக் குழுமியுள்ள உங்கள் அனைவரையும் நேரில் காண்பதில், நான் பெருமகிழ்ச்சியும் பேருவகையும் அடைகின்றேன்.

தர்மபுரி மாவட்டம் விவசாயத் துறையிலும் தொழில் துறையிலும், பல காலமாகப் பின் தங்கிய ஒரு மாவட்டமாக இருந்து வந்தது. இந்த நிலையை மாற்றி அமைத்து, இம்மாவட்டத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகுக்க வேண்டும் என்று, நான் திட்டமிட்டேன், எனது அவாவினைப் பூர்த்தி செய்யும் வகையில், கடந்த நான்கரை ஆண்டுக் கால கட்டத்தில், உங்கள் அன்பு சகோதரியின் ஆட்சியில், இம்மாவட்டத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு. பல்வேறு சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப் பட்டுள்ளன.

செயல் திறன் மிக்க இந்த அரசு நல்ல திட்டங்களை, முனைப்புடன் செயல்படுத்தியதால், இந்த மாவட்டம் இன்று ஒரு புதிய பொலிவினைப் பெற்றுள்ளது என்றால் அது மிகையாகாது.

பிற்பட்ட மாவட்டமான அதுவும் குறிப்பாக மிகவும் பின்தங்கியுள்ள வளர்ச்சி அடையாத பர்கூர் சட்டமன்றத் தொகுதியைத் தேர்ந்தெடுத்து, நான் பொதுத் தேர்தலில் போட்டியிட்டதற்கு. இப்பகுதியில் உள்ள பிற்பட்ட தன்மையை நீக்கி, ஒரு நிரந்தர முன்னேற்றத்தை உருவாக்கிக் காட்ட வேண்டும் என்ற தணியாத உந்துதலே காரணம் ஆகும் கடந்த நான்கரை ஆண்டுகளுக்கும் மேலாக உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில், தொழில் துறையில் தர்மபுரி மாவட்டம் ஒரு புதிய ஏற்றத்தைக் கண்டுள்ளது.

புதிய தொழிற்சாலைகள்

கடந்த நான்கரை ஆண்டுக் கால கட்டத்தில் • 1,659 கோடி ரூபாய் மூலதனத்துடன் **7,235** தொழிற்சாலைகள். இந்த மாவட்டத்தில் உருவாகியுள்ளன என்பது ஒரு சாதாரண நிகழ்ச்சி அல்ல; மாறாக இது ஒரு மாபெரும் சாதனை ஆகும்.

கல்லாமையும் இல்லாமையும் ஒரு நாட்டிலிருந்து துரத்தி அடிக்கப்பட்டால்தான். அந்த நாடு எல்லா வகையிலும் வளம் பெறும்; ஏற்றம் பெறும் எனவே, தான். பிற்படுத்தப்பட்ட நிலைமையை மாற்றி அமைக்க



பொருளாதார மேம்பர்ட்டிற்கு வழி வகுக்கும் அதே நேரத்தில் இப்பகுதி வாழ் மக்கள், கல்வி அறிவைப் பெற்றுத் தங்கள் வாழ்க்கையில் மேன்மை அடைய புதிய கல்வி நிலையங்களையும், கல்விக் கூடங்களையும் ஏற்படுத்த நான் நடவடிக்கைகளை மேற்கொண்டேன்.

எவரும் காட்டாத ஈடுபாடு

ஒட்டுமொத்த சமுதாய வளர்ச்சியோடு தனி நபர் பொருளாதார வளர்ச்சியையும் ஏற்படுத்துவதற்கு. எங்கள் ஆட்சிக் காலத்தில் அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்குவதில், ஒரு புதிய முனைப்பை ஏற்படுத்தினோம். வேறு எந்த ஒரு காலகட்டத்திலும் மனுதாரர்களின் மனுக்கள், இத்தனை விரைவாகப் பரிசீலிக்கப்பட்டு நலத்திட்ட உதவிகள் ஆயிரக் கணக்கானோருக்கு வழங்கப் பட்டதில்லை. குறிப்பாக வறுமை ஒழிப்புத் திட்டங்களை விரிவு படுத்தி பல்லாயிரக் கணக்கானோருக்கு அரசு நலத்திட்ட உதவிகள் சென்றடைய வழி வகை செய்தோம். கடந்த இரண்டு நாட்களில் மட்டும் **2,670** பேருக்கு ஒரு கோடியே **75** இலட்சம் ரூபாய் மதிப்பில் கடனுதவிகளும் மானியங்களும் வழங்கப்பட்டுள்ளன. தனி நபர் வாழ்க்கை மேம்பாட்டிற்கு உங்கள் அன்புச் சகோதரியின் அரசு போல இதுவரை இத்தனை ஈடுபாட்டை எவரும் காட்டியதில்லை என்பது மட்டும் உறுதி.

மகிழத்தக்க மாபெரும் சாதனை

இந்த நான்கரை ஆண்டுக் காலகட்டத்தில் இத்தொகுதியில் அதாவது பர்கூரில் ஒரு பொறியியல் கல்லூரியும், ஒரு மகளிர் கலைக் கல்லூரியும், ஒரு Polytechnic-க்கும், இம்மாவட்டத்தில், **111** புதிய கல்வி நிலையங்களும், **12** புதிய விடுதிகளும் அமைக்கப்பட்டுள்ளன என்பது நினைத்து நினைத்து மகிழத் தக்க மாபெரும் சாதனை ஆகும். இந்த உயர்கல்விக் கட்டமைப்புகள். இம்மாவட்டத்தின் கல்வித் துறையில் ஏற்படுத்தியுள்ள மகத்தான தாக்கத்தை நிச்சயமாக எவரும் மறுக்க முடியாது.

சீர்மிகு நற்பள்ளி

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால் பர்கூரில் ஒன்பதே முக்கால் கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் பொறியியல்கல்லூரியும்,மத்தூர், மற்றும் போச்சம்பள்ளிக்கு இடையே 45 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைய உள்ள சீர்மிகு நற்பள்ளி அதாவது School of excellence, பர்கூரில் அமைக்கப் பட்டு வரும் Polytechnic மற்றும் மகளிர் கல்லூரிகள் ஆகியவையும். இப்பகுதிவாழ் மக்களின் கல்வி மேம்பாட்டிற்கு ஒரு புதிய பரிமாணத்தை வழங்கும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

புதிய தொழிற்பேட்டைகள்

இப்பகுதி வாழ் மக்கள் அனைத்து அடிப்படை வசதிகளைக் கொண்ட தொழிற் கூடங்களைப் பெற்று தொழில் முனைவோர்களாகவும் தொழில் அதிபர்களாகவும் வளர வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு SIDCO மற்றும் TACID நிறுவனங்கள் புதிய தொழிற் பேட்டைகளை இம்மாவட்டத்தில் உருவாக்கி வருகின்றன. அதிலும் குறிப்பாக நேற்று நான் பர்கூரில் தொடங்கி வைத்த பெண்களுக்கான தொழிற்பேட்டை அப்பகுதிவாழ் மகளிரின் தொழிற் முயற்சிகளுக்கு ஆக்கமும்

ஊக்கமும் வழங்கி அவர்தம் பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகுக்கும் என்று உறுதியாக நம்புகிறேன். பெண்கள் தங்கள் காலிலே சுயமாக நிற்பதற்கும் சுயமாகத் தொழிலை மேற்கொள்வதற்கும் மற்றவர்களோடு சமுதாயத்தில் சரிநிகர் சமானமாக வாழ்வதற்கும் இந்தப் புதிய கல்விக் கூடங்களும் தொழிற் கூடங்களும் வழி வகுக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

புதிய வளர்ச்சித் திட்டங்கள்

இன்று போச்சம்பள்ளி மற்றும் அதன் சுற்றுப்புறத்தைச் சேர்ந்த பகுதிகளில் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களையும் புதிய திட்டங்களையும் இரண்டரைக் கோடி ரூபாய் செலவில் தொடங்கி வைத்ததிலும் 153 கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு புதிய வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆக மொத்தம் இன்று 155.5 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்பில் புதிய திட்டங்கள், இப்பகுதியின் மேம்பாட்டிற்காகச் செயல்படுத்தப்பட உள்ளன. என்பதை அறியும்போது என் மனம் ஆனந்தம் அடைகிறது.

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

2 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள, போச்சம்பள்ளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் தொடங்கி வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். 24 குடியிருப்புகள் இத்திட்டத்தால் பயன் பெறுகின்றன. பாதுகாக்கப்பட்ட குடிநீரை ஒவ்வொரு குக்கிராமத்திற்கும் வழங்க வேண்டும் என்பதே நான் கண்ட கனவு ஆகும். ஒரு இலட்சிய உணர்வோடு மக்கள் பணி ஆற்றி வரும் நான் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணியை ஒரு புனிதக் கடமையாகவே மேற்கொண்டு வருகின்றேன்.

பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள கிட்டத்தட்ட எல்லாப் பகுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகளை உருவாக்கித் தருவதிலும், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, எப்போதும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

புதிய பள்ளிக் கட்டடம்

போச்சம்பள்ளியில் இரண்டே கால் இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட மேல் நிலைப் பள்ளிக் கட்டடம், 3.5 இலட்சம் ரூபாய் மதிப்பில் மாத்தானூரில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, ஜம்புக் குட்டப்பட்டியில் 1.5 இலட்சம் ரூபாய் செலவில் ஆரம்பப் பள்ளிக் கட்டடம் போச்சம்பள்ளியில் ரூ.2 இலட்சம் செலவில் 10 தொகுப்பு வீடுகள்; இரண்டே கால் இலட்சம் ரூபாய் செலவில் தாதம்பட்டியில் 10 தொகுப்பு வீடுகள், ஜிங்கிள் கதிரம் பட்டியில் 70.000 ரூபாய் செலவில் சத்துணவுக் கூட மையம் ஆகியவற்றையும் இன்று நான் திறந்து வைத்துள்ளேன்.

100 கோடி ரூபாயில் புதிய தொழிற்சாலை

மத்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதி முழுமையான வளர்ச்சியைப் பெற வேண்டும் என்பதற்காகவே டாமின் நிறுவனத்தின் சார்பில் 100 கோடி ரூபாய் மதிப்பில். Molybdenum oxide தொழிற்சாலை மிக விரைவில் இப்பகுதியில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்திற்கு இன்று நான் அடிக்கல் நாட்டியதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தத் தொழிற்சாலை பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு நேரடி வேலை வாய்ப்பையும், மறைமுக வேலை வாய்ப்பையும் வழங்கும். மேலும் இந்தத் தொழிற்சாலையை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு கிளைத் தொழில்களும் துணைத் தொழில்களும். இப்பகுதியில் உருவாகும் என்பதையும், அதனால் இப்பகுதியின் பொருளாதாரம் வளர்ச்சி பெறும் என்பதையும் எண்ணி என் மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

பாதுகாக்கப்பட்ட குடிநீர்

போச்சம்பள்ளிப் பகுதியின் குடிநீர்க் குறையைத் தீர்த்து வைக்க இரண்டு புதிய குடிநீர்த் திட்டங்கள் விரைவில் செயல்படுத்தப்படும் 3 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் 41 குடியிருப்புகள் பயன்பெறும் வண்ணம் ஒரு குடிநீர்த் திட்டமும்; 4 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் 107 குடியிருப்புகள் பயன்பெறும் வண்ணம் மற்றொரு குடிநீர்த் திட்டமும் விரைவில் செயல்படுத்தப்படும் என்பதையும் இந்த இரண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டங்களைப் போர்க்கால அடிப்படையில் விரைந்து செயல்படுத்த வேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆணை வழங்கியுள்ளேன்.

தொழிற்பேட்டைகள்

அதுமட்டுமின்றி TACID நிறுவனத்தின் சார்பில் போச்சம்பள்ளியில் 1400 ஏக்கர் நிலப்பரப்பில் 41 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் மாபெரும் தொழிற்பேட்டை ஒன்று விரைவில் உருவாக்கப்படும். போச்சம்பள்ளியில் SIDCO நிறுவனத்தின் சார்பில், மேலும் ஒரு தொழிற்பேட்டை 250 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு கோடியே 41 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். இரண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும் இரண்டு பெரிய தொழிற்பேட்டைகளும் போச்சம்பள்ளியில் செயல்படுத்தபடுவது ஒரு சரித்திரச் சிறப்பு மிக்க நிகழ்ச்சி என்பதில் ஐயமில்லை.

பெண்களுக்கான தொழிற்பேட்டை

நேற்று மாலை பர்கூரில் நடைபெற்ற மாபெரும் அரசு விழாவில் சிட்கோ நிறுவனத்தின் சார்பில், பெண்களுக்கேன்றே பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட தொழிற்பேட்டையைத் தொடங்கி வைத்தேன். அதுமட்டுமின்றி அந்தத் தொழிற்பேட்டையில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்கூடங்களுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளையும், அதே விழா மேடையில் பல பெண்மணிகளுக்கும் வழங்கினேன் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பகுதிவாழ் பெண்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு இந்த மாபெரும் முயற்சி ஒரு தூண்டுகோலாகவும் ஒரு முன்னோடித் திட்டமாகவும் அமையும் என்று உறுதியாக நம்புகிறேன்.

SIDCO நிறுவனத்தின் சார்பில், ஊத்தங்கரையில் 76 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு புதிய தொழிற்பேட்டை உருவாகவுள்ளது இந்தத் தொழிற்பேட்டை களுக்கு இன்று நான் அடிக்கல் நாட்டியதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

போச்சம்பள்ளி முருக்கம்பட்டி ஆகிய இடங்களில் 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 17 தொகுப்பு வீடுகள், புதுமோட்டூர் கிராமத்தில் ஒன்றரை இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பள்ளிக் கட்டடம், போச்சம்பள்ளியில் 9 இலட்சம் ரூபாய் மதிப்பில் சந்தைக் கட்டடம் ஆகியவற்றைக் கட்டுவதற்கு, இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

இன்று 9 ஊராட்சிப் பகுதிகளைச் சேர்ந்த, 349 பேருக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள், 23 இலட்சத்து 46,000 ரூபாய் மதிப்பில் இந்த விழாவில் வழங்கப்பட உள்ளன. பயனாளிகள் அனைவருக்கும், எனது கையினாலேயே உதவிகளை வழங்க வேண்டும் என்று நான் விரும்பினாலும் காலத்தின் அருமையைக் கருதி, 27 பேருக்கு மட்டும் நான் விழா மேடையில், உதவிகளை வழங்க உள்ளேன். மற்றவர்களுக்கு இந்த உதவிகள், இன்றே, இதே இடத்தில், அதிகாரிகளால் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெற்றி பெற வேண்டும்

இன்று அரசின், நலத்திட்ட உதவிகளைப் பெறுகின்றவர்கள், அவற்றை ஆதாரமாகக் கொண்டு, தங்களின் சலியாத உழைப்பை முன்னிலைப்படுத்தி, வாழ்க்கையில் வளர வேண்டும் என்றும், அவர்களது முயற்சிகள் வெற்றி பெற வேண்டும் என்றும். நெஞ்சார வாழ்த்துகிறேன்.

எல்லாம் அதில் அடக்கம்!

அறிவினால் உய்த்துணர்ந்து ஒப்புக் கொள்ளக்கூடியனவும், இயற்கையோடு விஞ்ஞானத்துக்கு ஒப்ப இயைந்திருக்கக் கூடியனவும் ஆன கருத்துக்களையே கொண்டு இயங்குகிறது வள்ளுவர் குறள்.

குறளை ஊன்றிப் படிப்பவர்கள் எல்லோரும் நிச்சயம் சுயமரியாதை உணர்ச்சி பெறுவார்கள். அரசியல் ஞானம், சமூக ஞானம், பொருளாதார ஞானம் ஆகிய எல்லாம் அதில் அடங்கியுள்ளன.

சிதம்பரனார் மாவட்டத்தில் வன்செயல்

தூண்டிவிடும் சமூகவிரோதிகள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள முதல்வர் உறுதி

பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புரட்சித்தலைவி நேரடி ஆறுதல்

உற்ற தோழர்களாக, உறவு கொண்ட அன்பர்களாக, உள்ளார்ந்த நட்புடன் பழகி வந்த மக்களைத் தங்களது சொந்த இலாபங் கருதி, சமூகவிரோதச் சக்திகள் தூண்டி விடுவதால், சிதம்பரனார் மாவட்டத்தில் திடீரெனச் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை எழுந்தது. இதன் விளைவாக ஏற்பட்ட வன் செயலால் உயிரிழந்தும், காயம்பட்டுத் துயர்மிகுந்தும், துன்பத்தில் உழலுகின்ற மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறவும், விரும்பத்தகாத இந்தச் சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை மட்டுப்படுத்தி மீண்டும் எழாதவாறு கட்டுப் படுத்திட, சம்பவம் நடைபெற்ற இடதத்திலேயே அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி, ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் 27.12.95 அன்று திருநெல்வேலி விரைந்தார்.

சர்வதேசத் தரத்துடன் பல்வேறு விளையாட்டு அரங்குகள் உருவாக்கி, உலகமே வியந்து பாராட்டும் வகையில், இந்தியாவுக்குப் பெருமை தேடித் தரும் வண்ணம், சென்னை மாநகரில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், 18.12.95 அன்று தொடங்கி சிறப்புடன் நடத்திய ஏழாவது தெற்காசியப் போட்டிகளின் நிறைவு நாள் 27.12.95. சீர்மிகு அந்நிறைவு விழாவுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையேற்பார் என்று நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், அமைதிப் பூங்காவாகத் திகழும் தமிழகத்தில், எவ்வாறேனும் அமைதியின்மையை ஏற்படுத்திட வேண்டும் என்று முயலுகின்ற சில சமூகவிரோதச் சக்திகளின் தூண்டுதலால் சிதம்பரனார் மாவட்டத்தில் நிகழ்ந்த வன் முறைச் செயல்களைத் தடுத்து நிறுத்திடவும், அந்தச் சமுதாய விரோதிகளின் தீய எண்ணத்தை முளையிலேயே கிள்ளி எறியவும், சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற் படாமல் காத்திடுவதற்கு முன்னுரிமையளித்து, தெற் காசிய விளையாட்டுப் போட்டி களின் நிறைவு விழாவில்கூட கலந்து கொள்ளாமல், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அரசு விமானத்தின் மூலம் திருநெல்வேலிக்கு விரைந்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், 27.12.95 அன்று காலை 9.45 மணிக்கு அரசு விமானத்தின் மூலம் புறப்பட்டு, மதுரை வந்தடைந்தார். மதுரை விமான நிலையத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஆர். சம்பத், இ.ஆ.ப., மற்றும் முக்கிய பிரமுகர்கள் வரவேற்றனர். பின்னர் அங்கிருந்து ஹெலிகாப்டர் விமானம் மூலம், புறப்பட்டு திருநெல்வேலி காவல்துறை ஆயுதப்படைத் திடலுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்து அடைந்தார்.

திருநெல்வேலியில், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு வேலு, இ.ஆ.ப., சிதம்பரனார் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு டி. ஜோதி ஜெகராஜன், இ.ஆ.ப., மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் மற்றும் முக்கியபிரமுகர்கள்வரவேற்றனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு நேராக, பாளையங்கோட்டை அரசு மருத்துவமனைக்குச் சென்று அங்கு சிதம்பரனார் மாவட்டத்தில் நடைபெற்ற சம்பவத்தில் மரணம் அடைந்த ஆறு பேரின் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். பின்னர் இரண்டு விரல்கள் வெட்டப்பட்டு சிகிச்சை பெற்று வரும் திருமதி காமாட்சியைச் சந்தித்து பழக் கூடையைக் கொடுத்து அவரது உடல்நலம் பற்றி விசாரித்தார். இச்சம்பவத்தில் தனது கணவனை இழந்த அவருக்குத் தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத் தையும், ஆறுதலையும் கூறி,

ரூ.2,000 கோடி செலவில் தமிழ்நாட்டில் கார் தொழிற்சாலை

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்து

அமெரிக்காவில் உள்ள "போர்டு மோட்டார் கம்பெனி"யும் பம்பாயைச் சேர்ந்த "மகிந்திரா அண்டு மகிந்திரா" நிறுவனமும் இணைந்து தமிழக அரசின் உதவியுடன் புதிதாகக் கார் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்குகின்றன.

சென்னை மறைமலை நகரை ஒட்டியுள்ள கீழக்கரணை கிராமத்தில் கார் தொழிற்சாலையை நிறுவுவதற்காக, தமிழக அரசுக்கும், பம்பாயில் உள்ள "மகிந்திரா அண்டு மகிந்திரா" நிறுவனம் அமெரிக்காவில் உள்ள "போர்டு மோட்டார்" நிறுவனத்திற்கும் இடையே 3.1.96 அன்று தலைமைச் செயலகத்தில் ஒரு ஒப்பந்தம் கையெழுத்தாகியது.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் முன்னிலையில் தமிழக அரசின் சார்பில் தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு சி. ராமச்சந்திரன், இ.ஆ.ப., மகிந்திரா அண்டு மகிந்திரா நிறுவன நிர்வாக இயக்குநர் திரு ஆர்.கே. பிதாம்பர், மகிந்திரா போர்டு இந்தியா நிறுவன நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட இருக்கும் திரு ஜான் ஜி. பார்க்கர் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு ம.சின்னசாமி, தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., நிதித்துறை செயலாளர் திரு பி.வி. ராஜாராமன், இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில். வளர்ச்சிக் கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு எஸ். அரவிந்த், தொழில் வழிகாட்டுதல் இயக்குநர் திரு எம். ராமன் ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

ஒரு இலட்சம் கார்கள்

இந்தத் திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு ஒரு இலட்சம் கார்கள் உற்பத்தி செய்யப்படும். சென்னையில் இருந்து 45 கிலோ மீட்டர் தொலைவில் கீழக்கரணைக் கிராமத்தில் அமைக்கப்படும் இந்தத் தொழிற்சாலை உடனடியாகத் தொடங்கப்படும்.

1998-ஆம் ஆண்டு இறுதியில் வர்த்தக ரீதியிலான உற்பத்தி தொடங்கும். இந்தத் திட்டத்தின் மொத்த முதலீடு பல கட்டங்களில் ரூ.1,500 கோடியில் இருந்து ரூ.2 ஆயிரம் கோடி வரை இருக்கும்.

வேலைவாய்ப்பு

தொழிற்சாலை மூலம் ஏறத்தாழ 2 ஆயிரம் பேர்களுக்கு நேரடியாகவும்,. 20 ஆயிரம் பேர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தொழிற்சாலைக்காக 350 ஏக்கர் நிலம் ஏற்பாடு செய்து கொடுத்ததற்கும் மேலாகப் பல சலுகைகளைத் தமிழக அரசு வழங்கியுள்ளது. தொடக்கத்தில் இந்தத் தொழிற்சாலையில் "போர்டு பியஸ்டா" மாடல் கார்கள் உற்பத்தி செய்யப்படும். தொடக்கத்தில் இருந்தே அதிகப் பட்சமாக இந்தியாவில் உள்ள மூலப் பொருட்களைக் கொண்டே உற்பத்தி செய்ய இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியின்போது தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசியதாவது:

"பிரம்மாண்டமான அளவில் கார் தொழிற்சாலையைத் தொடங்க தமிழக அரசுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட வந்துள்ள போர்டு மகிந்திரா நிறுவனத்தைச் சேர்ந்தவர்களை வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

முக்கிய மையம்

"மோட்டார் வாகனத் தொழில்களுக்கு சென்னை ஏற்கெனவே ஒரு முக்கியமான மையமாகும். சென்னையிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் மோட்டார் வாகனத் துணைத் தொழிற்சாலைகள் பல இருக்கின்றன.

"சென்னையில் கட்டுப்பாடான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். நிலையான தொழில் சூழ்நிலை நிலவுகிறது.

"இந்த நிறுவனத்துக்கு தொழில் மேம்படுத்தப்பட்ட நிலம், விற்பனை வரி தொடர்பானது உள்பட பல்வேறு சலுகைகள் மற்றும் மறைமலை நகரில் தேவையான அடிப்படை உதவிகளைத் தமிழக அரசு வழங்குகிறது. இது இந்த நிறுவனத்துக்குப் பெரும் உதவியாக இருக்கும்.

"போர்டு மகிந்திரா நிறுவனம் மிக வேகமாக இந்தத் தொழிற்சாலையை அமைத்து துணைத் தொழில்களின் வளர்ச்சியை வேகப்படுத்தும் வகையில் விரிவாக்கம் செய்வார்கள் என்று நம்புகிறோம்.

"போர்டு மகிந்திரா நிறுவனத் தொழிற்சாலையை அமைப்பதன் மூலம் தமிழ்நாட்டுக்கு மோட்டார் வாகனத் தொழிலில் ஒரு சர்வதேச அந்தஸ்து கிடைக்கும் என்பதில் எனக்குச் சந்தேகமேயில்லை.

"உங்களுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் வழங்குவோம் என நான் உறுதி அளிக்கிறேன்".

இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி:

பொங்கல் விழா



உழவே தலை என்றுணர்ந்த தமிழர்
விழாவே இப் பொங்கல் விழாவாகும்!
காணீர்
முழுவு முழங்கிற்றுப் புதுநெல் அறுத்து
வழங்கும் உழவர்தோள் வாழ்த்துகின்
றாரே!

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற்
றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர் என்ற
சொல்லிற்
பழுதுண்டோ? காணீர் பழந்தமிழர்
"நாங்கள்
உழவரே" என்றுவிழா ஒப்பி
மகிழ்ந்தாரே!

—பாவேந்தர் பாரதிதாசன்



தமிழக அரசின் சார்பில் அவருக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்து, அவருக்கு 1,30,000 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். திருமதி காமாட்சியின் கணவரின் மறைவிற்கும், அவரது விரல் வெட்டுப்பட்ட மருத்துவச் செலவிற்கும் சேர்த்து இந்தத் தொகை கொடுக்கப்பட்டுள்ளது.

அங்கிருந்த மருத்துவர்களிடம் அவருக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் குறித்தும் தற்போது கொடுக்கப்பட்டு வரும் மருத்துவச் சிகிச்சை குறித்தும் கேட்டறிந்தார். பின்னர் அவர் பூரண குணமடையத் தேவையான உயர்தர மருத்துவச் சிகிச்சையைத் தொடர்ந்து அளிக்க வேண்டும் என்று மருத்துவர்களைக் கேட்டுக் கொண்டார். அடுத்து தான் கொண்டு வந்திருந்த பழக் கூடைகளை அங்கிருந்த செவிலியரிடம் (Nurse)கொடுத்து அந்தப் பிரிவில் சிகிச்சை பெற்று வரும் மற்ற அனைத்து நோயாளிகளுக்கும், தனது சார்பில் பழங்களை வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

பிறகு, இந்தத் துயரச் சம்பவத்தில் மரணம் அடைந்தவர்களின் குடும்பத்தாரையும், உறவினரையும் சந்தித்து அவர்களுக்குத் தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு இலட்சம் ரூபாய் நிவாரண உதவித் தொகையை நேரில் வழங்கி ஆறுதல் கூறினார். அவர்களது இழப்பு தாங்க முடியாத பேரிழப்பு என்றும், அவர்களது துக்கத்தில் தானும் பங்கு கொள்வதாகவும்

சுருங்கப் பேசுவோம்!

உண்மை எப்போதும் சுருக்கமாய்ப் பேசப்படுகிறது. பொய்தான் விரிவாகப் பேசப்படும்.

–லியோ டால்ஸ்டாய்

தெரிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்தக் குடும்பத்தாருக்குத் தேவையான எல்லா உதவிகளையும், உடனடியாகச் செய்து தர வேண்டும் என்று இரண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்க்ளையும் கேட்டுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து பாளையங்கோட்டை அரசு விருந்தினர் இல்லத்திற்குச் சென்று அங்கு எல்லா அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களுடனும் பேசினார். இரண்டு மாவட்டங்களிலும் சாதியின் அடிப்படையில் நடைபெற்று வரும் பிரச்சினைகள் குறித்து பொதுவாக விவாதித்து, அவர்களது கட்சியின் சார்பில் கூறப்பட்ட கருத்துக்களையும், தனிப்பட்ட முறையில் கூறப்பட்ட கருத்துக்களையும் கேட்டறிந்தார். அவர்கள் கூறிய சில ஆலோசனைகளையும், கருத்துக்களையும் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அவ்வப்போது ஆணையிட்டார். இந்தக் கூட்டம் நடைபெற்ற போது, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் மற்றும் அரசுத்துறை, காவல்துறை அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

கிட்டத்தட்ட எல்லா அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும், தற்போது மாவட்ட நிர்வாகமும், காவல்துறையும் நன்கு முடுக்கி விடப்பட்டு, சாதியின் பெயராலும், சாதியை அடிப்படையாகக் கொண்டும் எழுகின்ற சட்ட ஒழுங்குப் பிரச்சினைய்யை உடனுக்குடன் தீர்வு கண்டு வருவதாகவும், தவறு இழைத்தவர்களை உடனடியாகக் கண்டறிந்து கைது செய்து வருவதாகவும் தெரிவித்தனர்.

சாதி உணர்வை அப்பாவி மக்களிடம் தூண்டி விடுகின்ற சமூக விரோதச் சக்திகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இதில் அரசுக்குத் தங்களது முழு ஒத்துழைப்பையும் நல்கத் தாங்களும் தங்களது கட்சிகளும் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்கள். சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளையும், ஆயுதங்களைக் கொண்டு வன்முறையைத் தூண்டுபவர்கள் மீதும் சட்டப்படியான நடவடிக்கை எந்தப் பாரபட்சமுமின்றி எடுக்கப்படும் என்று உறுதியளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், உயர் காவல்துறை அதிகாரிகளும், மாவட்ட ஆட்சித்தலைவர்களும் தவறு செய்பவர்களை உடனடியாகக் கண்டுபிடித்து அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

சாலை மறியலில் ஈடுபட்டு அரசுப் போக்குவரத்துக் கழகப்

ரூ.1.26 கோடி செலவில் ஊட்டி - கோத்தகிரி நெடுஞ்சாலை மேம்பாடு

தமிழ்நாட்டில் நீலகிரி போன்ற மலைப்பிரதேசப் பகுதிகளில் ஏற்படும் நிலச் சரிவு, பெருமழை, வெள்ளம் ஆகியவற்றின் காரணமாக, மலைப்பகுதிச் சாலைகள் பழுதடைந்து, சீரான வாகனப் போக்குவரத்திற்கு இடைஞ்சல்கள் ஏற்பட்டு வருகின்றன.

மலைப்பாங்கானப் பகுதிகளில் நிலவி வரும் இந்தப் பிரச்சினையைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் கடந்த 1995-96 சட்டமன்றக் கூட்டத் தொடரின் போது, நீலகிரி போன்ற மலைப்பிரதேசப் பகுதிகளில் அமைந்துள்ள சாலைகளை மேம்படுத்தும் பணிக்காக "மலைப்பிரதேசச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்" என்ற புதிய திட்டம் ஒன்றைச் செயல்படுத்தப்படும் என்றும் அறிவித்து அதற்காக ஒரு கோடி ரூபாய் நிதியையும் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்திருந்தார்கள்.

தற்போது இந்தத் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள ஊட்டி கோத்தகிரி நெடுஞ்சாலையினைப் பழுது பார்த்து மேம்படுத்தும் பணிக்காக மேலும் 1.26 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்கள். இந்த நெடுஞ்சாலையில் பாதுகாப்புச் சுவர் அமைத்தல் மற்றும் சாலையின் இரு மருங்கிலும் அமைந்துள்ள நடைபாதைகளை வலுப்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

பேருந்துகளை நாசப்படுத்தும் செயல்களைத் தடுக்க வேண்டும் என்று சிலர் கருத்துத் தெரிவித்ததற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், ஏற்கெனவே இது குறித்துத் தக்க தெளிவான அறிவுரைகளை வழங்கியிருப்பதாகவும், சாலை மறியலில் ஈடுபடுபவர்கள் மீதும், அரசுப் பேருந்துகளுக்கும், பொதுச் சொத்துக்களுக்கும் நாசம் விளைவிப்பவர்கள் மீதும், வன்முறையைத் தூண்டிவிட்டு அப்பாவி மக்களின் உயிருக்கு உலை வைப்பவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆணையிட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

பொதுவாக, இந்த இரு மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள், சாதி பேதங்களை மறந்து நல்லிணக்கத்துடன் இணைந்து வாழ விரும்புகிறார்கள் என்றும், சிலரது சுயலாபத்திற்காக வன்முறைகள் தூண்டி விடப்படுகின்றன என்றும் பல அரசியல் கட்சிகளும் முன் வைத்த கருத்தை ஏற்றுக் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் தங்களது ஒத்துழைப்பை நல்கினால் தமிழக அரசு அத்தகைய சமூக விரோதச் சக்திகள் மீது கடுமையான நடவடிக்கையை எடுத்து அமைதியைத் தொடர்ந்து நிலை நாட்டும் என்றும் தெரிவித்தார். வன்முறைகளால் உயிர்ச் சேதமும், பொருள் சேதமும், ஏற்பட்டு இம்மாவட்டங்களைச் சேர்ந்த தாய்மார்களும், சகோதரிகளும், படுகின்ற வேதனையைத் தான் நன்கு அறிந்துள்ளதாலும், அவர்களது குறைகளைத் தீர்க்க பொது அமைதியை நிலை நாட்டத் தக்க நடவடிக்கைகளை அனைவரின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவித்தார்.

பின்னர், சமுதாயத் தலைவர்களையும் சந்தித்து அவர்களது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார். இந்தச் சந்திப்பு கிட்டத்தட்ட சுமார் மூன்றரை மணி நேரம் நடைபெற்றது.

பின்னர் 4.15 மணிக்கு ஹெலிகாப்டர் விமானம் மூலம் புறப்பட்டு மதுரை வந்தடைந்து, அங்கிருந்து விமானம் மூலம் புறப்பட்டு மாலை 6.00 மணி அளவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னை வந்தடைந்தார்.

சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைச் சரிப்படுத்தி, சமுதாய விரோதச் சக்திகளின் சதிச் செயலை முறியடிக்கவும், வன்முறையைத் தூண்டிவிட்டு அப்பாவி மக்களைப் பலியாக்குகின்ற அநியாயச் செயலுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், காவல்துறை அலுவலர்களுக்கும், வருவாய்த்துறை அலுவலர்களுக்கும் 10 கட்டளைகள் வழங்கினார். அவை வருமாறு:

☆ இரண்டு மாவட்டங்கள் உட்பட எல்லா மாவட்டங்களிலும் நெடுஞ்சாலை ரோந்துப் பணியை (Highway Patrolling). மேலும் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும்.

☆ இரண்டு மாவட்டங்களில் ஊரகப் பகுதிகளுக்குச் சென்று வரும் எல்லா அரசுப் பேருந்துகளுக்கும் ஆயுதம் தாங்கிய காவலர் பாதுகாப்பு வழங்க வேண்டும். இதன்மூலம் அரசுப் பேருந்துகளில் செல்பவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க முடியும். பின்னர் அவசியம் ஏற்பட்டால், மற்ற மாவட்டங்களுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும்.

☆ தவறு செய்யாதவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தால், எந்த விதமான பாரபட்சமுமின்றி, அவற்றை நன்கு ஆராய்ந்து, அந்த வழக்குகளில் மேல்நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும் அல்லது அவர்களை அந்த வழக்குகளிலிருந்து விடுவிக்க வேண்டும்.

☆ வன்முறைச் செயல்களில் ஈடுபடுபவர்களை உடனடியாகக் கண்டறிந்து, அவர்களைக் கைது செய்து, சட்டப்படியான மேல்நடவடிக்கைகளை உறுதியாக மேற்கொள்ள வேண்டும்.

☆ இந்த இரண்டு மாவட்டங்களிலும், மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும், கிராம அளவிலும், "அமைதிக் குழுக்களை" ஏற்படுத்த, ஏற்கெனவே ஆணையிட்டதைப் போல — உடன் — ஏற்படுத்தி — அதில் பெண்களுக்குத் தேவையான அளவிற்குப் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும். இந்த "அமைதிக் குழுக்களை" (Peace Committee) தேவையானபோது கூட்டி, பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே வளர விடாமல் தடுக்க, அவர்களது ஆலோசனைகளைப் பெற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.

☆ மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தேவைப்படும்போது மாவட்ட அளவில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டங்களைக் கூட்டி, அவர்களது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெறலாம்.

☆ தீண்டாமைப் பழக்கத்தை எவரேனும் கடைப்பிடித்தாலோ மற்ற சமுதாயத்தினரின் மனங்கள் புண்படும்படித் தகாத முறையில் பேசினாலோ அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கையைக் காவல் துறை மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

☆ பொதுக் கூட்டங்களில் மக்களின் உணர்வுகளைத் தூண்டும்படிப் பேசி கலவரங்களுக்கும், வன்முறைக்கும் வித்திடுபவர்களைக் கண்டுபிடித்து அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

☆ இந்த மாவட்டங்களில், வன்முறையைத் தூண்டவும், கலகம் விளைவிக்கும் எண்ணத்துடனும் ஆயுதங்களைக் கடத்திக் கொண்டு வருபவர்கள், அவற்றை வைத்திருப்போர் மற்றும் விநியோகம் செய்வோர் அனைவரையும் கண்டுபிடித்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

☆ வன்முறையைத் தூண்டும் வண்ணமும், அடுத்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்களின் மனம் புண்படும்படியும், ஆட்சேபகரமான சுவரொட்டிகளை எழுதினாலோ, ஒட்டினாலோ அவர்கள் மீதும் கண்டிப்பான நடவடிக்கை விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்



இந்த இதழில்...

★ குடியரசு நாள் விழா 2

★ வறட்சி மாவட்டங்களின் ஆட்சித்தலைவர்கள் கூட்டம் 6

★ காவிரி அன்னையே வருவாய்! 9

★ மகளிர் முன்னேற்றம்: தமிழகமே முன்னோடி 18

★ தமிழ்நாடு சத்துணவுப் பணியாளர்கள் மாநில மாநாடு 24

★ நூல் நயம் 31

★ ஏழை நோயாளிகளுக்கு இலவசச் சிகிச்சை அளிக்க வேண்டும்! மாண்புமிகு முதல்வர் 34

★ மதுரை மாவட்டத்தில் பல்துறைப் பணி விளக்க முகாம் 38

★ குடியரசுத் தலைவரின் காவலர் பதக்கம் வழங்கும் விழா 43

★ கரூரில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழா: 45

இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம். (35)

★ பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய இந்த நான்கு குற்றங்களுக்கும் இடங்கொடுக்காமல் அவற்றைக் கடிந்து ஒழுகியதே அறமாகும்.

தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027

தைத் திங்கள் : 18

மலர்: 26 இதழ்: 15

1.2.1996

விலை: ரூபாய் 3

முதல் அட்டையில்...

சென்னை, தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களை, அமெரிக்க டூபாண்ட் நிறுவனத்தின் ஆசியா-பசிபிக் பிரிவு சேர்மன் திரு சார்லஸ் ஹாலிடே தலைமையில், ஆசிய பசிபிக் பிரிவு மானேஜிங் டைரக்டர், அதிகாரிகள் டேவிட் பாங்க், தாப்பர்-டூபாண்ட் நிறுவனக் கூட்டு மானேஜிங் டைரக்டர் திரு கவுதம் தாப்பர், மானேஜிங் டைரக்டர் வி. சாம்சிங் ஆகியோர் சந்தித்துப் பேசினர்.

கும்மிடிப்பூண்டியில் தாப்பர்-டூபாண்ட் நிறுவனம் சார்பில் அமைக்கப்படும் தொழிற் சாலையினால் சுற்றுப்புறச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாது என்று மாண்புமிகு முதலமைச்சரிடம் அதிகாரிகள் உறுதிமொழி அளித்தனர்.

சென்னை ஸ்ரீ வெங்கடேஷ்வரா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவியர்கள் நடத்திய ராஜஸ்தானிய கிராமிய நடனமும், சென்னை லேடி எம்.சி.டி.எம் பெண்கள் மேல் நிலைப்பள்ளி மாணவியர்கள் நடத்திய பாங்க்ரா நடனமும், சென்னை லேடி வெலிங்டன் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவியர் நடத்திய குஜராத்தி நடனமும் சென்னை ராணி மெய்யம்மை பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவியர் நடத்திய கரகம், காவடி ஆட்டமும், சென்னை பாஸ்டன் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவியரின் ராஜஸ்தானிய அறுவடை நடனமும், சென்னை கோல சரஸ்வதி மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவியரின் நாகாலாந்து மக்கள் பழங் குடியினர் நடனமும், சென்னை பிரசிடன்ஸி பெண்கள் மேல் நிலைப்பள்ளி மாணவியர்களின் கேரள நடனமும், சென்னை குழந்தைகள் தோட்ட மேல் நிலைப்பள்ளி மாணவ மாணவியரின் தமிழ்நாடு பொங்கல் நடனமும் ஆடிக் காட்டிய பிள்ளை மலர்களின் சாகசங்கள் மனதைக் கொள்ளைக் கொண்டன.

கிராமியக் கலை நிகழ்ச்சிகள்

தலையெங்கும் மயிலிறகையும், உடலெங்கும் வட்ட, வட்ட வடிவில் வெள்ளை நிறத்தில் அலங்காரம் செய்து கொண்டு ஆண்களும் பெண்களும் ஆடிய குஜராத் மாநில ரத்வா நடனமும், உடலெங்கும் சந்தனம் பூசிக் கொண்டும், சாமந்தி மலர் மாலைகளை அணிந்து கொண்டும் ஆண்களும் பெண் களும் நடனமாடிய தமிழ்நாட்டு அழகர் நடனமும், ஆந்திரப் பிரதேசத்தில் ஆடிக் களிக்கக் கூடிய திம்சா நடனமும், சிகப்புச் சட்டையையும், மஞ்சள் நிறப் பேண்ட்டும் அணிந்து கொண்டு தலையெங்கும் பிடறி போல் முடிதரித்து வேகமான முறையில் சுழன்று, சுழன்று ஆடிக்காட்டிய கர்நாடக மாநிலத்தைச் சார்ந்த குருவாரா குனிதா நடனமும், கையில் கோல் கொண்டு மனதில் உறுதி கொண்டு ஆடிக்காட்டிய தமிழ்நாட்டுக் கோலாட்டமும், கேரள தைய்யம் நடனமும், உத்திரப்பிரதேச மாநில சைவா (சீரா) நடனமும், ஒரிசா மாநிலத் தைச் சார்ந்த பூவிலியா நடனமும் காண்போர் கண்களை அதிச யிக்க வைத்தன.

அலங்கார ஊர்திகளின் அழகான அணிவகுப்பு

மயிலை கபாலீஸ்வரர் ஆலய நாயன இசைக் கலைஞர்கள் கூடிய நாயன இசை ஊர்தி யோடு அலங்கார ஊர்திகள் அணிவகுத்து வரத் தொடங்கின.

தொடர்ந்து 'எங்கள் தமிழகம் எங்கும் செயல் மயம்' என்ற வாசகம் தாங்கிய செய்தி-மக்கள் தொடர்புத்துறை ஊர்தியும், காவலர்களின் முதல்வர், நவீன மயம், மனிதாபிமானம் என்ற வாசகங்கள் தாங்கிய காவல் துறை ஊர்தியும், புரட்சித் தலைவியின் பொன்னான ஆட்சியில் சென்னை மாநகரை விளையாட்டு மாநகராக மாற்றிய சாதனை பாரீர்!' என்ற வாசகம் தாங்கிய சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர்

கலை நிகழ்ச்சிகளில் பரிசுகள் பெற்ற பள்ளிகள்

முதல் பரிசு: குழந்தைகள் தோட்ட மேல்நிலைப்பள்ளி - தமிழ்நாடு பொங்கல் நடனம்

இரண்டாம் பரிசு: லேடி எம்.சி.டி.எம். பெண்கள் மேல் நிலைப்பள்ளி - பாங்க்ரா நடனம்

மூன்றாம் பரிசு: ராணி மெய்யம்மை பெண்கள் மேல் நிலைப்பள்ளி - கரகம் காவடி

அலங்கார ஊர்தியில் பரிசு பெற்ற அரசுத்துறை ஊர்திகள்

முதல் இடம்: தோட்டக் கலைத் துறை.

இரண்டாம் இடம்: காவல் துறை,

மூன்றாம் இடம்: வேளாண்மைத் துறை.

கிராமியக் கலை நிகழ்ச்சிகளில் பரிசு பெற்ற நடனங்கள்

முதல் இடம்: ஒரிசா பூவிலியா நடனம்

இரண்டாவது இடம்: குஜராத் ரத்வா நடனம்

மூன்றாவது இடம்: கேரளா தைய்யம் நடனம்

ஊர்தியும், 'தோட்டக்கலைத் தொழில்களுக்கு ஏற்றுமதி வாய்ப்புகளைத் தோற்று விப்போம்' என்ற வாசகம் தாங்கிய தோட்டக்கலைத்துறை ஊர்தியும், 'குடும்பத்திற்கு ஒரு வீடு என்னும் கொள்கைச் செயலாக்கம்' என்ற வாசகம் தாங்கிய தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய ஊர்தியும், 'பழைமையை நினைவுகூறும், புதுமையை எடுத்துக்காட்டும் கோ-ஆப் டெக்ஸ்' என்ற வாசகம் தாங்கிய கோ-ஆப்டெக்ஸ் ஊர்தியும், 'சமூகநீதி, சமுதாய வளர்ச்சி' என்ற வாசகம் தாங்கிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி யினர் நலத்துறை ஊர்தியும், 'தொழில் வளர்ச்சியில் முதலிடம் பெறும் முயற்சியில் முன்னேறும் தமிழகம்' என்ற வாசகம் தாங்கிய தொழில், வணிகத்துறை ஊர்தியும்,' பசிப்பிணி போக்கும் உணவு உற்பத்தி வரலாற்றில் புதிய சாதனை' என்ற வாசகம் தாங்கிய வேளாண்மைத்துறை ஊர்தியும், 'மின் உற்பத்தி பெருக்கத்தில் புதிய எழுச்சி' என்ற வாசகம் தாங்கிய தமிழ்நாடு மின் வாரிய ஊர்தியும், ஆல விருட்சமாகத் தழைத்து நிற்கும் கூட்டுறவு, ஜெ.ஜெ. கூட்டுறவு நகர் என்ற வாசகங்கள் தாங்கிய கூட்டுறவுத் துறை ஊர்தியும், 'தமிழ்நாடு இந்தியாவின் கவின்மிகு காட்சிப் பெட்டகம்' என்ற வாசகம் தாங்கிய சுற்றுலாத்துறை ஊர்தியும், ஊரை உயர்த்தும் உன்னதப் பணியில் கிராமம் செழிக்க! தமிழகம் தழைக்க! என்ற வாசகம் தாங்கிய ஊரக வளர்ச்சி துறை ஊர்தியும்', என்ன தவம் செய்தனரோ? தமிழ்ப் பெண்கள் உன்னை அன்னையாய்ப் பெற்றனர்' என்ற வாசகங்கள் தாங்கிய சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை ஊர்தியும், புதிய 'வீராணம் திட்டம் ரூ.1,638 கோடி மதிப்பீட்டில் 2 ஆண்டுகளில் நிறைவேற்றப்படும் என்ற வாசகம் தாங்கிய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய ஊர்தியும், 'பாறைகள் நிறைந்த குன்றுகளையும், பசுமையாக்கும் வன வளத் திட்டங்கள்' என்ற வாசகம் தாங்கிய வனத்துறை ஊர்தியும், 'சுற்றுச் சூழல் விழிப் புணர்வுத் திட்டங்கள்' என்ற வாசகம் தாங்கிய தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய ஊர்தியும், 'நாடு காப்போரின் நலம் காப்போம்' என்ற வாசகம் தாங்கிய முன்னாள் படை வீரர் நலத்துறை ஊர்தியும், 'மீனவரின் வளமிகு வாழ்விற்கு வழி காட்டும் கலங்கரை விளக்கு' என்ற வாசகம் தாங்கிய மீன் வளத்துறை ஊர்தியும், அழகாக அணிவகுத்து வந்து தமிழக அரசின் பல்வேறு சாதனை களைப் பறைசாற்றியது.

மாணவ மாணவியர்களின் நடனத்தையும், அலங்கார ஊர்தி களின் அணிவகுப்பையும் மாண்புமிகு முதல்வர் அவர் களும், மேதகு ஆளுநர் அவர் களும் கண்டுகளித்தனர்.

விழா நிகழ்ச்சிகளை, கவிஞர் இளந்தேவன், டாக்டர் சுதா சேஷையன், டாக்டர் கரு. நாகராஜன், டாக்டர் சுமந்த் ராமன், செல்வி ரேவதி சீனிவாசன் ஆகியோர் மிக அழகான முறையில் வர்ணனை செய்தது குறிப்பிடத்தக்கது.

விழாவிற்கு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், வாரியத் தலைவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள், காவல்துறை உயர் அலுவலர்கள் மற்றும் முக் கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழாவின் முடிவில் வண்ண வண்ண பலூன்கள் வானத்தில் பறக்க விடப்பட்டன.

நிகழ்ச்சித் தொகுப்பு ச.சு.

குடியரசு நாள் விழா

இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி:



இந்தியக் குடியரசின் 47வது குடியரசு நாள் விழா, 26.1.1996 அன்று தமிழக அரசின் சார்பில், சென்னை மெரினா கடற்கரையில் அண்ணல் காந்தியடிகள் திருவுருவச் சிலை அருகே மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

மாண்புமிகு முதல்வர் வருகை

அண்ணல் காந்தியடிகளின் திருவுருவச் சிலையும் மெரீனா கடற்கரைச் சாலையும் வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, அழகுடன் மிளிர்ந்தது. மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா வணக்கம் செலுத்திய வண்ணம் சென்றார்கள். அங்கே கூடியிருந்த மக்கள் வான் பிளக்கும் ஆரவாரம் செய்து வாழ்த் தொலிகள் முழங்கினர்.

அவரைத் தொடர்ந்து மேதகு ஆளுநர் அவர்கள் மோட்டார் சைக்கிள்கள் புடைசூழ வருகை தந்து கூடியிருந்த மக்களுக்குத் தனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு அணிவணக்க மேடையருகே வந்தார். மாண்புமிகு முதல்வர் அவர்கள், மேதகு ஆளுநர் அவர்களை மலர்ந்த முகத்தோடு வரவேற்றார். இருவரும் வணக்கம் அவர்கள் ஆந்திரம், தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் மற்றும் கோவா மாநிலங்களின் தலைமைப் படைத் தலைவர் மேஜர் ஜெனரல் ஆர்எஸ். நாக்ரா, சென்னைக் கடற்படைப் பொறுப்பு அதிகாரி கமோடர் ரவீந்திரநாத், சென்னை வான்படை அதிகாரி ஏர்க மோடர் பிரகாஷ்நாராயணன் தேவி, காவல்துறைத் தலைவர் திரு வால்டர் ஐசக் தேவாரம், இ.கா.ப., காவல்துறை ஆணையர் திரு ஜி. வீரராகவன், இ.கா.ப., கூடுதல் காவல்துறைத் தலைவர் சட்டம் ஒழுங்கு திரு எஸ். குமாரசாமி, இ.கா.ப., ஆகி

அவர்கள் மோட்டார் சைக்கிள்கள் புடைசூழ வருகை தந்து, சாலையில் இருபுறமும் கூடியிருந்த மக்கள் வெள்ளத்தில் தெரிவித்துக் கொண்டனர். பிறகு, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா



அவர்களை அறிமுகம் செய்து வைத்தார்.

அதன் பின்னர், மேதகு ஆளுநர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். தேசியக் கொடி பட்டொளி வீசிப் பறக்கத் தொடங்கியது. அப்போது தேசியகீதம் இசைக்கப் பட்டது. அச்சமயம் வானிலிருந்து ஹெலிகாப்டர் மூலம் மலர் தூவப்பட்டது. உடனே, மேதகு ஆளுநர் அவர்கள் அணிவகுப்பு மேடைக்குச் சென்று அணி வகுப்பு மரியாதையை ஏற்கத் தொடங்கினார்.

அணிவகுப்பு

தரைப்படை, கடற்படை, விமானப்படை வீரர்கள் அணி வகுத்துச் சென்றனர். சக்தி வாய்ந்த அஜீத் விமானங்கள், சேட்டக் ஹெலிகாப்டர், விமான வெடிகுண்டு ஆகியவை இராணுவ வண்டிகளில் அலங்காரத்தோடு எடுத்துச் செல்லப் பட்டது. இதைத் தொடர்ந்து முன்னாள் இராணுவப் படை வீரர்கள், மத்திய ரிசர்வ் காவல்படை, மத்தியத் தொழிலகப் பாதுகாப்புப்படை, இரயில்வே பாதுகாப்புப்படை, சென்னை மாநகரக் காவல்படை, காவலர் குதிரைப்படை, தமிழ்நாடு சிறப்புக் காவல்படை, தமிழ்நாடு சிறப்புக் காவலர் கூட்டுக்குழல் முரசிசை, சிறப்புக் காவலர் படைப்பிரிவு, கடலோரப் பாதுகாப்புக் குழு, தேசிய மாணவர் படை, பெண்கள் முதுநிலைப் பிரிவு, இராணி மேரிக் கல்லூரி கூட்டுக் குழல் முரசிசை, தேசிய மாணவர் தரைப்படை (இளநிலைப் பிரிவு,) தேசிய மாணவர் படை இளநிலைப் பிரிவு, (பெண்கள்) சாலைக் காப்புச் சுற்றுக் காவலர் (மகளிர்,) கூட்டுக்குழல் முரசிசை, தமிழ்நாடு சென்னை நகர ஊர்க்காவல்படை, இராயபுரம், அரசு இளநிலை சிறப்பு இல்லம் கூட்டுக்குழல் முரசிசை, சென்னைப் பல்கலைக்கழக என்.எஸ்.எஸ். போன்றவர்கள் அணிவகுத்துச் சென்றனர். இந்த அணிவகுப்பு மரியாதையை மேதகு ஆளுநர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

அண்ணா பதக்கம்

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், இவ்வாண்டு தீரச் செயல்புரிந்த சேலம் மாவட்டத்தைச் சார்ந்த திரு கே.ராஜு, சிதம்பரனார் மாவட்டத்தைச் சார்ந்த திரு பி. கிருஷ்ணமூர்த்தி, பெரியார் மாவட்டத்தைச் சார்ந்த செல்வி ஏ. அனிதா, காமராஜர் மாவட்டத்தைச் சார்ந்த திரு வி. ராதாகிருஷ்ணன், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த செல்வன் டி. மாரியப்பன் ஆகிய 5 நபர்களுக்கு ரூ.2,000 மதிப்புள்ள தங்க முலாம் பூசிய அண்ணா வீரப்பதக்கமும், ரூ.2,000க்கான காசோலையையும் வழங்கிச் சிறப்பித்தார். அண்ணா பதக்கம் பெற்ற ஐவரோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

பள்ளிச் சிறார் ஆடல் பாடல்

சென்னை சி.பி.ரோடு மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி மாணவ மாணவியர்கள் நடத்திய தமிழ்நாடு கிராமிய நடனமும்,

214288 JL
N 96.26.13-17

இராமநாதபுரத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித்தலைவர்கள், தொடர்புடைய துறைகளின் அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர், அரசு செயலர்கள், துறைத் தலைவர்கள் ஆகியோர்களுடன் வறட்சி நிவாரணப் பணிகள் குறித்து ஆலோசனை நடத்தினார்கள். (27.1.96)

இராமநாதபுரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டம்:

வறட்சி நிவாரணப் பணிக்கு ரூ.266 கோடி ஒதுக்கீடு

மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

தமிழகத்தில் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள, தமிழக அரசு ரூ.266 கோடியை ஒதுக்கியுள்ளதாக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இராமநாதபுரத்தில் நடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அறிவித்தார்.

தமிழகத்தில் இந்தாண்டு வடகிழக்குப் பருவமழை பொய்த்து விட்டதால், 15 மாவட்டங்களில் கடும் வறட்சி நிலவுகிறது. குறிப்பாக, இராமநாதபுரம், பசும்பொன், மதுரை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திண்டுக்கல் உட்பட பல்வேறு மாவட்டங்களில் குடிநீருக்குக் கூடத் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது.

மாவட்டங்களில் வறட்சி குறித்து ஆய்வு செய்வதற்கும், மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் ஆலோசனை செய்யவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 27.1.96 அன்று இராமநாதபுரம் வந்தார். மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் உள்ள மாநாட்டுக் கூடத்தில் காலை 11 மணி அளவில் ஆலோசனைக் கூட்டம் தொடங்கியது.

மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு அமைச்சர்கள் திரு எஸ்.டி. சோமசுந்தரம், திரு சு. முத்துசாமி, திரு டி.எம். செல்வகணபதி, திரு எஸ். கண்ணப்பன், திரு மு.தென்னவன், திரு வி. சத்தியமூர்த்தி, திரு கா.ப. பட்டாபிராமன், திரு இ. மதுசூதனன் ஆகியோரும், தலைமைச் செயலாளர், திரு என். ஹரிபாஸ்கர், இ.ஆ.ப., வருவாய்த்துறைச் செயலாளர் திரு எஸ். மெய்க்கண்டதேவன், இ.ஆ.ப., விவசாயத்துறைச் செயலாளர் திரு ஆர்.சி. பாண்டா, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித்துறைச் செயலாளர் திரு நாராயணன், இ.ஆ.ப., பொதுப்பணித்துறைச் செயலாளர் திரு பி. பாஸ்கரதாஸ், இ.ஆ.ப., உணவுத்துறைச் செயலாளர் திரு சீனிவாசன், இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு ராஜாராம், இ.ஆ.ப., உள்துறைச் செயலாளர் திரு வரதராஜுலு, இ.ஆ.ப., நில வருவாய்த்துறைச் செயலாளர் திரு ரகுபதி, இ.ஆ.ப., மாண்புமிகு முதல்வரின் இணைச் செயலாளர்கள் திரு எஸ். ஆதிசேஷய்யா இ.ஆ.ப., திரு எஸ்.எஸ். ஜவகர் பாபு, இ.ஆ.ப., துணைச் செயலாளர் திரு எஸ். நடராஜன் மற்றும் 15 மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

ஆலோசனைக் கூட்டத்தைத் தொடங்கிவைத்து மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பேசினார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய மாவட்டத்தில் நிலவும் வறட்சி நிலவரம். குறித்துப் பேசி அறிக்கைகள் சமர்ப்பித்தனர். இதைத் தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசியதாவது:

"தமிழகத்தில் நிலவும் வறட்சி நிலவரம் குறித்து இங்கு பல்வேறு உபயோகமான கருத்துக்கள் குறித்து ஆலோசனை நடத்தியுள்ளோம். மாவட்ட ஆட்சித்தலைவர் உடனடியாக மாவட்டங்களுக்குச் சென்று வறட்சி நிவாரணப் பணிகளை மிகப் பெரிய அளவில் மேற்கொள்ள வேண்டும். அதில் தனிப்பட்ட கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக, ஊரக

வளர்ச்சித்துறை, குடிநீர் வடிகால் வாரியம், பொதுப் பணித்துறை, விவசாயத்துறை, உணவு மற்றும் கூட்டுறவுத்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் விவசாயப் பொறியியல் துறை ஆகியவை இணைந்து இந்த நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் நிவாரணப் பணிகளை வாரத்திற்கு ஒரு முறை தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்ய வேண்டும். நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுவதற்கு நிதி ஒரு தடையல்ல. மிகவும் பின்தங்கியப் பகுதிகளில் மக்களின் தேவையை உணர்ந்து பொதுமக்களின் ஆலோசனைகளைக் கேட்டு, நிவாரணப் பணிகளைத் துரிதமாகச் செயல்படுத்த வேண்டும்.

"இந்த நிவாரணப் பணிகளால் விவசாய வேலைகள் இல்லாமல் இருக்கும் தொழிலாளர்களுக்குப் பயன்தரத்தக்க சில வேலைவாய்ப்புகளை அளிக்க வேண்டும். விவசாயப் பணிகள் பாதகிக்கப்பட்டுள்ளதால், நாட்டில் உணவு கையிருப்புக் குறைவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இதற்கிடையே ஒரு குடும்பத்திற்கு இருபது கிலோ அரிசி வழங்க உத்தரவிட்டுள்ளேன். மாவட்ட ஆட்சித்தலைவர்கள் ரேஷன் கடைகளில் முறையாக விநியோகம் நடைபெறுகிறதா என்பதைத் தனிப்பட்ட அக்கறையுடன் கவனித்துச் செயல்பட வேண்டும். சரியான நேரத்திற்கு உணவுப் பொருட்கள் ரேஷன் கடைகளுக்குச் சென்றடைய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"ஒவ்வொரு மாவட்டத்திலும் குடிநீர் நிலவரம் மற்றும் வேலைவாய்ப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் விதம் குறித்து ஆய்வு செய்ய நிலநிர்வாகத்துறை மற்றும் பிற துறைகளின் ஆணையாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளேன். இவர்கள் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்குத் தொடர்ச்சியாகச் சுற்றுப்பயணம் செய்து ஆய்வு செய்ய வேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர்கள் வறட்சி நிவாரணப் பணிகள் நடப்பது குறித்துத் தனிப்பட்ட அக்கறையுடன் கணக்கு வழக்குகளை வைத்துக் கொண்டு, நிவாரண உதவிகள் பொதுமக்களுக்குப் போய் சேர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தாராளமாகவும், விரைவாகவும் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட, அரசு மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு முழு சுதந்திரம் அளித்துள்ளது. இதற்கான உறுதியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு மாவட்டத்திலும் நடக்கும் நிவாரணப் பணிகள் குறித்தான ஆய்வு அறிக்கைகளை அரசுத் தலைமைச் செயலாளருக்கு வாரம் ஒரு முறை அனுப்பி வைக்க வேண்டும். நிதிகள் ஒதுக்குவதிலும் தேவையான பொருட்கள் வாங்குவதிலும் உள்ள சிரமங்கள் குறித்து அந்தந்த மாவட்டங்களுக்குத் தொடர்புடைய ஆணையாளர்கள் மற்றும் அரசுச் செயலாளர்களுடன் உடனுக்குடன் தெரிவித்து அதற்கான அனுமதிகளைப் பெற்று நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

"தமிழகத்தில் வறட்சி காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க கூடுதலாக ரூ.72 கோடி ஒதுக்குகிறேன். இந்த நிதியின் மூலம், மேலும், பல இடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கவும், குடிநீர்க் குழாய்கள் பதிக்கவும் லாரிகள் மூலம், குடிநீர் விநியோகம் செய்யவும் பழுதடைந்த பம்புசெட்டுகளை மாற்றவும், ஏற்கெனவே உள்ள ஆழ்குழாய்க் கிணறுகளை ஆழப்படுத்தவும், அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"கடந்த டிசம்பர் 30ஆம் தேதி பதினைந்து மாவட்டங்களில் வறட்சி நிவாரண வேலைவாய்ப்புத் திட்டத்திற்காக ரூ.17.50 கோடி அரசு ஒதுக்கியுள்ளது. இந்தப் பணிகளை உடனடியாக முடிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். ஜவகர் வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின்கீழ் பாதிக்கப்பட்டுள்ள 15 மாவட்டங்களில் மேலும், பல விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு

(தொடர்ச்சி 41-ஆம் பக்கம் பார்க்க)

☆ நாம் எதை இழந்துவிட்டாலும், கவுரவத்தை மட்டும் இழக்க இடம் தரக்கூடாது.

—சாக்ரட்டீஸ்

காவிரி அன்னையே வருவாய்!

'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்த குடி' என்று வர்ணிக்கப்படும் தமிழ்ப் பெருங்குடி மக்களின் ஊனோடும், உயிரோடும், உணர்வோடும் இரண்டறக் கலந்தது காவிரி. தமிழகத்தில் ஓடும் வேறெந்த ஆற்றுக்கும் இல்லாத வரலாற்றுச் சிறப்பும், தமிழகத்துப் பண்பாட்டின் நாற்றங்காலாகவும், நாகரிகத்தின் தொட்டிலாகவும் ஒருங்கே விளங்கிடும் திரண்ட புகழ்கொண்டது காவிரி.

சுடுகின்ற வேதனை

எகிப்து தேசம் நைல் நதியின் நன்கொடையெனில், தமிழ்நாடு, காவிரியின் நன்கொடைதானே! அந்தக் காவிரி பாய்வதால் தானே, சோழவளநாடு தமிழ் நாட்டின் நெற்களஞ்சியம் என்ற நற்பெயரைத் தன்னிடத்தே தக்கவைத்து, 'சோணாடு சோறுடைத்து' என்ற சொற்பதத்தையும் தமிழுக்குத் தந்தது. காவிரியைக் கர்நாடகத்தார் தடுத்ததால், சோழவளநாடு, எங்கு நோக்கினும் மணலே விரியும் சகாராவாகவோ, தார்ப் பாலைவனமாகவோ மாறிடுமோ, முல்லையும், குறிஞ்சியும் முறைமையின் திரிந்து பாலையென்பதோர் படிவம் கொண்டிடுமோ என்ற ஐயப்பாட்டை- அனைவர் நெஞ்சிலும் சுடுகின்ற வேதனையை சில காலமாகத் தந்து கொண்டிருக்கிறது.

நீதியமைப்புகளை மதிக்க வேண்டும்

சட்டம், நீதி, நேர்மை இவைகளைத் தொன்றுதொட்டே மானுடம் மதித்தே பழகி வந்திருக்கிறது. சட்டங்களையும் நீதியமைப்புகளையும் மதித்து நடக்க வேண்டியது மானுடத்தின் தார்மீகக் கடமைகளுள் ஒன்றாகும். அப்படி மதியாதார் வாசலில் ஒழுக்கம் மிதியாது ஓடி மறைந்துவிடும்.

காலங்கடத்தும் தந்திரம்

காவிரியாற்றின் வரலாற்றை நோக்கினால் சட்டங்களையும், நீதியமைப்புகளையும் கர்நாடக மாநிலம் சில குறுகிய நோக்கங்களுக்காக அவற்றை புறக்கணித்து சட்டபடி கட்டுப்படுத்தும் நடுவர்மன்ற ஆணையைக் கூட மதியாமல், நிறைவேற்றாமல் இருப்பதைக் காணலாம். இருப்பினும், கர்நாடக மாநிலமும் தன்னுடைய செயல் நியாயமானது என்று ஆண்டாண்டுக் காலமாகப் வாதாடுவதைக் காணலாம். காலங்கடத்துவது நீதியை மறுப்பதற்கொப்பாகும். (Justice delayed is Justice denied) என்பது வழக்கு, காலங்கடத்தும் தந்திரத்தையே (Delayingtactics)கர்நாடக மாநிலம் கையாண்டு, நீதிக்கு ஒவ்வாத, செயல்களை கடைப்பிடித்து வருகிறது.

வரலாற்றுக் காலத்திலேயே அவ்வப்போது ஒரு சில சிக்கல்கள் ஏற்பட்டதாக வரலாற்றுச் செய்திகள் வழங்கி வந்துள்ளன.

மேலணை

ஆங்கிலேயர் ஆட்சியின் தொடக்க காலத்தில் (கி.பி. 1788-89) காவிரியில் தண்ணீர் தாராளமாக வந்ததால், தஞ்சை மாவட்டத்தில் நிலையான சாகுபடி செய்யப்பட்டது. சாகுபடிக்கு வேண்டிய தண்ணீரை முறைப்படுத்தும் முகத்தான் சர் ஆர்தர் காட்டன் என்பவர்

வாய்மை வெல்லட்டும் என்று வரவேற்கும் முதல்வர் அவர்களுடன் நிபுணர் குழுவினர் (6.1.96)

கல்லணையில் வெண்ணாறு கிளைக்கும், காவிரி கிளைக்கும் தலைமதகுகள் அமைத்தார். கொள்ளிடத்தில் காவிரி நீர் வீணாகி வழிந்து விடாமலிருக்க மேல் அணையும் (Upper Anaicut) இவரால் கட்டப்பட்டது. இதன் பிறகு 1836-ஆம் ஆண்டில் கொள்ளிடத்தின் குறுக்கே இன்னொரு அணை கட்டப்பட்டது. இதுவே கீழ் அணை (Lower Anaicut) ஆகும். இதனால், கொள்ளிடப் பாசனப் பகுதிக்கு நிலையான நீர் வழங்கும் முறை ஏற்பட்டது.

1892 ஒப்பந்தம்

தமிழகத்தில் பாசன ஒழுங்கு செய்யப்பட்டதைப் போலவே மைசூர் பகுதிகளிலும் செய்யப்பட்டது. மேலும் ஒருபடி மேலே போன மைசூர் அரசு பாசன வசதியைப் பெருக்கும் நோக்கத்துடன் அணைக்கட்டுகளைக் கட்ட முயற்சி செய்தது. இதனால் சென்னை மாகாணத்தில் ஏற்கெனவே வளர்ச்சிப் பெற்றுள்ள பாசனம் பாதிக்கப்படும் என்று சென்னை மாகாண அரசு அச்சம் தெரிவித்து வந்தது. இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் 1890-ஆம் ஆண்டிலிருந்து இரண்டாண்டுகள் நடைபெற்றன. இறுதியாக 1892-ஆம் ஆண்டில் மைசூர் அரசுக்கும் சென்னை மாகாண அரசுக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி, மைசூர் அரசு காவிரியிலோ அல்லது அதன் துணை நதிகளிலோ புதிய பாசன நீர்த்தேக்கம் கட்ட விரும்பினால் அந்தப் பணிகளைத் தொடங்கும் முன்பே, தொடங்கப்படும் பணி தொடர்பான முழு விவரங்களையும் சென்னை மாகாண அரசுக்கு அனுப்பி, அரசின் முன் இசைவைப் பெறவேண்டும் என்பது போன்ற விதிமுறைகள் வகுக்கப்பட்டன. முன் இசைவு தருவது பற்றி இரண்டு அரசுகளுக்கிடையே ஏதேனும் கருத்து வேறுபாடு ஏற்பட்டால், அந்தப் பிரச்சினையில் இரு அரசுகளாலும் நியமிக்கப்படும் நடுவர்கள் அல்லது மத்திய அரசின் தீர்வுக்குக் கட்டுப்பட வேண்டும் என்றும் விதிமுறைகள் சுமுகமான நட்புக்கு வழிவகுத்தன.

கண்ணம்பாடி அணை

கிட்டத்தட்ட இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரையிலும் இரு அரசுகளும் காவிரியில் நீர்த்தேக்கம் கட்டவில்லை. தென்மேற்குப் பருவக் காற்றால் கிடைக்கும் மழை நீரைத் தேக்கி, பாசனத்திற்குச் சாகுபடிக்காலம் முழுவதுக்கும் பயன்படுத்த சென்னை மாகாண அரசு காவிரியில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்கத் திட்டம் தீட்டியது. அதே வேளையில், மைசூர் அரசும் காவிரியின் குறுக்கே கண்ணம்பாடி என்னுமிடத்தில் நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் தீட்டி, அத்திட்டத்துக்கு 1892-ஆம் ஆண்டு ஒப்பந்த விதிமுறைகளின்படி சென்னை மாகாண அரசுக்கு இசைவு கோரி அனுப்பி வைத்தது. இதனை ஆய்வு செய்த சென்னை மாகாண அரசு காவிரி டெல்டாப் பாசனத்தைக் கண்ணம்பாடி நீர்த்தேக்கம் பெரிதும் பாதிக்கும் என்ற முடிவுக்கு வந்தது. எனவே அந்தத் திட்டத்துக்கு இசைவளிக்க சென்னை மாகாண அரசு ஒப்புக்கொள்ளவில்லை.

பின்னர், கோலார் தங்கச் சுரங்கப் பணிகளுக்கு மின்சக்தி வழங்க அமைக்கப்பட்ட சிவசமுத்திரம் திட்டத்துக்கு தண்ணீர் வழங்க வேண்டிய கட்டாயம் மைசூர் அரசுக்கு ஏற்பட்டதால் சென்னை அரசு 11 டி.எம்.சி. நீரைத் தேக்குவதற்கான உயரமும், பிற்காலத்தில் சென்னை அரசின் அனுமதி கிடைக்கும்போது 41 டி.எம்.சி. தண்ணீரைத் தேக்கும் வசதிக்காக உயரத்துக்கேற்ற அகலமான அடித்தளமும் கொண்ட அணை கட்டிக்கொள்ள அனுமதி கோரியது. இவ்வாறு அகலம் அதிகமான அடித்தளம் அமைப்பதால் பிற்காலத்தில் பெரிய நீர்த்தேக்கம் அமைக்க அதையே காரணமாக வலியுறுத்தப்பட மாட்டாது என்றும், அணையில் நீர்தேக்குவதற்கான விதிமுறைகள், சென்னை அரசின் கருத்துக்கு இசைந்து முடிவு செய்யப்படும் என்றும் மைசூர் அரசு உறுதி அளித்தது. சென்னை அரசும் இந்த உத்தரவாதத்தின் அடிப்படையில் கண்ணம்பாடி நீர்த்தேக்கம் கட்டிக்கொள்ளலாம் என்று இசைவளித்தது. மைசூர் அரசும் 1911-ஆம் ஆண்டு அணையின் கட்டுமானப் பணிகளைத் தொடங்கிற்று.

முதல் காவிரிப் பிரச்சினை

சென்னை மாகாணத்தின் சாகுபடிக்குத் தேவையான நீரைப் பயன்படுத்தும் உரிமைகளுக்குப் பாதுகாப்பு அளிக்க காவிரியில் மேலணையில் தேவைப்படும் நீர் அளவு குறித்தும் அத்தகைய நீர்வரத்தை உறுதி செய்வதற்கான வழிகள் பற்றியும் இரு அரசுகளுக்கு மிடையே கருத்து வேறுபாடு தோன்றியது.

1924 - ஒப்பந்தம்

1914-ஆம் ஆண்டில் இந்தப் பிரச்சினை அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி எச்.பி. கிரிபின் என்பவரின் தீர்ப்புக்காக விடப்பட்டது. அவரது தீர்ப்பை சென்னை அரசு ஏற்க இயலாத நிலையில், மத்திய அரசுக்கு முறையீடு செய்தது. மத்திய அரசும் 1916-ஆம் ஆண்டில் சென்னை அரசின் வாதத்தை ஏற்காமல், கிரிபின் தீர்ப்பை ஊர்ஜிதம் செய்தது. இந்தத் தீர்ப்பின் விளைவால் சென்னை மாகாணத்தின் சாகுபடிப் பரப்பில் பல பிரச்சினைகள் ஏற்படும் என்று கருதி சென்னை அரசு இங்கிலாந்திலிருந்த இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சிக்கான செயலாளரிடம் நீதி வேண்டி மேல்முறையீடு செய்தது. அவர் இந்திய அரசு தலையிட்டு செய்த முடிவு 1892 ஒப்பந்த ஷரத்துக்கு ஒவ்வாதது என்று கருதி, இரண்டு அரசுகளும் பேச்சு வார்த்தை நடத்தி ஒரு சுமுகமான முடிவுக்கு வரவோ அல்லது மறுபடியும் ஒரு நடுவரிடம் இந்த தாவாவை விசாரிக்கவோ ஏற்பாடு செய்ய வேண்டுமென்று ஆணையிட்டார். இதனால், நீண்ட பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு 1924-ஆம் ஆண்டு பிப்ரவரி 18-ஆம் நாள் இரு அரசுகளுக்குமிடையே ஒப்பந்தம் ஏற்பட்டு கையெழுத்தானது.

காய்ந்துபோன நெற்பயிரைக் கண்ணீரால் ஈரமாக்கி, நிபுணர்கள் கையில்தந்து நீதிகோரும் தஞ்சைப் பெண் (4.1.96)

புனல்மோதும் மேட்டூர் வறண்டு அனல் வீசும் அணையானதைக் கண்டு அதிர்ந்து நிற்கும் நிபுணர் குழு (4.1.96)

கிருஷ்ணராஜ சாகர் அணை

இந்த ஒப்பந்தத்தின் விளைவாக, மைசூர் அரசு கிருஷ்ணராஜசாகர் நீர்த்தேக்கத்தைக் கட்டி 1929-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தியது. இதே போல சென்னை அரசு 1934-ஆம் ஆண்டில் மேட்டூர் அணையைக் கட்டி முடித்தது. மைசூர் அரசு கன்வா, பைரமங்களா, பார்கோஹள்ளி, ஹிம்சா கால்வாய் போன்ற சில திட்டங்களைச் செயல்படுத்தியது. சென்னை அரசும், காவிரியின் கிளை நதிகளான பவானியின் குறுக்கே கீழ்ப் பவானி நீர்த்தேக்கத்தையும், பவானிசாகர் நீர்த்தேக்கத்தையும் 1953-ஆம் ஆண்டு கட்டியது. அமராவதியிலும் ஓர் சிறு நீர்த்தேக்கத்தையும் ஏற்படுத்தியது.

1947-ஆம் ஆண்டு இந்தியா விடுதலையடைந்த பிறகு 1956-ஆம் ஆண்டில் மாநிலங்களின் எல்லைகள் வரையறுக்கப்பட்டு திருத்தியமைக்கப்பட்டன. இதன் பிறகே காவிரி பிரச்சினை உச்சக்கட்டத்தை எட்டத் தொடங்கியது.

1892 மற்றும் 1924-ஆம் ஆண்டுகளில் போடப் பட்ட காவிரி நதிநீர் ஒப்பந்தங்களைப் படிப்படியாகக் கர்நாடக மாநிலம் மீறத் தொடங்கியது. கர்நாடக மாநிலம் புதிய நீர்த் தேக்கங்களைக் கட்ட தமிழ்நாட்டின் இசைவைப் பெறாமலேயே திட்டங்கள் தீட்டியது. தமிழ்நாடும், மத்திய அரசும் கர்நாடகத் திட்டங்களுக்கு இசைவு அளிக்கவில்லை. இருப்பினும் கர்நாடக அரசு தன்னிச்சையாகக் காவிரிப் படுகையில் நீர்த் தேக்கங்களையும், கால்வாய்களையும் அமைத்துப் பாசனப் பரப்பை வரம்புமீறி அதிகப் படுத்தியதால் தமிழ்நாடு அரசு கண்டனம் தெரிவித்தது. இந்த மாநிலங்களுக்கிடையேயான பிரச்சினையைத் தீர்க்க 1968-ஆம் ஆண்டு முதல் மத்திய நீர்ப் பாசனத் துறை அமைச்சர் தலைமையின் கீழ் காவிரிப் படுகையைச் சார்ந்த மாநிலங்களின் முதலமைச்சர்கள் நிலையில் பலமுறை பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. ஆனால், எந்தத் தீர்வும் ஏற்படவில்லை. இறுதியாகப் பேச்சுவார்த்தைகள் எந்தப் பலனும் தரவில்லையே எனத் தமிழ்நாடு அரசு 1970-ஆம் ஆண்டில் காவிரிப் பிரச்சினையை நடுவர் மன்றத்துக்கு விடும்படி மத்திய அரசைக் கடிதம் மூலம் கேட்டுக்கொண்டது. மீண்டும் ஏற்கெனவே நடந்ததைப் போலவே மத்திய அரசு காவிரிப்படுகை முதலமைச்சர்கள் அளவிலான கூட்டங்களை நடத்தியது. இதிலும் ஒரு சுமுகமான தீர்வு ஏற்படாததால் வேறுவழியின்றி மத்திய அரசு நடுவர் மன்றத்தை விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்க மத்திய அரசுக்கு ஆணை பிறப்பிக்குமாறு உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு 1971-ஆம் ஆண்டில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தது.

உண்மை நிலை அறியும் குழு

உச்சநீதிமன்றத்தில் வழக்கு இருக்கும்போது, அன்றைய பாரதப் பிரதமர் அவர்கள் மேற்கொண்ட முயற்சியால் அப்போதைய மத்திய நீர்ப் பாசனத்துறை அமைச்சர் தலைமையில், காவிரிப்படுகை மாநில முதலமைச்சர்கள் கூட்டம் நடைபெற்றது. மூன்று மாநில முதல்வர்களும் காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் புள்ளி விவர நிலைஅறியும் குழு ஒன்று அமைக்க ஒப்புக்கொண்டனர். அப்போதைய பாரதப் பிரதமர் அவர்களின் அறிவுரைக்கிணங்க தமிழ்நாடு அரசு உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்த வழக்கைத் திரும்பப் பெற்றது.

காவிரிப் பிரச்சினையின் புள்ளி விவர நிலை அறியும் குழுவால் தொகுக்கப்பட்ட புள்ளி விவரங்களின்படி, 1971-72-ஆம் ஆண்டில் காவிரி பாயும் மாநிலங்கள் அனைத்தும் பயன் படுத்திய மொத்த நீரின் அளவு காவிரியாற்றின் மொத்த நீர் வளத்தைக் காட்டிலும் அதிகமாக இருந்ததால், மாநிலங்கள் பங்கிட்டுக் கொள்வதற்கு உபரிநீர் இல்லை. இருந்தாலும் பாசன மேலாண்மையில் சில நவீனத் தொழில்நுட்பத்தைக் கையாளுவதன்மூலம், சேமிக்கப் படும் நீரைக் கொண்டு மேலும் பாசனப்பரப்பை அதிகரிக்கலாம் என்று மத்திய அரசு தெரிவித்ததன் அடிப்படையில் பேச்சு வார்த்தைகள் தொடர்ந்தன.

வரைவு ஒப்பந்தங்கள்

தொடர்ந்து மத்திய அரசு காவிரிப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக 1974 மற்றும் 1976-ஆம் ஆண்டுகளில் வரைவு ஒப்பந்தங்களை உருவாக்கியது. இந்த இரண்டு ஒப்பந்தங்களிலும் 1924-ஆம் ஆண்டின் ஒப்பந்த விதிமுறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. குறிப்பாக, பழைய பாசனப் பகுதிகளுக்குப் பாதுகாப்பு பற்றித் தெளிவாகச் சொல்லப் படவில்லை. எனவே, தமிழ்நாடு அரசு இந்த ஒப்பந்தங்களை ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்த நேரத்தில் கர்நாடக அரசு 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் இனி அமலிலில்லை என்று கூறி, தன்னிச்சையாகக் காவிரியில் ஆண்டுதோறும் நீர்த்தேக்கங்களை படிப் படியாக கட்டி, நீரையும் தேக்கியது. வழிந்துவரும் உபரி நீர் மட்டும் தமிழகத்துக்கு வரலாயிற்று.

தமிழகத்தில் சாகுபடி நிலைமை மோசமாவதைக் கவனத்தில் கொண்ட தமிழ்நாடு அரசு 29.5.1975 அன்று மீண்டும் மத்திய அரசை, காவிரி நதிநீர்ப் பிரச்சினையை நடுவர்மன்றத்துக்கு விட வேண்டும் என்று வலியுறுத்தியது. மத்திய அரசும் மாநில முதல்வர்களிடையே பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டேயிருந்தது. ஆனால், தீர்வு எதுவும் கண்டபாடில்லை.

பேச்சுவார்த்தைகள் பயனற்றவை என்பதாகவும் காலதாமதத்தால் இடர்பாடு ஏற்படுத்துவதாகவும், உணர்ந்து கொண்டது தமிழ்நாடு அரசு. 16.6.1986 அன்று பெங்களூரில் நடந்த பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட தமிழக அரசு அந்தப் பேச்சு வார்த்தை தோல்வி அடைந்த தாக அறிவித்து காவிரிப் பிரச்சினையைக் காலம் தாழ்த்தாமல் உடனடியாக நடுவர் மன்றத்துக்கு விடவேண்டும் என்று கேட்டுக்கொண்டது.

உச்சநீதி மன்றத்தில் வழக்கு

1983-ஆம் ஆண்டு காவிரிப் பிரச்சினையை நடுவர் மன்றத்துக்கு விடும்படி தமிழ்நாடு காவிரி நீர்ப்பாசன விளைபொருள் விவசாயிகள் நல உரிமைப் பாதுகாப்புச் சங்கம் உச்சநீதிமன்றத்தில் 'ரிட்' மனு தாக்கல் செய்தது. அதற்குத் தமிழ்நாடு அரசு ஆதரவளித்தது. 4.12.1986 அன்று தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அப்போதைய பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து மத்திய அரசு நடுவர் மன்றத்தினை உடனயாக அமைக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டார்கள்.

உச்சநீதிமன்றத்தில் வழக்கு வரும்போதெல்லாம் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வுகாண நடவடிக்கை எடுப்பதாக அவ்வப்போது மத்திய அரசு கூறி வந்தது.

உச்சநீதிமன்றத்தின் ஆணைக்கிணங்கி 1988-ஆம் ஆண்டு மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கர்நாடக முதல் அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தியும், தீர்வு ஏற்படாமல் போனது. 5.4.90 அன்று காவிரிப் படுகையைச் சேர்ந்த மாநில முதல்வர்களின் கூட்டத்தை மாண்புமிகு மத்திய

நீர்வளத்துறை அமைச்சர் அவர்கள் கூட்டினார். தொடர்ந்து தமிழ்நாடு கர்நாடக மாநில முதல்வர்களின் பேச்சுவார்த்தையும் நடந்தது. எவ்விதப் பலனும் ஏற்பட்டபாடில்லை. இந்த நேரத்தில்தான் அதாவது 24.4.90 அன்று உச்சநீதிமன்றத்தில் இப்பிரச்சினைத் தொடர்பான ரிட் மனு இறுதி விசாரணைக்கு வந்தது. காவிரிப் பிரச்சினையில் எவ்வித உடன்பாடும் ஏற்படவில்லையென உச்சநீதிமன்றத்துக்குத் தெரிவிக்கப்பட்டது.

நடுவர் மன்றம் அமைத்தல்

மத்திய அரசு அதனுடைய சட்டப்படியான கடமைகளை நிறைவேற்றும் வகையில் காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண நடுவர் மன்றம் அமைப்பது பற்றியும், இது பற்றிய அறிவிப்பை ஒரு மாதக் காலத்திற்குள் அரசிதழில் வெளியிடவும் உச்சநீதிமன்றம் ஆணையிட்டது.

மத்திய அரசும் 2.6.1990 அன்று தனது அறிக்கையில் நடுவர் மன்றம் அமைப்பதாக அறிவிப்பு செய்தது.

நடுவர் மன்றம்

நடுவர் மன்றத்தில் ஓய்வு பெற்ற நீதிபதி சிட்டகோஷ் முகர்ஜி தலைமையில் நீதிபதி எஸ்.டி. அகர்வால், நீதிபதி என்.எஸ்.ராவ் ஆகியோரும் இருந்தனர்.

நடுவர் மன்றக் குழு பயணம்

நடுவர் மன்றம் காவிரிப் படுகை மாநிலங்களில் விரிவான சுற்றுப்பயணம் செய்தது. நேரிடையாகவே மக்களைச் சந்தித்து உள்ள நிலைகளைத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்து கொண்டது. பின்னர், இறுதித் தீர்ப்பு அளிப்பதற்கு முன்னதாக, தற்சமயம் தண்ணீர் தட்டுப்பாட்டால் பாதிக்கப்படும் பயிர்களைக் கருத்தில் கொண்டு இடைக்காலத் தீர்ப்பு ஒன்றினை அறிவித்தது. அதில் தமிழ்நாட்டுக்கு ஆண்டுதோறும் 205 டி.எம்.சி. தண்ணீரைக் கர்நாடகம் விடுவிக்க வேண்டும் என்றும் தண்ணீர் விடுவது தொடர்பாக மாதவாரி அட்டவணையையும் அந்நீரை வாராவாரம் சரி பங்காக விடவும், ஓர் ஆணையை வெளியிட்டது. எப்போதும் சாக்குப்போக்குச் சொல்லியே பழகிவந்த கர்நாடக அரசு, நடுவர் மன்றத்துக்கு இடைக் காலத் தீர்ப்பு அளிக்கும் தகுதி இல்லையென்றும், நடுவர் மன்றத்தின் அதிகாரத்தையும் கர்நாடக அரசு மறுத்து ஓர் அவசரத் தீர்மானத்தைக் கொண்டுவந்தது.

கர்நாடகத்துக்கு அதிகாரமில்லை

உச்சநீதிமன்றம் கர்நாடக அரசின் இந்தச் செயலைக் கண்டித்தது. தன்னிச்சையாகப் புதிதாக அவசரச் சட்டம் பிறப்பிக்க கர்நாடக அரசுக்கு எந்த அதிகாரமும் இல்லை. எனவே, கர்நாடக மாநில ஆளுநர் பிறப்பித்த அவசரச் சட்டம் அரசியல் அமைப்பு சட்டத்திற்கும், அதன் அதிகாரத்திற்கும் புறம்பானது என்றும், இடைக்காலத் தீர்ப்பு வழங்க நடுவர் மன்றத்துக்கு முழு அதிகாரம் உண்டு என்றும் இந்த ஆணையை மத்திய அரசு அரசிதழில் வெளியிட வேண்டும் என்றும் அறிவித்தது.

> **பயமேன்?**
>
> நீங்கள் உண்மையானவர்களாகவும், அன்புடையவர்களாகவும், இருந்தால் ஒரு போதும் யாருக்கும் பயப்படத் தேவையில்லை.
>
> **—சுவாமி விவேகானந்தர்**

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் காவிரி நடுவர் மன்றத்தின் ஆணையை அரசிதழில் மத்திய அரசு வெளியிட வேண்டும் என்று மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்ம ராவ் அவர்களிடம் அனைத்துக் கட்சியினருடன் 3.12.91 அன்று முறையிட்டார். அதேநேரத்தில் கர்நாடக மாநிலமும் தன்னுடைய ஆதங்கத்தை 5-11-91 அன்று வெளிப்படுத்தும் வகையில் பாரதப் பிரதமரிடம் நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவை அரசிதழில் தமிழ்நாடு அரசு கோரியபடி வெளியிடக் கூடாது என்று வற்புறுத்தியது. இருந்தாலும் இரண்டு மாநிலங்களின் கோரிக்கைகளையும் கேட்டறிந்த பிரதமர் அவர்கள் உச்சநீதிமன்றத்தின் கருத்தையும் மதித்து அதன்படி 10.12.91 அன்று மத்திய அரசின் அரசிதழில் நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை வெளியிடச் செய்தார்.

முதல்வர் அவர்களின் உண்ணாவிரதம்

மத்திய அரசு இடைக்காலத் தீர்ப்பை அரசிதழில் வெளியிடப்

பட்ட பின்னரும், 1993-94-ஆம் ஆண்டில், நீர்வரத்து அந்த இடைக்கால ஆணைப்படி நீர் வராததால் வாடிய பயிரின் நலனைக் கருதி காவிரியில் உடனடியாகத் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று கர்நாடக அரசை ஆணையிடக் கோரி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 18.7.93 அன்று புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் மீளாத் துயில் கொள்ளும் நினைவிடத்தில் உண்ணா நோன்பை மேற்கொண்டார். "தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் இன்றி வாடும் பயிர்களைக் காப்பாற்ற வேறு வழி தெரியவில்லை. இப்பொழுது எப்படியாவது காவிரியில் தண்ணீர் திறந்து விடக் கோரி நெருக்கடியிலிருந்து விவசாயிகளை மீட்க வேண்டும். எனவே, காவிரிப் பிரச்சினைக்காக இந்த உண்ணாவிரதத்தை மேற்கொள்கிறேன்" என்று புரட்சித்தலைவி அவர்கள் உண்ணாநோன்பை மேற்கொண்டார். தொடர்ந்து 4 நாட்களாக உண்ணாவிரதத்தை மேற்கொண்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை, மாண்புமிகு மத்திய அரசின் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு வி.சி. சுக்லா அவர்கள் பாரதப் பிரதமர் சார்பாக நேரில் வந்து காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் நடுவர் மன்ற ஆணையை நிறைவேற்றும் ஒரு கண்காணிப்புக் குழு ஏற்படுத்தப்படும் என்று உறுதி மொழியைத் தந்து உண்ணா விரதத்தை முடித்து வைத்தார்.

கர்நாடகத்தின் கண்மூடித்தனம்

கர்நாடக அரசோ, நடுவர் மன்றத் தீர்ப்பைச் சிறிதும் மதிக்காமல் தொடர்ந்து பிடிவாதமாக நடந்து வருகிறது. இது உச்சநீதிமன்றமும், மத்திய அரசும் அமைத்த நடுவர் மன்ற அமைப்பையே சற்றும் பொருட்படுத்தா நிலையை ஏற்படுத்தியது. இதனால், இந்திய அரசியலமைப்புக் கோட்பாட்டின் அடித்தளத்தையே ஆட்டி வைப்பது போல அதன் நடவடிக்கை உள்ளது. கிட்டத்தட்ட இரண்டரை ஆண்டுகள் ஆகியும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கேட்டுக் கொண்டபடி, நடுவர் மன்றம் அளித்தத் தீர்ப்பை நிறைவேற்ற கண்காணிப்புக் குழுவும், அமலாக்கக் குழுவும், மத்திய அரசு அமைக்கவில்லை. இது தவிர, கர்நாடக அரசின் சட்ட விரோதமான செயல்பாடுகளையும் மத்திய அரசு தடுக்கவும் இல்லை. இந்தச் சூழ்நிலையில் வேறுவழியின்றி 11.12.95 அன்று தமிழக அரசு உச்சநீதி மன்றத்தில் ஒரு மனுவைத் தாக்கல் செய்தது. இது தொடர்பாக நடுவர் மன்றத்தை அணுகும்படி உச்சநீதிமன்றம் தமிழக அரசுக்கு ஆணையிட்டது. பிறகு தமிழக அரசு ஒரு அவசர மனுவை நடுவர் மன்றத்திடம் தாக்கல் செய்தது. அதன்பேரில் நடுவர் மன்றம் உடனடியாக 11 டி.எம்.சி. தண்ணீருடன் சேர்த்து டிசம்பர் மாதத்திற்குரிய தண்ணீரையும் 1996-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குரிய 2.51 டி.எம்.சி. தண்ணீரையும் வழங்க வேண்டுமென்று தீர்ப்பு கூறியது.

நடுவர்மன்றத் தீர்ப்பைச் செயல்படுத்துக!

நடுவர் மன்றத்தின் இந்தத் தீர்ப்பை உடனடியாகச் செயல்படுத்தி, தண்ணீரைத் திறந்து விடும்படி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தொடர்ந்து கடிதங்கள் எழுதினார். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கும், இந்தப் பிரச்சினையை வலியுறுத்தி கர்நாடக முதல்வரைக் காவிரியில் தண்ணீரைத் திறந்துவிடுமாறு கேட்டுக் கொண்டார். ஆனால், எந்தவித நடவடிக்கையுமின்றி காலம் தாழ்த்தப்பட்டது.

நாட்டுக்கே இழப்பு

காவிரியில் தண்ணீர் இல்லாததால், தமிழ்நாட்டில் காவிரி ஆயக்கட்டுப் பகுதியில் 13.3 இலட்சம் ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்கள் காய்ந்து, தீய்ந்து கொண்டிருக்கின்றன. இதனால் கிட்டத்தட்ட 800 கோடி ரூபாய் அளவுக்கு இழப்பு தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே ஏற்படக் கூடிய அபாய நிலை உள்ளது என்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துரைத்தார்.

தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உச்சநீதிமன்றத்தில் அவசர மனு ஒன்றைத் தாக்கல் செய்து நடுவர் மன்றத்தின் தீர்ப்பைச் செயல்படுத்தக் கோரினார். உச்சநீதி மன்றம், பிரச்சினைக்கு 28.12.1995 மாண்புமிகு பாரதப்

பிரதமர் அவர்களை உடனடியாக இரண்டு நாட்களுக்குள் தொடர்புடைய காவிரிப் படுகைப் பகுதி மாநில . முதலமைச்சர்களை அழைத்துப் பேசி நடுவர் மன்றம் ஆணையிட்ட 11 டிஎம்சி. நீரை வழங்க சுமுகமான தீர்வுகாண வேண்டும் என ஆணையிட்டது. எனவே, பாரதப் பிரதமர் அவர்கள் தமிழ்நாடு, கர்நாடகம், கேரளா, பாண்டிச்சேரி முதல்வர்கள் கூட்டத்தைக் கூட்டி ஆலோசனை நடத்தினார்.

முதல்வர்கள் கூட்டம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் காவிரிப் பிரச்சினையை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் முறையிடுவதற்கு வசதியாக அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டினார். இதில் அனைத்துக் கட்சியைச் சேர்ந்த 78 உறுப்பினர்கள் பங்கேற்றார்கள். இந்தக் குழுவினருடன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 31.12.95 அன்று பாரதப் பிரதமர் அவர்களை, புதுடெல்லியில் சந்தித்து ஆலோசனை நடத்தினார். இதன்பிறகு, பிரதமர் அவர்கள் இருதரப்புக் கோரிக்கைகளையும் கேட்டறிந்து தமிழ்நாட்டிற்குக் கர்நாடக அரசு உடனடியாக 6 டிஎம்சி. தண்ணீரைத் திறந்துவிட வேண்டும். ஒரு நாளைக்கு 1 டி.எம்.சி. வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட வேண்டும். இரு மாநிலங்களிலும் உள்ள அணைகளின் தண்ணீர் அளவு பயிர்களின் நிலைமை பற்றி ஆய்வு நடத்த ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ஒய்.கே. அலெக் அவர்கள், ரூக்கி பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் திரு பரத் சிங் அவர்கள், மத்தியப் பிரதேச மாநில முன்னாள் தலைமைப் பொறியாளர் திரு கேப்ரிகான் அவர்கள் ஆகிய மூன்று பேர் கொண்ட நிபுணர் குழு அமைக்கப்படும். இந்தக் குழு பாதிக்கப்பட்ட மாநிலங்களில் அணைகளில் உள்ள தண்ணீர் அளவு நிலுவை பயிர்களின் நிலையை நேரில்பார்த்து தேவையான நீர் அளவு பற்றி 10.1.96-க்குள் அறிக்கையினை அளிக்கும் என்றும் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து பிப்ரவரி மாதம் அனைத்து முதலமைச்சர்கள் கொண்ட நீர்வள மேம்பாட்டுக்குழு கூட்டம் ஒன்று கூட்டப்பட்டு பல மாநிலங்கள் வழி ஓடும் ஆற்றுநீர் பங்கீடு சம்பந்தமாக குறிக்கோள்களை வகுக்க அனைத்துக் கட்சி கூட்டம் ஆலோசனை நடத்தப்படும் என்றும் பிரதமர் அறிவித்தார். மாண்புமிகு பாரதப் பிரதமரின் ஆணைக்குக் கர்நாடக அரசு உடன்படாமல் கண்டனம் தெரிவித்து, உடனடியாகத் தண்ணீரைத் திறந்துவிடத் தாமதித்தது. பின்னர், அரசியல் சூழ்நிலையின் பின்னணியில் பிரதமர் அறிவித்த 6 டி.எம்.சி. தண்ணீரைத் தமிழகத்துக்கு கர்நாடக அரசு திறந்துவிட்டது.

நிபுணர்குழு அறிக்கை

பிரதமர் அவர்கள் அமைத்த நிபுணர் குழு தமிழ்நாடு மற்றும் கர்நாடகக் காவிரிப்படுகைப் பகுதிகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு அதன் அறிக்கையை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் அளித்து உள்ளது.

கிட்டத்தட்ட பல நூற்றாண்டுகளாகக் காவிரிப் பிரச்சினை ஒரு தீராப் பிரச்சினையாக வளர்ந்து தற்போது ஒரு முடிவுக்கு வரும் சூழ்நிலை ஏற்படும் என்றால், அதற்கு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் பெருமுயற்சியேயாகும். காவிரி நதிநீர்ப் பிரச்சினையை ஏதோ தண்ணீர்ப் பிரச்சினை என்று மேலோட்டமாகக் கணித்துவிட முடியாது. ஏனென்றால், எடுக்கப்படும் எந்த முடிவும் தமிழகத்துப் பாசனப் பகுதியையும், அதன் பொருளாதாரத்தையும் வெகுவாகப்பாதிக்கும் என்பதை மத்திய அரசு இந்த நேரத்திலாவது உணர்ந்து மாநிலங்களுக்கு இடையே நிலவுகிற நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினைகளைஅரசியல்நோக்கோடுபாராமல்பொது மக்கள் நலத்தை மட்டுமே கருத்தில் கொண்டு, நடுவர் மன்றத் தீர்வை அமுல் செய்ய வேண்டும். அதே நேரத்தில் தேசிய அளவிலான ஒரு திட்டத்தை இயற்றி அதன்மூலம் அனைத்து நதிகளையும் தேசியமயமாக்கிட வேண்டும். அப்போதாவது ஒவ்வொரு நாளும் நலிந்துகொண்டிருக்கும் காவிரிப் படுகை விவசாயிகளுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கிடைக்கும். இது உண்மையிலேயே காவிரிப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வாகும் என்ப தால் தமிழகத்து விவசாயிகள் என்றென்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு நன்றிக் கடன்பட்டிருப்பார்கள் எனலாம்.

—மா. அசோகன்

வருவாய்த்துறை அலுவலர்களுக்கு தொலைத்தொடர்புச் சாதனங்கள் மாண்புமிகு முதல்வர் வழங்கினார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 1994-ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில், திடீர் வெள்ளம், புயல் போன்ற இயற்கைச் சீற்றங்களின் போதும், சட்ட ஒழுங்குப் பிரச்சினைகளின்போதும், மக்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் களைய, வருவாய்த் துறை அலுவலர்கள், மாவட்ட ஆட்சித் தலைவரையும் மற்ற அலுவலர்களையும் தொடர்பு கொண்டு, துயர் துடைப்புப் பணிகள், மீட்புப் பணிகள் மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள தொலைத் தொடர்புச் சாதனங்கள் வழங்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டிருந்தார்.

இவ்வறிவிப்பினைத் தொடர்ந்து, இயற்கைச் சீற்றங்களின்போது, மற்ற வகையான தொலைத் தொடர்புச் சாதனங்கள் பழுதடைந்து விடும் நிலையிலும், காவல் துறையினர் பயன்படுத்தும் Micro-Wave தொலைபேசியும் இயங்க முடியாத நிலையிலும், இந்த நவீனத் தொலைத் தொடர்புச் சாதனமான (Very High Frequency Telecommunication System) வருவாய்த் துறை அலுவலர்களுக்கும் வழங்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டிருந்தார்.

தமிழக வரலாற்றிலேயே முதல் முறையாக வருவாய்த்துறை அலுவலர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், கோட்டாட்சித் தலைவர்கள், வட்டாட்சியர்கள் அந்தந்த மாவட்டத் தலைவர்களுடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு துயர்த் துடைப்புப் பணிகளைச் செய்வதற்கு (VHF) Very High Frequency அதி வேக அலைவரிசையில் இயங்கும் தொலைத் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துவதன் தொடக்கமாக 10.11.1995 அன்று சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இந்தத் தொலைத் தொடர்புச் சாதனங்களை இயக்கி வைத்தார். ஒரு Walkie Talkie மூலம் சென்னையிலிருந்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ராம மோகன் ராவ் அவர்களுடன் தொடர்பு கொண்டு இந்தத் தொலைத் தொடர்புச் சாதனத்தை இயக்கி வைத்து, மக்களுக்குச் சிறந்த முறையில சேவை ஆற்ற வேண்டும் எனத் தெரிவித்துக் கொண்டார். வருவாய்த் துறை அலுவலர்கள் தொலைத் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்த ஆணையிட்டதற்கு, செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்ட ஆட்சித் தலைவர் தனது நன்றியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியின்போது தொலைத் தொடர்புச் சாதனங்களைப் பராமரிப்பதற்கு நியமிக்கப்பட்ட நிறுவனத்தின் அலுவலர்களும், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. என். ஹரிபாஸ்கர், இ.ஆ.ப., அவர்களும் இதர அலுவலர்களும் உடனிருந்தார்கள்.

பகுத்தறிவுக்கேற்ற அறவழியில் அமைந்த மதத்தினை ஏற்றுக் கொள்வதே விவேகம்.

—டாக்டர் ராதாகிருஷ்ணன்

மகளிர் முன்னேற்றம்

தமிழகமே முன்னோடி!

-மாண்புமிகு முதல்வர்-

சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப் படுகின்ற தீங்குகளையும், குற்றங்களையும் தடுப்பதற்காகவும், அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் பணிகளை ஆராய்வதற்காகவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய தொடக்க உரை (12.12.1995)

எல்லாத் துறைகளிலும், மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்கும் மாநிலம் நமது தமிழ்நாடு. அதே உணர்வுடன் பெண்களின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திலும், சமுதாயக் கொடுமைகளிலிருந்து பெண்களைக் காப்பாற்றும் பணியிலும்

தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு இன்று முன்னோடியாக விளங்கிக் கொண்டிருக்கிறது. சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் தீமைகளை எப்படித் தடுப்பது என்பது குறித்தும், பெண்களுக்கு இழைக்கப்படும் குற்றங்களுக்கான சட்டபூர்வமான தீர்வை அவர்களுக்கு ஏற்படுத்தித் தர அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும், பெண்களின் சமூக உரிமைகளைப் பாதுகாத்து, சரிநிகர் சமானமாக அவர்கள் வாழ்வதற்கு, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் நாம் விவாதித்து நல்ல முடிவுகளை மேற்கொள்வதற்காக இன்று இங்கே கூடியுள்ளோம்.

ஏட்டிலும், பாட்டிலும், தெய்வங்களாகக் கருதிப் புகழப்படும் பெண்கள் நாட்டிலும் வீட்டிலும், சமுதாயக் கொடுமைகளுக்கும், குற்றங்களுக்கும் ஆளாகி அவதிப்படுகிறார்கள் என்பதை, நான் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது அறிந்து கொண்டேன். பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களும், தீமைகளும், சில நேரங்களில் குற்றங்களாகவே கருதப்படாத மனப்பான்மையும், சூழ்நிலையும் நிலவி வந்ததைக் கண்டேன். மகளிருக்கு எதிராக இழைக்கப்படுகின்ற, தீங்குகளுக்கும் குற்றங்களுக்கும் ஒரு முற்றுப் புள்ளி வைத்தால்தான், இன்றைய சமுதாயத்தில் நாம் எதிர்பார்க்கும் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்பதை உணர்ந்து கொண்டேன். தமிழ்நாடுதான், அந்த வகையில் இந்தியத் துணைக் கண்டத்திற்கு ஒரு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் விளங்க முடியும் என்று எண்ணினேன். அந்த எண்ணங்

களின் பிரதிபலிப்பாக, கடந்த நான்கரை ஆண்டுக் காலமாக, எங்கள் அரசு ஒரு "மகளிர் நல அரசாக பெண்கள் முன்னேற்றத்தினைக் கருத்தில் கொண்டு பல்வேறு ஆக்கப்பூர்வமான பணிகளை மேற்கொண்டு வருகிறது என்பதைச் சுட்டிக் காட்டுவதில் ஒரு பெண் முதலமைச்சர் என்ற முறையில் நான் பெருமிதம் அடைகிறேன்.

எங்கள் அரசு பெண்களின் ஒட்டு மொத்த சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கும், சமூகத்தில் அவர்களுக்கு உரிய பங்கினையும், உரிமைகளையும் பெற்றுத் தந்திடவும் பெண்களுக்கு என ஒரு தனி கொள்கையை அறிவித்தது. காவல் மாவட்டந்தோறும், குறைந்தது ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் என்ற அளவில் தொடங்கி இன்று 57 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. எங்கள் அரசு, மாநிலப் பெண்கள் குழுமத்தை (State Womens Commission)-ஐயும் ஏற்படுத்தியது. பெண் சிசு வதையைத் தடுக்கத் தொட்டில் குழந்தைத் திட்டத்தையும், பெண் குழந்தைகளின் முன்னேற்றத்திற்குப் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தையும், பெண்கள் கல்வியை ஊக்குவிக்க, பல சிறப்புத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

ஆண்டாண்டுக் காலமாகவே பெண்களுக்குச் சமுதாயத்தில் கொடுமைகள் இழைக்கப்பட்டும் உரிமைகள் மறுக்கப்பட்டும் வருகின்றன. பெண்களின் பல்வேறு பிரச்சினைகள் தீர்க்கப்படாமலேயே இருந்து வந்ததோடு, எங்களுக்கு முன்பு ஆட்சி செய்தவர்கள் எவரும் இந்தப் பிரச்சினையை அணுகி தீர்வு காண முற்படவில்லை.

> **உழைப்பே உயர்வு**
>
> கடுமையான உழைப்பு வசதியையும் நன்மதிப்பையும் பெற்றுத் தரும்.
>
> —பெஞ்சமின் பிராங்க்ளின்
>
> விருப்பங்கள் வளர வளரத் தேவைகளும் வளர்ந்து கொண்டே போகும்.
>
> —பிளாட்டோ

இந்தியா விடுதலை அடைந்த பின்பு, மகளிரின் கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டில் சிறிது முன்னேற்றம் தென்பட்டாலும், பெண்களுக்கு எதிரான கொடுமைகளும், குற்றங்களும் முற்றிலுமாக நின்றுவிட்டன என்ற ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படவில்லை.

பல நேரங்களில் பெண்களுக்கு அவர்கள் இல்லங்களில், கணவராலும், கணவரது வீட்டாராலும் இழைக்கப்படுகின்ற கொடுமைகளும், அநீதிகளும், குற்றங்களாகவே இந்தச் சமுதாயத்தால் கருதப்படாத ஒரு மனப்பான்மையும், குற்றங்களாக அங்கீகரிக்கப்படாத ஒரு சூழ்நிலையும் இருந்து வருகின்றது. நமது பாரம்பரிய மிக்க பண்பாட்டின் ஆணிவேரான குடும்பம் என்கின்ற அமைப்பு, அன்பு, பாசம் என்பதன் அடிப்படையில் அமைந்துள்ளதால், இந்த அமைப்பிற்குச் சற்றும் குந்தகம் ஏற்படாமல், பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளையும், கொடுமைகளையும் களைந்து, குற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்கின்ற எண்ணத்துடனும், சட்டரீதியாக அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உதவிகளைப் பெற்றுத் தரவும், அவர்களது பிரச்சினைகளை அந்தரங்கமாக மனம் விட்டு எடுத்துரைத்து ஆலோசனைப் பெற்றுத் தீர்வு காணவும் ஒரு அமைப்பை ஏற்படுத்தித் தந்தாக வேண்டும் என்று உறுதியாகக் கருதினேன். அந்த உறுதியின் வெளிப்பாடு தான் இன்று அனைவரின் பாராட்டுதல்களோடு செயல்பட்டு வரும் 'அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்'.

1992-ஆம் ஆண்டு, முதல் அனைத்து' மகளிர் காவல் நிலையத்தைச் சென்னையில் நான் துவக்கி வைத்தபோது, இந்த அமைப்பு, சமுதாயத்தில் பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்து, நல்ல விளைவுகளை உண்டாக்கும் என்று உறுதியாக நம்பினேன். நான் எதிர்பார்த்ததைப் போலவே, ஆரம்பிக்கப்பட்ட சில நாட்களிலேயே, இந்த அனைத்து மகளிர் காவல் நிலையம், பொதுமக்களிடையே குறிப்பாக, மகளிரிடையே அமோகமான வரவேற்பைப் பெற்றது. எனவே இத்திட்டத்தை நான் விரிவுபடுத்தினேன். இன்று தமிழகத்தில் 57 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, முதல் முதலாகத் தொடக்கிய பெருமையும், மற்ற மாநிலங்களுக்கு, ஏன் சில அயல் நாடுகளுக்குக் கூட இந்த விஷயத்தில் ஒரு முன்னோடியாக விளங்குகின்ற சிறப்பும் நிச்சயமாகத் தமிழ்நாட்டிற்கு, என்றென்றும் சரித்திரத்தில் பெருமை சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

இதுவரை, இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், 47,158 மனுக்களைப் பெண்களிடமிருந்து பெற்று அவர்களின் குறைகளைப் பெருமளவு தீர்த்துள்ளன. 1,268 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 14,883 மனுக்களில் சமாதானம் ஏற்படுத்தப்பட்டு, பெண்களின் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. இத்தகைய அமைப்புகள் இல்லாமல் இருந்திருந்தால், இந்த அளவுக்குப் பெண்கள் துணிவுடன் முன்வந்து தங்களது பிரச்சினைகளை ஆண் காவலர்களுடன் பகிர்ந்துகொண்டிருப்பார்களா என்றால், அது கேள்விக்குரிய ஒரு விஷயமே! பெண்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட, தீமைகளையும், குற்றங்களையும் ஒரு குற்ற மனப்பான்மை இன்றி, அந்தரங்கமாக எடுத்துரைத்து, தீர்வு காண ஒரு அமைப்பு இன்று இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதே அவர்களுக்கு ஒரு துணிவையும், Moral Support-ஐயும் தரும் என்பதில் ஐயமில்லை.

அதுமட்டுமின்றி, பெண்களுக்கு எதிராகக் கொடுமைகளைப் புரிகின்றவர்களும், தங்களது பாவச் செயல்களிலிருந்து இனி எளிதில் தப்பிவிட முடியாது என்ற உணர்வையும், சட்ட நடவடிக்கைகளுக்கு ஆட்படுத்தப்படுவோம் என்ற பய உணர்வையும், இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தி இருப்பது, நமது இறுதி இலக்கிற்குக் கிடைத்துள்ள முதல் வெற்றியாகும். எனவேதான், இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் செயல்பாட்டை நேரிடையாகக், களப் பணிகளில் ஈடுபட்டுள்ள காவல் துறைப் பெண் ஆய்வாளர்கள் மூலமாகத் தெரிந்து கொள்ளவும், மகளிருக்கு எதிராக இழைக்கப்படுகின்ற குற்றங்களைக் களைவதற்காக, தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு செயல்பட்டு வருகின்ற, மாநிலப் பெண்கள் குழுமத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்தள் ஆகியோரின் சீரிய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கேட்டறியவும் இந்தக் கூட்டத்திற்கு நான் ஏற்பாடு செய்தேன்.

மற்ற காவல் நிலயங்களைப் போல் அல்லாமல், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் பெண்களின் பிரத்தியேகமான பிரச்சினைகளை எந்த் வகைகளில் அணுகித் தீர்வு கண்டு சமுதாய மறுமலர்ச்சிக்கு வழி வகுக்க வேண்டும் என்பது குறித்தும், அரசின் இலட்சியங்களைச் செயல்படுத்தக்கொண்டு வர வேண்டிய, சட்டத் திருத்தங்கள் குறித்தும், விதிமுறை மாற்றங்கள் குறித்தும் உங்களது கருத்துக்களை இங்கே தெரிவிக்க வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

> ஒழுக்கமில்லாத வீரம் ஒருவனைக் கோழையாக்கி விடுகிறது.
>
> —பிளாட்டோ
>
> உண்மையாக இருந்தாலும் பிறர் உள்ளம் வருந்துமர்று எதையும் சொல்லாதீர்கள்
>
> —சாரதா தேவியார்

இன்று நாம் மேற்கொண்டுள்ள இந்த விவாதம் புதிய சிந்தனைகளுக்கும், நல்ல முடிவுகளுக்கும் வழி வகுக்கும் என்று நம்புகிறேன். இந்தப் புதிய சிந்தனைகள் தமிழக மகளிரின் விரைந்த முன்னேற்றத்திற்கும், நாம் கற்பனை செய்து கொண்டிருக்கும் ஒரு இலட்சிய சமுதாயத்தை ஏற்படுத்துவதற்கும் உறுதுணையாக விளங்கும் என்று நம்புகிறேன்.

பெண் காவலர்களின் பணி சற்று வித்தியாசமானது. மனுதாரர்களை, ஒரு சகோதர உணர்வுடன் நடத்தி, சட்டப்பூர்வமான நடவடிக்கையை எடுப்பதோடு அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும், வழங்க வேண்டி உள்ளதால், பெண் காவலர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி முறையில், சில மாறுதல்களைக் கொண்டு வர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதோடு மட்டுமின்றி, தீங்கிழைக்கப்பட்ட பெண்களுக்கு உள்ளத்தாலும்

உடலாலும் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றி அவர்களின் நல்வாழ்விற்குத் தேவைப்படும் ஆலோசனைகளைத் தெரிவிக்கும் Counselling பணியையும் பெண் காவலர்கள்; மேற்கொள்ள வேண்டி இருப்பதால், அதற்கான பயிற்சியையும், புதிய அணுகுமுறைகளையும் பெண் காவலர்களுக்கு நாம் அளிக்க வேண்டும். சிறந்த பயிற்சியும், புதிய அணுகுமுறைகளும் நமது பெண் காவலர்களின் பணியை மேலும் சிறப்படையச் செய்யும் என்பதோடு, அதனால் இரட்டிப்புப் பலன் இந்தச் சமுதாயத்திற்கும்; மகளிருக்கும் கிடைக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

எனவே, இது குறித்தும் உங்களுடைய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த மூன்றாண்டுகளில் அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் தாங்கள் பெற்ற அனுபவத்தையும், அரசின் எண்ணங்களைச்சீரிய முறையில் செயல்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றியும் பெண் ஆய்வாளர்கள் எடுத்துரைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

"மாநிலப் பெண்கள் கமிஷன்" Statte Womens Commission தமிழக மக்களின் பிரச்சினைகளைப் புதிய கோணத்துடன் அணுகி, அவர்களுக்கு இழைக்கப்படும் குற்றங்களைத் தடுக்க மேற்கொண்டு வரும் நற்பணிக்கு எனது மனங்கனிந்த பாராட்டுதல்களை, முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். 'மாநிலப் பெண்கள் கமிஷனின் முதல் இடைநிலை அறிக்கை' இன்று வழங்கப்படுவதை அறிந்து, நான் மகிழ்ச்சி அடைகிறேன். அவர்கள் மேற்கொண்டு வரும் பணிகளைப் பற்றியும் அவர்களிடமிருந்து அறிந்து கொள்வதில் ஆர்வமாக உள்ளேன்.

பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்ற நிகழ்வுகளை எப்படி படிப்படியாகக் குறைப்பது என்பது குறித்தும் அத்தகைய குற்ற நிகழ்வுகள் மீது வழக்குப் பதிவு செய்து விரைவில் புலன் விசாரணையை முடித்து தண்டனை பெற்றுத் தருவது எப்படி என்பது குறித்தும், அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்குச் சென்றால், தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கையைப் பெண்கள் மனதில் ஏற்படுத்துவது குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குழந்தை விபச்சாரத்தை முழுமையாகக் கட்டுப்படுத்தவும், கையில் குழந்தைகளுடன், ஆதரவற்ற நிலையில் கணவனால் கைவிடப்படும் பெண்கள் அதாவது Deserted Women சமுதாயத்தில் எதிர் நோக்கும் சமூக பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், Dowry கொடுப்பதும் வாங்குவதும் ஒரு சமுதாயக் கேடு, ஒரு மாபெரும் பாவம் என்ற எண்ணத்தைச் சமுதாயத்தில் ஆழமாகப் பதிய வைக்கவும்

எது கடவுள் நெறி?

நல்லொழுக்கம், நற்செயல், நற்சாட்சி இவையே கடவுள் நெறியாகும்.

—சத்திய சாயிபாபா

இலட்சிய வாழ்க்கை

வாழ்க்கையில் ஒரு இலட்சியம் வேண்டும். இலட்சியம் இல்லாத மனிதன் விலங்குக்குச் சமம்.

—கிருபானந்த வாரியார்.

நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றியும், மாநிலப் பெண்கள் கமிஷன் ஆராய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநிலப் பெண்கள் கமிஷனின் செயல்பாடுகள் சிறப்பாக அமைய அவர்களுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் தமிழக அரசு வழங்க எப்போதும் தயாராக உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண்களின் நல்வாழ்விற்கு வழி வகுக்க வேண்டிய, மாபெரும் சமுதாயப் பொறுப்பு நமக்கு உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப் பட்டுள்ளேன். அந்த இலட்சியப் பணியில் அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் பங்கினை ஆய்வு செய்து அவர்களது பணிக்கு ஒரு புதிய முனைப்பை ஏற்படுத்துவதோடு உங்கள் மேலான கருத்துக்களை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

50 இலட்சம் ரூபாயில் தமிழ்நாடு விவசாயிகள் மேம்பாட்டு நலநிதி

இந்த ஆண்டு சுதந்திரத் தினத்தன்று சென்னை கோட்டைக் கொத்தளத்திலிருந்து சுதந்திர தின விழா சிறப்புரையாற்றிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தமிழக விவசாயப் பெருங்குடி மக்களின் நலனைக்கருத்தில் கொண்டு, அவர்கள் விபத்தில் இறந்தாலோ, உடல் ஊனமுற்றாலோ 25,000 ரூபாய் நிவாரண உதவித்தொகை (Financial Relief) வழங்கும் விவசாயிகள் இலவச ஈட்டுறுதித்திட்டம் (Accident Free Insurance Scheme for Agriculturists) ஒன்று செயல்படுத்தப்படும் என்று அறிவித்திருந்தார்.

அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, இத்திட்டத்திற்கான விதிமுறைகளை வகுத்து இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார். இத்திட்டத்தின் கீழ் 18 வயதிலிருந்து 60 வயதிற்குட்பட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுடைய விவசாய விளை பொருள்களைக் குறைந்தபட்சம் ஒருடன் ஒவ்வொரு ஆண்டும், தமிழ்நாடு விவசாய விளை பொருள்கள் விற்பனைச் சங்கத்தின் (TamilNadu Agricultural Marketing Society) மூலமாக விற்பனை செய்திருக்க வேண்டும்..65 வயது அடைகின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், நிவாரண உதவித்தொகையாக வழங்குகின்ற ஒரு திட்டமாகவும் விரிவுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையின் கீழ் இயங்கும் குழுவால் செயல்படுத்தப்படும். இந்தக் குழுவில் மாநில விவசாய விளை பொருள்கள் வாரியத்தின் தலைவர், விவசாய விளை பொருள்கள் விற்பனைச் சங்கங்களின் இயக்குநர், அரசு நிதித்துறைச் செயலாளர், விவசாயத்துறைச்செயலாளர் ஆகியோர் இடம் பெறுவார்கள். மாநில விவசாய விளை பொருள்கள் வாரியத்திலிருந்து கிடைக்கின்ற வருவாயைக் கொண்டு இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்த, 50,00,000 ரூபாயைக் கொண்ட ஒரு நிதி (Tamil nadu Farmers Development and Welfare Fund) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினை விரைந்து செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

மேன்மைக்கு வழி

வெட்கம், வெறுப்பு, அச்சம் ஆகியவற்றுக்கு ஆளாகிறவன், ஒரு போதும் மேன்மை அடைவதில்லை.

—இராமகிருஷ்ண பரமஹம்சர்

உலக அமைதி

உலகப் பற்றுக் குறைய குறைய மனதில் அமைதி வளரும்.

—சாரதா தேவியார்

வெற்றிக்கு வழி

தூய்மை, பொறுமை, விடா முயற்சி ஆகியவை வெற்றிக்கு இன்றியமையாதது.

—சுவாமி விவேகானந்தர்

பிள்ளைமலர்களின் பசிபோக்கும் புனிதப்பணி

சத்துணவுப்பணி சமுதாயப் பொறுப்புள்ள சமூக நலப்பணி என்றுணர்ந்து செயல்படுக!

6.12.1995 அன்று வேலூரில் நடைபெற்ற தமிழ்நாடு சத்துணவுப் பணியாளர்கள் மாநில மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய விழாச் சிறப்புரை

தமிழகத்தின் சரித்திரத்தில் மட்டுமின்றி, இந்தியச் சரித்திரத்திலேயே, தனக்கென்று ஒரு தனி இடத்தைப் பெற்றுள்ள நகரம், இந்த வேலூர் நகரம். சரித்திரச் சிறப்பு மிக்க, இந்தக் கோட்டை வெளி மைதானத்தில், நடைபெறுகின்ற எழுச்சி மிக்க, சத்துணவு அமைப்பாளர்களின் மாநில மாநாட்டில் கலந்து கொண்டு, உங்கள் அனைவரையும் காண்பதில் நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

இந்தக் கோட்டையிலே நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகள், இன்று வரலாற்றில் சிறப்பு பெற்று விளங்குவதைப் போல கோட்டை வெளி மைதானத்தில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த மாபெரும் விழா, எதிர்கால வரலாற்றில் ஒரு நினைவுகூரத்தக்க நிகழ்ச்சியாக உருவாகும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு அனைத்துத் தரப்பு மக்களின் தேவைகளை அறிந்து செயல்படுவதோடு, அரசு ஊழியர்களின் பிரச்சினைகளையும் தாயுள்ளத்தோடு அணுகி அவற்றிற்குத் தீர்வு கண்டு வருகிறது. இந்தப் பேருண்மையை விளக்கும் வகையில், இன்றைய நிகழ்ச்சி அமைந்துள்ளது என்றால், அது மிகையாகாது.

இந்த மாநாட்டினைச் சிறப்பாக ஏற்பாடு செய்ததோடு வேலூரில் எனக்கு நீங்கள் அளித்த மாபெரும் வரவேற்பையும், அதன் பின்னணியில் அமைந்துள்ள உங்களது அன்பையும் பாசத்தையும் எண்ணி, நான் உண்மையில் பெருமிதம் அடைகின்றேன். பேரறிஞர் பெருந்தகை அண்ணாவும், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆரும், எத்தகைய ஒரு சமதர்ம, சமத்துவச் சமுதாயத்தைப் படைக்க

வேண்டும் என்று விரும்பினார்களோ, சட்டமேதை பாபா சாஹேப் அண்ணல் டாக்டர் அம்பேத்கர், தாழ்த்தப்பட்ட மக்கள் விழிப்புணர்ச்சி பெற்று எத்தகையதொரு சமூக, பொருளாதார சுதந்திரத்தை அடைந்து நல்வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்த்தார்களோ அத்தகைய .ஒரு அருமையான சூழ்நிலையை உருவாக்கித் தருவதில், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, கடந்த நான்கரை ஆண்டுகளாக, ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகின்றது. அண்ணல் டாக்டர் அம்பேத்கரின் நினைவு நாளான இன்று, அவரது பெயரால் அமைந்துள்ள இந்த மாவட்டத்தில், மாபெரும் மக்கள் நலத் திட்டமாம்* சத்துணவுத் திட்ட அமைப்பாளர்களின் மாநில மாநாடு நடைபெறுவது சிறப்பிற்குரியதாகும். தாழ்த்துப் பட்ட மக்கள், நலிவடைந்தோர் ஏழை, எளிய மக்கள், ஆகியோரின் நலன் காக்க நாங்கள் நிறைவேற்றி வரும் சமூக நலத் திட்டங்களையும், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களையும், இந்த நேரத்தில் நினைவுகூர்வது, பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இது மக்கள் நல அரசு; மகளிர் முன்னேற்ற அரசு; மக்களின் எண்ணங்களையும், தேவைகளையும் ஆராய்ந்து, "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து" நன்மைகளை வழங்குகின்ற ஒரு அன்புச் சகோதரியின் அரசு.

நாகரிகங்களுக்கு ஆதாரமாக இருப்பது இயந்திரங்கள் அல்ல. பண்புகளே! நாகரிகத்தை இயக்கும் சக்தி உள்ளிருந்து எழும் அக உணர்வுகளே.

—டாக்டர்
எஸ். இராதாகிருஷ்ணன்

ஒரு நாடு நலம் பெற வேண்டும் என்றால், அந்த நாட்டின் மனித வளத்தை நாம் மேம்படுத்தியாக வேண்டும்.

"தனி ஒருவனுக்கு உணவிலை எனில்,
ஜகத்தினை அழித்திடுவோம்"

என்று மகாகவி பாரதி முழங்கிய சங்கநாதத்தை, மதிய சத்துணவுத் திட்டம் என்ற மாபெரும் திட்டத்தின் மூலம், பரிட்சார்த்தமாக நடைமுறைப் படுத்திக் காட்டியவர், எனது அரசியல் ஆசான், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள், மனித வளத்தினால் நியாயமான பலன்கள் கிடைக்க வேண்டுமென்றால், மனித நேயத்தையும் வளர்த்தாக வேண்டும் என்பதையும் அவர் நடைமுறைப்படுத்திக் காட்டினார்.

மலர்ந்து பூத்துக் குலுங்க வேண்டிய குழந்தை மலர்கள், பசியின் கொடுமையால் வாடி வதங்கக் கூடாது என்ற சமுதாய நல்லெண்ணம், வயிற்றுப் பசியால் அவர்கள் துன்புற்று, அறிவுப் பசியை தணித்துக் கொள்ளும் நல்ல வாய்ப்புகளை இழந்து விடக் கூடாது என்ற மனித நேயக் கோட்பாடு, ஆகியவற்றின் தீர்க்கமான வெளிப்பாடுதான். ஆண்டு ஒன்றுக்கு 400 கோடி ரூபாய் செலவில் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, செயல்படுத்தி வரும், "புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவுத் திட்டம்" ஆகும்.

இந்த சத்துணவுத் திட்டம் என்றால், எனக்கு ஒரு தனிப்பட்ட ஈடுபாடும், ஏன் - ஒரு Sentimental attachment-ம் உண்டு. ஏனென்றால், எனது பொது வாழ்க்கை தொடக்கத்திற்கும், சத்துணவுத் திட்டத்திற்கும் நெருக்கமான தொடர்பு உண்டு.

1982-ஆம் ஆண்டில், நான் பொது வாழ்க்கையில் அடியெடுத்து வைத்தேன். அதே ஆண்டு, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள், மதிய சத்துணவுத் திட்டத்தை தொடங்கினார்கள். எனது பொது வாழ்க்கையில், நான் வகித்த முதல் பதவி, சத்துணவுத் திட்ட உயர்மட்ட ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் பதவியாகும். பின்னர், நான் கழகத்தின் கொள்கைப் பரப்புச் செயலாளர் ஆனேன்; நாடாளு மன்ற உறுப்பினர் ஆனேன்; சட்டமன்ற உறுப்பினராகி, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராகச் செயலாற்றினேன். இன்று கழகப் பொதுச் செயலாளராகவும், தமிழக முதலமைச்சராகவும், மக்கட் பணியாற்றி வந்தாலும் எனது பொது வாழ்க்கையின், முதல் படியாக இருந்த சத்துணவுத் திட்ட உயர்மட்டக் குழு உறுப்பினர் பதவியை, நான் என்றைக்குமே மறந்தது இல்லை. நான் கட்சியிலும், அரசாங்கத்திலும் எந்த ஒரு பதவியையும் வகிப்பதற்கு முன்பே, மக்கள் நலப் பணிகளில், என்னை முழுமையாக ஈடுபடுத்திட, வழி வகுத்த காரணத்தினால், சத்துணவுத் திட்ட உயர்மட்டக் குழுவில் பணியாற்றியதை நான் ஒரு பெருமிதத்துடன் இன்றும் நினைத்து மகிழ்வது உண்டு.

நீங்கள் ஏற்றுக் கொண்டுள்ள பணி, சாதாரண அரசுப் பணி மட்டும் அல்ல! அது ஒரு சமுதாய நற்பணி! வளரும் தலைமுறையினருக்கு ஒரு தாயுணர்வுடன் அமுது படைத்து அவர்கள் வயிறார உண்டு மகிழ்வதைக் கண்டு, மனநிறைவு அடையும் மனிதத் தன்மை மிக்க மகத்தான பணி! அந்தச் சமுதாய உணர்வு சற்றும் குன்றாமல் நீங்கள் தொடர்ந்து ஒரு புதிய முனைப்புடன், உங்கள் பணிகளை ஒரு தொண்டு உள்ளத்துடன் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த நான்கரை ஆண்டுக் கால கட்டத்தில், உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு, பெண்கள் முன்னேற்றத்திற்கெனக் கொள்கை ஒன்றையும் குழந்தைகள் மற்றும் மகளிர் நலன் காக்க 15 அம்சத் திட்டத்தையும், பெண் சிசுவதையைத் தடுக்கத் தொட்டில் குழந்தைத் திட்டத்தையும், பெண் குழந்தைகளின் வாழ்வில், புதிய வசந்தத்தை ஏற்படுத்த, "பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தையும்" தீட்டி முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது.

உடல் ஊனமுற்றோரின் நலன் காக்க, நாங்கள் ஒரு புதிய கொள்கையை அறிவித்தோம். அந்தக் கொள்கையைச் செயல்படுத்த, ஊனமுற்றோர் நலத் துறை ஒன்றையும் ஏற்படுத்தினோம். சமுதாயக் கொடுமைகளிலிருந்து மகளிரைக் காப்பாற்ற, மாநிலம் முழுவதும் இன்று, அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் திறம்படச் செயல்பட்டு வருகின்றன. மாநிலப் பெண்கள் நலக் குழுமமும், முழுவதும் பெண்களாலேயே நடந்தப்படும் நியாய விலைக் கடைகளும் இன்று இந்தியத் துணைக் கண்டத்தின் கவனத்தை ஈர்த்துள்ளன.

கருவுற்ற மகளிருக்கு வழங்கப்படுகின்ற உதவித் தொகை, எங்கள் ஆட்சிக் காலத்தில் 200 ரூபாயிலிருந்து, 300 ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது. முதியோர் உதவித் தொகையை அதிகமானோருக்கு வழங்கியதோடு மட்டுமல்லாமல், ஓய்வூதியத் தொகையை இரண்டு மடங்காக்கி, மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் வழங்கும் திட்டத்தையும் அமல்படுத்தினோம்.

நலத் திட்டங்களின் பயன்கள், மக்களுக்குச் சென்றடைய, முனைப்புடன் செயல்படுகின்ற, அரசுப் பணியாளர்களின் நலனை, ஒரு தாயுணர்வுடன் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு பாதுகாத்து வருகின்றது. இன்று தமிழக அரசில் பணியாற்றி வரும், 12.23 லட்சம் பணியாளர்களில், 22.8 சதவீதத்தினர், அதாவது 2.7 லட்சம் பேர், சத்துணவுத் திட்டத்தில், பணி. புரிந்து வருகின்றார்கள் என்பதிலிருந்து, இத்திட்டத்தில் நாங்கள் செலுத்தி வரும் அக்கறை தெளிவாகும் என்று கருதுகிறேன்.

பகவானை வசப்படுத்த...

பக்தியாலும், ஞானத்தாலும் பகவானை நம் வசப்படுத்த முடியும்.

—ராமகிருஷ்ண பரமஹம்சர்

கூட்டுறவுத் துறையில், நியாய விலைக் கடைகளில் தொகுப் பூதியம் பெற்று பணியாற்றி வந்த பணியாளர்களில் 5 ஆண்டுகளுக்குமேல் பணி புரிந்த, 7500க்கும் மேற்பட்ட பணியாளர்களுக்கு, ஊதிய விகிதம் அதாவது Time Scale நிர்ணயம் செய்து, ஊதியம் வழங்கியுள்ளோம். பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த, அரசுப் பணியாளர்களுக்குப் பல புதிய சலுகைகள், உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் வழங்கப்பட்டுள்ளன என்பதைப் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய்க்கும் அதிகம், தொகுப் பூதியம் பெறும் சத்துணவு ஊழியர்களுக்கு, இன்று ஆண்டொன்றுக்கு 20 ரூபாய் ஊதிய உயர்வும், 150 ரூபாய்க்கும் குறைவாக தொகுப்பூதியம் பெறுபவர்களுக்கு மாதம் 10 ரூபாயும், கடந்த நாலரை ஆண்டு காலக் கட்டத்தில், 5 முறை வழங்கப்பட்டுள்ளன. மேலும், அரசு ஊழியர்களுக்கு இடைக் கால நிவாரணம் போன்ற சலுகைகள் வழங்கப்பட்ட போதெல்லாம், தொகுப்பூதியம் பெறுகின்ற சத்துணவுப் பணியாளர்களுக்கும் அந்தச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

உழைப்பே உயர்வு

அரிய காரியங்கள் எதுவும் உழைப்பின்றி ஒருபோதும் நிறைவேறாது.

—சுவாமி விவேகானந்தர்

மாதம் ஒன்றுக்கு, 500 ரூபாய் தொகுப்பூதியம் பெறுகின்றவர்களுக்கு, 1994 மற்றும் 1995 ஆகிய இரண்டு ஆண்டுகளில், ஆண்டொன்றுக்கு 40 ரூபாய் வீதம், மொத்தம் 80 ரூபாயும்; 500 ரூபாய்க்கும் குறைவாகத் தொகுப்பூதியம் பெறுகின்றவர்களுக்கு, ஆண்டொன்றுக்கு 25 ரூபாய் வீதம், மொத்தம் 50 ரூபாயும் வழங்கி மகிழ்ந்துள்ளோம்.

சத்துணவுத்திட்டத்தினை, ஒரு உள்ளார்ந்த ஈடுபாட்டுடன், சமுதாய நற்பணியாக மேற்கொண்டு வரும், சத்துணவு மற்றும் குழந்தை நல அமைப்பாளர்களது மனம் குளிர, சில புதிய அறிவிப்புகளை இங்கே வெளியிடுவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

தொகுப்பு ஊதியம் பெற்று வரும் சத்துணவு அமைப்பாளர்கள் தங்களுக்கு ஊதிய விகிதம் அளித்து, ஒவ்வொரு ஆண்டும் ஊதிய உயர்வு, அதாவது, Annual increment பெறும் முறையை, நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பல காலமாகக் கோரி வருகிறார்கள். அந்தக் கோரிக்கை இன்று என்னால் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 13 ஆண்டுகளாகத் தொகுப்பூதியம் மட்டுமே பெற்று வந்த, சத்துணவு அமைப்பாளர்களுக்கும், மற்றும் குழந்தைகள் நல அமைப்பாளர்களுக்கும், வரும் புத்தாண்டு முதல், ஊதிய விகிதத்தில், அதாவது, Time Scale-ல், ஊதியம் வழங்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். 200 ரூபாயிலிருந்து தொடங்கி, 400 ரூபாயில் முடியும், ஒரு புதிய ஊதிய விகிதத்தில், சத்துணவு அமைப்பாளர்களுக்கு, ஊதியம் நிர்ணயம் செய்யப்படும். இந்த புதிய ஊதிய விகிதம், நடைமுறைப் படுத்தப்படும்போது, சத்துணவு அமைப்பாளர்களுக்கு, 40 ரூபாயிலிருந்து 110 ரூபாய் வரை, உடனடியாகக் கூடுதல் ஊதியம் கிடைக்கும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அறிவிப்பினால் அரசுக்கு, 8 கோடி ரூபாயிலிருந்து, 9 கோடி ரூபாய் வரை கூடுதல் செலவினம் ஏற்படும் என்றாலும், ஒரு லட்சம் சத்துணவு அமைப்பாளர்கள் இதனால் பயன்பெறுவார்கள் என்பதை எண்ணும்போது இந்தக்கூடுதல் நிதிச்சுமை எங்களுக்கு நிச்சயமாக ஒரு பாரமாகத் தெரியவில்லை.

தற்போது, சத்துணவு வழங்கப்படும் ஒவ்வொருவருக்கும் காய்கறி, மற்றும் இதரபொருட்களை வாங்குவதற்காக 13 காசுகள் வீதம் வழங்கப்பட்டு வருகின்றது. சத்துணவில் கூடுதலாகக் காய்கறிகளையும், கீரைகளையும் சேர்க்க வேண்டும் என்பதற்காகக் காய்கறி மற்றும் இதரப் பொருட்களுக்கான செலவினத் தொகை, நபர் ஒன்றுக்கு 13 காசிலிருந்து, 18 காசாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் ஒவ்வொரு ஆண்டுக்கும், 15 கோடி ரூபாய் அளவில், கூடுதல் செலவினம் அரசுக்கு ஏற்பட்டாலும், இலட்சக்கணக்கான குழந்தைகளின், ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு இது வழி வகுக்கும் என்பதை எண்ணிப் பார்க்கும்போது என் மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

எல்லா சத்துணவு மையங்களுக்கும் சொந்தக் கட்டடங்களை ஏற்படுத்தித்தருவதில், எங்கள் அரசு ஒரு புதிய முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது. சத்துணவு மையங்களுக்கு, புதிய கட்டங்களைக் கட்டுவதற்னெத் தனியே, 5 கோடி ரூபாய் நிதி, ஒதுக்கீடு செய்யப்படும் என்பதையும், இதற்கான அரசாணை விரைவில் வழங்கப்படும் என்பதையும், மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பாதுகாக்கப்பட்ட குடிநீரும், முழுமையான சுகாதார வசதிகளும், எல்லா சத்துணவு மையங்களுக்கும் வழங்க வேண்டும் என்பதே எங்களது குறிக்கோள். எனவே, எல்லாச் சத்துணவு மையங்களுக்கும், படிப்படியாக இந்த வசதிகள் ஒரு நான்காண்டுக் காலகட்டத்தில் ஏற்படுத்தித்தர, ஒரு சிறப்புத்திட்டத்தை, அரசு விரைவில் செயல்படுத்தும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1982-ஆம் ஆண்டு, சத்துணவுத் திட்டம் ஆரம்பிக்கப்படும்போது, அதன் செலவினம், ஆண்டுக்கு

100 கோடி ரூபாய் மட்டுமே. 10 வருடங்களுக்குப்பின்பு, 1992-ஆம் ஆண்டு, எங்கள் ஆட்சிக் காலத்தில், இத்திட்டத்திற்கான ஒதுக்கீட்டை நாங்கள், 200 கோடி ரூபாயாக உயர்த்தினோம். சத்துணவுத்திட்ட விரிவாக்கத்தின் விளைவாக, இந்தச் செலவினம் கடந்த நான்கு ஆண்டுகளில், இரண்டு மடங்காகியுள்ளது. அதாவது 400 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழ்கின்ற கர்ப்பிணிப் பெண்கள், கூடுதலாக ஊட்டச் சத்து பெறவும், கர்ப்ப காலத்தில் ஏற்படும் ஊதியக் குறைவைச் சமாளிக்கவும், மாதம் ஒன்றுக்கு, 75 ரூபாய் வீதம், 4 மாதங்களுக்கு 300 ரூபாய் வழங்கி வருகின்றோம். இந்த ஊட்டச்சத்து நிதி உதவித்திட்டத்தின் கீழ் 2 இலட்சம் கர்ப்பிணிப்பெண்கள், தற்போது பயன் பெற்று வருகின்றார்கள். ஆனால், வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழ்கின்ற ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு சில நேரங்களில் சரியான உணவு கூட கிடைக்காத சூழ்நிலைகள் இருந்து வருவதால், இனி அந்தக்குறையைப் போக்க, 2 இலட்சம் கர்ப்பிணிப் பெண்களுக்கும், இன்று முதல், சத்துணவு வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்வுக்காகச் சமுதாய நல நோக்குடன் பாடுபட்ட, அண்ணல் B.R.அம்பேத்கர் அவர்களின் நினைவு நாளையொட்டி, அரசு நிதி உதவி பெறும் கர்ப்பிணிப் பெண்கள் அனைவருக்கும் சத்துணவு வழங்கும் திட்டம், இன்று முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தைச் செயல்படுத்த, 4 கோடியே 12 இலட்சம் ரூபாய், தமிழக அரசுக்குக் கூடுதலாகச் செலவாகும் என்றாலும், எனது அன்பிற்குரிய சகோதரிகளின் நல்வாழ்விற்கும், உடல் நலத்திற்கும் இது வழி வகுக்கும் என்பதை எண்ணிப் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

காவல் துறையில், காவலர்களாகப் பணி நியமனம் பெற குறைந்தபட்ச உயர அளவு, 168 சென்டி மீட்டர், என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், பல நேரங்களில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்குப் பிரச்சினைகள் ஏற்பட்டு, அவர்கள் அதிக அளவில், காவல் துறையில் பணி பெறுகின்ற வாய்ப்பினை இழக்க வேண்டி உள்ளது என்பது எனக்குத் தெரிய வந்துள்ளது. இந்த குறையைப் போக்கிடவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள், அதிக அளவில் காவல் துறையில் நியமனம் பெற வழி வகுக்கவும், காவல் நியமன விதிகளில் தக்க மாறுதல்கள் செய்யப்படும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு, இந்தக் குறைந்தபட்ச உயரத்தின் அளவு, 168 சென்டி மீட்டர் என்பதை 3 சென்டி மீட்டருக்குக் குறைத்து, 165 சென்டி மீட்டர், என நிர்ணயம் செய்யப்படும்

அறிவைத் தனியாக இருந்து உயர்த்திக் கொள்ளலாம். ஆனால், குணத்தை மக்களோடு பழகித்தான் அமைத்துக்கொள்ள வேண்டும்.

—கதே

இயற்கை ஒரு பணியை ஆற்றவேண்டியுள்ளபோது அதைச் செய்துமுடிக்க ஒரு மேதையைப் படைக்கிறது.

—ரால்ப் எமர்ஸன்

சிறந்த மனிதன் என்பவன் சொற்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துவான்; நடத்தையில் உறுதியாக இருப்பான்.

—கன்பூசியஸ்

முயற்சி எல்லா வேளைகளிலும் இன்பம் பயப்பதில்லை. ஆனால், முயற்சி இன்றி இன்பம் ஒரு போதும் பிறப்பதில்லை.

—பெஞ்சமின் டிஸ்ரேலி

ரூ.18 இலட்சம் செலவில் நவீன வேளாண் உத்தி

குறிப்பிட்ட பயிர் வகைகளுக்குத் தேவைப்படுகின்ற சொட்டு நீர்ப் பாசனம் மற்றும் ஈரப்பதத்தைக் குறிப்பிட்ட பயிர் வகைகள் தக்க வைத்துக் கொள்வதற்காக அவற்றின் மீது பிளாஸ்டிக் தாள்களைப் போர்த்துதல் ஆகிய நவீன வேளாண் உத்திகளைத் தமிழக விவசாயிகளிடையே பரப்ப வேண்டும் என்ற நோக்கத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 18 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

ஈரப்பதத்தைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் கொண்ட பயிர் வகைகள் பயிரிடத் தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் 380 எக்டேர் நிலப்பரப்பில் அமைந்துள்ள பயிர் வகைகள் மீது போர்த்தப்படுகின்ற பிளாஸ்டிக் தாள்களை வாங்கிப் பயன்படுத்துவதற்காக 18 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணைபிறப்பித்துள்ளார்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு விரைவில் இந்த நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார்.

என்பதையும், இனி 165 சென்டி மீட்டர் அதாவது ஐந்தரை அடி உயரம் இருந்தாலேயே, அவர்கள் காவல் துறையில் பணி புரிய வழி வகை செய்யப்படும் என்பதையும், டாக்டர் அம்பேத்கர் அவர்களின், நினைவு நாளான இன்று இந்த வேலூர்க் கோட்டையிலிருந்து அறிவிப்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். நிச்சயமாக இந்த அறிவிப்பு, சமூக நீதியை நிலை நாட்ட உதவிகரமாக விளங்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

சத்துணவு அமைப்பாளர்கள் மாநில மாநாட்டினை, இத்தனை பிரம்மாண்டமான முறையில், சீரோடும், சிறப்போடும் ஏற்பாடு செய்த, மாண்புமிகு சமூக நலம், கைத்தறி மற்றும் துணி நூல் அமைச்சர், புலவர் திருமதி ஆர். இந்திரகுமாரி அவர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், சத்துணவு அமைப்பாளர்களின் சங்கங்களுக்கும், மாநிலத்தின் எல்லாப்பகுதிகளிலிருந்தும் வந்து, இங்குப் பெருந்திரளாகக் குழுமி உள்ள சத்துணவு அமைப்பாளர்களுக்கும், எனது இதயங்கனிந்த பாராட்டுதல்களையும், நெஞ்சார்ந்த நன்றியையும் உரித்தாக்கிக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்தைச் செயல்படுத்தி வரும் ஊழியர்கள் அனைவரும், இதனை ஏதோ ஒரு பணி என்று கருதாமல், தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள மாபெரும் சமுதாயப் பொறுப்பு, என்பதை உணர்ந்து இதனை ஒரு சமூக நலப் பணியாகக் கருதி, பணியாற்றிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சத்துணவுப் பணியாளர்களின் தேவைகளை, ஒரு தாயுணர்வுடன் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, நிறைவேற்றித்தர என்றென்றும் தயாராக உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய இந்த விழா, சத்துணவுத்திட்டச் சரித்திரத்தில், ஒரு புதிய மைல் கல்லாக அமையும் என்று உறுதியாக நம்புகிறேன். நீங்கள் அனைவரும் எல்லா நலனும், எல்லா வளமும் பெற்று, பெருவாழ்வு வாழ வேண்டும் என்று நிறைந்த மனதோடு நெஞ்சார வாழ்த்துகிறேன். ✻

தமிழில் கதைப் பாடல்

ஆசிரியர் :
டாக்டர் அ.நா. பெருமாள்

வெளியீடு :
உலகத் தமிழாராய்ச்சி
நிறுவனம்,
தரமணி, சென்னை 113.

பக் : 280 விலை : ரூ 25

நாட்டுப்புற மக்களின் நாவிலே தவழ்ந்து, காற்றிலே கலந்து, காதிலே ஒலிப்பது தான் கதைப் பாடல்கள். எளிமை இதன் இலக்கணம், இனிமை இதன் சுபாவம். சமுதாய வீதிகளில் நடமாடும் மனிதர்களைப் படம் பிடித்துக் காட்டும் இந்தக் கதைப் பாடல்களின் அமைப்பு மற்றும் கதைப் பின்னல் முறைகளை அழகுற எடுத்துக் கூறுகிறார் ஆசிரியர்.

மனித வாழ்வில் நேரிடும் சிக்கல்கள் சீர்கேடுகளை எடுத்துக் காட்டும் கதைப் பாடல்களைக் கோடிட்டுக் காட்டி, 'கணவனே பெண்களின் வாழ்வுக்கு உயிர்' என்று சொல்லாமல் சொல்லும் சொல்லோவியங்களையும் சுட்டிக் காட்டுகின்றார் நூலாசிரியர். வாழ்ந்து இறந்தவர்களின் வணக்கமாக விளங்குவன இந்தக் கதைப் பாடல்கள். ஒழுக்கத்தை உயிருக்கும் மேலாக மதித்துள்ள சமுதாய நிலையைக் காட்டுவன இந்தக் கதைப் பாடல்கள். இவற்றையெல்லாம் அழகுறப் பகுத்தும் தொகுத்தும் கூறுகிறது இந்நூல். தமிழ் ஆர்வலர், ஆராய்ச்சி மாணவர்க்கு இந்நூல் மிகச் சிறந்த கையேடு.

–பி.வி.கிரி

புதுயுகத் துறவியின் புரட்சிக் கர்ஜனை

ஆசிரியர்: தனஞ்ஜெய சாரதி

வெளியீடு: வாணி லட்சுமி
பதிப்பகம்,
118, சல்லிவன் வீதி
கோவை - 1

பக்கம்: 150 விலை: ரூ.20

அமெரிக்க நாட்டுச் சிகாகோவில் முன்னர் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய சொற்பொழிவுகள் சரித்திரச் சிறப்பு மிக்கவை. அவருடைய அந்தச் சொற்பொழிவு இந்தியாவின் ஆங்கில ஏகாதிபத்திய ஆணவத்தை எடுத்துக்காட்டுவதாகவும், அடிமைப் பட்டுக் கிடந்த இந்திய மக்கள் எழுச்சிபெறச் செய்வதாகவும், மொத்தத்தில் மனிதாபிமானத்தின் மொத்தப் படப்பிடிப்பாகவும் விளங்குகிறது.

நூல் நயம்

விவேகானந்தரின் சொற்பொழிவு ஆங்கிலத்தில் நூல் வடிவில் வெளிவந்தது; அதன் முக்கியப் பகுதிகளின் தமிழ் மொழி பெயர்ப்பே இந்த நூல். ஒரு நூற்றாண்டுக் காலத்திற்குப்பின் இந்த நூல் வெளிவந்த போதிலும் கூட, எக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய கருத்துகள் இதில் மிகுந்துள்ளன.

எல்லாத் தரப்பினரும், எந்த வயதினரும் படித்துப் பக்குவப் படலாம்.

–முடிகொண்டான்

உள்மனப் பூக்கள்

ஆசிரியர்: க.அ. பிரகாசம்

வெளியீடு: பைந்தமிழ்ப் பதிப்பகம்,
21, காங்கேயம் சாலை,
கொடுமுடி,
பெரியார் மாவட்டம்-
638 151.

பக்கம்: 144 விலை: ரூ.20

இனிமையும் எளிமையும் கொண்ட சொற்களால் யாக்கப்பட்ட 101 கவிதைகளின் தொகுப்புநூல் இது. மரபுக் கவிதைகள், சந்தக் கவிதைகள் கதம்பமாய் மணக்கின்றன; கரும்பாய் இனிக்கின்றன.

'அன்பமைந்த தூய்மைமிகு
குமுகா யத்தில்
அனைவருமே ஒருசாதி
அதுவே நீதி!'

என்பன போன்ற சீர்திருத்தக் கருத்துகள் நிறைந்துள்ள கவிதைகள் பல எழுத்துச் சுதந்திரத்தின் மேல் இவருக்குள்ள பற்றுதலை வெளிப்படுத்துகின்றது.

'வன்முறை யால்ஒரு
போதும் நன்மையை
வளர்த்திட முடியாது - இந்த
வையகத் தில்அது
வென்றிருந் தாலும்
நின்று நிலைக்காது!'

என்பன போன்ற சந்தப் பாடல்கள் நம் சிந்தனையைத் தூண்டுகின்றன. அவற்றுள் சில, ஏடுகளில் வெளிவந்தவை, வானொலியில் ஒலிபரப்பானவை. இந்த இனிய நூலைத் தமிழ் ஆர்வலர்கள் வாங்கிப் படித்து வற்றாத மகிழ்வடையலாம்.

– கங்கைகொண்டான்

புலவர் சிறப்பு

ஆசிரியர் : கவிஞர் தமிழ்முடி

வெளியீடு :
தமிழ்முடி நிலையம்
எச். 10. கே. பொன்னம்பலம்
சாலை, கே. கே. நகர்,
சென்னை 600 078.

விலை: ரூ. 8.50 பக்கம்: 64

நிர்வாக இயந்திரம் சீராக இயங்கிட அரசு அலுவலருக்கு வாகனம், கருவிகள்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை

கடந்த 24.8.1995 அன்று சென்னையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில், அரசின் மாவட்ட நிர்வாக இயந்திரம் சீராகவும், சிறப்பாகவும் இயங்க வழி செய்யும் வகையில் மாவட்ட அரசு அலுவலர்களின் பயனுக்கென வாகனங்களும், கருவிகளும் புதிதாகத் தேவையுள்ள ஒரு சில மாவட்டங்களுக்கு வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்திருந்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அந்த அறிவிப்பின் அடிப்படையில் தற்போது செங்கல்பட்டு எம்.ஜி.ஆர் மாவட்டத்தில் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள், இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் நேரத்தில் துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய அவசியத்தை முன்னிட்டு 12.5 லட்சம் ரூபாய் செலவில் ஒரு V.H.F (Wireless) கருவி அமைத்துக் கொடுக்கவும், கன்னியாகுமரி மற்றும் தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டங்களில் பணி புரியும் வட்டாட்சியர்களுக்கு ஜீப்புகள் வழங்கவும், கொடைக்கானலில் பணி புரியும் வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியர்களுக்கு ஜீப்புகள் வழங்கவும், புதுக்கோட்டை மாவட்டத்திற்கும், வட ஆர்க்காடு அம்பேத்கர்மாவட்டத்திற்கும் முக்கியப் பிரமுகர்கள் வருகையின்போது பயன்படுத்த கார்கள் வழங்கவும், சென்னை மாவட்டாட்சியர் அலுவலகத்திற்கு லைன் பிரிண்டர் (Line Printer) வழங்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இந்தக் கருவிகளும், வாகனங்களும் உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

புகழ் பெற்ற புலவர்களான பிசிராந்தையார், காளமேகம், ஔவையார், சேக்கிழார், தாகூர், போன்றவர்கள் வாழ்கையில் நிகழ்ந்த, அவர்களின் புகழுக்குக் காரணமான அரிய நிகழ்ச்சிகளையும் அந்நிகழ்ச்சியின் போது அவர்கள் பாடிய கவிதைகளையும் தொகுத்துத் தரப்பட்டிருக்கிறது.

மாணவர்கள் படித்துப் பயன் பெறலாம்.

தர்மத்தின் குரல்

ஆசிரியர் :
ஞா. மாணிக்கவாசகன்

வெளியீடு :
சகுந்தலை நிலையம்,
58, ஐயப்ப செட்டி தெரு,
மண்ணடி,
சென்னை - 600 001.

விலை: ரூ. 30 பக்கம்: 212

மகாபாரதக் கதையை அறியாத இந்தியர் இருக்க முடியாது. சிந்திக்க வைக்க, படித்துப் பயன் அடைய, அதன்படி வாழ முயற்சிக்க உதவும் நூல் வரிசையில் முதன்மையானதும், மிக முக்கியமானதும் ஆகும் இது.

மகாபாரதக் கதையை எளிய நடையில், இனிய தமிழில் எழுதியுள்ளார் ஆசிரியர். கதை மாந்தரின் பட்டியல் மிகவும் உபயோகமான ஒன்று.

காணிக்கை

ஆசிரியர் : மதுரை ஜேஸன்

வெளியீடு : எஸென்ஷியல்
பப்ளிகேஷன்ஸ்
1719-C திருச்சிப்பாதை
கோயம்புத்தூர் -
641 045.

விலை: ரூ. 5 பக்கம்: 90

மகாபாரதத்தில் ஓர் சம்பவம், பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் ஆட்சியில் நடந்த ஒரு நிகழ்ச்சி, பகவத் கீதை ஆகியவற்றை நாடகமாகவும், இவற்றோடு ஓர் சமூக நாடகத்தையும் கொண்டிருக்கிறது; இந்நூல். மேடையேற்ற நல்ல ஓரங்க நாடகங்கள் இவை.

—குமார்

16 கோடி ரூபாய் செலவில் 21,325 ஏக்கர் தரிசு நிலங்கள் விளை நிலங்களாக மேம்பாடு!

விரைந்து செயல்படுத்த மாண்புமிகு முதல்வர் ஆணை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள தரிசு நிலங்களை, விளை பொருள்கள் பயிரிடத் தக்க விளை நிலங்களாக மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில், தரிசு நிலம் மேம்பாட்டுப் பணிகள் (Waste Land Development Project) விரைந்து அதிக அளவில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஏற்கெனவே கருத்துத் தெரிவித்திருந்தார். தற்போது நடப்பாண்டில் (1995-96) தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட இடங்களில் தரிசு நில மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

1. புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டையில் 1.26 கோடி ரூபாய் செலவில் 2,155 ஏக்கர் நிலப்பரப்பு.

2. பெரியார் மாவட்டத்தில் 3.44 கோடி ரூபாய் செலவில் 4,000 ஏக்கர் நிலப்பரப்பு

3. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் 2.85 கோடி ரூபாய் செலவில் 3,073 ஏக்கர் நிலப்பரப்பு.

4. தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டம் கடிலம் நதிப் படுகையில் (Gadilam River Basin) 2.50 கோடி ரூபாய் செலவில் 3,010 ஏக்கர் நிலப்பரப்பு.

5. வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் பொன்னையார் நதிப் படுகை (Ponniyar Watershed) 2.96 கோடி ரூபாய் செலவில் 5,000 ஏக்கர் நிலப்பரப்பு.

6. திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் செங்கம் நதிப் படுகையில் (Chengam Watershed) 2.56 கோடி ரூபாய் செலவில் 3,900 ஏக்கர் நிலப்பரப்பு.

7. மருந்துவாழ்மலைப் பகுதியில் 25 இலட்சம் ரூபாய் செலவில் தொழில்நுட்ப வளர்ச்சி, விரிவாக்கம் மற்றும் பயிற்சி (Technology Development, Extension & Training) என்ற திட்டத்தின் கீழ் 187 ஏக்கர் நிலப்பரப்பு.

—ஆகிய 7 இடங்களில் தரிசு நில மேம்பாட்டுப் பணிகள் விரிவான அளவில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ள இந்த 7 திட்டங்களில் இணைந்து பணிபுரிய, அந்தந்த மாவட்டங்களிலுள்ள மக்களுக்கு முதலிடமும், 50 சதவிகிதத்திற்கும் மேலான பயனாளிகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்தும், நலிந்த பிரிவினத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார். இந்த ஏழு திட்டங்களும் இவ்வாண்டு விரைந்து செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதல்மைச்சர் அவர்கள் அறிவுறுத்தி உள்ளார்.



ஏழை நோயாளிகளுக்கு

இலவசச் சிகிச்சை அளிக்க வேண்டும்!

தனியார் மருத்துவமனைகளுக்கு

–மாண்புமிகு முதல்வர் வேண்டுகோள்

இந்த மாபெரும் சென்னை நகரில் இருதய நோய்ச் சிகிச்சை வளாகத்தில் இந்தப் புதிய இருதய நோய் மருத்துவ மனையைத் தொடங்கி வைப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இருதய நோய் சம்பந்தப்பட்ட பல்வேறு சிக்கலான பிரச்சினைகளுக்கு இன்னும் சிறப்பான பரிகாரங்கள், தீர்வு காண்பதில் முனைந்திருக்கும் மருத்துவ நிபுணர்களிடையே உரையாற்றுவதை ஒரு அரிய வாய்ப்பாக நான் கருதுகிறேன்.

டாக்டர் கே.எம். செரியன் மேற்பார்வையிலும், கண்காணிப்பிலும் இப்படிப்பட்ட ஒரு பிரம்மாண்டமான வளாகத்தைக் காண்பது மகிழ்ச்சி தருகிறது. அதற்கு ஒரு முக்கியக் காரணம், இந்தக் கட்டடத்துக்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு 1992-இல் நான்தான் அடிக்கல் நாட்டினேன் என்பதாகும். டாக்டர் செரியனின் அந்த மகத்தான கனவு இன்று நனவாகி இருப்பதில் அகமகிழ்கிறேன்.

இந்த மாபெரும் மனிதாபிமானப் பணியில் பங்குபெற்ற முறையில் இதற்கு அடிக்கல் நாட்டியதிலும், இன்று தொடக்க விழாவில் பங்கு கொள்வதிலும், பெருமகிழ்ச்சி அடைகிறேன். டாக்டர் செரியனுக்கும் எடுத்த பணியை 3 ஆண்டுகளில் சிறப்பாக முடித்த அவரது குழுவினருக்கும் என் மனப்பூர்வமான பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவர்கள் இந்த அளவுக்கு ஈடுபாடு கொண்டு உழைத்திருக்காவிட்டால் மிக தரமான ஒரு மருத்துவமனையை அற்புதமான முறையில் கட்டி முடித்திருக்க இயலாது.

கலையிலும், கலாச்சாரத்திலும் சர்வதேசப் புகழ் பெற்று நிற்கும் இந்தச் சென்னை மாநகரில் உலக மருத்துவ விஞ்ஞானப் பேரவைப் பிரதிநிதிகளை வரவேற்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இங்கு தங்கியிருக்கும் சில நாட்களில், எங்கள் கலை, கலாச்சாரச் செல்வங்களை எல்லாம் பார்க்கும் வாய்ப்பினை நீங்கள் பெறுவீர்கள். இது மறக்க முடியாத நிகழ்ச்சியாகவும் என்றும் உங்கள் மனதில் நிற்கும்.





சித்த, ஆயுர்வேத நாட்டு மருத்துவமுறை

எங்கள் நாட்டுக்குச் சிறப்பான மருத்துவப் பாரம்பரியம் உண்டு. பண்டைய சாஸ்திரங்களில் பெருநூல்களில் ஆயுர்வேதம், சித்த இயற்கை மருத்துவம் சிறப்பிடம் பெற்றுள்ளன. மூலிகை, பச்சிலை, வைத்தியம் மற்றும் நாட்டு இரசாயன முறைகள் ஆகியன எங்கள் மருத்துவ முறையில் தனி முத்திரைப் பதித்தவை. அதர்வண வேதம், மருத்துவ மேதைகள், சுஷ்ருதா, தன்வந்திரி ஆகியோர் இந்திய நாட்டு மருத்துவ முறையை செம்மைப்படுத்தியோர் ஆவர்.

மக்களின் துன்பங்களைத் தீர்ப்பதில் அந்த மருத்துவ மாமேதைகளுக்கு இந்த நேரத்தில் என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று மாற்று இருதயம், மாற்று சிறுநீரகம் முதலியன எல்லாம் புதிய அற்புதங்களாக வந்துள்ளன.

தென்னிந்தியாவில் முதலாவது வெற்றிகரமான இருதய மாற்றுச் சிகிச்சை மூலம் பெரும் புகழ் எய்திய டாக்டர், செரியனுக்கு இந்த நேரத்தில் பாரார்ட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருதய மாற்றுச் சிகிச்சை, முதல் வெற்றியைத் தொடர்ந்து மீண்டும் ஒரு வெற்றியினை அவர் கண்டிருக்கிறார்.

உலகின் முதலாவது இதய மாற்று ஆபரேஷன் செய்த டாக்டர் கிறிஸ்டியன் பர்னார்டு இங்கே வந்திருக்கிறார். அவருக்கும் முதலாவது மாற்று இருதயத்தைப் பெற்ற மிமுன் பீவிக்கும் ஒரே மேடையில் பாராட்டுத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

உயிரைக் காப்பாற்றுவதில் உள்ள மகிழ்ச்சி

இந்த மருத்துவத் துறைக்கு, மருத்துவ மேதைகளுக்குச் சமூகம் எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறது. ஓர் உயிரைக் காப்பாற்றுவதில் உள்ள மகிழ்ச்சியைவிடச் சிறந்த உயர்ந்த மகிழ்ச்சி வேறு இருக்க முடியாது.

நோய்த் துன்பத்தில் உழலும் மக்களின் துயர் தீர்க்க, இரவு பகலாகப் பாடுபடும் மருத்துவ நிபுணர்கள், ஆரோக்கியமான நல்வாழ்வு வாழ உதவும் அவர்கள், மிக சிறப்பான பாராட்டுக்கு உரியவர்கள்.

டாக்டர்களின் அரிய சேவை மட்டும் இல்லை என்றால், எத்தனையோ பேர் நோய்களாலும், தொத்து நோய்களாலும் மாண்டிருப்பார்கள்.



இந்த டாக்டர்கள் நம் பெரு மதிப்புக்குரியவர்கள். உன்னத மான தொழில் புரியும் டாக்டர்கள் ஹிப்போகிரேட் போன்ற மாமேதைகளின் கனவுகளை நனவாக்க முற்பட வேண்டும்.

மக்களின் உடல்நலத் திட்டங் களை ஏற்றுச் செயல்படுத்து வதில், தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது என்பதில் நான் பெருமை அடைகிறேன். மக்கள் நலம் காக்கும் சுகாதாரத் திட்டங் களுக்காக, இந்த ஆண்டில் மட்டும் நமது மாநில அரசு 666 கோடி ரூபாய் செலவிடுகிறது. இது நமது பட்ஜெட்டில் 7 சதவிகிதம் ஆகும்.

நோய்த் தடுப்பு, நோய்த் தீர்க்கும் பணி ஆகியவற்றில் அரசு எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதை இது புலப்படுத்துகிறது.

75 இலட்சம் குழந்தைகள் பயன் பெற்ற திட்டம்

குழந்தைகள் நோய் நொடி இல்லாமல் ஆரோக்கியமாகத் திடமாக வளரவேண்டும் என்ப தற்காக, நான் முதலமைச்சர் பொறுப்பு ஏற்ற பின்பு, 1992இல் மாபெரும் சுகாதார நலத் திட்டம் ஒன்றினை மேற்கொண்டேன். சிறுநோய்களைத் தீர்த்தல், மற்றும் பெரிய மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்தல் என்ற வகையில் இத்திட்டத்தின்கீழ் 75 இலட்சம் குழந்தைகள் பலன் பெற்றார்கள்.

இத்துடன் குழந்தைகள் நல மேம்பாட்டுக்காக 15 அம்சத் திட்டத்தையும் தமிழக அரசு மேற்கொண்டது. இதன்மூலம், குழந்தைகள் நல வளர்ச்சி ஒவ்வொரு கட்டத்திலும் கண் காணிக்கப்படுகிறது.

மாநிலக் குழந்தைகளுக்கு மிக நவீன மருத்துவம் உள்ளிட்ட அனைத்துச் சிகிச்சைகளும் இலவசமாக அளிக்கப்படு கின்றன. இருதயச் சிகிச்சைப் பிரிவில் மட்டும் 500 குழந்தைகள் பயனடைந்திருக் கின்றனர்.

பிரபலமடைந்து விட்ட நோய்த் தடுப்பு முறைகள்

முறையான அனைத்து மருத்துவ உதவியை மக்களுக்கு அளிப்பதிலும், எங்கள் அரசு முக்கியக் கவனம் செலுத்தி வருகின்றது. போலியோ தடுப்புக்குச் சொட்டு மருந்து, கண் புரைத் தடுப்பு, 'எய்ட்ஸ்' தடுப்பு, சிசுக்கள் அகால மரணம் தடுப்பு, குடும்பக் கட்டுப்பாடு ஆகியன மிகப் பிரபலமடைந்து விட்டன. கி.பி. 2000 ஆண்டுக்குள் அனைத்து மக்களுக்கும் ஆரோக்கிய வாழ்வு, வசதி என்ற தேசியத் திட்டத்தின் இலக்கினை, தமிழகம் ஏற்கெனவே அடைந் தாகிவிட்டது.

தமிழகத்தில் பிறப்பு விகிதம் 1000க்கு 19 என்ற அளவுக்குக் குறைந்திருக்கிறது. தேசிய சராசரி 1000 பேருக்கு 28.6 சதவிகிதம் என்ற நிலையில் தமிழகம் 19 என்ற அளவுக்கு மாநிலங் களிடையே 2-வது இடம் வகிக்கிறது. கி.பி. 2000-க்குள் மக்கள் பிறப்பு விகிதம் 1000க்கு 15 என்ற அளவுக்கு இறங்கி விடும் என்று நம்புகிறேன்.

குழந்தைகளைப் பீடிக்கும் நோய்களைத் தடுப்பதில் அதற்கான தடுப்பு முறைகளில் தமிழகம் 100-க்கு 100 வெற்றி கண்டிருக்கிறது. யுனிசெப் நிறுவனமும், இந்த நோய்த் தடுப்புச் சாதனையைப் பாராட்டியிருக்கிறது.

தமிழகத்தில் சிசுக்கள் மரண விகிதம் 1000க்கு 59 என்ற அளவுக்குக் குறைந்துள்ளது. இந்த வகையில் தேசிய சராசரி 1000க்கு 73 என்பது குறிப்பிடத்தக்கது.

மக்கள் தொகை அளவைச் சீரான நிலையில் வைத்துக் கொள்வதில் தமிழகம் முதலிடம் வகிக்கின்றது. கி.பி.2010 வாக்கில் மக்கள் தொகைப் பெருக்கம் சமநிலை அளவினை அடைந்து விடும் என்று தெரிவித்துக் கொள்வதிலும் பெருமிதம் அடைகிறேன்.

தனியார் நிறுவனங்களுக்கும் பொறுப்பு

மக்களுக்கு ஆரோக்கிய வசதிகள் அளிப்பதென்பதை அரசு நிறுவனங்களிடம்மட்டுமே விட்டு விடக்கூடாது என்பது எனது கருத்து. மக்கள் நலம் கருதும் அரசாங்கம் உள்ள நாடு இது. இந்த வகையில் அதிகமான பொறுப்பு அரசுக்கு உண்டு என்றாலும், மக்கள் உடல் நலம், ஆரோக்கியம் பேணுவதில் தனியார் நிறுவனங்களும் ஈடுபட வேண்டும்.

மருத்துவத் துறையில் வணிகக் கண்ணோட்டம் முக் கியப் பங்கு வகிக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. மருத்துவத் துறையின் தனியார் துறையினர் வர்த்தகம் சேவை இடையே ஒரு நியாயமான கண்ணோட்டத் தைக் கடைப்பிடிக்க வேண்டும். இலட்சோப இலட்சம் சாமானிய மக்களுக்கு நன்மை தரும் படியாக, புதிய சுற்றுச் சூழலை ஏற்படுத்த வல்லதாக இருக்க வேண்டும்.

தம்மைச் சரிபடுத்திக் கொள்பவர் உலகைச் சரி படுத்தியவராவர்.

—சுவாமி விவேகானந்தர்

அன்பு எங்கிருக்கிறதோ, அங்கு பாசமும் பணிவும் அடைக்கலம்.

—தாமஸ் கார்லைல்

அவரவர் முயற்சிகளுக்கு ஏற்ப அரியனவாயும், பெரிய னவாயும் விளங்குவர்.

—இராமலிங்க அடிகள்.

இந்தியாவில் தனியார் துறையில் உள்ள மருத்துவ மனைகள், தங்கள் மருத்துவ மனைகளில் 10 அல்லது 15 சதவிகிதம் நோயாளிகளை அரசு மருத்துவமனைகளிலிருந்து ஏற்று, நல்லெண்ண முறையில் அவர்களுக்குச் சிகிச்சை தர வேண்டும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

கொடிய நோய் பீடிக்கப் பட்டவர்களுக்காக, இப்படிப் பெருந்தன்மையோடு செயல் பட்டால், ஏழை எளிய மக்களின் அன்பைப் பெறலாம், நல்லெண்ணமும், வளரும்.

இந்தியாவில் தனியார் துறை மருத்துவமனைகள் எனது இந்த யோசனையைப் பரிசீலிக்கும் என்று நம்புகிறேன்.

போர்க்கால அடிப்படையில் இருதய நோய்ச் சிகிச்சை

இருதய நோய்ப் பிரச் சினைகள் பற்றி இன்று அதிகம் வலியுறுத்தத் தேவையில்லை. இருதய நோய்கள் மிக அபாய கரமான அளவில் ஏற்பட்டு வருகின்றன. இக்கால நவீன வாழ்க்கை முறையின் வேகமும், பரபரப்பும் இந்த நோயைப் பெருக்குகின்றன. போர்க்கால அடிப்படையில் இப்பிரச்சி னைகளைக் கவனிக்க வேண்டும்.

இருதய நோய்கள் பற்றி மருத்துவ நிபுணர்களின் இந்தப் பேரவை வளர்ந்து வரும் இந்தக் கொடிய நோய்க்கு ஏற்ற சிகிச்சை முறை காண வேண்டும். இருதய நோய்கள் பலவற்றுக்கு வந்த பிறகு சிகிச்சை தருவதைவிட 'வரும் முன் காப்பதே' சிறப்பானது.

நம்பிக்கை ஒளி

வருங்காலத்தில் இந்த நோய்த் தடுப்புக்காக அதிகச் சிக்கல் இல்லாத எளிய முறைகள் வரலாம். இருதய நோயாளி களுக்கு இதுவே நம்பிக்கை ஒளி ஆகும்.

மதுரை மாவட்டத்தில்:

பல்துறைப்பணி விளக்க முகாம் மற்றும் கண்காட்சி

அரசுப் பல்துறைப் பணி விளக்க முகாம் மற்றும் கண்காட்சி, மதுரை மாவட்டம் தேனியில் 6.1.96 அன்று சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள், பல்துறைப் பணி விளக்க முகாமில் கண் காட்சியைத் தொடங்கி வைத்து விழாப் பேருரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:

"அரசின் பல்வேறு சாதனைகளை, இதுபோன்ற முகாம்களின் மூலமாக மக்களுக்கு விளக்கி அதை அவர்களுக்குத் தெரியும் வண்ணம் எடுத்துக் காட்ட வேண்டும். வேறு எந்த மாநில ஆட்சியிலும் காணாத சாதனைகளைத் தமிழகத்தில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நிறைவேற்றி வருகிறார். வேறு வேறு ஆட்சிக் காலத்தில் ஒரு குறிப்பிட்ட துறை சிறப்பாக இருந்தாலும், சில துறைகள் சரியல்ல என்று குறிப்பிடத்தக்க அளவில் இருக்கும். ஆனால், புரட்சித் தலைவியின் ஆட்சியில் கால் நடை வளர்ச்சித்துறை முதல் நெடுஞ்சாலைத்துறை, பொதுப் பணித்துறை என எல்லாத் துறைகளிலும் சோடை போகாத அளவில் சாதனை நிகழ்த்தப் பட்டிருக்கிறது."

பல்துறைப்பணி விளக்க முகாமினைத் தொடங்கி வைத்து, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசியதாவது:

"ஒரு ஜனநாயக நாட்டில் மக்கள் விழிப்புணர்ச்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும். அப்போது தான் அரசு திட்டத்தின் பலன் பயன் அளிக்கும். மக்கள் விழிப்புணர்வுடன் இருந்தால் தான் ஜனநாயகம் தழைக்கும். ஒவ்வொரு துறையும் எந்தெந்த வகையில் மக்கள் தொண்டில் என்னென்ன செய்துள்ளது என்பதை விளக்கவே இந்தப் பல்துறைப்பணி விளக்க முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

"இந்தப் பல்துறைப்பணி விளக்க முகாம் மூலம் மதுரை மாவட்டத்தில் 416 கிராமங்களில் வீடியோ மூலம் அரசு செய்திப் படக் காட்சிகள் காண்பிக்கப்படவுள்ளன. 38 இடங்களில் நாடகங்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் மூலம் அரசுத் திட்டங்கள் விளக்கப்படவுள்ளன. இப்படி, தமிழகம் பெருமைப்பட, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவியின் அறிவுத்திறன், ஆற்றல்திறன் செயல்பாடு, அதை முடிக்கும் திறன் ஆகியவையே காரணமாகும்."

அரசு பல்துறைப்பணி விளக்க முகாம் தொடக்க விழாவிற்குத் தலைமையேற்று மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் பேசியதாவது:

"எத்துறையிலும் முத்திரை பதிப்பவர் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள். இதய தெய்வம் புரட்சித்தலைவி ஆட்சிப் பொறுப்பேற்று ஆற்றிவரும் பணிகளை மக்களுக்கு எடுத்துச் சொல்ல இதுபோன்ற முகாம்களை நடத்துகிறோம். எந்தத் திட்டம் எந்த நோக்கத்தோடு எப்படி யாருக்காகத் தீட்டப் பட்டதோ, அது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி விரும்புகிற வகையில் நடைபெறுகிறதா எனக் கண்காணிக்கவே இந்த அரசுப் பல்துறைப்பணி விளக்க முகாம்கள் மற்றும் கண்காட்சிகள நடத்தப்பட்டு வருகின்றன. அரசின் சாதனைகளை, கொள்கைகளைத் தெளிவாக எடுத்துச் சொல்லும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ள இந்த முகாமைப் பொதுமக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்".



அரசுப் பல்துறைப்பணி விளக்க முகாமில் முன்னிலை வகித்து, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு அ.மா. பரமசிவன் அவர்கள் பேசியதாவது:

"சமூக நீதி காத்த வீராங்கனை புரட்சித்தலைவி அவர்களின் ஆட்சியில் செய்த சாதனைகள், திட்டங்கள் மக்களுக்குப் போய்ச் சேரும் வண்ணம் இந்தப் பல்துறைப் பணி விளக்க முகாம் நடத்தப் படுகிறது. 40 ஆண்டுக் காலம் செய்ய வேண்டிய சாதனைகளை எல்லாம் 4 ஆண்டுகளில் செய்து

நெல்லை குண்டாறு நீர்த்தேக்க நீர் ஆதாரங்களை மேம்படுத்த ரூ.72.10 இலட்சம் ஒதுக்கீடு

தமிழகத்தில் உள்ள நீர் ஆதாரங்களுக்குத் தேவையான மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு, பாசன ஆதாரங்களை வளப்படுத்துவதன் மூலம் தமிழ்நாட்டில் வேளாண் உற்பத்திப் பெருக்கத்திற்கு வழி வகுக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே கருத்துத் தெரிவித்தார். அதன் அடிப்படையில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், படிப்படியாக, நீர் ஆதாரங்களை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது இந்தக் கருத்தின் அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள குண்டாறு . நீர்த்தேக்கத் திட்டத்தில் அமைந்துள்ள அனைத்து சிறிய நீர் ஆதாரங்களையும் மேம்படுத்தி சீர்படுத்துகின்ற பணியினைச் செயல்படுத்த ஏதுவாக 72.10 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.

காட்டியுள்ளார் என்பதற்கு எடுத்துக்காட்டு தான் இங்கு பல் துறைகளிலிருந்து அமைக்கப்பட்டுள்ள அரங்குகள் என்பதை மக்கள் அறிந்து கொள்ள முடியும். இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகம் தான் பல்வேறு துறைகளில் முதலிடம் பெறுகிறது. ஏழை, எளிய, நலிவுற்ற, மக்கள் யாராக இருந்தாலும் அவர்கள் வாழ்வதற்காகக் குடும்ப அட்டைகளுக்கு 20 கிலோ அரிசியைக் கடந்த 1ந் தேதியில் இருந்து வழங்கி அவர்களின் வாழ்க்கை மேம்படச் செய்தவர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தான்".

பல்துறைப்பணி விளக்க முகாமில் விளக்க உரையாக, தமிழ்நாடு அரசு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் கூறியதாவது:

"தமிழக முதல்வரின் ஆணைப்படி இது 7-வது மாவட்ட முகாமாக மதுரை மாவட்டத்தில் நடத்தப்படுகிறது. சென்ற ஆண்டு 4 மாவட்டங்களில் இந்தப் பணி விளக்க முகாமை நடத்தியபோது மக்களிடையே அதன் பலன் மிகச் சிறப்பாகச் சென்றடைந்தது. இந்த வருடமும் அரசின் நலத் திட்டம் மக்களைச் சென்றடைய வேண்டும் 'என்பதற்காக 10 மாவட்டங்களில்' நடத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார்கள். புதுக்கோட்டை, நீலகிரி, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, காமராஜர் ஆகிய மாவட்டங்களில் வெற்றிகரமாக நடத்தப்பட்ட பின் இங்கு நடக்கிறது."

இந்தப் பல்துறைப்பணி விளக்க முகாமில் பாராளுமன்ற உறுப்பினர் திரு ஆர் ராமசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கே. தவசி, திரு எம். பெரியவீரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். முன்னதாக மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு இரா. சம்பத், இ.ஆ.ப., அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். விழா முடிவில் செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் துணை இயக்குநர் திரு மா. விசுவநாதன் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்.

விழாத் தொடக்கத்தில் இராணிமங்கம்மாள் போக்குவரத்துக்கழகத்தின் மெல்லிசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அரசுப் பல்துறைப்பணி விளக்க முகாம் விழா மேடையில் தினமும் பள்ளி மாணவ, மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகளும், செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நாடகங்களும் நடந்தன. அரசுப் பல்துறைப்பணி விளக்க முகாம் கண்காட்சியில் அனைத்துத் துறைகளின் சார்பிலும் 30 அரங்குகள் அமைக்கப் பட்டிருந்தன.

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அளிக்க ரூ.82 கோடி ஒதுக்கியுள்ளோம். நிவாரணப் பணிகள் நடப்பதைப் பொறுத்து வரும் மார்ச் மாதத்தில் மேலும் பல கோடி ஒதுக்க உள்ளோம். மாவட்ட ஆட்சியாளர்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்ட பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, இந்தத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்.

"மாவட்ட ஆட்சியாளர்கள் தாலுகா அளவில் ஆய்வுக் கூட்டங்களை நடத்தி வறட்சி நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும். இதற்காகப் பல்வேறு துறைகளின் உயர் அதிகாரிகள் தலைமையில் தாலுகா அளவிலான குழுக்கள் அமைத்து நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். நில நிர்வாக ஆணையாளர்களுக்கு வாராந்திர ஆய்வு அறிக்கைகளை மாவட்ட ஆட்சியாளர்கள் தவறாமல் அனுப்பி வைக்க வேண்டும். தமிழகத்தில் வறட்சி பாதித்த 15 மாவட்டங்கள் 5 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒரு மண்டலத்திற்கு 3 மாவட்டங்கள் வீதம் அரசுத்துறை அதிகாரிகள் ஆய்வு செய்து நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

"வறட்சி பாதித்துள்ள 15 மாவட்டங்களில் வழங்கப்பட்டுள்ள ரூ.185 கோடிக்கான குறுகிய காலக்கடன், மத்தியக் காலக் கடன்களாக மாற்றப்படுகிறது. மேலும் நீண்டகாலக் கடனாக வழங்கப்பட்ட ரூ.29 கோடியை வசூல் செய்யும் காலக்கெடு தள்ளி வைக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியாளர்கள் விவசாயிகளுக்கு அன்னவாரிச் சான்றிதழ்களை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வருவாய்த்துறை அதிகாரிகள் வழங்கும் இந்தச் சான்றிதழ்களை வைத்துதான் கூட்டுறவு வங்கிகளில் கடன் விஷயத்தில் மேல்நடவடிக்கை எடுக்க முடியும். மேலும், 15 மாவட்டங்களில், 14 மாவட்டத்தில் நிலவரியை ரத்து செய்வதற்கான உத்தரவுகளை அன்னவாரிச் சான்றிதழ்கள் வழங்குவதைப் பொறுத்துப் படிப்படியாக உத்தரவுகள் வழங்கும்.

"தமிழகத்தில் வறட்சி பாதித்துள்ள மாவட்டங்களில் சாலைகள் அமைக்கும் பணிக்காக, முதற்கட்டமாக ரூ.35 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் தஞ்சை மாவட்டத்தில் ரூ.10 கோடியும், நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு ரூ.12 கோடியும், பெரம்பலூர் மாவட்டத்திற்கு ரூ.3 கோடியும், இராமநாதபுர மாவட்டத்திற்கு ரூ.10 கோடியும் சாலை போட பிரித்து வழங்கப்படும். புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டத்தில் தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழகம், புதிய வழித்தடங்களில் பேருந்துப் போக்குவரத்துக்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆலோசனையுடன் விடவுள்ளது.

"திண்டுக்கல் மாவட்டத்தில், திண்டுக்கல், பழநி, சின்னாளப்பட்டி, கொடைக்கானல் ஆகிய நகரங்களில் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக ரூ.5 கோடி ஒதுக்கப்படுகிறது. இந்தக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியாளர்கள் கூறிய பல்வேறு கருத்துக்கள் குறித்து ஆய்வு செய்து அரசு, விரைவில் நடவடிக்கை எடுக்கும்.

"புதுக்கோட்டை, கன்னியாகுமரி மாவட்டங்களில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து அரசு, விரைவில் முடிவு செய்யும். மாவட்ட ஆட்சியாளர்கள் வறட்சி பாதித்துள்ள பகுதிகளில் நிவாரணப் பணிகள் துரிதமாகவும், பயன்கள் நேரடியாக மக்களைச் சென்றடையும் வகையிலும் ஈடுபாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும் என மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

"ஆரம்பத்தில் வறட்சி நிவாரணத்திற்காக ரூ.70 கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருந்தேன். ஆனால், இந்தக் கூட்டத்தில் 15 மாவட்ட ஆட்சியாளர்கள் தெரிவித்த பல்வேறு, கருத்துக்களைத் தொடர்ந்து ரூ.266 கோடி ஒதுக்கி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள உத்தரவிடுகிறேன். மேலும், மத்திய அரசை அணுகி தேசிய அளவிலான இயற்கைப் பாதிப்பு நிவாரண நிதியில் இருந்து நிதியுதவி பெற, திட்டம் தயாரித்து, மாநில அரசு, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கும்."

மனிதன் உலகில் தன் சுயமரியாதையை - தன்மானத்தை உயிருக்குச் சமமாகக் கொள்ள வேண்டும்.

- தந்தை பெரியார்



குடியரசுத் தலைவர் பதக்கம் வழங்கும் விழா

● நான்காம் அட்டை சொல்லும் செய்தி:

இந்திய நாடெங்கும் காவல்துறை, தீயணைப்புத்துறை, ஊர்க்காவல்படை போன்றவைகளில் சிறப்பாக மற்றும் பாராட்டத்தக்க வகையில் பணி செய்பவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் குடியரசு நாள் மற்றும் விடுதலை நாள் போன்ற விழாக்களில், மத்திய அரசு, குடியரசுத் தலைவர் பதக்கங்களை வழங்கி வருகிறது.

அந்த வகையில் தமிழ்நாட்டில் கடந்த 1993-ஆம் ஆண்டிலிருந்து 1995-ஆம் ஆண்டு வரை 107 பேர்களுக்குக் குடியரசுத் தலைவர் பதக்கம் வழங்கும் விழா, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் 17.1.96-ஆம் நாள் கலைவாணர் அரங்கில் சீரோடும், சிறப்போடும் நடைபெற்றது.

விழா மேடையில் அனைவரையும் கவரத் தக்க வகையில் குடியரசுத் தலைவர் பதக்கங்கள் பொன்னிறத்தில் மின்னும் வகையில் அழகுபட பெரிதாக வடிவமைக்கப்பட்டு எடுப்பாக வைக்கப்பட்டிருந்தன. மாண்புமிகு முதல்வர் அவர்கள், பதக்கம் பெறுபவர்களுக்கு எளிதாக, பதக்கங்களை அணிவிக்க வசதியாக, நகர்த்தக் கூடிய சிறு மேடை அமைக்கப்பட்டிருந்தது. அவ்வப்போது நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவதற்காக நேர்முக வர்ணனையாளர்கள் தயார் நிலையில் இருந்து கொண்டிருந்தார்கள். கலைவாணர் அரங்கம் நிரம்பி வழிந்தது.

விழாவிற்கு வருகை தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை, தமிழ்நாடு காவல்துறைத் தலைவர் திரு வால்டர் ஐ. தேவாரம், இ.கா.ப., அவர்களும், சென்னை மாநகரக் காவல்துறை ஆணையர் திரு ஜி. வீரராகவன், இ.கா.ப., அவர்களும் எதிர்கொண்டு வரவேற்று மேடைக்கு அழைத்து வந்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கண்டவுடன் அனைவரும் எழுந்து நின்று முதல்வர் அவர்களுக்கு

மரியாதை செலுத்தினர். தொடர்ந்து காவல்துறைத் தலைவர் திரு தேவாரம் அவர்கள் அழகான மலர்க்கூடை ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு உவந்தளித்து வரவேற்பு நல்கினார்.

நிகழ்ச்சியன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப்பட்ட பதக்கங்களைக் காவல் துறையினர் 64 பேர்களும், தீயணைப்புத் துறையினர் 32 பேர்களும், ஊர்க்காவல் படையைச் சார்ந்தவர்கள் 11 பேர்களும் பெற்றார்கள்.

தகைசால் பணிக்கான குடியரசுத் தலைவரின் காவல் பதக்கம் மற்றும் பாராட்டத்தக்க பணிக்கான காவல் பதக்கங்களைப் பெற்றவர்களில் குற்றப் பிரிவுக் கூடுதல் காவல்துறைத் தலைவர் திரு வி.கே. ராஜகோபாலன், சென்னை நகர நுண்ணறிவுப் பிரிவுக் கூடுதல் காவல்துறைத் துணை ஆணையாளர் திரு எஸ். இருதயதாஸ், கூடுதல் துணைக் காவல் தலைவர் திரு பி.எஸ். கணபதி, சட்டம் ஒழுங்கு கூடுதல் காவல்துறைத் தலைவர் திரு எஸ். குமாரசாமி, கோவைச் சரகத் துணைக் காவல் தலைவர் திரு டி. ராதாகிருஷ்ணன், காவல்துறைக் கூடுதல் தலைவர் திரு ஏ.எக்ஸ். அலெக்ஸாண்டர், சிறப்புப் பாதுகாப்புக் குழு காவல்துறைத் துணைத் தலைவர் திரு கே. விஜயகுமார், குற்றப் புலனாய்வுத்துறை துணைத் தலைவர் திருமதி லத்திகாசரண், சென்னை மாநகரக் காவல்துறை இணை ஆணையாளர் திரு ஆர்.என். சவானி, மதுரை மாநகர ஆணையாளர் திரு எஸ்.வி.வெங்கட கிருஷ்ணன், சென்னைத் தலைமையிடக் காவல்துறைத் துணைத் தலைவர் திருமதி அர்ச்சனா ராமசுந்தரம் உள்ளிட்ட 64 பேர் அடங்குவர்.

தீயணைப்புப் படை

தீயணைப்புப் படைத் துணை இயக்குநர் திரு நமச்சிவாயம் மற்றும் தீயணைப்பு அலுவலர்கள் திரு பொன். முருகேசன், திரு பக்தன், திரு இராமசாமி, திரு சையது சுல்தான் உள்பட 32 பேர் இந்தியக் குடியரசுத் தலைவர் தகைசால் பணிக்கான தீயணைப்புத்துறைப் பதக்கங்களைப் பெற்றனர்.

ஊர்க்காவல் படை

கடலூர் விழுப்புரம் சரகத் துணை ஊர்க்காவல்படைத் தலைவர் திரு எல். ஜெயச்சந்திரன், சென்னை வட்டாரத் தளபதி திரு ரெங்கநாதம், உதவிப் படைப் பிரிவுத் தளபதி செல்வி ஜி. சகுந்தலா, நீலகிரி மர்வட்டத் துணை ஊர்க்காவல்படைத் தலைவர் திரு கே.ஆர். மணி, நாகை காயிதெ மில்லத் மாவட்ட உதவிப் படைப்பிரிவுத் தளபதி திரு வரதராஜன் போன்றோர் பாராட்டத்தக்க பணிக்களுக்கான பதக்கங்களை மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து பெற்றார்கள்.

பணியிலிருந்து ஓய்வு பெற்ற கூடுதல் காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு ஜி. பிரான்க் பிரகாசம், பணியாற்றும்போது காலமான காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு எஸ்.ஏ.பாரூக் மற்றும் காவல்துறை ஆய்வாளர் திரு கே. சீனிவாசன் ஆகியோரின் துணைவியார்களிடம் உரிய பதக்கங்களை முதல்வர் அவர்கள் வழங்கினார்.

உள்துறைச் செயலாளர் திரு ஆர். வரதராஜுலு, இ.ஆ.ப., அவர்கள் நிகழ்ச்சியில் வாழ்த்துரை வழங்கினார். தமிழ்நாடு காவல்துறைத் தலைவர் திரு வால்டர் ஐ. தேவாரம், இ.கா.ப., அவர்கள் வரவேற்புரையும், சென்னை மாநகரக் காவல்துறை ஆணையாளர் திரு ஜி. வீரராகவன், இ.கா.ப., அவர்கள் நன்றியுரையும் ஆற்றினர்.

நிகழ்ச்சியில் கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்துக்கும் மேலாக முதல்வர் அவர்கள் பதக்கங்களை வழங்கினார். மொத்தத்தில் குடியரசுத் தலைவர் பதக்கம் அளிக்கும் விழா மிகவும் கட்டுக்கோப்போடு சிறப்பாக அமைந்திருந்தது.

—நிகழ்ச்சித் தொகுப்பு:
மா. அசோகன்.



கரூரில் மாநில அளவிலான தந்தை பெரியார் பிறந்தநாள் விழா

கரூர் தீரன் சின்னமலைக் கவுண்டர் மாவட்டம், கரூரில் தமிழக அரசின் சார்பில், மாநில அளவிலான தந்தை பெரியார் பிறந்தநாள் விழா 29.12.95 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தலைமை ஏற்றார். மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் விழாவிற்கு முன்னிலை வகித்து பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்புரையாற்றினார். மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு ம. சின்னசாமி அவர்கள் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்து, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

விழாவில், கரூர் தீரன் சின்னமலைக் கவுண்டர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு த. ஜேக்கப், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

விழாவில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தனது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:

"தமிழ் மண்ணில் மகத்தான புரட்சியை உருவாக்கிய பெருமை தந்தை பெரியாருக்கு உண்டு. தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள், தந்தை பெரியார் தோன்றி இருக்காவிட்டால் இன்றைக்கும் அமுக்கி வைக்கப்பட்டுதான் இருப்பார்கள்.

"தந்தை பெரியார் ஆற்றிய தொண்டை இந்த நாடு நன்றியோடு நினைத்துப் பார்த்துக்

கொண்டிருக்கிறது. அவர் ஒரு தீர்க்கதரிசி. மறைந்த தந்தை பெரியார், பல பேர்களுக்குத் தலைவராக இருந்தார். ஆனால், அவருக்குத் தலைவர் யாரும் இல்லை. பெரியார் மறைந்த தற்குப் பிறகும் மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். தந்தை பெரியார் மிகப் பெரிய சீர்திருத்தவாதியாக மட்டு மல்லாமல், தீர்க்க தரிசியாகவும் விளங்கியவர். உலகில் எத் துணையோ சீர்திருத்தவாதிகள், தலைவர்கள் வாழ்ந்தார்கள் என்றாலும், தங்கள் கொள்கை களில் அவர்கள் தங்கள் காலத்தில் வெற்றி பெற முடிய வில்லை.

விழாவில் மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் பேசியதாவது:

"தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும் என்ற தந்தை பெரியாரின் கொள்கைகளைக் காங்கிரஸ் ஏற்காததால் அதை விட்டு வெளியேறி சுயமரியாதை இயக்கத்தைத் தந்தை பெரியார் ஆரம்பித்தார். பின்னர் 'குடியரசு' பத்திரிகையை ஆரம்பித்து எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற் படுத்தினார். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். தான் தந்தை பெரியாரின் எழுத்துச் சீர் திருத்தத்தை. ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தினார்.

"தந்தை பெரியாரின் கொள்கைகளான விதவைத் திருமணம், கலப்புத் திருமணம் ஆகியவற்றை எல்லாம் சட்ட மாக்கியவர் பேரறிஞர் அண்ணா. எல்லாத் துறைகளிலும் பெண்

சாதியற்ற, உயர்வு தாழ்வு அற்ற சமுதாய அமைப்பை உருவாக்க வேண்டும்.

- தந்தை பெரியார்

களுக்கு 30 சதவிகித இட ஒதுக்கீடு வேண்டும் என்பதை இதயதெய்வம் புரட்சித்தலைவி தான் செயல்படுத்தினார்.

"ஆதிதிராவிடர்களும் இன் றைக்கு வேதாகமக் கல்லூரியில் படித்துவிட்டு அர்ச்சகர்கள் ஆகலாம் என்ற நிலையை உருவாக்கியவர் இதயதெய்வம் புரட்சித்தலைவிதான். இந்தி வரக்கூடாது என்பதற்காக, பேரறிஞர் அண்ணாவைத் தலைவராக்கிப் போராட்டம் நடத்தியவர் தந்தை பெரியார்.

விழாவில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு ம. சின்னசாமி அவர்கள் பேசிய தாவது:

"தந்தை பெரியாரின் கொள்கைகள் பத்தாயிரம் ஆண்டுகள் நிலைத்து நிற்கக் கூடியது. தந்தை பெரியார் பெண்ணுரிமை வேண்டும் என்றார். எல்லோரும் கல்வி கற்க வேண்டும் என்று சொன்னார். சாதி, மதம் கூடாது என்று சொன்னார். இப்படிப் பட்டக் கொள்கைகளை இன்றைக்கு அகில உலகமே போற்றுகின்றது. இன்றைக்குத் திராவிட இயக்கம் தமிழகத்தின் ஆட்சிக்கு வந்த பிறகு தான் பட்டாதாரர்கள், மிராசுதாரர் களின் அதிகாரம் ஒடுக்கப்பட்டு பட்டாளி வர்க்கத்தினர்கள் நிம்மதியான வாழ்க்கை வாழ் கிறார்கள் என்றால் இவற்றிற்கு எல்லாம் மூலகாரணம் தந்தை பெரியார்தான்.

"சாதி வேறுபாடு கூடாது என்ற தந்தை பெரியார் கூறினார். ஆனால், இன்று சாதிக் கலாச்சாரம் நிலவுகின்றது. இதற்குக் காரணம் சாதித் தலைவர்கள். சாதித் தலைவர் களை ஒதுக்க வேண்டும்.

"சாதிகளை ஒழித்திடவும், மூடப் பழக்க வழக்கங்களை ஒழித்திடவும், பெண்ணுரிமை நிலை நாட்டவும், தந்தை பெரியார் பாடுபட்டவர். அதுபோல அவர் வழியிலேயே தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்.

விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு அ. பாப்பாசுந்தரம், திரு. எம். தங்கவேல் ஆகியோர் வாழ்த் துரை வழங்கினார்கள்.

விழாவில் ரூ.48 இலட்சத்து 63 ஆயிரம் மதிப்புள்ள அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு ம. சின்னசாமி அவர்கள் வழங்கினார். விழா வினையொட்டி, கரூரில் உள்ள அனைத்துப் பள்ளி மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

விழா முடிவில் திருச்சிராப் பள்ளி செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு கோ. பன்னீர் செல்வம் நன்றி கூறினார்.

திருவள்ளுவர் திருநாள்

திருவள்ளுவர் திருநாளை யொட்டி, தமிழக அரசின் சார்பில், திருவள்ளுவர் விருது மற்றும் சிறந்த நூல்களுக்கு விருதுகள் வழங்கும் விழா, 19.1.96 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது.

விழாவிற்கு, மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் தலைமைத் தாங்கினார். தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை சிறப்பு ஆணையர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

1996-ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் விருதைப் பேராசிரியர் டாக்டர் மு. கோவிந்தசாமி அவர்கள் பெற்றார். அவருக்கு ரூ.20 ஆயிரம் பரிசு வழங்கப்பட்டது.

கடந்த 1995-ஆம் ஆண்டிற் கான திரு.வி.க. விருதைப் பேராசிரியர் டாக்டர் க.பொ. ரத்தினம் அவர்கள் பெற்றார். இவருக்கு ரூ.10 ஆயிரம் பரிசு வழங்கப்பட்டது.

கடந்த 1995-ஆம் ஆண்டிற் கான பாவேந்தர் விருதைக் கவிஞர் அ. மறைமலையான் அவர்கள் பெற்றார். இவருக்கு ரூ.10 ஆயிரம் பரிசு வழங்கப் பட்டது.

வயது முதிர்ந்த தமிழ் அறிஞர்கள் 13 பேருக்கு மாதம் 400 ரூபாய் உதவிப் பணமும், சிறந்த பதிப்பகத்தார் 36 நபர்களுக்குச் சான்றிதழ்களும், சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் 38 நூல் ஆசிரியர்களுக்கு ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

விழாவிற்குத் தலைமை தாங்கிய மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் விருது களையும், பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கிப் பேசும்போது கூறியதாவது:

"இந்த அரசு, தமிழர்களுக்குத் தமிழ் உணர்வு கொண்டவர் களுக்கும், தமிழ்ச் சான்றோர் களுக்கும் மரியாதை தந்து உள்ளது. தமிழ் பயிற்று மொழி ஆக்குவது பற்றி அரசு, ஆய்வு செய்து வருகிறது" என்றார்.

தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறை சிறப்பு ஆணையர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தமது சிறப்புரையில் "வடக்கின் ஆதிக் கத்தைத் தடுத்து வண்டமிழைப் பாதுகாக்கும் தன்னிகரற்ற ஒரே முதல்வர் புரட்சித்தலைவிதான். அவருடைய ஆட்சிக் காலத்தில், தமிழ் மேலும் வளரும், வாழும், தழைக்கும்" என்றார்.

திருவள்ளுவர் விருது பெற்ற பேராசிரியர் டாக்டர் மு. கோவிந்தசாமி அவர்கள் தனது ஏற்புரையில் கூறியதாவது: "மனித அறிவை, மொழி அறிவை வளர்ப்பதற்கு அரசு முன் வருகிறது. சிறந்த நூல் எழுதுபவர்களுக்கு அரசு ஊக்கமும், ஆக்கமும் பொருள் உதவி தந்து உதவ வேண்டும்" என்றார்.

திரு.வி.க. விருது பெற்ற பேராசிரியர் டாக்டர் க.பொ. ரத்தினம் அவர்கள் தமது ஏற்புரையில் "உலகெங்கும் வாழும் தமிழன் தமிழகத்தைத் தான் பார்க்கிறான். உலகத் தமிழ்ச் சங்கத்தை இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

பாவேந்தர் விருது பெற்ற கவிஞர் அ. மறைமலையான் அவர்கள் தமது ஏற்புரையில், "மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்குத் "தமிழ் காத்த வீராங்கனை" பட்டம் கொடுக்க வேண்டும். தமிழைக் காப்பாற்ற சட்டத்தை உருவாக்க வேண்டும்" என்றார்.

முன்னதாக, தமிழ் வளர்ச்சித் துறைச் செயலர் திரு இரா. கிறிஸ்துதாசு காந்தி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார். தமிழ் வளர்ச்சி இயக்குநர் (பொறுப்பு) திரு ஆ. பன்னீர் செல்வம் நன்றி நவின்றார்.

ஊரக மாணவ மாணவியருக்கு ஊக்குவிப்பு உதவித்தொகை

கிராமப் புறங்களில் கல்வி பயிலுகின்ற மாணவ மாணவியர்களிடையே கல்வி கற்கும் திறனை வளர்ப்பதற்கும் அவர்களுடைய தனித் திறமையை வெளிக்கொணர்வதற்கும் நிதி உதவி வழங்குகின்ற, "தமிழ்நாடு ஊரக மாணவ மாணவியருக்கு ஊக்குவிப்புக் கல்வி உதவித்தொகைத் திட்டம்" (Tamil Nadu Rural Students Talent Search Scholarship Scheme) ஒன்றுக்கு ஒப்புதல் அளித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

மேலும், இத்திட்டத்தினைச் செயல் படுத்துவதற்காக 89 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து 1995-96-ஆம் கல்வி ஆண்டிலேயே இத்திட்டம் நடைமுறைப்படுத்த வேண்டுமென கல்வித் துறைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தர விட்டுள்ளார்.

இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 50 மாணவர்களும் மொத்தம் 50 மாணவி களுமாக வீதம் 100 பேர் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். தமிழகம் முழுவதிலுமிருந்து இவ்வாறு கிட்டத்தட்ட மொத்தம் 2,400 மாணவ மாணவியர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு, அவர்களுக்கு ஆண்டொன்றுக்கு 1,000 ரூபாய் வீதம் 9-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு முடிக்கும் வரை, இந்தச் சிறப்புக் கல்வி உதவித்தொகை அவர்களின் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்காக வழங்கப்படும். ஒவ்வொரு ஆண்டு தேர்வு முடிவிலும், அவர்கள் குறைந்தபட்சம் 50 சதவிகித மதிப்பெண்களைத் தேர்வுகளில் பெற வேண்டும். எனவே, இந்தக் கல்வி உதவித்தொகை தொடர்ந்து 4 ஆண்டுகளுக்கு ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த தேர்ந் தெடுக்கப்பட்ட மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்படும். இந்தச் சிறப்புக் கல்வி உதவித்தொகைத் திட்டம், கிராமப்புறங்களில் பயிலுகின்ற மாணவ மாணவியர்களின் தனித் திறமைகளை ஊக்குவிப்பதற்கென தொடங்கப்பட்டிருப்பதை மனதில் கொண்டு, இந்தத் திட்டத்தை ஒரு புதிய முனைப்போடு செயல்படுத்த வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப் பித்துள்ளார்.

மனம் அலைபாயாமல் இருக்கவும், மெய்ப்பொருளின் மீது சிந்தை நிலைத்து நிற்கவும், ஆசையை ஒடுக்க வேண்டும்.
—ஆதிசங்கரர்

நல்லவனாக இருப்பது எளிது. ஆனால், நேர்மை யானவனாக இருப்பது கடினம்.
—ஹியூகோ

நல்லது எதுவும் தானாக வருவதில்லை. நாம்தான் தேடிக் கொண்டு வரவேண்டும்.
—பார்ட்டன்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இ. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ—ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்



இந்த இதழில்...

★ தமிழ்நாட்டு ஆளுநர் டாக்டர் எம். சென்னா ரெட்டி அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை: 2

★ 'தொண்டு செய்ய இந்த விருது தூண்டுகோலாக அமையும்' - மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை 7

★ 'பெரும்பிடுகு முத்தரையரின் பெயரும் புகழும் சாகாவரம் பெற்றுவிட்டன' - மாண்புமிகு முதல்வர் அவர்களின் புகழ்மாலை 13

★ "அண்ணல் அம்பேத்கருக்கு ரூ.5 கோடி மதிப்பில் மணிமண்டபம்" மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு 17

★ காவிரி நதிநீர்ப் பிரச்சினை: அனைத்துக்கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை 24

இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை. (36)

★ இளைஞராக உள்ளவர், பிற்காலத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணாமல் அறம் செய்ய வேண்டும். அதுவே உடல் அழியும் காலத்தில் அழியாத் துணையாகும்.

தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027

மாசித் திங்கள் : 4

மலர்: 26 இதழ்: 16

16.2.1996

விலை: ரூபாய் 3

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23



2142

வளர்ச்சித் திட்டங்களைத் தமிழ்நாடு வெற்றிகரமாகச் செயல்படுத்துகிறது!

தமிழ்நாட்டு ஆளுநர்

டாக்டர் எம். சென்னா ரெட்டி அவர்கள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை

மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே !

1996 ஆம் ஆண்டில், தமிழ்நாடு சட்டப்பேரவையின் முதலாவது கூட்டத் தொடரில் உங்கள் முன் உரையாற்றுவதில்,நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அனைவர்க்கும் என்னுடைய உளம் கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. இது, தமிழ் நாடு 10 ஆம் சட்டப் பேரவையின் கடைசி கூட்டத்தொடராகும். இவ்வரசு அதன் ஐந்தாண்டுப் பதவிக் காலத்தை முழுமையாக முடிக்கவுள்ளது ஐந்தாண்டுக் காலத்தைப் பின்நோக்கிப் பார்த்தோமானால், இம்மாநிலம் அனைத்துத் துறைகளிலும் முன்னேற்ற மடைந்துள்ளதை நாம் காணலாம். 1991-92 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுத் திட்ட ஒதுக்கீடுகள் ஒவ்வோராண்டும் விஞ்சப்பட்டு வந்துள்ளன. ஏழை எளியோர்க்கு விரிவான சமூகப் பாதுகாப்பு நலத் திட்டம்உருவாக்கப்பட்டுள்ளது. அனைத்துத் துறைகளின் வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைகின்ற சட்டம்-ஒழுங்கு நிலைமை சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சிறந்த சாதனையை எண்ணி நாம் பெருமிதம் கொள்ளலாம். இம்மாநிலம் எதிர்காலத்திலும் இத்தகைய முன்னேற்றத்தைத் தொடர்ந்து பெற்றுவரும் என நான் நம்புகிறேன்.

3. இவ்வரசு பதவி ஏற்றபோது மாண்புமிகு முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களின் படுகொலையைத் தொடர்ந்து ஏற்பட்ட இடர்பாடான நிலைமையை மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள் நினைவுகூர்வர். வெளிநாட்டுப் போராளிகள், தீவிரவாதிகள் ஆகியோரால் உருவான அபாயம் உறுதியாக ஒருமித்த முறையில் சமாளிக்கப்பட்டது. இவ்வரசு பொறுப்பேற்ற ஒரு சில வாரங்களுக்குள் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. அதன் பின்னர், அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதையடுத்து எழுந்த வன்முறைச் சம்பவங்களால் நாடு முழுவதும் பதட்டமடைந்த போது, தமிழ்நாடு மத இணக்கத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கியது. வெடிமருந்துகளைப் பயன்படுத்தி கொடிய நோக்கங்களை எய்த இடதுசாரி தீவிரவாதிகளும், சமய அடிப்படைவாதிகளும் மேற்கொண்ட முயற்சிகள் உறுதியான தடுப்பு நடவடிக்கைகளால் தடுத்து நிறுத்தப்பட்டன. இம்மாநிலத்தில் ஏற்பட்ட பல்வேறு வெடிகுண்டு விபத்து சம்பவங்கள் குறித்துப் புலனாய்வு செய்ய சிறப்புப் புலனாய்வுக் குழு ஒன்று அமைக்கப்பட்டதையடுத்து, வெடிகுண்டுச் சம்பவங்கள் தடுக்கப்பட்டன. தென் மாவட்டங்களில் அண்மையில் ஏற்பட்ட வன்முறைக் கலவரச் சம்பவங்கள் உடனடியாகக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் இப்பகுதிக்குச் சென்று நேரடியாக தலையிட்டதால், பொதுமக்களிடத்தில் நம்பிக்கை உணர்வு தோற்றுவிக்கப்பட்டதுடன், அங்குள்ள அதிகாரிகள் உடனடியாக உறுதியான நடவடிக்கை எடுக்கவும் வழிவகை செய்தது. இந்நடவடிக்கைகளினால் தென் மாவட்டங்களில் மீண்டும் அமைதி திரும்பியது.

4. இவ்வரசு கடந்த ஐந்தாண்டுக் கால அளவில் தொடர்ந்து மேற்கொண்ட நடவடிக்கைகளால், மாநிலக் காவல்துறை, புதிய நோக்கும், வழிகாட்டுதலும் பெற்று, நவீனமயமாக்கப்பட்ட, தொழில் சிறப்புப் பெற்ற, மனிதாபிமானத்துடன் செயல்படும் படையாக மாற்றப்பட்டுள்ளது. காவல்துறைக்கான நவீன தகவல் தொடர்பு சாதனங்கள், படைக்கலங்கள், காவல் துறையின் புலனாய்வுக்கும், தகவல்களைப் பெறுதலுக்கும் உரிய வசதிகள் ஆகியவற்றுடன் காவல் படையை நவீனமயமாக்க

ஏழை எளியோர்க்கு விரிவான சமூகப் பாதுகாப்பு நலத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அனைத்துத் துறைகளின் வளர்ச்சிக்கும் அடித் தளமாக அமைகின்ற சட்டம்-ஒழுங்கு நிலைமை சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டுள்ளது.

மொத்தம் ரூ.50 கோடி செலவிடப்பட்டுள்ளது. காவல் துறையை நவீனமயமாக்க மாநில அரசின் தேவை ரூ.80.45 கோடியாயிருக்க, இந்திய அரசு ரூ.10 கோடி மட்டுமே வழங்கியுள்ளது. இதனால் தடைபடாமல், மாநில அரசு, தன்னுடைய சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து போதிய நிதியை ஒதுக்கியுள்ளது. இம்மாநிலத்திலுள்ள 1172 காவல் நிலையங்கள் ஒவ்வொன்றுக்கும் தற்போது மோட்டார் வண்டி, தொலைபேசி வசதி, கம்பியில்லாத் தகவல் தொடர்பு சாதன வசதிகள் ஆகியவை செய்து கொடுக்கப்பட்டுள்ளன, சென்னைப் பெருநகர்ப் பகுதியில் காவல் பணியை மேம்படுத்தும் நோக்குடன், 1996 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 9 ஆம் நாளிலிருந்து அதிகரிக்கப்பட்ட காவலர்களையும், சாதனங்களையும் கொண்டு, முதற்கட்டமாக புறநகர்ப் பகுதிகளில் உள்ள 5 காவல் நிலையங்கள் சென்னை, காவல்துறை ஆணையரின் அதிகார வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. 1991 ஆம் ஆண்டில் 68,638 ஆக இருந்த காவல் படையினரின் மொத்த எண்ணிக்கை, 1996 ஆம் ஆண்டில் 78,428 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மகளிருக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களைத் தடுக்க இம்மாநிலத்தில் 57 அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத் தொடங்கியதில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் முன்னோடியாகத் திகழ்வதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இந்த முயற்சியை, மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளதுடன், உலக நாடுகள் அளவிலும் பரந்த அளவில் பாராட்டப்பட்டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள அனைத்துக் காவல் மாவட்டங்களிலும் தற்போது முழு அளவில் செயல்படும் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உள்ளன. வன்முறைக் குற்றங்களால் பாதிக்கப் பட்டவர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் புது வாழ்வு அளிக்க, பாதிக்கப்பட்டோர் நல நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டு, நாட்டிலேயே தமிழ்நாடு முதல் மாநிலமாகத் திகழ்கிறது. காவல் துறையில் ஒழுங்குணர்வைப் பேணிக் காப்பதற்காகத் தொகுதிக் காப்புறுதித் திட்டங்கள், சுகாதார நல நிதித் திட்டம், குறைந்த விலையில் உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டம், வீட்டுவசதித் திட்டம் ஆகிய திட்டங்கள் உட்பட காவல் துறையினருக்காக நலத் திட்டங்கள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. காவல்துறையின் அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் தரமான பயிற்சியளிப்பதற்காக, வீராபுரத்தில் காவலர் பயிற்சிக் கழகம் ஒன்று ரூ.20 கோடி செலவில் நிறுவப்பட்டு வருகிறது.

5. "நீதி காலதாமதப்படுகிறது எனில் நீதி மறுக்கப்படுகிறது" என்பதை முழுமையாக உணர்ந்து வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக புதிய நீதிமன்றங்கள் பல ஏற்படுத்தப் பட்டுள்ளன. 44 குற்றவியல் நீதிமன்றங்கள், உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. சென்னையில் 3 நீதி மன்றங்களும், மதுரை, சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஒரு நீதிமன்றம் வீதம், ஆக 6 குடும்ப நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில், 5 நீதிமன்றங்களில் பெண்கள் நீதிபதிகளாக உள்ளனர். கிருஷ்ணகிரியில் கூடுதலாக ஒரு நீதிமன்றமும், தூத்துக்குடி, நாகப்பட்டினம், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் புதிதாக 3 நீதிமன்றங்களும் உட்பட புதிதாக 4 தலைமை குற்றவியல் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புதிதாக 9 சார்நீதிமன்றங்கள், கூடுதல் உரிமையியல் நீதிமன்றங்கள் உட்பட புதிதாக 7 உரிமையியல் நீதிமன்றங்கள் ஆகியவற்றை அமைக்க ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரியில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் ஒன்றை அமைக்கவும் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. 1991-92லிருந்து மொத்தம் 84 நீதிமன்றங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இது, நாடு விடுதலை பெற்றதிலிருந்து நடைபெறாத ஒன்றாகும். அனைத்து மாவட்டங்களிலும் உள்ள தலைமை குற்றவியல் நீதிமன்றங்கள், கூடுதல் செசன்சு நீதிமன்றங்களாக நிலை உயர்த்தப்பட்டு, அவை மனித உரிமைகள் நீதிமன்றங்களாகப் பெயரிடப்பட்டு, மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பான வழக்குகள் அனைத்தையும் விசாரிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளன. குறைந்த செலவில் வழக்குகளை விரைவாக முடிக்க வழிவகை செய்ய பல்வேறு சிவில் நீதிமன்றங்களின் பணவகையிலான அதிகார வரம்புகளை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை, நீதிமன்றக் கட்டிடங்கள் கட்டுவதற்கும், நீதித்துறை அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கும், 1993-94 ஆம் ஆண்டிலிருந்து மொத்தம் ரூ.35.17 கோடி செலவில் 80 திட்டங்கள் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன. வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக அரசு வழக்கு இயக்ககம் ஒன்றும், குற்ற வழக்கு இயக்ககம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன. வழக்குரைஞர்கள் நல நிதியின் கீழ் வழக்குரைஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை, வழக்குரைஞர் இறந்துவிடும் நேர்வில் ரூ.1 இலட்சமும் ஓய்வு பெறும் போது ரூ.50,000/-ம் வழங்க கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது.

6. தமிழ்நாடு கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. வடகிழக்குப் பருவ மழைக் காலத்தின் போது சாதாரணமாகப் பெய்யும் மழை அளவு 461 மி.மீட்டராக இருக்க, 1995 ஆம் ஆண்டில் பெய்த மழை அளவு 259 மி. மீட்டர் மட்டுமே ஆகும். இது 44 சதவீதம் குறைவாகும். சிதம்பரனார், கன்னியாகுமரி, இராமநாதபுரம், காமராசர், திருநெல்வேலி-கட்டபொம்மன், கோயம்புத்தூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி-பெரும்பிடுகு முத்தரையர், கரூர்-தீரன் சின்னமலை கவுண்டர், பெரம்பலூர்-திருவள்ளுவர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், மதுரை, திண்டுக்கல்-அண்ணா, நாகப்பட்டினம்-காயிதேமில்லத் ஆகிய 15 மாவட்டங்களை, வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் என்று அரசு அறிவித்துள்ளது. மேலும், தென் ஆர்க்காடு-வள்ளலார், சேலம், விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார், திருவண்ணாமலை-சம்புவராயர் ஆகிய மாவட்டங்களிலுள்ள 10 வட்டங்களும், வறட்சியால் பாதிக்கப்பட்ட வட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. குடிநீர்த் தட்டுப்பாடு, ஊரக வேலை வாய்ப்பின்மை, கால்நடைகளுக்குத் தீவனம் மற்றும் தண்ணீர் இல்லாமை ஆகிய நிலைமையைச் சமாளிக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. குடிநீர் வழங்கல், ஊரக வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தல், ஏனைய துயர்தணிப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கான செலவுக்கு முதற்கண் ரூ.70 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில், மொத்தம் 3753 துளைக் கிணறுகள் அமைப்பதற்காகும் தொகையான ரூ.26.94 கோடியும் அடங்கும். இராமநாதபுரம் மாவட்டத்தில் நீரின் உப்புத் தன்மையை நீக்கும் 45 தளவாடங்களை மொத்தம் ரூ.65 கோடி செலவில் அமைக்கும் பணி போர்க்கால அடிப்படையில் மேற் கொள்ளப்பட்டுள்ளது. மத்திய அரசு, இதற்காகும் செலவில் 75 சதவீதத்தை வழங்கும் என்று முதற்கண் உறுதி அளித்திருந்தபோதிலும், ஏற்கெனவே அளித்துள்ள ரூ.10.75 கோடியோடு தன் உதவித் தொகையை நிறுத்திக் கொண்டுள்ளது. எஞ்சியுள்ள செலவைத் தற்போது மாநில அரசு ஏற்க வேண்டியுள்ளது. மேலும், நீரின் உப்புத் தன்மையை நீக்கும் 155 சிறு தளவாடங்களை மொத்தம்

ரூ.28.33 கோடி செலவில் அமைக்கவும் அரசு அனுமதி அளித்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், 1996 ஜனவரி 27 ஆம் நாளன்று இராமநாதபுரத்தில் வறட்சி நிலையினை நேரடி ஆய்வு செய்து ரூ.266 கோடி செலவிலான துயர் தணிப்புத் திட்டத்தை அறிவித்தார். இதில், குடிநீர் வழங்கும் பணிகளை உடனடியாக மேற்கொள்ளுவதற்காகும் கூடுதல் நிதி ரூ.72 கோடி அடங்கும். சாலைச் சீரமைப்புப் பணிகளை விரைவாக மேற்கொள்ளுவதற்காக, ரூ.35 கோடி ஒதுக்கப்படும். ஊரக வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த ரூ.85 கோடி செலவாகும். குடிநீர் வழங்கும் பணிகளை மேற்கொள்ளுவதற்காக திண்டுக்கல்–அண்ணா மாவட்டத்தில் உள்ள நகராட்சிகளுக்கு ரூ.5 கோடி மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இயற்கைச் சீற்றத் துயர்தணிப்பு தேசிய நிதியிலிருந்து மொத்தம் ரூ.630 கோடி நிதியுதவி கோரும் வறட்சி நிலை விவர அறிக்கை ஒன்றை மாநில அரசு தயாரித்து வருகிறது. இதுவரை ஏற்பட்டிராத வறட்சி நிலையைச் சந்திக்க, போதிய நிதிஉதவி அளித்து இம்மாநிலத்திற்கு உதவுமாறு, தமிழ்நாடு அரசு, மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளும்.

7. வடகிழக்குப் பருவமழை பொய்த்ததையடுத்து ஏற்பட்ட வறட்சி நிலைமை, தமிழ்நாட்டிற்கு விடவேண்டிய நீரை கருநாடக அரசு விடத் தவறியதால் மேலும் மோசமடைந்துள்ளது. இந்த நீர், இந்திய அரசின் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் நாளிட்ட அரசிதழ் தனி அறிவிப்பில் வெளியிடப்பட்ட காவிரி நீர்த் தகராறு குறித்த நடுவர் மன்றத்தின் 1991 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 25 ஆம் நாளிட்ட இடைக்கால ஆணையின் படி விட வேண்டியதாகும். கருநாடக அரசு, முந்தைய ஆண்டுகளில் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயல் படுத்தவில்லை என்ற போதிலும், மேட்டூர் நீர்த்தேக்கத்திற்குப் போதிய அளவுக்கு நீர் வரப் பெறுவதற்கு இயற்கை தாராளமாக உதவியது. 1995–ல் வடகிழக்குப் பருவமழை பொய்த்ததால், வாடும் பயிர்களைக் காப்பாற்ற இடைக்கால ஆணையின்படி நீர் விடுவதற்குக் கருநாடக அரசுக்கு உத்தரவு பிறப்பிக்க உச்சநீதி மன்றத்தையும் காவிரி நீர்த்தகராறு குறித்த நடுவர் மன்றத்தையும் தமிழ்நாடு அணுக வேண்டிய நிலை உருவாக்கப்பட்டது. இது தொடர்பாகத் தலையிட்டுத் தமிழ்நாட்டிற்கு உடனடியாக 11 டி.எம்.சி. நீர் விட 19–12–1995 ஆம் நாளிட்ட நடுவர்மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயல்படுத்த அணுகுமுறை ஒன்றை உருவாக்க மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை உச்சநீதிமன்றம் கேட்டுக் கொண்டது உட்பட அடுத்தடுத்து ஏற்பட்ட நிலவரங்களையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். காவிரி நீர்த்தகராறு குறித்த நடுவர்மன்றம் வரையறுத்த மாதாந்திர அளவுடன், நாளொன்றுக்கு 1 டி.எம்.சி. என்ற வீதத்தில் 6 டி.எம்.சி. நீரைத் தற்காலிகமாக விடுமாறு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் கருநாடக அரசைக் கேட்டுக் கொண்டார். மேலும், வாடும் பயிர்களின் நிலைமையை நேரடியாகக் கண்டு ஆய்வு செய்யவும், தண்ணீர்த் தேவை குறித்து ஆராயவும் வல்லுநர் குழு ஒன்றையும் நியமித்தார். தமிழ்நாட்டிற்கு 11 டி..எம்.சி. நீரை விட வேண்டுமென்கிற நடுவர் மன்றத்தின் ஆணையில் எந்த மாற்றத்தையும் செய்ய உச்ச நீதி மன்றம் கருதவில்லை. மேலும், சட்டப்படி அமைக்கப்பட்ட நடுவர் மன்றம் இரு மாநிலங்களிலும் தற்போதுள்ள வாடும் பயிர்கள், தேக்கி வைக்கப்பட்டுள்ள நீரின் அளவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்ட பின்னர் தண்ணீரைத் திறந்துவிடுவது பற்றி ஏற்கெனவே ஆராய்ந்துள்ளதால், இதற்கென்று தனியாக "வல்லுநர் குழு" ஒன்றை அமைக்க வேண்டிய அவசியம் இருப்பதாகத் தெரியவில்லை. மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையில் அனைத்துக் கட்சிகளின் கூட்டம் ஒன்று கூட்டப்பட்ட பின்னர், இம்மாநிலத்திற்கு எஞ்சிய 5 டி.எம்.சி. நீரைப் பின்னர் பெற்றுத்தர மாண்புமிகு பாரதப் பிரதமர்

அட்டை சொல்லும் செய்தி:



"தொண்டு செய்ய இந்த விருது தூண்டுகோலாக அமையும்"

–மாண்புமிகு முதல்வர் உரை

"பொது வாழ்வில் எனது பணி ஓரளவே இருந்தாலும், அமெரிக்க மக்கள் என்னைப் பாராட்டிப் பல விருதுகளை வழங்கிடுவதைக் கண்டு பெரு மகிழ்ச்சி அடைகிறேன். சமுதாயத்தில் பொதுத் தொண்டு ஆற்ற வேண்டும் என்ற உணர்வு தமிழ்நாட்டில் பெண்கள், குழந்தைகள் நலனுக்காக நான் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் அவர்களின் வாழ்வை நேரில் கண்ட பிறகு ஏற்பட்டதாகும். வரதட்சணை சாவு, சிசுக் கொலை போன்ற இங்குள்ள சமுதாயக் கேடுகளைப் போல மேல்நாடுகளில் மனைவியை அடிப்பது, குழந்தைகளைத் துன்புறுத்துவது முதலியவை உள்ளன. ஆக, பெண்கள், உலகம் முழுவதும் கொடுமைப் படுத்தப்பட்டு வருவது இக்காலத்தில் துயரமான ஒரு சம்பவமாகும். பணக்கார நாடா, ஏழை நாடா, மக்கள் கருப்பா வெள்ளையா, என்பது இதற்கு விதி விலக்கு அல்ல.

தமிழ்நாட்டில் பல நூற்றாண்டுப் பழக்கமான பெண் சிசுவைக் கொலை செய்வதைத் தடுத்திடக் குழந்தை நலனுக்காக நான் 15 அம்சத் திட்டங்களைத் தொடங்கி

வைத்தேன். இதில் ஒரு சிறப்பான அம்சம், தொட்டில் குழந்தைத் திட்டம். குழந்தை களுக்குச் சத்துணவு , உடை, கல்வி வசதி கிடைக்க இந்தத் திட்டம் உதவுகிறது. தொட்டில் குழந்தைத் திட்டத்தின் மூலம், பெண் குழந்தைகளுக்குச் சமுதாயத்தில் நல்வாழ்வு கிடைக்க வழி செய்யும் விழிப் புணர்வு உருவாகியது.

அமெரிக்காவில் விஸ்கான்சின் வெஸ்ட் பென்ட் பிரண்ட்சிப் கார்டன் மற்றும் சிகாகோவில் தேவான் அவின்யூவில் ஒரு பகுதி ஆகியவற்றுக்கு எனது பெயர் சூட்டப்பட இருப்பதாகத் தெரிவித்தனர். இதற்காகச் சர்வதேச அமெரிக்க நட்புறவுச் சங்கத்துக்கும், சிகாகோ நகர மக்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அமெரிக்காவில் உள்ள 2 நகரங்கள் எனது பெயர் தாங்கி நிற்க இருப்பது அமெரிக்க மக்களின் நட்புறவைக் காட்டு கிறது. உள்ளபடியே இதுவேறு யாருக்கும் வழங்கப்படாத மரியாதையாகும். அமெரிக்க மக்கள் எனக்கு வழங்கிய அமைதி விருதைப் பெற்றுக் கொள்வதில் மகிழ்ச்சி அடை கிறேன். இதன் மூலம், இந்தியாவுக்கும், அமெரிக்காவுக் கும் இடையே நெருங்கிய நட்புறவு மேலும் வளரும் என்று உறுதியாக நான் நம்புகிறேன்.

இலண்டனில் உள்ள மேடம் டுசாட்ஸ் மெழுகு பொம்மைகள்

சிறப்புக்குச் சிறப்பு செய்யும் சில சிறப்புகள்

★ இலண்டன் மாநகரில் உள்ள உலகப் புகழ்பெற்ற மேடம் டுசாட்ஸ் மெழுகு பொம்மை காட்சியகத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் மெழுகு உருவச் சிலை இடம் பெறும்.

★ அமெரிக்க விஸ்கான்சின் மாநிலத்திலுள்ள நட்புத் தோட்டத் திற்கு டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் பெயர் சூட்டப்படும்.

★ மாண்புமிகு முதல்வர் அவர் களின் 48-வது பிறந்தநாள் இனிமேல் உலகக் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப் படும்.

★ முதல்வர் அவர்களின் பிறந்த நாள் 48 நாடுகளில் சிறப்பாகக் கொண்டாடப்படும். அவ் விழாவைத் தொடங்கி வைக்க அமெரிக்க முதல் பெண்மணி திருமதி ஹிலாரி கிளிண்டன் கலந்து கொள்வார்.

★ ஆகஸ்டு 1996-இல் அமெரிக் காவில் நடக்கும் தேசிய குடியரசுக் , கட்சி மாநாட்டிற்கு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அழைக்கப்பட்டுள்ளார்.

★ சிகாகோவில் உள்ள தேவான் அவென்யூ என்ற பகுதிக்கு டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் பெயர் சூட்டப் படும்.

★ அமெரிக்கப் பழங்குடியினரின் சார்பாக செவ்விந்திய மொழியில் 'MAA-STHA-MA-NI-GA' (வீர நடைபோடும் வீராங்கனை) என்ற பட்டம் சூட்டப்பட்டது.

★ 1995-ஆம் ஆண்டிற்கான சிறந்த பெண்மணி விருது மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு வழங்கப்பட்டது.

கண்காட்சியில் எனது உருவ பொம்மை வைப்பதற்கு முடிவு செய்திருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைந்தேன். சர்வதேச அளவில் புகழ்பெற்ற இந்தக் கணகாட்சி யில் உலகச் சிறப்பு வாய்ந்த தலைவர்களின் உருவ பொம்மைகள் வைக்கப் பட்டுள்ள இடத்தில் எனது உருவமும் இடம் பெறுவது ரியப்பாகவும், மகிழ்ச்சியாகவும் உள்ளது.

சினிமா உலகில் எனது வாழ்க்கையைத் தொடங்கிய தால், "மேடம் டுசாட்ஸ் கண் காட்சி" எனக்குப் புதியதல்ல. உண்மையில் சொல்லப் போனால் பொது வாழ்க்கையில் மிகவும் உறுதியாகச் செயல்படும் நான் உறுதியான மனம் படைத் தவள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விருது வழங்கியதன் மூலம் அளிக்கப் பட்ட கௌரவத்தை ஏற்றுக் கொள்வதுடன் இந்தக் கௌர வத்துக்கு என்னைத் தேர்ந்து எடுத்திருப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். என்னைப் பொருத்தவரை மக்களுக்குச் சேவை செய்வது தான் எனது குறிக்கோள் ஆகும்.

இந்த விருதை வழங்கிய உலகத் தமிழ் இளைஞர் கூட்டமைப்பின் தலைவர் டாக்டர் விஜய் பிரபாகர், அமெரிக்காவில் தமிழ் கலாச்சாரத்தை ஊக்கப்படுத்தி வருபவர். அவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மகிழ்ச்சியான சந்தர்ப் பத்தில் எனது அன்பான தாயார் இங்கு இல்லையே என்று எண்ணி வருந்துகிறேன். ஆனால், என் மீது அன்பு செலுத்துகிற இலட்சக்கணக்கான மக்கள் என்னைத் தாயாகக் கருதி என்னை 'அம்மா' என்று அழைப் பதை எண்ணி ஆறுதல் அடை கிறேன். எனக்கு அளிக்கப்பட்ட அனைத்து கௌரவத்தையும் என் அன்பான மக்களுக்குக் காணிக்கையாக்குகிறேன்.

பெண்கள் உரிமைக்காகவும், நமது குழந்தைகளின் ஒளி மயமான வருங்காலத்திற்காகவும் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்க் கைக்காகவும், சாதியற்ற சமுதாயம் அமையவும் மேலும், தொண்டு செய்ய இந்த விருது தூண்டுகோலாக அமையும்.

எனக்கு முன்னால் உள்ள கடமைகள் என்ன என்பதை நான் நன்கு அறிவேன். நோபல் பரிசு பெற்ற மேரி கியூரி சொன்னதைப் போல ஒருவர் என்ன செய்து இருக்கிறார் என்று பார்க்கப்படுவதில்லை. அவர் இன்னும் என்ன செய்ய வேண்டியிருக்கிறது என்று தான் பார்க்கிறார்கள். பொது வாழ்க்கையில் நான் எவ்வளவு காலம் இருக்கிறேனோ, அது வரை நான் செய்து முடிக்க வேண்டிய எனது பணிகளை நிறைவேற்றத் தொடர்ந்து பாடுபடுவேன் என்று உங்களுக்கு உறுதியளிக்கிறேன்.

புவியெங்கும் புகழ் விளங்கும் புரட்சித்தலைவிக்குப் புகழாரம்

தமிழக வரலாற்றில் இது வரை எந்த முதலமைச்சருக்கும் கிடைத்திராத விருதும் பாராட்டும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு அமெரிக்க நாட்டினரால் வழங்கப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு ஏற்கெனவே அவருடைய ஆளுமைத் திறனுக்கும், செயலாக்கத்திற்கும் பாராட்டுகள் பல கிடைத்திருந் தாலும், அவற்றுள் அண்டை மாநிலமான கேரள மாநிலத் திலிருந்து வழங்கப்பட்ட ராஷ்ட்ரீய பீஷ்மாச்சாரியா விருது குறிப்பிடத்தக்கது.

தற்போது அமெரிக்க மக்களால் வழங்கப்படும் 1995ஆம் ஆண்டுக்கான சிறந்த பெண் மணி விருது அனைவராலும் பாராட்டப்படுகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களால் சிறப்பாகச் செயல்படுத்தப்படும் தொட்டில் குழந்தைகள் திட்டம், குழந்தைகளுக்கான 15 அம்ச சிறப்புத் திட்டங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் போன்றவைகளைப் பாராட்டி அமெரிக்காவிலுள்ள உலகத் தமிழ் இளைஞர்கள் கூட்ட மைப்பு நிறுவனம், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு 2.2.96 அன்று கலைவாணர் அரங்கில் சிறந்த பெண்மணி விருது வழங்கும் விழா எடுத்துச் சிறப்பித்தது.

விழாத் தொடக்கமே புதுமையாக இருந்தது. தமிழ்த் தாய் வாழ்த்தைத் தொடர்ந்து அமெரிக்க நாட்டுப் பண் ஒலித்தது. அமெரிக்க சர்வதேச வளர்ச்சி அமைப்பின் தலைவர் டாக்டர் லூயிஸ் மித்ரா வரவேற்புரையாற்ற — விழா தொடங்கியது. உரைக்குப்பின் பன்னாட்டுக் கொடிகள் நிரம்பிய கூடையை முதல்வர் அவர்களுக்கு வழங்கினார். பின்னர் இல்லினாய்ஸ் மாநில செனட்டர் ஹவார்டு கரோல் குத்துவிளக்கேற்றித் தொடக்க வுரையாற்றினார்.

அவர் பேசுகையில், குழந்தைகள் மற்றும் பெண்கள் முன்னேற்றத்துக்காகப் பல நலத்திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார் மாண்புமிகு முதல்வர் அவர்கள். இதுபோன்ற சீரிய திட்டங்களால் இந்திய நாட்டுக்கே வழிகாட்டு கிறார். பெண்களுக்கு வேலை வாய்ப்பில் 30 சதவிகித ஒதுக்கீடு, கல்வியில் முன்னுரிமை போன்றவை இவர் செய்துள்ள சாதனைகளில் குறிப்பிடத் தக்கவை என்று பாராட்டினார். வரும் ஆகஸ்டு மாதம் அமெரிக் காவில் நடைபெறும் தேசிய ஜனநாயகக் கட்சி மாநாட்டில் பங்கேற்க மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச்சிறப்பு அழைப்பு விடுத்தார். அந்த அழைப்பு தன்னுடையது மட்டுமல்ல; அமெரிக்க வெள்ளை மாளிகை யின் அழைப்பும்கூட என்று உரைத்தார்.

அமெரிக்க முதல் பெண் மணியாகிய திருமதி ஹிலாரி கிளிண்டன் எழுதிய, அவரது கையொப்பமிட்ட நூலையும், உலகத் தமிழ் இளைஞர் கூட்டமைப்புத் தலைவர் டாக்டர் விஜய் பிரபாகர் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வழங் கினார்.

இந்திய அமெரிக்கக் குடியரசு மையத்தின் தலைமைச் செயலாளர் திரு கீர்த்திகுமார் ரவூரி அவர்கள் சிகாகோ மேயரின் வாழ்த்துச் செய்தியை முதல்வர் அவர்களுக்கு அளித்தார்.

தமிழகத்தில் புரட்சித்தலைவி அவர்களின் நல்லாட்சியில் மத நல்லிணக்கம் காக்கப்படுகிறது. சிறுபான்மையினர் நலன் போற்றப்படுகிறது என்று குறிப்பிட்டார்.

அமெரிக்கப் பழங்குடியின மக்களின் மூதாட்டியான திருமதி ஆல்பர்ட்டா டே, தமிழ்நாட்டில் பழங்குடி மக்களுக்கான வளர்ச்சித் திட்டங்கள் சிறப்பான முறையில் செயல்படுத்தப் படுகின்றன; இதனை அறிந்து, தான் மகிழ்ச்சியடைவதாகக் கூறினார். பின்னர் அமெரிக்கப் பழங்குடியினர் தங்கள் கைகளால் நேர்த்தியாக பின்னிய வண்ணப் பூக்கூடை ஒன்றையும், தீயஆவிகளை விரட்டகூடியதாக நம்பப்படும் புனித இனிப்பு புல் ஒன்றை கண்ணாடிப் பேழையில் வைத்தும், பரிசாக முதல்வருக்கு அளித்தார். அத்துடன் உணர்ச்சி வசப்பட்டு சிவப்பு இந்திய மொழியில் வீரநடை போடும் வீராங்கனை என்ற பட்டத்தையும் முதல்வருக்கு வழங்கிச் சிறப்பித்தார்.

அமெரிக்காவிலுள்ள உலக அமைதி மையத்தின் வேந்தர் டாக்டர் கேத்தலின் லம்பிரட், முதல்வர் அவர்களின் சாதனை

யாக அனைத்து மகளிர் காவல் நிலையம், பெண்களுக்கான இட ஒதுக்கீடு போன்ற பணிகளைப் பாராட்டினார். பின்னர் இலண்டனில் உள்ள உலகப் புகழ்பெற்ற மேடம் டுசாட்ஸ் மெழுகு பொம்மைகள் காட்சியகத்தில் முதல்வர் அவர்களின் உருவச் சிலை வைக்கப்படும் என்று அறிவித்தார். உலகப் புகழ்வாய்ந்த தலைவர்களின் மெழுகு உருவச் சிலைகள் மட்டுமே இந்தக் காட்சியகத்தில் இடம்பெறும் என்பதும், இது உலகப் பெருமை வாய்ந்தது என்பதும் இங்கே குறிப்பிடத் தக்கது.

நியூ ஜெர்ஸியில் உள்ள தேசியப் பெண் ஓவியர்கள் சங்கத்தைச் சேர்ந்த திருமதி எலாஷா, முதல்வர் அவர்களைப் பாராட்டிப் பேசி, தன்னால் உருவாக்கப்பட்ட பச்சை நிறத்திலான சிற்பத்தைப் பரிசளித்தார்.

சிகாகோ நகரைச் சேர்ந்த பார்பரா கரோல் பேசும்போது, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் 48-வது பிறந்த நாள் இனிமேல் உலகக் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படும் என்றார். அதற்கான சான்றிதழையும் வழங்கி முதல்வர் அவர்களிடம் ஆசிபெற்றார். முதல்வர் அவர்களும் அவரை அன்புடன் அரவணைத்து அன்பு முத்தமிட்டார்.

பின்னர், டாக்டர் விஜய் பிரபாகர் கேவல் என்ற மரச்சுத்தியலை முதல்வர் அவர்களிடம் தர, அதனை மும்முறை மேசையில் தட்டி தனது பிறந்த நாளைக் குழந்

பண்படுவது பண்பாடு. பண்படுதல் சீர்ப்படுதல் அல்லது திருந்துதல். திருந்திய நிலத்தைப் பண்பட்ட அல்லது பண்படுத்தப் பட்ட நிலமென்றும், திருந்திய தமிழைப் பண்பட்ட செந்தமிழ் என்றும் திருந்திய உள்ளத்தைப் பண்பட்ட உள்ளமென்றும் சொல்வது வழக்கம்.

-மொழிஞாயிறு ஞா. தேவ நேயப்பாவாணர்

தைகள் தினமாகக் கொண்டாட ஒப்பளித்துப் பிரகடனப் படுத்தினார்.

டாக்டர் விஜய் பிரபாகர் எழுதிய "வாழும் வரலாற்றுக்கு ஒரு புகழுரை" என்ற நூலை விஸ்கான்சின் மாநில செனட்டர் ரோட்னி மோன் அவர்கள் வெளியிட, அமெரிக்காவிலுள்ள பகதூர் அலி சர்வதேச ஆய்வு நிலையத்தின் தலைவர் திரு சல்பிகார் அலிகான் பெற்றுக் கொண்டார். செனட்டர் ரோட்னி மோன் விஸ்கான்சின் மாநில மேதகு ஆளுநர் அளித்த சிறப்புப் பாராட்டுப் பத்திரத்தை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வழங்கி, இந்தப் பத்திரத்தைப் பெறும் முதல் இந்தியர் முதல்வர் அவர்களே என்றும் குறிப்பிட்டார். பின்னர் டாக்டர் விஜய் பிரபாகர் பேசும்போது "முதல்வர் அவர்களின் 48-வது பிறந்தநாளை வரும் பிப்ரவரி திங்கள் 24-ஆம் நாள் 48 நாடுகளில் கொண்டாட முடிவு செய்துள்ளதாகவும், அவ்விழாவிற்கு அமெரிக்க முதல் பெண்மணி திருமதி ஹிலாரி கிளிண்டன் அழைக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு 1995-ஆம் ஆண்டுக்கான சிறந்த பெண்மணிக்கான விருதை செனட்டர் ஹோவார்டு கரோல் வழங்கினார். அவர் பேசுகையில் "சிகாகோவில் உள்ள தேவான் அவென்யூ என்ற பகுதியின் ஒரு பிரிவுக்கு "டாக்டர் ஜெ.ஜெயலலிதா" அவர்களின் பெயர் சூட்டப்படும். இதுவரை இந்தப் பெருமை மகாத்மா காந்திக்குத்தான் இருந்தது. இப்போது இரண்டாவது இந்தியரின் பெயராக டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் பெயர் சூட்டப் படுகிறது" என்றும் குறிப்பிட்டார். தொடர்ந்து இல்லினாய்ஸ் மாநிலத்தின் மதிப்புமிக்க நீலப் புத்தகத்தை முதல்வர் அவர்களிடம் வழங்கிச் சிறப்பித்தார்.

பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்புரையாற்றினார். இறுதியாக உலகத் தமிழிளைஞர் கூட்டமைப்பின் செயலாளர் திரு பார்த்திபன் சண்முகம் நன்றியுரையாற்றினார்.

மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்த கலைவாணர் அரங்கத்தில், நிகழ்ச்சி முடிந்து கலைந்து சென்றபோது, பெண்களில் சிலர், முதல்வர் அவர்களுக்குக் கிடைத்த பரிசும் பாராட்டும் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியத் திருநாட்டிற்கே பெருமை சேர்ப்பதாகும் என்று மனம் விட்டுப் பேசிக் கொண்டார்கள்.

—நிகழ்ச்சித் தொகுப்பு: எம்.வி.எம். அசோகன்

பெரும்பிடுகு முத்தரையரின் பெயரும் புகழும் சாகாவரம் பெற்றுவிட்டன!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் புகழ்மாலை

எந்த ஒரு நாடு மாபெரும் மனிதர்களை வணங்குகின்றதோ, எந்த ஒரு சமுதாயம் நாட்டுக்கு உழைத்த நல்லவர்களைப் போற்றுகின்றதோ, அந்த நாடும், அந்தச் சமுதாயமும் தான், வளம் பெற்று உயர முடியும் என்பது சரித்திரம் காட்டுகின்ற பேருண்மை ஆகும்.

சான்றோரையும், ஆன்றோரையும் மதிக்கின்ற தன்மை, இயற்கையாகவே தமிழக மக்களின் ரத்தத்தில் ஊறிய ஒரு உன்னத குணமாக விளங்கி வருகின்றது ஆன்றவிந்துஅடங்கிய கொள்கைச் சான்றோர்களையும், அறிவார்ந்த பெருமக்களையும், நாட்டுக்கு உழைத்த நல்லவர்களையும் சமுதாய உயர்வுக்குப் பாடுபட்ட தலைவர்களையும் மதிப்பதில் தமிழக மக்களுக்கு ஈடு இணை எவரும் இல்லை. நல்லோரின் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் கடைப் பிடிப்பதில், இந்தியத் துணைக் கண்டத்திற்கே வழிகாட்டிகளாக விளங்குபவர்கள் தமிழக மக்கள்.

எனவேதான், தமிழக மக்களின் மனங்களிலே குடி கொண்டிருக்கும் பல்வேறு அரசியல் தலைவர்கள், சமுதாயத் தலைவர்கள், மற்றும் ஆன்மீகத் தலைவர்கள் ஆகியோருக்குப் பெருமை சேர்க்க, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, அவர்களது திருவுருவச் சிலைகளை அமைத்து வருகின்றது. அவர்கள் வாழ்ந்த இடங்களில் புதிய நினைவகங்களை உருவாக்கி வருகிறது. இந்தப் பணியை உங்கள் அன்புச்

சகோதரியாகிய நான், ஒரு புனிதப் பணியாகவே கருதி, செயல்படுத்தி வருகின்றேன்.

மாபெரும் மனிதர்களுடைய உண்மைச் சரித்திரங்கள், காலப் போக்கிலே மறைக்கப்பட்டும், சில நேரங்களில் இருட்டடிப்பும் செய்யப்படுகின்றன. அவ்வாறு நல்லவர்களின் வாழ்க்கை வரலாற்றை, மக்கள் மறந்துவிடக் கூடாது என்பதிலும் அந்த மாபெரும் தலைவர்களின் நினைவுகள், மக்களின் நெஞ்சங் களிலே என்றென்றும் பசுமை யாக நிலைத்து நிற்க வேண்டும் என்பதிலும் எங்கள் அரசு தீவிரமாக இருக்கிறது.

அந்தத் தலைவர்கள் விட்டுச் சென்ற, வாழ்க்கை நெறி முறைகளும், கருத்துக்களும் மக்கள் மனதிலே நிலைத்து நிற்க, ஆக்கப்பூர்வமான நடவடிக்கை களை எங்கள் அரசு ஆரம் பத்தில் இருந்தே, ஒரு ஆத்மார்ந்த ஈடுபாட்டுடன் மேற்கொண்டு வந்துள்ளது.

மாபெரும் மக்களைப் பாராட்டி மகிழ்வதில் நிச்சயமாக எங்களிடம் குறுகிய அரசியல் கண்ணோட்டம் இல்லை. மாறாக, நாட்டு மக்கள் மனங்களில் இடம் பெற்றுள்ள எல்லாத் தலைவர்களுக்கும், ஜாதி, மத, கட்சி அரசியல், ஏன் சித்தாந்த வேறுபாடுகள் கூட இன்றி, அவர்களுக்குப் புகழ் அஞ்சலி செலுத்தும் வண்ணம் திருவுருவச் சிலைகளை அமைத் தும், போக்குவரத்துக் கழகங் களை ஏற்படுத்தியும், நினைவகங் களை உருவாக்கியும், மக்களின் உணர்வுகளுக்கு, மதிப்பளித்து வருகின்றோம். வேறெந்த ஒரு

● இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி:

ஆட்சிக் காலத்திலும் சமுதாயத் தலைவர்களும், தமிழ் மாநிலம் தழைக்கப் பாடுபட்டவர்களும் இந்த அளவிற்குச் சிறப்பிக்கப் படவில்லை என்பது மட்டும் உண்மை.

"மக்கள் தான் இறுதி எஜமானர்கள்" என்கின்ற ஜன நாயகக் கோட்பாட்டில், தீவிர நம்பிக்கை வைத்து, செயலாற்றி வரும் அரசு, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, பெரியோரை மதிக்கும் திராவிடப் பாரம் பரியத்தின் மாண்பை, நல்லவர் களுக்குப் புகழ் அஞ்சலி செலுத்தி வருவதன் மூலம், நாங்கள் மேலும் உறுதிப்படுத்தி உள்ளோம்.

தனது புரட்சிகரமான சிந்தனைகளால் தமிழக மக்களுக்குச் சுய மரியாதை உணர்வையும் தன்மான உணர் வையும் ஊட்டி வளர்த்தவர் தந்தை பெரியார் அவர்கள். வைக்கம் போராட்டத்தின் மூலம், தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கோயில்களின் கதவுகளைத் திறக்க வைத்தவர் அந்த வெண்தாடி வேந்தர். புரட்சி கரமான அவரது வெற்றியை, உலகம் அறிய வைக்க, கேரள மாநிலம் வைக்கத்தில், எங்கள் அரசின் சார்பில், 15 இலட்சம் ரூபாய் செலவில், நினைவகம் ஒன்றை நாங்கள் அமைத் துள்ளோம்.

சென்னை, திருவல்லிக்கேணி யில் மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லத்தைக் கையகப் படுத்தி, அதை நினைவகமாக்கிச் சாதனை படைத்துள்ளது உங்கள் அன்புச் சகோதரியின் அரசு.

தாயகத்தின் விடுதலைக்காக, தம்மையே ஈந்த வீரர்கள் மருது சகோதரர்கள்; அவர்களின் நினைவாக, திருப்பத்தூரில், 6 இலட்சம் ரூபாய் செலவில் எங்கள் அரசு நினைவகம் ஒன்றை அமைத்துள்ளது.

எங்கள் அரசு கவியரசு கண்ணதாசனுக்கு, காரைக்குடி யில் மணிமண்டபம் அமைத்த தோடு அவரது திருவுருவச் சிலையையும் நிறுவியது. சென்னை தியாகராய நகரில் அவரது திருவுருவச் சிலையை நானே திறந்து வைத்தேன்.

பண்பாட்டுப் பெருமையும், பாரம்பரியச் சிறப்பும் மிக்க இந்த மண்ணுக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டக் கோரி, உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்தத் தியாகி சங்கரலிங்கனாருக்கும், விடுதலைப் போராட்ட வீரர் செண்பக ராமன் அவர்களுக்கும், தீரன் சின்னமலை அவர்களுக்கும், வீரன் அழகு முத்துக்கோன் அவர்களுக்கும், தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களுக்கும், எங்கள் அரசு திருவுருவச் சிலை களை அமைத்து வருகின்றது.

வீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் பெயரிலும், வீரன் சுந்தரலிங்கம் பெருமகனாரின் பெயரிலும், போக்குவரத்துக் கழகங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

சர் பிட்டி தியாகராயர்,

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், தேவர் திருமகன், அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்தவாரியார் ஆகியோ ருக்கும் நினைவகங்கள் அமைக்கப் பட்டு வருகின்றன.

தேசியமும், தெய்வீகமும் எனது இரு கண்கள் என முழங்கிய மாமனிதர் பசும் பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்குச் சென்னையில் நாங்கள் சிலை அமைத்தோம்.

சென்னையில், பாபா சாகிப் டாக்டர் B.R. அம்பேத்கர் அவர்களுக்கும், சென்னை மாநகரின் முன்னாள் மேயர் பெரியவர் சிவராஜ் அவர் களுக்கும், சிலைகளை நிறுவி, அவற்றை நானே திறந்து வைத்தேன்.

அந்த நற்பணிகளின் வரிசை யிலே இன்று பேரரசர் பெரும் பிடுகு முத்தரையருக்கு, இங்கே திருவுருவச் சிலையை எழுப்பி உள்ளோம். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை முக்கூறாகப் பிரித்த போது, பேரரசர் பெரும்பிடுகு முத்தரையரின் நினைவாக, இந்த மாவட்டத் திற்கு, திருச்சிராப்பள்ளி பெரும் பிடுகு முத்தரையர் மாவட்டம் என்று பெயர் சூட்டினோம். இப்பகுதி வாழ் முத்தரையர் இன மக்கள், இதனால் எத்தகையதொரு மகிழ்ச்சியை அடைந்தார்கள் என்பதை, நான் நன்கு அறிவேன்.

'முத்தரையர்' என்ற சொல்லுக்கு, சேர, சோழ, பாண்டிய நாடு ஆகிய மூன்று தரைகளையும் ஒன்று சேர்த்து ஆண்டவர்கள் என்று சில நூல்களில் கருத்துத் தெரிவிக்கப் பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, முத்தரையர்கள், கொங்கு நாட்டையும் ஆண்டதாகச் சில நூல்களில் குறிப்புகள் காணப் படுகின்றன.

சங்க காலத்தைச் சேர்ந்த 'நாலடியார்' என்ற நூலில், பெருமுத்தரையர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் "பெரு முத்தரையர்" என்ற சொற்றொடர் முத்தரையரைக் குறிப்பிடுவதாக, வரலாற்று நூலாசிரியர்கள் கருதுகின்றனர். திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய நாடே, 'முத்தரையர் நாடு' என்று அழைக்கப்பட்டதாகவும், இந்த முத்தரையர் நாட்டை, பெரும் பிடுகு மன்னர்கள் ஆண்டு வந்ததாகவும், சில கல்வெட்டு களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த முத்தரையர் மன்னர் களில், பேரரசர் இரண்டாம் பெரும்பிடுகு என்பவர் மாபெரும் மன்னராகத் திகழ்ந்த தாக வரலாறு தெரிவிக்கின்றது. இந்த மன்னரின் அளப்பரிய வீரமும், தீரமும், அவருக்கு 'பெரும்பிடுகு' என்றும், 'மார் பிடுகு' என்றும், பட்டப் பெயர் களைப் பெற்றுத் தந்துள்ள தாகவும் கூறப்படுகிறது. 'பிடுகு' என்றால், இடி என்று பொருள். தன் வீரத்தால் தனது எதிரி

வாழ்க்கையை வளமடையச் செய்வதே கல்வியின் நோக்கம்.

—டாக்டர் ராதாகிருஷ்ணன்

களுக்குப் பேரிடியாக, சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்ததால், 'பெரும்பிடுகு' என்ற பட்டத் துடன், அவர் அழைக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்திய தேசிய நீரோட்டத்தில் கலந்து தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கும், தங்களை முழுமையாக ஈடுபடுத்தி, பாடு பட்டுக்கொண்டு வரும், முத்தரையர் சமுதாய மக்களின் மனம் மகிழும் வண்ணம் 'பெரும்பிடுகு முத்தரையர்' அவர்களின் பெயரை இந்த மாவட்டத்திற்குச் சூட்டியதோடு, இன்று அவரது திருவுருவச் சிலையையும், திருச்சி மாநகரில், உங்கள் அன்புச் சகோதரி திறந்து வைத்துள்ளேன்.

பாரத நாட்டின் வேறு சில பகுதிகளில் வாழ்ந்த பெரிய வர்களின் வாழ்க்கைச் சம்பவங்கள், சரித்திரத்தில் மிகப் பெரிய சாதனைகளாக, வர்ணிக்கப்பட்டுள்ளன. ஆனால், இந்த மண்ணின் மைந்தர்களாய் வாழ்ந்த சான்றோர்கள், ஆன்றோர் களின் புகழ் மட்டும் ஏன் வெளிப்படாமல் மறைக்கப்பட வேண்டும்? தமிழக மக்களுக்கும், தமிழ்நாட்டிற்கும், பல வகை களில் சேவை புரிந்தோரை, தமிழகம் என்றென்றும் மறக்காது என்பதோடு எப்போதும் நன்றி பாராட்டும் என்பதையும் உலகிற்கு உணர்த்துவோம்.

தமிழகத்தின் இதயப் பகுதியில். விளங்கும் திருச்சிராப் பள்ளி சில நேரங்களில் தமிழகத்தின் இதயத் துடிப் பாகவும், செயல்படுவது உண்டு! இப்பகுதியின் வளர்ச்சிக்காக

உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, பல்வேறு நலத்திட்டங்களையும், வளர்ச்சிப் பணிகளையும், முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது. அரசின் நலத் திட்டங்கள் பொதுமக்களுக்கு விரைவாகச் சென்றடையவும், மாவட்ட நிர்வாகத்தின் கவனம், எல்லாப் பகுதிகளுக்கும் கிட்டிடவும், நிர்வாக நலனைக் கருத்தில் கொண்டு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை,முக்கூறாகப் பிரித்தோம். புதியதாக உதயமாகியுள்ள, இந்த மாவட்டங்களின் முன்னேற்றத்திற்காக எல்லா வளர்ச்சிப் பணிகளையும், புதிய முனைப்புடன் செயல்படுத்துவோம் என்று உறுதி கூறுகின்றேன்.

இப்பகுதிவாழ் பெருமக்கள் பெரும்பிடுகு முத்தரையர் அவர்களின் பெயரைப் புதிய மாவட்டத்திற்குச் சூட்ட வேண்டும் என்ற கோரிக்கையை என்னிடம் வைத்தபோது, நான் அவர்களது கோரிக்கையை மன மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டேன். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றியும் வைத்தேன். இனி காலப்போக்கில், சரித்திரத்தின் ஏடுகளிலே, இந்த மாமனிதரின் பெயர் மறைந்துவிடும் என்று அஞ்சு வேண்டியதில்லை. மாறாக, மாவட்டத்தின் பெயரோடு அவரது பெயரும் புகழும் சாகாவரம் பெற்றுவிட்டன. நாளைய இளைய சமுதாயத்தினர், இந்தத் திருவுருவச் சிலையைக் கண்டு, மன்னர் பெரும்பிடுகு முத்தரையரின் சரித்திரத்தை, நிச்சயம் நினைவுகூர்வார்கள் என்பது உறுதி.

கல்வி என்பது ஒரு மனிதனுக்குக் கற்பிக்கப்பட வேண்டிய அவசியமெல்லாம், ஒருவன் தனது வாழ்நாளில் சுதந்திரத்தோடு வாழ்வதற்கு அவனைத் தகுதிப்படுத்துவது என்பதேயாகும்.

- தந்தை பெரியார்

முத்தரையர் இனத்தைச் சேர்ந்த பெருமக்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் 23 பட்டப் பெயர்களுடன் வாழ்ந்து வருகின்றனர். இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த அனைவரும் ஒன்றுபட்ட சமுதாயமாக ஒரு பொதுப் பெயரின் கீழ் அழைக்கப்பட வேண்டும், என்ற கோரிக்கையை, இன்று என் முன் வைத்துள்ளார்கள். மக்களின் கோரிக்கையை உடனுக்குடன் நிறைவேற்றுவதில் உங்கள் அன்புச் சகோதரிக்கு என்றுமே ஒரு மகிழ்ச்சி உண்டு. இதே உணர்வுடன், உங்கள் கோரிக்கையை நான் முழு மனதுடன் ஏற்றுக் கொள்கிறேன். இதுவரை 23 பட்டப் பெயர்களுடன் அழைக்கப்பட்ட பெருமக்கள் அனைவரும் "முத்தரையர்" என்கின்ற ஒரு பொதுப் பெயரில், இனி அழைக்கப் படுவார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான அரசாணைகள், விரைவில் வழங்கப்படும். 23 பிரிவுகளில் அடங்கும், முத்தரையர் சமுதாய மக்கள், இதுவரை அனுபவித்து வந்த, சலுகைகள் அனைத்தும், எவ்விதமான பாதிப்பும் இன்றி தொடரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

முத்தரைய இன மக்களின் முன்னேற்றத்திற்காக அந்தச் சமுதாயத்தின் தலைவர்கள் இன்னும் சில கோரிக்கைகளை விடுத்தார்கள். அவற்றை எல்லாம் நான் கனிவுடன் பரிசீலித்து விரைவில் நல்ல முடிவுகளை அறிவிப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசிய முத்தரைய இனத் தலைவர்கள் எல்லாம் எனக்குப் பக்கபலமாக இருப்பார்கள் என்று கூறினார்கள். அதற்கு என் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, என்றுமே உங்கள் சமுதாயத்திற்கு நான் உறுதுணையாக இருப்பேன் என்பதையும் நான் உறுதியாகக் கூறிக்கொள்கிறேன்.

'முத்தரையர்' சமுதாயப் பெருமக்கள் நல்லிணக்க உணர்வுடன் மற்ற சமுதாயத்தினருடன் சேர்ந்து வாழ்ந்து தமிழகத்தின் ஏற்றத்திற்குத் தங்களது பங்கினைத் தொடர்ந்து ஆற்றுவார்கள் என்று நம்புகிறேன். இந்த முத்தரையர் சமுதாய மக்களின் வாழ்விற்கும், உயர்வுக்கும், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, என்றென்றும் உறுதுணையாய் விளங்கும் என்று உறுதி கூறுகிறேன்.

இப்பகுதிவாழ் மக்களாகிய நீங்கள் அனைவரும், எல்லா வளங்களையும், நலன்களையும் பெற்று வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று நிறைந்த மனதோடு வாழ்த்தி விடை பெறுகிறேன். *

அண்ணல் அம்பேத்கருக்கு ரூ.5 கோடி மதிப்பில் மணி மண்டபம்:

- மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

அரக்கோணத்தில் 8.1.1996 அன்று நடைபெற்ற அம்பேத்கர் மக்கள் விடுதலை முன்னணியின் மாநில மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய விழாப் பேருரை.

சமூக நீதியையும், சமத்துவச் சமுதாயத்தையும், சகோதரத்துவத்தையும் ஒருங்கே உணர்த்துகின்ற, இந்த மாபெரும் கூட்டத்தில் பங்கேற்று உங்கள் அனைவரையும் நேரில் காண்பதில், நான் பெருமகிழ்ச்சியும் பேருவகையும் அடைகின்றேன்.

தமிழ்நாட்டில் வாழும், ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு ஒரு தூண்டுகோலாக விளங்கிக் கொண்டிருக்கும் அரசு, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு. தாழ்த்தப்பட்ட மக்களின் பாதுகாப்பிற்கு ஒரு கேடயமாக, அரணாகச் செயல்பட்டு வரும் இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். கடந்த நான்கரை ஆண்டுகளுக்கு

மேலாகச் செயல்பட்டு வரும் உங்கள் அன்புச் சகோதரியின் முக்கியக் குறிக்கோள், ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது தான்.

எத்தகைய ஒரு உயர்ந்த வாழ்க்கையை ஆதிதிராவிட மக்கள் வாழ வேண்டும் என்று, டாக்டர் அம்பேத்கர் கனவு கண்டாரோ அத்தகைய வாழ்க்கையை அவர்களுக்குப் பெற்றுத் தருவது தான் எங்களது ஒரே இலட்சியம். 'பகுத்தறிவுப் பகலவன்' தந்தை பெரியார், 'பேரறிஞர் பெருந்தகை' அண்ணா, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர், ஆகியோர் எங்களுக்கு வகுத்தளித்த இலட்சியப் பாதையில் அந்தக் குறிக்கோளை அடைந்திட நாளும் மக்கள் பணி ஆற்றி வருகின்றோம்.



பொது வாழ்க்கையில், எங்களை வழி நடத்திச் சென்ற மாபெரும் தலைவர்கள், அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திக்காமல் அடுத்த தலைமுறையைப் பற்றி மட்டுமே சிந்திக்க, எங்களுக்குச் சொல்லித் தந்து சென்றிருக்கிறார்கள். கொண்ட கொள்கையை நிறைவேற்ற, எத்தனை எதிர்ப்புகள் எத்தனை இன்னல்கள், எத்தனைச் சவால்கள், எத்தனைச் சங்கடங்கள் வந்தாலும், அவற்றைத் துணிவுடன் எதிர்கொள்ளும் மனத் துணிவையும் வெல்லுகின்ற ஆற்றலையும் இலட்சிய உணர்வையும் நாங்கள் இயற்கையாகவே பெற்றுள்ளோம்.

இன்று தமிழகம் எல்லாத் துறைகளிலும் முன்னிலையில் விளங்கிக் கொண்டிருக்கிறது! தொழில் துறையிலும், விளையாட்டுத் துறையிலும் இன்று சர்வதேச வரைபடத்தில், நமக்கென்று தனி இடத்தைப் பெற்றுள்ளோம்! தமிழ்த் தாய்க்குச் சிறப்புச் சேர்க்க, எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டைத் தஞ்சைத் தரணியில் நடத்தி உலகத் தமிழர்களை ஒன்றுபடுத்தினோம். உங்கள் அன்புச் சகோதரியின் அரசு மேற்கொண்ட சமூகநல, மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள், இன்று மத்திய அரசால் மட்டுமின்றி மற்ற மாநில அரசுகளாலும், கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. எல்லாத் துறைகளிலும் ஒட்டுமொத்த வளர்ச்சியைத் தமிழகம் இன்று கண்டு வருவதை எவரும் மறுக்க முடியாது.

மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் காக்க, நாம் செயல்படுத்தி வரும், 15 அம்ச நலத் திட்டமும், தொட்டில் குழந்தைத் திட்டமும், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டமும் இன்று இந்தியத் துணைக் கண்டத்தில், மற்ற மாநிலங்களுக்கு, முன்னோடித் திட்டங்களாக விளங்கி வருகின்றன.

20 அம்சத் திட்ட வளர்ச்சிப் பணிகள் செயலாக்கத்தில் அகில இந்திய அளவில், கடந்த 3



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், கேரம் விளையாட்டில் உலகச் சாம்பியனான திரு மரியம் இருதயராஜுக்கு, 25 ஆயிரம் ரூபாய் மற்றும் நினைவுப் பரிசு வழங்கினார்.

ஆண்டுகளாக முதலிடத்தைத் தக்க வைத்து வருகின்ற ஒரே அரசு உங்கள் அன்புச் சகோதரியின் அரசுதான். வீட்டு வசதித் துறையாக இருந்தாலும் சரி, போக்குவரத்துத் துறையாக இருந்தாலும் சரி, வேலை வாய்ப்புத் துறையாக இருந்தாலும் சரி, அந்தத் துறைகள் அகில இந்திய அளவில், பல்வேறு விருதுகளைப் பெற்று வருவது உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில்தான். அந்த வகையில் நாங்கள், ஆதிதிராவிட மக்களின் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டிற்காகப் பல புதிய திட்டங்களை உருவாக்கினோம். அண்ணல் அம்பேத்கர் அவர்கள் கண்ட புதிய உலகைப் படைக்க நாங்கள் துணிவுடன் அந்தத் திட்டங்களைச் செயல்படுத்தி, அம்மக்களை ஆற்றல் படைத்தவர்களாக மாற்றிக் கொண்டு வருகின்றோம்.

ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களின் பல்முனை மேம்பாட்டிற்குக் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தவர் அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்கள். மற்றத் தலைவர்களுக்கு இல்லாத ஒரு தனிச் சிறப்பு டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்கு உண்டு. செல்வச் செழிப்பும், செல்வாக்கும் பரம்பரைப் பாரம்பரியமும் உள்ளவர்கள் தான் நாட்டை ஆளவும், சட்டங்களை இயற்றவும் முடியும் என்ற எண்ணத்தை தனது வாழ்க்கையின் மூலம் தகர்த்தெறிந்து காட்டியவர் டாக்டர் அம்பேத்கர் அவர்கள். சமுதாயத்தின் அடித்தளத்திலே உதித்து சாதி, சமய வேறுபாடுகளைக் களைந்து அரசியல் நிர்ணயச் சட்டத்தைத் தயாரிக்கும் மகத்தான பணியில் ஈடுபட்டு, சமதர்மச் சமூக நீதித் தத்துவங்களை வேரூன்றச் செய்ய உதவியவர் டாக்டர் அம்பேத்கர் அவர்கள். அவர் விட்டுச் சென்ற அவரது இலட்சியக் கனவுகளை நனவாக்க அம்பேத்கர் மக்கள் விடுதலை முன்னணியினர் சகோதரர் திரு மூர்த்தி அவர்கள் தலைமையில், ஒரு பொது நல உணர்வோடு, செயல்பட்டு வருவதை அறிந்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த முன்னணியின் செயல்வீரர்கள் தாங்கள் மேற்கொள்ளும் எல்லாப் பணிகளிலும் தொடர்ந்து வெற்றிகளைப் பெற்றுச் சிறப்புகளை அடைய எனது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

அண்ணல் அம்பேத்கர் ஒரு தனி மனிதர் அல்ல. ஒரு மாபெரும் இயக்கம்! அவரது இலட்சியங்கள் ஒரு தனி மனிதரின் சிந்தனைகள் அல்ல ஒரு சமுதாயத்தைப் பண்படுத்தி வளம் பெறச் செய்யும் ஆயுதங்கள்! இருட்டினில் வாழும் இதயங்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வர வேள்வியை மேற்கொண்ட அந்த மாமனிதரின் நினைவுகள் என்றென்றும் சமுதாயத்தில் ஒரு

தாக்கத்தை உண்டாக்க வேண்டும் என்பதற்காகவே தமிழக அரசின் சார்பில் அவரது திருவுருவச் சிலை ஒன்றை உங்கள் அன்புச் சகோதரியின் அரசு சென்னையில் நிறுவியது. 5 கோடி ரூபாய் மதிப்பில் அண்ணலுக்கு மணிமண்டபம் ஒன்றையும் சென்னையில் உருவாக்கி வருகிறது உங்கள் அன்புச் சகோதரியின் அரசு. இத்தனை ஆண்டுகளாகச் சென்னை மாநகருக்கு இல்லாத இந்த இரண்டு சிறப்புகளையும் நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்பு ஏற்படுத்தி இருக்கிறோம் என்பதைச் சுட்டிக் காட்டுவதில் நான் பெருமிதம் அடைகிறேன்.

சமதர்மத்திற்கும், சமூக நீதிக்கும் தமிழகம் இந்தியத் துணைக் கண்டத்திற்கு ஒரு வழிகாட்டியாக எப்போதும் விளங்கி வருகிறது. இன்றல்ல நேற்றல்ல, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற மாபெரும் உண்மையை உலகிற்கு உணர்த்தியவர்கள் நம் முன்னோர்கள். 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்று முழங்கியவர் முதுபெரும் ஔவை தமிழ் மூதாட்டி. சாதி வேறுபாடுகளைக் களைந்து, இறைவனையே ஆட்கொண்டவர், இந்தப் பூமியில் அவதரித்த கண்ணப்ப நாயனார். இறைவன் முன்பு அனைவரும் சமம் என்று முழங்கியவர் நமது நாட்டில் பிறந்த ஸ்ரீராமானுஜர்.

"காக்கை குருவி எங்கள்
ஜாதி - நீள்
கடலும் மலையும் எங்கள்
கூட்டம்
நோக்குந் திசையெலாம்
நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக்
களியாட்டம்"

என்று அஃறிணைப் பொருட்களையும், உயர்திணையோடு சேர்த்து ஒரே சாதியாகக் கண்டவர் மகாகவி பாரதியார். சமுதாயத்தின் மூட நம்பிக்கைகளையும், கொடிய பழக்க வழங்கங்களையும், ஜாதி வேற்றுமைகளையும் உடைத்து எறியும் மாபெரும் வேள்விக்குத் தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர் வெண்தாடி வேந்தர் தந்தை பெரியார் அவர்கள். ஏழைகளின் சிரிப்பிலே இறைவனைக் காண்கிறேன் என்று பொது வாழ்க்கையின் புது அர்த்தத்தை நமக்குப் போதித்தவர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். சாதி மத பொருளாதார பேதம் ஆகியவற்றைக் கடந்து, நாம் அனைவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் என்ற குடும்பப் பாச உணர்வை ஊட்டி வளர்த்தவர் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள். "உனக்கொரு பங்கும், எனக்கொரு பங்கும் நிச்சயம் உண்டு உலகிலே" என்று தனது பாடல்கள் வழியே புரட்சித் தலைவர் காட்டிச் சென்ற சமத்துவக் கொள்கைகள், இன்று உங்கள் அன்புச் சகோதரியின் அரசுக்கு வழிகாட்டிகளாக விளங்கி வருகின்றன.

பிறருக்கு எவ்விதத் தொல்லையும் தராத வாழ்வே ஒழுக்கம். இது எல்லாவிதப் பேத நிலையும் ஒழிந்த நிலையில் தான் வளரமுடியும். ஒழுக்க அடிப்படையே இன்ப வாழ்வு.

- தந்தை பெரியார்

ஆதிதிராவிட மக்களின் வாழ்க்கை மேம்பாட்டில், நாங்கள் கொண்டுள்ள அதீதமான ஈடுபாட்டை அத்துறை, அவர்களின் நலனுக்கு ஒதுக்கிய நிதி ஒதுக்கீடு எடுத்துக்காட்டும் என்று நம்புகிறேன். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் செயல்பாட்டிற்கு 1991-92-இல் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு 103 கோடி ரூபாய் மட்டுமே. ஆனால் அந்த ஒதுக்கீடு, இன்று இரண்டு மடங்காகி, நடப்பாண்டில், 205 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. ஆதிதிராவிடர் நலனில் உங்கள் அன்புச் சகோதரியின் அதிகமான ஈடுபாட்டை இது விளக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

திட்டங்களைத் தீட்டுவதில் மட்டுமே மகிழ்ச்சியை அடைகின்ற அரசு அல்ல இந்த அரசு. மாறாக, தீட்டிய திட்டங்கள் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு, பின்னர் மக்களுக்குச் சென்றடைகின்றனவா என்பதை விழிப்புடன் கண்காணித்து வரும் துடிப்புள்ள ஒரு அரசு.

நான் முதலமைச்சராகப் பதவியேற்ற பின்பு, ஆதி திராவிடப் பெருங்குடி மக்களின் நலனுக்காக 10 அம்ச சிறப்புத் திட்டத்தை, அறிவித்தேன். அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு நிதி உதவி, விவசாயக் குடும்பத்திற்குப் பாசனக் கிணறுகள் அமைக்க நிதி உதவி, தொழில் தொடங்க நிதி உதவி,

தொழில் கல்வி, பெற்றோருக்கு வேலைவாய்ப்புகள், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், Concrete தளம் அமைந்த இலவச வீடுகள், குடிநீர் வசதி, குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள், 'ஒரு வீட்டிற்கு ஒரு விளக்கு' திட்டத்தின் கீழ் மின் விளக்கு வசதி ஆகியவற்றை இத்திட்டத்தின் கீழ் ஒரு முனைப்புடன் ஏற்படுத்தி வந்துள்ளோம்.

Our Government is firmly committed, both in letter and spirit to the ultimate upliftment of the downtrodden and the suppressed.

கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் நாங்கள் மேற்கொண்ட நலப் பணிகளும் அவைகள் சமுதாயத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களையும் சுட்டிக் காட்டுவது பொருத்தமுடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

எங்களைப் பொருத்த வரையில், நமது திட்டங்களின் பயன்கள் மக்களுக்குச் சென்று அடைய உதவுகின்ற சாதனங்களாக நிர்வாக வரைமுறைகளும் கொடுக்கப்படும் இலக்குகளும் இருக்க வேண்டும். நிச்சயமாக அவை முட்டுக்கட்டைகளாக அமையக் கூடாது. எங்கள் செயல்பாட்டிற்கு விதி முறைகள் தடையாக மாறிய போதெல்லாம் அவற்றை நாங்கள் துணிவுடன் தகர்த்தோம். எனவேதான் இலக்குகளை எளிதாக அடைந்தோம்.

3.5 இலட்சம் ஆதிதிராவிட குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்க வேண்டும் என்பது இலக்கு. ஆனால் உதவி பெற்றவர்களின் எண்ணிக்கையோ 3.9 இலட்சம் குடும்பங்கள். 10,000 பாசனக் கிணறுகள் அமைப்பதற்கு நிதி உதவி வழங்க ஆணை. ஆனால், நாங்கள் அமைத்ததோ 12,000 பாசனக் கிணறுகள். 5,000 பேருக்குத் தனி நபர் தொழில் தொடங்க நிதி உதவி வழங்கப்பட வேண்டும் என்பது இலக்கு. உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் உதவி பெற்றதோ, 5,770 நபர்கள். ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்குவதில் நாங்கள் புதிய முறைகளைக் கையாண்டோம். தடையாக இருந்த விதிமுறைகள் விலக்கி வைக்கப்பட்டன. இலக்கு என்னவோ 4 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் மட்டுமே! ஆனால், நாங்கள் இதுவரை வழங்கி இருப்பதோ 7 இலட்சத்து 75 ஆயிரம் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்.

வரவுக்கும் மேலாக வாழ்க்கைத் திட்டம் ஏற்படுத்திக் கொண்டு துன்பப்படுபவர்கள், நாணயமாய் வாழ முடியாமல் நாட்டுக்குத் தொல்லை விளைவிப்பவர்கள்.

- தந்தை பெரியார்

ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் இரண்டு இலட்சம் குடும்பங்களுக்கு உதவி வழங்கத் திட்டம் தீட்டப்பட்டது ஆனால், இன்றைய அளவில் எங்கள் ஆட்சிக் காலத்தில் மட்டும் இந்த வசதியைப் பெற்ற ஆதிதிராவிடக் குடும்பங்களின் எண்ணிக்கையோ இரண்டு இலட்சத்து 5,000 ஆகும்.

ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களுக்குத் Concrete தளம் அமைந்த வீடுகளைக் கட்டித் தருவதில் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு புதிய சாதனையைப் படைத்துள்ளது. கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்கு ஆகும் கூடுதல் செலவினத்தைத் தமிழக அரசே மேற்கொள்ள வழி வகை செய்தோம்.

நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு 1981 முதல் 1991 வரை அதாவது பத்தாண்டுக் காலகட்டத்தில் 96,801 Concrete தள வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன. ஆனால், எங்கள் ஆட்சிக் காலத்தில், 1991 முதல் 1995 வரை நான்காண்டுகளில் மட்டும் 1,34,132 Concrete தள வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. அதுமட்டுமின்றி, இந்த ஆண்டு வேறு எந்த ஆண்டிலும் இல்லாத அளவுக்கு ஒரு சிறப்பினமாக 70,187, Concrete வீடுகள் 147 கோடி ரூபாய் மதிப்பில் கட்டும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. ஆதிதிராவிட மக்களுக்கு Concrete வீடுகளைக் கட்டி வழங்கும் பணியில் எங்கள் அரசு ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகிறது.

குடிநீர் வசதி, இணைப்புச் சாலை வசதி, மின் விளக்கு வசதி, இடுகாட்டு வசதி, இடுகாட்டுக்குச் செல்லும் பாதை வசதி ஆகிய அடிப்படை வசதிகளை எல்லா ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும் வழங்க வேண்டும் என்று நான் ஆணை

பிறப்பித்துள்ளேன். அதற்காக 125 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அடிப்படை வசதிகள் இல்லை என்று கணக்கிடப்பட்ட 2,905 குடியிருப்புகளில் இது வரை 2,000 குடியிருப்புகளுக்கு அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப் பட்டுள்ளன. இந்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் மீதமுள்ள 905 குடியிருப்புக்கும் இந்த வசதிகள் செய்து தரப்படும். தமிழகத்தில் உள்ள 31,000 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும் அடிப்படை வசதிகள் கிடைத்து விடும். அடிப்படை வசதிகள் இல்லாத ஆதிதிராவிடர் குடியிருப்புகளே இல்லை என்ற ஒரு உன்னதமான சூழ்நிலையை நிச்சயமாக உருவாக்கிக் காட்டுவோம்.

சமீபத்தில் 28 உறுப்பினர்கள் அடங்கிய மாநில அளவிலான ஆதிதிராவிடர் உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்து ஆதி திராவிடர் நலன்காக்க ஒரு புதிய பாதையை அமைத்துள்ளது. உங்கள் அன்புச் சகோதரியின் அரசு. 1.12.1995 அன்று இந்தக் குழுவின் முதல் கூட்டம் நடை பெற்றது. தமிழகத்தின் பல்வேறு பாகங்களிலிருந்து வந்து இதில் பங்கு கொண்ட எனது அன்பிற்குரிய சகோதர, சகோதரிகள் வழங்கிய கருத் துக்கள் இன்று செயல்வடிவம் பெற்று வருகின்றன.

உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி மாண்புமிகு திரு சாமிதுரை அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட 9 பேர் அடங்கிய மாநில ஆதி திராவிடர் நலக் கமிஷன் இந்தியத் துணைக் கண்டத்தின் பல பாகங் களிலிருந்து பாராட்டுக்களைப் பெற்றுள்ளது. இந்தக் குழு வழங்கும் பரிந்துரைகளை எங்கள் அரசு ஒரு புதிய முனைப்புடன் செயல்படுத்தும் என்று உறுதி கூறுகிறேன்.

ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள் பொருளாதார மேம் பாட்டோடு கல்வி மேம்பாட்டை யும் அடைய வேண்டும் என்ற இலட்சிய உந்துதலில் நாங்கள் மேற்கொண்டு வரும் திட்டங்கள் இன்று புதிய விடியலுக்கு வழி வகுத்து வருகின்றன. ஒரு புறம் ஆதிதிராவிடர்களுக்கான சிறப்புப் பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. விடுதிகள் அதிகரித்துள்ளன. பயில் வோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. மறுபுறம் உயர்நிலைப் பள்ளிகளில் இறுதி வகுப்புத் தேர்ச்சி 43 சதவிகிதத்திலிருந்து 57 ஆக உயர்ந்துள்ளது, மேநிலைப் பள்ளி இறுதி வகுப்புத் தேர்ச்சி 38 சதவிகிதத்திலிருந்து 58 ஆக உயர்ந்துள்ளது, உங்கள் அன்புச் சகோதரி ஆட்சியின் இன்னொரு புதிய மைல் கல் ஆகும்.

ஆதிதிராவிடப் பெண்களின் கல்வி வளர்ச்சியில் ஒரு புதிய முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக 5 மாவட்டங்களில் 3-ஆம் வகுப்பிலிருந்து 5-வது வகுப்பு வரை தொடக்கக் கல்வி பயிலும் ஆதிதிராவிடப் பெண் குழந்தை களுக்கு ஆண்டொன்றுக்கு 500 ரூபாய் நிதி உதவி வழங்கி அவர்களின் தொடக்கக் கல்விக்குக் குந்தகம் ஏற்படாத வண்ணம் பாதுகாத்து வரு கின்றோம். மேலும், ஆறாம் வகுப்பில் அடி எடுத்துவைக்கும் ஆதிதிராவிட மாணவிகளுக்கு மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. 60,000 பெண் குழந்தைகள் பயன் அடையும் இத்திட்டம் தற்போது மேலும் 5 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதற்கென 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு புறம் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களையும், மறு புறம், சமூக விழிப்புணர்வுத் திட்டங்களையும் நாங்கள் செயல்படுத்தி வருகிறோம். நாங்கள் மேற்கொண்டு வரும் நல்ல முயற்சிகளுக்குச் சிலர் உதவிகரமாக இல்லாவிட்டாலும் அரசியல் மனமாச்சரியங்களை முன்னிலைப்படுத்தி, இயல்பாக நடைபெறும் நிகழ்ச்சிகளையும் மிகைப்படுத்தி, அரசைக் குறை கூறி வருகின்றனர். போற்றலும், தூற்றலும் அத்தகையோர்களின் குற்றச்சாட்டுக்களும் எங்களது பணி ஆர்வத்தைச் சற்றும் குறைத்துவிடாது. இது வரலாறு காட்டும் உண்மை ஆகும்.

சமீபத்தில் நான் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திற்குச் சென்று அப்பகுதியின் அரசியல் கட்சித் தலைவர்களையும், சமுதாயத்

சோம்பலினால், உடல் மட்டு மல்ல; மனமும் கெட்டுவிடும் .

—சாரதா தேவியார்

தலைவர்களையும், பொது மக்களையும் சந்தித்துப் பேசினேன். தேவையற்ற சந்தேகங்களைப் போக்கிவிட்டு வந்தேன். ஆதி திராவிடப் பெருங்குடி மக்களுக்கு எங்கள் அரசு என்றென்றும் ஓர் அரணாகவும், பாதுகாவலர்களாகவும் விளங்கும் என்பதை, இது உறுதிப்படுத்தி உள்ளது. ஆதிதிராவிட மக்களின், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பணியில் நாங்கள் தொய்வின்றித் தொடர்ந்து செயலாற்றுவோம். எங்கள் பாதையில் எத்தனைத் தடைகள் போடப்பட்டாலும், அவற்றை ஒரு சவாலாகக் கருதி துணிவுடன் எதிர்கொண்டு வெற்றி பெறு வோமே தவிர, ஒருபோதும் பின் வாங்க மாட்டோம்.

ஆதிதிராவிட மக்கள் காவல் துறைப் பணிக்குத் தேர்வு செய்யப்படும் போது, அவர்களது உயரம் ஒரு தடையாக இருந்து வந்தது. எனவே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட உயரமான 168 சென்டிமீட்டர் அளவிலிருந்து 3 சென்டிமீட்டர் அளவு உயரத் தைக் குறைத்து 165 சென்டி மீட்டர் உயரம் இருந்தாலே அதாவது, ஐந்தரை அடி உயரம் இருந்தாலே போதும் என்ற புதிய சலுகையை நான் சமீபத்தில் அறிவித்தேன். 10,000க்கும் மேற்பட்ட காவலர்கள் புதிதாகத் தேர்வு செய்யப்படும்போது அதில் 1,800 பேருக்கும் அதிகமான ஆதிதிராவிட மக்கள் இடம் பெறுவார்கள் என்பதை எண்ணி என் மனம் மகிழ்ச்சி அடைகின்றது.

தமிழகத்தைச் சேர்ந்த ஆதி திராவிடப் பெருங்குடி மக்கள் இன்று எல்லாத் துறைகளிலும் வியக்கத் தக்க சாதனைகளைப் படைத்து வருகிறார்கள். Common Wealth விளையாட்டுப் போட்டிகளில் நான்கு முறை பதக்கங்களைப் பெற்ற பளு தூக்கும் வீரர் திரு கருணாகரன் அவர்கள், அர்ஜுனா விருதையும் பெற்றுத் தமிழகத்திற்குச் சிறப்பைத் தேடித் தந்திருக்கிறார். அதேபோல சர்வதேச அளவில் கேரம் விளையாட்டில் புகழ் பெற்று விளங்கும் திரு மரியம் இருதயராஜ், இமயமலைத் தொடர்ச்சியில் அமைந்துள்ள மிக உயர்ந்த எவரெஸ்ட் சிகரத்தில் 18,000 அடி வரை ஏறி, சாதனைப் படைத்துள்ள இளைஞர் திரு தேவா Kungfu மற்றும் Karate போன்ற வீர விளையாட்டுக்களில் வல்லுந ராகத் திகழ்ந்து கொண்டிருக்கும் திரு நேசன் ஆகியோர் தமிழகத் தின் பெருமைக்குரிய மைந்தர்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அவர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக் களை உரித்தாக்கிக் கொள் கிறேன்.

சரியான நியாயமான வாய்ப்புகள் கிடைத்தால், எந்தப் பிரிவைச் சார்ந்த மக்களும், வாழ்க்கையில் உயர்ந்து வெற்றி பெறுவார்கள் என்பதை இந்தச் சாதனையாளர்கள் நிரூபித் துள்ளார்கள். அவர்களது சாதனையைப் போற்றும் வண்ணம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒவ்வொருவருக்கும் 25,000 ரூபாய் வீதம், ஒரு இலட்சம் ரூபாய் பணப் பரிசு வழங்கப் படும் என்பதை மிக்க மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள் கிறேன்.

ஆதிதிராவிடர் இனத்தின் இளைய தலைமுறையினர் எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டு புதிய சாதனைகளைப் படைக்க வேண்டும் என்பதே எனது பேரவா. அவ்வாறு அவர்கள் மேற்கொள்கின்ற எல்லா முயற்சிகளுக்கும் எங்கள் அரசு என்றென்றும் உறுதுணையாக இருக்கும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

இந்த மாநாட்டை இத்தனைச் சீரோடும் சிறப்போடும் ஏற்பாடு செய்த அன்புச் சகோதரர் திரு எம். மூர்த்தி அவர்கள், அடக்கமும், பண்பும் அமைந்த துடிப்பான ஒரு இளைஞர். அடக்கம் இருக்கும் அதே நேரத்தில் அவரிடம் தெளிந்த மனத் துணிவையும் செயலாற்ற லையும் ஒருங்கே நான் காண் கின்றேன். அவரோடு தோளோடு தோள் நின்று பணிபுரியும் இலட்சிய உணர்வு மிக்க கூட்டத்தைக் காணும் போது எனது மனம் மகிழ்ச்சி அடைகிறது.

நீங்கள் அனைவரும் எல்லா வளங்களும் நலன்களும் பெற்று வாழ்வாங்கு வாழ வேண்டும் என்பதே எனது பேரவா. ஆதி திராவிடப் பெருங்குடி மக்கள் இந்த நாட்டின் மைந்தர்கள். அவர்கள் சமூக, பொருளாதார, அரசியல் உரிமைகள் அனைத் தையும் பெற்றுச் சீரியதோர் வாழ்க்கையை மேற்கொள்ள உங்கள் அன்புச் சகோதரியின் அரசு புதிய உறுதியுடன் முனைப்புடன் தொடர்ந்து செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

காவிரி நதிநீர்ப் பிரச்சினை:

அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

தமிழக நலனைக் கருத்தில் கொண்டு, சில முக்கியமான முடிவுகளை மேற்கொள்ளுவதற்கு இங்கே நாம் குழுமியுள்ளோம் என்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், 6.2.1996 அன்று தேசிய நீர் வளக் குழுமத்தின் கூட்டத்தினை, புது டில்லியில் கூட்டியுள்ளார்கள். இந்தக் குழுமத்தின் உறுப்பினர் என்ற முறையில் நான் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு, தமிழகத்தின் சார்பில், கருத்துக்களைத் தெரிவிக்க உள்ளேன். அப்போது விவாதிக்கப்பட இருக்கின்ற பொருள்களின் மீது, தமிழக அரசின் உறுதியான நிலையைத் தெரிவிக்கவும், சரியான அணுகுமுறையை மேற்கொள்ளவும், உங்களது மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கேட்கத்தான் இந்தக் கூட்டத்தை நாங்கள் கூட்டியுள்ளோம்.



6.2.1996 அன்று நடைபெறுகின்ற கூட்டத்தில், பல மாநிலங்கள் வழியே செல்லும், ஆறுகளின் நதி நீர்ப் பங்கீடு குறித்து மத்திய அரசு தயாரித்துள்ள, கொள்கை குறிக்கோள்கள் — அதாவது National Policy விவாதிக்கப்பட உள்ளன. இந்தக் குறிக்கோள்களின் முக்கியமான சில அம்சங்களை நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். பல மாநிலங்களின் வழியே ஓடும், ஆற்று நீரைப் பங்கீடு செய்வதற்கு, சில அடிப்படைகளை மத்திய அரசு கோடிட்டுக் காட்டியுள்ளது.

முதலில் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும், அந்த ஆற்றில் சேரும் நீர்வரத்து அந்த மாநிலத்தில்

பெய்து ஓடும் மழை நீர் அளவு ஆகியவற்றைக் கணக்கில் கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக, ஒவ்வொரு மாநிலத்தின் வறண்ட பகுதிகளின் பாசன நீர்த் தேவை மாநிலத்தில் நீர்ப்பாசன மேம்பாட்டு நிலை, சாகுபடிக்கு ஏற்ற பரப்பளவு, மேலும் மற்ற மாநிலங்களோடு அதன் ஒப்பீடு, வரும் எதிர்காலத்தின் தேவைகள், குடிநீர், நீர் மின் உற்பத்தி, இதர நீர் உபயோகத் தேவைகள் ஆகியவற்றையும், மாநிலங்களின் பொதுவான, பொருளாதார முன்னேற்ற நிலையையும், கருத்தில் கொள்ள வேண்டும் என்றும், நிலத்தடி நீர்ப்பாசன மேம்பாட்டின் மூலம், ஏற்படும் நீர்ச் சிக்கனம், நீர் உபயோகப் பயன்பாட்டு அதிகரிப்பு ஆகியவற்றையும் மாநிலத்தின் பிற நீர் வள வாய்ப்புகளையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும், என்றும் கூறப்பட்டுள்ளது. இவை எல்லாம் 6ந் தேதி நடைபெற உள்ள கூட்டத்திற்காக, இப்போது கிடைக்கப் பெற்றுள்ள குறிப்புகளில் காணப்படுகின்றன.

ஆனால், நம் நாட்டில் ஏற்கெனவே, நிலை பெற்றுள்ள பாசனம், அதற்கான காப்பு முறைகள், உயர்ந்த உற்பத்தித் திறன் கொண்ட படுகைப் பகுதிகளில் உபயோகிக்கும் நீரின் அளவு போன்ற இதர அம்சங்களும், மரபுரிமைகளும் புறக்கணிக்கப்பட்டுள்ளன. இது நமது மாநிலத்தை, குறிப்பாக காவிரிப் பாசனத்தைப் பெரிதும் பாதிக்கும்.

இது பற்றி ஏற்கெனவே, தமிழக அரசுக்குக் கிடைத்த கொள்கைக் குறிப்பை, நாங்கள் கவனத்தோடு பரிசீலனை செய்தோம். மத்திய நீர்க் குழுமம், அதாவது Central Water Commission, 17.5.1994 அன்று அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ள கருத்துக்களுக்குத் தமிழக அரசு தனது பதிலை, 24.6.1994 அன்றே, மத்திய அரசுக்குத் தெரிவித்துள்ளது. தமிழகத்தின் உரிமைகள், எந்த நிலையிலும் பாதிக்கப்படக் கூடாது, நமது ஜீவாதார உரிமைகள், மறுக்கப்படக் கூடாது என்ற அடிப்படையில்தான் நமது கருத்துக்களை மத்திய அரசுக்கு ஏற்கெனவே தெரிவித்துள்ளோம்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் 1.1.1996-இல் எனக்கு எழுதிய கடிதத்தில், இந்தக் கொள்கைக் குறிப்புகளைப் பற்றிக் கோடிட்டுக் காட்டி, இந்த வழிகாட்டி விதிமுறைகளை விவாதித்து முடிவு செய்ய விரைவில் ஒரு கூட்டம், கூட்டப்படும் என்பதையும் தெரிவித்திருந்தார்கள். எனவே, இந்த விஷயத்தைப் பற்றிய தமிழக அரசின் சார்பில் நமது திண்ணமான கருத்துக்களை நான் 13.1.1996 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளேன். அந்தக் கடிதத்தின் நகலும், தமிழாக்கமும், உங்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளன. அந்தக் கடிதத்தில், ஆலோசனைக்குரிய கொள்கைக் குறிக்கோள்கள், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவு 262-இன் கீழ், உருவாக்கப்பட்ட நடுவர் மன்றத்தை ஒருக்காலும் கட்டுப்படுத்தாது. மேலும், இது போன்ற Guidelinesகளைச் சட்டமாக்குகின்ற அதிகாரமும், திறனும், நாடாளுமன்றத்திற்கும் இல்லை. அதுமட்டுமின்றி, நிர்வாக முறையிலும், இத்தகைய Guidelinesகளை நடைமுறைப்படுத்த, மத்திய அரசுக்கு, சட்டரீதியான அதிகாரமும் இல்லை.

> **சமுதாயத்து ஒன்றுபடாத எந்த மனிதனும் முழுமை பெற்றவனாக ஆகமாட்டான்.**
>
> **—டாக்டர் ராதாகிருஷ்ணன்**

அவ்வாறு பிறப்பிக்கப்படும் குறிக்கோள்கள், அரசியல் அமைப்புச் சட்டத்தில் நீதித் துறைக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களில் முறையற்ற முறையில் தலையிடுவதாகக் கூட அமைந்துவிடும். ஆகவே, அத்தகைய செயல் அரசியல் அமைப்புச் சட்டத்திற்குப் புறம்பானதாகும் என்ற சட்ட வல்லுநர்களின் கருத்தையும் இந்த நேரத்தில் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன். மேலும், இந்த வழிகாட்டி விதிமுறைகள் நீதி முறைக்கும் நீதி முறைப்படி விசாரிக்கும் மன்றத்திற்கும், அம்மன்றத்தின் நடவடிக்கைகளுக்கும், குந்தகம் விளைவிக்கும். ஏற்கெனவே நடுவர் மன்றத்திற்கு விடப்பட்டு விசாரணையில் உள்ள காவிரி நதி நீர்த் தாவாவில்,இந்தப் புதிய Guidelinesகளைப் புகுத்த, சற்றும் இடமில்லை என்ற கருத்தையும், ஆணித்தரமாக வலியுறுத்த உள்ளேன்.

தேசிய நீர்வளக் கொள்கை பாசனத் தேவைகளுக்கு மட்டுமல்லாமல், ஒரு மாநிலத்தின் இதர நீர்த் தேவைகளையும் கருத்தில் கொண்டு, மற்ற நீர்த் தேவைகளுக்கும், அவற்றை எவ்வாறு, ஒருங்கிணைந்த முறையில் பயன்படுத்தலாம் என்று திட்டமிடுகிறது. மேலும், நடைமுறையில் உள்ள சட்டங்கள், ஒப்பந்தங்கள், அல்லது நடுவர் மன்றத் தீர்ப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் நீர்வளத்தின் பயன் திறனை, எந்த அளவிற்கு அதிகரிக்கலாம் என்றும் ஆராய்கிறது. ஒப்பந்தங்கள் ஏற்படாத நிலையில் நடுவர் மன்றத் தீர்ப்புகளின் அடிப்படையில் மட்டுமே, நீரைப் பங்கீடு செய்வது அதிகப் பயன் தரும் என்பதுதான் உண்மை நிலை. தேசிய நீர் வளக் கொள்கையில் கண்ட ஒவ்வொரு கருத்துக்கும் வழிகாட்டி விதிமுறைகளை, அதாவது Guidelinesகள் வகுக்க வேண்டும் என்ற அவசியம் இல்லாதது மட்டுமின்றி, அவ்வாறு கொள்கைக்கும் வழிகாட்டி விதிமுறைகள் வகுப்பது இயலாத காரியமும் ஆகும்.

அது மட்டுமின்றி, ஏற்கெனவே நடைபெற்ற தேசிய நீர் வளக் குழுக் கூட்டத்தில் நதி நீர்ப் பங்கீடு பற்றிய வழிகாட்டி விதிமுறைகளைத் தேசிய நீர் வளக் கொள்கையில் சேர்க்க வேண்டாம் என்று,அதாவது National Water Policyயில் Water sharing Guidelinesகள் எதுவும் சேர்க்க வேண்டாம் என்று தெளிவாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது. கடந்த தேசிய நீர் வளக் குழுவின் கூட்டம் நடைபெற்றபோது, மறைந்த பாரதப் பிரதமர் அமரர் ராஜீவ் காந்தி அவர்கள், பன்மாநில நதிநீர்த் தாவாக்கள் சட்டத்தின் கீழ்—அதாவது, Inter-state Water Disputes Actன் கீழ், அமைக்கப்பட்ட பல்வேறு நடுவர் மன்றங்கள் பல வழக்குகளை ஆராய்ந்து தங்களது தீர்ப்புகளை வழங்கியுள்ளன என்றும், அந்தத் தீர்ப்புகள் எல்லாம், தற்போது மேற்கோள் ஆவணச் சட்டங்களாக - அதாவது Case Lawக்களாக அமைந்துள்ளன என்றும் குறிப்பிட்டிருந்ததைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இத்தகைய Guidelinesகளைத் தேசிய நீர்க் கொள்கையில் சேர்க்கக் கூடாது என்று 1987-ஆம் ஆண்டில் நடைபெற்ற தேசிய நீர்வளக் குழுமத்தின் இரண்டாவது கூட்டத்தில் மாண்புமிகு பாரதப் பிரதமர் கருத்துத் தெரிவித்து இருக்கிறார்.

> **உன் சொந்தப் புத்திதான் உனக்கு வழிகாட்டி. அதை நல்ல முறையில் பயன்படுத்து, பிறரிடமுள்ள அவநம்பிக் கையைக் கைவிடு.**
>
> **- தந்தை பெரியார்**

ஒரு வேளை இத்தகைய வழிகாட்டி விதிமுறைகள் அனைவராலும் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் கூட, அது கவைக்கு உதவாது, நிர்வாக முறையில் உருவாக்கப்பட்டிருந்தாலும் கூட அது ஓரளவிற்கு மட்டுமே பயனைத் தருமே தவிர, நிரந்தரமாகப் பயன் அளிக்காது. இத்தகைய நிர்வாக ரீதியான கொள்கை வழிகாட்டிகள் சம்பந்தப்பட்ட மாநிலங்களை முழுமையாக எந்த வகையிலும் கட்டுப்படுத்த இயலாது. மேலும், சம்பந்தப்பட்ட மாநிலங்கள் கொள்கை குறிக்கோள்களைச் செயல்படுத்த வேண்டும் என்ற கட்டாயம் இல்லாதபோது அவற்றைச் செயல்படுத்தாது. எனவே, இதனால் எந்தப் பயனும், எவருக்கும் கிடைக்காது என்பதுதான் நடைமுறை உண்மை.

ஒவ்வொரு நதிநீர்ப் படுகையும், தனித் தன்மையைக் கொண்டது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. நதிநீர்ப் படுகையின் புள்ளி விவரங்கள், ஏற்கெனவே நிலை நாட்டப்பட்ட உரிமைகள் மற்றும் அந்தப் படுகைக்கு உண்டான நீர் உபயோக விதிமுறைகள் ஆகியவை தனித் தன்மை படைத்தவை ஆகும். இது போன்ற பொதுவான கொள்கை வழிகாட்டி விதிகள் மூலம் தனிப்பட்ட நதி நீர்ப் பங்கீட்டு வழக்குகளைத் தீர்த்து வைக்க முடியாது . மாறாக, சில சமயங்களில் இவற்றால், பாதகமான எதிர் விளைவுகளும் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

காவிரி நதிநீர் நடுவர் மன்றத்தில் முறையாக வழக்கு நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் இத்தகைய கொள்கை வழிகாட்டி விதிகள் தேவையற்றவை - பயனற்றவை என்பதோடு,. நீதி நிலைக்கும் முரணானவை என்பதே நமது ஆணித்தரமான கருத்து என்று திட்டவட்டமாக எடுத்துக்கூற வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம்.

மாநிலங்களுக்கு இடையே ஆன நதிநீர்ப் பங்கீட்டில் ஆண்டாண்டுக் காலமாக ஒரு மாநிலம் மரபுரிமையாக அனுபவித்து வரும் உரிமைகளை இன்னொரு புதுத் தேவையைக் காரணம் காட்டி, தட்டிப்பறிக்கக் கூடாது — தட்டிப் பறிக்கவும் முடியாது.

சமநீர்ப் பங்கீடு முறை, அதவாது Equitable distribution என்ற கொள்கையின் அடிப் படையில் நீரைப் பங்கிட்டுக் கொள்ளலாம் என்று விவா திக்கும் போது ஏற்கெனவே ஒரு மாநிலம் அனுபவித்து வரும் மரபுரிமைகளுக்குக் கண்டிப் பாகக் குந்தகம் ஏற்படாமல் பாது காத்தாக வேண்டும். மத்தியத் திட்டக் குழுவும், அதாவது Union Planning Commissionம் இந்தக் கொள்கை வழிகாட்டி விதிகளைப் பரிசீலனை செய்து இதனைக் கடுமையாகச் சாடியிருக்கிறது. இக்கொள்கை வழிகாட்டி விதி களை நிறைவேற்ற வேண்டிய சட்ட அதிகாரம், மத்திய அரசுக்கு இல்லை. நடை முறைக்கு ஒவ்வாத இந்த வழிகாட்டி விதிகளைச் செயல் படுத்துவது மிகச் சிரமமான காரியம்; குறிப்பாகப் பகுதி மூன்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படி நீர்ப் பங்கீட்டை மேற்கொண்டால் மேலும் பல புதிய சிக்கல்கள் உருவாகக் கூடும். தொன்று தொட்டு அனுபவ ரீதியாக நாம் பெற்ற உயரிய நெறிகளின் அடிப்படையில் வந்துள்ள நீதிமன்றத் தீர்ப்புகளுக்கும் மரபுரிமைகளுக்கும் இவ்வாறு நாம் நிர்ணயித்த புதிய வழிகாட்டி விதிமுறைகள் எந்த ஒரு காலத்திலும், ஒரு சரியான மாற்றாக, அதாவது Suitable substituteஆக அமைய முடியாது. ஆகையால், இக்கொள்கை வழிகாட்டி விதிகளை மறு பரிசீலனை செய்ய வேண்டியது மிக இன்றியமையாதது என்று மத்திய திட்டக் குழு ஏற்கெனவே மத்திய அரசை வலியுறுத்தி யுள்ளது. இப்பொழுது வரையப் பட்ட வழிகாட்டி விதிகளை ஏற்க இயலாது என்றும், மத்தியத் திட்டக்குழு திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

ஒரு பொருளைப் பற்றி, ஒரே மாதிரியான கருத்தைப் பலரும் தெரிவித்தால், அந்தக் கருத்து நிச்சயமாக ஏற்புடைய, நியாயமான கருத்தாகத் தான் இருக்க முடியும். அந்த வகையில் புதிய விதிமுறைகளை ஏற்படுத்துவது சரியானது அல்ல என்ற நமது கூற்றையே, மத்தியத் திட்டக் குழுவும், தனிப்பட்ட முறையில் தெரிவித்துள்ளது. நமது கருத்துச் சரியானதே, நியாயமானதே என்பதை மேலும் உறுதிப் படுத்தியுள்ளது.

தமிழகத்தின் நலன் காக்க, நாம் உறுதியான நிலையை, இதில் மேற்கொண்டு வந்துள் ளோம். நிச்சயமாக நமது நிலையில், எந்த மாற்றத்தையும் ஒப்புக்கொள்ள நாம் தயாராக இல்லை. நாம் இதுவரை எடுத் துள்ள முடிவுகள் நியாயமான உணர்வின் அடிப்படையிலும், சட்ட நுணுக்கங்களின் அடிப் படையிலும், நிர்வாக நடைமுறை களின் படியும், மேற்கொள்ளப் பட்டவை என்பதை மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். எங்கள் அரசு எடுக்கும், உறுதி யான முடிவுகளுக்கு நீங்கள் முழு ஆதரவு தருவீர்கள் என்று நம்புகிறேன்.

இந்தப் பொருள் குறித்து, இங்கே குழுமியுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும், சமுதாய நல இயக்கத் தலைவர்களும், தங்களது மேலான கருத்துக் களையும், ஆலோசனைகளையும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நிறைவேறிய தீர்மானங்கள்

3.2.1996 அன்று மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் மாண்புமிகு அமைச்சர்கள், அனைத்துக் கட்சித் தலைவர்கள், பாராளு மன்ற உறுப்பினர்கள், சட்டமன்றக் கட்சித் தலைவர்கள், விவசாயச் சங்கத் தலைவர்கள், சமுதாய நல அமைப்பின் தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில், 6.2.1996 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் டெல்லியில் தேசிய நீர் கொள்கையின்கீழ் தேசிய வழிகாட்டி விதிமுறைகளை National Policy Guidelinesஐ விவாதித்து முடிவு எடுப்பதற் காகக் கூட்டியுள்ள கூட்டத்தில் தமிழக அரசு எடுக்க வேண்டிய நிலை குறித்தும், தமிழக அரசு எடுத்துச் சொல்ல வேண்டிய கருத்துக்களை ஒட்டியும், பங்கு பெற்ற அனைவராலும் ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானங்கள்:

1. மத்திய அரசு அனுப்பி யுள்ள பன் மாநிலங்களின் நதி நீர்ப் பங்கீடு குறித்த, கொள்கை வழிகாட்டி விதிமுறைகள், அரசியல் நிர்ணயச் சட்டத்திற்கும் இதரச் சட்டங்களுக்கும் முரண் பாடாகவும், எவ்வித அதிகார மும் இன்றி இருப்பதால், இந்த வழிகாட்டி விதிமுறைகள் Guidelines நீதிமுறைக்கும், அம்முறையின்படி நடக்கும் நடுவர் மன்றக் குழுவின் நட வடிக்கைகளுக்கும் முரணானது என்றும் கருதுகிறது.

நடைமுறையிலும் இந்த வழிகாட்டி விதிமுறைகளை அமலாக்க இயலாது என்ப தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மத்திய திட்டக் குழுவும், கூறிய சீரான ஆலோசனைகளின்படி இந்த வழிகாட்டி விதிமுறை களை விவாதித்து அங்கீகரிக்கும் முயற்சியைக் கைவிட வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதாகத் தீர்மானிக்கப் படுகிறது.

2. ஆண்டாண்டுக் காலமாக, தமிழகம் மரபுரிமைப்படி அனுப வித்து வந்த எந்த உரிமையையும் சிறிதளவுகூட சிதைக்காமல் பாதுகாக்க வேண்டும் என்றும், தற்போது பன் மாநில நதிநீர்த் தாவா சட்டத்தின்கீழ் சட்ட பூர்வமாக நடைபெற்று வரும் நடுவர் மன்றங்களின் செயல் பாடுகளுக்கும், நடவடிக்கை களுக்கும், அவற்றின் தீர்ப்பு களுக்கும் எந்தக் குந்தகமும் ஏற்படாத வண்ணம் மத்திய அரசு செயல்முறைகளைக் கையாண்டு, நீதியை நிலை நிறுத்தக் கடமைப்பட்டது என்றும் ஏற்கெனவே வழங்கப்பட்ட தீர்ப்புகளுக்கு முரணாகவோ, புறம்பாகவோ, கருத்திலோ, செயல்முறையிலோ உத்தேசிக்கும் எந்த ஏற்பாட்டையும் தமிழகம் ஏற்காது என்றும் தீர்மானிக் கிறது.

3. *19.12.1995*ந் தேதியிட்ட காவிரி நதிநீர் நடுவர் மன்ற ஆணைப்படி, தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய எஞ்சியுள்ள 5 டி.எம்.சி. நீரை உடனடியாகக் கர்நாடக அரசு திறந்துவிடுமாறு பாரதப் பிரதமர் உத்தரவிட வேண்டும் என்று இக்கூட்டம் வற்புறுத்துகிறது.

4. பெரியார் அணைக் கட்டின் நீரின் கொள்ளளவை 136 அடியிலிருந்து 152 அடியாக உயர்த்தத் தமிழக அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத் துள்ள சூழ்நிலையில், கேரள அரசு மேற்குறிப்பிட்டவாறு நீரின் கொள்ளளவை அதிகரிக்க ஒத்துழைப்புத் தர வேண்டும் என்றும், அதற்கு மத்திய அரசு ஆவன செய்ய வேண்டும் என்றும் இக்கூட்டம் வற்புறுத்து கிறது.

5. *6.2.1996* அன்று டெல்லி யில் நடைபெறும் மத்திய நீர்வளக் குழுக் கூட்டத்தில், மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே தெரிவித்த கருத்துக்களை வலியுறுத்தி தமிழகத்தின் ஒட்டு மொத்தக் கருத்தாக எடுத் துரைத்து, இந்தத் தீர்மானத்திற்கு இசைய, நிலைமைக்குத் தக்க எல்லா நடவடிக்கைகளையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுக்கவும், அதற்கு முழு ஒத்துழைப்பு வழங்குவது என்றும் கேட்டுக் கொண்டு, இக்கூட்டம் ஒருமனதாகத் தீர்மானிக்கிறது.

நல்லதே செய்வோம்!

தன்னை வெட்டும் கோடாரிக்கும் நறுமணம் தரும் சந்தன மரம் போன்றவனே மனிதன்.

—துளசிதாஸ்

நாம் பார்க்கும் உலகம் வேறு; அறியப்படும் உலகம் வேறு.

—பிளேட்டோ

கடமைகளைச் சரிவர செய்யாமலே உரிமைகளுக்காகப் போராடக் கூடாது.

—விநோபா

நமது சமூகத்தில் நிலவி வரும் குறைபாடுகள் நீங்க வேண்டுமெனில், நாம் எல்லோரும் ஓர் குலம் என்ற உணர்வு ஏற்பட வேண்டும்.

—டாக்டர் ராதாகிருஷ்ணன்

(6-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் உறுதி செய்வார் என்பதை எதிர்நோக்கி, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் முடிவை எதிர்ப்புடன் தமிழ்நாடு ஏற்றுக் கொண்டது. எஞ்சிய 5 டி.எம்.சி. நீரை இம்மாநிலத்திற்கு வழங்க கருநாடக அரசுக்கு உத்தரவு பிறப்பிக்க உச்சநீதிமன்றத்தில் விண்ணப்பம் ஒன்றைத் தமிழ்நாடு அரசு தற்போது தாக்கல் செய்துள்ளது. 1996 பிப்ரவரி 6 ஆம் நாள் புது டில்லியில் நடைபெற்ற தேசிய நீர் ஆதாரங்கள் குழுக் கூட்டத்தில், தமிழ்நாட்டின் அவசர, உடனடித் தண்ணீர்த் தேவை நிறைவு செய்யப்படாத நிலையில், பன்மாநிலங்களிடையே செல்லுகின்ற ஆறுகளிலிருந்து கிடைக்கின்ற நீரை மாநிலங்களுக்கிடையே பகிர்ந்தளிப்பது குறித்த வரைவுக் கொள்கை வழி காட்டிக் குறிப்புகள் பற்றி தற்போது விவாதிப்பது பயனற்றதாகும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டினார். நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையின்படி, எஞ்சியுள்ள 5 டி.எம்.சி தண்ணீரைத் திறந்துவிட வேண்டியதன் அவசரத் தேவை குறித்து வலியுறுத்தினார். மேலும், 1991 டிசம்பர் 10 ஆம் நாளன்று, மத்திய அரசு, அரசிதழில் வெளியிட்ட காவிரி நீர்த் தகராறு குறித்த நடுவர் மன்றம் பிறப்பித்த இடைக்கால ஆணை, உண்மையில் செயலாக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, 1956 ஆம் ஆண்டு பன்மாநில நீர்த் தகராறுகள் சட்டத்தின் 6A பிரிவில் கூறியுள்ளபடி, திட்டம் ஒன்றை உருவாக்கி, அத்திட்டம் செயல் படுத்தப்படுவதை உறுதி செய்ய க்ண்காணிப்புக் குழு மற்றும் செயலாக்கக் குழு ஆகியவற்றை அமைக்கும்படி மத்திய அரசிடம் முதலமைச்சர் அவர்கள் மீண்டும் வலியுறுத்தினார். கருநாடக அரசு தண்ணீர் விடாததால், இம்மாநிலத்தில் உணவு உற்பத்தியில் ஏற்பட்ட மொத்த இழப்பு 10 இலட்சம் டன்னுக்கும் அதிகமாக இருக்கும். சட்ட விதிகளைப் பின்பற்றவும், அரசியலமைப்புச் சட்ட நெறிமுறைகளின்படி நிருவாகத்தைத் தங்குதடையின்றி செயல்படுத்தவும், உச்சநீதிமன்றம் மற்றும் காவிரி நீர்த் தகராறு குறித்த நடுவர் மன்றம் போன்ற உரியவாறு அமைக்கப்பட்ட தீர்ப்பு வழங்கும் அமைப்புகள் ஆகியவற்றின் உத்தரவுகளையும் ஆணைகளையும் அனைத்துத் தரப்பினர்களும் ஏற்றுச் செயல்படுத்த வேண்டும். உச்சநீதிமன்றத்தின் ஆணைகளையும், காவிரி நீர்த்தகராறு குறித்த நடுவர்மன்றத்தின் ஆணைகளையும் கருநாடக அரசு ஏற்று நடக்க வேண்டும்.

8. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தொலைநோக்கு ஆற்றலும், விரைந்து செயல்படும் பாங்கும், ஆர்வமும், கண்ணோட்டமும், உலக அளவில் சென்னையை மிகப் பெரிய போட்டி விளையாட்டுக்குரிய இடமாக உயர்த்தியுள்ளது. ஜவஹர்லால் நேரு தங்கக் கோப்பை பன்னாட்டு கால்பந்து விளையாட்டுப் போட்டி, பன்னாட்டு விளையாட்டுப் போட்டி ஆகியவற்றைத் தொடர்ந்து நடைபெற்ற ஏழாவது தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பு விளையாட்டுகள், சென்னை மாநகரில் இதற்கு முன்னர் எப்போதுமே நடந்திராத பெரிய போட்டி விளையாட்டு விழாவாகும். இந்த விளையாட்டுகளை மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி.நரசிம்மராவ் அவர்கள் 1995 டிசம்பர் 18 ஆம் நாள் தொடங்கி வைத்தார். மொத்தம் 7 "சார்க்" நாடுகளிலிருந்து வந்த

உச்சநீதிமன்றத்தின் ஆணைகளையும், காவிரி நீர்த்தகராறு குறித்த நடுவர்மன்றத்தின் ஆணைகளையும் கருநாடக அரசு ஏற்று நடக்க வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தொலைநோக்கு ஆற்றலும், விரைந்து செயல்படும் பாங்கும், ஆர்வமும், கண்ணோட்டமும், உலக அளவில் சென்னையை மிகப் பெரிய போட்டி விளையாட்டுக் குரிய இடமாக உயர்த்தியுள்ளது.

தொழில்நுட்பப் பிரதிநிதிகள் உட்பட 2500 விளையாட்டு வீரர்கள் 14 வகை போட்டி விளையாட்டுகளிலும், 2 செயல்முறை விளக்க விளையாட்டுகளிலும் பங்கேற்றனர். ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்துடன், மேலும் 5 புதிய விளையாட்டு அரங்கங்கள், அதாவது செயற்கைப் புல்தரை "ஹாக்கி" விளையாட்டு அரங்கம், செயற்கை மேற்பரப்பு உடைய டென்னிஸ் விளையாட்டு அரங்கம், நவீன நீச்சல் வளாகம், முற்றிலும் குளிர்சாதன வசதி செய்யப்பட்ட பலநோக்கு அகவிளையாட்டு அரங்கம், உலகத் தரத்தில் அமைந்த குறிபார்த்துச் சுடுவதற்குரிய களம் ஆகியவை மொத்தம் ரூ.58 கோடி செலவில் கட்டப்பட்டன. மேலும், ரூ.5 கோடி மதிப்புள்ள உயர்தர போட்டி விளையாட்டுச் சாதனங்கள் பல்வேறு போட்டி விளையாட்டு அரங்கங்களில் நிறுவப்பட்டுள்ளன. அனைத்து வசதிகளும் கொண்ட விளையாட்டுக் கிராமம் ஒன்று ரூ.101 கோடி செலவில் அமைக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்த செயலூக்கத் திட்டம், இந்திய விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் 106 தங்கப் பதக்கங்களும், 60 வெள்ளிப் பதக்கங்களும், 19 வெண்கலப் பதக்கங்களும் வெல்வதற்குத் தூண்டுகோலாக இருந்தது. சென்னையில் போட்டி விளையாட்டுகளுக்காக உலகத் தரம் வாய்ந்த அடிப்படை வசதிகளை உருவாக்குவது, வருங்காலத்தில் பல முக்கியமான உலகப் போட்டி விளையாட்டுகள் நடைபெறுவதற்கு அனைவரும் விரும்பி ஏற்கும் ஓர் இடமாக சென்னை அமைவதோடு மட்டுமின்றி, தேசிய அளவிலும், உலக அளவிலும் சிறந்த சாதனை படைக்கும் பல போட்டி விளையாட்டு வீரர்களையும் உருவாக்கும் நிலைக்களனாகவும் அமையும்.

9. 1991-92 முதல், ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்ட நிதிஒதுக்கீட்டினை, பெருமளவில் தொடர்ந்து அதிகரிப்பதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா மேற்கொண்ட சிறப்பான முயற்சிகளை, சட்டப் பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். கடந்த 4 ஆண்டுகளில், ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடுகளை, திட்டங்களைச் செயலாக்குகையில் விஞ்சுவதற்கு மாநிலம் வகை செய்தது. இக்கால அளவில், இம்மாநிலத்தின் நபர் வாரியான திட்ட ஒதுக்கீடு, தேசிய சராசரி அளவைக் காட்டிலும் அதிகமாக்கப்பட்டது. சிறப்பாகக் குறிப்பிடத்தக்க இச்சாதனை இம்மாநிலத்தின் வளர்ச்சியில் இந்த அரசு கொண்டுள்ள கடமையுணர்வைக் காட்டுகிறது. பல பெரிய மாநிலங்கள் அவற்றின் முதற்கண் ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டைச் சரிவரச் செயலாக்க இயலாத நிலையில் இருக்க; இம்மாநிலத்தின் சாதனையை மத்தியத் திட்டக்குழு பாராட்டியுள்ளது. 1991-92ல் ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ.1605 கோடி என்றிருக்க, அடைந்துள்ள சாதனை ரூ.1725.98 கோடியாக இருந்தது. 1992-93ல் ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ.1766 கோடியாக இருக்க, தமிழ்நாடு அடைந்துள்ள சாதனை ரூ.1935.14 கோடியாக இருந்தது. 1993-94ல் ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு ரூ.2101 கோடி என்றிருக்க, அடைந்துள்ள சாதனை ரூ.2234.79 கோடியாக இருந்தது. 1994-95ல் ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு, 30.89 சதவீதம் அதிகரிக்கப்பட்டு ரூ.2750 கோடியாக நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், இம்மாநிலம் ரூ.2845.70 கோடி அளவிற்குத் திட்டச் சாதனை புரிந்துள்ளது. 1995-96 ல் ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு

ரூ.3200 கோடி என்றிருக்க, வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.3250.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீட்டை இம் மாநிலம் எய்தி விடும் என்ற நம்பிக்கை உள்ளது. 1996-97 ஆம் ஆண்டிற்குரிய, ஆண்டுத் திட்டத்தின் ஒட்டு மொத்த அளவை முடிவு செய்வது குறித்து மத்தியத் திட்டக் குழுவோடு நடத்தப்படும் பேச்சு வார்த்தை இன்னும் முடிவுறவில்லை. 1996-97 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு நடப்பு ஆண்டிற்குரிய அளவில் நிர்ணயிக்கப்பட்டாலுங்கூட, இம்மாநிலம், எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட பண வீக்கத்தைக் கணக்கில் கொள்ளாத ஒதுக்கீட்டு அளவான ரூ.10,200 கோடியை எளிதில் விஞ்சிவிடும் என்பதை, முதல் நான்கு ஆண்டுகளின் மாபெரும் சாதனை உறுதிப்படுத்துகிறது.

10. 1993-94, 1994-95 ஆம் ஆண்டுகளில் இருபது அம்சத் திட்டத்தைச் செயலாக்குவதில், நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடம் வகித்துள்ளது. இம் மாநிலம், திட்ட இலக்குகள் அனைத்தையும் எய்துவதில் 100 சதவீத சாதனை படைத்துள்ளது. திட்டமிடல்-திட்டச் செயலாக்க மத்திய அமைச்சர், நமது மாநிலத்தின் சிறந்த சாதனையைப் பாராட்டியுள்ளார். 1995-96 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து அதே அளவு சாதனை படைக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

11. இந்த அரசு பின்பற்றிய கொள்கைகள், கடந்த ஐந்து ஆண்டுகளில் இம்மாநிலம் சிறந்த பொருளாதாரச் சாதனை படைக்க வழிவகுத்தன. 1991-92 ல் 2.69 சதவீதம் ஆக மட்டுமே இருந்த நிகர மாநில தன் உற்பத்தி மதிப்பீடுகளின் ஆண்டு வளர்ச்சி வீதம், 1994-95 ல் 4.90 சதவீதம் ஆக அதிகரித்துள்ளது. எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் அமைப்பு ரீதியில் வரும் தொழில் துறையில் 1.59 இலட்சம் கூடுதல் வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்படும் என்று மதிப்பிடப்பட்டது. அதாவது, ஒவ்வோராண்டும் சராசரியாக 32,000 வேலை வாய்ப்புகள் ஏற்படுத்துவதாகும். இதில், எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் 1.29 இலட்சம் வேலைவாய்ப்புகள் ஏற்கெனவே ஏற்படுத்தப் பட்டுள்ளன. இது, ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 42,000 வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதாகும். அமைப்பு ரீதியில் வரும் தொழில்களில் உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்புகளில் பாதிக்கும் மேலானவை, தனியார் துறையில் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இதற்குக் காரணம், இந்த அரசு மேற்கொண்ட முதலீட்டாளருக்கு நேயமான தொழிற் கொள்கையாகும். மிகவும் குறிப்பிடத்தக்க மற்றொரு சாதனை, இம்மாநிலத்தின் ஊரக வறுமை நிலையின் ஒட்டுமொத்த அளவு வெகுவாகக் குறைந்துள்ளதாகும். இந்தியாவில் 1987-88 ஆம் ஆண்டில் சராசரியாக, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களின் எண்ணிக்கை 39.18 சதவீதம் ஆக இருக்க, தமிழ்நாட்டில் உள்ள ஊரக மக்களில் 45.8 சதவீதத்தினர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருந்தனர் என்று, மத்திய திட்டக்குழு அமைத்த வல்லுநர் குழு, நாட்டு மாதிரி ஆய்வுப் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் கணக்கிட்டது. வல்லுநர் குழு வரையறுத்த முறையைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட 1993-94 ஆம் ஆண்டிற்குரிய, நாட்டு மாதிரி ஆய்வு தொடக்க விவரங்களின்படி இந்தியாவில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் கிராம மக்களின் சராசரி விகிதாச்சாரம் 37.53 சதவீதம் என்றிருக்க, தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் சராசரி விகிதாச்சாரம் 32.64 சதவீதமாகக் குறைந்துள்ளது என்று கணக்கிடப்பட்டுள்ளது. நாடெங்கிலும் வறுமை நிலை ஓரளவே குறைந்துள்ள போதிலும், தமிழ்நாட்டில் வெகுவாக வறுமை நிலை குறைந்திருப்பது குறிப்பிடத்தக்க ஓர் சாதனையாகும்.

இம்மாநிலத்தில் வறுமை நிலையை மேலும் குறைக்கத் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இந்தக் குறிக்கோளை எய்த, பல்வேறு பொருளாதாரத் துறைகளில் அரசின் கொள்கைகள் முனைந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

12. பண வீக்கத்திலிருந்தும் பொருளாதாரச் சீரமைப்பு நடைமுறைகளின் கடுமையிலிருந்தும், ஏழை மக்களைக் காக்கும் பொருட்டு, பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படும் உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைந்த நிலையிலேயே வைத்து வர வேண்டியதன் முக்கியத்துவத்தை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய தன்னுடைய ஒவ்வொரு உரையிலும் வலியுறுத்தி வந்துள்ளார். குறைந்த விலையில் உணவுப் பொருட்களை வழங்குவதால் அரசுக்கு நிதிச் சுமை ரூ.600 கோடியாக அதிகரித்த போதிலும், பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படும் பொது ரக அரிசியின் விலையைக் கிலோ ஒன்றுக்கு ரூ.2/- ஆக அரசு குறைத்துள்ளது. வறட்சி நிலை காரணமாக நெல் விளைச்சல் குறையுமென்பதால், அரிசியின் விலை வெகுவாக அதிகரிக்கக் கூடும். இதனைத் தடுக்கும் நடவடிக்கையாக, 1996 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1 ஆம் நாளிலிருந்து, திங்கள் தோறும், குடும்ப அட்டைதாரருக்கு 8 கிலோ அரிசி கூடுதலாக வழங்க, அரசு துணிகரமாக முடிவு செய்துள்ளது. இம்மாநிலத்தில் கிடைக்கப் பெறும் அரிசியின் மொத்த அளவை அதிகரிக்கும் வண்ணம், அதிகரித்த தேவைக்குரிய அரிசியை ஏனைய மாநிலங்களிலிருந்தும், இந்திய உணவுக் கழகத்திடமிருந்தும் அரசு கொள்முதல் செய்யும். இதனால், அரசுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ.70 கோடி செலவாகும். அதாவது, நடப்பு ஆண்டிற்கு ரூ.210 கோடி செலவாகும். இருப்பினும், இது, பொதுமக்களின் அடிப்படைத் தேவையை முழுமையாக நிறைவு செய்யும் அரசின் உறுதியைத் தளர்த்தவில்லை.

13. மாநிலத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் ஏற்பட்ட பாதகமான வறட்சி நிலை காரணமாகவும், கருநாடக அரசு காவிரியில் நீர் திறந்து விடாத காரணத்தாலும், 14 இலட்சம் டன் உணவுத் தானிய உற்பத்தி இழப்பு ஏற்பட்டுள்ளது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையைச் சரி செய்யும் பொருட்டு, விதைகளையும், ஏனைய இடுபொருட்களையும் போதியளவு வழங்குவதற்கு உறுதி செய்வது உட்பட, சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளது. உணவுத் தானிய உற்பத்தியில் ஏற்பட்ட இந்த இழப்பு, மாநிலம் கடந்த 4 ஆண்டுகளில் எய்திய குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தில் ஓர் பின்னடைவாகும். 1990-91 ஆம் ஆண்டில் மொத்தம் 74.94 இலட்சம் டன்னாக இருந்த உணவுத் தானிய உற்பத்தி 1994-95 ஆம் ஆண்டில் 100 இலட்சம் டன்னை எட்டியது. 1990-91 ஆம் ஆண்டிலிருந்து 1994-95 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில், நாட்டின் உணவு தானிய உற்பத்தியின் சராசரி ஆண்டு வளர்ச்சி வீதம் 5.5 சதவீதமாக இருந்தபோது இந்த வீதம் தமிழ்நாட்டில் 12.5 சதவீதமாக இருந்தது. 1990-91 ஆம் ஆண்டில் 57.82 இலட்சம் டன்னாயிருந்த அரிசி உற்பத்தி, 1994-95 ஆம் ஆண்டில் 78 இலட்சம் டன்னாக அதிகரித்தது. 1990-91 ஆம் ஆண்டில், சிறு தானியங்களின் உற்பத்தி 13.5 இலட்சம் டன்னாக இருந்தது. இது, 1995-96 ஆம் ஆண்டில் 17.20 இலட்சம் டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1990-91 ஆம் ஆண்டில் 3.59 இலட்சம் டன்னாயிருந்த பருப்பு வகைகளின் உற்பத்தி, 1994-95 ஆம் ஆண்டில் 5.20 இலட்சம் டன் என்ற அளவை அடைந்துள்ளது. 1990-91 ஆம் ஆண்டில், எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி 12.14 இலட்சம் டன்னாக இருந்தது. இது, 1994-95 ஆம் ஆண்டில் 21.60 இலட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. 1994-95 ஆம் ஆண்டில், கரும்பு உற்பத்தி,

எப்போதும் கண்டிராத அளவான 379.81 இலட்சம் டன் என்ற அளவை எட்டியது. மாநிலத்தின் வேளாண் கொள்கை, தரமான வேளாண் இடுபொருட்கள் கிடைக்கச் செய்வது, மண் வளம் மற்றும் விதை தொழில் நுட்பம், உரிய நேரத்தில் பாசனமளித்தல் போன்றவற்றிலும், விவசாயிகள் தங்களுடைய உற்பத்திப் பொருட்களுக்கு ஆதாய விலை பெறுவதை உறுதி செய்வதிலும் கவனம் செலுத்தியுள்ளது. இதற்கிணங்க, வேளாண் விளைபொருட்களின் விலை மற்றும் கொள்முதல் குறித்த கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன. வேளாண்மைக்குக் கிடைக்கப் பெறும் தரமான பாசன வசதி மேம்படுத்தப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, மாநிலம், உலக வங்கியின் நிதியுதவியுடன், மொத்தம் ரூ.1240 கோடி செலவில், நீர் ஆதாரங்கள் தொகுப்புத் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. இத்திட்டம், தற்போதுள்ள 18 பெரிய, நடுத்தர அளவிலான பாசனத் திட்டங்களைச் சீரமைப்பதோடு, 9 பெரிய, நடுத்தர அளவிலான பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப் படுவதற்கும் வழிவகை செய்யும். இத்திட்டத்தினால் மாநிலத்தில் பாசனம் பெறும் 16.68 இலட்சம் ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் பயன்பெறும்.

14. தமிழ்நாடு, தொழில் வளர்ச்சியில் தனி மேம்பாடடைந்துள்ள மாநிலம் என்ற நிலையைப் பாதுகாக்கும் பொருட்டும், புதிய தொழில் முதலீடுகளை ஈர்க்கும் பொருட்டும், அரசு, சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 1992 ஜூன் திங்களில் புதிய தொழிற் கொள்கையை அறிவித்தார்கள். அது, தமிழ்நாட்டில் துரித, விரைவான தொழில் வளர்ச்சிக்கு அடித்தளத்தை அமைத்துத் தந்துள்ளது. தொழில் வளர்ச்சிக்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தவும், அடிப்படை வசதிகளைப் போதிய அளவுக்கு ஏற்படுத்தித் தரவும், மாநிலத்திற்குக் குறிப்பான செயல் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு, அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் காரணமாக, மாநிலத்தில் தொழில் வளர்ச்சி, குறிப்பிடத்தக்க வகையில் முன்னேறியுள்ளது. தொழில் உற்பத்தி வளர்ச்சி 1994-95 ஆம் ஆண்டில் அனைத்திந்திய அளவில் 8.4 சதவீதமாகயிருக்க, தமிழ்நாட்டின் தொழில் உற்பத்தி வளர்ச்சி 8.7 சதவீதமாக இருந்தது. 1991 ஆம் ஆண்டு ஜூலை திங்களிலிருந்து மாநிலத்தில் தொழில், எரிசக்தி துறைகளில் முதலீடு செய்ய ஏற்றுக் கொள்ளப்பட்ட மொத்தத் தொகை ரூ.84,950 கோடியாகும். வெளிநாடுகளிலிருந்து விரும்பி வந்து முதலீடு செய்யும் ஓர் இடமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. வெளிநாட்டு முதலீட்டு மேம்பாட்டுக் கழகத்தினால் வழங்கப் பெற்ற இசைவைப் பொறுத்த மட்டில், நம் நாட்டில் மூன்றாம் நிலையை வகிக்கும் மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகின்றது. 1991 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களிலிருந்து, ரூ.2674.20 கோடி முதலீடு செய்யக்கூடிய 327 வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

15. அரசு, 1996 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் உயர் பெரு தொழில்களுக்கென, திருத்தியமைக்கப்பட்ட செயலூக்கத் திட்டத்தை அறிவித்துள்ளது. துணைத் தொழில்கள் மூலம் அதிக வேலை வாய்ப்பை உருவாக்கும்

பல பெரிய மாநிலங்கள் அவற்றின் முதற்கண் ஏற்பளிக்கப் பட்ட ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டைச் சரிவரச் செயலாக்க இயலாத நிலையில் இருக்க, இம்மாநிலத்தின் சாதனையை மத்தியத் திட்டக்குழு பாராட்டியுள்ளது.

1993-94, 1994-95-ஆம் ஆண்டுகளில் இருபது அம்சத் திட்டத்தைச் செயலாக்குவதில், நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடம் வகித்துள்ளது. இம் மாநிலம், திட்ட இலக்குகள் அனைத்தையும் எய்துவதில் 100 சதவிகித சாதனை படைத்துள்ளது.

பெரிய அளவிலான தொழில்களை இங்கு அமைக்க இத்திட்டம் ஈர்க்கும். மாநிலத்தின் எந்தவொரு பகுதியிலும் ரூ.1500 கோடியும், அதற்கு மேம்பட்ட அளவிலான முதலீட்டுச் செலவில் அமைக்கப்படும் பெருந்தொழில்களுக்கு இச்செயலூக்கத் திட்ட உதவிகள் கிடைக்கப் பெறும். நம் நாட்டிற்குள்ளும், வெளி நாடுகளிலிருந்தும் தொழில் முன்னேற்ற முதலீடுதாரர்களின் தொழில் பிரிவுகளை ஈர்க்கும் வகையில், மாநிலத்தில் வெவ்வேறு இடங்களில் போதிய அடிப்படை வசதிகளுடன் கூடிய பெரிய அளவிலான தொழிற்பேட்டைகளையும், தொழிற் பூங்காக்களையும் அமைப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் மாநில அரசு எடுத்து வருகின்றது. தற்போது, ஸ்ரீபெரும்புதூர் அருகில், மொத்தம் 1600 ஏக்கர் நிலப்பரப்பில், சென்னை தொழில் பூங்கா அமைக்கப்படும். கும்மிடிப்பூண்டியில், 211 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.20 கோடி செலவில், ஏற்றுமதி மேம்பாட்டு தொழில் பூங்கா அமைப்பது தொடர்பான பணியை "சிப்காட்" நிறுவனம் மேற்கொண்டுள்ளது. கடலூர், கும்மிடிப்பூண்டி, ஓசூர் ஆகிய இடங்களில் தற்போதுள்ள "சிப்காட்" தொழிற்பேட்டைகள் விரிவாக்கப்பட்டு வருகின்றன. பெரியார் மாவட்டத்திலுள்ள பெருந்துறை, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள கங்கைகொண்டான் ஆகிய இடங்களில், தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் (TACID) வளர்ச்சி மையங்கள் அமைப்பது தொடர்பான செலவிற்குத் தன்னுடைய பங்குத் தொகையை வழங்க, அனைத்திந்திய நிதி நிறுவனங்கள் முன்வரவில்லை. இப்பணி தொடர்பாக ஏற்படும் நிதிப் பற்றாக்குறையைச் சரி செய்ய, மாநில அரசு ரூ.20 கோடி வழங்க இருக்கிறது. மேலும், தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட நிலக்கோட்டை தொழில் வளாகம், பர்கூர் தொழில் வளாகம், திருவள்ளூர் தொழில் வளாகம் ஆகியவற்றின் மேம்பாட்டுப் பணிகளையும் இராணிப்பேட்டை தொழில் வளாகத்தின் மூன்றாம் கட்டப் (phase - III) பணிகளையும் மேற்கொண்டுள்ளது. இம்மாநிலத்தில், பல்வேறு இடங்களில் "சிட்கோ" நிறுவனம் 12 தொழிற் பேட்டைகளை உருவாக்கி வருகிறது. இது 28,400 பேருக்கு நேரடியாகவும் தொடர்புடைய ஏனைய வகையிலும் வேலை வாய்ப்பு அளிக்கும். திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்திற்கும், விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் மாவட்ட சிறுதொழில்கள் சங்கத்திற்குமாக 2 தனியார் தொழிற் பேட்டைகளும் உருவாக்கப்பட்டு வருகின்றன.

16. இம்மாநிலம் எந்தெந்தத் தொழில் தொகுதிகளை நிறுவுவதற்குரிய அனுகூலங்களைப் பெற்றுள்ளதோ அத்தகைய தொழில் தொகுதிகளுக்குக் குறிப்பிட்ட கவனம் செலுத்துவது, ஒட்டுமொத்தத் தொழில் கொள்கைகளின் ஓர் முக்கிய அங்கமாகும். இதில், மோட்டார் வண்டித் தொழில், குறிப்பிடத்தக்க ஓர் துறையாகும். நாட்டின் "மோட்டார் தொழில் தலைநகர்" என்ற நிலையைச் சென்னைக்கு மீண்டும் பெற்றுத் தருவதே அரசின் நோக்கமாகும். சென்னைக்கு அருகே, மறைமலைநகரில், ஆண்டொன்றுக்கு 1 இலட்சம் ஊர்திகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைப்பது தொடர்பாகத் திருவாளர்கள் மகேந்திரா ஃபோர்டு (இந்தியா) லிமிடெட் நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டிருப்பது, இந்நோக்கத்தை விரைவில் எய்துவதற்கு

வழி வகுக்கிறது என்பதை அறிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். உலகில் பெரிய அளவில் தலைசிறந்த கார் நிறுவனமாகத் திகழும், ஃபோர்டு மோட்டார் நிறுவனம், தன்னுடைய தயாரிப்புத் தொழில்பிரிவு ஒன்றை அமைக்க, தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்திருப்பது, பெருமை சேர்க்கும் விஷயமாகும். மோட்டார் வண்டிகளின் உதிரிப்பாகங்கள், துணைப் பாகங்கள் ஆகியவற்றைத் தயாரிப்பது தொடர்பான பல துணைத் தொழிற்பிரிவுகள் அமைக்கப் பெறுவது உட்பட, கணிசமான பயன்களை இத்திட்டம் அளிக்கும். உலக அளவில் புகழ்பெற்ற ஏனைய கார் தயாரிப்பு நிறுவனங்களும், தங்களுடைய தொழிற்பிரிவுகளைத் தமிழ்நாட்டில் தொடங்க அக்கறை காட்டியுள்ளன.

17. ஏனைய துறைகளில் பெருந்திட்டங்கள் பல இம்மாநிலத்தில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. ரூ.625 கோடி முதலீட்டில் திருவாளர்கள் தாபர் டுபோண்ட் நிறுவனத்தின் நைலான் இழை உற்பத்திப் பிரிவு, சென்னை அருகே கும்மிடிப்பூண்டியில் நிறுவப்படவுள்ளது. உற்பத்தித் திறனை இருமடங்காக்கக்கூடிய தமிழ்நாடு செய்தித்தாள்-காகித நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டம் முடிக்கப்பட்டு, வணிக உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது. மொத்தத் திட்டச் செலவுத் தொகையான ரூ.580 கோடியில் ஒரு பகுதி நிதியாக, தமிழ்நாடு செய்தித்தாள்-காகித நிறுவனம் பொதுமக்களிடமிருந்து பங்குத் தொகையை ஈட்டி ரூ.217 கோடி திரட்டியுள்ளது. இது, மாநில அரசுத் துறை நிறுவனம் ஒன்றின் தனித் தன்மை வாய்ந்த சாதனையாகும்.

18. நாட்டின் கடுமையான மின்தட்டுப்பாடு குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். கிட்டத்தட்ட ஒவ்வொரு மாநிலத்திலும் மின் வெட்டும் மின்பளு குறைவும் செய்யப்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில், தமிழ்நாட்டில் 1992 அக்டோபர் முதல் மின்வெட்டு இல்லாமலிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். தற்போதுள்ள நிலைமை மிகவும் பாதகமாகவுள்ளது. பருவ மழை பொய்த்ததன் காரணமாக, புனல் மின் நீர்த்தேக்கங்களில் உள்ள நீரின் சேமிப்பு அளவு கணிசமாகக் குறைந்துள்ளது. தென் மின் தொகுப்பிலிருந்து ஆந்திரப் பிரதேசமும், கருநாடகமும் மின்சாரத்தை அதிகமாக எடுத்துக் கொள்கின்றன. சிங்கரேணி மற்றும் கோல் இந்தியா நிறுவனத்தின் நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து நிலக்கரி வரத்து தடையின்றி நடைபெறவில்லை. வரும் மாதங்களில் வீடுகளுக்கும், தொழில் மற்றும் வேளாண் துறைகளுக்கும் போதிய அளவில் மின்சாரம் வழங்க, தமிழ்நாடு மின்வாரியம் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தியை அதிகரிக்கவும், தேவையானால் இறக்குமதியின் வாயிலாக நிலக்கரியைப் போதுமான அளவுக்குக் கிடைக்கச் செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வடசென்னை அனல் மின் நிலையத்தின் மூன்றாவது 210 மெகாவாட் உற்பத்திப் பிரிவு, 1996 பிப்ரவரி இறுதியில் மின் தொகுப்புடன் இணைக்கப்படும். எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட 4 X 30 மெகாவாட் திறன் கொண்ட பேசின் பாலம் மின் உற்பத்தித் திட்டத்தின் நான்கு பிரிவுகளும் 1996 மார்ச்சுக்கு முன்னர் மின் தொகுப்புடன் இணைக்கப்படும். இதன் மூலம் வரும் கோடை மாதங்களில் போதுமான அளவுக்கு மின்சாரம் கிடைக்க உறுதி செய்யப்படும்.

19. எரி சக்தித் துறையில் மேம்பாடு காண்பதற்கு இவ்வரசு உயர் முக்கியத்துவம் அளித்துள்ளது. 1991 ஜூன் திங்களிலிருந்து உள்ள கால அளவில், இம்மாநிலத்தின் நிறுவு திறனில் 648.02 மெகாவாட் திறன் சேர்க்கப்பட்டுள்ளது. எட்டாவது திட்டக் காலத்தின் இறுதிக்குள் மேலும் 645.5 மெகாவாட் திறன் சேர்க்கப்படும். மாநில அரசு அதன் மூலம் உயரளவு மின் தேவையில் 45.54 சதவீத அதிகரிப்பைப் போதிய அளவு நிறைவு செய்ய இயன்றது. இனி

தமிழ்நாடு, உடல் ஊன முற்றோரின் நலனுக்கென்று தனிக் கொள்கையை உருவாக்கிய முதல் மாநிலம் ஆகும். உடல் ஊன முற்றோரின் நலனுக்கென்று தனியாக ஒரு துறை அமைக்கப் பட்டுள்ளது.

வருங்காலங்களில் கடுமையான மின்பற்றாக்குறை ஏற்படாமலிருப்பதை உறுதி செய்யும் நோக்குடன், எரிசக்தி மேம்பாட்டிற்காக நீண்டகாலத் திட்டம் ஒன்றையும் இத்துடன் அரசு உருவாக்கியுள்ளது. மொத்தம் 10,650 மெகாவாட் மின் உற்பத்திக்காக 16 ஒப்பந்தங்கள் தனியார் மின் உற்பத்தியாளர்களுடன் செய்து கொள்ளப்பட்டுள்ளன. இதில், 5320 மெகாவாட் மொத்த உற்பத்தித் திறனுடைய நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட 7 மின் திட்டங்கள், 3300 மெகாவாட் மொத்த உற்பத்தித் திறனுடைய எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட 3 மின் திட்டங்கள், 400 மெகாவாட் மொத்த உற்பத்தித் திறனுடைய டீசலை அடிப்படையாகக் கொண்ட 3 மின் திட்டங்கள், 10 மெகாவாட் உற்பத்தித் திறனுடைய புனல் மின் திட்டம் ஒன்றும், 100 மெகாவாட் உற்பத்தித் திறனுடைய கடல் நீர் வெப்ப ஆற்றல் மின் உற்பத்தித் திட்டம் ஒன்றும் அடங்கும். மீண்டும் மீண்டும் வேண்டுகோள்கள் விடுத்துங்கூட, தமிழ்நாட்டில் மின்துறையில் மேலும் மத்திய அரசின் முதலீடு இதுவரை செய்யப்படவில்லை. மொத்தம் ரூ.1590.58 கோடி செலவில் நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தின் சுரங்கம் I-ன் விரிவாக்கத்தின் அடிப்படையிலான 2 X 210 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையம் ஒன்றை அமைப்பதற்கான தொழில்-பொருளாதார அனுமதி ஏற்கெனவே 1995 ஜூன் திங்களிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. தேவையான நிருவாக அனுமதிகளை வழங்குமாறும், இத்திட்டத்தின் பணிகளை விரைந்து தொடங்குவதை உறுதி செய்யுமாறும் இந்திய அரசை, இவ்வரசு வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளும்.

20. மரபு சாரா எரிசக்தி ஆதாரங்களின் வளர்ச்சியில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்வது குறித்து மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் நன்கு அறிவர். இம்மாநிலத்திலுள்ள காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களின் மொத்த நிறுவு திறனளவு 434 மெகாவாட் ஆகும். காற்றாலை மின் உற்பத்தியில் தனியார் துறையின் பங்கேற்பு தொடர்ந்து ஊக்குவிக்கப்பட்டு வந்துள்ளது. இதுவரையில் மொத்தம் 415 மெகாவாட் நிறுவு திறன் கொண்ட 1602 தனியார் காற்றாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. நகராட்சிகள் சேகரிக்கும் குப்பைக் கூளங்களிலிருந்து 5 மெகாவாட் மின் உற்பத்தியைப் பெறுவதற்குக் கூட்டுத் துறையில் மின் உற்பத்தித் திட்டம் ஒன்று சென்னையில் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சர்க்கரை ஆலைகள், இரசாயனப் பொருட்கள் தயாரிப்புத் தொழிற்பிரிவுகள் ஆகியவற்றில் மின் உற்பத்திப் பிரிவையும் அமைப்பது முழு அளவில் ஊக்குவிக்கப்பட்டுள்ளது. இதுவரையில், 3 சர்க்கரை ஆலைகளில் மொத்தம் 29 மெகாவாட் திறன் கொண்ட மின்உற்பத்திப் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும், 10 சர்க்கரை ஆலைகளில் மொத்தம் 171 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்திப் பிரிவுகளை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

21. சென்னை மாநகரம் அதன் கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறையிலிருந்து முழுமையாக மீள்வதை உறுதி செய்வது இவ்வரசின், நோக்கங்களுள் ஒன்றாகும். ரூ.1638 கோடி செலவில் உலக வங்கி நிதி உதவியுடன் புதிய

வீராணம் திட்டத்தைச் செயல்படுத்த இரண்டாவது சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு திட்டத்தைத் தொடங்கி வைத்தது. வடகிழக்குப் பருவ மழை பொய்த்து விடுவதால் ஏற்படும் தொல்லையிலிருந்து சென்னைக் குடிநீர் வழங்கல் நிலைக்குக் காப்பளித்து, சிரமைக்கும். மேலும், கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வரப்பெறும்போது, அதனைச் சுத்திகரித்து விநியோகிப்பதற்கான அடிப்படை வசதிகளுக்கு, நாம் உலக வங்கியுடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகிற மூன்றாவது சென்னை குடிநீர் வழங்கல்-துப்புரவு திட்டம் வகை செய்யும். தெலுங்கு கங்கைத் திட்டத்தின் வாயிலாக கிருஷ்ணா நதி நீர் சென்னையை அடையும் போது, மறைந்த புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், மறைந்த திருமதி இந்திரா காந்தி அவர்கள், மறைந்த திரு என்.டி. ராமாராவ் அவர்கள் ஆகியோரது தொலைநோக்கு நிறைவேறும். தமிழ்நாடு, நீரைப் பெறத் தயாராகவுள்ளது. ஆந்திரப் பிரதேசத்தில் தெலுங்கு கங்கைத் திட்டப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. மேலும், காலதாமதமின்றி சென்னை மாநகருக்கு நீரை விட ஆந்திரப் பிரதேச அரசை வலியுறுத்துவதில் மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் என்னுடன் இணைந்து கேட்டுக் கொள்வார்கள்.

22. கிராமப் பகுதிகளில் வறுமை ஒழிப்பு, வேலை வாய்ப்புகளைப் பெருக்குதல் மற்றும் குடிநீர் வசதிகள், தெருவிளக்கு, சாலைகள், துப்புரவு வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தல் ஆகியவற்றிற்கு இவ்வரசு உயர்முக்கியத்துவம் அளித்துள்ளது. சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தை இவ்வரசு தொடங்கி வைத்து 1992-93ல் வெற்றிகரமாக முடித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் இம்மாநிலத்திலுள்ள 384 வளர்ச்சி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் ரூ.1 கோடி செலவிடப்பட்டது. மாவட்ட அளவில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்காகப் பயன்படுத்த குறிப்பிட்ட திட்டத்திற்கென்றில்லாது நிதியை வழங்க அதிகாரப் பரவல் முறையில் மாவட்ட அளவில் வகுக்கப்படும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்திற்குரிய நிதி ஒதுக்கீடு 1995-96ல் ரூ.50 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1991-92 ஆம் ஆண்டிலிருந்து ஐந்தாண்டுகளில் மொத்தம் ரூ.384 கோடி செலவில் 1.97 இலட்சம் வீடுகள் கட்டப்படவுள்ளன. இத்துடன், ஊரக வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 1991-92 லிருந்து மொத்தம் ரூ.140.97 கோடி செலவில் 1.80 இலட்சம் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இம்மாநிலத்திலுள்ள கிராமப் பகுதிகளில் 50 குடியிருப்புகளுக்கு மட்டுமே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டியுள்ளது. 1996 மார்ச்சுக்குள் இக்குடியிருப்புகள் அனைத்துக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும். மேலும், இம்மாநிலத்திலுள்ள ஒவ்வொரு குடியிருப்பும் குறைந்தது பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரம் ஒன்றையாவது பெற்றிருக்கும். கிராமப் பகுதிகளிலுள்ள மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு, கிராமப்பகுதிகளில் 50 குடும்பங்களுக்கு அதிகமான குடும்பங்களைக் கொண்ட குடியிருப்புகள் அனைத்திற்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்தை அரசு தொடங்கிவைத்தது. இத்திட்டத்தின் கீழ், இம்மாநிலத்திலுள்ள குடியிருப்புகளுக்கு 45,302 வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. ஊரக நிலமற்ற வேளாண் தொழிலாளர்கள், நகர்ப் பகுதிகளிலுள்ள ஏழை எளிய மக்கள் ஆகியோருக்கு இலவசமாக சேலை-வேட்டிகள் வழங்கும் திட்டம், ஊரக கைத்தறிப்பணியாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. அவ்வகையில், இத்திட்டத்தின் கீழ், இவ்வாண்டு ரூ.76.29 கோடி செலவில் 72 இலட்சம் சேலைகளும்,68 இலட்சம் வேட்டிகளும் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

23. மாசுக் கட்டுப்பாடு-சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கு, இவ்வரசு மிக உயர் முன்னுரிமை அளித்துள்ளது. மாசுக் கட்டுப்பாடு சுற்றுச் சூழல் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளவும், மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் முறைப்படுத்தும் பணிகளுக்கு உதவும் வகையிலும், சுற்றுச் சூழல் துறை என்கிற புதிய துறை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1992 ஜூனில் ரியோ-டீ-ஜெனிரோவில் நடைபெற்ற சுற்றுச் சூழல்-வளர்ச்சி குறித்த ஐக்கிய நாடுகள் மாநாட்டில் முடிவு செய்யப்பட்ட நிகழ்ச்சி நிரல்-21-ன் கீழ் மாநிலச் செயல்திட்டத்தை இத்துறை உருவாக்கி, செயல்படுத்தும். கழிவுநீர்ச் சுத்திகரிப்பு வசதிகளை ஏற்படுத்தி, நிருவகித்து, பராமரிப்பதற்குரிய முழு பொறுப்புகளையும் அவற்றினால் பயனடையும் தொழிற்பிரிவுகள் ஏற்கும் என்கிற அடிப்படையில், கழிவு நீர் சுத்திகரிப்புக் கென்று பொதுவான சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவ இவ்வரசு நடவடிக்கை எடுத்துள்ளது. வடஆர்க்காடு-அம்பேத்கர், பெரியார் ஆகிய மாவட்டங்களிலுள்ள தோல் பதனிடு தொழிற்சாலைகள், துணி, சாயத் தொழிற்சாலைகள் ஆகியவற்றிலிருந்து வெளிவருகிற கழிவு நீரைச் சுத்திகரிப்பதற்கு இத்தகைய சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. ஆற்று நீர் மாசுக் கட்டுப்பாடு தேசிய செயல் திட்டத்தின் கீழ் ரூ.38.20 கோடி செலவில் காவிரி ஆற்றின் தெரிந்தெடுக்கப்பட்ட ஐந்து பகுதிகளில் மாசுக் கட்டுப்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரூ.355 கோடி செலவில் சென்னை மாநகரின் நீர் வழிகளைச் சுத்தப்படுத்தவும், மேலும் தூய்மைக்கேடு ஏற்படாது தடுக்கவும் திட்டம் ஒன்று ஐரோப்பிய பொருளாதார அமைப்பின் நிதியுதவிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

24. கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாடு அடைந்துள்ள மிகவும் குறிப்பிடத்தக்க சாதனை, மக்களுக்கு நல்ல வாழ்க்கைத் தரத்தை உருவாக்கித் தந்துள்ளது. மனித மேம்பாடு குறித்த ஆய்வுக் குறியீட்டில் நாட்டிலேயே தமிழ்நாடு மூன்றாவது இடத்தை அதாவது கேரளம், பஞ்சாப் மாநிலங்களுக்கு அடுத்த நிலையைப் பெற்றுள்ளதை அண்மைய ஆய்வு ஒன்று வெளிப்படுத்தியுள்ளது. முக்கியமான சமூக நலத் துறைகளில் நிதிமுதலீட்டை உறுதி செய்ய இவ்வரசு எடுத்த அயராத முயற்சியினால் இச்சாதனையை அடைய முடிந்தது எனில் அதில் சிறிதும் ஐயமில்லை. மொத்தச் செலவின் சதவீதமாக சமூக நலத்துறைகள் குறித்த செலவினங்களைக் குறிப்பிடுகிற சமூக நலத் திட்ட நிதி ஒதுக்கீட்டு விகிதாச்சாரம் இம்மாநிலத்தில் கடந்த 4 ஆண்டுகளில் 40 சதவீதத்திற்கும் மிகையாக இருந்து வந்துள்ளது. இக்கட்டான நிதிநிலை இருந்துங்கூட, நிலையான அடிப்படையில், சமூக நலத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் இந்த உயர் அளவு விகிதாச்சாரத்தை உறுதி செய்து, நாட்டிலேயே ஒரே மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. இக் கொள்கை மக்களுக்கு உயர் வாழ்க்கைத் தரம் கிட்டும் வகையிலும் சமூகப் பதட்டங்களும் அமைதியின்மையும் அற்ற மாநிலமாக இம்மாநிலம் திகழும் வகையிலும் பெரும் பயன்களை அளித்துள்ளது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

25. பொருளாதாரத்தின் நிலைத் தன்மை பேணப்பட்டு, அடிப்படைக் கட்டமைப்புச் சரிக்கட்டல்கள் செயல்முறைப் படுத்தப்பட்ட காலம் முதற்கொண்டு, தமிழ்நாடு முனைப்புடன் மேற்கொண்ட கொள்கையை, மத்திய அரசு, முடிவில் ஏற்றுக் கொண்டுள்ளது என்பது மகிழ்ச்சி அளிக்கிறது. பொருளாதாரச் சீர்திருத்த நடைமுறைகளின் பாதகமான விளைவுகளிலிருந்து ஏழை மக்களைப் பாதுகாப்பதற்காகச் சமூக நலன் சார்ந்த துறைகளுக்குரிய நிதி ஒதுக்கீடுகளைக் குறையாமல் பாதுகாத்து,முடிந்தால் உயர்த்தி, அவர்களுடைய நலனைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தேசிய வளர்ச்சிக்

குழுவின் பல கூட்டங்களில் பலமுறை வலியுறுத்தி உள்ளார். மத்திய அரசு, தேசிய சமூக நிதிஉதவித் திட்டத்தையும், பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவுத் திட்டத்தையும் அறிவித்ததன் மூலம், இது குறித்து வலியுறுத்தப்பட்டதை ஏற்றுக் கொண்டுள்ளது எனத் தெரிகிறது. 1995 ஆகஸ்டு 15 ஆம் நாள் முதல் தொடங்கப்பட்ட தேசிய சமூக நிதிஉதவித் திட்டத்தின் பகுதியாயுள்ள கூறுகள் மூன்றும், அதாவது, முதியோர் உதவித் தொகை, மகப்பேறுகாலப் பயன், குடும்ப நல உதவி ஆகிய மூன்று திட்டங்களும், தமிழ்நாட்டில் ஏற்கெனவே பல ஆண்டுகளாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் செயல்படுத்தப் பட்டுவரும் முதியோர் உதவித் தொகைத் திட்டம்,குடும்பத் துயர் தணிப்புத் திட்டம், விபத்து நிவாரணத் திட்டம் ஆகியவற்றின் கீழ் பயன்பெறுவோரின் எண்ணிக்கை, தேசிய சமூக நிதி உதவித் திட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் பயன்பெறுவோரின் எண்ணிக்கையைக் காட்டிலும் மிக அதிகமாகும். இதே போன்று, தமிழ்நாடு, முதியோர் நிதி உதவித் தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.100/- வழங்குகையில், தேசிய சமூகநிதி உதவித் திட்டம், மாதம் ஒன்றுக்கு ரூ.75/- மட்டுமே உதவித் தொகை வழங்குகிறது. மாநில அரசுகளின் சமூக நலத் திட்டச் செலவுகளுக்குத் துணை செய்யும் வகையில், தேசிய சமூக நிதிஉதவித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதிகளை மாநில அரசுகளுக்கு வழங்கும்படி, தமிழ்நாடு அரசு, மத்திய அரசை வலியுறுத்தியது. எனினும், மத்திய அரசு, மாவட்டக் கணக்குகளுக்கு நேரடியாக நிதி வழங்க முடிவு செய்துள்ளது. இது, நமது நாட்டைப் போன்ற கூட்டாட்சி அமைப்புடைய நாட்டில் மத்திய-மாநில நிதி உறவுகளில் இருக்க வேண்டிய நம்பிக்கைக்கு உகந்ததாக இல்லை. மேலும், நன்கு நிலைத்த சமூகப் பாதுகாப்பு முறை அமைந்துள்ள, தமிழ்நாடு போன்ற ஒரு மாநிலத்தில், மத்திய அரசின் இதுபோன்ற நேரடித் தலையீடு, நிருவாக இடர்ப்பாடுகளையும் குழப்பத்தையும் மட்டுமே ஏற்படுத்தும். இவை தவிர்க்கத் தக்கவையாகும். இது குறித்து, மத்திய அரசு வகுத்துள்ள வழிகாட்டிக் குறிப்புகளை மறுபரிசீலனை செய்யும்படி, இந்த அரசு, மீண்டும் மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளும்.

26. தமிழ்நாட்டின் மிகச் சிறந்த சாதனையை, அதன் பிறப்பு-இறப்பு முதலிய சமுதாய நிலை புள்ளி விவர ஆய்வு காட்டுகிறது. கி. பி. 2010 ஆம் ஆண்டுக்கென்று வரையறுக்கப்பட்ட பிறப்பு-இறப்பு வீத தேசிய இலக்கை, தமிழ்நாடு ஏற்கெனவே அடைந்துள்ளது என்பதை மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் ஏற்கெனவே அறிவர். கி.பி 2010 ல் பிறப்பு வீதம் ஆயிரத்திற்கு 21 என்று தேசிய இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க, தமிழ் நாட்டில் 1994-ல் பிறப்பு வீதம் ஆயிரத்திற்கு 19 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. கி.பி. 2010 ஆம் ஆண்டிற்குள் இறப்பு வீதம் ஆயிரத்திற்கு 9 என்கிற தேசிய இலக்கை எய்த வேண்டும் என்று கருதியிருக்க, தமிழ்நாட்டில் 1994-ல் இறப்பு வீதம் ஆயிரத்திற்கு 7.9 ஆகும். குழந்தைகளின் சராசரி இறப்பு வீதம், தேசிய அளவில், உயிருடன் பிறக்கும் ஆயிரம் குழந்தைகளுக்கு 73 குழந்தைகள் என்றிருக்க, தமிழ்நாட்டில் 1994-ல் குழந்தைகள் இறப்பு வீதம் உயிருடன் பிறக்கும் ஆயிரம் குழந்தைகளுக்கு 59 என்றிருந்தது. டாக்டர் ஜெ.ஜெயலலிதா 15 அம்சத் திட்டத்தில்

> **அரசுப் பணிகளில் மகளிருக்கு 30 சதவிகித இட ஒதுக்கீடு செய்த முதல் மாநிலம் தமிழ்நாடே ஆகும். மகளிர் நலனைப் பாதுகாப்பதற்காக, மகளிர் மாநில ஆணையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.**

> **"டாக்டர் ஜெ.ஜெயலலிதா பெண் குழந்தை நலத் திட்டம்", குறிப்பாக பெண் சிசுக் கொலையை ஒழிப்பதையும், குடும்ப நலத் திட்டத்தை மேம்படுத்துவதையும் இலக்காகக் கொண்டிலங்குகிறது.**

சேர்க்கப்பட்டுள்ள குழந்தைகள் நலன் குறித்த விரிவான நல்வாழ்வுத் திட்டத்தின் மூலம், குழந்தைகள் இறப்பு வீதத்தை மேலும் குறைக்க, அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும். தேசிய குடும்பச் சுகாதார ஆய்வின்படி, தமிழ்நாட்டின் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள், இந்நாட்டின் பெரிய மாநிலங்களிலேயே மிகச் சிறந்தவை என ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்டுள்ளன. குழந்தைகளுக்கு வரும் நோய்கள் பெருமளவிற்குக் குறைக்கப்பட்டுள்ளன. குடும்ப நலத் திட்டத்தில் தமிழ்நாடு சிறந்த சாதனை எய்தியுள்ளதால், 1995-96 ஆம் ஆண்டிலிருந்து இம்மாநிலத்திற்கு மிகச் சிறந்த சாதனை எய்துவதற்கு இலக்கு ஏதும் நிர்ணயிக்க வேண்டியதில்லை என மத்திய அரசு முடிவு செய்துள்ளது. உண்மையில் சொல்லப்போனால், தமிழ்நாடு செயல்படுத்தும் பொதுச் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் குடும்ப நலத் திட்டங்கள், இந்நாட்டிலுள்ள பிற மாநிலங்களில், பின்பற்றப்படுவதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. கி.பி.2000 ஆண்டிற்குள் "அனைவருக்கும் நலவாழ்வு" என்கிற இலக்கை அடையும் நிலையில் இம்மாநிலம் உள்ளது.

27. 2000 ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளிப்பதற்குரிய இலக்கை, எய்த முனைப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு கட்டாய தொடக்கக் கல்விச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 33/1995) முனைப்புடன் அரசு செயலாக்கும். தமிழ்நாட்டில் பிறப்பு வீதம் குறைந்து வருவதால், தொடக்கக் கல்விக்காக புதிய பள்ளிகள் தொடங்குவதற்குப் பதிலாக, அனைத்துச் சிறார்களும் தற்போதுள்ள பள்ளிகளிலேயே சேர்க்கப்பட்டு, தொடர்ந்து பயில்வதை உறுதி செய்வதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. பள்ளிப் பயிற்று முறையில் தரமான சீர்திருத்தங்கள் செய்வதன் மூலமாக மட்டுமே இதனை அடைய இயலும். குறைந்தளவுக் கற்றல் அடைவுகள் என்கிற அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்ட பாடத் திட்டமும் பாடப் புத்தகங்களும் 1995-96 முதல் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆசிரியர்களுக்கு மும்முரப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. முதலாம் வகுப்பிற்குப் பாடம் நடத்துகின்ற 28,500 ஆசிரியர்களுக்கு ஏற்கெனவே பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தொடக்கத்தில், கல்வி நிலையில் பின்தங்கிய 4 மாவட்டங்களுக்கு மட்டுமென்று உலக வங்கி நிதி உதவியுடன் 1994-95-ல் தொடங்கப்பட்ட மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டம், 1996-97-ல் மேலும் 3 மாவட்டங்களில் செயலாக்கப்படும். மேலும், உயர்நிலைப் பள்ளிகள், மேனிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் உள்ள வசதிகளின் தரத்தை மேம்படுத்த திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

28. மற்ற மாநிலங்களைக் காட்டிலும் மிக அதிக எண்ணிக்கையில் சிறார்களுக்குத் துணைச் சத்துணவு அளிக்க தமிழ்நாடு உறுதி செய்துள்ளது. உலக வங்கியின் ஆதரவுடன் செயல்படுத்தப்படுகின்ற தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம், குழந்தைகள் நலமேம்பாடு குறித்த ஒருங்கிணைந்த திட்டம் ஆகியவற்றால் அனைத்து மாவட்டங்களிலுள்ள சிறார்களும்

பயனடைகின்றனர். இம்மாநிலத்திலுள்ள, பிறந்தது முதல் 5 வயது வரையிலான சிறார்கள் அனைவரும், சிறார் வளர்ச்சி கண்காணிப்பு மற்றும் துணைச் சத்துணவு வழங்கும் திட்டத்தின் கீழ் பயனடைகின்றனர். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ், 73.05 இலட்சம் பள்ளி செல்லும் சிறார்களுக்குச் சத்தான மதிய உணவு அளிக்கப்படுகிறது. "மகளிர் விழிப்புணர்வு திட்டம்-2000" என்கிற மகளிருக்குரிய விரிவான நலக் கொள்கை ஒன்றைத் தமிழ்நாடு உருவாக்கியுள்ளது. அரசுப் பணிகளில் மகளிருக்கு 30 சதவீத இட ஒதுக்கீடு செய்த முதல் மாநிலம் தமிழ்நாடே ஆகும். மகளிர் நலனைப் பாதுகாப்பதற்காக, மகளிர் மாநில ஆணையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 1992 ஏப்ரலில் தொடங்கப்பட்ட "டாக்டர் ஜெ.ஜெயலலிதா பெண் குழந்தை நலத் திட்டம்", குறிப்பாக பெண் சிசுக் கொலையை ஒழிப்பதையும், குடும்ப நலத் திட்டத்தை மேம்படுத்துவதையும் இலக்காகக் கொண்டிலங்குகிறது. "தொட்டில் குழந்தைத் திட்டம்" என்பது பெண் சிசுக் கொலையைத் தடுக்கச் செயல்படுத்தப்பட்டுவரும் புது முறையிலான மற்றும் பரிவுணர்வு கொண்ட திட்டமாகும். தமிழ்நாடு, உடல் ஊனமுற்றோரின் நலனுக்கென்று தனிக் கொள்கையை உருவாக்கிய முதல் மாநிலம் ஆகும். உடல் ஊனமுற்றோரின் நலனுக்கென்று தனியாக ஒரு துறை அமைக்கப்பட்டுள்ளது. உடல் ஊனமுற்றோரின் நலனில் போதிய அக்கறை செலுத்தி, அவர்கள் சமுதாயத்தில் ஏனையோருக்கு இணையாக நடத்தப்படுவதற்குத் தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது.

29. சமுதாயத்தில் ஏனையோருக்கு இணையாக ஆதி திராவிடர்களை மேம்பாடடையச் செய்யும் வண்ணம் அவர்களின் சமூக, பொருளாதார, கல்வி மேம்பாட்டிற்காக அரசு அயராது முயன்றுவருகிறது. இவ்வரசு பதவியேற்றவுடன், ஆதி திராவிடர்களுக்கு அடிப்படை வசதிகளை அளிக்கவும், அவர்களது பொருளாதார நிலையை உயர்த்தவும் 10 அம்சத் திட்டம் ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்தார். 10 அம்சத் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட இலக்கு 1996 மார்ச்சு மாதத்திற்கு முன்னரே முழுமையாக எய்தப்பெறும். ஆதி திராவிடர் குடும்பங்கள் அனைத்துக்கும் வீட்டுமனைகளுக்கு வகை செய்வது உட்பட ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளுக்கு வகை செய்வது குறித்த திட்டத்தின் செயலாக்கத்தை உயர்நிலை ஒருங்கிணைப்புக் குழு ஒன்று உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. 1991-92 ஆம் ஆண்டிலிருந்து, ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு, இதுவரை மொத்தம் 8.40 இலட்சம் வீட்டுமனைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. 1981-1991 ஆம் ஆண்டுக் கால அளவில் தமிழ்நாட்டில், ஆதி திராவிடர்களுக்காகக் கட்டப்பட்ட காங்கிரீட் தள வீடுகளின் மொத்த எண்ணிக்கை 96,801 ஆகும். 1991-92 ஆம் ஆண்டிலிருந்து, 1.27 இலட்சம் காங்கிரீட் தள வீடுகள் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ளன. நடப்பாண்டில், 70,187 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. "ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு" என்ற திட்டத்தின் கீழ் 1.50 இலட்சம் வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்குவது என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க, 2.18 இலட்சம் ஆதி திராவிடர் வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. 3.5 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களுக்குப் பொருளாதார மேம்பாட்டிற்காக, உதவி வழங்குவது என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க, இதுவரையில் 4.14 இலட்சம் குடும்பங்களுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள ஒவ்வோர் ஆதி திராவிடர் குடியிருப்பிற்கும் இந்த அரசு தெரு விளக்கு வசதியும் குடிநீர் வசதியும் செய்துள்ளது. ஆதி திராவிடர்களின் பயனுக்காக மேலும் பல திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1994 டிசம்பரில் அறிவித்தார். மாண்புமிகு முதலமைச்சரைத் தலைவராகவும், ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த பல்வேறு பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஏனைய 26 பேரை உறுப்பினர்களாகவும் கொண்ட மாநில ஆதி திராவிடர் நலக் குழு ஒன்று 1995 நவம்பர் திங்களில் அமைக்கப் பட்டுள்ளது. ஆதி திராவிடர் இன மக்களின் நன்மைக்காக கொள்கைகள், திட்டங்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உருவாக்கி செயல்படுத்த இக்குழு உயர்நிலையில் விரிவான ஆலோசனைகளை வழங்கும். ஆதி திராவிடர் நலனுக்காக 9 உறுப்பினர்கள் அடங்கிய மாநில அளவிலான குழு ஒன்றையும் அரசு அமைத்துள்ளது. இக்குழு, ஆதி திராவிடர்களின் நலனுக்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் குறித்து தனி ஆய்வு ஒன்றை மேற்கொள்ளும். இக்குழு, இம்மாநிலத்திலுள்ள ஆதி திராவிடர்களின் சமூக-பொருளாதார நிலைமைகளை விரிவாக ஆய்வு செய்து, அவர்களது நலனுக்குரிய பரிந்துரைகளை அரசுக்கு அளிக்கும்.

30. தமிழ்நாடு 1993 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதி திராவிடர்/பழங்குடியினர் (கல்வி நிலையங்களிலும், மாநில அரசுப் பணிகளில் நியமனங்கள் மற்றும் பதவிகளிலும்இட ஒதுக்கீடு) சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 45/1994) இயற்றி, இந்திய குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற்று, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஒன்பதாம் விவர அட்டவணையில் சேர்க்கப்படுவதை உறுதி செய்ததன் மூலம், இந்த அரசு, தமிழ்நாட்டிலுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நலனைப் பாதுகாத்துள்ளது. இதனால், மாநிலத்தின் இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு அரசியலமைப்பு ரீதியாகப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. சமூகக் கட்டமைப்பு பதட்டமின்றி இருக்க இந்நடவடிக்கை பேருதவி புரிந்துள்ளது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்குமாறு கோரி வரும் முறையீடுகளைப் பரிசீலிப்பதற்கென, நிரந்தரமாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆணையம் ஒன்றையும் இவ்வரசு அமைத்தது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் ஆகியோரின் பொருளாதார முன்னேற்றத்தை உறுதி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்-சிறுபான்மையினர் பொருளாதார வளர்ச்சிக் கழகம், மொத்தம் 29,083 நபர்களுக்கு நிதியுதவி வழங்கியுள்ளது. ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், சீர் மரபினருக்கும் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மீனவர் குடும்பங்களுக்கு இலவசமாக சேலைகள், வேட்டிகள் வழங்கும் திட்டமும் 1995-96 ஆம் ஆண்டு முதற்கொண்டு தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், மொத்தம் ரூ.2.33 கோடி செலவில் 2.03 இலட்சம் மகளிரும், 2.07 இலட்சம் ஆண்களும் பயனடைவர்.

31. இவ்வரசு, பொறுப்பேற்றதிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சென்னையிலும், மாவட்டங்களில் மேற்கொள்கின்ற விரிவான சுற்றுப் பயணங்களின் போதும் பொதுமக்களை நேரடியாகச் சந்தித்து, அவர்களுடைய குறைகளைக் கேட்டு, அவற்றை உடனுக்குடன் போக்கி வருகிறார். பொது மக்களிடமிருந்து வரப்பெறும் மனுக்களைப் பரிசீலனை செய்து உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு உறுதிசெய்ய முதலமைச்சர் அலுவலகத்தில், இ.ஆ.ப. பதவித் தரத்தில் உள்ள ஓர் அதிகாரியின் தலைமையின் கீழ் தனிப்பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து 15.98 இலட்சம் மனுக்கள் வரப்பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ரூ.531.36 கோடி மதிப்புள்ள உதவிகளை 8.03 இலட்சம் பேருக்கு நேரடியாக வழங்கியுள்ளார். வறுமை ஒழிப்பிற்குரிய பல்வேறு திட்டங்களின் பயன்கள் உண்மையில் ஏழை மக்களைச்

சென்றடைய இது உறுதி செய்துள்ளது. பொது மக்களின் இன்னல்களைக் களையும் நோக்குடன், இயற்கைச் சீற்றங்கள், கடுமையான நோய்கள், விபத்துக்கள் முதலியவற்றால் பாதிக்கப்பட்ட 3.32 இலட்சம் பேர்களுக்கு முதலமைச்சர் பொதுநிவாரண நிதியிலிருந்து 1991 ஆம் ஆண்டு ஜூலை திங்களிலிருந்து ரூ.17.84 கோடி வழங்க மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள்.

32. இம்மாநிலத்தில் திருக்கோயில்களின் நிருவாகத்தைச் சீரமைக்க மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் எடுத்துள்ள சீரிய முயற்சிகளை அனைவரும் நன்கு அறிவர். தமிழ்நாடு திருக்கோயில்கள் நிருவாகக் குழு அமைக்கப்பட்டுள்ளது. முழுவதுமாகப் புதுப்பித்து திருப்பணி செய்ய, முதலமைச்சர் திருக்கோயில் திருப்பணி-பராமரிப்பு நிதியிலிருந்து 62 கோயில்களுக்கு, நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசு மானியம், பணவசதி படைத்த கோயில்களின் உபரி நிதி, பொது நல நிதி ஆகியவையும் பல கோயில்களைப் புதுப்பிக்கும் பணிக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கிராம கோயில்களுக்குத் திருப்பணி செய்ய ரூ.1 கோடி மூல நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருப்பணிக்குப் பிறகு, 605 கோயில்களில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது. இது இதுவரையில் நடைபெறாத ஒன்றாகும். ஒரு கால பூஜை திட்டத்தின் கீழ் முறையான பூஜை நடத்துவதற்கு நிதிவசதியில்லாத இம்மாநிலத்திலுள்ள அனைத்து கோயில்களுக்கும் அவற்றில் தினந்தோறும் ஒரு கால பூஜையாவது நடத்துவதற்கு உறுதிசெய்யும் வண்ணம் மூலநிதி ஏற்படுத்த நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. கோயில்களில் திருடுபோவதைத் தடுக்க கோயில் பாதுகாப்புப் படை அமைக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் முதன் முறையாக திருச்சிராப்பள்ளிக்கு அருகில் 23.4 ஏக்கர் நிலப்பரப்பில் வேத ஆகமக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று நிறுவப்பட உள்ளது.

33. தமிழ் மொழியையும், பண்பாட்டையும் பேணிக் காத்து வளர்ப்பதை இந்த அரசு, தலையாய பொறுப்பாகக் கொண்டுள்ளது. தஞ்சாவூரில் 1995 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் நடைபெற்ற எட்டாம் உலகத் தமிழ் மாநாடு மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றது. இந்த மாநாட்டில், 23 நாடுகளைச் சேர்ந்த 1101 அறிஞர்கள் கலந்து கொண்டனர். இது தமிழ் மொழி, பண்பாடு ஆகியவற்றின் செறிந்த வளத்தையும் புகழையும் எடுத்துக் காட்டியது. இம்மாநாடு தொடர்பாக, அடிப்படைவசதிகளை மேம்படுத்த பெருமளவில் முதலீடு செய்யப்பட்டு, தஞ்சாவூர், நவீன மாநகராக மாற்றப்பட்டுள்ளது. தமிழ் மொழியை வளர்க்க, இந்த அரசு எடுத்துள்ள ஏனைய நடவடிக்கைகளில், தமிழ் வளர்ச்சிக் குழுவை ஏற்படுத்தியதும், அரிய தமிழ் நூல்களை வெளியிடுவதற்கான ஒரு புதிய திட்டம் தொடங்கப்பட்டதும் அடங்கும். பேரறிஞர் அண்ணா அவர்களின் இலக்கியப் படைப்புகள் அனைத்தும் நாட்டுடைமை யாக்கப்பட்டுள்ளன. அவருடைய துணைவியார் திருமதி இராணி அம்மையார் அவர்களுக்கு உரிமைத் தொகையாக ரூ.75 இலட்சம் அளிக்கப்பட்டது. கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

தேசிய குடும்பச் சுகாதார ஆய்வின்படி, தமிழ்நாட்டின் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள், இந்நாட்டின் பெரிய மாநிலங் களிலேயே மிகச் சிறந்தவை என ஏற்கெனவே அங்கீகரிக்கப் பட்டுள்ளன.

இக்கட்டான நிதிநிலை இருந்தும் கூட, நிலையான அடிப்படையில், சமூக நலத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் இந்த உயர் அளவு விகிதாச்சாரத்தை உறுதி செய்து நாட்டிலேயே ஒரே மாநிலமாகத் தமிழ்நாடு விளங்கு கிறது.

அவர்களின் படைப்புகளும் நாட்டுடைமையாக்கப்பட்டு, உரிமைத் தொகையாக ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டது. தமிழ் பல்கலைக் கழகத்திற்கு மானியமாக ரூ.2 கோடி வழங்கப்பட்டுள்ளது.

34. தமிழ்நாட்டின் திரைப்படத் தொழில், நாட்டின் பெரிய திரைப்படத் தொழில்களுள் ஒன்றாகும். அத்தொழில் பலருக்கு வேலை வாய்ப்பளிக்கிறது. நாட்டின் திரைப்படத் தொழிலில் தமிழ்நாடு வகிக்கும் முன்னணி இடத்தைப் பேணிப் பராமரிக்கவும், திரைப்படத் தொழிலில் பணியாற்றுவோரின் நலனுக்கு உதவவும் இவ்வரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. உலக நாடுகள் தரத்திற்குச் சிறந்த திரைப்படத் தயாரிப்பு வசதிகளுடனும், உட்புற, வெளிப்புற படப்பிடிப்பு வசதிகள் பலவற்றை உள்ளடக்கியும், டாக்டர் ஜெ.ஜெயலலிதா திரைப்பட நகர் 1994 ஆகஸ்டு திங்களில் தொடங்கப்பட்டது. திரைப்படத் தயாரிப்புச் செலவைக் குறைக்கவும், நல்ல தரமான திரைப்படங்கள் தயாரிப்பதை உறுதி செய்யவும், திரைப்பட கச்சா பட்ச் சுருளுக்கு வரி குறைக்கப்பட்டது உட்பட திரைப்படத் தொழிலுக்காக பல்வேறு ஊக்கத் திட்டங்கள் வகை செய்யப்பட்டுள்ளன. திரைப்படத் தொழிலில் பணியாற்று வோரின் நலனுக்காக, வேளச்சேரி-பள்ளிக்கரணையில் 85 ஏக்கர் நிலம் அவர்களது வீட்டுவசதித் திட்டத்திற்காக இலவசமாக ஒதுக்கப்பட்டுள்ளது. திரைப்படத் தொழிலில் பணியாற்றும் 60 வயது அடைந்துள்ளவர்களுக்கு மாதம் ரூ.300/-ஓய்வூதியம் வழங்கும் ஓய்வூதியத் திட்டம் ஒன்றும், இறப்பு-இயலாமை நேரும்போது அவர்களுக்கு ரூ.50,000 வரை வழங்க காப்புறுதி திட்டம் ஒன்றும் 1995 ஏப்ரலில் கொண்டுவரப்பட்டுள்ளன.

35. அரசுத் திட்டங்கள் மூலம் வறியவர்கள் பயனடைவதை மேம்படுத்தும் வகையில், நிருவாகத் திறனை மேம்படுத்த, இந்த அரசு எண்ணற்ற பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இவற்றில் ஒன்றாக, அரசு அலுவலகங்களை எளிதில் அணுகவும், மேற்பார்வைப் பணியைத் தரமான முறையில் மேம்படுத்தவும், நடைமுறைக்கேற்ற வகையில் நிருவாக அதிகார வரம்புகள் சீரமைக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூர், தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்கள் உட்பட, பெரிய அளவிலான மாவட்டங்கள் ஏற்கெனவே சீரமைக்கப் பட்டுள்ளன. 1991 ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து 11 புதிய வட்டங்களும், 4 புதிய வருவாய்க் கோட்டங்களும் அமைக்கப் பட்டுள்ளன. விழுப்புரத்திலும், தஞ்சாவூரிலும் புதிய காவல் சரகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தேனியில் புதிய காவல் மாவட்டம் அமைக்கப்பட்டு வருவதன் மூலம் மதுரை ஊரகக் காவல் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து புதிதாக 111 காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து நிலைகளிலும் செயல் பாடுகள் மேம்படுத்தப்படுவதை உறுதி செய்யும் முயற்சியின் ஓர் அங்கமாக, ஒட்டு மொத்த மதிப்பூதியம் பெற்று வந்த 91,000 மதிய உணவுத் திட்டப் பணியாளர்களும் 28,000 கிராம உதவியாளர்களும் முறையான காலச் சம்பள ஏற்றமுறை அடிப்படையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். குற்றேவல் செய்வோர் என்று

பொருள் குறித்த பழங்காலந் தொட்டு இருந்து வந்த "தலையாரி", "வெட்டியான்" என்ற பதவிப் பெயர்கள், தற்போது ஒரே சீராக "கிராம உதவியாளர்" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அப்பழுக்கற்ற வகையில் 25 ஆண்டுக் காலம் பணியாற்றியுள்ள அரசுப் பணியாளர்களுக்கு ரூ.500/- மதிப்புள்ள இந்திர விகாஸ் பத்திரம் ஒன்றைப் பரிசாக வழங்கும் புதிய திட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் புகார் மனுக்கள் குறித்து விரைந்து நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் பொது மக்களின் புகார் மனுக்களைப் பரிசீலிக்கும் பொறுப்பு வகிக்கும் தனித் துணை ஆட்சியர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டமொன்று தொடங்கப்பட்டுள்ளது.

36. அனைத்து துறைகளிலும், உயர்தரம் வாய்ந்த நிருவாகச் சாதனைக்கு உறுதி செய்ய, இவ்வரசு முன்னுரிமை அளித்துள்ளது. பல்வேறு துறைகள் மற்றும் மாநில பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் சாதனை, தேசிய அளவிலான விருதுகள் அளிக்கப்பட்டதன் மூலம், அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்நாட்டிலேயே சிறந்த தரம் வாய்ந்த பணிக்குப் பெயர் பெற்ற மாநில அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், 1994-95 ஆம் ஆண்டில் மட்டும் 5 தேசிய விருதுகளைப் பெற்றுள்ளன. 1991-92 ஆம் ஆண்டிலிருந்து போக்குவரத்துக் கழகங்கள் மொத்தம் 34 விருதுகளைப் பெற்றுள்ளன என்பது அவற்றின் தரமான சேவைக்குரிய நற்சான்றிதழாகத் திகழ்கிறது. இதே போன்று, சமூகநலத்துறை, புதுவாழ்வு அளிப்பதில் சிறந்த சாதனை புரிந்த தற்காக, 1994-95 ஆம் ஆண்டில், 16 தேசிய விருதுகளைப் பெற்றுள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில், இத்துறை 66 தேசிய விருதுகளைப் பெற்றுள்ளது. வேளாண்மைத்துறை, வானவாரி பகுதிகளில் ஒருங்கிணைந்த நீர்வரத்துப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் சிறந்த சாதனை புரிந்ததற்காக, 1994-95 ஆம் ஆண்டில், தேசிய விருது ஒன்றைப் பெற்றுள்ளது. இதே போன்று, 1995 ஆம் ஆண்டில் கொச்சியில் நடைபெற்ற மூன்றாம் உலக நறுமணப் பொருட்கள் குழும மாநாட்டில், தமிழ் நாடு, ஏற்றுமதி செய்யத்தக்க சிறந்த நறுமணப் பொருள் வகையை உற்பத்தி செய்ததற்காக, முதல் பரிசைப் பெற்றுள்ளது. வேளாண்மை, விரிவாக்கம், புன்செய்நில சாகுபடி, உயிரின கழிவு உர உற்பத்தி ஆகிய துறைகளில், இம்மாநிலம், தொடர்ந்து தேசிய உற்பத்தித்திறன் குழு விருதுகளைப் பெற்றுவந்துள்ளது. தமிழ் நாடு கூட்டுறவு வீட்டுவசதிக்கூட்டமைப்பு புரிந்த சிறந்த சாதனையை அங்கீகரிக்கும் வண்ணம், அது, 1994-95 ஆம் ஆண்டில் இந்நாட்டில் சிறந்த முறையில் நிருவகிக்கப்படும் கூட்டுறவு வீட்டுவசதி தலைமை கூட்டமைப்பு என்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்துடன், ஊரக வீட்டு வசதி திட்டத்தைச் செயல்படுத்துவதில் மாண்புமிகு முதலமைச்சர் காட்டும் குறிப்பிட்ட அக்கறையைக் கருத்தில் கொண்டு, தேசியக் கூட்டுறவு வீட்டுவசதிக்கூட்டமைப்பு, "டாக்டர் ஜெ. ஜெயலலிதா விருது" என்ற விருதினை ஏற்படுத்தியுள்ளது. இந்த விருதினை தருமபுரிமாவட்டத்தில் உள்ள பாலக்கோடு வட்ட கூட்டுறவுவீட்டு வசதிச் சங்கம் பெற்றுள்ளது. தமிழ்நாடு கனிமவள நிறுவனம், (டாமின்), கருங்கற் பாளங்களை ஏற்றுமதி செய்துவருவதற்காக, தொடர்ந்து 6 வது ஆண்டாக, 1994-95 ஆம் ஆண்டில், சிறப்பு விருதினைப் பெற்றுள்ளது. காற்று விசையின் உற்பத்தியில், இந்நாட்டில், சிறந்து விளங்கும் மாநிலமாகத் தமிழ்நாட்டைத் தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக மத்தியஅரசு தேர்ந்தெடுத்துள்ளது.

37. ஜனநாயக ரீதியில் அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டும் என்ற நோக்கத்தை இந்த அரசு முழுமையாக ஏற்றுள்ளது. ஊராட்சித் தேர்தல்கள் 1995 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் நடைபெறும் என்று இந்த அரசு அறிவித்து, இதற்கான தேர்தல் அட்டவணை தயாரிக்கப்பட்டது. தேர்தல் தொடர்பான பொருட்களை வாங்குவது, தேர்தல் பணிக்கென பணியாளர்களை நியமிப்பது உட்பட அனைத்துத் தேர்தல் பணிகளையும் அரசு மேற்கொண்டது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் போதிய அளவில் பிரதிநிதித்துவம் பெற வகைசெய்வதற்கான ஒரு நடவடிக்கையாக இம்மாமன்றம் இட ஒதுக்கீடுகளுக்கு வகை செய்யும் சட்டத்தைக் கொண்டு வந்தது. இருப்பினும், இடஒதுக்கீடு தொடர்பான இத் திட்டத்தை எதிர்த்து, உயர் நீதி மன்றத்தில் பல ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப் பட்டுள்ளன. இது தொடர்பாக, இறுதியான தீர்ப்பு அளிக்கப்படும் வரையில், தேர்தல் அறிவிக்கை எதனையும் வெளியிட வேண்டாம் என்று மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு உயர் நீதி மன்றம் ஆலோசனை நல்கியுள்ளது.

38. இம் மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்த அரசு, 1992 ஆம்ஆண்டு ஜூன் திங்களில் அறிவித்தது என்பதை பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். உச்ச நீதி மன்றத்தில் பல வழக்குகள் நிலுவையாக இருந்தன. தேர்தல்களை நடத்துவதற்குத் தடைவிதித்து சென்னை உயர் நீதி மன்றம் 1992 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் ஆணை பிறப்பித்தது. 1995 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் உச்ச நீதி மன்றம் பிறப்பித்துள்ள கட்டளைகளின் அடிப்படையில், உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையாய் இருந்த பல ரிட் மனுக்கள் தொடர்பாக, உயர் நீதி மன்றத்தின் ஈராயம், மாநிலத்தில் உள்ள தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்கள் 1996 ஆம் ஆண்டு மே திங்களின் இறுதிக்குள் நடத்தப்படவேண்டும் என்று கட்டளையிட்டு தீர்ப்பளித்துள்ளது. வரையறுக்கப்பட்ட இக்கால அளவிற்குள் தேர்தல்களை நடத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது.

39. கடந்த ஐந்து ஆண்டுகளில், இம்மாநிலம் அனைத்துத் துறைகளிலும் குறிப்பிடத்தக்க வகையில் முன்னேறியுள்ளது. சட்டம்-ஒழுங்கு சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. இன்று தமிழ்நாடு அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது. இது பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலும் சீரான வளர்ச்சி ஏற்பட வித்திட்டுள்ளது. இம்மாநிலத்தில் வேளாண் உற்பத்தி மிகவும் அதிகரித்துள்ளது. இந்த அரசின் கொள்கைகள், விரைவானதொழில் வளர்ச்சிக்கு உறுதி செய்துள்ளன. தாழ்த்தப்பட்ட ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேற்றமடைந்துள்ளது. ஏழைகளில் மிக மிக வறிய ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை மேற்கொண்டும் மேம்படுத்த உறுதி செய்யும் வகையில், பல புதிய திட்டங்கள் தங்கு தடையின்றி செயல்படுத்தப்பட்டுள்ளன. 1991 ஆம் ஆண்டிலிருந்து கடந்த ஐந்து ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு, நிலையான வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாட்டை நடத்திச் சென்றுள்ளது என்று இங்கு குறிப்பிடுவது மிகை ஆகாது.

40. குறிப்பிடத்தக்க வகையிலான இச்சாதனை, விடா முயற்சிக்கும், கடின உழைப்பிற்கும் கிடைத்துள்ள வெற்றியாகும். இந்த அரசு எத்தனை இடர்ப்பாடான சூழலில் தன்னுடைய ஆட்சிப் பொறுப்பை ஏற்றது என்பதை இப்பேரவையின் உறுப்பினர்கள் நன்கறிவர். சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை, நிதிப் பற்றாக்குறை, சமூக நல்லுறவுக்கும், சமூகக் கட்டமைப்புக்கும் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள், இம்மாநிலத்தின் உரிமைகளைப் பிறர் மீறி நடத்தல் ஆகிய ஒவ்வொரு வகையிலும் ஏற்பட்ட பாதகமான

சூழ்நிலைகளுக்கு மனஉறுதியுடன் எதிர்கொண்டு தீர்வு காணப்பட்டுள்ளன. மாநிலத்தின் உரிமைகளை முழுவதுமாகப் பாதுகாக்கும் அதே நேரத்தில், தேசிய ஒருமைப்பாட்டைப் பேணிப் பாதுகாப்பதிலும் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழவும் இந்த அரசு உறுதி செய்துள்ளது. தமிழ் நாடு பெருமிதம் கொள்ளத்தக்க அளவிற்கு முன்னேற்றப் பாதையில் செல்வது குறித்து, தேசிய அளவிலும், உலக அளவிலும் பாராட்டப் பெற்றுள்ளது. வளர்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தக் கூடிய தமிழ்நாட்டின் திறனை இருநாட்டு முகவரமைப்புகளும் பன்னாட்டு முகவரமைப்புகளும் அங்கீகரித்துள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் எழுச்சிமிகு தலைமை வெகுவாகப் பாராட்டப் பெற்றுள்ளது. இனி வரும் ஆண்டுகளிலும், இம்மாநிலம் நிலையான முன்னேற்றத்தையும், வளத்தையும் பெற்றுத் திகழும் என நான் உளமார நம்புகிறேன்.

41. இப்பேரவையின் விவாதங்கள், பொருள் பொதிந்தவையாகவும், சம நிலையுடையவையாகவும், ஆக்கப்பூர்வமானவையாகவும் அமைந்து, மாநில மக்களின் நலனைத் தொடர்ந்து பேணிக் காப்பதில் கவனம் செலுத்தும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

வணக்கம். (14-2-1996)

தமிழரசு

மார்ச் 7 இதழ்

பெரியார் மாவட்டச் சிறப்பிதழாக மலர்கிறது!

- கண்ணைக் கவரும் வண்ண முகப்பு
- அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்
- மகத்தான மாவட்ட வளர்ச்சிப் பணிகள்
- கரும்பு நிகர்க் கவிதைகள்
- கருத்தைக் கவரும் கட்டுரைகள்
- சுவையான துணுக்குகள்
- பக்கத்துக்குப் பக்கம் படங்கள்
- தமிழரசு - படிக்க - பயன்பெற - பாதுகாக்க

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இ. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927.





தமிழரசு
பதிவு எண் M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

தந்தை பெரியார் சமூகநீதி விருது-1995

விருது வழங்கும் விழா

26-2-1996

தமிழரசு

1.3.1996 ரூ.3





இந்த இதழில்...

★ இடைக்கால
நிதி நிலை அறிக்கை - 1996-1997
மாண்புமிகு நிதி அமைச்சர்
டாக்டர் இரா. நெடுஞ்செழியன்
அவர்கள் ஆற்றிய உரை 2

★ தொழில்வள மாநிலங்களையும்
முந்தும் வகையில் தமிழகம்
மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை 10

★ தந்தை பெரியார் சமூகநீதி விருது
வழங்கும் விழாவில் மாண்புமிகு
முதல்வர் அவர்கள் ஆற்றிய
சிறப்புரை 17

★ இந்தியாவில் முன்னணியில்
விளங்கும் தமிழ்நாடு காவல்துறை
—மாண்புமிகு முதல்வர் அவர்கள்
பாராட்டு 22

★ பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர்
அவர்களின் கட்டுரை 25

★ பெரியார் மாவட்டம் - ஒரு
கண்ணோட்டம் 29

★ பெரும்புகழ் பெற்ற பெரியார்
மாவட்டத் திருக்கோயில்கள் 30

★ கிராம மகளிருக்கு வேளாண்
தொழில் நுட்பம் 35

★ பெரியார் மாவட்டச் சுற்றுலாத்
தலங்கள் 41

★ காவல் நிர்வாகத்தில் பெரியார்
மாவட்டம் 45

இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை (37)

★ பல்லக்கைச் சுமப்பவனும் அதன்மேலிருந்து ஊர்ந்து செல்லுவோனுமாகிய அவர்களிடையே அறததின் பயன் இஃது என்று கூறவேண்டா!

தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027
மாசித் திங்கள் : 18
மலர்: 26 இதழ்: 17
1.3.1996
விலை: ரூபாய் 3



பெரியார் மாவட்டச்
சிறப்பிதழ் 24288

JL
M211, N707A N96.26.13-17

★ தமிழகம் ஓர் அமைதிப் பூங்கா
★ இன ஒற்றுமையின் சின்னம்
★ இந்தியத் திருநாடே பின்பற்றுகின்ற சிறந்த முன்னுதாரணம்

வருவாய் நிதி ஆதாரத்திலிருந்து மாநிலங்களுக்குப் பங்கு வழங்குக!

மத்திய அரசுக்கு மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வலியுறுத்தல்

தமிழ்நாடு அரசு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 1996-97 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செல்வுத் திட்டத்தைச் சட்ட மன்றப் பேரவையில் வைத்து, 1996 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 20 ஆம் நாள் அன்று ஆற்றிய உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

1995-96 ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளையும், 1996-97 ஆம் ஆண்டிற்குரிய இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இந்தப் பேரவையின் மேலான ஒப்புதலுக்கு வைப்பதில் நான் பெருமிதமும் பெருமகிழ்ச்சியும் கொள்கிறேன்.

"பிணி இன்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம்
அணி என்ப நாட்டிற்கு இவ் வைந்து."

நோய் இல்லாமை, பொருள் வளம், விளைவு மிகுதி, இன்ப வாழ்வு, நல்ல பாதுகாப்பு ஆகிய ஐந்தும், ஒரு நாட்டிற்கு அணிகலன்களாக விளங்குவனவாகும் என்று அறிவுடையோர் கூறுவார்கள் என்பது திருவள்ளுவப் பெருந்தகையாரின் சீரிய வாக்கு. திருவள்ளுவர் கூறியுள்ள நெறிமுறைக்கு ஏற்ப, தமிழ்நாடு, சென்ற ஐந்தாண்டுக் காலமாக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் செம்மையான ஆட்சியின் கீழ் இயங்கி வருகிறது என்பது, அனைவரும் அறிந்த உண்மையாகும்.

1991 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டு மக்கள், புரட்சித் தலைவி டாக்டர். ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மிகப் பெரிய பெரும்பான்மை பெறுகின்ற வகையில் வாக்களித்து ஆட்சியில் அமர்த்தினர். பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்தளித்த அடிப்படைத் தத்துவங்கள், பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் மனிதநேய நெறி ஆகியவற்றின் அடிப்படையில், இவ்வரசு நடைமுறைப்படுத்திய கொள்கைகளும் திட்டங்களும் தமிழ்நாட்டு மக்களின் வாழ்வில் வளம் பெற்றுத் தந்துள்ளன. இவ்வரசின் மீது மக்கள் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கை மிகச் சரியானதே என்பது கடந்த ஐந்தாண்டுகளாக எய்திய சாதனை வாயிலாக முழுமையாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நாம் அளித்த வாக்குறுதிகளைச் செம்மையாகச் செயற்படுத்தி மிகச் சிறந்த நிருவாகத்தைப் பேணிக் காத்து, இம்மாநிலத்தை நிலையான வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்றுள்ளோம்.

2. இவ்வரசு, 1996 ஜூனில் முழுப்பதவிக்காலத்தை வெற்றிகரமாக முடிக்கவுள்ளது. நாடாளுமன்ற ஜனநாயக நெறியின் மிகச் சிறந்த மரபுகளைப் பின்பற்றும் வகையில், 1996-97 ஆம் ஆண்டிற்கு இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்ய முடிவு செய்துள்ளோம். அதன் அடிப்படையில், நிதியாண்டின் முதல் ஆறு மாத காலத்திற்குரிய செலவினங்களுக்கு உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி பெறப்படும். தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் புதிய சட்டமன்றப் பேரவையில் முழு அளவிலான வரவு-செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்படும்.

3. 1990, 1991 ஆம் ஆண்டுகளில் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடி நிலைமை, பொருளாதாரச் சீர்திருத்தம் மற்றும் தாராளமயமாக்கல் தொடர்பாகப் பெரும் விளைவை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை எடுக்கச் செய்தது. மத்திய அரசின் பொருளாதாரச் சீர்திருத்தத்தை இவ்வரசு தொடர்ந்து ஆதரித்து வந்துள்ளது. அதே சமயத்தில், ஏழை எளிய, வசதி வாய்ப்பற்ற மக்கள் மீது நாம் கொண்ட அக்கறையின் காரணமாக, ஏழை எளிய மக்களின் வாழ்க்கை நிலை பாதிக்கப்படாத வகையிலும், சமூக நலத் திட்டங்கள் குறித்த இன்றியமையா இனங்களுக்குச் செய்யப்படும் செலவின் அளவுகள் குறைக்கப்படாமலிருப்பதன் வகையிலும் உறுதி செய்யப்பட வேண்டியதன் அவசியத்தையும் நாம் வலியுறுத்தியுள்ளோம்.

4. தேசிய அளவிலான சீர்திருத்தங்களிலிருந்து மாநில அளவிலான சீர்திருத்தங்களுக்குத் தற்போது பெரிதும் முக்கியத்துவம்

அளிக்கிறோம். பெரும் பொருளாதார நிருவாகக் கட்டுப்பாட்டிற்கான அதிகாரங்கள் மத்திய அரசிடமே பெரிதும் உள்ளதால், பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் ஒழுங்குமுறை விதிகளைத் தளர்த்தும் வகையில், மத்திய அரசு கொண்டு வரும் சீர்திருத்தங்கள் செயற்படுத்துவதற்கு பொதுவாக எளிமையானவையாகும். இதைக்காட்டிலும், மாநில அரசின் பொருளாதாரச் சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதுதான் மிகவும் கடினமானதாகும். மாநில அரசின் செலவினங்களில் பெரும்பகுதி சமூகப் பணிகள் குறித்ததாகும். அதனைக் குறைக்க இயலாது, குறைக்கவும் கூடாது. மேலும், மாநில அரசின் செலவினங்களில் பெரும் பகுதி சம்பளங்கள் வகையிலானது. செலவினங்களுடன் தொடர்புடையது அதனைக் கட்டுப்படுத்துவது கடினமானதாகும். இத்தகு சூழ்நிலையில், பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்துவது முதலான நிதிச் சீர்திருத்தங்களை நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதே சமயத்தில், பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தத் தேவையான அடிப்படை வசதிகளைத் தரமுயர்த்தப் பெருமளவில் கூடுதல் முதலீடுகள் செய்ய நிதிவாயில்களைத் திரட்டவேண்டும்.

5. இதில் இடர்ப்பாடுகள் உள்ள போதிலும், தமிழ்நாடு அரசு, இம்மாநிலத்தில் பொருளாதாரச் சீர்திருத்தங்களைக் கொண்டு வரக் கொள்கையளவில் நடவடிக்கைகளை ஏற்கெனவே எடுக்க முனைந்துள்ளது. வரிவிதிப்பைப் பொறுத்தவரையில், சிக்கல் வாய்ந்த விற்பனை வரி முறையை நாம் மிகவும் எளிமையாக்கியுள்ளோம். வரிவீதங்களின் மொத்த எண்ணிக்கை 17 என்பதிலிருந்து 5 அடிப்படை வீதங்களாகவும், 4 தனி வீதங்களாகவும் குறைக்கப்பட்டது. பொருட்களைத் தொகுப்பாக்குவதும் சீரமைக்கப்பட்டது. இடுபொருட்கள் மீதான வரிவிதிப்பைக் குறைப்பதற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1995 டிசம்பரில் நடைபெற்ற விற்பனை வரிச் சீர்திருத்தங்கள் குறித்த மாநில நிதி அமைச்சர்கள் கூட்டத்தில் நான் கலந்து கொண்டேன். வரிவீதங்களை நாடு தழுவிய வகையில் பொருந்துமாறு ஒரே சீராக ஆக்குவதற்கும், சீர்குலைக்கும் வரித்தள்ளுபடி செய்தல், வரி செலுத்துவதைத் தள்ளிவைத்தல் ஆகியவை குறித்த திட்டங்களை 1.4.1997க்குள் [illegible] செய்வதற்கும், மாநிலங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

6. இம்மாநிலத்திலுள்ள தொழில்களுக்காக, மேம்படுத்தப்பட்ட அடிப்படை வசதிகளை உருவாக்க, நாம் பல நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். 1992 ஜூனில் அறிவிக்கப்பட்ட தொழில் கொள்கையும் மாநிலத்தின் குறிப்பான செயல் திட்டமும் இம்மாநிலத்தில் முதலீட்டுச் செயற்குறிப்புகளுக்கு விரைவாக அனுமதி வழங்கும் நடைமுறைகளுக்கு வகை செய்கிறது. அடிப்படை வசதிகளுக்கு நிதி ஆதாரங்களை அதிகரிக்கும் நோக்குடன், மின் உற்பத்தி, நெடுஞ்சாலைகள் கட்டமைப்பு போன்ற துறைகளில் தனியார் துறையின் பங்கேற்பை நாங்கள் வரவேற்றுள்ளோம்.

7. இம்மாநிலத்தின் தொழில் சூழ்நிலையில் நாம் ஏற்படுத்தியுள்ள சீரமைப்புகள் நல்ல பலனை அளிக்கத் தொடங்கியுள்ளன. 1991-92ல் 4.1 சதவீதமாக இருந்த தொழில் உற்பத்தியின் வளர்ச்சி வீதம், 1994-95 ல் 8.7 சதவீதமாக உயர்ந்துள்ளது. மாநிலத்தின் நிகர உற்பத்தியின் வளர்ச்சி வீதம் 1991-92 ல் 2.69 சதவீதத்திலிருந்து 1994-95 ல் 4.90 சதவீதமாக உயர்ந்துள்ளது.

8. நடப்பாண்டில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலையாலும், கருநாடக அரசு காவிரியில் நீரை விடுவிக்காததாலும் 14 இலட்சம் டன் உணவு தானிய உற்பத்தி இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. வறட்சியால் ஏற்படும் பாதக விளைவிலிருந்து ஏழை, எளிய மக்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து எப்போதும் விழிப்புடன் இருந்துவரும் இவ்வரசு, உணவுப் பொருட்களின் விலையைக் கட்டுப்பாட்டிற்குள் வைக்கும் பொருட்டுப் பொது விநியோக முறையில் குடும்ப அட்டை ஒன்றுக்குக் கூடுதலாக 8 கிலோ அரிசி வழங்க முடிவுசெய்தது. இந்த நடவடிக்கையினால், உணவுப் பொருள் உதவித் தொகைக்காகத் திங்களொன்றுக்கு ரூ. 70 கோடி அளவிற்கு நாம் ஏற்கவேண்டி வந்த கூடுதல் நிதிப் பொறுப்பும் கூட, இந்தத் துணிவான முடிவை எடுப்பதிலிருந்து நம்மைப் பின்வாங்கச் செய்யவில்லை. இத்தொகையுடன், 1995-96 ல் உணவுப் பொருள் உதவித் தொகை வகையிலான ஒட்டுமொத்த நிதிச் சுமை, வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டைத் தாக்கல் செய்தபோது மதிப்பிடப்பட்ட ரூ.600 கோடியிலிருந்து, 1995-96 திருத்த மதிப்பீட்டில் ரூ.800 கோடியாக உயரும். 1996-97 இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் உணவுப் பொருள் உதவித் தொகைக்காக ரூ.840 கோடி வகை செய்யப்பட்டுள்ளது. விலைவாசியைக் குறைக்கவும், அடிப்படைத் தேவையான உணவுக்கு உத்திரவாதத்தை எவ்வகையிலும் அளிக்கவும் இவ்வரசின் உறுதியினை, 1990-91ல் ரூ.105 கோடியாக இருந்த உணவுப் பொருள் உதவித் தொகையை 1995-96 இலும் 1996-97 இலும் வகை செய்யப்பட்டுள்ள உணவுப் பொருள் உதவித் தொகையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் அறியலாம்.

பத்தாம் நிதிக்குழு

9. 1995-96 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டப் பேரவையில் வைத்து ஆற்றிய எனது உரையில், பத்தாம் நிதிக்குழுவின் அறிக்கையையும், நம்முடைய மாநில நிதி நிலையில் அதன் பாதகமான விளைவுகளையும் பற்றி நான் விரிவாக ஆய்வு செய்து விளக்கிக் கூறியிருந்தேன். பத்தாம் நிதிக்குழுவின் பரிந்துரைகள், மாநிலங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கத்தக்க ஒட்டுமொத்த நிதி ஆதாரங்களை உயர்த்தவில்லை என்பதை நான் சுட்டிக் காட்டியிருந்தேன். மிகச் சிறப்பான முறையில் நிதியை நிருவகித்த தமிழ்நாடு போன்ற மாநிலங்கள், பத்தாம் நிதிக் குழுவின் பரிந்துரையினால் எவ்வாறு பாதிக்கப்பட்டன என்பதையும் நான் குறிப்பிட்டிருந்தேன். மேலும், பத்தாம் நிதிக் குழு அறிக்கையின் சில அம்சங்கள் குறித்து நாம் மேல் நடவடிக்கையை எதிர்நோக்கியுள்ளோம். பத்தாம் நிதிக் குழு கருத்துத் தெரிவித்த நிதிப்பகிர்வுக்கான மாற்றுத் திட்டம் குறித்து மத்திய அரசு இன்னும் நடவடிக்கையெடுக்கவில்லை. இந்த மாற்றுத் திட்டத்தில், மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளப்படும் ஒட்டு மொத்தப் பங்களவு உயராது போனாலும், மத்திய அரசு விதித்து வசூலிக்கும் வரிகளில், அதிகம் உயர்ந்து வரக்கூடிய வரிவரவுகளில், அதாவது நிறுவன வரி, சுங்கத் தீர்வை போன்றவற்றில் கிடைக்கும் வரவுகளில் மாநிலத்திற்கு ஒரு பங்கு கிடைக்கும். நடப்பாண்டில் கூட, மாநிலங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படாத சுங்கத் தீர்வைகள், நிறுவன வரி ஆகியவற்றின் வளர்ச்சி வீதம், மாநிலங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுகின்ற ஆயத்தீர்வைகளின் வளர்ச்சி வீதங்களைக் காட்டிலும் அதிகமாகவுள்ளது என்று தெரிகிறது. எனவே, பத்தாம் நிதிக் குழு பரிந்துரைத்த நிதிப் பகிர்வுக்கான மாற்றுத் திட்டம் குறித்து மத்திய அரசு தேவையான மேல் நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நாம் வலியுறுத்துகிறோம்.

10. பத்தாம் நிதிக் குழு உள்ளாட்சி அமைப்புகளுக்கு மானியங்கள் வழங்கப் பரிந்துரைத்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். உள்ளாட்சி மன்றங்கள், புதிய மூலதன முதலீடுகளுக்காக மட்டுமே இத்தகைய மானியங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். 1996-97 ல் தமிழ்நாட்டிற்கு ரூ.100.71 கோடி கிடைக்கும். இதில் ரூ.71.83 கோடி ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கும், ரூ.28.88 கோடி நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கப்படும். இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இதற்குத் தேவையான நிதி ஒதுக்கங்கள்

செய்யப்பட்டுள்ளன. உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே இத்தகைய மானியங்களைப் பகிர்ந்தளிப்பது, மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நடைபெறும்.

ஆண்டுத் திட்டம்

11. 1991-92 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு மாநிலம், ஒவ்வோர் ஆண்டும் ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டளவை பெரிய அளவில் அதிகரித்து வந்து சாதனை புரிந்திருப்பதையும், இதற்கான ஒப்புதலைப் பெறுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருந்த சீரிய முயற்சிகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். மேலும், குறிப்பாகத் திட்டங்களைச் செயல்படுத்தும்போது, ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டளவை ஆண்டு தோறும் விஞ்சியுள்ளோம். பெரிய மாநிலங்கள் பல, அவற்றின் ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டளவைக் கூட எய்த இயலாமல் இருந்த நிலையை ஒப்பிட்டுப் பார்த்தால், இந்தச் சாதனை அரும்பெரும் சாதனையாகும். இது மாநிலத்தை மேம்படுத்த அரசின் உறுதியைக் காட்டுகிறது.

12. 1994-95 ஆம் ஆண்டில், சிறப்புவகையின அல்லாத ஒன்பது மாநிலங்கள் முதலில் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டை எய்த முடியாத நிலையில் இருந்தன. இவ்வாறிருக்க, 1994-95 ஆம் ஆண்டுக்கான ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டளவு 30.89 சதவீதம் அதிகரிக்கப்பட்டு, ரூ.2750 கோடியாக உயர்த்தப்பட்டிருந்த போதிலும், நாம் எய்திய சாதனையின் அளவு ரூ.2845.70 கோடி ஆகும்.

13. நடப்பாண்டில், ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு ரூ.3200 கோடி என்றிருக்க, வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.3250.58 கோடியாகும். திருத்த மதிப்பீடுகளில், திட்டப் பணிகளுக்கான ஒதுக்கீடு ரூ.3316.24 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 1995-96ஆம் ஆண்டிலும் திட்ட ஒதுக்கீட்டளவை முழுமையாக அடைவோம் என அரசு உறுதியாக நம்புகிறது. இத்துடன், எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்



நான்காம் ஆண்டு இறுதியில், பணவீக்கத்தை கணக்கில் கொள்ளாத ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீட்டில் 80.66 சதவீதம் நிறை வேற்றப்பட்டிருக்கும். இதே காலஅளவில், சிறப்பு வகையின அல்லாத மாநிலங்கள் அனைத்தும் எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டில் 59 சதவீதத்தை மட்டுமே நிறைவேற்றியிருக்கும். அதனுடன் ஒப்பிட, இம்மாநிலத்தின் சாதனை மிகச் சிறப்பானதாக இருக்கும்.

14. 1996-97ஆம் ஆண்டிற்குரிய ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டளவு பொதுத் தேர்தல் முடிந்த பின்னரே மத்திய திட்டக் குழுவால் முடிவு செய்யப்படும். இருப்பினும், இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், நடைபெற்றுவரும் திட்டப் பணிகளுக்கென ரூ.3549.68 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. திட்ட அளவு இறுதியாக முடிவு செய்யப்படும்போது, ஒதுக்கீட்டளவு மேற்கொண்டும் உயர்த்தப்படலாம். விலைவாசி ஏற்றத்தைக் கணக்கிற்கொள்ளாத எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட ஒட்டுமொத்த ஒதுக்கீட்டளவான ரூ.10,200 கோடியை இம்மாநிலம் விஞ்சும் என்பதை இது உறுதி செய்யும்.

ஏழை மக்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டம்

15. இம்மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கான சீர்திருத்தங்களுக்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளுடன் கூடவே, ஏழை எளிய மக்களுக்காக உணவுக்கு உத்தரவாதம், சத்துணவு, தொடக்கச் சுகாதாரப் பணி, அனைவருக்கும் தொடக்கக் கல்வி, ஏழை எளியவர்க்கு வேலை வாய்ப்புத் திட்டங்கள், குடிநீர் வசதி, வீடு இல்லாதவர்க்கு வீட்டு வசதி, சமூகப் பாதுகாப்பு, நலிந்த பிரிவினருக்கான சிறப்புத் திட்டங்கள் ஆகிய திட்டங்கள் அடங்கிய சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை நாங்கள் உருவாக்கினோம். சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்காக 1995-96 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் மொத்தம் ரூ.2048.64 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 1996-97ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் இதற்கென ரூ.2076.18 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

16. மாண்புமிகு முதலமைச்சர் 1993 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள்.14ம் நாள்அன்று தொடங்கிய 15 அம்சத் திட்டத்தைச் செயலாக்குவதில் அடைந்த முன்னேற்றம் தொடர்ந்து செயலாக்கப்படுகிறது. குழந்தைகள் நலனுக்கான புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா 15 அம்சத் திட்டம், பன்னாட்டுப் பார்வையாளர்களிடமிருந்து பாராட்டுகளைப் பெற்றுள்ளது. 15 அம்சத் திட்டத்தின் செயல்பாடான குழந்தை நலத் துணைத் திட்டம் 1994-95, 1995-96 ஆம் ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. 1996-97ஆம் ஆண்டில் இத்துணைத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.819.31 கோடி ஆகும்.

17. குழந்தைகளுக்குச் சத்துணவு அளிப்பதில் தமிழ்நாடு மாநிலம் பிற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. 1996-97ல் சத்துணவுத் திட்டத்திற்கும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த

சத்துணவுத் திட்டத்திற்குமான ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீடு ரூ.354.36 கோடி ஆகும். மூன்றாவது தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டத்தின் ஆயத்தப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது, இம்மாநிலத்திலுள்ள பாலர் பள்ளிச் சிறார்கள் அனைவருக்கும் சத்துணவும், சுகாதாரப் பாதுகாப்பும் தொடர்ந்து அளிக்கப்படுவதை உறுதி செய்யும்.

18. சுகாதார-மருத்துவப் பணிகள், அதிலும் குறிப்பாகத் தொடக்கச் சுகாதாரப் பணி, இந்த அரசு தனிக்கவனம் செலுத்துகின்ற முக்கியப் பணியாகும். சுகாதாரம்-குடும்ப நலன் குறித்த நிதி ஒதுக்கீடு 1995-96ல் ரூ.688.95 கோடி என்றிருக்க, 1996-97 ஆம் ஆண்டு இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.737.08 கோடி ஆகும். அரசு மருத்துவ மனைகளிலும், சுகாதார மையங்களிலும் தற்போதுள்ள மருத்துவப் பணிகளின் தரத்தைக் கணிசமான அளவிற்கு மேம்படுத்துவதில் பெரிதும் கவனம் செலுத்தப்படுகிறது. 1996-97 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மருத்துவமனைக் கட்டிடங்கள், சாதனங்கள் பராமரிப்பிற்குப் போதுமான அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மருந்துகள், மருந்துப் பொருட்கள் வழங்குவதற்கான ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீடு ரூ.97 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் நிறுவனம் வாயிலாக, மருந்துகள், அறுவைச் சிகிச்சைச் சாதனங்கள் வழங்குவதைச் சீரமைக்க இந்த அரசு எடுத்த முயற்சிகளை, அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவு கூர்வர். இந்த நடவடிக்கைகள், இம்மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள், தொடக்கச் சுகாதார நிலையங்களில் தரமான மருந்துப் பொருட்கள் கிடைக்கச் செய்வதை உறுதிசெய்து சமுதாயத்தின் மிக வறிய நிலையிலுள்ளவர்களுக்குப் பயனளிப்பதாக அமைந்துள்ளன. நம்முடைய இப்பணியை முன்மாதிரியாகக் கொண்டு, ஏனைய மாநிலங்களும் நடவடிக்கை எடுத்து வருகின்றன என்பது நமது அரசுக்குப் பெரிதும் மனநிறைவு அளிப்பதாகவுள்ளது. மருந்துகளைக் கொள்முதல் செய்து அரசுத் துறைகள் அனைத்திற்கும் வழங்கும்

(தொடர்ச்சி 49-ஆம் பக்கம் பார்க்க)

ERODE

RANA TEXTILE

PROCESSORS (P) LIMITED

REGISTERED OFFICE:

474, Valayakkara Street

ERODE - 638 001.

Phone: 0424 - 214755

0424 - 214355

Fax: 0424 - 215102

படமும் செய்தியும்

தான்சானியா நாட்டு முன்னாள் அதிபர் டாக்டர் ஜூலியஸ் நைரேரே மற்றும் அவரது துணைவியாருக்கு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் விருந்து அளித்து நினைவுப் பரிசு வழங்கினார். (17.2.96)

சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இயங்கி வருகின்ற இஸ்லாமிய சமுதாயக் கல்வி நிறுவனங்கள் மற்றும் தொண்டு இல்லங்களைச் சேர்ந்தவர்களும், வேறு சில முக்கிய முகமதியப் பிரமுகர்களும், ஆற்காடு இளவரசர் திரு முகமது அப்துல் அலி அவர்களுடன் வந்து, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்கள். (27.2.96) ▼



தொழில்வள மாநிலங்களையும் முந்தும் வகையில் தமிழகம்!

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரை

மகிந்திரா - போர்டு மோட்டார் தொழிற்சாலைக்கான அடிக்கல் நாட்டும் இந்த விழாவில் கலந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தத் திட்டத்தின் மூலம் உலகளாவிய பொருளாதார வளர்ச்சியில் நமது முன்னேற்றம் புதிய அத்தியாயத்தைத் தொடங்குகிறது. உலக மோட்டார் தொழில் துறைக்குத் தலைமை வகிக்கும் போர்டு, இந்தியாவின் மாபெரும் தொழில் நிறுவனமான மகிந்திராவுடன்இணைந்துசெயல்படுவது தமிழகத்தில் மோட்டார்த் தொழில் வளர்ச்சியில் புதிய அத்தியாயம் மட்டுமல்ல, உலகப் பொருளாதாரப் போட்டியில் தமிழகம் உரிய இடம் வகிப்பதைக் குறிப்பதுமாகும்.

தமிழகம் நீண்ட காலமாகவே மோட்டார்த் தொழிலில் முன்னோடி மாநிலம். தமிழகத்தில் மோட்டார் பாகங்கள் தொழில் மூலம் கடந்த ஆண்டிலும் ரூ.2,200 கோடி வணிகம் நடந்திருக்கிறது. இந்தியா முழுவதையும் கணக்கில் கொண்டால் இது சுமார் 33 சதவிகிதம் ஆகும். மோட்டார் பாகங்கள் ஏற்றுமதியில் அகில இந்திய அளவில் உள்ள மொத்தத்தில் தமிழகத்தின் பங்கு 30 சதவிகிதமாக இருந்தது.

மோட்டார்களுக்குத் தேவைப்படுகின்ற உதிரிப்பாகங்கள் ஒவ்வொன்றும் இங்குத் தயாரிக்கப்படுகின்றன. பெரும்பாலான தயாரிப்பாளர்கள் உலக அளவில் போட்டியிடும் நிலையை அடைந்திருக்கிறார்கள்.

கனவு நனவாகிறது

சர்வதேசத் தரம் வாய்ந்த ஒரு பெரிய தொழில் நிறுவனம் தான் நமக்கு வேண்டும் என்ற நிலை இருந்தது. அந்தக் கனவும் இன்று நனவாகத் தொடங்கியிருக்கிறது.

நமது மாநிலத்திற்கு மேலும் இதுபோன்ற இரண்டு, மூன்று பெரிய திட்டங்களைக் கொண்டு வர முடியும் என்று நம்புகிறேன். சென்னை, இந்தியாவின் மோட்டார்த் தொழில் நகராக, இந்தியாவின் 'டெட்ராய்ட்' ஆக இந்த அரசால் விளங்கப் போகிறது என்பது உறுதி.

தற்போதைய தாராளப் பொருளாதார சகாப்தத்தில் எந்த ஒரு மாநிலமும் முன்னேற்றமடைய பெருமளவு தொழில் முதலீட்டினைப் பெற வேண்டும். அப்படிப் பெறுவதற்கு மாநிலத்தில் உரிய சூழ்நிலை வேண்டும். புதிய தொழில் கொள்கை அறிவிக்கப்பட்ட பின்பு, கடந்த 4 ஆண்டுகளில் தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கப் பெரு முயற்சி செய்து வருகிறேன். தொழில் வளர்ச்சிக்கான கட்டுமான கட்டுக்கோப்பு, தொழில் அமைதி, தொழில்துறைக்கு ஊக்கம், தொழில் வளர அரசு உதவி ஆகியவைகளில் கவனம் செலுத்தி வருகிறேன்.

தொழில் வளர கட்டுமானத் தேவைகள் என்பதில் நிலம், மின்சக்தி, தண்ணீர் வசதி, போக்குவரத்து வசதி, மற்றும் வீட்டு வசதிகள், பள்ளிகள், மருத்துவ உதவிகள் முதலியன அடங்கும்.

இந்தத் தேவைகளுக்காகப் புதிய வளர்ச்சி மையங்களையும், தொழில்பேட்டைகளையும் அமைத்து வருகிறோம். தடையற்ற மின் வசதி, தொழில் வசதிக்கு மிக முக்கியமான தேவை என்பதால், மின் உற்பத்தியைப் பெருக்குவதில் முக்கியக் கவனம்செலுத்துகிறோம்.

மின்வெட்டு இல்லாத தமிழகம்

இன்று அகில இந்தியாவிலும் மின்வெட்டு இல்லாத மாநிலம் தமிழகம்தான். புதிய தொழில் திட்டங்களால், மின்சாரத் தேவை அதிகரிக்கும் நிலையிலும் இந்த மின் சக்தி வழங்கலைத் தொடர்ந்து நிலை நிறுத்தி வருவோம்.

தண்ணீர் வசதி இரு பெரும் திட்டங்கள்

புதிய தொழில்களுக்குத் தண்ணீர் வசதி என்ற வகையில் சென்னை நகருக்காகவும், தூத்துக்குடி, திருப்பூர், கடலூர், ஒசூர் ஆகிய தொழில் நகரங்களுக்காகவும் இரு மாபெரும் தண்ணீர் வழங்கு திட்டங்களைத் தொடங்குகிறோம்.

தொழில் வளர்ச்சித் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதில், மகாராஷ்டிரம், குஜராத், கர்நாடகம், ஆகிய தொழில்வள மாநிலங்களையும், முந்தும் வகையில் தமிழகம் சிறப்பிடம் பெற்றுள்ளது.

முதலீடு வருவதற்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்துவது என்பதைப் பொறுத்த வரையில், தமிழகம் இந்தச் சூழ்நிலையை நல்ல முறையில் உருவாக்கியிருக்கிறது. தொழிலாளர்கள் வேலை இழப்பு நாட்கள் இங்கு

மிகக் குறைவு. தொழிலாளர் உற்பத்தித் திறனும் இங்கு அதிகம். தொழில்நுட்பம் தெரிந்தவர்கள் இங்கு ஏராளமாக உள்ளனர். இது நமது சிறந்த மூலபலம் என்ற வகையில் தொழில்நுட்ப அறிவு இங்கு வளர்ந்துள்ளது.

புதிய தொழில்களுக்கு ஊக்கம் என்ற வகையில் மற்ற மாநிலங்களை முந்தும் அளவில் இங்கு வசதிகள் செய்து கொடுக்கிறோம். தொழில் தொடங்கும் அனுமதிகள் உடனுக்குடன் வழங்கப்படுகின்றன. அலுவலர்கள் தக்க முறையில் ஒத்துழைக்கிறார்கள். எனது தலைமையில் ஒரே இடத்தில் பல்வேறு வகைத் தொழில் அனுமதி கிடைக்க வழி செய்யப்பட்டிருக்கிறது. உலகம் முழுவதிலிருந்தும் முதலீடு வருவதற்குரிய நிலையை இது ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த நடவடிக்கைகள், தமிழகத்தை முதலீட்டுப் பெருக்கத்துக்கு உரிய மாநிலமாக ஆக்கியிருக்கின்றன.

முதலீடுகள் குவிவதில் 2வது சிறப்பு அம்சம்

ஆகஸ்டுத் திங்கள் 1991க்கும் ஜூன் திங்கள் 1995-க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் நேரடியாக அயல்நாட்டு மூலதன வருகை என்ற அளவில் தமிழகம் நாட்டிலேயே இரண்டாவது இடம் வகிக்கிறது. முதலீடுகள் வகையில் குஜராத்துக்கு அடுத்த மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகிறது.

போர்டு, ரூபாண்ட், பில்கிங்டன், சீகேட் போன்ற உலகின் பெரிய நிறுவனத் தலைவர்கள் வருகை மூலம் முதலீட்டுக்கு ஏற்ற மாநிலம் தமிழகம் என்பது புலனாகிவிட்டது. புதிய தொழில் திட்டங்களுக்கு வசதிகள் செய்து கொடுப்போம். சாலை வசதிகள், செய்தித் தொடர்புகள், துறை முகங்கள், வீட்டு வசதிகள் முதலியன ஏற்படுத்தி 21ஆம் நூற்றாண்டின் தொழில் தேவைகளையும் பூர்த்தி செய்ய ஏற்ற நடவடிக்கைகளை எடுப்போம்.

தற்போது நம் மக்களுக்கு வேண்டியது படிப்பு மட்டும் அல்ல; அறிவும் வேண்டும். சுயமரியாதையும் வேண்டும். தன்மான உணர்ச்சியும், எதையும் பகுத்துணரும் திறனும், ஆராய்ந்து அறியும் அறிவும் தான் மிகவும் தேவை.

எதற்கும் சலியாது உழைத்துத் துன்பம் வந்தாலும், ஏச்சு வந்தாலும், எவ்வித இழப்புகள் ஏற்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாது எதிர்த்துழைத்துக் கடைசிவரை கொள்கையை நழுவவிடாது காத்து நிற்பதே உண்மைத் தொண்டின் குணமாகும்.

- தந்தை பெரியார்

போர்டு - மகிந்திரா சென்னையைத் தங்கள் தொழிலகத்துக்காக தேர்ந்தெடுத்திருப்பதில் உண்மையாகவே மகிழ்ச்சி அடைகிறேன். திரு டிராட்மன், திரு கேஷப் மகிந்திரா ஆகியோருக்கு என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொழில் மயமாக்குவதில் உதவி செய்ய விற்பனை வரிச் சலுகைகளையும் அளிக்கிறோம்.

விற்பனை வரி விலக்கு

இந்த கார்த் தொழிற்சாலையில் தயாரிப்புகளுக்காக மாநிலத்திலிருந்து பெறப்படும் இடுபொருட்களுக்கு விற்பனை வரி வேண்டாம் என்று உத்தரவிட்டிருக்கிறேன். மோட்டார் துணைப் பாகங்கள் தயாரிப்புத் தொழிலுக்கு இது பெரிதும் ஊக்கமூட்டுவதாக அமையும் என்று நம்புகிறேன். உலகத் தரம் வாய்ந்த தொழில் அமைவதில் இது உறுதுணையாகவும் அமையும்.

தமிழகத்தின் சிறப்பு நடவடிக்கைகள் மூலம் உலகத் தரம் வாய்ந்த தொழிலகம் இங்கு அமையும். 'மோட்டார் தொழில் பூங்கா' என்று சொல்லத்தக்க வகையில் புதிய துணைத் தொழில் பிரிவுகள் ஏற்படும். பெருமளவில் ஏற்றுமதிக்கும் முயற்சிக்கக் கூடிய வகையில் தொழில்கள் அமையும். இத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் அரசு எல்லா உதவியும், ஆதரவும் அளிக்கும் இந்தத் திட்டம் வெற்றியடைய என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்".

இந்தியாவின் டெட்ராய்ட்டாகச் சென்னை நகரம் உருவாகிறது !

இந்தியாவின் மோட்டார் தொழில் நகரமாகச் சென்னையை உருவாக்கும் முயற்சியில், சென்னைக்கு அருகில் உள்ள மறைமலை நகரில் ரூ.1,500 கோடி செலவில், போர்டு மகிந்திரா கார் தொழிற்சாலையானது 350 ஏக்கர் நிலத்தில் உருவாக உள்ளது. அமெரிக்காவில் உள்ள 'போர்டு' மோட்டார் கம்பெனியும், மும்பாயைச் சார்ந்த மகிந்திரா நிறுவனமும் இணைந்து தமிழக அரசின் உதவியுடன் இத்தொழிற்சாலை தொடங்கப்பட இருக்கிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், இக்கார்த் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டிட 23.2.96 அன்று பகல் 12.00 மணியளவில் சென்னையிலிருந்து ஹெலிகாப்டர் மூலம் மறைமலைநகர் வந்தடைந்தார். மாண்புமிகு முதல்வர் அவர்களை, போர்டு கம்பெனியின் நிர்வாக இயக்குநர் திரு ஜான்பார்க்கரும், மகிந்திரா அண்ட் மகிந்திரா நிர்வாக இயக்குநர் திரு ஆர்.கே. பீதாம்பரும் மலர்க்கொத்து கொடுத்து இனிதே வரவேற்றனர்.

பின்னர் விழா நடைபெறும் மேடைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரும்பொழுது போர்டு கம்பெனியின் சேர்மன் திரு அலெக்ஸ் டிராட்மன் அவர்களின் துணைவியாரும், மகிந்திரா அண்ட் மகிந்திரா நிறுவனத் தலைவர் திரு. கேசப் மகிந்திரா அவர்களின் துணைவியாரும் மலர்க்கொத்து கொடுத்து வரவேற்றார்கள்.

பின்னர், வேத மந்திரங்கள் முழங்கவும், அபிராமி அந்தாதிப் பாடல் முழங்கவும் விழா தொடங்கியது. இந்த இனிய விழாவின் வரவேற்புரையாக, போர்டு மகிந்திரா கார் நிறுவன நிர்வாக இயக்குநர் ஜான் ஜி. பார்க்கர் உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் போர்டு கார் நிறுவனப் பணிகளை குத்துவிளக்கு ஏற்றி, தொடங்கி வைத்தார். அதன்பின் மேடையில் நின்றவாறு ஒரு பொத்தானை அழுத்தியதும், அடிக்கல் பெயர்ப் பலகையின் மீது இருந்த திரை விலகியவுடன் அனைவரும் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். பின்பு மகிந்திரா அண்ட் மகிந்திரா குருப் நிறுவனத் தனைவர் திரு கேசப் மகிந்திரா அவர்களும் அமெரிக்க போர்டு நிறுவனத் தலைவர் திரு அலெக்ஸ் டிராட்மன் அவர்களும் சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதர் திரு திமோத்தி கவுசர் அவர்களும் அரசு தொழில்துறை முதன்மைச் செயலர் திரு சி.ராமச்சந்திரன், இ.ஆ.ப., அவர்களும், அரசு தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப. அவர்களும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் எம். சின்னசாமி அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

பின்னர், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உரையாற்றிய பின் இறுதியில் நன்றியுரையாக, மகிந்திரா அண்ட் மகிந்திரா நிர்வாக இயக்குநர் திரு ஆர்.கே. பீதாம்பர் உரையாற்றினார்.

இந்தச் சீர்மிகு விழாவில் மாநிலங்களவை உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள், தொழில் அதிபர்கள், பல வெளிநாட்டுப் பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். 1996-ஆம் ஆண்டு முதல் செயல்படத் தொடங்கும் இக் கார்த் தொழிற்சாலை, ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் கார்கள் தயாரிக்கும் திறன் கொண்டதாக அமையும். இப் புதிய தொழிற்சாலைக்கு "மகிந்திரா போர்டு இந்தியா லிமிடெட்" என்றும், இங்கு உருவாகும்

காருக்கு "போர்டுபியஸ்டா" என்றும் பெயரிடப்பட்டுள்ளது.

உலகிலேயே அதிக அளவு கார்களைத் தயாரிக்கும் இரண்டாவது பெரிய நிறுவனம் போர்டு மோட்டார் நிறுவனம் ஆகும். உலகில் முதல் 500 நிறுவனங்களின் பட்டியலில் இது 2-வது இடத்தை வகிக்கிறது. இத்தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் கார்கள் பியஸ்டா என்று அழைக்கப்படுகிறது. கடந்த ஆண்டு மத்தியில் அமெரிக்காவில் அறிமுகமானது. இந்நிறுவனத்தில் மொத்தம் 3,38,000 நபர்கள் பணியாற்றுகின்றனர். மறைமலைநகரில் தொடங்கப்படும் இத்தொழிற்சாலையின் மூலம் 1,000 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், 20,000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும். இவ்வகையான 'பியஸ்டா' கார்கள் நவீன தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்படவிருக்கிறது. சிறப்புப் பாதுகாப்புத் தன்மை, நேர்த்தியான வடிவமைப்பு, கொண்டதாக இருக்கும்.

'இந்தியாவின் டெட்ராய்ட்' (அமெரிக்காவில் உள்ள டெட்ராய்ட் நகரில் தான் ஏராளமான பெரிய கார் தொழிற்சாலைகள் உள்ளன.) என்ற பெயரை நமது சென்னை நகரம் பெறும் நாள் வெகு தொலைவில் இல்லை எனலாம்.

நிகழ்ச்சித் தொகுப்பு:
அ. மதிமாறன்

பெரியார் நூற்றாண்டு

மாண்புமிகு தமிழக முதலமைச்சராக டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் இருந்தபோதுதான் 18.9.1978இல் பெரியார் நூற்றாண்டு விழா தொடங்கப்பட்டது.

ஈரோட்டில் அவ்விழா தொடங்கி வைக்கப்பட்டபோது டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 'பத்து அம்சத் திட்டம்' ஒன்றை வெளியிட்டார். அதன் விவரம் வருமாறு:

1. கோவை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, அதில் ஒன்றினுக்குப் பெரியார் மாவட்டம் என்று பெயரிடப்படும்.

2. கோவையில், பெரியார் பல்கலைக் கழகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

3. தமிழகத்தில் உள்ள வீதிகளின் பெயர்களில் உள்ள சாதிகளின் பெயர்கள் நீக்கப்படும்.

4. பெரியார் கூறிய எழுத்துச் சீர்திருத்தம் கொண்டுவரப்படும்.

5. ஈரோட்டில், பெரியார் அண்ணா நினைவகம் உள்ள கோர்ட் வீதிக்குப் பெரியார் பெயர் இட்டப்படும்.

6. பெரியார் பெயரில் ஓர் அருங் காட்சியகம் நிறுவப்படும்.

7. கலப்புமணம் செய்து கொண்டவர்களின் குழந்தைகளுக்கும், விதவை மணம் புரிந்து கொண்டவர்களின் குழந்தைகளுக்கும், தாழ்த்தப்பட்டோருக்கு அளிக்கப்படும் எல்லாச் சலுகைகளும் அளிக்கப்படும்.

8. பெரியாரின் கொள்கைகளைச் சட்டமாக்கி, யாரையும் துன்புறுத்தாமல், யாருக்கும் தொல்லை கொடுக்காமல் அவைகளைச் சட்டபூர்வமாக நிறைவேற்றிட நடவடிக்கை எடுக்கப்படும்.

9. பெரியாரின் நூல்களைத் தமிழகத்தில் உள்ள எல்லா நூலகங்களும் வாங்க ஆணையிடப்படும்.

பெரியாரின் கொள்கைகளைக் கிராமங்கள்தோறும் பரப்புவதற்காக 15 ஆயிரம் படித்த இளைஞர்கள் திரட்டப்படுவார்கள்.

கன்று ஈனாமலேயே பால் கறக்கும் கறவை மாடுகள்

பெரியார் மாவட்டத்தில் பால் உற்பத்தியில் பல சாதனைகள் ஆற்றப்பட்டு வருகின்றன. குறிப்பாக, தூண்டப்பட்ட பால் உற்பத்தி முறையில் கன்று ஈனாமலே பால் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. என்ன ஆச்சரியமாக இருக்கிறதா? பெரியார் மாவட்டத்திற்கு வந்தால், கிட்டத்தட்ட 100 பசுக்கள் கன்று ஈனாமலேயே பால் கறக்கின்ற விஞ்ஞானத்தின் அதிசயத்தைக் காண முடியும்.

நீண்ட காலமாகத் தொடர்ந்து கருவூட்டல் செய்த பிறகும் சினை பிடிக்காமல் உள்ள வறட்டு மாடுகள் மற்றும் கிடாரிகளில் மருந்தை ஊசிகள் மூலம் செலுத்தி, கன்று ஈனாமலேயே பால் உற்பத்தியைச் செய்ய முடியும் என்று அறிவித்து செய்து காட்டுகிறார்கள் அங்குள்ள கால்நடை மருத்துவர்கள். இந்தத் தூண்டப்பட்ட பால் உற்பத்தித் திட்டம் மூலம் 21 நாட்கள் மருத்துவச் சிகிச்சைக்குப் பிறகு, மாடுகள் மற்றும் கிடாரிகள் கன்று ஈனாமலேயே ஒரு நாளைக்கு இரண்டு வேளைகள் பால் சுரந்து கறக்கின்றன. இந்தப் பால் இயற்கையாக மற்ற பசும்பாலைப் போலவே அனைத்துச் சத்துக்களும் நிரம்பியுள்ளன. தற்போது பெரியார் மாவட்டத்தில் 105 பசுக்கள் இத்திட்டத்தின் மூலம் பால் தந்து கொண்டிருக்கின்றன.

இந்தத் திட்டத்தின் மூலம் ஒரு சுமையாக இருந்த மலட்டு மாடுகள் அவற்றை வளர்க்கும் விவசாயிகளுக்குச் சுவையுள்ள பால் தரும் பசுக்களாக மாறியிருப்பதால் விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

கன்று ஈனாமலேயே பால் கறக்கும் இந்தப் பசுக்கள் மீண்டும் சினைப் பிடிக்கின்ற வாய்ப்பினைப் பெறுகின்றன. இந்தத் திட்டத்தில் ஒரு கால்நடைக்கு ஆகும் செலவு ரூ.850 மட்டும் தான். இந்தத் திட்டம் தற்போதைக்குப் பசுக்களில் மட்டுமே செயல்படுத்தப்படுகிறது. எருமை இனத்தில் இன்னும் செய்யப்படவில்லை. வறட்டு மாடுகள் நல்ல உற்பத்தி கறவை மாடுகளாக மாறுவதால், விவசாயிகளுக்கு ஏற்படும் பொருளாதார இழப்பைச் சரி செய்வதுடன் நாட்டிற்கும் பால் செல்வத்தை அதிகரிக்கும் நல்ல திட்டமாக இது விளங்குவதால் அனைவரின் வரவேற்பையும் பெற்று வருகிறது.

With Best Compliments From

MILKA BREAD

PIONEER BAKERIES (P) LTD.,

Registered Office & Factory

MILKA JUNCTION

Poondurai Road, Moolapalayam,

Erode - 638 002

Phone: 216719, 217405

Fax : 0424 - 217405

With Best Compliments From

T P K BUS SERVICE

Phone: 78806, 70219,
Res. : 76641

OFFICE & WORK SHOP

6/2, Nachiappa Street

Backside to New Bus Stand

ERODE - 1

BRANCHES

Komarapalayam ◆ Sankari

Prop: T.P.K. Balamurugan



"சமூக நீதிக் கொள்கை, புரட்சிகரமான சமுதாய மாற்றத்தின் தூண்டுகோல்!"

மாண்புமிகு முதலமைச்சர் பெருமிதம்

1995-ஆம் ஆண்டுக்கான தந்தை பெரியார் சமூகநீதி விருதை
திரு கி. வீரமணி அவர்களுக்கு வழங்கும் விழாவில்,
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்
ஆற்றிய சிறப்புரை

கடந்த 5 ஆண்டுகளாகத் தந்தை பெரியார் அவர்களின், பல்வேறு சமுதாயச் சீர்திருத்தக் கொள்கைகளைச் செயல்படுத்தி வரும் எங்கள் அரசின் சார்பில் 1995-ஆம் ஆண்டிற்கான தந்தை பெரியார் சமூகநீதி விருதினை, திராவிடர் கழகப் பொதுச் செயலாளர், மதிப்பிற்குரிய சகோதரர் திரு கி. வீரமணி அவர்களுக்கு வழங்கி உங்கள் அனைவரையும் நேரில் காண்பதில் நான் பெரு மகிழ்ச்சியும் பேருவகையும் அடைகிறேன்.

சமூக நீதிக் கொள்கைகளைச் செயல்படுத்துவதில், காலங்காலமாக இந்தியத் துணைக்

③

கண்டத்தில் உள்ள மற்ற மாநிலங்களுக்குத் தமிழ்நாடு ஒரு வழிகாட்டியாக - முன்னோடியாக இருந்து வந்துள்ளது. அன்று திராவிட இயக்கத்தின் முன்னோடிகள் வகுத்துத் தந்த, வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்ற கொள்கை உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சிக் காலத்தில் முழுப் பரிமாணத்தை அடைந்து, 69 சதவிகித இட ஒதுக்கீட்டுச் சட்டமாக இன்று உருவெடுத்துள்ளது.

சீரிய சமூக நீதிச் சிந்தனைகளுக்கு வழி வகுத்த, இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இன்று ஆலவிருட்சமாக வளர்ந்து உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் ஒரு சட்டமாக, அதுவும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் முழுப் பாதுகாப்பைப் பெற்ற ஒரு சட்டமாக முழுமை அடைந்துள்ளது என்பதை எண்ணிப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

பொது வாழ்க்கையில் எங்களுக்குக் கலங்கரை விளக்கங்களாக நின்று வழி நடத்திச் செல்லும் சான்றோர்கள், இட ஒதுக்கீட்டுக் கொள்கையைத் தங்கள் உயிரினும் மேலான ஒரு கொள்கையாகக் கடைப்பிடித்து வந்தனர். அடித்தளத்து மக்கள் நலிந்த பிரிவினர், சமுதாயத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டோர் ஆகியோர் வாழ்க்கையில் மேன்மை அடைய இந்தச் சமூக நீதிக் கொள்கை புரட்சிகரமான சமுதாய மாற்றத்திற்கு ஒரு தூண்டுகோலாகவும் முற்போக்குச் சிந்தனைகளுக்கு ஒரு திறவுகோலாகவும் அமைந்திருந்தது.

அந்த உணர்வு சற்றும் குறையாமல் சமூக நீதியைக் கட்டிக் காக்கும் மகத்தான பணியில் இன்று நாங்கள் ஒரு மாபெரும் சாதனையை நிகழ்த்திக் காட்டியுள்ளோம்.

பெரியாரின் சமூக நீதிக் கொள்கைகளுக்கும் பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் சமுதாய முன்னேற்றச் சிந்தனைகளுக்கும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் மனித நேய எண்ணங்களுக்கும், செயல் வடிவம் கொடுத்த மக்கள் நல அரசு, எங்கள் அரசு என்பதை நாங்கள் நிரூபித்துக் காட்டியுள்ளோம். தமிழகத்தின் சமூக நீதி வரலாற்றில் எங்கள் சாதனை ஒரு புதிய மைல் கல்லாக என்றென்றும் விளங்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

அந்த வகையில் முற்போக்குச் சிந்தனைகளுக்கு வழி வகுத்து, பெண் கல்வி வளர்ச்சிக்கு ஓங்கிக் குரல் கொடுத்த, தந்தை பெரியாரின் இலட்சியங்களையும், கொள்கைகளையும் பரப்பி சமுதாயப் பணி ஆற்றி வரும் ஒருவருக்கு ஆண்டுதோறும் "தந்தை பெரியார் சமூகநீதி விருது" வழங்கிக் கௌரவிப்பது என எங்கள் அரசு முடிவு செய்தது.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் கொள்கைகளை நாடெங்கும் பரப்பி நல்ல சமுதாயப் பணிகளை நாளும் மேற்கொண்டு வரும் மக்கள் நலத் தொண்டர், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் அருமைச் சகோதரர் மதிப்பிற்குரிய திரு கி. வீரமணி அவர்களுக்கு, இந்த விருதினை இன்று வழங்கியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

★ பொதுத் தொண்டு செய்பவனுக்கு ஏற்படும் தொல்லைகள், அவன் தனது இலட்சியத்திற்குக் கொடுக்கும் விலை.

—தந்தை பெரியார்

தந்தை பெரியாரின் பெயரில் அமைந்த இந்த விருதினைப் பெற முழுத் தகுதி படைத்த ஒருவர் இன்று இருக்கிறார் என்றால், அவர் நிச்சயமாகத் திரு கி. வீரமணி அவர்களாகத் தான் இருக்க முடியும். தனது வாழ்நாளின் பெரும் பகுதியைத் தந்தை பெரியாருக்குத் தொண்டு செய்வதிலும — அவர் தம் கொள்கைகளைப் பரப்பி, சமுதாய நலப் பணிகளை மேற்கொள்வதிலும் செலவிட்டு வருகிற திரு கி. வீரமணி அவர்களைவிட, தகுதியானவர் வேறு எவர் இருக்க முடியும்? பெரியாரின் கொள்கைகளைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் பரப்பி வருவதோடு கல்வி நிலையங்களையும், மருத்துவமனைகளையும் ஏற்படுத்தி அவற்றின் மூலம் மக்களுக்கு அயராத கல்வித் தொண்டையும், சமுதாயத் தொண்டையும் ஆற்றி வரும் பெரியாரின் சீடர், அவரது வழித் தோன்றல், மதிப்பிற்குரிய திரு கி. வீரமணி அவர்கள் நமது அனைவரின் பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் உரியவர் ஆவார்.

தந்தை பெரியாரின் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களுக்கும் சமூக நீதி காக்கும் இலட்சியங்களுக்கும் இன்று செயல் வடிவம் கொடுத்து அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வரும் திரு கி.வீரமணி அவர்களுக்குத் தமிழக அரசின் சார்பிலும் எனது சொந்த சார்பிலும் எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களையும் இதயம் கனிந்த பாராட்டுக்களையும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

திரு கி. வீரமணி அவர்கள் பொருளாதாரத்தில் முது கலைப் பட்டமும் சட்டக் கல்வியில் பட்டமும் பெற்ற ஒரு சிறந்த கல்வியாளர். தந்தை பெரியார் அவர்கள் "விடுதலை" நாளிதழை நடத்தும்போது திரு கி.வீரமணி அவர்கள் தந்தை பெரியாருக்கு உதவியாக உறுதுணையாக இருந்து செயல்பட்டு வந்துள்ளார். பின்னர் 1978-ஆம் ஆண்டு முதல் 'விடுதலை' நாளிதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்று ஒரு செய்தித் தாளின் இலட்சிய ஆசிரியராகச் சீரிய முறையில் பணியாற்றி வருகின்றார்.

தனது மனத்திற்குச் சரி என்று பட்ட கருத்தை, அது எத்தனைக் கசப்பானதாக இருந்தாலும் அதைத் துணிவுடன் தயக்கமின்றி வெளிப்படுத்தும் ஆற்றல் படைத்தவர் திரு கி. வீரமணி அவர்கள். அதே நேரத்தில், அடுத்தவர் மனம் சற்றும் புண்படாமல், தனது கருத்துக்களை எடுத்துரைக்கும் திறமையையும் உரிய பண்பையும் நான் அவரிடம் கண்டிருக்கிறேன்.

பெரியாரின் கொள்கைகளைச் செயல்படுத்துவதில் இம்மியளவும் அவர் விட்டுக் கொடுப்பதில்லை என்பதையும் நான் நன்கறிவேன். தந்தை பெரியார் அவர்கள் திராவிடர் கழகம், பொதுத் தேர்தலில் போட்டியிடக் கூடாது என்று அன்று இட்ட கட்டளையை இன்று வரை சிரமேற்கொண்டு செயல்படுத்தி வருவதிலும்; தந்தை பெரியாரின் அடியொற்றி பெண் கல்வி வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்துச் செயல்பட்டு வருவதிலும் திரு கி.வீரமணி அவர்கள் உயர்ந்து நிற்கிறார். அவரது இலட்சியப் பிடிப்பும் அர்ப்பணிப்பு உணர்வும் போற்றிப் பாராட்டத் தக்கவை ஆகும்.

★ மனதில் மாசு, மதவெறி, சாதி, சுயநலம், ஆணவம் இவற்றை மக்கள் விட்டொழிக்க வேண்டும், அப்போதுதான் நம் நாடு முன்னேறும்.

—பேரறிஞர் அண்ணா

கடந்த 50 ஆண்டுக் காலமாக அவர் தமிழகத்தின் மூலை முடுக்குகளுக்கும் ஏன், வெளி மாநிலங்களுக்கும் அயல் நாடுகளுக்கும் பயணம் செய்து தந்தை பெரியாரின் கொள்கைகளைப் பரப்பி வருவதோடு, சமுதாய நற்பணிகளையும் மேற்கொண்டு வருகிறார். தஞ்சையில் இயங்கி வரும் பெரியார் மணியம்மை மகளிர் தொழில்நுட்பக் கல்லூரி இந்தியாவிலேயே — ஏன்? உலகிலேயே, பெண்களுக்கெனப் பிரத்தியேகமாக ஆரம்பிக்கப்பட்ட முதல் பொறியியற் கல்லூரி என்ற பெருமையை உடையது என்பது நமக்கெல்லாம் பெருமை தரும் செய்தி ஆகும்.

திரு கி. வீரமணி அவர்கள் அனைவரையும் கவரும் பேச்சாற்றலும், கருத்துக்களை ஆணித் தரமாக வெளிப்படுத்தும் எழுத்தாற்றலும் ஒருங்கே பெற்ற ஒரு சிந்தனையாளர். அவர் எழுதிய நூல்களும், கட்டுரைகளும் ஏராளம்.

69 சதவிகித இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு நிரந்தரப் பாதுகாப்பைப் பெற்றுத் தந்த சாதனைக்காகப் பல்வேறு கட்சியினர் எனக்கு அளித்த பாராட்டு விழாவில் உரையாற்றும் போது, மதிப்பிற்குரிய சகோதரர் திரு கி. வீரமணி அவர்கள், சமூக நீதி காக்க தன் வாழ்க்கையை அர்ப்பணித்த தந்தை பெரியாரின் பெயரில் ஒரு விருதினை ஏற்படுத்தி, சமூக நீதி காக்கும் சமுதாயப் பணியை ஆற்றும் ஒருவருக்கு ஆண்டுதோறும் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அவரது சீரிய ஆலோசனையை ஏற்று அந்த விழா மேடையிலேயே தந்தை பெரியாரின் இலட்சியப் பாதையில் சமுதாயப் பணி ஆற்றுவோருக்கு ஆண்டுதோறும் "தந்தை பெரியார் சமூகநீதி விருது" தமிழக அரசால் வழங்கப்படும் என்று அறிவித்தேன்.

அன்று நிச்சயம் இந்த விருது தனக்கு வழங்கப்படும் என்று திரு கி. வீரமணி அவர்கள் எண்ணியிருக்கமாட்டார். ஏனெனில், அவர் விருதுகளுக்கும், விளம்பரத்திற்கும் அப்பாற்பட்டவர் என்பதே எனது கணிப்பு.

விருதுகள் அவரைத் தேடி வந்தாலும் கூட, அதற்காக

ஆசைப்படாத ஒரு தூய தொண்டுள்ளம் படைத்த உறுதியான மனிதர் அவர். எனவே, தந்தை பெரியாரின் திருப்பெயரில் வழங்கப்படுகின்ற இந்த விருதினை அவரது சீடரும் அவரது வழித் தோன்றலுமான சகோதரர் திரு கி. வீரமணி அவர்களுக்கு வழங்கலாம் என்று நான் தெரிவித்த கருத்தை எனது அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள அனைத்து அமைச்சர்களும் ஒருமனதாக வரவேற்று ஏற்றுக் கொண்டார்கள். இந்தச் சீரிய விருதினை மிகவும் தகுதி படைத்த ஒருவருக்கு வழங்கியதில் நான் உண்மையில் பெருமிதம் அடைகிறேன்.

திரு கி. வீரமணி அவர்கள் மேலும் பல்வேறு சிறப்புகளையும் புகழையும் பெற்று நீடூழி வாழ வேண்டும் என்று நிறைந்த மனதோடு நெஞ்சார வாழ்த்துகிறேன்.

இந்த விழாவில் கலந்து கொண்ட நீங்கள் அனைவரும் எல்லா வளமும் நலமும் பெற்று வாழ்வாங்கு வாழ வேண்டும் என்ற எனது நெஞ்சத்துப்பேரவாவினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிராமி எழுத்துக்கள்

தமிழ்நாட்டில் அரிக்கமேடு, கொற்கை, அழகரை, உறையூர், கரூர், முட்டம், வல்லம், காஞ்சிபுரம் போன்ற பல ஊர்களில் கிடைத்துள்ள பானை ஓடுகள் மூலம் பண்டைய பிராமி எழுத்து வடிவம் கிடைக்கப்பெற்றுள்ளது. ஆனால், அவைகள் எல்லாவற்றையும் விட, கொடுமணலில் மிகவும் அதிகமாகக் கிடைத்துள்ளன.

கொடுமணல் பகுதியில் கிடைக்கப் பெற்றப் பானை ஓட்டுப் பகுதியில் பிராமி எழுத்து வடிவங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

மாண்புமிகு முதல்வருக்குப் பரிசு

திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு கி. வீரமணி அவர்கள் ஏற்புரை நிகழ்த்தும் முன்பு, தமிழில் அறிவியல் கருத்துக்கள் இடம் பெற வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெஜெயலலிதா அவர்கள், தஞ்சையில் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் கூறியதற்கிணங்க, 4,000 அறிவியல் சொற்களுக்குச் சரியான தமிழ்ச் சொற்களைக் கொண்ட "தமிழ் அறிவியல் அகராதி"யைக் கொண்ட கம்ப்யூட்டர் சாப்ட்வேர் ஒன்றை மாண்புமிகு முதல்வர் சமூக நீதிகாத்த வீராங்கனை - புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடம் வழங்கினார். இதனை சென்னையில் உள்ள பெரியார் கணிணி ஆய்வுக் கல்வியகமும், தஞ்சை வல்லத்தில் உள்ள பெரியார் நூற்றாண்டு மகளிர் தொழில்நுட்பக் கல்லூரியும் இணைந்து தயாரித்தது ஆகும்.

'தந்தை பெரியார் சமூகநீதி விருது' வழங்கும் விழா

தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட 1995-ஆம் ஆண்டிற்கான 'தந்தை பெரியார் சமூகநீதி விருது' வழங்கும் விழா சென்னைக் கலைவாணர் அரங்கத்தில் எழுச்சியுடனும், உணர்ச்சியுடனும் 26.2.1996 அன்று மாலை நடைபெற்றது.

'தந்தை பெரியார் சமூகநீதி விருதினை, முதன் முதலாகத் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு கி. வீரமணி அவர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் சமூக நீதிகாத்த வீராங்கனை புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

இந்த எழில்மிகு விழா மேடையில், தந்தை பெரியார், மாண்புமிகு முதல்வர் திருவுருவப் படங்களுடன், 'தந்தை பெரியார் சமூகநீதி விருது - 1995 வழங்கும் விழா'. என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. விழா மேடையின் இரு பக்கச் சுவர்களிலும் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் ஒளிச்சுடர் வடிவமைக்கப்பட்டு இருந்தது.

விழா மேடையில் தலைவர்கள் அமர்வதற்கு முன்பு, தமிழக அரசின் பெரியார் சமூக நீதி விருதை, முதன் முதலாகத் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு கி.வீரமணி அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் பெற இருக்கிறார் என்று அறிவித்தவுடன், விழா அரங்கமே பொது மக்களின் கையொலியால் அதிர்ந்தது. இவ்விழாவின் வரவேற்புரையாக மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு கு. லாரன்ஸ் அவர்கள் உரையாற்றினார். அவரைத் தொடர்ந்து மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி.சோமசுந்தரம் அவர்களும், மாண்புமிகு தமிழகச் சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். பிறகு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு கி. வீரமணி அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி 5 பவுன் மதிப்புள்ள பதக்கத்தைப் பலத்தக் கரவொலிக்கிடையே அணிவித்து, "பெரியார் சமூகநீதி விருது" என்ற வாசகமும், தந்தை பெரியார், தமிழக முதல்வர் உருவப் படங்களும் பொறிக்கப்பட்ட வெள்ளித் தட்டை, நினைவுப் பரிசாக வழங்கிக் கௌரவித்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் விழாப் பேருரையாற்றினார். பிறகு திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு கி. வீரமணி அவர்கள் ஏற்புரை நிகழ்த்தும் போது, 1938-ஆம் ஆண்டு தந்தை பெரியாருக்குப் பெண்கள் தான் பெரியார் என்ற பட்டத்தை அளித்தார்கள். இப்போது பெண் முதலமைச்சர் மூலமாகவே தந்தை பெரியார் விருது தரப்படுவது குறித்து, சுட்டிக் காட்டியபொழுது விழா அரங்கத்தில் உள்ளோரின் கையொலி, சில நிமிடங்கள் கழித்துத் தான் அடங்கியது. இறுதியாக, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைச் செயலாளர் திரு எம். தங்கதுரை, இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரையாற்ற விழா இனிதே முடிவடைந்தது.

இவ்விழாவில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள், திராவிடர் கழகத்தைச் சார்ந்த பெரியோர்கள், பொதுமக்கள், மாணவ மாணவியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். விழா நடைபெறும் இடம் சுற்றி வண்ண விளக்குகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு ஒளி மயமாகத் திகழ்ந்தது.

நிகழ்ச்சித் தொகுப்பு:
அ. மதிமாறன்

இந்தியாவில் முன்னணியில் விளங்கும் தமிழ்நாடு காவல்துறை

மாண்புமிகு முதல்வர் பாராட்டு

சிறப்பாகவும், வீரதீரத்துடனும் செயலாற்றுவதில் தங்களை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்தி, கடமையாற்றிருக்கும், தேர்ந்தெடுக்கப் பட்ட காவல்துறையைச் சேர்ந்த ஆண், பெண் அலுவலர்களுக்குக் குடியரசுத் தலைவர் பதக்கங்களை இன்று வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். தங்களுக்கு மட்டும் இவர்கள் புகழைத் தேடிக்கொள்ளாமல் கூடவே தான் மேற்கொண்ட கடமையில் ஈடுபாடு, செயல்பாட்டில் உறுதி, அர்ப்பணிப்புப் போன்றவை மூலம் தமிழகத்திற்குப் பெருமை தேடித்தந்திருக்கிறார்கள்.

நம்முடைய காவல்துறை அலுவலர்களில் பலர் சீரிய சேவை, வீரதீரச் செயல்கள் ஆகியவற்றிற்காகக் குடியரசுத் தலைவரின் தங்கப் பதக்கங்களையும், உயிர் காக்கும் தீரச் செயல்களுக்காகப் பாரதப் பிரதமரின் பதக்கங்களையும் இன்று பெறுவதில் நான் உண்மையிலேயே பெருமிதம் அடைகிறேன். இது வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு நிகழ்ச்சியாகும். குடியரசுத் தலைவர் பதக்கமும், விருதும் பெறுகிற அனைவருக்கும் என் இதயங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு காவல்துறை, பணித்திறமை, தொழில் நேர்மை ஆகியவற்றில் இந்தியாவிலேயே சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது. அண்மையில் நவீன ஆயுதங்களைப் பயன்படுத்துவதிலும், அதிநவீன தகவல் தொடர்புச் சாதனங்களையும் பயன்படுத்துவதிலும், கணிணி போன்ற சாதனங்களைப் பயன்படுத்துவதிலும், விரைவான முன்னேற்றம் கண்டு வீரநடை போடுகிறது. அபரிதமான துணிச்சல், தனித்தன்மையான வீரம், கடினமானப் பணிகளையும் வெற்றிகரமாக நிறைவேற்றி, புரிகின்ற சாதனை, கடமையில் முழு ஈடுபாடு, அர்ப்பணிப்பு ஆகியவையே நாட்டில் மிகவும் பாராட்டத்தக்க ஒரு காவல் படையாகத் தமிழ்நாடு காவல்துறையை உயர்த்திக் காட்டியுள்ளது.

பயங்கரவாதத்தை எதிர்த்து, அடக்குவதிலும் சரி, பொது மக்களுக்கும் அரசுக்கும் இடையே நெருங்கிய உறவை மேம்படுத்துவதிலும் சரி, குற்றங்களைக் குறைத்து, சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபடுபவர்களை அடக்குவதிலும் சரி, இடர்ப்பாட்டில் சிக்கிக் கொண்டு, தவிப்பவர்களுக்கு உதவுவதிலும் சரி, தமிழ்நாடு காவல்துறை எப்போதுமே சிறப்பாகச் செயல்பட்டு, நற்பெருமையினை நிலைநாட்டி, தமிழ்நாட்டிற்கு என்றென்றும் பெருமை தேடித் தந்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் காவல்துறை பல கடுமையான நெருக்கடியைச் சந்திக்க நேர்கிறது என்பதில் ஐயமில்லை. மாறிவரும் சமுதாய சூழ்நிலைக்கேற்ப வன்முறை, பதட்டம், குற்றங்கள் இழைப்பதில் அதிநவீனம் போன்ற சமுதாயக் கேடுகளை எதிர்கொள்ளும் சூழ்நிலையில் காவல்துறை இருக்கிறது. இன்று உலக அளவில் இதே நிலைமைதான் எங்கும் உள்ளது. இதன் காரணமாகவே, காவல்படையை நவீனமயமாக்கி, மேம்படுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். மின்னணுச் சாதனங்களில் உயர் தொழில் நுட்ப மேம்பாடு, தகவல் தொடர்புச் சாதனம் மற்றும் ஆற்றல் மிக்க கணிணிகளின் துணையோடு உலகம் முழுவதிலுமே காவல்துறையை நவீனப்படுத்திடும், முயற்சிகள் தொடங்கியுள்ளன.

தமிழகமும், அந்த வகையில் முன்னணியில் இருப்பதைக் கண்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அதிநவீனப் பாதுகாப்புச் சாதனங்கள், தகவல் தொடர்புத் துறையில் நவீன டிஜிட்டல் கருவிகள், கணிணி மூலம் விரல் ரேகைகளை ஸ்கேன் செய்தல், புள்ளி விவரங்களைத் திரட்டி இருப்பில் வைத்தல் மற்றும் சரிபார்த்தல் ஆகியவற்றில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் இடம் வகிக்கிறது என்பதிலும் நான் மகிழ்ச்சியடைகிறேன். கடந்த 5 ஆண்டுகளில் தமிழகக் காவல்துறைக்கு நவீன கருவிகள், வாகனங்கள், பயிற்சி முறைகள் மனிதவள மேம்பாடு ஆகியவற்றிற்காக ஒதுக்கப்படும் நிதியை ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையின்போதும் அதிக அளவில் ஒதுக்கியிருக்கிறோம். இதன் விளைவாகவே நாட்டில் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தமிழகம் மிகவும் தேர்ச்சிப் பெற்ற, பணித்திறமைமிக்க, கட்டுப்பாடு மிக்க, காவல்படையைப் பெற்றிருப்பதை நாம் அறிய முடியும். மாநிலத்தில் கடந்த காலத்தில் தலைதூக்கியிருக்கும் பலவிதமான சவால்களையும், நெருக்கடியான சூழ்நிலைகளையும், வன்முறைகளையும் துணிச்சலாக, திறமையாக, பொறுப்புணர்வோடு எதிர்கொண்டு, குற்றங்களைக் குறைத்திருப்பதால் தமிழ்நாடு காவல்படை சிறப்பாகப் பணியாற்றியுள்ளது என்பதைச் சொல்வதிலும் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

குற்றங்களைக் குறைப்பதிலும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதிலும் நமது காவல்துறையின் பணி மகத்தானது. இவ்விரண்டு பொறுப்புகளையும் நிறைவேற்றுவதில் தங்களிடமுள்ள எல்லா வசதிகளையும், காவல்துறை பயன்படுத்தி, தன்னுடைய பொறுப்புகளை மேம்பட நிறைவேற்றிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

முற்போக்கான நமது சமுதாயத்தில், சட்டத்தின் பாதுகாவலர்களாக மட்டும் செயல்பட்டால் போதாது. ஏழை எளிய மக்கள், நலிந்த தாழ்த்தப்பட்ட மக்களின் காவலர்களாகவும் காவல்துறை செயல்பட வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். சுருங்கச் சொல்லின், நீதி, நியாயத்தின் வழிகாட்டியாக அவர்கள் செயல்பட வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்கள்.

பெண்கள், குழந்தைகள், முதியோர், ஒதுக்கப்பட்டோர் போன்றோர் தங்களுக்குப் பாதுகாப்பைக் காவல்துறையிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள். இந்த ஒரு காரணத்திற்காகவே மக்களின் நியாயமான தேவைகளை நிறைவேற்றுபவர்களாகவும், பொது மக்களிடத்தில் அன்பும் பரிவும் கொண்டிருப்பவர்களாகவும், மனித நேயங்கொண்ட காவல்துறையை உருவாக்குவதில் அதிக அக்கறை காட்டி வருகிறேன்.

மாநிலம் முழுவதிலும், இயங்கி வரும் காவல்துறை நண்பர்கள் இயக்கம், மற்றும் 57 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தமிழ்நாடு காவல்துறையை மனித நேயம் மிக்கதாய் ஆக்குவதற்கான நல்ல சான்றுகளாகும். தமிழ்நாடு காவல்துறையில் மேலும் மேலும் பெண்களைச் சேர்த்துக் கொள்வதன் மூலம், மக்கள் காவல்துறை நல்லுறவு உருவாகும் என்பதில் எனக்கு நல்ல நம்பிக்கை உள்ளது.

போதை மருந்து, பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதி, பாலியல்

குற்றங்கள் ஆகிய தீமைகளை வேரோடு களைந்து, மக்களின் உற்ற நண்பனாக, தமிழ்நாடு காவல்துறை விளங்கும் என்பதிலும் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு.

தமிழ்நாடு காவல்துறைத் தலைவர் திரு வால்டர் தேவாரம் அவர்களின் தலைமை தமிழ்நாட்டுக் காவல்துறைக்கும், தமிழ்நாட்டிற்கும் மேலும் பல சிறப்புகளையும், பாராட்டுக்களையும் குவிக்கும் என்பதில் ஐயமில்லை.

விருதுகளையும், பதக்கங்களையும் இன்று பெற்றுள்ள காவல்துறை, தீயணைக்கும் படை, ஊர்க்காவல் படை ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த ஆண், பெண் அலுவலர்களுக்கு மீண்டும் என் 'இதயங்கனிந்த வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர் காலத்தில் அவர்களது முயற்சிகளில் மேலும் பல வெற்றிகளையும், புகழையும் குவிக்கவும் வாழ்த்துகிறேன். தமிழ்நாடு காவல்துறையினர் பாரம்பரியத்தையும், தளராமுயற்சியையும், கட்டிக்காக்கும் சீரிய பணியைத் தொடர்வீர்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு.

(சென்னைக் கலைவாணர் அரங்கில் 17.1.96 அன்று நடைபெற்ற குடியரசுத் தலைவர் பதக்கம் வழங்கும் விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்).

பண்டைய பர்கூர் மலைப்பகுதி

பண்டைய பர்கூர் மலைப்பகுதி கன்னட அரசர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அக்காலத்தில் போரில் ஈடுபட்டு வெற்றிவாகை சூடிய வீரர்களின் நினைவாக, நாட்டப்பட்ட வீரக்கற்கள் இன்றுமுள்ளன. மலைப்பகுதிகளில் சோளகர் என்ற பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றார்கள்.

'தமிழரசு' பெரியார் மாவட்டச் சிறப்பிதழ் சிறக்க நல்வாழ்த்துக்களுடன்

கலைமகள் கல்வி நிலையம்,

மகளிர் மேனிலைப் பள்ளி, மெட்ரிகுலேஷன் பள்ளி, துவக்கப் பள்ளி
குழந்தைகள் ஆங்கிலப் பள்ளி, ஈரோடு

இருமொழிச் சொற்கொண்டல், தென்னகக் கல்வி மேதை, அமரர் திரு எஸ். மீனாட்சி சுந்தரனார், பி.ஏ.,எல்.டி., அவர்களால் 2 ஆசிரியைகளுடனும், 77 சிறார்களுடனும் ஈரோட்டில் தோற்றுவிக்கப்பட்ட கலைமகள் கல்வி நிலையம், இன்று ஏறத்தாழ 6,000 குழந்தைகள், 200 ஆசிரியர், அலுவலருடன், பெண்கள் மேனிலைப் பள்ளி, துவக்கப் பள்ளி, குழந்தைகள் ஆங்கிலப் பள்ளி, மெட்ரிகுலேஷன் பள்ளி என நான்கு பெரும் பிரிவுகளுடன் இயங்கி வருகிறது.

இதன் வளர்ச்சியில் பெரும் பங்கேற்று, இந்நிலைக்கு உயர்த்தியவர், அமரர் செல்வி எம். முத்தையா, பி.ஏ.,பி.டி., ஆவார். அவரோடு இணைந்து செயல்பட்ட ஆசிரியர் குழாமின் அயராத உழைப்பின் மூலம் ஆண்டுதோறும் மேனிலை, பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் 200க்கும் மேற்பட்ட மாணவர் நூற்றுக்கு நூறு தேர்ச்சி பெறுகின்றனர். சஞ்சாயிகா சிறுசேமிப்பிலும், இந்நிறுவனம் முதலிடம் வகிக்கிறது. இங்குள்ள தொல்பொருள் ஆய்வுக்கூடம் பள்ளிகள் அளவில் தனித்தன்மை வாய்ந்தது. மாணவியரின் உடல், அறிவு, ஆன்ம வளர்ச்சிக்கென பற்பல முறைகள் பின்பற்றப்படுகின்றன. மாணவியர் பல்வகைப் போட்டிகளிலும் அறிவியல் கண்காட்சிகளிலும் மாநில, தேசிய அளவில் பங்கு பெற்றுப் பரிசுகள் பெறுகின்றனர். ஈரோட்டின் பொதுச் சொத்தாக நிறுவனரால் அர்ப்பணிக்கப்பட்ட இக்கல்வி நிலையத்தின் பொன்விழா அக்டோபர் 5ஆம் தேதி முதல் 7ஆம் தேதி வரை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

பெரியார் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

திரு என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்
பெரியார் மாவட்டம்

பெரியார் மாவட்டம் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மற்றும் மாநில, மத்திய அரசின் சிறப்புத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தும் மாவட்டங்களில் ஒன்றாக விளங்குகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

நடப்பு நிதியாண்டில் இம் மாவட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.398.80 இலட்சம் ஆகும். இதில் நாளதுவரை ரூ.319.04 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. சாதனை விழுக்காடு 80.2 சதவிகிதமாகும். மொத்தம் 6,791 நபர்களுக்கு இது வரை மானியம் வழங்கப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்ட மலைச்சாதி இனத்தவர்கள் 2,920 நபர்களுக்குக் கடனுதவி வழங்க ரூ.142.96 இலட்சம் மானியம் வழங்கப் பட்டுள்ளது. 2,847 பெண்களுக்குக் கடனுதவி வழங்கும் வகையில் ரூ.119.57 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்

கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பெண்களை 5 முதல் 15 வரை உறுப்பினர்களாகக் கொண்ட குழுக்களாக அமைத்துப் பல்வேறு தொழில்களை மேற்கொள்ள மானியத்துடன் கூடிய வங்கிக் கடனுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பெரியார் மாவட்டத்தில் நடப்பு ஆண்டு வரை 750 மகளிர் குழுக்கள் அமைக்கப் பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மகுடம்

ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தைச் செம்மைப்படுத்தும் வகையில் 200 வானொலி கேட்போர் மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், தமிழகத்திலேயே பெரியார் மாவட்டத்திலிருந்து வெளியிடப்படும் மகுடம் மகளிர் மலர் என்ற மாத இதழை ஊரக வளர்ச்சித்துறை அங்கீகரித்துள்ளது.

பண்ணாரி டெக்ஸ் என்ற பெயரில் ஷோரூம் ஒன்று 6.10.94 முதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் தொடங்கப் பட்டுச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

டோக்ரா திட்டத்தின் கீழ் தயாரிக்கப்படும் போர்வைகள், கோரா சில்க் புடவைகள், பவானி ஜமக்காளம், துண்டுகள் மற்றும் ஏனைய பொருட்கள் பண்ணாரி டெக்ஸ் வாயிலாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

படித்த கிராமப்புற இளைஞர்களுக்குச் சுயவேலைவாய்ப்புத் திட்டம்

நடப்பு 1995-96-ஆம் ஆண்டுக்கு ரூ.23.52 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 663 இளைஞர்களுக்கு இத் திட்டத்தில், இம்மாவட்டத்தில் உள்ள 20 ஊராட்சி ஒன்றியங்களிலும் பயிற்சிகள் கொடுக்கப் பட்டு வருகின்றன.

1995-96-ஆம் ஆண்டில் பெரியார் மாவட்டத்திற்கு ரூ.1052.05 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. அதில் நாளதுவரை ரூ.883.471 இலட்சம் செலவிடப்பட்டு 23.071 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

கீழ்க்கண்ட பணிகள் மொத்தம் ரூ.1469.607 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துச் செய்யப்பட்டு நடைபெற்று வருகிறது.

2,438 தொகுப்பு வீடுகள், 100 ஜீவன்தாரா கிணறுகள், 74 பள்ளிக் கட்டடங்கள், 51.60 கி.மீட்டர் நீளமுள்ள ஆதிதிராவிடர் பயனடையும் மெட்டல் சாலைகள், 63.30 கி.மீட்டர் நீளமுள்ள இதர மெட்டல் சாலைகள், 74 கி.மீட்டர் நீளமுள்ள தார்ச் சாலைகள், 20 நியாயவிலைக் கடைகள், 30 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், 8 நெசவாளர்கூட்டுறவுப் பணிமனை, ஒரு ஊராட்சி அலுவலகம் ஆகக் கூடுதலாக ரூ.1469.607 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பணிகள் எடுத்துச் செய்யப்பட்டு வருகின்றன.

தீவிரச் சுகாதாரத் திட்டம்

கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள பயனாளிகள் தாங்களாகவே உள்ளூரில் கிடைக்கின்ற மூலப் பொருட்களைக் கொண்டு பயிற்சி பெற்ற கொத்தனார்கள் மூலம் தங்களது சொந்தச் செலவில் குறைந்த செலவிலான நவீனக் கழிப்பிடங்களை கட்டிக் கொள்ள அனுமதிக்கப் பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு யுனிசெப் நிறுவனம் கழிப்பிடம் ஒன்றுக்கு ரூ.500 வீதம் உதவித் தொகையாக வழங்குகிறது. பயனாளியின் பங்குத் தொகை ரூ.500 ஆகும். அரசு ரூ.1,500 மானியமாக வழங்குகிறது.

1994-95-ஆம் ஆண்டு முடிய 48,625 தனியார் இல்லங்களில் கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. இதற்கான அரசு மற்றும் யுனிசெப் சேர்ந்து நாளது வரை மொத்தம் ரூ.658 இலட்சம் செலவிட்டுள்ளது.

1992-96-ஆம் ஆண்டிற்குப் பெரியார் மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட 5,000 கழிப்பிடங்கள் 20 ஊராட்சி ஒன்றியங்களில் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

பள்ளிகளில் சுகாதாரக் கழிவறை

பள்ளி மாணவ மாணவியர் களிடத்திலே சுகாதார விழிப் புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

வயிற்றுப் போக்கு நோய்த் தடுப்புத் திட்டம்

பெரியார் மாவட்டத்தில் யுனிசெப் நிதி உதவியுடன் வயிற்றுப்போக்கு நோய்த் தடுப்புத் திட்டம் 1992-93 முதல் செயல் படுத்தப்பட்டு வருகிறது. வயிற்றுப் போக்கு நோய் ஏற்படும் குழந்தைகளுக்கு ஓஆர்எஸ் கரைசல் இலவசமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. இதுபற்றி கிராமப் புறங்களில் ஓஆர்எஸ் பொட்டலங்கள் தாய்மார்களுக்கு எளிதில் கிடைக்கக் கிடங்குகள் தொடங்கப்பட்டுள்ளன. கிராம அளவில் 127 கிராம செயற் படைக் குழு உறுப்பினர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது. இத்திட்டம் சிறப்பாகப் பெரியார் மாவட்டத்தில் செயல் படுத்தப்படுவதால் மாவட்டத்தில் குழந்தை இறப்பு விகிதம் மிகவும் குறைந்துள்ளது.

கிராம அளவில் கைப்பம்புகள் இயக்குதல்

பராமரிக்க இலகுவான இந்தியா மார்க் 3 கைப் பம்பைக் கிராமப்புறங்களில் நிறுவுவதன் மூலம் அவைகளை விரைந்து பழுதுபார்த்துக் கொள்ள இயலும். இதைக் கருத்தில் கொண்டு தற்பொழுது உபயோகத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை மகளிரே நிர்வகிக்கும் பொருட்டு, கிராமப் புறங்களில் மகளிரைக் கொண்ட வாட்சன் குழுக்கள் அமைக்கப் பட்டு, இத்திட்டத்தின் நோக்கம் பற்றி மகளிர்கள் தெரிந்துகொள்ள உதவும் வகையில் பல கட்டங்களில் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டம்

தமிழக அரசு பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் (1995-96,) பெரியார் மாவட்டத்தில் 301, பணிகள் ரூ.199.628 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான உள்ளூர் வளர்ச்சித் திட்டம் (1995-96)

இத்திட்டத்தின் கீழ், மொத்தம் 180.00 இலட்சம் ரூபாய் வரப்பெற்றுள்ளது.

181.46 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் தார்ச்சாலைகள், வடிகால்கள், கால்வாய்கள் சீரமைப்பு, குளங்களை மேம்பாடு செய்தல் முதலிய 187 பணிகள் இத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் படுகின்றன.

ஊராட்சி ஒன்றியப் பொதுநிதி வேலைகள்

பெரியார் மாவட்டத்திற்குட் பட்ட 20 ஊராட்சி ஒன்றியங்களில் ஒன்றியப் பொதுநிதியின் உபரி நிதியிலிருந்து கடந்த 1994-95-ஆம் ஆண்டில் 474 வேலைகள் ரூ.663.00 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துச் செய்யப் பட்டுள்ளன.

நடப்பு ஆண்டில் ஊராட்சி ஒன்றிய உபரி பொது நிதியிலிருந்து வறட்சியால் பாதிக்கப்பட்ட 96 குடியிருப்புகளில் புதிதாக ஆழ் குழாய்க் கிணறுகள் தோண்டப் பட்டுள்ளன. 49 குடியிருப்புகளில் குடிநீர்க் குழாய்கள் விரிவாக்கப் பணிகள் செய்யப்பட்டுள்ளன. இப்பணிகளுக்காக மட்டும் 92 இலட்சம் ரூபாய் செலவிடப் பட்டுள்ளது. மேலும் 368 கிலோ மீட்டர் ஊராட்சி ஒன்றிய சாலைகள் ரூ.750.00 இலட்சம் செலவில் மேம்பாடு செய்யப் பட்டுள்ளன. இதன்மூலம் பெரியார் மாவட்டத்தில் அனைத்துக் கிராமங் களுக்கும் சாலை வசதி செய்யப் பட்டு போக்குவரத்துக்கு ஏற்ற தரமான சாலைகள் உருவாக்கப் பட்டுள்ளன.

மேலும், இம்மாவட்டத்தில் 741 சத்துணவுக் கூடங்கள் பழுது பார்க்கப்பட்டு, மின் வசதி செய்யப் பட்டுள்ளன. இப்பணிக்காக மட்டும் மொத்தம் 50.00 இலட்சம் ரூபாய் ஊராட்சி ஒன்றிய உபரி நிதி யிலிருந்து செலவிடப்பட்டுள்ளது.

நிதி வசதி குறைவாயுள்ள ஒரு சில ஊராட்சி ஒன்றியங்களைத் தவிர மற்ற ஒன்றியங்களில் மொத்தம் 1,389 பணிகள் 910 இலட்சம் ரூபாய்க்கு மேற்கொள்ளப் பட்டுள்ளன.

பேரூராட்சிகளில் வளர்ச்சிப் பணிகள்

1995-96-ஆம் ஆண்டு பேரூராட்சிப் பொது நிதியிலிருந்து 19 பேரூராட்சிகளில் 615 எண்ணிக்கை வேலைகள் ரூ.146.876 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 15 பேரூராட்சிகளில் 445 தொகுப்பு வீடுகள் ரூ.98.165 மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

மாவட்ட பரவலாக்கப்பட்டத் திட்டத்தின் கீழ் 12 பேரூராட்சிகளில் 18 வேலைகள் ரூ.15.128 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் 16 பேரூராட்சிகளில் 37 பணிகள் ரூ.32.160 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

அந்தியூர் பேரூராட்சியில் பகுதி 2 திட்டத்தின் கீழ் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டணக் கழிப்பிடம் கட்டும் பணி அனுமதிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

பேரூராட்சி அடிப்படை வசதிகள் மேம்பாடு திட்டத்தின் கீழ் 845 பணிகள் ரூ.234.850 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு நடை பெற்று வருகிறது.

தூசிபடியாச் சாலைகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

விரிவாக்கப் பகுதிகளில் புதிய தெரு மின் விளக்குகள் அமைக்கும் திட்டத்தில் 14 பேரூராட்சிகளுக்கு 140 புதிய தெரு மின் விளக்குகள் அமைக்க ரூ.5.100 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

முத்தூர் பேரூராட்சியில் ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.10.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டும் பணி நடப்பு (1995-96-இல்) தொடங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

வறட்சி நிவாரணத் திட்டம்

411 புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கவும், 158 மாற்று ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க ரூ.256.05 இலட்சமும், 237 குழாய் விரிவாக்கம் செய்ய ரூ.157.40 இலட்சமும், 194 காற்றழுத்த மின்மோட்டார் பொருத்துதல் ரூ.148.39 இலட்சமும், 3 தனி மின்பாதை அமைக்க ரூ.30.00 இலட்சம், ஆக, கூடுதலாக மொத்தம், 1,003 பணிகளுக்கு ரூ.591.84 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொட்டதெல்லாம் துலங்கும், கண் பட்டதெல்லாம் விளங்கும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் நல்லாட்சியில், எந்தத் திட்டத்தையும் இன்முகத்தோடு வரவேற்று, இடைவிடாது செயல் படுத்துவதால் எல்லா விருதுகளும் விரும்பி வரும் இடம் பெரியார் மாவட்டமாக விளங்குகிறது என்றே கூறலாம்.

பரிசு குவிக்கும் பெரியார் மாவட்டம்

1994-95-ஆம் ஆண்டிற்கு பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப., அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடமிருந்து ஐந்து பரிசுகளைப் பெற்று பெரியார் மாவட்டத்தைத் தமிழகத்தில் ஓர் முன்னோடி மாவட்டமாகத் திகழச் செய்துள்ளார்.

இருபது அம்சத் திட்டத்திற்கான முதல் பரிசு

இத்திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு, 150 சதவிகித சாதனைப் படைத்துப் பெரியார் மாவட்டம் முன்னிலையில் உள்ளது.

குடும்ப நலத்திட்டத்திற்கான முதல் பரிசு

குறியீட்டைத் தாண்டி சாதனை படைக்கப்பட்டு பரிசு பெறப்பட்டுள்ளது.

சிறுசேமிப்புக்கான பரிசு

சிறுசேமிப்பு வசூலில் பெரியார் மாவட்டம் சாதனை படைத்து பரிசு பெற்றுள்ளது.

டாக்டர் ஜெ.ஜெயலலிதா 15 அம்சக் குழந்தைகள் நலத் திட்டம்

இத்திட்டத்தை முழுமையாக வெற்றியடையச் செய்தமைக்கு கேடயம் பெறப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் இதர யுனிசெப் திட்டங்களுக்கானப் பரிசு

யுனிசெப் வல்லுநர்களின் கேடயத்தினைப் பெற்றுள்ளது.

மால்கம் ஆதிசேய்யா விருது

அறிவொளி இயக்கத்தினை செயல்படுத்தியமைக்காக வழங்கப்பட்டுள்ளது.

பெரியார் மாவட்டம்



பெரியார் மாவட்டம்- ஒரு கண்ணோட்டம்

பெரியார் மாவட்டமானது கோவை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு, ஈரோடு நகரைத் தலைநகரமாகக் கொண்டு 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17-ஆம் தேதி முதல் செயல்பட்டு வருகிறது.

இந்த மாவட்டம் தெற்கில் திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தையும், கிழக்கில் திருச்சி, சேலம் மாவட்டங்களையும், மேற்கில் கோவை மாவட்டம் மற்றும் கர்நாடக மாநிலத்தையும் எல்லையாகக் கொண்டுள்ளது.

இந்த மாவட்டத்தின் முதல் ஆட்சியராக திரு வே. லட்சுமிரதன், இ.ஆ.ப., அவர்கள் 17.9.1979 முதல் 28.5.89 வரை பணியாற்றியுள்ளார்.

மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவு 8,179 சதுர கி.மீ.

காடுகளின் பரப்பளவு 2,32,827 எக்டேர்.

சராசரி மழை அளவு 717 மி.மீட்டர்.

வருவாய்க் கோட்டங்கள் 3. ஈரோடு, தாராபுரம், கோபி செட்டிபாளையம்.

வருவாய் வட்டங்கள் 7. ஈரோடு, பெருந்துறை, தாராபுரம், காங்கேயம், கோபிசெட்டிபாளையம், சத்தியமங்கலம் மற்றும் பவானி.

வருவாய்க் கிராமங்கள் 510, ஊராட்சி ஒன்றியங்கள் 20, பேருராட்சிகள் 61, கிராம ஊராட்சிகள் 340.

நகராட்சிகள் 6. ஈரோடு, கோபி, பவானி, தாராபுரம், சத்தியமங்கலம், பவானிசாகர்.

மக்கள் தொகை 1991-ஆம் ஆண்டு கணக்குப்படி 23,22,851.

இதில் ஆண்கள் 11,84,841, பெண்கள் 11,38,010, ஆதி திராவிட வகுப்பினர் 3,98,123, ஆதிதிராவிட பழங்குடியினர் 19,194, கல்லூரிகள் 5, தொழில்நுட்பக் கல்லூரிகள் 5, மேல்நிலைப் பள்ளிகள் 53, சத்துணவு மையங்கள் 2872.

ஈரோட்டுப் பெயர்க் காரணம்

ஈரோடு தொல் பழங்காலத்திலேயே மக்கள் சீரோடு வாழ்ந்த ஓர் இடமாக இருந்து வந்திருக்கிறது. சோழர்கள் காலத்தில் இப்பகுதி மூவேந்த சோழச் சதுர்மங்கலம் என்று அழைக்கப்பட்டு வந்துள்ளது. பெரும்பள்ளம், பிச்சைக்காரன் பள்ளம் என்ற இரண்டு ஓடைகளின் இடையே அமைந்துள்ள காரணத்தால், ஈரோடை என்ற பெயர் வந்து, நாளடைவில் ஈரோடு என்று ஆயிற்று.

- புலவர் செ. இராசு

பெரியார் மாவட்டத்திலுள்ள நீர்த்தேக்கங்கள்

பவானிசாகர்

உப்பாறு

காலிங்கராயன் நீர்த்தேக்கம்

கொடிவேரி

பவானி கூடுதுறை

ஜோடர்பாளையம்

கொரட்டுப்பள்ளம்

உலகில் மனிதன் மற்ற உயிரினங்களைவிடச் சிறந்தவனாகக் கருதப்படுவதற்குக் காரணம், அவன் எல்லையற்ற அறிவுச் சக்தி பெற்றிருப்பது தான். மற்ற நாட்டு மனிதன் இந்த அறிவைப் பயன்படுத்தி மிகமிக முன்னேறிக் கொண்டு வருகிறான். ஆனால், இந்த நாட்டு மனிதனோ, அந்த அறிவினைப் பயன்படுத்தாத காரணத்தினால் மிகமிகப் பின்னுக்குப் போய்க் கொண்டிருக்கிறான்.



பெரும்புகழ் பெற்ற பெரியார் மாவட்டத் திருக்கோயில்கள்

பெரிய மாரியம்மன்

ஈரோடு நகரத்திலிருந்து கோயம்புத்தூர் செல்லும் நெடுஞ்சாலைத் தொடக்கத்தில், வடக்கு நோக்கியபடி உருவாகியுள்ளது அருள்மிகு பெரிய மாரியம்மன் திருக்கோயில். இத்துடன் சின்ன மாரியம்மன், புது மாரியம்மன் ஆகிய கோயில்களும் இணைந்துள்ளன.

இங்கே இருபது நாட்கள் நடைபெறும் பங்குனித் திருவிழா பிரசித்தி பெற்றதாகும்.

கொங்கலம்மன்

ஈரோடு வட்டத்தில் உள்ள வற்றில் சந்தை அருகே உள்ளது அருள்மிகு கொங்கலம்மன் திருக்கோயில். பத்ரகாளி போல் விளங்குகிறது விக்கிரகம்.

17ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது இக்கோயில் என்கிறது வரலாறு. கொங்குநாட்டு மக்களுக்கு அருள்பாலிக்கும் அம்மன் ஆதலால், கொங்கலம்மன் என்னும் பெயர் கொண்டு விளங்குவதாகக் கூறப்படுகின்றது.

மகுடேசுவரர்

ஈரோடு வட்டம் கொடுமுடியில் அருள்மிகு மகுடேசுவரர் அருள்மிகு வீர நாராயணப் பெருமாள் திருக்கோயில்கள் உள்ளன.

★ மாறுதலைக் கண்டு அஞ்சாமல், அறிவுடைமையோடும், ஆண்மையோடும் நின்று எதையும் நன்றாய் ஆராய்ச்சி செய்து, காலத்திற்கும் அவசியத்திற்கும் தக்க வண்ணம் தள்ளுவன தள்ளிக் கூட்டுவன கூட்டித் திருத்தம் செய்ய வேண்டியது பகுத்தறிவுடைய மனிதனின் இன்றியமையாத கடமையாகும்.

—தந்தை பெரியார்

ஈரோட்டிலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இக்கோயிலில் சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகிய மும்மூர்த்திகள் எழுந்தருளியுள்ளனர். மூர்த்தி, தலம், தீர்த்தம் காவிரி என்ற மூவகைச் சிறப்பும் கொண்ட இத்தலம் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், அருணகிரியார் ஆகியோரால் பாடல்பெற்ற திருத்தலம் ஆகும்.

வரதராஜப் பெருமாள்

அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயில், கொடுமுடிக்கு வடக்கே 2 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இத்துடன் அருள்மிகு சோளீசுவரர், அருள்மிகு அங்காள பரமேசுவரி, அருள்மிகு பொன் காளியம்மன் திருக்கோயில்களும் சேர்ந்தே இருக்கின்றன.

காவிரிக்குக் கரையமைத்த கரிகாற் சோழனால் இக்கோயில்கள் எழுப்பப்பட்டதாகத் தெரிகிறது.

சுப்பிரமணிய சுவாமி

பெருந்துறை வட்டத்தில் உள்ள சென்னி மலையில் எழுந்தருளியுள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் புகழ்பெற்றதாகும். ஈரோட்டிலிருந்து தாராபுரம் நெடுஞ்சாலையில் 30வது கிலோமீட்டரில் கடல் மட்டத்திலிருந்து 1,749 அடி உயரே உள்ள கோயில் இது.

அருணகிரிநாதர் போன்றோரால் பாடப்பெற்ற இக்கோயிலுக்கு வந்து வழிபடுவோருக்குப் பிள்ளைப்பேறு கிட்டும் என்று சொல்லப்படுகிறது. கீழேயிருந்து மேலே கோயிலுக்குப் போகத் தனியே ஒரு தார்ச்சாலை உண்டு; எனினும் 1,320 திருப்படிகளும் அமைக்கப்பட்டுள்ளன. தைப் பூசம், பங்குனி உத்திரம் ஆகிய நாட்களில் இங்கே சிறப்புற விழா நடத்தப்படுகிறது.

மலையடிவாரத்தில் திருமண மண்டபம் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது.

சிவன்மலை

காங்கேயம் திருப்பூர் நெடுஞ்சாலையில், ஐந்தாவது கிலோமீட்டரில் இருக்கிறது சிவன் மலை. இது, பதினெண் சித்தர்களில் ஒருவரான சிவவாக்கியர் என்பாரால் நிறுவப்பட்ட திருத்தலம் எனப்படுகிறது. இங்குள்ள அருள்மிகு முருகப் பெருமான், அருணகிரியாரால் பாடப் பெற்றவன்.

இக்கோயில், கடல் மட்டத்திலிருந்து சுமார் 400 அடி உயரத்தில் இருக்கின்றது.

பண்ணாரி மாரியம்மன்

பவானியாற்றின் வடகரையில், சத்தியமங்கலத்திலிருந்து மைசூர் செல்லும் சாலையில், 14 கிலோமீட்டர் தொலைவில் உள்ள காட்டுப் பகுதியில் அமைந்திருக்கின்றது, அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில்.

பங்குனி மாதத்தில், இக்கோயில் திருவிழா சிறப்புற நடைபெறும். இவ்விழாவினுக்குத் தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்ல; கர்நாடக மக்களும் திரண்டு வந்து கொண்டாடி மகிழ்வதுண்டு.

கொண்டத்துக் காளியம்மன்

கோபிசெட்டிப்பாளையம் அந்தியூர் சாலையில் பாரியூரில் உள்ளது அருள்மிகு கொண்டத்துக் காளியம்மன் திருக்கோயில். இங்கே மார்கழி மாதத்தில் நடைபெறுகின்ற 'குண்டம் தேர்த் திருவிழா' மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுவதாகும்.

அருள்மிகு பத்ரகாளியம்மன் கொண்டத்துக் காளியம்மனாகக் காட்சி தரும் இத்திருக்கோயிலில் திங்கள், செவ்வாய், வெள்ளி ஆகிய கிழமைகளில் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது.

பவானி சங்கமேஸ்வரர் திருக்கோயில்

S.K.T. PACKAGING INDUSTRIALS

S.K.T. POLY BAGS

S.K.T. PAPER PRODUCT

KAMARAJ NAGAR,
BHAVANI - 638 302

Phone: 20708

MFRS.:
HM, HD, PE, LLD, BAGS, ROLLS, SHEETS, PLAIN WITH 4 & 8 COLOUR PRINTING, SHOPPING BAGS, PAPER BAGS, ETC.,

M/s. NALLAM TEXTILES (P) LTD.,

Vellamadai, Olapalayam (P.O),
Kangayam
PERIYAR DISTRICT

SIVASAKTHI FOOD PRODUCTS

125-A, Coimbatore Road,
Vellakovil
PERIYAR DISTRICT

CHAMUNDI Food Products

125-B, Coimbatore Road,
Vellakovil
PERIYAR DISTRICT

கிராம மகளிருக்கு வேளாண் தொழில் நுட்பம் பெரியார் மாவட்டத்தில் வெற்றிச் செயலாக்கம்!

விவசாயத்தில் ஈடுபடுகின்ற மகளிருக்கு நவீன வேளாண் தொழில் நுட்பங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றது.

'ஆணுக்குப் பெண் இங்கே இளைப்பில்லை' என்பது மட்டு மில்லை; அவர்கள் 'ஆண்களை விட ஒருபடி மேலே' என்கின்ற வகையில் அறிவும் தெளிவும் பெற்று விளங்கிட வேண்டும் என்ற தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பெருநோக்கை மெய்யாக்குகின்ற அரிய திட்டமான பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம், பெரியார் மாவட்டத்தில் மிகவும் சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

பெரியார் மாவட்டத்தில், ஈரோடு, கோபி, தாராபுரம் ஆகிய மூன்று கோட்டங்களில் பண்ணை மகளிர் பயிற்சி தற்போது அளிக்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு கோட்டத்திலும் மூன்று வேளாண்மை அலுவலர்கள் கொண்ட குழு பயிற்சி அளிக்கின்றது. பயிற்சி பெறுபவர்கள் அனைவரும் பெண்கள்; அதுவும் கிராமப்புறப் பெண்கள் என்பதால், எவ்விதத் தயக்கமும் இன்றி, அவர்கள் பயிற்சிக்கு வரவேண்டும் என்று இத்திட்டப் பணிக்கு முழுக்க முழுக்கப் பெண் வேளாண்மை அலுவலர்களே நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.

ஒரு குழுவுக்கு 25 பேர் என்ற கணக்கில் 25 வயது முதல் 45 வயதுடைய திருமணமான பெண்கள் சேர்க்கப்பட்டு, ஆண்டுக்கு ஒரு கோட்டத்திற்கு 9 குழுக்களுக்குப் பயிற்சி அளிக்கப் படுகிறது. ஆக, மூன்று கோட்டங் களுக்கும் சேர்த்து மொத்தம் 27 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட உள்ளன. பெரியார் மாவட்டத் தில், இந்த ஆண்டு பயிற்சி பெறும் மகளிரின் எண்ணிக்கை 675 ஆகும்.

பண்ணை மகளிர் பயிற்சித் திட்டத்திற்குக் கிராமப்புறப் பெண்கள் மத்தியில் ஆதரவு எப்படியிருக்கிறது என்ற கேள்விக்கு வெகு உற்சாகத்

வீரராஜன் சித்தர் சமாதி இங்கே தான் இருக்கின்றது.

சங்கமேசுவரர்

ஈரோடு மேட்டூர் சாலையில், பவானி ஆறும் காவிரியாறும் கூடும் துறையில் அமைந்திருக்கிறது, அருள்மிகு சங்கமேசுவரர் திருக்கோயில். இலந்தை மரம் இக்கோயிலின் தலவிருட்சமாகும். ஆறுகால பூஜை நடைபெறும் இக்கோயில் திருஞான சம்பந்தராலும், அருணகிரி நாதராலும் பாடல் பெற்றதாகும்.

பண்ணாரியம்மன் திருக்கோயிலின் ஒரு தோற்றம்

பவானி சங்கமேசுவரர் திருக்கோயில் படத்தோடு அஞ்சல் தலையொன்றும் மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ளது. வேத நாயகி சமேதராக இங்கே சங்கமேசுவரர் காட்சி தருகிறார்.

வீர குமாரசுவாமி

கோவை திருச்சி நெடுஞ் சாலையில், தாராபுரம் வட்டம் வெள்ளக் கோயிலில் விளங்குகின்றது அருள்மிகு வீரக் குமாரசுவாமி திருக்கோயில். இங்கே எழுந்தருளியுள்ள மூலவர் அருள்மிகு வீரக் குமரன், பதினெண் சித்தர்களால், பாங்குற உருவாக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். கருங்கடம்பு மரம், இக்கோயிலின் தலவிருட்சம் ஆகும்.

இக்கோயிலில், பெண்கள் சென்று வழிபடுவதில்லை. மகா சிவராத்திரி தொடங்கி 12 நாட்கள் இங்கே கோலாகலமாகத் திருவிழா நடத்தப் பெறுகிறது. தை, ஆடி, அமாவாசைகளும் விழா வெடுக்கும் காலங்களாகும். கருங்கடம்ப மரம் இக்கோயில் தலவிருட்சமாகும்.



பத்ரகாளியம்மன்

பெருந்துறை வட்டத்தில் உள்ள குன்னத்தூரில் இருக்கும் ஆதியூர் வெள்ளியம்பதி பசுஞ்சோலை நடுவே அருள்மிகு பத்திரகாளியம்மன் முரசன் சாமி கொண்டத்து பத்ரகாளி அம்மன் ஆகிய சந்நிதிகளோடு அமைந்துள்ளது இக்கோயில்.

இந்த ஆலயத்தில் 48 நாட்கள் தங்கி மனநோய், சித்தப்பிரமை பிடித்தவர்கள் வழிபாடு செய்தால் நலம்பெறலாம் என்று கூறப்படுகிறது. இக்கோயிலில் நடைபெறும் செவ்வாய் வழிபாடும், அமாவாசை வழிபாடும் சிறப்புடையதாகும். ஆவணி பௌர்ணமியில் இக்கோயில் திருவிழா மகத்தான அளவில் கொண்டாடப்படுகிறது. தொரட்டி மரம், இக்கோயிலின் தலவிருட்சமாகும்.

–பி.எல்.ஆர்.

போன்: 22052

நல்வாழ்த்துக்கள்

சரவணா தியேட்டர்

கபிலர் வீதி
கோபிசெட்டிபாளையம் 638 452
பெரியார் மாவட்டம்

எங்களது நல்வாழ்த்துக்கள்

விஸ்வா நன்னீர் இறால் தீவனங்கள்

கிரம்பளா - I
கிரம்பளா - II
கிரம்பளா - III
பெல்லட் - 25 mm

தயாரிப்பாளர்கள்:

விஸ்வா அக்ரோ எண்டர்பிரைசஸ் லிமிடெட்

41, மில் ரோடு
கோபிசெட்டிபாளையம் 638 476
தொலைபேசி: எண்கள் 23235, 22593
22493, 23344

TNGST No.155 - 29610704
CST No. 600695

துடன் பதில் அளித்தார், ஈரோடு கோட்டத்தில் பண்ணை மகளிர் பயிற்சி அளிக்கும் வேளாண்மை அலுவலரான திருமதி க. தமிழ்ச்செல்வி. பயிற்சிக்கு வருவதில் மகளிர் காட்டுகின்ற ஆர்வத்தையும், பயிற்சி பெறுவதில் அவர்கள் காட்டுகின்ற ஊக்கத்தையும் நமக்குக் காட்டுகின்ற கண்ணாடியாக வேளாண்மை அலுவலரின் உற்சாகப் பெருக்கு இருந்தது.

அது உண்மைதான் என்பதைப் பண்ணை மகளிர் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்ட 'சித்தோடு' என்னும் ஊருக்குச் சென்ற போது கண்கூடாகக் கண்டோம். வேளாண்மை அலுவலரைக் கண்டதும் 'டான்வா, டான்வா' என்று குரல் கொடுத்தபடி, மழலைச் செல்வங்கள் வீட்டின் உள்ளே சென்று தங்கள் அன்னைமார்களை அழைத்து வந்ததும், முகமகிழ்வுடன் தங்களது பயிற்சியைப் பற்றி அவர்கள் உரையாடல் செய்ததும் அவர்கள் எவ்வளவு ஒரு மன விருப்பத்துடன் இப்பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைத் தெள்ளெனக் காட்டியது பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம் என்பதன் ஆங்கில முதலெழுத்துக் குறுக்கமே TANWA

பண்ணை மகளிர் விவசாயத் தொழில் நுட்பங்களை எவ்வாறு அறிந்து கொள்கின்றனர்?

திட்டத்தைச் செயல்படுத்தும் வேளாண்மை அலுவலர்கள் பயிற்சி பெற்ற விவசாயப் பட்டதாரிகள். அதிலும் எண்ணியதைத் திண்ணமென முடிக்கும் பெண்மணிகள். அவர்கள் கிராமப்புறங்களுக்குச் சென்று, அங்கேயே பயிற்சிக்குழு உருவாக்கி, அவசரமின்றி, பொறுமையோடு, நேரடியாக அந்தப் பகுதிக்கு ஏற்ற விவசாயத் தொழில் நுட்பங்களைப் பாடமாகக் கற்பிப்பதுடன், செயல் விளக்கமாகப் பயிற்சி பெறுபவர்களைச் செய்து காட்டச் சொல்லி, பயிற்சி அளிக்கின்றனர்.

பயிற்சியில் நடத்தப்படும் பாடங்கள் என்னென்ன?

☆ உரச் செலவுகளைக் குறைத்திட மண் வளத்தினை அறியும் வகையில், மண் பரிசோதனை செய்திட, மண் மாதிரி எடுத்தல்.

☆ பதரான பொக்கு விதைகளை நீக்கவும், நோயற்ற தரமான நாற்றுகள் பெற்றிடவும், முளைப்புத் திறனை அதிகரித்து கூடுதல் மகசூல் பெறவும் நெல் நல் விதைத் தேர்வு செய்தல்.

☆ விதை மூலம் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்தவும், வளமான நாற்றுக்களைப் பெறவும் பூஞ்சான விதை நேர்த்தி செய்தல்.

☆ காற்றிலுள்ள தழைச்சத்தைப் பயிருக்குக் கிடைக்கச் செய்யவும், அதிக வேர் வளர்ச்சி பெறவும், வறட்சியைத் தாங்கி அதிக மகசூல் தரவும் உயிர் உரமிடுதல்.

☆ துத்தநாகச் சத்துப் பற்றாக் குறையைப் போக்கி, பயிர் கரைவதையும், வெளுப்பாக இருப்பதையும் தடுத்திட நெல் வயலுக்கு ஜிங் சல்பேட் இடுதல்.

☆ கூடுதல் மகசூல் பெற பயிர் எண்ணிக்கையைப் பராமரித்தல் .

☆ களைகளை ஆரம்ப நிலையிலேயே கட்டுப்படுத்தவும், வயலுக்கு இடப்படும் நீரையும் பிற உரங்களையும் பயிரே முழுமையாகப் பெற்றிடவும் களைக் கொல்லி இடுதல்.

☆ மேலுரம் இடும்போது அதிலிருக்கும் தழைச்சத்து ஆவியாகியோ, தண்ணீரில் கரைந்தோ போகாமல் தடுக்க யூரியாவுடன் வேப்பம் புண்ணாக்கு கலந்து இடுதல்.

☆ வாளிப்பான நிலக்கடலை பெற்றிட, பயிருக்குச் சுண்ணாம்புச் சத்து கிடைத்திட ஜிப்சம் இடுதல்.

☆ மஞ்சள் விதைக் கிழங்குகளைப் பூஞ்சான நேர்த்தி செய்தல்.

☆ பருத்தி அமிலவிதை நேர்த்தி செய்தல்.

☆ தென்னைக்கு உரமிடல்.

ஆகிய பாடங்கள் 5 நாட்கள் தொடர்ந்து நடைபெறும் கிராமப்புறப் பயிற்சியில் நடத்தப் படுகின்றன.

அடுத்து 2 நாட்கள் நடக்கும் சிறப்புப் பயிற்சியில் மாடுகளுக்குத் தேவையான அடர் மற்றும் கலப்புத் தீவனம் தயாரித்தல், பசுந்தீவனம் தயாரித்தல், சிப்பிக்காளான் வளர்த்தல், கூழ்முட்டைகளைக் கண்டுபிடித்தல், கோழித் தீவனமாக கரையான் உற்பத்தி செய்தல் ஆகிய பாடங்கள் செயல் விளக்கத்துடன் சொல்லித் தரப்படுகின்றன.

பின் பண்ணை மகளிர் பயிற்சி மாநாடு' நடத்தப்பட்டு எஞ்சிய சந்தேகங்கள் பொதுவாகத் தீர்த்து வைக்கப்படுகின்றன.

பயிற்சி வகுப்பில் செயல் விளக்கம் பெறுவதில் ஏதும் சிரமம் உண்டா?

சிறிதும் இல்லை. மூன்று பெண் வேளாண்மை அலுவலர்கள் இருப்பதால், பயிற்சி பெறும் 25 பெண்களும் மூன்று சிறு குழுக்களாகப் பிரித்து செயல் விளக்கம் அளிக்கப் படுவதுடன் பயிற்சியாளர்கள், ஒவ்வொரு பாடத்தையும் செயல் முறைப் பயிற்சி செய்து காட்டச் சொல்லி சந்தேகங்கள் தீர்த்து வைக்கப்படுகின்றன.

இவ்வளவு ஆர்வத்தோடும், ஊக்கத்தோடும் பயிற்சி வகுப்பில் பங்கு கொள்ளும் பெண்கள், தாங்கள் பெற்ற பயிற்சியைக் கற்ற பாடத்தைத் தங்களது வயல்களில் எந்த அளவு பயன்படுத்துகிறார்கள் எனச் சில பெண்களிடம் வினவினோம்.

சித்தோடு பகுதி குமிளம் பரப்புக் கிராமம் உருமங் காட்டைச் சார்ந்த திருமதி சம்பூர்ணம், தான் பெற்ற பயிற்சி பற்றிக் கூறியதாவது:

"வேளாண்மை அலுவலர் சொல்லித் தந்த பாடங்கள் எல்லாவற்றையும் ரொம்ப மகிழ்ச்சியாகக் கற்றுக் கொண்டேன். குறைந்த செலவில் நிறைந்த மகசூல் பெற, பல விதமான தொழில் நுட்பங்கள் எனக்குத் தெரியும் என்ற நினைப்பே எனக்கு ஒரு தன்னம்பிக்கையைக் கொடுக்கிறது. எனக்கு 2 3/4 ஏக்கர் நிலம் இருக்கிறது. நான் படித்த பத்து பாடங்களில், நெற்பயிர் சாகுபடிக்குரிய பயிற்சிகளைப் பயன்படுத்தி நெல் நடவு செய்திருக்கிறேன். பக்கத்துக் காட்டை விட என்னுடைய பயிர் நன்றாக வந்திருக்கிறது என்று பார்க்கிறவர்கள் கூட சொல்கிறார்கள்" என்று கூறினார் திருமதி சம்பூரணம். இவர் கூறிய அனைத்தையும் முகத்தில் மகிழ்ச்சி பொங்க ஒப்புக் கொண்டார், இவரது கணவர் திரு புஷ்பணன்.

சம்பூர்ணம்

கொட்டையாம்பாளையம் கிராமத்தைச் சார்ந்த குப்பு

லட்சுமி, பயிற்சி வகுப்பில் சொல்லித் தந்த முறைகளின்படி, தன் வீட்டுத் தோட்டத்திலுள்ள அனைத்துத் தென்னை மரங்களுக்கும் தானே நேரடியாக உரம் வைத்தேன் என்று சாதனை பொங்கிப் பரவும் புன்னகை முகத்துடன் தெரிவித்துவிட்டு, 10, 15 ஆண்டுளாகக் காய்ப்பே காணாத அந்த மரங்கள் நல்ல குரும்பைப் பிடித்து, காய்ப்பு காட்டத் தொடங்கியிருக்கின்றன, என்று பெருமையுடன் தெரிவித்தார்.



குடும்பத்துடன் கௌசல்யா

குப்புலட்சுமி

அதே ஊரைச் சார்ந்த கௌசல்யா என்ற பெண்மணிக்கோ பெருவருத்தம். தான் கற்ற பாடங்களையெல்லாம் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கி சாதனை படைத்துக்காட்ட விரும்பியிருந்தார் கௌசல்யா. ஆனால், தனது கணவர் திரு அண்ணாமலை அவர்களின் உடல்நலக் குறைவால், நிலத்தைக் குத்தகைச் சாகுபடிக்குக் கொடுக்கும்படியான சூழ்நிலை. ஆனால், எப்படியும் அடுத்த பருவத்தில், தான் கற்ற பாடங்களுடன் நெல் நடவு செய்து பெருமை படைப்பேன் என்று உறுதிபடக் கூறினார் திருமதி கௌசல்யா.

நிலத்தைக் குத்தகை சாகுபடிக்கு விட்டாலும், தான் சிறப்புப் பயிற்சியில் கற்ற மற்ற பாடங்களைக் கௌசல்யா மறந்துவிடவில்லை. தான் பெற்ற பயிற்சியில் உணவுக் காளான் வளர்ப்பதோடு, கால்நடைகளுக்குத் தேவையான பசுந்தீவனங்களைத் தயாரித்துப் பயன்பெற்று வருகின்றார்.

கிராமப்புற மகளிரிடையே புதைந்து கிடக்கும் திறமைகளையும், சோர்வறியா அவர்களது செயல்திறனையும், ஆளுகைத் தன்மையையும் வெளிக் கொணர்வதுடன், நாட்டின் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கி, மகளிரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் திட்டமான பண்ணை மகளிர் பயிற்சித் திட்டம், பெரியார் மாவட்டத்தில் ஒரு மாபெரும் வெற்றித் திட்டமாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

இத்தகையதொரு நல்ல திட்டத்தை வகுத்துத் தந்து, தங்களது வளமான வாழ்வுக்குச் செயலாற்றி வரும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை மனமுவந்து நன்றியுடன், பெரியார்மாவட்டக் கிராமப்புறப் பெண்கள் மகிழ்ந்து கொண்டாடுகின்றனர்.

இவ்வெற்றியின் பயனாய், பெரியார் மாவட்டத்தில், கி.பி.2001-ஆம் ஆண்டு இறுதியில், பல்லாயிரக்கணக்கான பெண்கள் பண்ணை மகளிர் பயிற்சி பெற்று, விவசாயத் தொழில் நுட்பங்களில் கைதேர்ந்து, விவசாய உற்பத்தியிலும், அதன் ஆக்கபூர்வமான பணிகளில் பெண்கள் பங்கேற்றுச் செயல்படும் சீரிய பாங்கிலும், தமிழகத்திலேயே முதல் மாவட்டமாக நிற்கும் என்பதில் ஐயமில்லை.

நல்வாழ்த்துக்கள்
SKM வழங்கும் பண்ணை உபகரணங்கள்!
குஞ்சுப் பருவ, வளர் பருவ,
முட்டைப் பருவக் கோழிக் கூண்டுகள்
விபரங்களுக்கு:
SKM பார்ம் எஞ்சினீரிங் பிரைவேட் லிமிடெட்.,
சாவடிப்பாளையம் புதூர் ரோடு, நஞ்சை ஊத்துக்குளி (Post)
மொடக்குறிச்சி 638 104
போன்: 0424 - 500211- 13, 500451 & 500453

நல்வாழ்த்துக்கள்
'தமிழரசு' இதழுக்கு
எங்களது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்
SREE VALLI THEATRE
NANJAPPA STREET
GOBICHETTIPALAYAM 638 452
PERIYAR DISTRICT
Phone: 22668

With Best Compliments From

Centre For Entrepreneur Development

Head Office:
CED - SIPPO CAMPUS
No.4, T.B. Road,
Madurai 625 010
Phone: 0452 - 602388
Telex: 0445 - 310 SSP IN
Fax: 091 - 452 - 602455

Branch Office:
143 - C, Brough Road,
(Near sivaranjani Hotel)
Erode 638 001
Phone: 76172, 72896 PP

நல்வாழ்த்துக்கள்

பெரியார் மாவட்ட ஆதிதிராவிடர் ஆட்டோ ஒட்டுநர் தொழிற் கூட்டுறவுச் சங்கம் லிட்.,

இண்ட். எண் 1889

460, நல்லப்பன் பில்டிங் கீழ்த்தளம்
ஈ.வி.என். சாலை, ஈரோடு 638 009

இந்து ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த ஆட்டோ ஓட்டுநர் உரிமம் உள்ள சொந்தமாக ஆட்டோ இல்லாத வறுமைக் கோட்டில் உள்ளவர்களுக்கு, இச்சங்கத்தின் மூலம் கடன் தவணை முறையில் ஆட்டோ ரிக்ஷா வழங்கப்படும். விவரங்களுக்குச் சங்கத்தை அணுகவும்.

பெரியார் மாவட்ட டாக்டர் புரட்சித்தலைவி ஆட்டோ ஒட்டுநர் தொழிற் கூட்டுறவுச் சங்கம் லிட்.,

இண்ட். எண். 1886

202, மேட்டூர் ரோடு, ஈரோடு 638 099

சொந்தமாக ஆட்டோ இல்லாமல் உள்ள பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் ஆட்டோ ஓட்டுநர் உரிமம் உள்ள வறுமைக்கோட்டில் வாழ்பவர்களுக்கு இச்சங்கம் மூலம் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் தவணை முறையில் ஆட்டோ ரிக்ஷா வழங்கப்படும். பயன் பெற விரும்புவோர் சங்கத்தை அணுகவும்.

இங்ஙனம்
தலைவர்

நல்வாழ்த்துக்கள்

தமிழ்நாடு இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி I.T.I.

151, பவானி மெயின் ரோடு,
அசோகபுரம் (பெட்ரோல் பங்க்)
ஈரோடு 638 004

மத்திய அரசு அங்கீகார எண் 11907/AFF 13/93
தமிழக அரசு அங்கீகார எண் 16295292

மத்திய, மாநில அரசு அங்கீகாரம் பெற்ற
NCVT - ITI பயிற்சிகள்

தொழிற் பிரிவுகள்	பயிற்சி காலம்	கல்வித் தகுதி
1. மோட்டார் வாகன NCVT மெக்கானிக் MMV	2 வருடங்கள்	SSLC பாஸ்/பெயில்
2. எலக்ட்ரீசியன் NCVT	2 வருடங்கள்	SSLC பாஸ்
3. DPCS கம்ப்யூட்டர் NCVT	1 வருடம்	HSC பாஸ்
4. ஆடியோ மெக்கானிக் SCVT	1 வருடம்	SSLC பாஸ்

☆ சிறந்த ஹாஸ்டல் வசதி உண்டு (விடுதி இலவசம்)
☆ NCVT-ITI பயிற்சிகளை வெற்றிகரமாக முடிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு அரசு ITI இல் வழங்கப்படும் அரசு சான்றிதழ்களே வழங்கப்படும்.
☆ அரசு ஸ்காலர்ஷிப், ஸ்டைபண்டு, பஸ் பாஸ் உண்டு.

நல்வாழ்த்துக்கள்

ஈரோடு துணி பதனிடுவோர் தொழிற் கூட்டுறவுச் சங்கம் லிட்.,

இண்ட் எண் 1737

6, டாக்டர் ராதாகிருஷ்ணன் தெரு,
டீச்சர்ஸ் காலனி, ஈரோடு 638 011.

எங்கள் சங்கத்தில் தரமான கைத்தறி மற்றும் விசைத்தறி ஜவுளி ரகங்கள் கிடைக்கும். தேவைக்கு அணுகவும்.

இங்ஙனம்
தனி அலுவலர்

பெரியார் மாவட்டச் சுற்றுலாத் தலங்கள்

● நான்காம் அட்டை சொல்லும் செய்தி:

தந்தை பெரியாரின் புகழ் பேசும் பெரியார் மாவட்டம், வளமையான நிலப்பகுதியும், வற்றாத நீர் வளமும், பச்சைப் பசேல் என்ற வனவளமும், எழுந்தும், விரிந்தும், பரந்தும் கிடக்கும் மலை வளமும், ஒருங்கே அமையப்பெற்ற மாவட்டம். இவ்வளங்களுக்கு மேலும் மெருகூட்டும் வகையில் இப்பகுதியைச் சார்ந்த மக்கள் மென்மையானவர்கள். நல்ல உழைப்பாளிகள். பழகுவதற்கு இனிமையானவர்கள் என்று எல்லோராலும் கருதப்படுபவர்கள். வரலாற்றுக் காலம் தொட்டே சிறப்புப் பெற்ற திருக்கோயில்களும், பழமையான கட்டடங்களும், இன்றும் நிலைத்து நின்று புகழ் பரப்பிக் கொண்டிருக்கின்றன. பெரியார் மாவட்டம் பல துறைகளிலும், வியக்கத் தக்க சாதனைகளை விளைவிப்பது போலச் சுற்றுலா வளர்ச்சியிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது.

பெரியார் மாவட்டத்தில் பவானி சாகர் அணை, கொடிவேரி அணை மற்றும் பவானி கூடுதுறை போன்றவை சிறப்பாகக் கருதப்படும் சுற்றுலாத்தலங்களாகும்.

இன்றைய தமிழ்த்திரைப் படங்களில் கொடிகட்டிப் பறக்கும், வெளிப்புறப் படக் காட்சிகள் பலவும், கோபிசெட்டி பாளையத்தின் வளமான பகுதிகளே என்றால் திரைப்பட ஆர்வலர்கள் மகிழ்வோடு ஏற்றுக் கொள்வார்கள். அந்த அளவுக்குத் தற்போது வெளிவருகின்ற பெரும்பான்மையான திரைப் படங்களில் கோபிசெட்டிப் பாளையத்தையும் அதன் சுற்றுப் பகுதிகளையும், தங்கள் புகைப் படக் கருவிக்குள் அடக்கிக் கொண்டதால், பல புகழ்பெற்ற திரைப்படங்கள் வெற்றியடைந்திருக்கின்றன என்றால் அக்கூற்றும் மிகையல்ல.

பவானிசாகர்

காவிரி ஆற்றின் துணையாறான பவானி ஆற்றில் கட்டப்பட்டுள்ள கீழ்பவானி அணை சிறப்புப் பெற்ற சுற்றுலாத் தலமாக விளங்கி வருகிறது. இவ்வணையையொட்டி அழகிய பூங்கா ஒன்று அமைக்கப்பட்டுச் சுற்றுலாப் பயணிகள் பொழுது போக்கும் வண்ணம் பசுமையாகக் காட்சியளிக்கிறது. பவானிசாகர் அணையைச் சுற்றிலும் உள்ள பசுமையான காட்சிகளும், இயற்கை அன்னை எழில்கொண்டு விளங்கும் மலைப்பகுதிகளும், சுற்றுலாப் பயணிகளை முழுமையாகக்கவரும். இதுதவிர கொடிவேரி அணை, காலிங்கராயன் அணை, உப்பாறு அணை, வறட்டுப்பள்ளம் அணை போன்றவைகளும், சுற்றுலாப் பயணிகளை வெகுவாகத்தன்னகத்தே ஈர்த்துக் கொள்ளும் தன்மை பெற்றன.

கொடிவேரி அணை

கோபிசெட்டிப்பாளையத்தில் சத்தியமங்கலம் சாலையில் அமைந்துள்ள அழகிய கொடிவேரி அணை திரைப்படத் தொழில் நுட்பக்காரர்களைத் தவிர சாதாரணப் பொதுமக்களையும், கவருகின்ற இயற்கை அழகு பெற்றது. நாள்தோறும் நூற்றுக்



பாரியூர் அம்மன் கோயில்



பவானிசாகர் அணை

கணக்கான சுற்றுலாப் பயணிகள் இப்பகுதிக்கு வந்து தங்களுடைய பொழுதை இனிமையாகக் கழிக்கின்றனர். குறிப்பாகத் திரைப் படத் துறையினர் எப்போதுமே இவ்விடத்தைச் சுற்றி வருகின்ற அளவுக்கு, இப்பகுதியின் சிறப்பு எங்கும் பரவியுள்ளது.

பவானி கூடுதுறை

வடநாட்டிலே உள்ள பிரயாகையைப் போல, தென்னாட்டில், பெரியார் மாவட்டத்தில் பவானி கூடுதுறை சிறப்புப் பெற்றுள்ளது. இந்தப் பவானி கூடுதுறையில் காவிரி நதியும், பவானி நதியும், அமுத நதியும் ஒன்றுகூடி முக்கூடல் என்ற சிறப்புப் பெற்றுள்ளது. மேல்கரையில் சங்கமேஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ளது. இவ்வாறு சிறப்புப் பெற்ற பவானி கூடுதுறை ஈரோட்டிலிருந்து 12 கி.மீ. அளவில் அமைந்துள்ளது. ஈரோட்டிற்கு அண்மையில் அமைந்துள்ளதாலும், வரலாற்றுச் சிறப்புப் பெற்றதாலும், எப்போதும் ஏற்ற தட்பவெட்ப நிலை உள்ளதாலும் இக் கூடு துறையில் சுற்றுலாப் பயணிகள் நாள்தோறும் கூடுகிறார்கள்.

பாரியூர்

கோபி வட்டத்துக்குள் சிறப்புப் பெற்ற பாரியூர் அம்மன் திருக்கோயில் சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகும். குறிப்பாகத் தேர்த்திருவிழா, சிவ ராத்திரி திருவிழா, கார்த்திகை தீபத்திருவிழா போன்ற முக்கிய நாட்களில் பொதுமக்கள் ஆயிரக் கணக்கில் கூடி மகிழக்கூடிய இடமாக பாரியூர் விளங்குகிறது. இக்கோயிலை ஒட்டியுள்ள, அமர பணீஸ்வரர் திருக்கோயில் மற்றும் ஆதிநாராயணப் பெருமாள் திருக்கோயில் இரண்டும் 'தமிழ்நாட்டில் வேறெங்கும் இல்லாத வகையில் முழுவதும் வெள்ளைப் பளிங்குக் கற்களால் கலைநயம் மிக்க வேலைப்பாடுகளுடன் சுமார் 75 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டு, ஈரோடு மாவட்டத் திற்கு ஒரு சிறப்பைத் தருகின்ற திருக்கோயிலாக விளங்கி வருகிறது.

பாரியூர் மகாமுனீஸ்வரர்

ஈரோடு வ.உ.சி. பூங்கா

ஈரோடு நகரில் அமைந்துள்ள வ.உ.சி. பூங்கா அருகில் ஒரு சுற்றுலா வளாகம் ரூபாய் நாற்பது இலட்சம் செலவில் அமைப்பதற்கான திட்டம் ஒன்று, செயலாக்கப்பட உள்ளது. இதில், உணவு விடுதி, தங்கும் விடுதி, போன்ற வசதிகள் கொண்டு அமைய உள்ளது.

பெரியார் மாவட்டம் முழுவதுமே எல்லோரையும்

கவரும் வண்ணம், இயற்கை அன்னை சிரித்து மகிழும், இனிமையான மாவட்டம். எங்கு நோக்கினும் பசுமையும் இனிமையும், கலந்து காண்போரைத் தன்னிடத்தே தக்க வைத்துக் கொள்ளும் சிறப்புப் பெற்ற பல பகுதிகளைக் கொண்ட மாவட்டம். பழமைக்குப் பழமையும், புதுமைக்குப் புதுமையும் கொண்டு விளங்கும் மாவட்டம் பெரியார் மாவட்டம்.

St. JOSEPH
INSTITUTE OF COMPUTER INFORMATION TECHNOLOGY
INDUSTRIAL TRAINING INSTITUTE

மத்திய அரசு நிரந்தர அங்கீகார எண் DGET-6/19/1/90-TC, CDI/49292

தமிழக அரசு அங்கீகார எண் 68799, 75640

மத்திய, தமிழக அரசு அங்கீகாரம் பெற்ற

N.C.V.T. - I.T.I. பயிற்சிகள்

1. மோட்டார் மெக்கானிக் (Mechanic Motor Vehicle) - N.C.V.T. - 2 வருடம்
2. எலக்ட்ரிஷியன் (Electrician) N.C.V.T. - 2 வருடம்
3. ஒயர்மேன் (Wireman) - N.C.V.T. 2 வருடம்
4. பிட்டர் (Fitter)- N.C.V.T. - 2 வருடம்
5. டீசல் மெக்கானிக் (Diesel Mechanic) - 1 வருடம்
6. டேட்டா பிரிப்ரேஷன் & கம்ப்யூட்டர் சாப்ட்வேர்-N.C.V.T. - 1 வருடம் (Data Preparation & Computer Software)
7. மெக்கானிக் ஆடியோ (Mechanic Audio)- STATE 1 வருடம்

தகுதிகள்: 10ம் வகுப்பு, + 2 தேறிய மாணவ, மாணவிகள் சேரலாம்.

குறிப்பு: மாணவ, மாணவிகளுக்குத் தனித்தனியே ஹாஸ்டல் வசதி உண்டு

விண்ணப்பப் பாரங்கள் வேண்டுவோர் ரூ.25 செலுத்தி நேரடியாகவோ அல்லது தபால் மூலம் M.O. அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

Head Office: S.F. 49, கீழ்திண்டல், திண்டல் P. O.
பெருந்துறை மெயின் ரோடு, ஈரோடு-9
ஈரோடு பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் 12, 12-A, 12-B, 12-C, 9, 31, B-1, ஆகிய பஸ்ஸில்
செங்கோடம்பாளையம் ஸ்டாப்பில் இறங்கவும்

With Best Compliments From.:

J.K.K. MUNIRAJAH, M.Tech (Bolten)
Managing Trustee
Annai JKK Sampoorani Ammal Charitable Trust
Komarapalayam.

I. INSTITUTION RUN BY THE TRUST

1. Annai JKK Sampoorani Ammal Polytechnic, T.N. Palayam
Branches Offered:
1. Civil Engineering
2. Mechanical Engineering
3. Electrical & Electronics Engineering
4. Electronics & Communication Engineering
5. Chemical Technology
6. Textile Technology

2. JKK Munirajah ITI, T.N. Palayam
Branches Offered:
1. Mechanic (Motor Vehicle)
2. Electrician
3. Chemical Plant (Mechanic Maintenance)

3. Annai JKK Sampoorani Ammal College of Pharmacy, Komarapalayam - (D. Pharm & B. Pharm)

4. JKK Sampoorani Ammal College of Nursing, Komarapalayam - (Diploma in Nursing & B.Sc., Nursing)

5. JKK Munirajah Research Foundation, Komarapalayam
Cours e s Offered: 1. Bachelor of Physiotheraphy
2. Bachelor of Occupation Theraphy.

6. JKK Sampoorani Ammal Blind and Orthopedic School, Komarapalayam

7. JKK Vidyha Mandhir Matriculation School, Bungalowpudur

II TRYSEM TRAINING COURSES
Sponsored by DRDA, Erode.
Branches Offered:
1. Automobile and Car Driving
2. Computer Science
3. TV and Radio Mechanism
4. Two Wheeler Mechanism
5. Simple Wiring

INDUSTRIES RUN BY THE TRUST
1. Pulliccar Mills Ltd, Thiruchengode
2. J.K.N.M. Mills (P) Ltd, Komarapalayam
3. Annai J.K.K. Sampoorani Ammal Eye Hospital, Komarapalayam
4. J.K.K. Munirajah Enterprises Madras, Komarapalayam, T.N. Palayam
5. Kandasamy Weaving Factory, Komarapalayam
6. Kailash Packing Company, Komarapalayam
7. J.K.K.M. Printers, Komarapalayam

போன்: 23994

எங்களது இதயம்கனிந்த நல்வாழ்த்துக்கள்

'அன்பு பவன்'

உயர்தர சைவ உணவகம்

அன்பு பவன் டீலக்ஸ் A/C

அன்பு பவன் ஸ்வீட்ஸ்

மெயின்ரோடு, கோபிசெட்டிபாளையம்
பெரியார் மாவட்டம் 638 476

With Best Compliments From

GRAN ROCK TILES (P) LTD

Manufacturers and Exporters of all High quality monuments

GOBICHETTIPALAYAM
PERIYAR DISTRICT
TAMIL NADU
Phone: 22327

Head Office

C-7, SONA

3, Murray's Gate Road,

Alwarpet, Madras - 600 018

Phone: 450833, 454435, 459575

Factory: R.S. No.45/5 Polavakkalipalayam Village, Gobichetty Palayam Taluk - 638 476.
Periyar District, Phone: 04285 - 2327



காவல் நிர்வாகத்தில் பெரியார் மாவட்டம்

பெரியார் மாவட்டச் சிறப்பிதழுக்காக, பெரியார் மாவட்டத்தில் காவல் நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகள் மற்றும் நல்வாழ்வுத் திட்டங்கள் குறித்து மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அவர்களைத் தமது அலுவலகத்தில் பேட்டி கண்டபோது கீழ்க்கண்ட தகவல்களை அளித்தார்.

பெரியார் மாவட்டத்தில் சட்டம், ஒழுங்கு பொதுவாகவே நன்றாக இருக்கிறது. இந்த மாவட்டத்து மக்கள் மென்மையானவர்கள். காவல்துறையினருக்குப் பொது மக்களும் அரசு ஊழியர்களும் நல்ல ஒத்துழைப்புக் கொடுக்கிறார்கள். இதனாலேயே சட்டம் ஒழுங்கை நன்றாகப் பராமரிக்க முடிகிறது என்று மாவட்டக் கண்காணிப்பாளர் கூறியதைக் கேட்டு நாங்களும் பெருமை அடைந்தோம். மாநிலத்திலேயே கள்ளச் சாராயம் கட்டுப்படுத்தப் பட்டுள்ள ஒரு சில மாவட்டங்களில் பெரியார் மாவட்டமும் ஒன்று என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இந்த மாவட்டத்தில் மொத்தம் 41 காவல் நிலையங்கள் உள்ளன. ஏறக்குறைய அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இந்தக் காவல் நிலையங்களுக்கு AK-47 போன்ற நவீன ரகக் கருவிகளும் தரப்பட்டுள்ளன. நவீன வசதிகள் செய்து தரப்பட்டதன் பயனாக இந்த ஆண்டு 1995-இல் இந்த மாவட்டத்தில் களவு போன ரூபாய் 95 இலட்சம் பெறுமானமுள்ள பொருட்களில் ரூ.60 இலட்சம் பெறுமானமுள்ள பொருட்கள் மீட்கப்பட்டிருப்பதாக, காவல்துறை கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

கொலை, கொள்ளை, கார் திருட்டு - போன்ற பல்வேறு குற்றங்களில் ஈடுபட்டு 1991 முதல் கடந்த 4 ஆண்டுகளாகக் காவல்துறையினரால் தேடப்பட்டு வந்த ரகு என்றழைக்கப்படும் ரகுசீலனை சமீபத்தில் காவல்துறையினர் கைது செய்து மாவட்ட காவல்நிர்வாகத்துக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

மேலும், வீட்டை உடைத்துக் கொள்ளையடித்தல், சங்கிலி பறிப்பு போன்ற (Chain Snatching) 7 குற்றங்களில் ஈடுபட்டுப் போலீசாரால் தேடப்பட்டு வந்த பள்ளப்பட்டியைச் சேர்ந்த சிராஜுதீன், கேரள மாநிலத்தைச் சேர்ந்த வினோத் குமார் ஆகியோரை பெரியார் மாவட்டக் காவல்துறையினர் சமீபத்தில் கைது செய்துள்ளனர்.

சென்ற ஆண்டு 1994 கள்ளச் சாராயக் கடத்தலில் ஈடுபட்ட 2 கார், 1 லாரி, 22 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஸ்கூட்டர் ஆகியவற்றைக்காவல்துறையினர் பறிமுதல் செய்திருக்கிறார்கள். 1995-இல் இதே தொழிலில் ஈடுபட்ட 1 வேன், 1 லாரி, 3 கார், 17 இரு சக்கர வாகனங்களையும் காவல்துறையினர் பறிமுதல் செய்திருக்கிறார்கள்.

பெரியார் மாவட்டத்தில் 700 பேர் கொண்ட போலீஸ் நண்பர்கள் குழு மிகச் சிறப்பாக செயல்பட்டு வருவதாக மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

பெரியார் மாவட்டத்தில் தற்சமயம் 36 ஆய்வாளர்களும், 67 உதவி ஆய்வாளர்களும், 162 தலைமைக் காவலர்களும், 445 முதல் நிலை காவலர்களும், 253 இரண்டாம் நிலை காவலர்களும் பணியாற்றுகிறார்கள்.

காவல் அலுவலர்களுக்கு

தமிழ்நாடு அரசு காவல்துறையிலுள்ள 21,000 இரண்டாம் நிலைக் காவலர்களை முதல் நிலைக் காவலர்களாகவும், 2,700 முதல்நிலைக் காவலர்களைத் தலைமைக் காவலர்களாகவும் தரம் உயர்த்தி, இதனை 4 கட்டங்களாகக் காவல்துறையின் அடித்தளத்தில் பணிபுரியும் ஆளினர்களிடையே பதவி உயர்விலுள்ள தேக்க நிலையைப் போக்கும் வகையில் ஆணைகள் பிறப்பித்தது. இதன்படி பெரியார் மாவட்டத்தில் 100 முதல் நிலைக் காவலர்கள் தலைமைக் காவலர்களாகவும், 590 இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல்நிலைக் காவலர்களாகவும் பதவியில் உயர்வு பெற்றார்கள். அரசு அறிவித்த பதவி உயர்வு திட்டத்தின்படி ஏறத்தாழ 500 காவலர்கள் இம்மாவட்டத்தில் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

புதிய காவல் துணைக் கோட்டம்

பெரியார் மாவட்டம், பவானியில் புதியதாக ஒரு காவல் துணைக் கோட்டத்தினை உருவாக்கிட அரசு ஆணை பிறப்பித்தது. அதன்படி ஈரோடு ஊரக துணைக் கோட்டத்திலிருந்து 5 காவல் நிலையங்களும், ஈரோடு நகர துணைக் கோட்டத்திலிருந்து 1 காவல் நிலையமும் எடுக்கப்பட்டு ஆக மொத்தம் 6 காவல் நிலையங்கள் பவானி துணைக் கோட்டத்துடன் இணைக்கப்பட்டு புதிய காவல் துணைக் கோட்டம் உருவாக்கப்பட்டு 4.1.95 முதல் செயல்பட்டு வருகிறது.

★ இன்று நமக்கு வேண்டியது அறிவு வளர்ச்சி, அறிவு வளர்ச்சி பெற்று ஒவ்வொரு துறையிலும் முன்னேற வேண்டும். அறிவு ஆட்சி செய்ய வேண்டும்.

—தந்தை பெரியார்

சத்தியமங்கலம் காவல் துணைக் கோட்டம் உருவாக்குதல்

பெரியார் மாவட்டம் சத்திய மங்லத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதியதாக ஒரு காவல் துறைத் துணைக் கோட்டத்தினை உருவாக்கிட அரசு ஆணை பிறப்பித்தது. இதன்படி கோபி துணைக் கோட்டத்திலிருந்து 7 காவல் நிலையங்கள் பிரித்தெடுக்கப்பட்டு சத்தியமங்கலம் துணைக் கோட்டம் உருவாக்கப் பட்டது. புதிய துணைக் கோட்டம் 23.3.95 முதல் சத்திய மங்கலத்தில் செயல்பட்டு வருகிறது.

தேசிய நெடுஞ்சாலை வழிப் பாதுகாப்புத் திட்டம்

தேசிய நெடுஞ்சாலை வழிகளில் ஏற்படும் குற்றங்களைத் தடுக்கும் நோக்கத்துடனும் சாலை விபத்துக்களைத்தடுக்கும் முகத்தானும் நெடுஞ்சாலை வழிகளில் ஏற்படும் வழிப்பறி, கூட்டுக் கொள்ளை மற்றும் இதரக் கொள்ளைகளைத் தடுக்கவும், சாலை வழிகளில் தங்கள் பயணங்களை மேற்கொள்ளும் பொதுமக்களின் மனதில் நம்பிக்கை உணர்வினை வளர்க்கும் வகையில் தேசிய நெடுஞ்சாலை பாதுகாப்புத் திட்டத்தினை உருவாக்கிட தமிழக அரசு எண்ணம் கொண்டது. அதன் விளைவாகப் பெரியார் மாவட்டத்தில் நெடுஞ்சாலை பாதுகாப்புப் பணி திட்டத்தினை அமலாக்கம் செய்வதற்காக, இம்மாவட்டத்திற்கு 8 இளம்

ஆய்வாளர்கள், 24 இரண்டாம் நிலைக் காவலர்கள், 8 ஓட்டுநர் காவலர்கள் மற்றும் 4 ஜீப்புகள் மற்றும் தளவாடங்களை ஒப்பளிப்பு செய்துள்ளது.

துப்பறியும் நாய்ப்படை

பெரியார் மாவட்டத்தில் கடும் பெர்ருள் களவு குற்றங்களை துப்புத் துலக்கவும் கொலைக் குற்றங்களை விரைவில் கண்டறிவதற்கும் புலன் விசாரணையில் துணைபுரிவதற்கும் ஏதுவான வகையில், 26.7.94-ஆம் தேதி நடைபெற்ற காவல் உயர் அலுவலர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பெரியார் மாவட்டத்தில் புதிதாக நாய்ப்படை துவக்குவதான அறிவிப்பினை வெளியிட்டார். அதன்படி பெரியார் மாவட்டத்தில் துப்பறியும் நாய்ப்படையைத் துவக்குவதற்கு உத்தரவிட்டு, அப்படைக்கெனத் தனியாக ஓர் இளம் ஆய்வாளர், ஓர் தலைமைக் காவலர், 4 இரண்டாம் நிலைக் காவலர்கள் மற்றும் நாய்கள் பராமரிப்புக்காக ஓர் இளம் காவலர் Dog boy மற்றும் இதர தளவாடங்களையும் இதர வசதிகளையும் ஒப்பளிப்பு செய்தது.

அனைத்து மகளிர் காவல் நிலையம் ஈரோட்டில் 14.7.93 முதல் செயல்பட்டு வருகிறது. இந்நிலையத்திற்கான மகளிர் காவல் நிலையம் 2.9.94 ஆம் தேதியன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

தாராபுரத்தில் அனைத்து மகளிர் காவல் நிலையம் துவக்குதல்

ஈரோட்டில் அனைத்து மகளிர் காவல் நிலையம் செயல்பட்டு வருவது அனைத்துத்தரப்புப் பொதுமக்களின் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. பெண்களின் குறைகளை விரைந்து களைவதற்கு ஏதுவாகவும், பெண்களின் மீதான கொடுமைகள் மற்றும் வரதட்சணைக்கொடுமையால் உயிரிழப்புகளைத் தடுப்பதற்காகவும், தமிழக அரசு தாராபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதியதாக ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் துவங்குவதாக அறிவிப்பு வெளியிட்டுள்ளது. பெண்களின் குறைகளை விரைவில் தீர்ப்பதற்கு ஏற்ப பெரியார் மாவட்டத்தின் பாதி மாவட்ட எல்லைகளைத் தாராபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையம் கட்டுப்பாட்டின் கீழ் இணைப்பதற்காக உத்தரவிடப் பட்டுள்ளது.

தமிழக அரசு காவல் துறையின் சரித்திரத்திலேயே முதல் முறையாகக் காவல் அலுவலர்கள் மற்றும் ஆளினர்களுக்காகப்பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்கள் மற்றும் ஒட்டு மொத்த பதவி உயர்வு வாய்ப்புகளைத் தற்போதைய அரசு வழங்கியுள்ளது. மேலும் காவல் துறையின் மனித சக்தியைத் தற்பொழுது நிகழ்ந்து வரும் குற்ற நிகழ்வுகளைத் தடுக்கவும், சட்டம் ஒழுங்கை நல்ல நிலையில் பராமரிக்கவும் கடினமான போக்குவரத்துப் பணிகள் ஆற்றவும், காவல்துறை போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு முறைகளில் மேலும் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான திட்டங்களை அரசு அறிவித்துள்ளது. அதுமட்டுமல்லாமல் சட்டத்தை மதிக்கும் பொதுமக்களுக்கு அமைதி மற்றும் பாதுகாப்பு வழங்குதல், பல்வகையான சட்டங்கள் மூலம் சமுதாயத்தில் நிகழும் குற்றங்களையும் கொடுமைகளையும் போக்குவதற்கும் பொது மக்களின் நற்பலன்களுக்கும் நல்வாழ்வுக்கும் இக்காவல் துறையில் பல்வேறு சட்ட திட்டங்கள் அமல்படுத்தப் பட்டு வருகின்றன.

நல்வாழ்த்துக்கள்

சீரங்ககவுண்டம்பாளையம் கயிறு உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம்

இண்ட் நெ.1484, பாலக்கரை அஞ்சல்,
துடுப்பதி வழி, பெருந்துறை T.K. – 638 057
பெரியார் மாவட்டம்

எங்களிடம் முப்பிரிச் துடி, தலக்கயிறு, மூக்கணாங்கயிறு, வால் கயிறு, Special வடக் கயிறு, தண்ணிக்கயிறு, லாரி பாரக்கயிறு, மற்றும் எல்லாவிதமான கயிறுகளும் மொத்தமாகவும், சில்லரையாகவும் நியாயமான விலையில் கிடைக்கும்.

இங்ஙனம்
B. நாகலிங்கம், M.Cop.,
தனி அலுவலர்

1994-95 ஆம் ஆண்டின் சிறந்த கூட்டுறவுச் சங்கமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

நல்வாழ்த்துக்கள்

மோளக்கவுண்டன்புதூர் அரிசனக் கயிறு உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவுச்சங்கம்

இண்ட் நெ.1749, முத்தூர் அஞ்சல்-638 105
பெரியார் மாவட்டம்

எங்களிடம் மணிச்துடி, முப்பிரி துடி, தலக் கயிறு, வால் கயிறு, தண்ணிக்கயிறு, லோடிங் கயிறு, மற்றும் எல்லாவிதமான கயிறுகளும் மொத்தமாகவும், சில்லரையாகவும் நியாயமான விலையில் கிடைக்கும்.

இங்ஙனம்
V.A. அன்பரசன், B.Com.,
தனி அலுவலர்

1994-95 ஆம் ஆண்டின் சிறந்த கூட்டுறவுச் சங்கமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

நல்வாழ்த்துக்கள்

பெரியார் மாவட்ட அச்சகச் சேவைத் தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்.,

இண்ட் நெ. 1765,
793, நேதாஜி ரோடு,
ஈரோடு 638 001

எங்கள் சங்கத்தில் கூட்டுறவுச் சங்கங்கள், பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி போன்ற நிறுவனங்களுக்குத் தேவைப்படும் படிவங்கள், புத்தகப் பாரங்கள் மற்றும் அனைத்து அச்சு வேலைகளும் உரிய காலத்தில் குறைந்த விலையில் அச்சடித்துக் - (Printing) கொடுக்கப்படும்.

இங்ஙனம்
B. நாகலிங்கம், M.Cop.,
தனி அலுவலர்

நல்வாழ்த்துக்கள்

ஈரோடு பாபின் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம்,

இண்ட். நெ.684, 4, குமிலன் குட்டை,
பெருந்துறை ரோடு, ஈரோடு-638 011,
பெரியார் மாவட்டம்

தொலைபேசி எண்: 70494

நூற்பாலைகளுக்குத் தேவையான அனைத்து விதமான முதல்தர பிளாஸ்டிக் பாபின்கள், கோன்கள், சீஸ் டியூப்புகள் மற்றும் உயர்தர மரத்தினால் செய்யப்பட்ட பல்வேறு வகை மர உருளைகள், ஆர்டரின் பேரில் தயாரித்துக் கொடுக்கப்படும். "1994-95-ஆம் ஆண்டின் சிறந்த கூட்டுறவுச் சங்கம்" எனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

தனி அலுவலர்

(7-ஆம் பக்கத் தொடர்ச்சி)



முக்கிய அமைப்பாக இந்நிறுவனத்தை உருவாக்க நாங்கள் கருதுகிறோம்.

19. கல்வித் துறையே பெரும் அளவில் நிதி ஒதுக்கீட்டைப் பெறும் துறையாகத் தொடர்ந்து விளங்குகிறது. 1996-97ல் இத்துறைக்கு அளிக்கப்படும் மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.2504.51 கோடியாகும். தரம் வாய்ந்த பள்ளிக் கல்வி அளிப்பதை உறுதி செய்தல் என்கிற அரசின் கல்விக் கொள்கைக்கு இணங்க, பல்வேறு நிலையில் கல்வித் தரத்தை உயர்த்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அறைக்கலன்கள், ஆய்வுக் கூடங்கள், கற்பிக்கும் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள் முதலிய வசதிகளை அளிப்பதன் மூலம், பள்ளிகளின் வசதிகளை மேம்படுத்தக் கருதப்பட்டுள்ளது. மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம், 1996-97ல் மேலும் மூன்று மாவட்டங்களில் செயலாக்கப்படும். இத்திட்டத்தைச் செயலாக்குவதற்காக, வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.3.32 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 1996-97-ல் தொழில் நுட்பக் கல்வித் திட்டத்தைச் செயலாக்க ரூ.8.02 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

20. ஆளுநர் உரையில் ஆதி திராவிடர் நலனுக்காகச் செயலாக்கப்பட்ட பல்வேறு திட்டங்களின் விவரம் ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர், பழங்குடியினர் நலனுக்கான மொத்த நிதி ஒதுக்கீடு, 1996-97ல் ரூ.230.41 கோடி ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீட்டளவு 1991-92-ல் ரூ.114.96 கோடியாக இருந்தது. இந்த நிதி ஒதுக்கீட்டளவு இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர், பழங்குடியினர் நலனில் இந்த அரசு கொண்டுள்ள உறுதியினை இது காட்டுகிறது.

வளர்ச்சித் திட்டங்கள்

21. 1996-97 ஆம் ஆண்டிற்காக நடைபெற்று வருகிற திட்டங்களுக்குச் செய்யப்பட்ட முக்கியமான நிதி ஒதுக்கீடுகள் சிலவற்றை, நான் சுருக்கமாக எடுத்துரைக்க விழைகிறேன்.

22. வேளாண் உற்பத்தியில் இம்மாநிலம் அடைந்துள்ள மிகச் சிறந்த சாதனை ஆளுநர் உரையில் ஏற்கெனவே சிறப்பிடம் பெற்றுள்ளது. இது, இந்த அரசின் ஒட்டு மொத்த வேளாண் வளர்ச்சி உத்திகளின் வெற்றியைக் காட்டுகிறது. இதனால், உழவர்கள் தங்களுடைய உற்பத்திப் பொருளுக்கு அதிக விலை பெறுவதற்கு இந்த அரசு உறுதி செய்தது. வேளாண் தொழிலில் அரசு தொடர்ந்து முதலீடு செய்யவும் ஆவன செய்யப்பட்டது. வேளாண் துறைக்கு, இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மொத்தத் திட்ட ஒதுக்கீடு ரூ.210.24 கோடி ஆகும். தமிழ்நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.86.06 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. வேளாண் மனித வள மேம்பாட்டுத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு 1996-97 இல் ரூ.20.80 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

23. இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், பாசனத் துறையின் திட்டப் பணிகளுக்கான மொத்த நிதி ஒதுக்கம் ரூ.249.83 கோடி ஆகும். ரூ.1,240 கோடி செலவாகும் நீர் ஆதாரங்களை நிலைப்படுத்தும் திட்டம் 1995 அக்டோபர் முதல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தால் 16.68 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பு பயன் பெறும். இது, அரசின் நீர் ஆதாரங்கள் வாயிலாகப் பாசனம் பெறுகின்ற பகுதியில் சுமார் 50 சதவீதம் ஆகும். இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், நீர் ஆதாரங்களை நிலைப்படுத்தும் திட்டத்திற்கு ரூ.89.89 கோடி நிதி

ஒதுக்கப்பட்டுள்ளது. ஏரிகளை நவீனமயமாக்கல் திட்டத்திற்கு ரூ.18.98 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், 30,000 ஏக்கர் ஆயக்கட்டுப் பகுதிக்குப் பாசனம் அளிக்கின்ற மேலும் 100 ஏரிகளுக்கு நீட்டிக்கப்பட்டு வருகின்றது. பாசனத் திட்டங்கள் பராமரிப்பிற்காகப் போதுமான அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதை உறுதி செய்தது, எங்களுடைய குறிப்பிடத்தக்க சாதனைகளில் ஒன்றாகும். ஒன்பதாம், பத்தாம் நிதிக் குழுக்கள் நிர்ணயித்த அளவுகளை எய்த பராமரிப்பு நிதி ஒதுக்கத்தை நாங்கள் உயர்த்தியுள்ளோம். 1991-92ல், பெரும் பாசனப் பணிகள் பராமரிப்பிற்கான ஒட்டு மொத்த நிதி ஒதுக்கம் ரூ.10.65 கோடி ஆகும். சிறுபாசனப் பணிகள் பராமரிப்பிற்கான நிதி ஒதுக்கம் ரூ.3.50 கோடி ஆகும். 1996-97 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், பெரும் பாசனப் பராமரிப்பிற்கான நிதி ஒதுக்கம் ரூ.21.84 கோடி ஆகும். சிறுபாசனப் பராமரிப்பிற்கான நிதி ஒதுக்கம் ரூ.7.90 கோடி ஆகும்.

24. இந்த அரசு முன்னுரிமை அளிக்கும் துறைகளில் ஊரக வளர்ச்சியும் ஒன்றாகும். 1996-97 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், ஊரக வளர்ச்சிக்கான மொத்த திட்ட நிதி ஒதுக்கீடு ரூ.276.40 கோடியாக அதிகரித்துள்ளது. பத்தாம் நிதிக்குழுவின் பரிந்துரைகளின் ஒரு பகுதியாக, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மூலதன மானியமாக ரூ.71.83 கோடி நிதி ஒதுக்கம் செய்துள்ளதும் இதில் அடங்கும். 1996-97 ஆம் ஆண்டில், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் மொத்தம் ரூ.368.60 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். மாநில அரசின் பங்காக ரூ.87.70 கோடி நிதி ஒதுக்கம் இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. 1995-96 ஆம் ஆண்டில், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 70,187 கான்கிரீட் வீடுகள் கட்டப்பட உள்ளன. 1996-97 ஆம் ஆண்டில் அதே எண்ணிக்கையிலான வீடுகளைக் கட்டுவதற்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1996-97 ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த ஊரக மேம்பாட்டுத் திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.86.92 கோடி ஆகும். இதில் மாநில அரசின் பங்காக ரூ.43.46 கோடி இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு, நிபந்தனைகளற்ற வகையில் நிதி வழங்க, 1992-93 ஆம் ஆண்டில் ரூ.20 கோடி ஒதுக்கீட்டுடன் அதிகாரத்தைப் பரவலாக்கிய மாவட்டத் திட்டத்தைத் தொடங்கியிருந்தோம். 1995-96 ஆம் ஆண்டில் இந்த ஒதுக்கீடு ரூ.50.71 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 1996-97 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளிலும் இதே அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

25. அடிப்படை வசதித் துறைகளை மேம்படுத்த இந்த அரசு நிலைத்த முக்கியத்துவம் அளித்து வருகிறது என்பதை அனைவரும் நன்கறிவர். 1995-96 ஆம் ஆண்டிற்கு மின்விசைத் துறைத் திட்ட ஒதுக்கீடான ரூ.750 கோடி, செயல்படுத்தப்படும் நிலையில் அதை விட அதிகரிக்கும். மின் உற்பத்தித் திறனைக் கூடுதலாக உருவாக்க, மாநில அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து ஏற்கெனவே ஆளுநர் உரையில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில், மின் அனுப்புகை-விநியோகப் பணி அமைப்பை மேம்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில், தமிழ்நாடு மின்வாரியம், 1995-96 ஆம் ஆண்டில் 110 துணை நிலையங்களை அமைத்து வருகிறது. 1995-96 ஆம் ஆண்டில் விவசாய பம்பு செட்டுகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கும் வகையில் ஏற்படக் கூடிய இழப்பு ரூ.1358 கோடியாக இருக்கும். 1996-97 ஆம் ஆண்டில் இந்த இழப்பு மேலும் அதிகரிக்கக் கூடும்.

26. 1996-97 ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில், சாலைகள், பாலங்களுக்குக்காக ரூ.468.32 கோடி நிதி



ஒதுக்கப்பட்டுள்ளது. இது, 1995-96 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட ரூ.424.12 கோடியைக் காட்டிலும் கணிசமான அளவு அதிகமானதாகும். 1996-97 ஆம் ஆண்டில் சாலைகளைப் பராமரிப்பதற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.204.46 கோடியாக இருக்கும். பராமரிப்பில் எஞ்சியுள்ள பணிகளை மேற்கொள்ள ஐந்தாண்டு காலச் சிறப்புப் பழுதுபார்ப்புத் திட்டம் ஒன்று 1991-92ல் தொடங்கப்பட்டது. இது 1995-96 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். இதற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.178.40 கோடியாகும். இதற்கு முதலில் வகை செய்யப்பட்ட ஒதுக்கீடு ரூ.150 கோடியாகும். இத்திட்டத்தின் கீழ் 15,926 கி.மீ. சாலைகள் பராமரிக்கப்பட்டுள்ளன. ஊரகச் சாலைகள் திட்டத்திற்கான நிதி ஒதுக்கம், 1996-97 ஆம் ஆண்டில் ரூ.22.50 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஊரகச் சாலைகள் திட்டம் முழுவதும், 1997 மார்ச்சுக்குள் முடிக்கப்பட்டுவிடும். அதற்கேற்ப இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடுகள் ரூ.35 கோடி அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளன. கடற்கரையோரச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், ரூ9.21 கோடி ஒதுக்கீட்டுடன், 1996-97 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

27. நாட்டில் நகர்மயமான மாநிலங்களில் இரண்டாவது மாநிலமாக, தமிழ்நாடு திகழ்கிறது. நகர்ப் பகுதிகளின் அதிகரித்து வரும் தேவைகளுக்கு அதிகஅளவில் நிதி ஒதுக்கவேண்டியுள்ளது. தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ரூ.206.19 கோடி வரவு-செலவுத் திட்ட ஆதரவு உள்பட, மொத்தம் ரூ.260.50 கோடி ஒதுக்கீட்டுடன், 1996-97 ல் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இம்மாநிலத்திலுள்ள நகராட்சிகளின் அடிப்படை வசதிகளுக்காகத் தேவைப்படும் நிதியுதவி கிடைக்கவும், தரமான திட்டங்களைத் தயாரித்து மதிப்பீடு செய்யப்படுவதை உறுதி செய்யவும், நிதி நிறுவனங்கள் பங்கேற்கும் வகையில், நகர்ப்பகுதி அடிப்படை வசதி நிதி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் ஆற்றல் வாய்ந்த தொழில் பகுதியான திருப்பூர் மாநகரில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணி புதிய திருப்பூர் மேம்பாட்டு நிறுவனத்திடம்



ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதில், தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TACID), திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம், அடிப்படை வசதி-குத்தகை-நிதியுதவி நிறுவனம் (ILFS) ஆகியவை பங்குதாரர்களாக இருக்கும். இந்நிறுவனம், திருப்பூரின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த மூலதனச் சந்தையில் நிதி திரட்டுவதுடன், உருவாக்குதல், இயக்குதல், மாற்றுதல் (B.O.T) போன்ற புதிய உத்திகளைப் பின்பற்றி, பெரிய அளவில் முதலீடு செய்யும். இந்தப் புதிய முயற்சிகள் மூலம் - திருப்பூரில், குடிநீர் வழங்கல், சாலைகள், தகவல் தொடர்பு, நகரக்கழிவுப் பொருள்களை அகற்றுதல், கழிவு நீரைச் சுத்திகரித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள ரூ.1313.20 கோடி முதலீடு செய்யப்படும்.

28. "எழில்மிகு சென்னை 2000" திட்டத்தின் அனைத்து அம்சங்களின் கீழும் கணிசமான அளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். சென்னை மாநகரை 2000 ஆம் ஆண்டில், முன்னோடிப் பெருநகரமாக உருவாக்க வேண்டுமென்ற நோக்குடன் இந்த அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள், முழு அளவில் வெற்றியடையும் என்று உறுதியுடன் நம்புகிறோம். சென்னை மாநகரில் புறவட்டச்சாலை (Outer Ring Road) அமைக்கும் பணி ரூ.317 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். நிலங்களைக் கையகப்படுத்த ரூ.10 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் ரூ.56 கோடி பங்கு மூலதனத்துடன் பெருநகர அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகரில் அடிப்படை

வசதிகளை மேம்படுத்த ரூ.887 கோடி மதிப்பிற்கான திட்டங்களுக்கு இந்த நிறுவனம் நிதி உதவி அளிக்கும். இந்நிறுவனத்திற்கு, எட்டாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழ்நாடு அரசும் மத்திய அரசும் முறையே ரூ.100 கோடி நிதியுதவியை மானியமாக வழங்கும்.

29. வீட்டு வசதித் துறை கணிசமான அளவிற்கு வேலை வாய்ப்பை உருவாக்குவதன் மூலம் பொருளாதாரத்தில் முக்கிய இடம் வகிக்கிறது. வீட்டுவசதித் துறையில் மாநில அரசின் சாதனை மிகவும் சிறந்து விளங்குகிறது. ஊரக வீட்டுவசதி திட்டத்தின் கீழ், 1995-96 ஆம் ஆண்டில் கட்டப்பட வேண்டிய வீடுகளின் எண்ணிக்கை 58,200 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கிராமப் பகுதிகளில் வீடுகளின் நிலை உயர்த்தல் (SHUPRA) திட்டம் 1996-97 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.1.50 கோடி ஒதுக்கீட்டுடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும். தமிழ்நாடு குடிசைப்பகுதிமாற்று வாரியம், 1996-97 ஆம் ஆண்டில், ரூ.2.50 கோடி செலவில், தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு அம்சமான குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 10,000 குடும்பங்களுக்கு நிதி உதவி அளிக்கும். 1996-97 ஆம் ஆண்டில், மொத்தம் ரூ.8 கோடி செலவில், 2500 குடியிருப்புகள் கட்டப்படும். இத்துடன், தமிழ்நாட்டில் உள்ள நகர்ப்புற குடிசைப்பகுதி பிரச்சினைகளைச் சமாளிக்க பத்தாம் நிதிக்குழு, தனிப்பிரச்சினை மானியமாக ரூ. 60 கோடி வழங்கப் பரிந்துரைத்துள்ளது. மேம்படுத்தப்பட்ட மாற்று மனைகளில், குடிசைப்பகுதியில் வாழும் குடும்பங்களைக் குடியமர்த்த உரிய திட்டங்கள் வகுக்கப்படும். 1996-97ல், அரசுப்பணியாளர்களுக்கான வீடு கட்ட முன்பணம் குறித்த நிதி ஒதுக்கம் ரூ.74.15 கோடியாகக் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது.

1991-92ல் ரூ.17.63 கோடியாக மட்டுமே இருந்த வீடு கட்டுவதற்கான முன்பணத்திற்கான நிதி ஒதுக்கம், நான்கு மடங்குக்கும் மேல் உயர்த்தப்பட்டுள்ளதை இது காட்டும்.

30. 1996-97 ஆம் ஆண்டு இடைக்கால வரவு-செலவுத்திட்ட மதிப்பீட்டில் குடிநீர் வழங்கல், கழிவு நீர் அகற்றலுக்கான மொத்த ஒதுக்கீடு, ரூ.482.50 கோடியாக இருக்கும். ஊரகக் குடிநீர் வழங்கலுக்கான மொத்த ஒதுக்கீடு ரூ.103.95 கோடியாக இருக்கும். ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டப் பணியில் தமிழ்நாட்டின் சாதனை பாராட்டத்தக்கதாக உள்ளது. 1991-92 முதல் 1995-96 வரையிலான ஐந்தாண்டுக் கால அளவில், மொத்தம் 1 கோடி மக்கள் தொகையுடன் கூடிய, இம்மாநிலத்தில் உள்ள 17,987 ஊரகக் குடியிருப்புப் பகுதிகள் இத்திட்டத்தினால் பயன் அடைந்துள்ளன. இதில், 30 இலட்சம் மக்கள் தொகையுடன்கூடிய 8,315 ஆதிதிராவிடர், பழங்குடியினர் குடியிருப்புகளும் அடங்கும். இம்மாநிலத்தில் உள்ள ஒவ்வோர் ஊரகக் குடியிருப்பிலும் குறைந்தது ஒரு குடிநீர் ஆதாரத்துக்கான ஏற்பாடாவது செய்து கொடுக்கப்படும் என்பதை உறுதி செய்யதுள்ளோம். 1996-97 ஆம் ஆண்டிலிருந்து, ஓரளவு குடிநீர் வசதி பெற்றுள்ள ஊரகக் குடியிருப்புகளில், குடிநீர் வழங்கலை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இம்மாநிலத்தில் உள்ள அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் குடிநீர் வழங்கு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. 1996-97 ஆம் ஆண்டில் 326 நகரப் பேரூராட்சிகள், 173 ஊரகப் பேரூராட்சிகள் ஆகியவற்றில் குடிநீர் வழங்கு திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

31. தொடர்ந்து இருந்து வரும் குடிநீர்ப் பற்றாக்குறைப் பிரச்சினையிலிருந்து சென்னை மாநகரை விடுவிக்க இந்த அரசு உயரிய முக்கியத்துவம் அளித்துள்ளது. முதல் சென்னை குடிநீர் வழங்கு-கழிவு நீரகற்றுத் திட்டம் மொத்தம் ரூ.255.05 செலவில் 1996 மார்ச்சில் முடிவடையும். சென்னை மாநகருக்கு வீராணம் ஏரியிலிருந்து நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீரைக் கொண்டு வருவதற்கான மொத்தம் ரூ.1638 கோடி செலவிலான



இரண்டாம் சென்னை குடி நீர் வழங்கல்-கழிவு நீரகற்றல் திட்டம் 1995 அக்டோபரிலிருந்து தொடங்கப்பட்டுள்ளது. இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கம் ரூ.299.10 கோடியாகும். கிருஷ்ணாநதி நீரைப் பெற்று, தூய்மைப்படுத்தி, வழங்குவதற்கான முதல் கட்டப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. தெலுங்கு கங்கைத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான செலவில் மொத்தப் பங்கான ரூ.521 கோடியில் ரூ.462 கோடி ஆந்திரபிரதேச அரசுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது. சென்னை மாநகருக்கு உடனடியாக நீரை வழங்குமாறு ஆந்திரப்பிரதேச அரசை நாம் வலியுறுத்துவோம்.

நிதி நிலைமை

32. இந்த அரசு பதவியேற்றபோது இருந்த இடர்ப்பாடான நிதி நிலைமையை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். இந்த அரசு பதவியேற்றபோது, 1991-92 ஆம் ஆண்டிற்குரிய மொத்த நிதிப் பற்றாக்குறை ரூ.898 கோடியாக இருந்தது. நாட்டு மது விற்பனை முற்றிலுமாக ஒழிக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில், அரசு எடுத்திருந்த முதல் முடிவின் விளைவாக, இந்த அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பு ரூ.322 கோடியாகும். இதனால், இந்த அரசின் ஒட்டு மொத்த நிதிப் பற்றாக்குறை ரூ.1220 கோடியாகியது. இந்த வருவாய் இழப்பை ஈடுசெய்ய நிதியுதவி அளிக்குமாறு மத்திய அரசிடம் நாம் விடுத்த வேண்டுகோளுக்கு மத்திய அரசிடமிருந்து எவ்வித மறுமொழியும் வரவில்லை. இருப்பினும், திறமையான நிதி நிருவாகத்தின் மூலம், மாநிலத்தின் ஒட்டுமொத்த நிதி இடர்ப்பாட்டு நிலையைச் சரிசெய்து, நிதிநிலையைக் கணிசமான அளவிற்கு மேம்படுத்துவதில் நாம் தற்போது வெற்றி பெற்றுள்ளோம். மின் கட்டண இழப்பீட்டு பாக்கித் தொகை வகையில், தமிழ்நாடு மின் வாரியம் அரசுக்குச் செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகளைச் சரிக்கட்டுவதைக் கணக்கில் கொள்ளாமல், 1991-92 ஆம் ஆண்டில் ரூ.878.87 கோடியாக இருந்த வருவாய்ப் பற்றாக்குறை, 1992-93 ஆம் ஆண்டில் ரூ.1143.67 கோடியாக உயர்ந்தது. இதன்பின்னர், 1993-94 ஆம் ஆண்டில், வருவாய்ப் பற்றாக்குறையின் அளவு ரூ.691.86 கோடி என்ற அளவிற்குக் குறைக்கப்பட்டது. இது, 1994-95 ஆம் ஆண்டில், ரூ.415.55 கோடியாகக் குறைக்கப்பட்டது.

33. பொருளாதார வளர்ச்சியினால் ஏற்பட்ட வரி வருவாய் அதிகரிப்பு இந்த மேம்பாட்டிற்கு ஒரு காரணமாகும். தெளிவான நோக்கத்துடன் வகுக்கப் பெற்று மாண்புமிகு உறுப்பினர்களின் ஆதரவையும் பெற்றுள்ள அரசின் செலவுக் கொள்கை, வருவாய்ப் பற்றாக்குறை குறைவதற்குக் காரணமாகியது.

34. 1995-96 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், (-)ரூ.925.55 கோடி வருவாய்ப் பற்றாக்குறை ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டது. சென்ற ஆண்டு நான் ஆற்றிய வரவு-செலவுத் திட்ட உரையில், பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படும் அரிசியின் விலையைக் கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாய் குறைப்பதாக அறிவித்திருந்தேன். இதன் விளைவாக, வருவாய்ப் பற்றாக்குறை (-)ரூ.150 கோடியிலிருந்து (-)ரூ.1075.55 கோடியாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டது. அதற்கேற்ப, 1995-96 ஆம் ஆண்டுக்கான இறுதிப் பற்றாக்குறை (-)ரூ.175.25 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

35. 1995-96 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் இடர்ப்பாடான நிதி நிலைமையைத் தெளிவாகக் காட்டியது. இந்நிலையிலும், முன்னுரிமை அளிக்க வேண்டிய துறைகளில், முக்கிய இனங்களுக்குத் தேவைப்படும் செலவுப் பொறுப்பைக் குறைக்க

43. இடைக்கால வரவு-செலவுத் திட்டமதிப்பீடுகளை இந்த அவையில் தாக்கல் செய்த பிறகு நடைபெறும் விவாதத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள் ஆக்க பூர்வமான முறையில் தங்களுடைய உயர்ந்த கருத்துக்களைத் தெரிவிக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

44. இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை உருவாக்கும் பணியில் பேருதவியாக இருந்த நிதித்துறைச் செயலாளர் திரு பி.வி.ராஜாராமன், அவர்களுக்கும் மற்ற அரசு அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

45. இத்துடன், இந்த 1996-97 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று, இசைவளிக்குமாறு வேண்டுகிறேன்.

வணக்கம்

இரா. நெடுஞ்செழியன்,
நிதி அமைச்சர்.

சென்னை,
1996 ஆம் ஆண்டு
பிப்ரவரித் திங்கள் 20 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2027,
மாசித் திங்கள் 8 ஆம் நாள்.

வீரம் செறிந்த தீரன் சின்னமலை

தீரன் சின்னமலை பெரியார் மாவட்டத்தில் நொய்யல் ஆற்றங்கரையிலுள்ள மேலப்பாளையம் என்ற இடத்தில் 1756-ஆம் ஆண்டு பிறந்தார். அரச்சலூர் என்ற ஊருக்குத் தென்கிழக்கில் அமைந்துள்ள ஓடாநிலை என்ற பகுதியை, தீரன் சின்னமலை குறுநில மன்னராக ஆண்டு வந்தார்.

மைசூருக்கு கொங்கு நாட்டார் எதற்காகத் திறை செலுத்த வேண்டும்? என்று அறிவித்து மைசூர் ஆட்சிக்கு வரிப்பணத்தைக் கொடாமல் அதனை எதிர்த்தவர். மைசூர் ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு கி.பி.1801 முதல் 1805 வரை ஆங்கிலேயப் படையை, தான் ஆண்ட கொங்குப் பகுதிக்குள் நுழையவிடாமல் தடுத்து வீரப்போர் புரிந்தவர் தீரன் சின்னமலை. கடைசியில் நயவஞ்சகமாக ஆங்கிலேயர் தந்திரத்தைக் கையாண்டு, தீரன் சின்னமலையைச் சிறைபிடித்து, சங்ககிரிக்கோட்டையில் தூக்கிலிட்டனர்.

தமிழ்ப் பெரியோர் வாழ்ந்த பெரியார் மாவட்டம்

நாத்திகக் கருத்துக்களை நாடெங்கும் பரப்பி, நற்புகழ் எய்திய தந்தை பெரியாரை ஈன்ற பெரியார் மாவட்டம் பல தமிழ்ப் பெரியோர்களைத் தந்து, புகழ் பெற்றுள்ளது. சான்றாக நன்னூல் எழுதிய பவணந்தி முனைவர்சீனாபுரத்தையும், சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் நிரம்பை என்ற ஊரையும் சேர்ந்தவர்கள்.

கொங்குமண்டல சதகம் பாடிய கார்மேகக் கவிஞர், பெருங்கதை இயற்றிய கொங்குவேளிர் ஆகியோர் பிறந்த விசயமங்கலத்தில் திகழ்ந்த தமிழ்ச்சங்கத்தில் தான் நேமிநாதம், வச்சணந்தி மாலை ஐம்பெரும் காப்பியத்தில் ஒன்றான சீவகசிந்தாமணி ஆகியவை தோன்றின.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இ. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



இயலவில்லை. வறட்சி நிவாரணம் போன்ற அரசின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சில காரணங்களினாலும், சமூகப் பாதுகாப்பு குறித்த செலவு, வளர்ச்சிக்கான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைத் தொடர்ந்து நிலை நிறுத்த வேண்டிய இன்றியமையாத தேவைகளினாலும், 1995-96 ஆம் ஆண்டில் இந்த வருவாய்ப் பற்றாக்குறை மேற்கொண்டும் அதிகரித்தது.

36. மத்திய அரசு, 1.1.1995, 1.7.1995 ஆகிய இரு கால அளவுகளில் ஒவ்வொன்றும் 11 சதவீதம் என்ற அளவில், அதிகமாக 2 கூடுதல் அகவிலைப்படித் தவணைகளை அறிவித்தது. மேலும், மத்திய அரசு, 1.4.1995 ஆம் நாள் முதற்கொண்டு, அனைத்துப் பணியாளர்களுக்கும் அவர்களுடைய அடிப்படைச் சம்பள வீதத்தில் 10 சதவீதத் தொகையை இடைக்கால நிவாரணத் தவணைத் தொகையாக வழங்குவதாக அறிவித்தது. ஏற்கெனவே நாம் மத்திய அரசு சம்பள வீதங்களையும், அகவிலைப்படி வீதங்களையும் பின்பற்றி வருவதால், அதற்கிணங்க இவற்றை வழங்க வேண்டி இருந்தது. இதன் விளைவாக, 1995-96 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கத்திற்கு மேல் ரூ.350 கோடி கூடுதல் செலவு ஏற்பட்டது. முதலில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த உணவு உதவித் தொகை ரூ.600 கோடியிலிருந்து ரூ.800 கோடியாக அதிகரித்துள்ளது. வறட்சி நிவாரணச் செலவிற்கென, இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், தொகை ஏதும் ஒதுக்கப்படவில்லை. குடிநீர் பிரச்சினையைச் சமாளிப்பதற்கென இராமநாதபுரம் மாவட்டத்தில், உவர் நீரை நன்னீராக்கும் நிலையத்தை அமைக்கும் வகையில், கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியிருந்தது. 1995-96 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில், ஏற்பளிக்கப்பட்ட ஆண்டுத் திட்ட நிதி ஒதுக்கீடு ரூ.3,200 கோடி என்றிருக்க, திட்டப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு ரூ.3316.24 கோடியாகும். இவ்வனைத்து இனங்களும் சேர்ந்து, 1995-96 ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறை கணிசமான அளவு உயர வழிவகுத்தது.

37. 1995-96 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில், மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருவாய் வரவுகள் ரூ.9,689.22 கோடியாகும். இது, 1995-96 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகளைக் காட்டிலும் ரூ.704.15 கோடி அதிகரித்திருப்பதைக் காட்டுகிறது. இதனால், வரி வசூலை அதிகரிக்க உறுதியான முயற்சிகளை மேற்கொள்ளவும், வளர்ச்சிப் பணிகளுக்கெனப் பெருமளவு நிதி ஆதாரங்களைத் திரட்டவும் முடிந்தது. இது இவ்வாறிருக்க, 1995-96 ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளில் வருவாய்க் கணக்கில் ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ.10,857.84 கோடியாகும். 1995-96 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளிலிருந்து, ரூ.947.22 கோடி அதிகரித்திருப்பதை இது காட்டுகிறது. இதனால், 1995-96 ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளில், (-)ரூ.1,168.62 கோடியாக வருவாய்ப் பற்றாக்குறை அதிகரித்தது. 1995-96 ஆம் ஆண்டில், இவ்வனைத்துப் பற்று-வரவு நடைமுறைகளினால் ஏற்பட்ட பற்றாக்குறை (-) ரூ.354.50 கோடியாகும். 1994-95 ஆம் ஆண்டுக் கணக்குகளில் காட்டப்பட்ட இறுதி இருப்பு (-)ரூ.55.66 கோடியுடன், 1995-96 ஆம் ஆண்டின் இறுதியில் (-)ரூ.410.16 கோடி நிதிப் பற்றாக்குறை இருக்குமென நான் எதிர்பார்க்கிறேன்.

38. 1996-97 ஆம் ஆண்டிற்குரிய இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருவாய் வரவுகள் ரூ.10,543.52 கோடி ஆகும். வருவாய் வகையிலான செலவு ரூ.11,505.61 கோடியாகும். இதனால், வருவாய்ப் பற்றாக்குறை (-)ரூ.962.09 கோடியாகும். 1996-97 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், வருவாய்ப் பற்றாக்குறை அளவு குறைந்ததற்கு முக்கிய காரணம், இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், புதிய

பகுதி-II திட்டங்களுக்கெனத் தொகையேதும் ஒதுக்கப்படாததேயாகும். 1996-97 ஆம் ஆண்டிற்குரிய இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளிலுள்ள அனைத்துக் கணக்குகள் குறித்த பற்று-வரவு நடைமுறைகளினால் கிடைத்த நிகரப் பற்றாக்குறை (-)ரூ.270.66 கோடியாகும். 1995-96 ஆம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட இறுதி இருப்பு (-)ரூ.410.16 கோடி என்றிருக்க, 1996-97 ஆம் ஆண்டு முடிவில் ஏற்படக்கூடிய மொத்த நிதிப் பற்றாக்குறை (-)ரூ.680.82 கோடியாக இருக்கும்.

39. வருவாய்ப் பற்றாக்குறையின் அளவு கவலையளிப்பதாகவுள்ளது. நிதிப் பற்றாக்குறை அளவைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்து வர, முந்தைய நான்கு ஆண்டுகளில், பின்பற்றப்பட்டு வந்துள்ள செலவுக் கொள்கைகள் தொடர்ந்து முனைப்பாகப் பின்பற்றப்படவேண்டும்.

40. இஃது ஓர் இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடாகவிருப்பதால், நிதிப் பற்றாக்குறையைச் சரிக்கட்டுவதற்கெனப் புதிய வரி விதிப்பு நடவடிக்கைகள் எவற்றையும் மேற்கொள்ளக் கருதவில்லை. பொருத்தமான காலத்தில் கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்குத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கருதலாம்.

41. அதிகரித்துவரும் வருவாய் நிதி ஆதாரங்களிலிருந்து கிடைக்கும் தொகையில் ஒரு பங்கை மத்திய அரசு மாநிலங்களுக்கு வழங்க வேண்டும் என்று நான் இத்தருணத்தில் மீண்டும் வலியுறுத்த விழைகிறேன். மத்திய அரசு வரி வருவாய்களை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிப்பது குறித்த மாற்றுத் திட்டம் தொடர்பாக, அதன் முடிவை விரைவில் அறிவிக்க வேண்டும். மேலும், மத்திய அரசின் பல்வேறு திட்டங்களுக்கு விருப்பத்தின்பேரில் நிதி வழங்குதல் குறைக்கப்பட வேண்டும் என்றும், இதற்குப் பதிலாக, மாநிலங்கள் தங்களுடைய நிதி நிலைமைகளையும், வளர்ச்சித் திட்டப் பணிகளையும் திட்டமிடும் வகையில், மத்திய அரசு தன்னுடைய நிதி ஆதாரங்களிலிருந்து திட்ட



வட்டமான பங்கினை மாநிலங்களுக்கு வழங்க வேண்டும் என்றும் நான் வலியுறுத்த விழைகிறேன்.

42. இந்த அரசு, இதன் ஐந்தாண்டுக் கால ஆட்சியை, மிக வெற்றிகரமாக நிறைவு செய்யும் நிலையை நெருங்கி வருகிறது. புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான இந்த அரசின்பால் தமிழ்நாட்டு மக்கள் வைத்திருந்த நம்பிக்கை முழுவதுமாக மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு இந்த அரசு மேம்பட்ட வாழ்க்கைத் தரத்தைப் பெற்றுத் தந்துள்ளது. ஒவ்வொரு நிலையிலும் விரைவான வளர்ச்சி உருவாக்கப்பட்டுள்ளது. கடும் போட்டி நிலவுகின்ற சூழ்நிலையிலும், தமிழ்நாடு, நாட்டில் ஒரு தொழில் மாநிலமாகத் திகழும் நிலையைத் தொடர்ந்து நிலை நிறுத்தி வருகிறது. வேளாண்மை உற்பத்தியும், உற்பத்தித் திறனும் மிகச் சீரான வளர்ச்சியைக் காட்டுகின்றன. இம்மாநிலத்தின் வறுமை நிலையும் கணிசமாகக் குறைந்துள்ளது. பிறப்பு-இறப்பு குறித்த புள்ளி விவரங்களின் வாயிலாக, இத்துறையில் நாம் அடைந்துள்ளதாகத் தெரியவரும் சாதனையும் ஊக்கம் அளிக்கும் வகையில் உள்ளது. அனைத்திற்கும் மேலாக, தமிழ்நாடு, அமைதியைப் பேணிக்காப்பதன் மூலம் இந்நாட்டில் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது. தமிழ்நாடு மாநிலம் இன ஒற்றுமையைக் கட்டிக்காப்பதில் எடுத்துக்காட்டாக, இன ஒற்றுமையின் சின்னமாக விளங்கி வருகிறது. இவ்வகையில் இன்று நாம், நமது நாட்டில் அனைவரும் பின்பற்றுகின்ற சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கிறோம்.



தமிழரசு

பதிவு எண். M. 8676

Licence No.TN/MS(C)/PP-23

தமிழரசு

16.3.1996 ரூ.3





இந்த இதழில்...

★ கிராமக் கோயில் பூசாரிகள் பேரவை மாநாடு:
- மாண்புமிகு முதல்வர் உரை 2

★ தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன வெள்ளிவிழா
- மாண்புமிகு முதல்வர் உரை 9

★ மஞ்சள் மகிமை 17

★ சீரோடு வளரும் ஈரோடு........................ 22

★ மாவீரன் அழகுமுத்துக்கோன் சிலை திறப்பு விழா:
- மாண்புமிகு முதல்வர் உரை 24

★ ஜீவா போக்குவரத்துக் கழகம் 29

★ "ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளாக ஒற்றுமை உணர்வுடன் வாழ்வீர்!"
- இராஜபாளையத்தில் மாண்புமிகு முதல்வர் உரை 33

★ பெரியார் மாவட்டத்தில் தீவிர சுகாதாரத் திட்டம் 39

★ திண்டல் வேலாயுதசுவாமி கோயில்.... 41

★ படமும் செய்தியும்........................ 43

★ பெரியாரில் அறிவொளி 45

இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

வீழ்நாள் படாமை நன்றுஆற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழிஅடைக்கும் கல். (38)

★ ஒருவன் எந்தநாளும் தருமம் செய்தால், அது அவன் பிறவிகளை நீக்கும்.

தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027

பங்குனித் திங்கள் : 3

மலர்: 26 இதழ்: 18

16.3.1996

விலை: ரூபாய் 3

JL

“கிராமக் கோயில் பூசாரிகளின் நலன் காப்போம்!”

பூசாரிகள் பேரவை மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் உரை

முதல் அட்டை சொல்லும் கட்டுரை

சீரோடும் சிறப்போடும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, கிராமக் கோயில் பூஜாரிகளின் இரண்டாவது மாநில மாநாட்டினைத் துவக்கி வைத்து, உங்கள் அனைவரையும் நேரில் காண்பதில், நான் பெருமகிழ்ச்சியும் பேருவகையும் அடைகின்றேன்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், தொன்றுதொட்டு திருக்கோயில்கள், அருங்கலைகளின் இருப்பிடங்களாகவும், நமது பண்பாட்டின் பலகணிகளாகவும், நல்லொழுக்கத்தையும், நன்னெறிகளையும் போதிக்கின்ற கல்விச் சாலைகளாகவும், விளங்கி வந்துள்ளன.

பாரம்பரியச் சிறப்புமிக்க, சீரிய தமிழ்க்கலாச்சாரமும், பண்பாடும், இங்கு ஓங்கு சீர் புகழோடு விளங்குவதற்கு ஆலயங்கள் ஆற்றிய பங்கை நிச்சயமாகக் குறைத்து மதிப்பிட முடியாது. ஆலயங்கள் சமுதாயத்தின் பொதுச் சொத்துக்களாகவும், சமூக, பொருளாதார வேறுபாடுகளால் பிரிவுபடாமல் அனைவரும் சமம் என்ற உணர்வை வளர்க்கும் புனித தலங்களாகவும் திகழ்ந்து வருகின்றன.

எனவே தான் கோயில்களுக்குச் சென்று வருவதையும், இறைவழிபாட்டில் ஈடுபட்டு வருவதையும், மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கக் கூடிய ஆன்மீகப் பயிற்சியாக நமது முன்னோர்கள் கருதி வந்தார்கள். நன்னெறிகளையும், நற்பண்புகளையும் வளர்த்து, மக்கள் மனங்களில் நியாய உணர்வுகள் மேலோங்கச் செய்கின்ற, நல்வழி காட்டும் நன்னெறிப் பாதைகளாகத் திருக்கோயில்கள் தமிழகத்தில் செயல்பட்டு வந்துள்ளன.

திருக்கோயில்களைத் தங்கள் சமூக வாழ்க்கையின் தவிர்க்க முடியாத அங்கங்களாகத் தமிழகத்து மக்கள் ஆண்டாண்டு காலமாக கருதி வருகின்றார்கள் என்பதையும், நான் நன்கு அறிவேன்.

எனவேதான், நாங்கள் ஆட்சிக்கு வந்த உடன், எங்கள் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தபடியே, அனைத்து மக்களும் மகிழ்ச்சி அடையும் வண்ணம், சிதிலம் அடைந்து பாழடைந்து கிடந்த, பல்வேறு திருக்கோயில்களின் புனரமைப்புப் பணிகளை, ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் மேற்கொண்டோம்.

எந்த ஒரு அரசு, மக்களின் உள்ளார்ந்த உணர்வுகளைப் புரிந்து கொண்டு, அதற்கேற்ப தனது கொள்கைகளுக்கு வடிவம் கொடுத்து, காலத்திற்கேற்ப ஜனநாயக உணர்வுடன் செயல்பட்டு வருகின்றதோ, அந்த அரசுதான் உண்மையிலேயே, மக்கள் நல அரசாக விளங்க முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அந்த உணர்வின் அடிப்படையில் நாங்கள் திருக்கோயில்களின் புனரமைப்பை மேற்கொண்டபோது, சிலர் எங்களைத் திசை திருப்பும் முயற்சிகளில் ஈடுபட்டனர். ஆனால், நாங்கள் எங்கள் கொள்கைகளில் உறுதியாக நின்றோம். தமிழகத்துப் பெருமக்களின் மனங்களை நான் நன்கு அறிந்து வைத்திருந்ததே அதற்குக் காரணம். மக்களின் எண்ணங்களுக்கு ஏற்ப நமது செயல்பாடுகள் அமையும் போது, இயற்கையாகவே மக்கள் சக்தியின் பேராதரவும், பேரன்பும் நமக்குப் பரிபூரணமாகக் கிடைத்து விடும் என்பதை எங்கள் ஆலயத் திருப்பணிகள், இந்த உலகத்திற்குத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளன.

ஏராளமான சொத்துக்கள் இருந்தும், பல கோயில்கள் நிரந்தர வருமானமின்றி பொருளாதாரச் சீரழிவில் சிக்கித் தவித்ததையும், பல ஆண்டு காலமாகப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப் படாததால் புராதனக் கட்டடங்களும், கலை வடிவங்களும் சிதிலமாகி வருவதையும் அறிந்து இவற்றைத் தடுக்க, நாங்கள் ‘தமிழ்நாடு திருக்கோயில் நிருவாக வாரியம்’ ஒன்றை ஏற்படுத்தினோம்.

திருக்கோயில்களின் புனரமைப்பிற்கும், சீரிய பராமரிப்பிற்கும், தேவையான நிதி ஆதாரங்களைத் திரட்ட “தமிழ்நாடு முதலமைச்சரின் திருக்கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதி” ஒன்றை நான் ஏற்படுத்தினேன் இந்த நிதியில் இன்று வரை வட்டித் தொகையுடன் சேர்த்து, 8 கோடியே 37 இலட்சம் ரூபாய் சேர்ந்துள்ளது என்பது மகிழ்ச்சித் தரக் கூடிய ஒரு செய்தியாகும்.

இந்த நிதிக்கு வாரி வழங்கிய நல்ல மனம் படைத்தவர்களுக்கு, இந்த நேரத்தில் என் இதயம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தின் பல்வேறு திருக்கோயில்களின் புனரமைப்பிற்கும், மேம்பாட்டிற்கும் இந்த நிதியிலிருந்து இதுவரை 4 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது ஒரு மாபெரும் சாதனை ஆகும். 62 திருக்கோயில்களின் திருப்பணிக்கும் கன்னியாகுமரி தேவஸ்வோம் வாரியத்தின் பணிகளுக்கும் இதுவரை 2 கோடியே 72 இலட்சம் ரூபாய், நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. ஒருகாலப் பூஜைத் திட்டத்தின் கீழ் 6,238 திருக்கோயில்கள் பயன்பெறும் வகையில், 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவிடப் பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில், தமிழகத்தில் கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு ஆகியவற்றில், ஒரு புதிய மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது. தமிழக மக்களின் மனங்களில் கோயில்களைப் புனரமைக்க வேண்டும் என்று ஆழமாகப் பதித்திருந்த ஒரு ஆத்மார்த்த விருப்பத்திற்கு நாம் செயல் வடிவம் அமைத்துக் கொடுத்தோம் என்கிற மன நிறைவு எங்களுக்கு இன்று ஏற்பட்டுள்ளது.

கோயில்கள் பொது மக்களின் சொத்துக்கள், ஜாதி சமய வேறுபாடின்றி அனைவரும் கூடுகின்ற சமுதாயக்கூடங்கள், கல்விச்சாலைகள் என்கின்ற உணர்வோடு பார்க்கும் போது ஆலயத் திருப்பணி உண்மையிலேயே ஒரு உன்னத சமுதாயப் பணி என்பதில் சந்தேகம் இல்லை.

நமது மாநிலத்தில் உள்ள பல திருக்கோயில்களைச் சீரமைத்தும், புனரமைத்தும், கும்பாபிஷேகங்களை நடத்தி வருவதும், மக்களின் உள்ள உணர்வுகளுக்கு மதிப்பு அளிக்கிற ஒரு செயல் என்பது தான் உண்மை.

எங்கள் ஆட்சிக் காலத்தில், கலைப் பொக்கிஷங்களாக விளங்கும் தொன்மை மிகுந்த 680 திருக்கோயில்களில் திருப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, மகா கும்பாபிஷேகங்கள் நடைபெற்றுள்ளன. குறிப்பாக, 1995-ஆம் ஆண்டில் மட்டும் கும்பாபிஷேகங்கள் நடைபெற்றுப் புதுப்பொலிவு பெற்ற திருக்கோயில்களின் எண்ணிக்கை 315 ஆகும். தற்போது 37 கோடி ரூபாய் செலவில், 702 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

"ஒரு காலப் பூஜை" திட்டத்தின் கீழ், தலா 25,000 ரூபாயில் அறக்கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டு, 6,233 திருக்கோயில்கள் பயன்பெற்று வருகின்றன. இத்திட்டத்தைச் செயல்படுத்த 15 கோடியே 60 இலட்சம் ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

பெரிய திருக்கோயில்களுக்கு மட்டுமின்றி, கிராமப்புறங்களில் அமைந்துள்ள சிறிய கோயில்களின் புனரமைப்பும், சீரமைப்பும் அவசியம் என்பதை நாங்கள் நன்கு உணர்ந்து உள்ளோம். அத்தகைய கிராமக் கோயில்களைப் பராமரித்து, அப்பகுதி வாழ் மக்களின் இறை உணர்வுக்குத் தூண்டுகோலாக விளங்கிவரும் கிராமக் கோயில் பூஜாரிகள் அனைவரும் நமது பாராட்டிற்கும் அன்பிற்கும் உரியவர்கள் ஆவார்கள்.

இதுவரை கவனிக்கப்படாமலேயே இருந்த, எத்தனையோ துறைகளை எடுத்து, அவற்றிற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து, அவற்றிற்குப் புதிய பொலிவினை, ஏற்படுத்தித் தந்த அரசு, எங்கள் அரசு. அதே உணர்வுடன், கிராமக் கோயில்களின் திருப்பணியிலும், கிராமக் கோயில் பூஜாரிகளின் வாழ்க்கை முன்னேற்றத்திலும் ஒரு புதிய பொலிவினை ஏற்படுத்த எங்கள் அரசு உறுதி பூண்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசியவர்கள், கிராமக் கோயில்களின் பெருமைகளையும், பாரம்பரிய சிறப்பையும், கிராமத் தேவதைகளைத் தமிழக மக்கள் வழிபட்டு வருவதையும், சுட்டிக் காட்டினார்கள். கிராமக் கோயில்களைப் புனரமைக்கவும், கிராமக் கோயில் பூஜாரிகளின் நலன் காக்கவும், என் முன் வைக்கப்பட்ட பல கோரிக்கைகளை, இந்த இடத்திலேயே ஏற்றுக் கொண்டு, அவற்றிற்கான அறிவிப்புகளை இதே விழா மேடையில் வெளியிடுவதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

★ பெற்றோர்கள்தாம் வரதட்சணைக் கொடுமையில், முன்னணிக் குற்றவாளிகளாயிருக்கின்றனர். தாங்கள் தம் மகனின் கல்விக்காகச் செலவழித்த பணம், தம் கடமையைச் சேர்ந்தது என்று கருதாதபடி, ஏதோ ஒரு வியாபாரத்தில் போட்ட முதலீடாகக் கருதிக் கொண்டு அந்த முதலீட்டையும், வட்டியையும் சேர்த்து, அவனுக்கு வரப் போகின்ற மனைவி மூலமாக வசூல் செய்துவிட வேண்டுமென்றே கருதுகின்றனர்.

தந்தை பெரியார்

1. கிராமக் கோயில் பூஜாரிகளாகச் செயல்பட்டு, முதுமையின் காரணமாக அந்தப் பணிகளை மேற்கொள்ள இயலாமல், ஓய்வு பெற்ற நிலையில் உள்ள பல பெரியவர்கள், வருமானம் ஏதுமின்றி, வறுமையில் வாடி வருகிறார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். அத்தகைய பெருமக்களின் சேவையை நினைவு கூர்ந்து, அவர்களின் பொருளாதார உயர்வுக்கு வழி வகுக்க, அவர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். "கிராமக் கோயில் பூஜாரிகள் ஓய்வூதியத் திட்டத்தின்" கீழ் 20 ஆண்டு காலம் பூஜாரிகளாகச் செயல்பட்ட 60 வயதைக் கடந்த பூஜாரிகளுக்கு, 400 ரூபாய் மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்படும். இத்திட்டத்தின் முதல் கட்டமாக, 1,500 பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. வயதான அர்ச்சகர்கள், ஓதுவார்கள், வேத பாராயணம் செய்வோர் மற்றும் இசை கலைஞர்கள் ஆகியோருக்கு எங்கள் அரசு

மாதமொன்றுக்கு 300 ரூபாய் ஓய்வூதியம் வழங்கி வருகின்றது. இந்த ஓய்வூதியத் தொகை 300 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இந்த உயர்வு 1.4.1996 முதல் அமல் செய்யப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. சிதிலமடைந்த பல திருக்கோயில்களில், புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டு வருவதைப் போலவே, கிராமக் கோயில்களிலும் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமக் கோயில்கள் திருப்பணிகள் திட்டத்தின் கீழ், கிராமக் கோயில்களின் புனரமைப்பிற்காக, 5,000 ரூபாய் வரை நிதி உதவி வழங்கப்படும். தமிழகத்தில் அமைந்துள்ள கிராமக் கோயில்கள் அனைத்தும் பரவலான முறையில் பயன் பெறும் வண்ணம், ஆண்டொன்றுக்கு 50 இலட்சம் ரூபாய் அந்தத் திருப்பணிகளுக்கென, ஒதுக்கீடு செய்து செலவிடப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. எங்கள் அரசால் செயல்படுத்தப்பட்டு வரும், ஒரு காலப் பூஜை திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட, 25,000 ரூபாய்க்கான அறக்கட்டளையிலிருந்து கிடைக்கும் மாதாந்திர வட்டித் தொகை, இந்து அறநிலைய ஆட்சித் துறை அலுவலர்கள் மூலமாக, பூஜாரிகளுக்குச் சென்றடைவதில் காலதாமதம் ஏற்பட்டு வருவதாக எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தக் குறையைப் போக்கிட ஒரு காலப் பூஜை திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட அறக்கட்டளையிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை, இனிமேல் அர்ச்சகர்களுக்கும், பூஜாரிகளுக்கும் நேரடியாக வழங்கப்படும். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தகுந்த ஏற்பாடுகள் விரைவில் செய்யப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

படித்தவன் உழ வேண்டும்; உழுபவன் படிக்க வேண்டும். படிப்பான் அறிவுப் பசியைத் தீர்க்க - உழுவான் உற்பத்தியைப் பெருக்க என்ற நிலை ஏற்பட வேண்டும்!

—பேரறிஞர் அண்ணா

5. வணிக அமைப்புகளுக்கான மின் கட்டண விகிதத்தின் அடிப்படையில் கிராமக் கோயில்களிடமிருந்து மின் கட்டணம் வசூலிக்கப்படுவதாகவும், இதனால் கிராமக் கோயில்கள் பல பாதிக்கப்பட்டு உள்ளதெனவும் எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. கிராமக் கோயில்களுக்கு மின் கட்டணத்தில் என்னென்ன சலுகைகள் வழங்க முடியும் என்பதை ஆராய்ந்து, விரைவில் அதற்கான ஆணைகள் வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. தற்போது கிராமக் கோயில்களில் பல்வேறு பூஜை முறைகள் கடைப்பிடிக்கப் பட்டு வருகின்றன. சரியான பயிற்சி இல்லாததால், பல கோயில்களில் பூஜை முறைகள் சரிவர மேற்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டு வருவதையும் நான் நன்கு அறிவேன். எனவே, பூஜை முறைகள் குறித்த முறைப்படியான பயிற்சிகள், கிராமக் கோயில் பூஜாரிகளுக்கும் வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமீபத்தில் திருச்சியில் துவக்கப்பட்ட வேத ஆகமக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம், கிராமக் கோயில் பூஜாரிகளுக்கும் முறைப்படி புத்தொளிப் பயிற்சி அளிக்கப்படும். இதற்கான பாடத் திட்டம் தயாரிக்கப்பட்டு, பயிற்சி வகுப்புகள் விரைவில் துவக்கப்படும் என்று உறுதி அளிக்கிறேன்.

7. கிராமக் கோயில் பூஜாரிகளுக்கு வீட்டு வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற கோரிக்கையும் என் முன்பு வைக்கப் பட்டுள்ளது. தற்போது தமிழக அரசால்

செயல்படுத்தப்பட்டு வரும், தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த பூஜாரி பெரு மக்களுக்கு, முன்னுரிமையின் அடிப் படையில் தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரித்துக் கொள்கிறேன். இதர இனத்தைச் சேர்ந்த பூஜாரிகளுக்கும், கூட்டுறவுத் துறையின் மூலம் வீட்டு வசதி ஏற்படுத்தித் தரும் திட்டம் ஒன்று எங்கள் அரசால் விரைவில் செயல்படுத்தப்படும் என்ப தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

8. கிராமக் கோயில்களுக்குச் சொந்த மான நிலங்களில் ஏற்படுகின்ற ஆக் கிரமிப்புகளை அகற்றுவற்கும் எங்கள் அரசு நிச்சயமாக உறுதுணையாக விளங்கும். கிராமக் கோயில் பூஜாரிகள், கிராமக் கோயில்களின் சொத்துக்களில் ஏற் பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவ தற்கும், அத்திருக்கோயில்களின் சொத்துக் களைப் பாதுகாப்பதற்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களை அணுகினால், முன்னுரிமை யின் அடிப்படையில் அவர்களது குறைகளைத் தீர்த்து வைக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதையும், அதற்கான ஆணைகளை எங்கள் அரசு வழங்கும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது தொடர்பாக எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தக்க அறிவுரைகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9. கிராமக் கோயில் பூஜாரிகள் மரண மடைந்தால் அவர்களது குடும்பம் வறுமையில் வாடாமல் இருக்க நிவாரண உதவித்தொகை வழங்கவேண்டும் என்ற கோரிக்கையும் என் முன்பு வைக்கப் பட்டுள்ளது. அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, இனி கிராமக் கோயில் பூஜாரிகள் மரணமடைய நேரும்போது அவர்களது குடும்பத்திற்கு 10,000 ரூபாய் நிவாரண உதவித் தொகை வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள் கிறேன்.

இன்னும் சில கோரிக்கைகள் என் முன்பு வைக்கப்பட்டுள்ளன. அவற்றை யெல்லாம் கனிவுடன், பரிவுடன் பரிசீலித்து தக்க முடிவுகளை விரைவில் அறிவிப்பேன் என்பதையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமக் கோயில் பூஜாரிகளின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கும், பொரு ளாதார மேம்பாட்டிற்கும், நல்வாழ்விற்கும், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, உற்ற துணையாக, அவர்களது உரிமைகளைப் பாதுகாக்கும் ஒரு அரணாக என்றென்றும் விளங்கும் என்று உறுதி கூறுகிறேன்.

இந்த சீரிய விழாவில் நல்ல இறை உணர்வையும், சமுதாய நல்லுணர்வையும் ஒன்றுபடுத்தி, ஒரு புதிய ஆன்மீக உணர்விற்கு வழிவகுத்த, காஞ்சிப் பெரியவர் ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள் கலந்துகொண்டிருப்பது நமக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. காஞ்சிப் பெரியவர் அவர்களுக்கும், காஞ்சி பால பெரியவர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காஞ்சிப் பெரியவர் அவர்கள் ஆசி வழங்குகின்றபோது, இதுவரையில் இந்தச் சிறியவள் ஆட்சிக் காலத்தில் செய்த சில பணிகளைப் பாராட்டி பேசினார்கள். அதை என் வாழ்க்கையில் நான் பெற்ற பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

எங்கள் அரசு தொடர்ந்து ஆலய திருப்பணிகளில் ஈடுபட்டு, ஆலயப் பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு உறுதுணை யாகவும், பாதுகாப்பாகவும் விளங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் அனைவரும் எல்லா வளங்களும், நலன்களும் பெற்று, வாழ்வாங்கு வாழ வேண்டும் என்ற நிறைந்த மனதோடு நெஞ்சார வாழ்த்தி விடைபெறுகிறேன். ❋

சக்தி சர்க்கரை ஆலை

கோவை-18



உயர்தர வெண்படிக சர்க்கரை, எரிசாராயம், மாசு கட்டுப்பாடு உபகரணம், சோயா எண்ணெய் மற்றும் வார்ப்பகப் பொருட்கள் உற்பத்தியாளர்கள்

தலைமை & பதிவு அலுவலகம்

180, ரேஸ்கோர்ஸ் ரோடு, தபால்பெட்டி எண் 3775,
கோயம்புத்தூர் - 641 018

சர்க்கரை ஆலைகள்

சக்திநகர் - 638 315
பவானி தாலுக்கா
பெரியார் மாவட்டம்

சுனாபால்
படம்பகார் - 754 031
சுட்டாக் மாவட்டம்
ஒரிஸ்ஸா

கண்ணாரிருப்புமாத்தூர்
படமாத்தூர் - 623 560
சிவகங்கை தாலுக்கா
பசும்பொன்தேவர் திருமகன் மாவட்டம்

கொரியன்
ஹரிப்பூர் - 759 013
தென்கனால் மாவட்டம்
ஒரிஸ்ஸா

வார்ப்பகப் பிரிவு

பல்லக்கவுண்டன் பாளையம்
பெருந்துறை தாலுக்கா,
பெரியார் மாவட்டம்

சக்தி சோயாஸ் டிவிசன்
மாசிநாயக்கன் பாளையம்
அம்பிராம்பாளையம் (P.O.)
பொள்ளாச்சி தாலுக்கா - 642 103

நல்வாழ்த்துக்கள்

AGNI STEELS

PRIVATE LIMITED

Admn. Office: 58-A, Perundurai Road, G.K. Complex, Opp. Rana, Erode-638 011

Phone: Off: 215426, 216871, Grams: Agni, Fax: 04294 - 20560, Telex: 0856-230 (Attn. Agni)

கட்டடங்களுக்குத் தேவையான

தரம்மிக்க முறுக்குக் கம்பிகள் 10 m.m. to 25 m.m.,

M S ரவுண்ட், M S பட்டா

தயாரிப்பாளர்கள்

அக்னி ஸ்டீல்ஸ் பிரைவேட் லிமிடெட்,

ஈரோடு

போன்: 215426, 216871

ஈங்கூர், பெருந்துறை

போன்: 04294, 20560, 26229, 26211

Regd Office: 2, Mohan Kumaramangalam Street, Surampatti, Erode - 638 009. TNGST No. 152/2900829, CST No. 440327/10-1-90

Factory: Kavandanur Road, Ingur - 638 058, Perundurai (Tk) Phone: STD: 04294-26229, 26211, 26212

● இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் வெள்ளி விழா

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் வெள்ளி விழா கடந்த 1.3.96 அன்று சென்னைக் கலைவாணர் அரங்கத்தில் புதுமையோடும், பொலிவோடும் நடைபெற்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

கலைவாணர் அரங்கம் வழியெங்கிலும் கலைநயத்தோடு பொன்னிற அணங்குச் சிலைகள் அழகுற வைக்கப் பட்டிருந்தன. அவைமீது மாலை நேர மஞ்சள் வெயில் பட்டு ஒளிவீசியது. அதனால் பக்கத்திலிருந்த வண்ணத் தோரணங்கள் தங்கத் தகடுகள் போல காற்றில் தவழ்வதைக் காண முடிந்தது.

வண்ணச் செடிகளாலும், பலநிறப் பூக்களாலும் வேயப் பட்ட அழகான கூண்டுப் பாதை அமைக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்களை வரவேற்க அழகுணர்வோடு வடிவமைக்கப்பட்ட அப்பாதை யாவரையும் கவர்ந்தது.

அதனைக் கடந்து அரங்கினுள் வந்தபோது, மேடையின் பின்னணியில் பசுமையே எங்கும் விரிந்து பரவியிருந்தது. மேடையின் இருபுறங்களிலும் வீணை இசைக்கும் பெண்ணின் உருவச்சிலை எடுப்பாக பொன்னிறத்தில் பளிச்சிட்டது. கல்வி சார்ந்த விழா என்பதால் கலைமகளின் திருவுருவமோ அல்லது முத்தமிழின் மூன்றாவது அங்கமான இசைத்தமிழின் உருவகமோ என்று எண்ண வைத்தது.

விழாவுக்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமையேற்றார். தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு எப்.எம். இராசரத்தினம் அவர்கள் உணர்ச்சி மிகு வரவேற்புரையாற்றினார்.

விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி வைத்து வெள்ளிவிழா நிகழ்ச்சிகளைத் தொடங்கிவைத்தார்.

விழாவில், காஞ்சிபுரம், கடலூர், நாகர்கோவில், ஆகிய இடங்களில் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன வட்டார அலுவலகங்களும், பணியாளர் குடியிருப்புகளும், கிடங்குகள், விருந்தினர் இல்லம் ஆகிய கட்டடங்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மங்கல இசை முழங்க அடிக்கல் நாட்டினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனது பேருரைக்குப் பின்னர் வெள்ளி விழா சிறப்பு மலரை வெளியிட முதல் பிரதியை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் பெற்றுக் கொண்டார். பிறகு, 1995-ஆம் ஆண்டில் 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்புத் தேர்வுகளில் தமிழ்ப் பாடத்தில் மாநில அளவில் முதல் மற்றும் இரண்டாவது இடங்களைப் பெற்ற மாணவ, மாணவிகள் திரு விவேக், செல்வி தாவுத் பேகம், செல்வி மீனாட்சி, திரு மகேஷ் ஆகியோர்களுக்கு 2 சவரன் தங்கப் பதக்கமும், சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசுகளும், ஒவ்வொரு மாவட்டத்திலும் 10-ஆம்

மின்னணுப் பலகையில் மின்னிடும் புரட்சித்தலைவியின் புகழ்க்கோவை!

இதுவரை இல்லாத புதுமை

நிமிர்ந்த நடையும்
நேர்கொண்ட பார்வையும்
கொண்ட புரட்சித்தலைவியே
வருக! வருக!
பெண்குலத்தின்
பொன்விளக்கே!
அன்போடு அருள்
செய்யும் அன்னையே
வருக! வருக!
பாடநூல் கழகமாம்
அறிவுக்கோட்டத்தை
அறக்கோட்டமாக்கிய
அற்புதத் தலைவியே
வருக! வாழ்க!
தமிழர்தம் வாழ்வுக்கு
விளக்கேற்றும் அன்னையே
வருக! வருக!
பாசப் பிணைப்பில்
கட்டுண்டு களிப்புறும்
மாசற்ற தலைவியே வருக!
வருக!
விளையாட்டுத் துறையில்
மறுமலர்ச்சி கண்ட
வீரத்திருமகளே வருக!
வருக!
சமூக நீதி காத்த
வீராங்கனையே வருக! வருக!
சத்துணவு நல்கிடும் சரித்திர
நாயகியே வருக! வருக!
ஏழைகள் வாழ்வு
ஏற்றம் பெற
அள்ளி வழங்கும் வெள்ளி
விழா நாயகியே வருக!
வருக!
எங்கள் தங்க முதல்வரே
வருக! வருக!
அறிவுச் சுடரே! அருந்தவ
முதல்வரே வருக! வருக!
மாதர்குல மணிவிளக்கே!
மாண்புமிகு முதல்வரே
வருக! வருக!
சாதனைகளின் இமயமே!
முதல்வரே வருக! வருக!
அருளாசி வழங்கும்
அன்னையே வருக! வருக!

சென்னைக் கலைவாணர் அரங்கில் நடைபெற்ற தமிழ் நாட்டுப் பாடநூல் கழகத்தின் வெள்ளி விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வரவேற்கும் மேலே காணப்படும் சொற்கோவைகள், மேடையின் முன்னால் அமைக்கப்பட்டிருந்த மின்னணு பலகையில் (Electronic Display Board) வரிசையாக ஒன்றன்பின் ஒன்றாக போட்டிப் போட்டுக்கொண்டு வந்தன. பொருள் பொதிவுமிகுந்த அந்த வார்த்தைக் கோலங்கள புதுமையாகவும், அதே நேரத்தில் கலைவாணர் அரங்கில் இது வரை நடைபெற்ற விழாக்களில இல்லாத தனிச்சிறப்பாகவும் இருந்தது. எல்லோரையும் கவர்ந்த இந்த மின்னணுப் பலகையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்த்து மகிழ்ந்தார்.

வகுப்பு, 12-ஆம் வகுப்புகளில் தமிழ்ப் பாடத்தில் முதல் மற்றும் இரண்டாம் இடங்களைப் பெற்ற மாணவ, மாணவிகளுக்குப் பணப் பரிசும், சான்றிதழ்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப் பட்டன.

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தில் 25 ஆண்டுகள் பணி முடித்த ஊழியர்களுக்கும் பணப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப் பட்டன. அவ்வூழியர்களுள் ஒருவர் மாண்புமிகு முதல்வர் அவர்களின் காலில் விழுந்து வணங்கிய போது, பார்வையாளர்கள் கூட்டத்தில் மகிழ்ச்சி ஆரவாரம் ஏற்பட்டது.

மாண்புமிகு முதல்வர் பொது நிவாரண நிதிக்கு தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் சார்பில் ரூ.50 இலட்சத்துக்கான காசோலையை அழகிய பேழைக்குள் வைத்து தமிழ் நாட்டுப் பாடநூல் கழகத்தின் தலைவர் திரு எப்.எம். இராசரத்தினம் வழங்கிச் சிறப்பித்தார்.

விழாவில், மாண்புமிகு கல்வியமைச்சர் திரு பொன்னுசாமி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இறுதியில் தமிழ்நாடு அரசு கல்வித்துறைச் செயலாளர் திரு எல்.என். விஜயராகவன், இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை யாற்றினார்.

விழாவில் மாண்புமிகு அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத்தலைவர்கள் கலந்து கொண்டார்கள். சிறப்பான இந்த விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல சிறப்புத் திட்டங்களை மகிழ்வோடு அறிவித்தார்.

நிகழ்ச்சித் தொகுப்பு:
எம்.வி.எம். அசோகன்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் குறிப்பிடத்தக்க வளர்ச்சிப் பணிகள்

- ★ 1970-ஆம் ஆண்டு பாடநூல் நிறுவனமாக தொடங்கப் பெற்றது. 1993-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகமாக மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் உயர்த்தப் பட்டது.
- ★ 63 இலட்சம் குழந்தைகளுக்கு ரூ.24 கோடி மதிப்பீட்டில் இலவசப் பாடநூல்கள் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளன.
- ★ 1970-71-ஆம் கல்வியாண்டில் 36 தலைப்புகளில் 61.24 இலட்சம் பிரதிகள் மட்டும் வெளியிடப்பட்டன. தற்போது (1995-96) 384 தலைப்புகளில் 500 இலட்சம் பிரதிகள் வெளியிடப்பட்டுள்ளன.
- ★ ரூ.32 இலட்சம் மதிப்பில் 10,000 கிராமப்புற நடுநிலைப் பள்ளி நூலகங்களுக்கு 10 தொகுதிகள் கொண்ட 'குழந்தைகள் கலைக் களஞ்சியம்' அச்சிட்டு வழங்கப் பட்டுள்ளது.
- ★ மாநில அளவில் தமிழ்ப் பாடத்தில் முதன்மை இடத்தைப் பெறும் மாணவ, மாணவியருக்குப் 'புரட்சித் தலைவி' அவர்கள் பெயரால் 'தங்கப்பதக்கம்' பரிசுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.



"மனித வளத்தை உயர்த்த நாம் மேற்கொள்ளும் செலவினம் வளரும் தலைமுறையினரின் உயர்வுக்கான மூலதனம்"

–மாண்புமிகு முதல்வர் உரை

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, உங்கள் அனைவரையும் நேரில் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சியும் பேருவகையும் அடைகின்றேன்.

1970-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3-ஆம் நாளன்று தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனமாக அதாவது Tamil Nadu Text Book Society ஆக ஒரு சிறிய அமைப் பாக தனது பணியைத் தொடங்கிய இந்த நிறுவனம், இன்று கல்வி வளர்ச்சியில் தன்னை முழுமை யாக அர்ப்பணித்துக் கொண்டு ஆலவிருட்சமாக வளர்ந்துள்ளது.

36 பாடநூல் தலைப்புகளில் மட்டும் பாட நூல்களை அச் சிட்ட நிறுவனம் இன்று 384 பாட நூல் தலைப்புகளில் புத்தகங் களை வெளியிட்டு வருகின்றது. 61 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பிரதிகளை மட்டுமே அச்சிட்டு, தனது பணியைத் துவக்கிய இந்த நிறுவனம் 26 கோடி ரூபாய் மதிப்புள்ள விற்பனைப் பிரதி களையும், இலவச பாடநூல் திட்டத்தின் கீழ் 31 கோடி ரூபாய் மதிப்பில் இலவச பிரதிகளையும் அச்சிட்டு வழங்கி வருகிறது. ஒரு துடிப்புள்ள மக்கள் சேவை நிறுவனம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக இருந்து வரும் நிறுவனம் இது என்பதற்கு இதை விடப் பெரிய சான்று அவசிய மில்லை என்று கருதுகிறேன்.

பாடநூல் தலைப்புகளின் எண்ணிக்கையும், அச்சிடும் பிரதிகளின் மதிப்பு மட்டும் உயர்ந்துள்ளதால், இந்த நிறுவனம் உயர்ந்து விட்டதாக நான் கருதவில்லை. ஆனால் ஆண்டுக்கு ஆண்டு பாடநூல் களின் தரத்தை உயர்த்துவதிலும், இதர கல்விப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடு படுத்திக் கொள்வதிலும், காட்டி வரும் ஆர்வத்தால், இந்த நிறுவனம் உயர்ந்து நிற்பதாக நான் கருதுகிறேன்.

பாடநூல்களை அச்சிட்டு வழங்கும் ஒரு வணிக அமைப் பாக, ஒரு சிறிய கட்டத்திற்குள் அடைப்பட்டு விடாமல், தமிழக அரசின் மனித வள மேம் பாட்டுக் கொள்கைகளுக்கு செயல் வடிவம் கொடுக்கும் ஒரு தூண்டுகோலாக இந்த நிறுவனம் திகழ்ந்து வருகிறது.

ஒரு நிறுவனம் 25 ஆண்டுகள் செயல்பட்ட ஒரே காரணத்தால் கொண்டாடப்படும் விழா அல்ல இந்த வெள்ளி விழா. காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப, கல்விப் பணியை கடமை உணர்வுடன் ஆற்றிய, ஒரு நிறுவனம் தனது சாதனைகளைப் பெருமிதத்துடன் நினைத்துப் பார்க்கும் ஒரு வெற்றி விழா. அதுவும் எங்கள் ஆட்சிக் காலத்தில் கூட்டுறவு சங்கமாக இருந்த இந்த அமைப்பு, 1993-ஆம் ஆண்டில் ஒரு கழகமாக அதாவது ஒரு Corporationஆக வளர்ந்து, உபரி நிதியை பல நற்பணிகளில் செல விடும். நல்லதொரு அமைப்பாக மாறியுள்ளதை எண்ணி, நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். ஏனென்றால் வெற்று நாட்களை எண்ணி, மகிழ்ச்சி அடைப வர்கள் அல்ல நாங்கள்! வாழ்

> வாழ்க்கை அவனவன் வாழ்வதற்கு என்று மட்டும் கருதக்கூடாது மற்றவர்கள் நலனுக்கும் என்று கருத வேண்டும்.
>
> –தந்தை பெரியார்

நாளில் நற்பணிகளை மேற் கொண்டு செயல்படும் நாள் எல்லாம் வெற்றி நாட்களாக கருதும் மனம் படைத்தவர்கள்.

மனித வள மேம்பாட்டிலும், மனித வள ஆற்றலைப் பெருக் குவதிலும், எங்கள் அரசு ஆரம் பத்திலிருந்தே ஒரு உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகின்றது. மனித வளத்தையும், மனித ஆற்றலையும் பெருக் குவதன் மூலம் தான் இந்த நாட்டிலிருந்து கல்லாமையையும், இல்லாமையையும் ஒரு சேர விரட்டி அடிக்க முடியும் என்பதை, நாங்கள் நன்கு உணர்ந்து செயல்பட்டு வரு கிறோம்.

மனித வளத்தை உயர்த்த நாம் மேற்கொள்ளும் செலவினம், வளரும் தலை முறையினரின் உயர்வுக்கான மூலதனம் என் பதை, எங்கள் அரசு செயல் படுத்தி, வரும் பல்வேறு திட்டங்கள் மூலம் நிரூபித்துக் காட்டி உள்ளோம். "அனைவருக்கும் ஆரம்பக் கல்வி" என்பதை நாங்கள் கட்டாயம் ஆக்கி யுள்ளோம். அதுமட்டுமின்றி, மற்ற மாநிலங்களுக்கு முன் னோடியாக, "ஆரம்பக் கல்வியை" கட்டாயமாக்கி, அதை அமல்படுத்த ஒரு சட்டத்தையும் இயற்றிய ஒரே அரசு எங்கள் அரசு தான்.

இரண்டாயிரம் ஆண்டிற்குள், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குழந்தைகளும் குறைந்தபட்ச ஆரம்பக் கல்வியைப் பெற்றுக் கொண்டிருக்கின்ற உன்னதமான சூழ்நிலையை நாங்கள் நிச்சயம் உருவாக்கிக் காட்டுவோம்.

குறிப்பாக பெண் கல்வி வளர்ச்சி இன்று புதிய பரிமாணத்தைப் பெற்றுள்ளது. ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் 1.38 கோடி குழந்தை களில், 61 இலட்சத்து 79 ஆயிரம் பேர் மாணவியர்களாக இருக் கிறார்கள். அதாவது, பள்ளி களில் பயில்பவர்களில் கிட்டத் தட்ட 45 சதவிகிதம் பேர், பெண் குழந்தைகள் என்பது மகிழ்ச்சிக் குரிய செய்தி ஆகும். இந்த நிலை மேலும் உயரும் போது ஏற்படும் சமுதாய மறுமலர்ச்சி, ஒரு சீரிய முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் என்பது உறுதி.

கல்வி வளர்ச்சியில், பாட நூலின் பங்கு மிகவும் முக் கியமானதாகும். ஏனென்றால் பாட நூல்களும், பாடத் திட்டங் களும், இளைய தலைமுறை யினரின் மனங்களைப் பக் குவப்படுத்தி, நன்னெறிகளை அவர்கள் உள்ளத்தில் பதிய வைத்து, நல்வாழ்வியல் கோட் பாடுகளையும், தத்துவங்களை யும் உணரச் செய்து எதிர்கால சவால்களுக்கு அவர்களைத் தயார் செய்யும் மாபெரும் சாதனங்களாக அமைந்துள்ளன. கற்றல் கற்பித்தல் இரண்டிற்கும் அடிப்படையாக விளங்குவது பாடநூல்.

சென்னை தலைமைச் செயலகத்தில் ஆதிதிராவிட நல உயர் மட்டக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. டி.எம். செல்வ கணபதி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆனந்தன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். (5.3.96)

இளம் இதயங்களைப் பண்படுத்தும் சக்தி வாய்ந்த ஒரு ஆய்தம் பாடநூல் என்பதில் ஐயமில்லை. எனவே தான் பாடநூல்களைத் தெரிவு செய்வதிலும், அவற்றை முறைப்படி அச்சிட்டு வழங்குவதிலும், எங்கள் அரசு ஒரு புதிய முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கைப்படி, 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை, பாடத் திட்டத்தை அதாவது Syllabus-ஐ காலத்தின் தேவைகளுக்கேற்ப மாற்றி அமைக்க வேண்டும். அதன் அவசியத்தை உணர்ந்து, ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்புகளுக்கான பாடத் திட்டங்களை மாற்றி அமைக்க, ஏற்பாடுகள் செய்த ஒரே அரசு, இந்த இந்தியத் துணைக் கண்டத்திலேயே, உங்கள் அன்புச் சகோதரியின்' அரசு தான் என்பதை மிக்க பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

University Grants Commissionனின் தலைவர் பேராசிரியர் Yashpal Sharma அவர்களின் தலைமையில் அமைந்த குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலும், சுமையின்றிக் கற்றல் அதாவது Learning without burden என்ற கொள்கையின் அடிப்படையிலும், பேராசிரியர் Davey அவர்களின் தலைமையின் அமைந்த குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலும் "குறைந்தபட்சக் கற்றல் இலக்குகள்" அதாவது (minimum Levels of Learning) என்கின்ற புதிய கோட்பாடுகளை அமைத்து, அதன் அடிப்படையில் புதிய பாடத் திட்டங்களையும், பாடநூல்களையும் உருவாக்கி வருகின்றோம்.

அறிவியல் அணுகுமுறைகளைக் கையாண்டு, உடற்கல்வி மற்றும் உடல்நலக் கல்விகளுக்காக, தனித் தனியே பாடநூல்களை எங்கள் ஆட்சிக் காலத்தில் நாங்கள் வெளியிட்டுள்ளோம். இளம் நெஞ்சங்களில் அறிவியல் உணர்வை வளர்க்க, 10 தொகுதிகள் அடங்கிய "குழந்தைகள் அறிவியல் கலைக் களஞ்சியம்" ஒன்றை, இந்த நிறுவனம் தயாரித்து வெளியிட்டுள்ளது. மொழிச் சிறுபான்மையினரின் நலனைக் கருத்தில் கொண்டு, கன்னடம், தெலுங்கு, மலையாளம், உருது ஆகிய மொழிகளிலும் பாடநூல்களை, இந்த நிறுவனம் அச்சிட்டு வெளியிட்டு வருகிறது.

இந்தக் கழகம் பாடநூல்களைத் தயாரித்து வழங்குவதோடு, மாணவ, மாணவியர்களிடையே கல்வி ஆர்வத்தை மேலும் ஊக்குவிக்க, பல புதிய திட்டங்களையும் செயல்படுத்தி வருகின்றது. பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புக்கான அரசு பொதுத் தேர்வுகளில், தமிழ் பாடத்தில் முதல் மதிப்பெண் பெறுகின்ற மாணவ, மாணவியர்களுக்கு இந்தக் கழகம் தங்கப் பதக்கத்தை, இந்த ஆண்டு முதல் வழங்கி வருகின்றது.

தனது உபரி நிதியிலிருந்து, பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்களைக் கட்டித் தரும், மாபெரும் சமுதாயப் பணியையும் இந்த

நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இந்தக் கழகத்தின் உபரி நிதியிலிருந்து, இதுவரை 4.28 கோடி ரூபாய் செலவில் 282 பள்ளிக் கட்டடங்கள் கட்டி வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சிக் காலத்தில் மட்டும், இதுவரை 2 கோடி ரூபாய் செலவில் 122 பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன என்பது எண்ணி மகிழத் தக்க ஒரு வரலாற்றுச் சாதனையாகும்.

இன்று இந்தக் கழகத்தால், 100 கோடி ரூபாய் மதிப்பில், மேற்கொள்ளப்பட உள்ள புதிய திட்டங்களை முறைப்படி தொடங்கி வைத்ததில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்தக் கல்வி ஆண்டு முதல், பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில், ' 80 சதவீதத்திற்கும் அதிக மதிப்பெண்களைப் பெறும், தமிழ்நாட்டுப் பாடநூல் கழகப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு, கல்வி ஊக்கத் தொகையாக 3,000 ரூபாய் வழங்கும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை அறிவிப்பதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அதே போல, பிளஸ் 2 தேர்வில், அதாவது மேல்நிலைப் பள்ளி இறுதித் தேர்வில், 80 சதவிகிதத்திற்கும் அதிகமான மதிப்பெண்களை பெறுகின்ற, கழகப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு,' 5,000 ரூபாய் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்படும். மேலும் பிளஸ் 2 தேர்வில் மாநிலத்தின் முதல் 5 இடங்களைப் பெறுகின்ற, கழகப் பணியாளர்களின் குழந்தைகளின் மேல் படிப்பிற்கு ஆகின்ற செலவு முழுவதையும், இந்தக் கழகமே ஏற்றுக்கொள்ளும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த, 13 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு புதிய அறக்கட்டளை விரைவில் ஏற்படுத்தப்படும் என்பதை, மிக்க மிகழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தாரின் மருத்துவச் செலவிற்காக, ஒரு இலட்சம் ரூபாய் வரை மருத்துவ நிதியுதவி வழங்கும் புதிய திட்டம் ஒன்று விரைவில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான அரசு ஆணைகள், விரைவில் வழங்கப்படும்.

பாடநூல் கழகத்தின் வெள்ளி விழாவினையொட்டி, தமிழ் நாட்டிலுள்ள அரசு மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்குப் புதிய பள்ளிக் கட்டடங்களைக் கட்டித்தருவதற்கு தமிழக அரசு ஒரு கோடி ரூபாய் நிதியை, கழகத்திற்கு நன்கொடையாக அளிக்கும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.. இந்தத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் புதிய கட்டடங்கள் "வெள்ளி விழாக் கட்டடங்கள்" என்று அழைக்கப்படும்.

தமிழ்நாட்டில் இக்கழகத்தின் வட்டார அலுவலகங்கள் . 4 மாவட்டங்களைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. எனவே எஞ்சியுள்ள தென் ஆர்க்காடு வள்ளலார், திருவண்ணாமலை சம்புவராயர், இராமநாதபுரம் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களிலும், புதிய வட்டார அலுவலகங்கள் இந்த ஆண்டு ஏற்படுத்தப்படும் என்பதை மிக்க

ஈரோட்டுச் சந்தை

பெரியார் மாவட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட 5 இலட்சம் விசைத்தறிகளும், 50 ஆயிரம் கைத்தறிகளும் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் ஈரோடெக்ஸ், அண்ணா சென்டெக்ஸ், சென்குமார் டெக்ஸ் இப்படி ஏராளமான கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

சென்னிமலையில் சனல் துணிகள் நெய்வது தொடர்பான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு, குறிப்பிடத்தக்க முன்னேற்றமும் அடைந்துள்ளன. ஈரோட்டில் நடக்கும் (செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில்) சந்தைகளில் பள்ளிபாளையம், குமாரபாளையத்திலிருந்து வரும் லுங்கிகள், திருப்பூரிலிருந்து வரும் பனியன்கள், எடப்பாடியிலிருந்து வரும் துண்டுகள், மல்லசமுத்திரம், ஆட்டையாம்பட்டி, திருச்செங்கோடு முதலிய இடங்களிலிருந்து வரும் முறுக்குத்துண்டுகள், போன்றவை ஈரோட்டுச் சந்தைகளில் இடம் பெறுகின்றன,

மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்டத் தலைநகரங்களில் எல்லாப் பாடநூல்களும் ஒரே இடத்தில் கிடைப்பதற்காக, கழகத்தின் சார்பில் "சிறப்பு விற்பனை நிலையங்கள்" 60 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் மாபெரும் வளர்ச் சிக்கு உறுதுணையாக இருந்த பணியாளர்கள் அனைவருக்கும் இந்த வெள்ளி விழா ஆண்டில், எனது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன். இந்தக் கழகத்தின் செயல்பாடுகள் சிறப்படைய, நீங்கள் அனைவரும் இலட்சிய உணர்வுடன் தொடர்ந்து செயல் பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கழகம் இந்திய துணைக் கண்டத்தின் மற்ற பாடநூல் நிறுவனங் களுக்கு எல்லாம், என்றென்றும் ஒரு முன்னோடியாகத் திகழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

மேலும் கல்லூரிகளில் தமிழ் மீடியம் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு 25 ஆண்டு களுக்கு முன்பு தான் தமிழில் பாடநூல்கள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டு வந்தன. கடந்த 25 ஆண்டுகளாக இந்த தமிழ் மீடியத்தில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கான Text Books தமிழில் அச்சிடப்படவில்லை. இனிமேல் கல்லூரிகளில் தமிழ் மீடியம் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு இந்தப் பாட நூல் கழகம் தமிழிலேயே பாடநூல்களை அச்சிட்டு வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தனக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புக்களை மிகவும் சிறப்பான முறையில் நிறை வேற்றுவதோடு, இந்த விழா வினைச் சீரோடும், சிறப்போடும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்த தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத் தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், அருமை சகோதரர் திரு எப்.எம். ராஜரத்தினம் அவர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தென் இந்திய சர்க்கரை ஆலைகள் சங்க (தமிழ்நாடு) வெள்ளி விழாவினை சென்னை தாஜ் கோரமண்டல் ஒட்டலில் குத்து விளக்கை ஏற்றி தொடங்கி வைத்தார். தென்இந்திய சர்க்கரை ஆலைகள் சங்க (தமிழ்நாடு) தலைவர் திருமதி ராஜ்ஸ்ரீபதி உடனிருக்கிறார். (4.3.96)

மஞ்சள் மகிமை

மஞ்சள் நிறம் ஒரு புனித மான, மங்களகரமான நிறமாகத் தமிழ் மக்களால் பெரிதும் போற்றப்படுகிறது. மக்கள் கொண்டாடும் விழாக்கள், மற்றும் திருமணங்களில் மஞ்சள் இன்றியமையா இடத்தை வகிக் கிறது. 'மஞ்சள் மகிமை' என்றும், 'பொன்னிறப் புதையல்' என்றும் அழைக்கும் சிறப்புப் பெற்று உள்ளது.

மஞ்சளின் பயன்

இந்தியா, மத்தியக் கிழக்கு மற்றும் தூரக்கிழக்கு நாடுகளில் சைவ, அசைவ உணவுகளில் வாசனைப் பொருளாகவும், நிறமியாகவும். பயன்படுகிறது. அழகுச்சாதனப் பொருள் களிலும், மருந்துப் பொருள் களிலும் மஞ்சள் பயன்படுத்தப் படுகிறது.

மஞ்சள் விளையும் மாநிலம்

உலக அளவில் இந்தியா 80 சதவிகித அளவுக்கு மஞ்சள் உற்பத்தி செய்துவருகிறது. இந்தியாவில் ஆந்திரா, மகா ராஷ்டிரா, ஒரிஸ்ஸா, தமிழ்நாடு, கேரளா, அஸ்ஸாம், மேற்கு வங்கம், திரிபுரா மற்றும் கர்நாடகம் போன்ற மாநிலங் களில் மஞ்சள் அதிக அளவில் பயிரிடப்படுகிறது.

முதலிடம் வகிக்கும் பெரியார்

தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 21 ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பில் மஞ்சள் சாகுபடி செய்யப்படு கிறது. பெரியார் மாவட்டத்தில் மட்டும் ஏறக்குறைய 10 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் பயிரிடப் படுகிறது. தமிழ்நாட்டில் 37,900 டன் மஞ்சள் உற்பத்தி செய்யப் பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் சாகு படி செய்தாலும், பெரியார்

மாவட்டம் முதலிடத்தையும், கோயம்புத்தூர் இரண்டாவது இடத்தையும், சேலம் மூன்றாவது இடத்தையும் வகிக்கின்றன.

மேற்காசிய நாடுகள், கிழக்கு ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, ஜப்பான், போன்ற நாடுகளுக்கு இந்தியா பெருமளவில் மஞ்சள் ஏற்றுமதி செய்து வருகிறது. அந்நாடுகளில் இந்திய மஞ்சளுக்குத் தனி மதிப்பு இருக்கிறது. அதேநேரத்தில் வியட்நாம், தாய்லாந்து, சீனா போன்ற மஞ்சள் பயிரிடும் நாடுகளின் கடும் போட்டியையும் இந்தியா எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலையும் உள்ளது.

தேவையோ மிக அதிகம்

ஜெனிவா நாட்டிலுள்ள உலக வர்த்தக மையம் மஞ்சளின் தேவை ஆண்டுக்கு ஆண்டு உயர்வதாக மதிப்பிட்டுள்ளது. அதன் கணிப்பின்படி கி.பி. 2000 ஆண்டில் மஞ்சளின் உலகத் தேவை மிக அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய மஞ்சளை இறக்குமதி செய்யும் நாடுகளின் தர நிர்ணயித்திற்கேற்றபடி நல்ல தரமான மஞ்சளை உற்பத்தி செய்யும், நியாயமான விலையை நிர்ணயம் செய்யவும் வேண்டும். இதனால் விவசாயிகளுக்கு நல்ல வருமானமும், நாட்டுக்கு அந்நியச் செலாவணியும் கிடைக்கும்.

பெரியார் மாவட்டத்தில், கோபிசெட்டிப்பாளையம், சத்தியமங்கலம், ஈரோடு, மொடக்குறிச்சி, கொடுமுடி போன்ற இடங்களில் மஞ்சள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. ஏக்கருக்கு 25 முதல் 30 குவிண்டால் வரை அறுவடை செய்யப்படுகிறது.

ஈரோட்டு விரலி

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் கிட்டத்தட்ட 50 வகையான மஞ்சள் பயிர் செய்யப்படுகின்றன. பெரும்பாலும் அவை பயிரிடப்படும் இடம் அல்லது ஊரின் பெயரையே கொண்டுள்ளன. சான்றாக ஈரோடு விரலி, கரூர் மஞ்சள், சின்ன சேலம் மஞ்சள் போன்றவை தமிழ்நாட்டிலும், ஆலப்பி, டுக்கிராலா, அமலாபுரம், மைசூர் போன்ற வகைகள் இதர மாநிலங்களிலும் பயிரிடப்பட்டு வருகின்றன.

புத்தம்புது வகைகள்

தற்போது, வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களில் புதுப் புது வகையான உயர் விளைச்சல் மஞ்சள் ரகங்கள் உருவாக்

கப்பட்டு விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றன. அவற்றுள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள கோ1, பி.எஸ்.ஆர்1, பி.எஸ்.ஆர்2 போன்றவையும், சுகுணா, சுதர்சனா, சுகந்தம், ரோமா, சுரோமா 'என்ற மஞ்சள் வகைகளும் குறிப்பிடத்தக்கவை. இவற்றில் நல்ல தரம், நல்ல மகசூலும் கிடைக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மஞ்சள் விளைவிக்கும் மண்வளம்

பெரியார் மாவட்டத்தில் நிலவும் தட்பவெட்ப நிலையும் வளமான மண்வளமும் மஞ்சள் சாகுபடிக்கு உகந்ததாக இருக்கிறது. ஆண்டுக்கு 10 முதல் 11 மாதம் வரை தண்ணீர் தேவையான அளவுக்கு கிடைக்கிறது. மேலும் பெரியார் மாவட்டத்தில் உள்ள காளிங்கராயன் வாய்க்காலில் ஆண்டு முழுதும் ஓடும் தண்ணீர் மஞ்சள் சாகுபடிக்கு ஏற்றதாக உள்ளது.

> உண்மையான மகிழ்ச்சி நாம் எவ்வளவு பொருள் ஈட்டுகிறோம் என்பதால் இல்லை. அது மற்றவர்களுக்கு எவ்வளவு உபயோகப்படுகிறது என்பதில் தான் இருக்கிறது.
>
> –ரவீந்தரநாத் தாகூர்



மஞ்சள் மண்டி

ஈரோட்டிலுள்ள மஞ்சள் சந்தை மிகவும் சிறப்பு வாய்ந்தது. கிட்டத்தட்ட 100 மண்டிகளைக் கொண்டு ஆயிரக்கணக்கான வணிகர்களைப் பெற்றுள்ளது. ஆண்டுக்கு ஏறக்குறைய 600 கோடி ரூபாய் அளவுக்கு வணிகம் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதி

மஞ்சளிலிருந்து ஒலியோ ரெசின் எனப்படும் வாசனைக் குழம்பு தயாரிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இது அமெரிக்காவில் நல்ல வரவேற்பு பெற்றுள்ளது. மஞ்சளிலிருந்து பெறப்படும் 'குர்குமின்' சாயத்தொழிலுக்கு மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றது. இப்பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் பெரியார் மாவட்டத்தில் நிறையவுள்ளன.

தமிழ்நாட்டிலேயே மஞ்சள் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் பெரியார் மாவட்டத்தில், உயர் விளைச்சல் பயிர்வகைகளை விவசாயிகளுக்கு அறிமுகப் படுத்துவதன் மூலம் இந்தியாவிலேயே மஞ்சள் உற்பத்தியில் முதலிடத்தைப் பெறமுடியும் என்ற நன்னம்பிக்கையை நாம் சந்தித்த மஞ்சள் பயிர்ச் சாகுபடியாளர்கள் தெரிவித்தார்கள்.

–எம்.வி.எம். அசோகன்

Universal Fertiliser Corporation

Mfrs. of: UNIVERSAL MIXTURES & SPECIAL MIXTURES

அமோக விளைச்சலுக்கு யுனிவர்சல் உரங்கள் & பூச்சி மருந்துகள்

தயாரிப்பாளர்கள்

யுனிவர்சல் பெர்டிலைசர் கார்பரேசன்

52, மொடச்சூர் ரோடு, கோபிசெட்டிபாளையம் - 638 476

போன்: 22135, 22735

யுனிவர்சல் பெஸ்டிஸைட்ஸ் & கெமிக்கல் இண்டஸ்ட்ரி

86, பாரதி பார்க் ரோடு, எண் 2, சாயிபாபா மிஸ்ஸன் அஞ்சல்

கோயம்புத்தூர் - 641 011

தமிழகத்திலேயே உரம் மற்றும் பூச்சி மருந்துகளை அதிக அளவில் விற்பனை செய்துவரும் ஒரே நிறுவனம்

Branches: 10, Annamalai Chettiar Road, Saibaba Colony, Coimbatore-641011 Ph: 440368, 440878

★ Gobi ★ Erode ★ Sathy ★ Thalavadi ★ Dharapuram ★ Mathampatti
★ Udumalpet ★ Ooty ★ Salem

போன்: 216226
223423

நெ.1 லாரி புக்கிங் ஆபீஸ்

544, சத்திரோடு, ஈரோடு-3

தினசரி ரெகுலர் சர்வீஸ் திண்டுக்கல், மதுரை, திருச்சி,
கோவை & பாலக்காடு

மற்றும்

ஆப்பக்கூடல் சக்தி சுகர்ஸ் லிமிடெட்டின்

போக்குவரத்து ஒப்பந்ததாரர்கள்

16, சத்தி ரோடு, ஈரோடு

போன்: 223313

துவக்கம்: 1912

போன்: கோபி - 22317
கவுந்தப்பாடி - 40359

கோபிசெட்டிபாளையம் கூட்டுறவு நகர வங்கி லிட். நெ.979,

தலைமையகம் : கோபிசெட்டிபாளையம் - 638 476

கிளை அலுவலகம்: கவுந்தப்பாடி - 638 455

31.10.95ல் வங்கியின் நிதி நிலைமை		(ரூபாய் இலட்சத்தில்)
அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்	:	50.00
செலுத்தப்பட்ட மூலதனம்	:	39.44
நடைமுறை மூலதனம்	:	1672.31
வைப்புகள்	:	1565.84
கடன் நிலுவை	:	1141.12
நிகர லாபம் 94-95	:	12.94

வங்கியின் சிறப்பு அம்சங்கள்

நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளைவிட வைப்புகளுக்கு கூடுதல் வட்டி அளிக்கப்படுகிறது.
ரிசர்வ் வங்கியின் உரிமம் பெற்றது.

வங்கியின் அடமானக் கடன், ஜாமீன் கடன், நகைக்கடன், சிறுவாகன போக்குவரத்துக் கடன், காசுக் கடன், மற்றும் அனைத்து முன்னுரிமைக் கடன், நலிவுற்றோர் கடன்களும் வழங்கப்பட்டு வருகிறது.

மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் மாநில வரைவோலைத் திட்டத்தின் கீழ் குறைந்த கமிஷனில் வரைவோலை வழங்கப்பட்டு வருகிறது.

உறுப்பினர்களுக்கு கடந்த பல ஆண்டுகளாக அதிகபட்ச பங்கு ஈவு வழங்கி வருகிறது.

பாதுகாப்பு பெட்டக வசதி உள்ள வங்கி.

பெரியார் மாவட்டத்திலேயே முதலாவது நகரக் கூட்டுறவு வங்கி

பி.எம். சாயிநாதன், *பிஎஸ்சி,*
செயலாளர்,

நா. நடராஜன், *டிஆர்எஸ்எச்டிசி*
தனி அலுவலர்



சீரோடு வளர்ந்து வரும் ஈரோடு

ஈரோடு நகராட்சி 1871-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. 1980ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் நாள் சிறப்புநிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது. இந்நகராட்சி 8.44 சதுரகிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகும். 1991ஆம் ஆண்டின் மக்கட்தொகை 1,59,232 ஆகும். 1994-ஆம் ஆண்டு 17.3.94ன்படி இடைக்கால மக்கட்தொகை 1,65,600 ஆகும். நகராட்சி எல்லைக்குள் மேல்நிலைப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள் நகராட்சியால் பராமரிக்கப் பட்டு வருகிறது. நான்கு தாய் சேய் நல விடுதிகள் பராமரிக்கப் பட்டு வருகின்றன.

ஈரோடு நகராட்சியில் 100 ஏக்கர் பரப்பளவில் 75 பேருந்துகள் நிறுத்தும் அளவுக்கு முதல்நிலைப் பேருந்து நிலையம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் வ.உ.சி. பூங்கா மற்றும் பெரியார் நகர்ப் பூங்கா ஆகிய இரு பூங்காக்கள் மக்களின் பொழுதுபோக்குக்காக இந் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. நகராட்சியில் இரண்டு தினசரி காய்கறி அங்காடிகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

குடிநீர் வழங்கல்

காவிரி நதியில் இருந்து அதாவது வைராபாளையம் என்ற இடத்தில் தலைமை நீரேற்று நிலையம் அமைக்கப் பட்டு, தினமும் 1.65 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப் படுகிறது. தினசரி நபர் ஒன்றுக்கு 86 லிட்டர் விதம் குடிநீர் வழங்கப்படுகிறது. நகரில் 300 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப் பட்டுள்ளன. 450 பொது குழாய்கள் அமைக்கப்பட்டு குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. நகரில், குடிசைப் பகுதிகளில் மின் மோட்டார் பொருத்திய ஆழ் துளைக் குழாய்க் கிணறுகள் அமைத்து குடிநீர்தேக்கத் தொட்டி மூலம் நல்லமுறையில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

சாலைப்பணிகள்

நகராட்சியால் அதன் எல்லைக்குள் 94.813 கிலோ மீட்டர் சாலைகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

தெருவிளக்கு

இந்நகராட்சியால், தெருக் களில் சோடியம் ஆவி விளக்குகள் 239, மெர்க்குரி ஆவி விளக்குகள் 589, குழல் விளக்குகள் 2,281 ஆக மொத்தம் 3,109 விளக்குகள் பொருத்தப் பட்டு நல்ல நிலையில் பராமரிக் கப்பட்டு வருகிறது.

பொதுக் கழிப்பிடம்

நகரின் வியாபாரம் மிகுந்த பகுதிகளிலும் பேருந்து நிலையத்திலும் 6 கட்டணக் கழிப்பிடங்களும் 29 நவீனக் கழிப்பிடங்களும் கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

ஈரோடு நகராட்சியில் 1994-95-ஆம் ஆண்டில் உலக வங்கி திட்டத்தின் கீழ் செய்து முடிக்கப்பட்ட பணிகள்:

ஆர்.கே.வி. சாலையில் நேதாஜி வணிக மையம் ரூ.76 இலட்சம் செலவிலும், சிதம்பரான் குட்டை அங்காடி வளாகத்தில் கடைகள் ரூ. 10.70 இலட்சம் செலவிலும், காமராஜர் சாலையில் வணிக மையம் ரூ.18 இலட்சம் செலவிலும், மத்தியப் பேருந்து நிலையத்தில் நகரப் பேருந்து பயணியர் நிழற்குடை ரூ.8 இலட்சம் செலவிலும், சுடுகாட்டில் அபிவிருத்தி பணிகள் ரூ.9 இலட்சம் செலவிலும், நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைகளுக்குப் பராமரிப்பு பணிகள் ரூ.50 இலட்சம் செல விலும், கழிவுநீர்ப் பண்ணை மற்றும் உரக் கிடங்கில் வளர்ச்சிப் பணிகள் ரூ.10 இலட்சம் செலவிலும், குடிநீர் வழங்கும் பணிகள் ரூ.28.50 இலட்சம் செலவிலும், தெரு விளக்குகள் ரூ.10.75 இலட்சம் செலவிலும் ஆக கூடுதலாக ரூ.229.95 இலட்சம் செலவில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ஈரோடு நகராட்சியில் 1995-96-ஆம் ஆண்டில் உலக வங்கி திட்டத்தின் கீழ் செய்ய உள்ள பணிகள்:

மத்தியப் பேருந்து நிலையத்தில் முதல்மாடி கட்ட ரூ.46 இலட்சமும், வீரபத்திர சாலையில் கடைகள் கட்ட ரூ.21 இலட்சமும், நேதாஜி சாலை பழ அங்காடி முதல் மாடியில் கடைகள் கட்ட ரூ.16 இலட்சமும், காமராஜர் சாலை வணிக மையம் முதல் மாடி கட்ட ரூ.20 இலட்சமும், பொது சுகாதாரப் பணிகளுக் கான வாரிகள் வாங்க ரூ.10 இலட்சமும், சாக்கடை மற்றும் சாலை அபிவிருத்திப் பணிக்காக ரூ.70 இலட்சமும், தெரு விளக்குகள் அமைக்க ரூ.55 இலட்சமும், மழைநீர் புதைச் சாக்கடை கட்ட ரூ.240 இலட்சமும் ஆகக் கூடுதலாக ரூ.478 இலட்சம் உலக வங்கித் திட்டத்தின் கீழ் – மேற்கண்ட பணிகள் 1995-96-ஆம் ஆண்டில் செய்யப்படவுள்ளன.

ஈரோடு நகராட்சியில் காவிரி நதிக்கரையோரம் தூய்மைப்படுத்தும் திட்டம்

குறைந்த செலவில் பொதுக்கழிப்பிட வசதித் திட்டம் ரூ.20 இலட்சமும், நதிக் கரையோரம் அபிவிருத்தி திட்டம் ரூ.12 இலட்சமும், சுடுகாடு மேம்பாட்டுத் திட்டம் 6 இலட்சமும் ஆகக் கூடுதலாக ரூ.38 இலட்சம் மதிப்பீட்டில், காவிரி நதிக் கரையோரம் தூய்மைப்படுத்தும் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளன.



“இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்ட அனைவருக்கும் முன்னோடி வீரன் அழகு முத்துக்கோன்”

–மாண்புமிகு முதல்வர் பெருமிதம்

15.3.1996 அன்று நடைபெற்ற வீரன் அழகு முத்துக்கோன் திருவுருவச் சிலை திறப்பு விழா மற்றும் வீரன் அழகு முத்துக்கோன் போக்குவரத்துக் கழகத் தொடக்க விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை

ஆங்கிலேயர்களின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வீர உணர்வுடன் போராடித் தனது இன்னுயிரைத் தியாகம் செய்த, வீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் திருவுருவச் சிலையை இங்கே திறந்து வைத்து, அவரது திருப்பெயரில் ஒரு போக்குவரத்துக் கழகத்தையும் துவக்கி வைத்து, உங்கள் அனைவரையும் இந்தச் சரித்திரச் சிறப்பு மிக்க நிகழ்ச்சியில் ஒன்றாகக் காண்பதில் நான் பெருமகிழ்ச்சியும் பேருவகையும் அடைகின்றேன்.

பாரத நாடு, சிறப்பான ஒரு பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் உலகுக்கு அளித்த தொன்மையான சரித்திரம் படைத்த ஒரு நாடு. அதிலும், கல் தோன்றி மண் தோன்றா காலத்தே, முன் தோன்றிய மூத்த பெருங்குடியான, தமிழ்க்குடி மக்கள் வாழ்ந்த செந்தமிழ் நாடு. வீரம் விளைந்திட்ட நாடு. விவேகம் வளர்ந்திட்ட பூமி என்பதில் ஐயமில்லை.

அயலாரின் ஆதிக்கத்திற்கும் மக்களை மதிக்காத ஏகாதிபத்திய உணர்வுக்கும், எதிர்ப்புத் தெரிவித்து, விடுதலை உணர்வு பொங்க, தங்களது இன்னுயிரை ஈந்தவர்கள் தமிழகத்தின் சரித்திரத்தில் ஏராளம் உள்ளனர். ஆனால், சரித்திரத்தின் பக்கங்களில், அவர்களின் வீரத்திற்கும், தியாகத்திற்கும் உகந்த ஒரு இடம் கிடைக்காமல் போனதும் உண்டு. சரித்திரத்தில் தகுந்த இடம் மறுக்கப்பட்டவர்களும் உண்டு. இவ்வாறு வரலாற்றில் இருட்டடிப்புச் செய்யப்பட்ட வீரகுலத் தோன்றல்களை, உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சி, வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து பெருமைப்படுத்துவதிலும், அவர்தம் புகழை நிலை நிறுத்தச் செய்வதிலும், ஒரு தனி ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகிறது.

எங்கள் அரசைப் பொறுத்த வரையில், மக்களின் ஆத்மார்ந்த உணர்வுகளை மதித்து, அதற்கு வடிவம் கொடுப்பதையே, தனது அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகக் கருதி செயல்பட்டு வருகின்றது. அந்த உணர்வுகளின் உந்துதலால்தான், நாட்டுப் பற்றுடன் பாடுபட்ட நல்லவர்கள், வல்லவர்கள், வீரர்கள், வீராங்கனைகள் ஆகியோரின் நினைவாகத் திருவுருவச் சிலைகளையும், நினைவகங்களையும், நாங்கள் நிறுவி வருகின்றோம்.

தங்களது இனத்திற்குச் சிறப்புச் சேர்த்த தலைவர் என்று பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் கருதுகின்ற, மாசற்ற தலைவர்களின் பெயர்களில் மாவட்டங்களையும், போக்குவரத்துக் கழகங்களையும் அமைத்து வருகின்றோம். இந்த ஐந்தாண்டு கால நல்லாட்சி, மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து நடக்கும் நல்லதொரு ஆட்சி என்பதை இத்தகைய நிகழ்ச்சிகள் நாட்டிற்கு உணர்த்தும் என்று உறுதியாக நம்புகிறேன்.

பாரத நாட்டில் நிலவிய ஒற்றுமையின்மையைப் பயன்படுத்தி, நம்மை அடிமைப்படுத்த நினைத்த ஆங்கிலேயரின் எதேச்சதிகாரத்திற்கும், ஆதிக்க உணர்வுக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்

★ **எல்லாப் புத்தகங்களையும் விட, சிறந்த புத்தகம் இந்தப் பரந்த உலகம்தான். உலகத்தை விட, உன்னதமான புத்தகம் வேறு கிடையாது.**

என்று, இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே கொதித்து எழுந்தவர்களில் முதன்மையானவர், மாவீரன் அழகு முத்துக்கோன். வாணிபம் செய்ய வந்த ஒரு நிறுவனமான கிழக்கிந்திய கம்பெனி, நாடு பிடிக்கும் நயவஞ்சக வேலையில் ஈடுபட்ட போது, ஆங்கிலேயர்களின் அடக்குதலுக்கும் ஒடுக்குதலுக்கும் சற்றும் அஞ்சாமல் அவர்களது ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடி வெள்ளையரின் ஆதிக்க வெறி பிடித்த பீரங்கிக்குத் தன்மானமிக்க தனது இன்னுயிரைக் காணிக்கையாக ஈந்த ஒரு மாவீரன்தான், இந்த அழகு முத்துக்கோன்.

மதுரை முத்துகிருஷ்ணப்ப நாயக்கரின் திசை காவல் தளபதிகளில் ஒருவராக நெல்லைச் சீமையில், கரிசல் காட்டுப் பகுதியில் உள்ள காட்டாளங்குளத்தில் கோட்டை ஒன்றை அமைத்துத் தனது துணைவியார், அன்னபூரணி நாச்சியார் என்பவருடன் ஆட்சி செய்து வந்தவர் அழகு முத்துக்கோன் ஆவார். அவரது வரலாற்றையும் வீரத்தையும் காட்டாளங்குளம், பெத்தநாயக்கனூர் மற்றும் நடுக்காட்டூர் ஆகிய பகுதிகளில் கிடைக்கப் பெற்ற வரலாற்றுச் சுவடுகளின் மூலம், நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

இன்றும் இப்பகுதியில் வீரன் அழகு முத்துக்கோன் பரம்பரையில் வந்தவர்களை “அரண்மனைச் சாமிகள்” என்று அழைக்கும் ஒரு பழக்கம் இருந்து வருகிறது. ஆக, கோட்டை அமைத்து அதில் அரண்மனையையும் அமைத்து வெள்ளையர்களின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய காரணத்தினால்தான் அந்த மாவீரனின் வழி வந்தவர்கள், “அரண்மனைச்சாமிகள்” என்று அழைக்கப்படுகின்றார்கள் என்றே பொருள் கொள்ள வேண்டி உள்ளது.

பெத்தநாயக்கனூர் அரண்மனையில்,

வீரன் அழகு முத்துக்கோன் முகாமிட்டிருந்த போது, கிழக்கிந்திய கம்பெனியின் Agent, Khan Sahib என்பவர் ஆங்கிலேயர்களின் படையுடன் சென்று, வஞ்சகமாக முற்றுகையிட்டான். ஆங்கிலேயருக்கு அடி பணியாமல் 247 வீரர்கள் மட்டுமே கொண்ட தனது சிறிய படையுடன், வீரன் அழகு முத்துக்கோன் எதிர்த்து நின்று வீரத்துடன் போர் புரிந்துள்ளார்.

இந்தப் போரின் இறுதியில், வீரன் அழகு முத்துக்கோன், ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டுப் பெத்தநாயக்கனூர் கோட்டைக்கு, 18 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள நடுக்காட்டூர் சீமைக்கு, கொண்டு செல்லப்பட்டுள்ளார். தனது இன்னுயிரா அல்லது தாய்த் திருநாட்டின் தன்மானமா என்று ஆங்கிலேயர் விலை பேசிய போது, தாய்த் திருநாட்டின் தன்மானம்தான் பெரியது என்று முழங்கி, பணிந்து பதவி ஏற்று. வாழ்வதை விட, வீர மரணம் அடைவதே மாவீரனுக்கு அழகு என்பதை, உலகுக்கு நிரூபித்துக் காட்டி ஆங்கிலேயர்களின் இரக்கமற்ற பீரங்கி குண்டுகளுக்கு, தனது இன்னுயிரை ஈந்தார் அந்தத் தியாகச் செம்மல். வளர்ந்து வரும் தங்கள் ஆதிக்கத்திற்கு எங்கே வீரன் அழகு முத்துக்கோன் முற்றுப்புள்ளி வைத்து விடுவாரோ, என்று பயந்துதான் ஆங்கிலேயர்கள் நடுக்காட்டூர் சீமையில் அவரது துணைத் தளபதிகள் 6 பேரோடு சேர்த்து, வீரன் அழகு முத்துக்கோனைக் கட்டி வைத்துச் சுட்டுக் கொன்று விட்டார்கள்.

வீரன் அழகு முத்துக்கோன் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு, கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கு முன்பாக, ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தையும் ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்து இந்திய சுதந்திரத்திற்காகப் போராடி உயிர் நீத்த தன்னலமற்ற ஒரு தியாகி.

அந்த வகையில், இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்ட வீரர்கள், வீராங்கனைகள், தியாகிகள் அனைவருக்கும் உணர்ச்சி பூர்வமான ஒரு முன்னோடியாக வீரன் அழகு முத்துக்கோன் இருந்துள்ளார் என்றால், அதுமிகையாகாது. சென்னையில், மிக முக்கியமான பகுதியான எழும்பூரில் கம்பீரமாக எழுந்தருளியிருக்கும், வீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் திருவுருவச் சிலையும், புதுக்கோட்டை மாவட்டத்தில் வீரன் அழகு முத்துக்கோன் அவர்களின், திருப்பெயரைத் தாங்கி உலா வரும் பேருந்துகளும், வீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் புகழையும், பெயரையும் என்றென்றும் மக்கள் மனதில், நிலை பெறச் செய்யும் என்பது உறுதி.

நாட்டின் தன்மானம் காக்க, தங்கள் உயிரைத் தியாகம் செய்த, நமது முன்னோர்களின் வரலாறு, இன்றைய தலைமுறையினருக்கும், நமது எதிர்காலச் சந்ததியினருக்கும், ஒரு வாழ்க்கைப் பாடமாக, சமுதாயப் படிப்பினையாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. இளைய தலைமுறையினர் இடையே நாட்டுப் பற்றை வளர்ப்பதற்கும் நன்னெறிகளைப் பரப்பவும் தியாக உணர்வை மேம்படுத்தவும், இத்தகைய சரித்திர நாயகர்களின் வாழ்க்கை வரலாறு, ஒரு தூண்டுகோலாக, கலங்கரை விளக்கமாக, விளங்கும் என்பதில் ஐயமில்லை.

அந்த வகையில், சாதனைப் படைத்த ஒரு சரித்திர நாயகனின் திருவுருவச் சிலையினைத் திறந்து வைத்து, மக்கள் மனதில் அவரது பெயர். என்றென்றும் நிலைத்திருக்க வழி வகுத்துள்ளதை எண்ணி நான் மனநிறைவு அடைகின்றேன்.

புதுக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும், வீரன் அழகு முத்துக்கோன் போக்குவரத்துக் கழகம்,

கடமையைச் செய்யாமலே உரிமையைத் தேடினால், அது கானல் நீராகிவிடும்!

—அண்ணல் காந்தியடிகள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள எல்லா பகுதிகளுக்கும், பேருந்துகளை இயக்கும். இந்தப் புதிய போக்குவரத்துக் கழகத்தில், முதல் கட்டமாக 315 பேருந்துகள் இயக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் போக்குவரத்துக் கழகம் சீரிய முறையில் மக்கள் பணி ஆற்ற எனது நெஞ்சத்து நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

ஒரு குறிப்பிட்ட ஜாதியினருக்கோ அல்லது எந்த ஒரு குறிப்பிட்ட மதத்தினருக்கோ என்று இல்லாமல் அனைத்துத் தரப்பு மக்களின் உள்ள உணர்வுகளைப் புரிந்து, அவர்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளித்து, வாழ்ந்து மறைந்த மாபெரும் தலைவர்களை இந்த அரசு கௌரவப் படுத்தி, சரித்திரத்தில் அவர்களது சாதனைகளுக்கும் தியாகங்களுக்கும் உரிய இடத்தைப் பெற்றுத் தந்து கொண்டிருக்கிறது.

திருவல்லிக்கேணியில் மகாகவி பாரதியார் இருந்த வீட்டை, நினைவகமாக ஆக்கினோம். கவியரசு கண்ணதாசனுக்குக் காரைக்குடியில் மணிமண்டபம் அமைத்தோம். சென்னையில் அவருக்குத் திருவுருவச் சிலை வைத்தோம். டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலையைச் சென்னையில் நிறுவியதோடு 5 கோடி ரூபாய் செலவில் வேறு எந்த மாநிலமும், செய்ய முன் வராத ஒரு முயற்சியாக மணிமண்டபம் ஒன்றை அமைத்து வருகின்றோம்.

தீரன் சின்னமலைக் கவுண்டர் பெயரில் மாவட்டம் ஒன்றை அமைத்தோம். விரைவில் அந்த பெருமகனாரின் திருவுருவச் சிலை சென்னையில் திறந்து வைக்கப்பட உள்ளது. பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பெயரில் போக்குவரத்துக் கழகம் ஒன்றை நிறுவ உள்ளோம். வீரன் சுந்தரலிங்கம் பெயரில், ஒரு போக்குவரத்துக் கழகம் இன்னும் ஒரு சில நாட்களில் துவக்கப்பட உள்ளது. சென்னையில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெருமகனாரின் திருவுருவச் சிலையை நானே திறந்து வைத்தேன்.

திரு ஏ. டி. பன்னீர் செல்வம், திரு செண்பக ராமன், தமிழ்த்தென்றல் திரு.வி.க., தியாகி சங்கரலிங்கம் ஆகியோருக்கும் திருவுருவச் சிலைகள் விரைவில் சென்னையில் நிறுவப்பட உள்ளன. திரு கக்கன் அவர்களின் திருவுருவச் சிலை மதுரையில் நிறுவப்பட உள்ளது.

உங்கள் அன்புச் சகோதரியின் அரசு மக்களின் உள்ளார்ந்த உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவற்றிற்குச் செயல் வடிவம் கொடுக்க என்றென்றும் முன்னணியில் இருக்கும் என்று உறுதி அளிக்கின்றேன்.

தமிழ்ப் பண்பாடு மற்றும் கலாச்சார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த யாதவா இன மக்கள் இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் வசித்து வருகின்றார்கள். தமிழக பொருளாதார, சமூக வளர்ச்சியில், அவர்களது பங்கை, நிச்சயமாக எவரும் குறைத்து மதிப்பிட முடியாது. காலங்காலமாக தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் இப்பிரிவு மக்கள், சீரிய முறையில் பங்கு கொண்டு வருகிறார்கள்.

இந்திய சுதந்திர வரலாற்றில் ஆரம்ப கால கட்டத்திலேயே மற்ற வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் ஒரு முன்னோடியாக விளங்கிய தங்களது குலத்தோன்றல் வீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் புகழுக்கு, சிறப்புச் சேர்க்கப்படவில்லையே என்ற ஆதங்கம் அவர்கள் மனதில், நீண்ட நாட்களாக இருந்து வந்ததை நான் அறிவேன். அந்த மக்களின் ஆதங்கமும், மனக்குறையும், இன்று நீங்கி விட்டது என்பதை அறியும் போது உள்ளபடியே நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இங்கே பேசிய திரு வே. கலைமணி அவர்கள் வீரன் அழகு முத்துக்கோன் அவர்கள், புகழுடன் வாழ்ந்திட்ட காட்டாளங்குளக் கோட்டையைச் சீரமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை என் முன் வைத்தார்கள். வீரன் அழகு முத்துக்கோன்

வாழ்ந்த கோட்டை தமிழக அரசின் சார்பில், புனரமைத்துப் புதுப்பிக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள் கிறேன். அதுமட்டுமின்றி வரலாற்றுச் சிறப்புமிக்க அந்தக் கோட்டையும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் சுற்றுலாத் தலமாக அமைக்கப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன்தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், யாதவ குல மக்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கையும் என் முன் வைக்கப்பட்டது. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் தற்போது செயல்பட்டு வருவதால், உடனே எந்த அறிவிப்பையும் என்னால் வெளியிட முடியவில்லை. இருப்பினும் அந்த ஆணையத்திற்கு இந்தக் கோரிக்கை அனுப்பி வைக்கப்படும் என்பதையும், உங்களது இந்தக் கோரிக் கைய்ய நாங்கள் கனிவுடன் பரிசீலனை செய்வோம் என்பதையும் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

யாதவ இன மக்கள் தங்கள் பொருளாதார சமூக வாழ்க்கையில் மேம்பாடு அடைந்து எல்லா மக்களுடனும் தொடர்ந்து அமைதியாக, இணங்கி வாழவேண்டும் என்பதே எனது பேரவா. அனைத்துத் தரப்பு மக்களும் ஒன்றுபட்டு எந்தப் பாகுபாடும் இல்லாமல் ஒரு தாய் வயிற்று மக்களாக இணங்கி வாழ எங்கள் அரசு எல்லா வளர்ச்சித் திட்டங்களையும், ஒரு புதிய முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது என்பதையும் தொடர்ந்து செயல்படுத்தும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய விழாவில் பங்கு கொண்ட நீங்கள் அனைவரும், எல்லா வளமும் எல்லா நலமும் பெற்று வாழ்வாங்கு வாழவேண்டும் என்ற, எனது நெஞ்சத்து நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொண்டு விடைபெறுகிறேன்.



சென்னை, சிதம்பரம் ஸ்டேடியத்தில் நடைபெற்ற ஆஸ்திரேலியா-நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான உலகக் கோப்பை கால் இறுதி கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியில் சிறந்த ஆட்டக்காரராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆஸ்திரேலிய அணியைச் சார்ந்த வீரர் திரு. மார்க் வாக்கிற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பரிசு வழங்கினார். (11.3.96)

ஜீவா போக்குவரத்துக் கழகம்

கோவை மற்றும் பெரியார் மாவட்டங்களில் சேரன் போக்குவரத்துக் கழகம் 1.3.1972 அன்று தொடங்கப்பட்டு, கோவையைத் தலைநகரமாகக் கொண்டு, செயல்பட்டு வந்தது. பின்னர், கோவை மாவட்டத்திலிருந்து 17.9.79 அன்று பெரியார் மாவட்டம் பிரிந்து தனி மாவட்டமாகச் செயல்படத் தொடங்கியது. பின்பு, பெரியார் மாவட்ட மக்களுக்குக் கூடுதலான போக்குவரத்து வசதி அளிக்கும் பொருட்டு சேரன் போக்கு வரத்துக் கழகத்திலிருந்து, ஜீவா போக்குவரத்துக் கழகம் 1.4.83 அன்று பிரிந்தது. அது ஈரோட்டைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

முதன் முதலில் 10 கிளைகளைக் கொண்டு 4 கோடி ரூபாய் முதலீட்டில் தொடங்கப்பட்ட போக்குவரத்துக் கழகம் தற்போது 19 கிளைகளையும், கிட்டத்தட்ட 840 பேருந்து களையும், கொண்டு திறம்படச் செயலாற்றி வருகிறது.

இப்போக்குவரத்துக் கழகம் தொடங்கும் போது 2,247 தொழிலாளர்கள் மட்டுமே இருந்து வந்தார்கள். தற்போது கிட்டத்தட்ட 3 மடங்கு அளவுக்குத் தொழிலாளர்கள் அதிகரிக்கப் பட்டுள்ளார்கள். 639 கிராமங்களுக்குப் புதியதாகப் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி, 4.69 இலட்சம் மக்களுக்குப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்தியுள்ளது. இக்கழகம் ஆரம்பித்த புதிதில் 1.10 இலட்சம் கி.மீட்டர்கள் மட்டுமே தினமும் பேருந்துகள் ஓடிவந்தன. தற்போது இது 3.40 இலட்சம் கி.மீ. அளவுக்கு அதிகரித்து, கிட்டத்தட்ட 9.25 இலட்சம் பயணிகள் இதனால் தினமும் பயனடைகிறார்கள்.

1981-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக் கெடுப்பின்படி 1000 மக்கள் தொகைக்குக் குறையாத கிராமங்கள் 317 என்று கண்டறியப் பட்டன. இவற்றுள் 315 கிராமங்களுக்குப் போக்குவரத்து வசதி ஏற்படுத்தப்பட்டு விட்டது என்பது மகிழ்ச்சிகரமான செய்தி. மீதமுள்ள

இரண்டு கிராமங்களுக்கும் சாலை வசதிகள் ஏற்படுத்தப்பட்ட பின்பு உடனடியாகப் பேருந்துகள் விடப்படும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

குறைந்த எண்ணெயில் அதிக தூரம் பேருந்துகளை இயக்கியதற்காகப் புதுடில்லியில் உள்ள சாலைப் போக்குவரத்து நிறுவனங்களின் கூட்டமைப்பு (1993-94 ஆண்டுக்கான) சிறப்புப் பரிசை ஜீவா போக்குவரத்துக் கழகம் பெற்றிருக் கிறது.

விழாக்களின் போது சிறப்புப் பேருந்துகளை இரவு பகலாக - பழனி, பண்ணாரி, பவானி, பாரியூர், கொடுமுடி, பகவான் கோயில், தம்பிக்காளை, ஐயன் கோயில், சுள்ளிக்கரடு, சென்னிமலை, சிவன்மலை, அப்பாச்சிமார் மடம் போன்ற ஊர்களுக்கு இயக்கியுள்ளது. 1994-95-ஆம் ஆண்டுகளில் ஜீவா போக்குவரத்துக் கழகம் 108.39 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டி யுள்ளது..

தொழிலாளர் நலத் திட்டங்கள்

அனைத்துக் கிளைகளிலும் தொழிலாளர் களுக்கு ஓய்வு அறை வசதி ரூ.31 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் கூட்டுறவு சிக்கனக் கடன் வங்கி மூலம் இதுவரை 4,122 தொழிலாளர்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் வழங்கப்பட்டு, சுலபத்தவணை முறையில் பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது. பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை இறுதி வகுப்புகளில் (+2 வகுப்பில்) 75 சதவிகிதத்துக்கு மேல் மதிப் பெண்கள் பெற்று முதல் மூன்று நிலைகள் பெறும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குத் தலா ரூ.1,500, ரூ.1,000, ரூ.500 என மூன்று பரிசுகள் ஆண்டு தோறும் வழங்கப்பட்டு வருகின்றன.

தொழிலாளர்களின் குழந்தைகளுக்குத் தொழில் பயிற்சிப் பள்ளி (ஐடிஐ) ரூ.14 இலட்சம் செலவில் கட்டப்பட்டு 1989-90-ஆம் ஆண்டு முதல் பயிற்சி அளித்து வருகின்றது. இதுவரை 95 தொழிலாளர்களின் குழந்தைகள் பயிற்சி பெற்றுள்ளனர். போக்குவரத்துக் கழகங்களால் தொடங்கப்பட்ட பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் இதுவரை இக்கழகத்தைச் சார்ந்த 39 தொழிலாளர்களின் குழந்தைகளுக்குப் பொறியியல் கல்லூரியிலும் 11 தொழிலாளர் களின் குழந்தைகளுக்கு மருத்துவக் கல்லூரியிலும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 16 தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு நுழைவுத் தேர்வுக்கான சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் தொடங்கப் பட்டு, இரண்டு இடங்களில் 262 வீடுகள் ரூ.205.88 இலட்சம் செலவில் கட்டப்பட்டு, தொழிலாளர் களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மூன்றாவது வீடுகட்டும் திட்டப்பணிகள் தொடங்கப்படவுள்ளன. மற்றும் அனைத்துப் போக்குவரத்துக் கழகங் களிலும் உள்ள பொதுவான நலத்திட்டங்கள் இக்கழகத்தின் தொழிலாளர்களுக்கும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன என்று ஜீவா போக்குவரத்துக் கழகத்தின் பொது மேலாளர் திரு கே. ஜெகந்நாதன் தெரிவித்துள்ளார்.



இல்லத்தரசிகளுக்கு ஓர் இனிய வரப்பிரசாதம் | சமையல் செய்வது இனி எளிது! இனிது!

சக்தி மசாலாப் பொடிகள்

மசாலாவை வியர்வை சிந்த ஆட்டி அரைக்கும் தொல்லை இனி இல்லை. சக்தி மசாலாப் பொடிகள் வீட்டு சமையலை எளிதாக்கி அறுசுவை நறுமணம் கமழச் செய்கிறது. நாவிற்குச் சுவையான நறுமண மசாலாக்கள்! சக்தி மசாலா லட்சோபலட்சம் இல்லத் தலைவிகளால் தினந்தோறும் சமையலுக்குப் பயன்படுத்தப்படுகிறது. இப்பொழுது உங்கள் இல்லங்களை நாடி வருகிறது. நம்பகமான தரம்! சுவை! நியாய விலை! ஒவ்வொரு முறை நீங்கள் சக்தி மசாலா பாக்கெட்டுகளை வாங்கும் போதும் இந்த உண்மையை உணர்வீர்கள். இது உங்களின் அனுபவ ரீதியான உண்மை! வெறும் தற்புகழ்ச்சியில்லை!

மஞ்சள் தூள்	மிளகாய்த் தூள்	மல்லித் தூள்	சுக்கு மல்லி காபி
மிளகுத் தூள்	சாம்பார் பொடி	கறிமசால் பொடி	வற்றல் வடாகம்
ரசப் பொடி	இட்லிப் பொடி	பருப்புப் பொடி	சக்தி அப்பளம்
பூண்டுப் பொடி	புளியோதரை	பிரியாணி மசாலா	மீன் குருமா மசாலா
சிக்கன் மசாலா	மீன் வறுவல் மசாலா	புளிக்குழம்பு பொடி	கரம் மசாலா
சில்லி சிக்கன் மசாலா			

தமிழகமெங்கும் லட்சோப லட்சம் இல்லத்தரசிகளின் பேராதரவை பெற்று விளங்குகிறது. மூன்றுமுறை தமிழ்நாடு அரசின் சிறுதொழில் விருதினைப் பெற்றுள்ள ஒரே மசாலா நிறுவனம். 1992 ஆம் ஆண்டு இந்திய அளவிலான ஜம்னாலால் பஜாஜ் விருதும் பெற்றுள்ளது.

தயாரிப்பாளர்

சக்தி டிரேடிங் கம்பெனி

6, மாமரத்துப்பாளையம், ஈரோடு - 638 004

போன்: 0424 - 533601 to 533606, Fax: 533607

1987, 1988, 1990 தமிழ்நாடு அரசின்
சிறு தொழில் விருது

பஜாஜ் விருது 1992

National Award for Quality Products - 1994

WITH BEST
COMPLIMENTS
FROM

Shri Kannan
Departmental Stores

13, Annaji Street, ERODE - 638 001

Phone : 214167

With Best Compliments From

Off: 60244
Phone: 60844
Mill: 60403

SRI ANGALAPARAMESWARI TEXTILE MILLS PRIVATE LIMITED

83, SIVANATHAPURAM,
VELLAKOVIL - 638 111
TAMIL NADU

S. Krishnan
Managing Director

With best compliments from

Res : 20055
Phone: Off : 20023
Fty : 87 - 244

SURIYA PERUNDURAI FOOD PRODUCT (P) LTD.,

Factory:
832/4-A, Chennimalai Road,
Ingoor.

Office:
36, Bhavani Road
Perundurai - 638 052
Periyar District

P. NALLASAMY
Managing Director

STD : 04251
Res : 60381
Phone: Off : 60382
Mill : 60591

With Best Compliments From

SHREE RATHINAHIRI ESWARAR SPINNING MILL PRIVATE LIMITED

OFFICE:
307, Muthur Road
Vellakovil - 638 111

MILL:
SF No.681, Coimbatore Road
Vellakovil - 638 111

V.B. GANESAN
Managing Director

காமராஜர் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட், நெ. E.H. 125

Kamarajar Weaver's Co-operative Production & Sale Society Limited, No. E.H.125

DHODDAMPALAYAM, BHAVANISAGAR - 638 451
PERIYAR DISTRICT

எங்களிடம் புத்தம் புதிய நவீன டிசைன்களில்
சீகோ சேலைகள், பட்டுசேலைகள் மற்றும்
கேரளா சேலைகள் கிடைக்கும்

P. சேரலாதன்
மேலாளர்,

V.R. பெரியசாமி
தனி அலுவலர்/கைத்தறி அலுவலர்
E.H. 125, காமராஜர், W.C.S.
தொட்டம்பாளையம் & P.O.,
பவானிசாகர் (Via), சத்தி (T.K.)
பெரியார் மாவட்டம்

"ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாக ஒற்றுமை உணர்வுடன் வாழ்வீர்!"

இராஜபாளையத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வேண்டுகோள்

கடந்த சில நாட்களாக, காமராஜர் மாவட்டத்தில் நடைபெற்று வந்த சில விரும்பத்தகாத சம்பவங்களைத் தொடர்ந்து, அந்த இடத்தில் பொது அமைதியைக் காக்க அனைத்துத் தரப்பு மக்களும் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும், ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாக ஒற்றுமை உணர்வுடன் அப்பகுதி வாழ் மக்கள் வாழ்கின்ற நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கிட வேண்டும் என்றும், சமுதாயத் தலைவர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் பொது நலம் காக்க விழைவோர் அனைவருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தார்கள்.

10.3.1996 அன்று காலை 11.00 மணி அளவில் சென்னையிலிருந்து விமானம் மூலம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மதுரை புறப்பட்டுச் சென்றார். அங்கு விமான நிலையத்தில் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எஸ். அய்யர் மற்றும் மதுரை நகர காவல் துறை ஆணையாளர் திரு வெங்கட்கிருஷ்ணன், உள்துறைச் செயலாளர் திரு ஆர். வரதராஜுலு மற்றும் உயர் அதிகாரிகளுடன் மதுரை மாவட்டத்தின் நிலைமைகளைக் கேட்டறிந்தார்கள். மேலும், மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கினார்கள். போக்குவரத்து பாதிக்கப்படாமலும், அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படாமலும் இருக்க தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்.

பின்னர் அங்கிருந்து ஹெலிகாப்டர் விமானம் மூலம் புறப்பட்டு, இராஜபாளையம் (PACR) பாலிடெக்னிக் விளையாட்டு மைதானத்தில் வந்து இறங்கினார்.

முன்னதாக, அங்கு வந்து இருந்த மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன், காவல்துறைத் தலைவர் திரு வால்டர் தேவாரம் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இணைச் செயலாளர் திரு எஸ். ஆதி சேஷய்யா, காமராஜர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு வி. கனகராஜ் மற்றும் அரசு அலுவலர்கள், காவல்துறை அதிகாரிகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடம் நடைபெற்ற சம்பவங்களைப் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார்கள்.

பின்னர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இராஜபாளையத்தில் சமீபத்தில் துப்பாக்கி சூடு நடைபெற்ற இரண்டு பகுதிகளுக்குச் சென்று பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உணவுப் பொட்டலங்களை வழங்க ஆணையிட்டார். மேலும், பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தனது ஆறுதலைக் கூறினார். ஆரம்பத்தில் கூட்டம் ஏதும் இன்றி இருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்துள்ளார்கள் என்று தெரிந்ததும், தைரியமாக மக்கள் கூட்டம் கூட்டமாக வெளியே வர ஆரம்பித்தார்கள். எல்லா இடங்களிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்து தங்கள்

பெரியார் மாவட்ட நதிகள்

பெரியார் மாவட்டத்தில் பாயும் முக்கிய நதி காவிரி. இது மாவட்டத்தின் கிழக்குப் பகுதியின் எல்லைப் புறத்தே ஓடுகிறது. பவானி, நொய்யல், அமராவதி, சித்தாறு, குரங்கன் போன்ற ஆறுகள் பெரியார் மாவட்டத்தில் காவிரியுடன் கலக்கின்றன. பவானி ஆற்றுடன் பாய்கரை, கல்லாறு, மோயாறு போன்றவை கலக்கின்றன. காஞ்சி, நீலிப்பள்ளம், நள்ளாறு ஆகியவை நொய்யலுடன் சேரும் சிற்றாறுகளாகும். அமராவதிக்கு உப்பாறும், குவனாறும் சிற்றாறுகளாகும். பெரியார் மாவட்டத்தில் பெரும்பாலும், எல்லா ஆறுகளும், கிழக்கு நோக்கியே ஓடுகின்றன.

பெரியார் மாவட்டத்தில் வனவளம்

தமிழ்நாட்டில் உள்ள வனக் கோட்டங்களில் பெரியார் மாவட்டத்திலுள்ள வனக் கோட்டமே மிகப் பெரியதாகக் கருதப்படுகிறது. பெரியார் மாவட்ட வனக்கோட்டம் 4, சரகங்களைக் கொண்டது. தமிழ்நாட்டில் கிடைக்கும் சந்தன மரங்களில், மூன்றில் ஒரு பகுதி பெரியார் மாவட்டத்தில் கிடைக்கிறது. சத்தியமங்கலத்தில் தமிழ்நாடு அரசு சந்தனமரக் கிடங்கு ஒன்றும் உள்ளது.

கருத்துக்களைக் கூற மக்கள் கூட்டம் வெள்ளமாகக் கூடிவிட்டது. பல இடங்களில் மக்கள் கூட்டத்தைப் பார்த்து தனது காரை நிறுத்தி, கீழே இறங்கி அவர்களுடன் பேசினார்கள். அவர்களுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் மாவட்ட நிர்வாகம் மூலம் செய்து தரப்படும் என்றும் தெரிவித்தார்.

அங்கிருந்து புறப்பட்டு, மங்காபுரம் பகுதிக்குச் சென்று, அங்கு விரும்பத்தகாத சம்பவங்களில் தீக்கிரையான சில வீடுகளையும், இதர பகுதிகளையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பார்வையிட்டார். அப்பகுதி வாழ் மக்களை நேரில் சந்தித்து, அவர்களிடம் அந்தச் சம்பவம் பற்றிய விவரங்களைக் கேட்டறிந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தவறு செய்தவர்கள் மீதும், தேவையற்ற முறையில் பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்தவர்கள் மீதும், பாரபட்சமின்றி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அப்பகுதியில் தொடர்ந்து அமைதியை நிலைநாட்ட அனைத்துத் தரப்பு மக்களுக்கும் தங்களது முழு ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

காவல்துறை முழுமையாக முடுக்கி விடப்பட்டு, பல்வேறு பகுதிகளிலிருந்து, பாதுகாப்புப் பணிக்கு வந்திருக்கிறது என்றும், எனவே எது குறித்தும் பயப்பட வேண்டாம் என்றும், எல்லா பிரச்சினைகளும் தீர்த்து வைக்கப்பட்டு, ஒரு சமூகமான சூழ்நிலை ஏற்படுத்தப்படும் என்றும் உறுதி கூறினார்கள். குறிப்பாக எல்லா இடங்களிலும், தாய்மார்களும், பெண்களும் பெரும் திரளாக வந்து நின்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தங்களது குறைகளைக் கூறி முறையிட்டு, இந்த அசம்பாவிதங்கள் நடைபெறாமல் தடுக்கவும், தங்களுக்குப் பூரண பாதுகாப்பை மாண்புமிகு முதலமைச்சர் தான் அளிக்க முடியும் என்றும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முயற்சியால் தான் அமைதி திரும்பும் என்றும் தெரிவித்தனர். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு கொடுக்கப்படும் என்றும், அவர்களது கோரிக்கைகள் நிறைவேற்றி வைக்கப்படும் என்றும் தெரிவித்தார். அதற்கு அப்பகுதிவாழ் மக்கள் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

பின்னர் முடங்கியார் சாலைக்குச் சென்றார். அங்கு பல இடங்களில் தனது காரை நிறுத்தி, கீழே இறங்கி வந்து, பெருமளவில் குழுமியிருந்த அப்பகுதிவாழ் மக்களைச்சந்தித்து, அவர்களது கருத்துக்களையும், குறைகளையும் கேட்டறிந்தார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொட்டலங்களும், நிவாரண உதவிகளும் உடனடியாக வழங்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அந்த இடத்திலேயே ஆணையிட்டார்.

மங்காபுரம் பகுதியில் ஒவ்வொரு தெருவாக உள்ளே நுழைந்து, காரை விட்டு இறங்கி, அந்தப் பகுதி மக்களைச் சந்தித்து, அவர்களது குறைகளைக் கேட்டறிந்தார். அவர்களைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணையிட்டார்.

திருவனந்தபுரம் சாலையில் கூடியிருந்த மக்களைச் சந்தித்த போது, அவர்கள் தங்களது பகுதிக்குக் குடிநீர் வசதியும், மின்சாரம் வழங்குவதில் உள்ள குறைபாட்டையும் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அந்த இடத்திலேயே அலுவலர்களை அழைத்து, அவர்களது குறைகளைப் போக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆணை பிறப்பித்தார்.

பின்னர் முகவூர் சென்று அப்பகுதி வாழ் மக்களையும் சந்தித்துப் பேசினார்கள். அதன் பின்னர், முத்துசாமிபுரத்திற்குச் சென்று எல்லா இனமக்களையும் அவர்கள் வாழ்கின்ற பகுதிக்கே நேரில் சென்று பார்த்து, அவர்களது கருத்துக்களைக் கேட்டறிந்தார். அவர்களுக்கும், உணவுப் பொட்டலங்களும், சேலை, வேட்டி அரிசி போன்ற நிவாரண உதவிகளும் உடனடியாக வழங்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரை வழங்கினார். விரும்பத்தகாத சம்பவங்களில் மரணம் அடைந்த 10 பேரின் குடும்பங்களைச் சந்தித்து, தனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் நேரில் தெரிவித்து அரசு சார்பில் 50,000 ரூபாய் நிவாரண உதவித் தொகையை வழங்கினார்.

பின்னர் சேத்தூர் பகுதிக்குச் சென்று அங்கு எல்லா தரப்பு மக்களையும் நேரில் கண்டு அவர்களது கருத்துக்களையும் கேட்டறிந்தார். அங்கும் மக்களின் குறைகளைத் தீர்க்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணையிட்டார்.

இவ்வாறு பிற்பகல் ஒரு மணி முதல் கிட்டத்தட்ட 3 மணி நேரம், அதாவது 4 மணி வரை பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்ட பின்பு, விருந்தினர் மாளிகைக்கு திரும்பி வந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உடனடியாக இராஜபாளையம் பகுதியைச் சேர்ந்த பல்வேறு அரசியல் கட்சிப் பிரமுகர்கள் கூட்டத்தை தலைமையேற்று நடத்தினார். 15 அரசியல் கட்சி மற்றும் சமூக நல அமைப்புகளின் சார்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தவர்களின் பட்டியல் இத்துடன் தனியே இணைக்கப்பட்டுள்ளது.

தன்னம்பிக்கை மிக்கவர்கள் ரோஜாவையே பார்ப்பார்கள். தன்னம்பிக்கை அற்றவர்கள் அதில் உள்ள முட்களையே பார்ப்பார்கள்.

—கலீல் கிப்ரான்

ஒன்றரை மணி நேரம் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அனைவருடைய கருத்துக்களையும் கேட்டறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயல்லிதா அவர்கள் இராஜபாளையம் பகுதியில், பாதுகாப்புப் பணிகள் முடுக்கி விடுவதற்கும், சகஜ வாழ்க்கைக்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்படும் என்றும், அனைத்து இன மக்களும் சகோதர மனப்பான்மையுடன் ஒன்றுபட்டு, ஒற்றுமையாக வாழ வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர்கள், காவல் துறைத் தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவர், மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், திரு ஆர். வரதராஜுலு, மற்றும் இணைச் செயலாளர் திரு எஸ். ஆதிசேஷய்யா ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

கூட்டத்தின் இறுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட ஆணைகளை வழங்கினார்கள்.

1. பாதிக்கப்பட்ட பகுதியில் வாழும் மக்களுக்கு உடனடியாக மாவட்ட நிர்வாகம் உணவுப் பொட்டலங்களையும், சேலை, வேட்டி, அரிசி போன்ற நிவாரண உதவிகளையும், வீடு எரிந்து போனவர்களுக்கு நிவாரண உதவித் தொகையையும் வழங்க வேண்டும்.

2. கடந்த சில நாட்களில் ஏற்பட்ட விரும்பத்தகாத சம்பவங்களில் மரணம் அடைந்தவர்களின் குடும்பங்களுக்கு ஏற்கெனவே 50,000 ரூபாய் நிவாரண உதவித் தொகை அறிவிக்கப்பட்டு, 10 பேரின் குடும்பங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டதைப் போலவே

இந்த நிகழ்ச்சியில் காயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருபவர்களுக்கு நிவாரண உதவித் தொகை வழங்கி ஆணையிட்டுள்ளார். பலத்த காயம் அடைந்தவர்களுக்கு 5,000 ரூபாயும், சாதாரண காயம் அடைந்தவர்களுக்கு 2,500 ரூபாயும் நிவாரண உதவித் தொகையாக, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும்.

3. பாதிக்கப்பட்ட பகுதியில் பொது மக்கள் கேட்டுக் கொண்டதை அடுத்து, அத்தகைய பகுதிகளுக்கு உடனடியாக குடிநீர் வசதி செய்து தர வேண்டும் என ஆணையிட்டுள்ளார். அவசியப்படும் இடங்களில் லாரிகள் மூலமாக குடிநீர் வழங்க ஏற்பாடு செய்ய ஆணையிட்டுள்ளார்.

4. பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள் மாண்புமிகு முதலமைச்சரிடம் பிளஸ் 2 படிக்கும் அப்பகுதி வாழ் பள்ளி மாணவ, மாணவியர்கள் இந்த சம்பவங்களினால் தங்களது தேர்வுகளை எழுத இயலாமல் போய்விட்டது என்று முறையிட்டவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அதற்குத் தீர்வு காணப்படும் என்றும், விரைவில் ஒரு மாற்று ஏற்பாடு செய்து, அவர்கள் மீண்டும் தேர்வு எழுத ஏற்பாடு செய்யப்படும் என்றும், அவர்களது எதிர்காலம் பாதிக்காமல் இருக்க தக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

5. சகஜ வாழ்க்கை உடன்

புகழ், பாராட்டு வரும் போது தகுதி தெரியாமல் சிலர் மிகப்பெரிய தவறுக்கு ஆளாகி விடுகிறார்கள் அதுதான் தவறு.

–டாக்டர் எம்.ஜி.ஆர்.

திரும்ப 11.3.1996 அன்று முதல் அரசு பேருந்துகளும், தனியார் பேருந்துகளும் எல்லா தடங்களிலும் இயக்கப்படும் என்றும், அதற்கு காவலர்களின் துணையுடன் பேருந்துகளை இயக்கவும், நெடுஞ்சாலை பாதுகாப்பிற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யவும் ஆணையிட்டுள்ளார்.

6. இராஜபாளையத்தில் திரு பி.ஆர்.ராமசுப்பிரமணிய ராஜா அவர்களின் தலைமையில் ஒரு அமைதிக் குழு (Peace Committee) ஏற்படுத்தி அதில் எல்லா தரப்பு மக்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுத்து, உடன் இந்தக் கூட்டத்தைக் கூட்டி அமைதி ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கவும் ஆணையிட்டுள்ளார்.

7. சமீப காலமாக, இந்த மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள செயற்கையான பதட்டங்களுக்குக் காரணமாகவும், பொதுச் சொத்துக்களுக்கு நாசம் விளைவிக்கும் செயலுக்குத் துணையாக இருந்த, சமூக விரோத சக்திகளின் மீது உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

8. முத்துசாமிபுரத்தைச் சேர்ந்த 4 ஆதிதிராவிட மக்கள் கொல்லப்பட்டது தொடர்பான வழக்கை காவல்துறையின் மாநிலக் குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு (CB-CID) உடனடியாக மாற்றம் செய்து ஆணையிட்டுள்ளார். மேலும் இந்த வழக்கில் துரிதமாக விசாரணை மேற்கொள்ள குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டும் எனவும் ஆணை பிறப்பித்துள்ளார்.

9. சகஜ வாழ்க்கை திரும்புவதற்கும், கடைகளை உடனடியாகத் திறந்து வைக்கவும், தேவையானப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளவும், பாதுகாப்புகளை அளிக்க வேண்டும் என்று காவல் துறையினருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

10. இந்த விரும்பத்தகாத சம்பவங்களின்போது பலரது கடைகளும், சிறிய நிறுவனங்களும் தாக்கப்பட்டு பொருளாதார சேதம் ஏற்பட்டதாகத் தெரிவித்ததன் பேரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது குறித்த பொருளாதர நஷ்டத்தை உடனடியாக ஆய்வு செய்து அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டுக் கொண்டுள்ளார். தேவையான நஷ்டஈடு வழங்குவது குறித்து விரைவில் முடிவு எடுத்து ஆணைபிறப்பிக்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கிட்டத்தட்ட 50 கிலோ மீட்டர் தூரம் வரை காரில் சாலை வழியே பயணம் செய்து, எல்லா இடங்களையும் நேரில் பார்வையிட்டு பொது மக்களை நேரில் சந்தித்தார். கிட்டத்தட்ட 40-க்கும் மேற்பட்ட இடங்களில் காரிலிருந்து இறங்கி, திரள்திரளாகக் குழுமியிருந்த மக்களைச் சந்தித்து குறை கேட்டார். அவர்களுக்கு நிவாரண உதவித் தொகை வழங்க ஆணையிட்டுள்ளார். பொதுமக்களிடமிருந்து மனுக்களையும் பெற்றார். ஆதிதிராவிடர்களின் குடியிருப்புகளுக்குச் சென்று, காரிலிருந்து இறங்கி, அப்பகுதிக்கு நடந்து சென்று பார்வையிட்டார். மரணமடைந்தவர்களின் குடும்பத்தார்கள் அனைவருக்கும் தலா 50,000 ரூபாய் நிவாரண உதவித் தொகை வழங்கி ஆறுதல் கூறினார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பின்னர் மதுரைக்கு வந்து, அங்கிருந்து விமானம் மூலம் புறப்பட்டு மாலை 7.30 மணிக்கு சென்னை வந்தடைந்தார்.

இராஜபாளையத்தில் கூட்டப்பட்ட 15 அரசியல் கட்சிகளின் சார்பில் கலந்து கொண்டவர்களின் பட்டியல்:

1. திரு ஏ.பி. முத்துகிருஷ்ணம் ராஜா, அஇஅதிமுக

2. திரு ஏ. நாகரத்தினம் ஜனதா தளம்

3. திரு வி. ரவி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி

4. திரு ராமகிருஷ்ணன் பாரதீய ஜனதா கட்சி

5. திரு பி.எம். ராமசாமி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

6. திரு ராஜு தேவர் பார்வர்டு பிளாக்

7. திரு அனந்த கிருஷ்ணன் காங்கிரஸ்

8. திரு கே.ஆர். பாலா ஆர்.எஸ்.எஸ்.

9. திரு வி. ராஜேந்திரன் காங்கிரஸ் (வாழப்பாடி)

10. திரு எஸ். பாக்கியராஜ் செயலர், தேவேந்திர குலம்

11. திரு கே. ராமன், (முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்) காங்கிரஸ்

12. திரு ஐ. பால்ராஜ் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

13. திரு ரூஸோ திராவிட முன்னேற்றக் கழகம்

14. திரு பி. கோவிந்தராஜா தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

15. திரு எஸ். செல்வகுமார் எம்.ஜி.ஆர். அதிமுக

ஈரோட்டுச் செல்வந்தருக்கு பாரதியார் எழுதிய கடிதம்

மகாகவி பாரதியார் தனது கடைசிக் காலத்தில், பெரியார் மாவட்டத்திலுள்ள கருங்கல் பாளையம்என்னும் ஊரில் தங்கபெருமாள் நூலக விழாவில் 'மனிதனுக்கு மரணமில்லை', 'இந்தியாவின் எதிர் காலம்' ஆகிய இரண்டு தலைப்புகளில் உரைநிகழ்த்தியுள்ளார். மகாகவி தனது படைப்புக்களை வெளியிடுவதற்காக ஈரோட்டிலுள்ள செல்வந்தர்களிடம் நிதியுதவி கோரி எழுதிய கடிதமே பாரதியாரின் கடைசிக் கடிதமாகும் என்று திரு ஆ.வே. ஜீவானந்தம் என்பார் தம் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

போன்: அலுவலகம்: 21388, 20455
வீடு : 20588

எங்கள் நல்வாழ்த்துக்கள்

சத்தியமங்கலம் தாலுகா

பஸ் உரிமையாளர்கள் சங்கம்

6/59-F மைசூர் டிரங்க் ரோடு,

ரங்கசமுத்திரம், சத்தியமங்கலம்

S.K. PONNUSAMY
President

சேவைக்கு உகந்த வங்கி — சேமிப்புக்கு சிறந்த வங்கி

பெரியார் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்., ஈரோடு.

பொதுமக்கள் தங்களது சேமிப்புத் தொகைகளை சிறந்த முறையில் இலாபகரமான முதலீடு செய்ய கீழ்க்காணும் வைப்புத் திட்டங்கள் மற்றும் கடன் வசதிகளையும் அமல்படுத்தியுள்ளோம்.

THE P.D.C.C. BANK LIMITED ERODE

மாதச் சம்பளம் பெறுவோர் மகிழ்வுடன் சேமிக்க
"சிறப்பு ரெக்கரிங் டிபாசிட் திட்டம்"

கூட்டு வட்டியில் கூடுதல் பயன் பெற
"ஜெ.ஜெ. பொற்குவியல் டிபாசிட் திட்டம்"

மாதம் ஒருமுறை வட்டி பெற
"நிரந்தர வைப்புத் திட்டம்"

சிறுகச் சிறுக சேமிக்க
"சேமிப்புக் கணக்குத் திட்டம்"

அனைத்து வகை டிபாசிட்டுகளுக்கும்
தேசியமயமாக்கப்பட்ட, வணிக வங்கிகளைவிட
1/2 சதவிகிதம் கூடுதல் வட்டி

ரூ.118 கோடி டெபாசிட் நிலுவையுள்ள பெரிய வங்கி, குறைந்த வட்டியில் ரூ.40,000 வரை நகைக்கடன், வங்கியின் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்டத்தில் உள்ள 29 கிளைகளில் உங்களுக்கேற்ற டிபாசிட் மற்றும் கடன் திட்டங்களில் சேர்ந்து பயன்பெற வேண்டுகிறோம்.

என். பரமசிவம், எம.கோப். எச்.டி.சி.
இணைப்பதிவாளர் / மேலாண் இயக்குநர்
(முழு கூடுதல் பொறுப்பு)

குறைந்த வாடகையில் **"பாதுகாப்புப் பெட்டக"** வசதி.
வைப்புகளுக்கு ரூ.1,00,000 வரை
இன்சூரன்ஸ் பாதுகாப்பு

கடன் வசதிகள்

சிறுதொழில் திட்டத்தின் கீழ் புதிய
சிறு தொழில்கள் தொடங்க ரூ.10.00 இலட்சம் வரை
குறைந்த வட்டியில் கடன் வசதி

சிறுசாலைப் போக்குவரத்து வாகனங்கள் வாங்க
ரூ.10.00 இ[illegible]சம் வரை கடன் வசதி (லாரி,
டெம்[illegible] டாக்ஸி, பஸ், ஆட்டோ)

மருத்துவமனை கட்டத் தகுதியுடைய
மருத்துவ[illegible]க்கு ரூ.10.00 இலட்சம் வரை
கடன் வசதி.

தொலைக்கா[illegible]ப் பெட்டி, குளிர்சாதனப் பெட்டி,
இருசக்கர வாகனம் போன்ற வீட்டு உபயோகப்
பொருட்கள் வாங்க ரூ.30,000 வரை கடன் வசதி.

ஆர்.என். கிட்டுசாமி
தலைவர்

பெரியார் மாவட்டத்தில் தீவிர சுகாதாரத் திட்டம்

நம் நாட்டில், குறிப்பாகக் கிராமங்கள், சுற்றுப்புறம் தூய்மையாக இருப்பதில்லை. அசுத்தமான சுற்றுப்புறமே காலரா, டைபாயிட், சீதபேதி, மலேரியா, யானைக்கால் போன்ற பல தொத்து நோய்கள் பரவக் காரணமாக உள்ளது. இவ்வாறு பரவும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக நாம் சுற்றுப்புறத்தைத் தூய்மையாகப் பேண வேண்டும்.

சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாக்க மத்திய ஊரக சுகாதாரத் திட்டம் என்ற திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் தமிழ்நாட்டில் பெரியார் மாவட்டத்தின் முன்னோடித் திட்டமாக- "தீவிர சுகாதாரத் திட்டம்" என்ற பெயரில் கிராமப் பகுதிகளில் அமல்படுத்தப்பட்டு வருகிறது. தனியார் வீடுகளில், குறைந்த செலவிலான கழிப்பிடங்களை அரசு மானியத்துடன் கட்டிக் கொள்வதற்கு இத்திட்டம் வழிவகை செய்துள்ளது.

தீவிர சுகாதாரத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு வீட்டிலும் கழிப்பிடங்கள் கட்டுவதன் மூலம் கிராமங்களில் சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாக்கலாம். இதன் காரணமாக நோய் பரவாமல் கட்டுப்படுத்தலாம்.

பெரியார் மாவட்டத்தில் 1989-ஆம் ஆண்டு முதல் தீவிர சுகாதாரத் திட்டத்தின் மூலம், கிராமப் பகுதிகளில் வாழும் ஏழை எளிய மக்களுக்காக அவரவர்கள் வீடுகளிலேயே மலிவு விலை நீரடைப்புள்ள உறிஞ்சுக் குழி கழிப்பிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

இக்கழிப்பிடங்களை அமைக்க தற்பொழுது மொத்தம் ரூ.2,399 செலவு ஆகும்.

இச்செலவில் ரூபாய் 460-ஐ மட்டுமே சம்பந்தப்பட்ட வீட்டின் உரிமையாளர் ஏற்றுக் கொண்டால் போதுமானது. எஞ்சிய செலவுத் தொகை ரூ.1,840ஐ மத்திய, மாநில அரசுகளும், யுனிசெப் நிறுவனமும் மானியமாக வழங்குகின்றது.

இவ்வகைக் கழிப்பறைகளில் நாற்றம் ஏற்படாது, மலம் வெளியில் தெரியாது, ஈக்கள் மற்றும் கொசுக்கள் உற்பத்தியாகாது, சுத்தம்செய்ய ஆட்கள் தேவையில்லை, இடவசதியும் அதிகம் தேவையில்லை, மழைக் காலத்திலும் சுத்தமாக இருக்கும்; மலம் கழித்த பின்னர் சுத்தம் செய்யக் குறைந்த அளவு தண்ணீரே போதுமானது.

இம்மாவட்டத்தில் நாளதுவரை 43,125 கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே அரசுத்துறை மூலம் தனியார் வீடுகளில் அதிக எண்ணிக்கைக் கழிப்பிடங்கள் கட்டிய முதல் மாவட்டம் பெரியார் மாவட்டம் ஆகும். இத்திட்டம் வெற்றிகரமாகப் பெரியார் மாவட்டத்தில் நடைபெறுவதற்கு முக்கியக் காரணம் கிராம மக்களிடையே உள்ள விழிப்புணர்வு என்று கூறினால் அது மிகையாகாது.

பெரியார் மாவட்டத்தில் தீவிர சுகாதாரத் திட்டம் மற்றும் ஊரக மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுவதால், மத்திய, மாநில அரசினரால் கீழ்க்கண்ட இரு திட்டங்களும் "யுனிசெப்" உதவியுடன் இம்மாவட்டத்தில் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்படுகின்றன.

1. சமுதாய சேவைகளின் ஒருங்கிணைப்புத் திட்டம்

2. வயிற்றுப் போக்கு நோய்த் தடுப்பு, குடிநீர் தூய்மைத் திட்டம்

தீவிர சுகாதாரத் திட்டத்தின் மூலமாக நடப்பு ஆண்டில் 5,000 கழிப்பறைகள் அமைக்கப்பட உள்ளன. கிராமப் பகுதிகளில் கழிப்பறைகள் இன்றி வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பத்தினர் ஊராட்சி ஒன்றிய ஆணையரை அணுகி 80



நம்பிக்கை மூலமாக, மனிதனால் மலையைக் கூட அசைக்க முடியும்.

—காந்தியடிகள்

சதவிகித மானிய உதவியுடன் கழிப்பிடம் அமைத்துக் கொள்ளலாம்.

பெரியார் மாவட்டத்தில் தீவிர சுகாதாரத் திட்டம் நல்ல முறையில் செயல்படுவதன் காரணமாக, உலகக் குழந்தைகள் நிறுவனம் இம்மாவட்டத்திற்கு ஆடியோ, வீடியோ வசதியுடன் கூடிய பிரச்சார ஊர்தி ஒன்றினை வழங்கியுள்ளது. இதன் மூலம் இம்மாவட்டப் பகுதிகளில் சுகாதாரம் மற்றும் பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்கள் பற்றி விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது.

தீவிர சுகாதாரத் திட்டத்தினைக் கண்காணித்துச் செயல்படுத்த, மாவட்ட அளவில் இணை இயக்குனர் தலைமையில், குறைந்த அளவில் பணியாளர்களைக் கொண்ட ஒரு 'சுகாதாரத் திட்டக் குழு' மாவட்ட ஆட்சியரின் நேரடிப் பார்வையில் இயங்கி வருகிறது.

இத்திட்டம் ஊராட்சி ஒன்றிய ஆணையர்களால் கிராமப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராம மக்கள் தங்களது இல்லங்களில் கழிப்பிடங்கள் அமைத்துக் கொள்ளத் தேவையான தொழில் நுட்ப உதவிகளை ஊராட்சிய ஒன்றிய விரிவாக்க அலுவலர்கள், ஊர்நல அலுவலர்கள் வழங்கி வருகிறார்கள்.

"நமது நாட்டிலுள்ள அனைத்து ஆண்களும், பெண்களும் என்று கழிப்பிடங்களைப் பயன்படுத்துகிறார்களோ- அன்று தான் நம் நாடு முன்னேற்றம் அடைந்ததாகக் கருதுவேன்" என்று நமது மறைந்த பாரதப் பிரதமர் பண்டிட் ஜவகர்லால் நேரு அவர்கள் கூறியுள்ளார். எனவே, அவரது கனவை நனவாக்க நாடும் வீடும் நலம் பெற, சுற்றுப்புறத்தைச் சுத்தமாகப் பேண, சுக வாழ்வு வாழ, அனைத்து வீடுகளிலும் கழிப்பிடம் அமைப்போம், நாட்டின் நலம் பேணுவோம்.

திண்டல் அருள்மிகு வேலாயுதசுவாமி திருக்கோயில்

ஈரோடு நகருக்கு அருகே நன்னை நாடி வருவோருக்கு அருளை வற்றாது வாரி வழங்கு வதாக எல்லோராலும் நம்பப் படும் அருள்மிகு திண்டல் வேலாயுதசுவாமி திருக்கோயில் பெரியார் மாவட்டத்தில் பல ராலும் விரும்பப்படுகிற ஓர் முக்கிய இடமாகும்.

பெரியார் மாவட்டத்தில் புதிதாக வாகனங்கள் வாங்கு பவர்கள் முதலில் ஓட்டி வந்து அருள்மிகு வேலாயுதசுவாமி திருக்கோயில் வாசலில் நிறுத்தி, மலைமேல் உள்ள திருமுருகன் அருளைப் பெறுகிறார்கள். இதன் காரணமாகவே இக்

கோயில் முன்னால் எப்போதும் வரிசை வரிசையாகப் புத்தம்புது வாகனங்கள் நிறுத்தப்பட்டி ருக்கும்.

'வேலவர் சதகம்' என்ற நூலில் அருள்மிகு திண்டல் வேலாயுதசுவாமியைப் பற்றி, 100 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. புகழ்பெற்ற 18 மலைகளில் ஒன்று திண்டல் மலை என்று இக்கோயிலின் செயல் அலுவலர் திரு தனபாலன் தெரிவிக்கிறார். இக்கோயில் ஆண்டுக்கு ஆண்டு இலட்சக் கணக்கான ஆன்மீகப் பொது மக்களைத் தன்னகத்தே ஈர்த்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் தருகின்ற காணிக்கை ஒவ்வொரு ஆண்டும் பெருகி, சென்ற ஆண்டு மட்டும் சராசரியாக ரூ.3 இலட்சம் கிடைத்துள்ளது.

கோயிலின் முன் மண்டபம், கருவறை, சுற்றுப்பிரகாரம், திருமண மண்டபம், வழிபடு வோர் தங்குமிடம், மலை அடிவாரத்திலுள்ள விநாயகர் திருக்கோயில் திருப்பணி போன்ற திருப்பணிகள் இவ் வாண்டில் செய்ய முடிவு செய்திருப்பதாக இக்கோயிலின் செயல் அலுவலர் திரு தன பாலன் அவர்கள் கூறினார். மலையை ஒட்டி எந்தக் கோடையிலும் வற்றாத நீர்வளம் பெற்ற தீர்த்தக்குளம் உள்ளது. அருள்மிகு வேலாயுதசுவாமி ஈரோடு நகரில் வாழும் பொது மக்களோடு மட்டுமின்றி, கொங்கு நாட்டில் வாழும் பலரையும் ஈர்க்கின்ற ஓர் திருக் கோயிலாக அண்மைக் காலத்தில் வளர்ந்து வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

ஆவின் ஈரோடு ஆவின் ஈரோடு ஆவின் ஈரோடு ஆவின் ஈரோடு ஆவின் ஈரோடு ஆவின் ஈரோடு

'ஆவின்'

எங்களின் தரமான தயாரிப்புகள்

✳ பதப்படுத்தப்பட்ட அதிகக் கொழுப்புச் சத்துள்ள பால்.
✳ சுகாதாரமான முறையில் தயாரிக்கப்பட்ட வெண்ணெய் மற்றும் நெய்.
✳ சுவைமிகு பால் கோவா
✳ குளிர்ந்த நறுமணப் பால்
✳ ருசியான மசாலா மோர்
✳ கால்நடைகளுக்குத் தேவையான சத்துள்ள கால்நடைத் தீவனம்

வாங்கிப் பயனடைவீர்

டாக்டர் கே.எம். லோகநாதன்
பொது மேலாளர்

கே.கே. காளியப்பன்
தலைவர்

பெரியார் மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,
வாசவி கல்லூரி அஞ்சல், ஈரோடு-638 316

தொலைபேசி-533573, 533574

ஆவின் ஈரோடு ஆவின் ஈரோடு ஆவின் ஈரோடு ஆவின் ஈரோடு ஆவின் ஈரோடு ஆவின் ஈரோடு

With

Best

Compliments

From

BHAVANI TALUK

BUS OWNERS ASSOCIATION

BHAVANI

சென்னை தலைமைச் செயலகத்தில் குழந்தைகள் நலவாழ்வு குறித்த டாக்டர் ஜெ. ஜெயலலிதா 15 அம்ச திட்ட ஆய்வுக் கூட்டம், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. (14.3.96)

நல்வாழ்த்துக்கள்

STANDARD AUTOMOBILES

11–B, Kabilar Street, Gobichettipalayam-638 452, PERIYAR DISTRICT

TVS 50 XL, சேம்ப், சூப்பர் சேம்ப், TVS SUZUKI MAX 100, MAX 100R, SAMURAI, SUZUKI SHOGUN மற்றும் TVS SCOOTY வாங்கிட கோபி, சத்தி, பவானி தாலுக்கா அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்

ஸ்டேண்டர்டு ஆட்டோமொபைல்ஸ்

11-B கபிலர் வீதி

கோபிசெட்டிபாளையம் - 638 452

தொலைபேசி எண்கள்: 22728, 23655, 23755

'தமிழரசு'க்கு

எங்களது

நல்வாழ்த்துக்கள்

போன்: 23419

இந்திரா

தியேட்டர்

மொடச்சூர் ரோடு

கோபிசெட்டிபாளையம் - 638 476

பெரியாரில் பெருகும் அறிவொளி

எழுத்தறிவுத் திட்டத்தில் எழுதப்படிக்கத் தெரிந்து கொண்டவர்கள் தொடர்ந்து படிக்கவும், தங்களது கற்கும் திறனை நிலைநிறுத்திக் கொள்ளவும் தொடர்கல்வி இயக்கம், பெரியார் மாவட்டத்தில் மே 1995 முதல் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அறிவொளியில் படித்தவர்களுக்கு மட்டுமின்றி, மையங்களில் சேர்ந்து இடையில் நின்றுவிட்டவர்களும், இதுவரை அறிவொளி இயக்கத்தில் சேர்ந்து படிக்காதவர்களும் தொடர்கல்வி மையங்களில் சேர்ந்து படித்துப் பயன் பெறலாம்.

பெரியார் மாவட்டத்தில் மொத்தம் படிப்பறிவில்லாதவர்கள் 4,09,442 பேர் எனவும்-

அறிவொளி இயக்கங்களில் சேர்ந்தவர்கள் 3,63,940 பேர் எனவும் கணக்கெடுக்கப்பட்டது.

திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்

மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் இம் மாபெரும் மக்கள் இயக்கத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் முழுநேரப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டு களப்பணியாற்றுகின்றனர். கிராமங்கள் மற்றும் நகரங்களில் உள்ள கற்போர்களை அறிவொளி மையங்களில் இணைத்தல், ஏற்கெனவே அறிவொளியில் கற்றவர்களுக்குத் தொடர்கல்வி படிப்பகங்களில் கற்றுத் தருதல், தொடர்கல்விப் படிப்பகப் பொறுப்பாளர்களுக்கும் அறிவொளி ஆசிரியர்களுக்கும் தக்க ஆலோசனைகளை அவ்வப்போது வழங்குதல், பயிற்சியளித்தல் உள்ளிட்ட பணிகளை இவர்கள் அர்ப்பணிப்பு உணர்வோடு செய்து வருகிறார்கள்.

படிப்பகங்கள்

மாவட்டம் முழுவதும் சுமார் 2,000 படிப்பகங்கள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்டப்பணியாக 800 படிப்பகங்கள் தொடங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 1,200 படிப்பகங்களும் விரைவில் தொடங்கப்படும். மாவட்டத்திலுள்ள பல்வேறு

இடங்களில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், மாவட்ட ஆட்சியரும் தொடர் கல்விப் படிப்பகங்களைத்திறந்து வைத்துள்ளனர். அறிவொளியில் படித்து இடையில் நின்றுவிட்டவர்களுக்கும் புதிதாகக் கற்பவர்களுக்கும் இந்தப் படிப்பகங்கள் மூலமாக மேலும் கற்பித்தல் பணி நடைபெற்று வருகிறது. ஒரு படிப்பகத்தில் 200 நூல்கள் வரை உள்ளன.

கல்வி ஆலோசனைக் குழு

கிராமந்தோறும் கல்வி ஆலோசனைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. தொடர்கல்வி நூலகங்களைப் பராமரித்தல், மேற்பார்வை செய்தல், மையங்களுக்கு படிக்க வரும் கற்போர்களுக்குத் தேவையான புத்தகங்களைக் கொடுத்துப் படிக்கச் செய்தல் ஆகிய பணிகளை இத்தகைய குழுவினர் செய்து வருகிறார்கள். படிப்பகங்கள் சம்பந்தமான அறிவுரைகளையும் அவ்வப்போது வழங்கி வருகின்றனர்.

சேவை நிறுவனங்களுடன் தொடர்கல்விக்கருத்தரங்கு

டெவலப் இந்தியா, நேரு யுவகேந்திரா, கிராம சமூக சேவா சங்கம், விவேகானந்தா, ராஜீவ் நிகேதன் போன்ற சேவை நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றை அழைத்து ஜூன் மாதத்தில் தொடர்கல்வி இயக்க ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அவற்றின் ஆலோசனைகள் பெறப்பட்டு தொடர் கல்வி செயல்திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. சேவை நிறுவனங்கள் மாவட்டத்தின் பல பகுதிகளில் தொடர்கல்விப்படிப்பகங்களை நடத்தும் பணியில் ஈடுபட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

அனைவருக்கும் கல்வி

இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் அனைவருக்கும் கல்வி என்ற இலட்சியத்தை வலியுறுத்தி அந்தியூர், குன்னத்தூர் ஆகிய இடங்களில் பிரச்சாரப் பேரணி மற்றும் கருத்தரங்கு நடத்தப்பட்டது. அறிவொளித் தொண்டர்கள் வீடு வீடாகச் சென்று இப்பணியை மேற்கொண்டார்கள். வயது வந்த குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்க்க வேண்டும். 5-ஆம் வகுப்பு முடித்தவர்கள் 6-ஆம் வகுப்பில் சேர்ந்து படிக்கவேண்டும். 8-ஆம் வகுப்பு முடித்தவர்கள் 9-ஆம் வகுப்பில் சேர்க்கப்பட வேண்டும் என்பதை விளக்கும் ஊர்வலங்கள், பேரணிகள் விளக்கக் கூட்டங்கள் கிராமங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

வாழ்க்கைக் கல்வி

தொடர்ந்து கற்பிக்கும் பணி நடைபெறுவதோடு விழிப்புணர்வுக் கல்வியும், பயிற்சிகளும் கற்போர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அதோடு மட்டுமின்றி அரசு நலத் திட்டங்கள் பற்றிய பயிற்சிகள், கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. முதல் கட்டமாக யுனிசெப்' மற்றும் மாநிலப் பள்ளிசாராக் கல்விக் கருவூலத்துடன் இணைந்து அரசு நலத்திட்டமான சிடிடி வாட்சன் திட்டத்தில் தொடர் அறிவொளி கற்போர் பயன்பெறத் தகுந்த திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதன்மூலம் குழந்தைகளுக்கும், பொதுமக்களுக்கும் ஏற்படும் வயிற்றுப்போக்கு நோய் பற்றியும், அதைத் தீர்க்கும் வழிமுறை பற்றியும், சுகாதாரப் பழக்கத்தைக் கடைப்பிடித்தல் பற்றியும் விளம்பரம் செய்யப்படும். இதற்காகக் கலைக்குழு நடிகர்கள் பயிற்சியளிக்கப்பட்டுள்ளார்கள்.

பெண்கள் மேம்பாடு

பெண் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. பெண் சிசுக் கொலைத் தடுப்பு முயற்சியாக அதை வலியுறுத்தி பிரச்சாரங்கள், ஊர்வலங்கள், பேரணிகள் நடத்தப்படும். கிராமங்களில் மகளிர் குழுக்கள் அமைக்கப்படும். மாவட்ட அளவில் 30 மகளிருக்கு அரசுத் திட்டங்கள் சம்பந்தமாகப் பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படும். வட்டார அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதிநிதிகளுக்குப் பயிற்சி பெற்ற மகளிர் மீண்டும் பயிற்சியை விரிவுபடுத்துவார்கள். இதன் மூலம் ஏராளமான பெண்கள் பயன்பெற வாய்ப்பு ஏற்படும்.

நுகர்வோர் விழிப்புணர்வு மற்றும் சட்டக் கல்வி

காசு கொடுத்து வாங்கும் பொருள்கள் மற்றும் சேவையில் ஏற்படும் குறைபாடுகளைத் தீர்க்கும் வழிமுறைகள் பற்றிய கருத்தரங்கம், நுகர்வோர் குறைதீர் ஆணையம், அதன் செயல்பாடுகள், அணுகு முறைகள் பற்றி பயிற்சி தரப்படும். இலவச சட்ட உதவி முகாம்கள் மூலமாக ஆண், பெண் கற்போர்களுக்குச் சட்ட அறிமுகம் . ஏற்படுத்தப்படும். சாலை விதிமுறைகள் குறியீடுகள் கடைப்பிடிக்கும் முறை பற்றிய பயிற்சி அளிக்கப்படும். இதன் மூலமாக விபத்துக்கள் தடுக்கப்பட்டு அறியாமை மூலம் ஏற்படும் இழப்புகள் காப்பாற்றப்படும்.

சுகாதாரக் கல்வி

குடும்ப நலம், சுகாதாரம், சரியான முறையில் உணவு தயாரித்தல், பாதுகாக்கப்பட்ட குடிநீர், எய்ட்ஸ் விழிப்புணர்வுக் கல்வி, டோக்ரா, சிபிசி.எஸ்., சிடிடிவாட்சன் ஆகியவை பற்றிய பயிலரங்கம் நடத்தி கற்போர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

அரசு நலத் திட்டங்கள்

அரசு நலத் திட்டங்கள் மக்களுக்குச் சரியான முறையில் சென்று சேர்ந்திட அதுபற்றிய பயிற்சி விரிவான முறையில் அளிக்கப்படுகிறது. அறிவொளித் தொடர்கல்வி இயக்கம் சார்பாக அனைத்துத் திட்டங்களடங்கிய புத்தகம் ஒன்று வெளியிடப்படுகிறது. கற்போர்கள் எளிதில் படித்துப் புரிந்துகொண்டு இதன்மூலம் தகுந்த பயனை அடையலாம். தொடர்கல்வியில் அரசு வழங்கும் உதவிகளை மக்கள் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள கற்போர்களுக்கும் பொது மக்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. கிராமத் தொடர்பாளர், படிப்பகப் பொறுப்பாளரின் மூலமாகக் கற்போரின் தேவைகள் அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டு உதவிகள் சரியான நேரத்தில் தற்போது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

> **விஞ்ஞானம் என்பது மனிதனின் அறிவை மட்டுமல்ல இயற்கையின் மீது அவன் செலுத்தக் கூடிய ஆதிக்கத்தையும் அதிகரிக்கிறது.**
>
> —நேரு

தொடர்கல்விச் சுவர்

மாவட்டம் முழுவதும் தொடர்கல்வி இயக்கத்தின் இலட்சியம், கொள்கைகள், பணிகள், கடமைகள் ஆகியவற்றை விளக்கும் வகையில் தொடர்கல்விச்சுவர் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் தொடர் கல்வி சம்பந்தமான வாசகங்கள் எழுதப்பட்டு வருகிறது. இது கற்போர்கள் தங்கள் எழுதப் படிக்கும் திறனை வளர்க்கப் பெரிதும் உதவிகரமாயுள்ளது.

எழுத்தறிவிக்கும் உன்னதமான பணியைச் செய்வதோடு மட்டுமன்றி, மக்களின் வாழ்விலும், பொருளாதாரத்திலும் ஒளிவீசச் செய்து தன்னிறைவு பெற்ற மாவட்டமாக மாற்றி மற்ற மாவட்டங்களுக்கு முன்னோடியாகச் செயல்படுவதே தொடர்கல்வியின் நோக்கம், இலட்சியம்.

With Best Compliments From

RC - 2920113
TNETA-259
CST-441102

Phone: Mill : 60402
Res : 60681
Res : 60281
STD: 04297

T.M. PALANISAMY

SRI DEVI RICE MILL

Paddy & Rice Merchant

CHENNIMALAI ROAD

UTTUKULI - 638 751

With Best

Compliments From

INFRA TEX

PSG Mill Premises,

191, Main Road

PERUNDURAI - 638 052

Phone: 04294 - 20436, 20372, 21436

FAX: 21373

P.M. Ramasamy
Partner

Phone: 60455
STD : 04294

With Best
Compliments From

MAHARAJA PLASTIC INDUSTRIES

Mfrs.:
"SURIYA" PVC Rigid Water Pipes

14, Railway Station Road,
K.K. Nagar
Uttukuli - 638 751
Periyar District

K.M.S. PLASTIC

14-B, R.S. Road, Uttukuli - 638 751

With Best Compliments From

CIBI INTERNATIONAL

PSG MILL PREMISES
190-A, Main Road,
Perundurai - 638 052

Phone: 04294 - 20436
04294 - 20372
04294 - 21436

CIBI EXPORTS

25, Bungalow Road,
Odakkadu
Tirupur - 638 602

Phone: 29296 - 29298
22329 - 20515

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இ. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

தூய
பட்டு

தூய
சரிகை

ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்

பதிவு எண் M.
Licence No.TN/MS(C)